தமிழ்நாடு அரசு

# மேல்நிலை

## முதலாம் ஆண்டு

# பொதுத் தமிழ்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - *2018*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2018

நூல் அச்சாக்கம்

கற்க கசடற

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Introduction Pages.indd 2 23-10-2018 10:21:31

# முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது என்பதையும் உணர்ந்துள்ளோம். பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்

புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் மாணவர்களின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Introduction Pages.indd 3 23-10-2018 10:21:31

# நாட்டுப்பண்

*ஜன கண மன அதிநாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா*
*திராவிட உத்கல பங்கா*
*விந்திய ஹிமாசல யமுனா கங்கா*
*உச்சல ஜலதி தரங்கா.*
*தவ சுப நாமே ஜாகே*
*தவ சுப ஆசிஸ மாகே*
*காஹே தவ ஜய காதா*
*ஜன கண மங்கள தாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*ஜய ஹே ஜய ஹே ஜய ஹே*
*ஜய ஜய ஜய ஜய ஹே!*

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

---

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Introduction Pages.indd 4 23-10-2018 10:21:33

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Introduction Pages.indd 5 23-10-2018 10:21:33



# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Introduction Pages.indd 6 23-10-2018 10:21:34

உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை
இன்றைய இளம்தலைமுறைக்கு
அறிமுகப்படுத்தும் ஒரு துணைக்கருவியாக இப்பாடநூல்.

பொருண்மைக்கு ஏற்ப
இயலின் தொடக்கத்தில்
கற்றல் நோக்கங்கள்

பாடப்பகுதி இன்னவை
எனக் காட்டுதல்

பாடப்பகுதிகளின்
கருத்தை விளக்க அரிய,
புதிய செய்திகளை
அறிந்துகொள்ளத்
தெரிந்து தெளிவோம்
தெரியுமா? . . . .

பாடப்பகுதிகளின் தொழில்
நுட்பக் கருத்தை விளக்கத்
திட்பமும் நுட்பமும். . . .

காலத்தின் பாய்ச்சலுக்கு
ஈடுகொடுப்பதாக
இணையவழி உரலிகள் . . .

ஆளுமை மிக்க
**ஆசிரியர்களுக்கும்**
ஆற்றல் நிறை
**மாணவர்களுக்கும்...**

பயின்ற பாடங்கள் குறித்துச்
சிந்திக்க, கற்றல்
செயல்பாடுகளாகக்
கற்பவை கற்றபின் . . . .

படிப்பின்
அகலமும் ஆழமும் தொடர
அறிவை விரிவு செய் . . .

மாணவர்தம்
அடைவை அளவிட
நம்மை அளப்போம் . . . .

இயலின் இறுதியில்
விழுமியப் பக்கமாக
நிற்க அதற்குத் தக. . .

உயர்சிந்தனைத் திறன்பெற,
படைப்பாக்கத்தின்வழி
வாழ்வைத் தன்னம்பிக்கையுடன்
எதிர்கொள்ள, படித்துச்சுவைக்க,
மொழியோடு விளையாடு . . . .

இலக்கியச்சுவை உணர்ந்து
நுட்பங்களை உள்வாங்கி
மொழியை ஆற்றலுடன்
பயன்படுத்த
மொழியை ஆள்வோம் . . . .

பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?

- உங்கள் திறன்பேசியில், கூகுள் playstore/ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச் (URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்குச் செல்லும்.

மொழிப்பாடத்தை மட்டுமல்லாமல் பிறபாடங்களைப் பயில,
கருத்துகளைப் புரிந்து எதிர்வினையாற்ற உதவும் ஏணியாய்..... புதிய வடிவம், பொலிவான
உள்ளடக்கத்துடன் இப்பாடநூல் உங்கள் கைகளில்...



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Introduction Pages.indd 7 23-10-2018 10:21:34

# பணிவாய்ப்புத் தமிழ்

## வேலைவாய்ப்பு

- தமிழக அரசுப்பணிகளில் தமிழ்வழிக் கற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. (Persons Studied in Tamil Medium Act -2010)
- இந்திய ஆட்சிப் பணி (IAS) முதன்மைத் தேர்வில் கட்டாய இந்திய மொழித்தாள் வரிசையில் தமிழ் மொழித்தாள் இடம்பெற்றுள்ளது. கட்டாய மொழித்தாளில் குறைந்தபட்ச மதிப்பெண் பெற்றால் மட்டுமே ஐஏஎஸ் தேர்வரின் பிற தாள்கள் மதிப்பிடப்படும்.
- தமிழ்ப் பட்டதாரிகளும் பிற பட்டதாரிகளும் இந்திய ஆட்சிப்பணிக்கான முதன்மைத் தேர்வில் அனைத்துத் தாள்களையும் (கட்டாய ஆங்கில மொழித்தாள் நீங்கலாக) தமிழிலேயே எழுதி வெற்றி பெற முடியும். ஆளுமைத் தேர்விலும் தமிழிலேயே பதிலளிக்கலாம்.
- துணை ஆட்சியர் பதவிக்கான தொகுதி -1 தேர்வில் 300 மதிப்பெண் கொண்ட இரண்டாம் தாளில் 90 மதிப்பெண் வினாக்கள் 'தமிழ் மொழி மற்றும் பண்பாடு' என்ற பாடத்திலிருந்து கேட்கப்படுகின்றன.
- ஆசிரியர் பணிக்கான TET, CTET மற்றும் TRB தேர்வுகளில் தமிழுக்கும் தமிழ்ப் பட்டதாரிகளுக்கும் வாய்ப்புள்ளது.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி IV (கிராம நிர்வாக அலுவலர் - விஏஓ, இளநிலை உதவியாளர் போன்ற பணிகள்) தொகுதி II A மற்றும் II (தலைமைச் செயலக உதவிப்பிரிவு அலுவலர், சார் பதிவாளர், வருவாய் உதவியாளர் உள்ளிட்ட பல சார்நிலைப் பணிகள்) எழுத்துத் தேர்வுக்கான 300 மதிப்பெண்ணில் செம்பாதி (50%) மதிப்பெண்ணுக்கான கேள்விகள் (150 மதிப்பெண்) பொதுத்தமிழ்ப் பாடத்திலிருந்து கேட்கப்படுகின்றன. இந்தப் பாடத்திற்கு 6 முதல் 10 -ஆம் வகுப்பு வரையிலான பாடப்புத்தகங்களே அடிப்படை.
- மொழிபெயர்ப்புத்துறையிலும் படைப்புத் துறையிலும் ஆர்வத்துடன் தமிழ் பயின்ற தகுதி மிக்கவர்களுக்குப் பணிவாய்ப்புகள் உள்ளன.
- மொழிநடை திருத்துநர் (Copy Editor), கலைச்சொல் வல்லுநர், திரைத்துறையில் துணைத்தலைப்புகள், வசனங்கள் (Sub Title) எழுதுபவர் போன்ற பணிவாய்ப்புகளைத் தமிழ், ஆங்கிலம் என்னும் இருமொழிப்புலமை பெற்றவர்கள் பெறமுடியும்.
- நல்ல உச்சரிப்புத் திறன் கொண்டவர்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகலாம்.
- புத்தக வடிவமைப்பும் தமிழ், ஆங்கிலத் தட்டச்சும் கற்றவர்களுக்குப் பதிப்புத்துறையில் அதிகப் பணிவாய்ப்புகள் உள்ளன.
- தமிழ்க் கணினியம் (Tamil Computing) - கலைச்சொல் உருவாக்கம், இணையத்திலும் இணையக் கலைக்களஞ்சியங்களிலும் கட்டுரை எழுதுதல், பிழைதிருத்துதல், பிழைதிருத்த மென்பொருள் உருவாக்கம் போன்ற பணி வாய்ப்புகள் உள்ளன.
- அரசுத்துறை நிறுவனங்கள் மற்றும் நீதிமன்றங்கள், பாடநூல் கழகம் போன்றவற்றில் மொழிபெயர்ப்பாளர் மற்றும் பிழைதிருத்துநர் போன்ற பணிவாய்ப்புகள்.
- விளம்பரவாசகம் எழுதுதல், வணிகப் பொருள் பயன்பாடு குறித்த விவரக்குறிப்பு மொழி பெயர்ப்பு போன்ற பணிவாய்ப்புகளும் தமிழ் கற்றவர்களுக்குக் கிடைக்கும்.
- தமிழர்கள் வாழும் பிஜி, மாலத்தீவு போன்ற வெளிநாடுகளில் தமிழாசிரியர்களுக்கான வேலைவாய்ப்பு உள்ளது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Introduction Pages.indd 8 23-10-2018 10:21:34



## கற்றது தமிழ்! பெற்றது புகழ்!

- தமிழிலும் மற்றும் வடமொழியிலும் இரண்டிலும் புலமை பெற்ற உ.வே.சா. வுக்கும் பண்டிதமணி கதிரேசனாருக்கும் இருவருக்கும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே ‘பெரும் பேராசிரியர்’ (மகாமகோ உபாத்யாயா) பட்டம் வழங்கப்பட்டது.
- தமிழறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார், கவிஞர் வைரமுத்து ஆகியோர் இந்திய அரசு வழங்கும் பத்ம பூஷண் விருது பெற்ற தமிழ் மாணவர்கள்.
- சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்களில் பலர் தமிழில் முதுகலை / முனைவர் பட்டம் பெற்றவர்கள்.
- பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு UGC அமைப்பு, திரைத்துறையில் சத்யஜித்ரே, இசைத் துறையில் எம். எஸ். சுப்புலட்சுமி ஆகியோருக்கு வழங்கிய தேசியப் பேராசிரியர் (National Professor) என்னும் தகுதியைத் தமிழ்த்துறையில் முனைவர் தமிழண்ணலுக்கு வழங்கியது.
- அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ்பேராசிரியர்களாகப் பணியாற்றவும் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றவும் வாய்ப்புகள் உள்ளன.
- 1984-இல் இ.ஆ.ப தேர்வை முழுமையாகத் தமிழில் எழுதி வெற்றி பெற்ற முதல் தமிழ் இலக்கிய மாணவர் ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. தற்போது (2018) ஒடிசா மாநிலத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் பதவியில் உள்ளார்.
- பொறியியல் / வேளாண்மைப் பட்டதாரியாக இருந்து இ.ஆ.ப. தேர்வை முழுமையாகத் தமிழில் எழுதி வெற்றி பெற்ற இ.ஆ.ப. அதிகாரிகள் பலர் தற்போது தமிழகத்தில் பணியில் இருக்கிறார்கள்.
- இ.ஆ.ப. தேர்வில் தமிழை விருப்பப் பாடமாக எடுத்து, பட்டதாரிகள் பலர் ஆண்டுதோறும் வெற்றிபெறுகின்றனர்.
- திரைத்துறையில் சிறந்த இயக்குநருக்கான தேசிய விருது பெற்ற தமிழ்த் திரைப்பட இயக்குநரும் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதை ஏழு முறை பெற்ற ஒரே இந்தியத் திரைப்படப் பாடலாசிரியர் என்ற சிறப்பைப் பெற்ற தமிழ்க்கவிஞரும் தமிழ் இலக்கிய முதுகலைப் பட்டதாரிகளே.
- தமிழ் மொழியில் சரளமான பேச்சுத் திறனும் நகைச்சுவை உணர்வும் கொண்டவர்கள் தொலைக்காட்சித் தொகுப்பாளர்களாகவும், தொலைக்காட்சி நிகழ்ச்சி நடத்துநர்களாகவும் புகழ் பெற முடியும். அதன் வழியே திரைத்துறையில் நுழைந்து வெற்றி பெற்றவர்கள் பலருளர்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Introduction Pages.indd 9 23-10-2018 10:21:34

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | | பாடத்தலைப்புகள் | ப. எண் |
|---|---|---|---|---|
| 1 | மொழி | உரைநடை | பேச்சுமொழியும் கவிதை மொழியும் | 2 |
| | என்னுயிர் என்பேன் | செய்யுள் | யுகத்தின் பாடல்* | 7 |
| | | | நன்னூல் பாயிரம்* | 9 |
| | | துணைப்பாடம் | ஆறாம் திணை | 12 |
| | | இலக்கணம் | மொழி முதல், இறுதி எழுத்துகள் | 17 |
| 2 | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் | உரைநடை | இயற்கை வேளாண்மை | 28 |
| | மாமழை போற்றுதும் | செய்யுள் | ஏதிலிக்குருவிகள் | 32 |
| | | | திருமலை முருகன் பள்ளு | 33 |
| | | | ஐங்குறுநூறு | 36 |
| | | துணைப்பாடம் | யானை டாக்டர் | 38 |
| | | இலக்கணம் | மெய்ம்மயக்கம் | 44 |
| 3 | பண்பாடு | உரைநடை | மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு | 52 |
| | பீடு பெற நில் | செய்யுள் | காவடிச்சிந்து | 56 |
| | | | குறுந்தொகை* | 58 |
| | | | புறநானூறு* | 60 |
| | | துணைப்பாடம் | வாடிவாசல் | 62 |
| | | இலக்கணம் | பகுபத உறுப்புகள் | 66 |
| | | வாழ்வியல் | திருக்குறள்* | 77 |
| 4 | அறிவியல், தொழில்நுட்பம் | உரைநடை | தலைமைச் செயலகம் | 86 |
| | இனியொரு விதி செய்வோம் | செய்யுள் | விஞ்ஞானி | 91 |
| | | | நீலகேசி* | 93 |
| | | | புறநானூறு | 96 |
| | | துணைப்பாடம் | இனிக்கும் இன்சுலின் | 98 |
| | | இலக்கணம் | புணர்ச்சி விதிகள் | 103 |
| 5. | கல்வி | உரைநடை | தமிழகக் கல்வி வரலாறு | 114 |
| | கேடில் விழுச்செல்வம் | செய்யுள் | பிள்ளைக்கூடம் | 119 |
| | | | நற்றிணை | 120 |
| | | | தொல்காப்பியம் – சிறப்புப் பாயிர உரை விளக்கப் பாடல் | 122 |
| | | துணைப்பாடம் | இதழாளர் பாரதி | 124 |
| | | இலக்கணம் | படைப்பாக்க உத்திகள் | 128 |
| 6. | நாகரிகம், தொழில், வணிகம் | உரைநடை | ஆனந்தரங்கர் நாட்குறிப்பு | 140 |
| | நாளெல்லாம் வினைசெய் | செய்யுள் | சீறாப்புராணம் | 145 |
| | | | அகநானூறு | 148 |
| | | துணைப்பாடம் | பிம்பம் | 151 |
| | | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 155 |
| | | வாழ்வியல் | திருக்குறள்* | 167 |




athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Introduction Pages.indd 10 23-10-2018 10:21:34

| இயல் | பொருண்மை | | பாடத்தலைப்புகள் | ப. எண் |
|---|---|---|---|---|
| 7. | கலை, அழகியல், புதுமைகள் | உரைநடை | காலத்தை வென்ற கலை | 172 |
| | பல்கலை நிறுவு | செய்யுள் | ஆத்மாநாம் கவிதைகள் | 178 |
| | | | குற்றாலக் குறவஞ்சி | 179 |
| | | | திருச்சாழல் | 181 |
| | | துணைப்பாடம் | இசைத்தமிழர் இருவர் | 183 |
| | | இலக்கணம் | கலைச்சொல்லாக்கம் | 188 |
| 8. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | உரைநடை | காற்றில் கலந்த பேரோசை | 198 |
| | வையத் தலைமை கொள் | செய்யுள் | புரட்சிக்கவி* | 201 |
| | | | பதிற்றுப்பத்து | 205 |
| | | துணைப்பாடம் | சிந்தனைப் பட்டிமன்றம் | 208 |
| | | இலக்கணம் | ஆக்கப்பெயர்கள் | 213 |
| 9. | அறம், தத்துவம், சிந்தனை | உரைநடை | சித்தர் உலகம் | 222 |
| | மெய்ப்பொருள் காண்பது அறிவு | செய்யுள் | ஜப்பானிய ஹைக்கூ | 225 |
| | | | காவியம்* | 226 |
| | | | தொலைந்து போனவர்கள்* | 227 |
| | | | வில்லிபாரதம் | 229 |
| | | துணைப்பாடம் | காஞ்சனை – முன்னுரை | 233 |
| | | இலக்கணம் | நிறுத்தக்குறிகள் | 236 |
| 10. | மனிதம், ஆளுமை | உரைநடை | தாகூரின் கடிதங்கள் | 246 |
| | யாரையும் மதித்து வாழ் | செய்யுள் | ஒவ்வொரு புல்லையும் | 249 |
| | | | மனோன்மணீயம் | 250 |
| | | துணைப்பாடம் | செவ்வி | 254 |
| | | இலக்கணம் | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் | 258 |
| | | வாழ்வியல் | திருக்குறள் | 267 |


*( * ) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி*

213Y9B

*மின் நூல்*

21CUAY

*மதிப்பீடு*

B123_11_TAM

*இணைய வளங்கள்*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

இயல் 1

# என்னுயிர் என்பேன்



## கற்றல் நோக்கங்கள்

- பேச்சுமொழிக்கும் கவிதைமொழிக்கும் உள்ள தனித் தன்மைகளைப் பல்வேறு படைப்பாளர்களின் கருத்துகளின் வழிப் புரிந்து கொள்ளுதல்
- மொழியின் இலக்கிய இலக்கண வளங்களை அறிதல்
- நூலின்கண் பாயிரம் பெறும் இடத்தையும் அதன் இன்றியமையாமையையும் அறிதல்
- புலம்பெயர் வாழ்க்கைச் சூழல்களால் தமிழ்மொழி உலகெங்கும் பரவியுள்ளதைத் தெரிந்து கொள்ளுதல்
- மொழி முதல், இறுதி எழுத்துகள் எவை என்பதை அறிந்து பிறமொழிக் கலப்பின்றிப் பேசவும் எழுதவும் செய்தல்

## பாடப் பகுதி

பேச்சுமொழியும் கவிதைமொழியும் – இந்திரன்

யுகத்தின் பாடல் – சு. வில்வரத்தினம்

நன்னூல் – பாயிரம் – பவணந்தி முனிவர்

ஆறாம் திணை – அ. முத்துலிங்கம்

மொழி முதல், இறுதி எழுத்துகள்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_001-026.indd 1 23-10-2018 10:48:23

உரைநடை உலகம்

இயல் 1

# பேச்சுமொழியும் கவிதைமொழியும்

– இந்திரன்

21LQCL

**நுழையும்முன்**

கலைகளின் உச்சம் கவிதை என்பர். அக்கவிதையினை, இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்றும் கூறினார் மகாகவி பாரதி. கவிதை எவ்வாறு நிகழ்கிறது; எழுத்துமொழியைக் கடந்து பேச்சுமொழி எவ்வாறு கவிதைக்கு நெருக்கமாக இருக்கிறது என்பவை பற்றிப் பேசுகிறது இக்கட்டுரை.

கவிதை என்பது எது? கவிதை எழுதும் செயல்பாடு எப்படி நிகழ்கிறது? கவிதை எழுதுகிறபோது எழுதிக் கொண்டிருப்பவனுக்குள் என்ன நிகழ்கிறது? கவிதை எழுதி முடித்துவிட்ட பிறகு கவிஞனுக்கும் கவிதைக்கும் என்ன உறவு? அதை யார் முடிவு செய்கிறார்கள்?

தொடரும் இந்தக் கேள்விகளுக்கான பதில்களை எண்ணற்ற அழகியல்வாதிகளும் தத்துவ ஞானிகளும் கலை விமர்சகர்களும் மொழியியல் அறிஞர்களும் கொடுத்திருக்கிறார்கள். அவற்றுள் நான் இதுவரை கேட்டது, கண்டது, படித்தது ஆகிய எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், நான் மொழியில் மிதந்துகொண்டுதான் பிறந்ததாகத் தெரிகிறது. மொழியில் மூழ்கியபடிதான் எனது விழிகள் இந்த உலகைக் காணத் திறந்தன என்று உணர்கிறேன்.

## என்னை விளக்கிய மொழி

எனக்கு மொழி என்பது அறிமுகமாவதற்கு முன்னால் பொருள்களும் விலங்குகளும் பறவைகளும் வானும் நிலவும் சூரியனும் மரங்களும் செடிகளும் இருந்திருக்கவே இல்லை. மொழி எனது உலகத்தை ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டியெழுப்பியது. இதன்பிறகுதான் 'நான்' என்ற ஒன்று பிறந்தது. எனது உலகம் என்பது மொழியினால் கட்டமைக்கப்பட்ட பிறகு அந்த உலகத்திலிருந்து தனித்துப் பிரிந்து நிற்கிற 'நான்' உதயமானேன்.

நான் இன்றைக்கு நினைத்துப் பார்க்கிறேன். மொழியின் பொருளை அறிந்துகொள்ளத் தொடங்கியது எந்த ஆண்டில்? எந்த நாளில்? எத்தனை மணிக்கு? இவை அனைத்திற்கும் என்னிடம் பதில் இல்லை.

நான் உணர்ச்சியினால் நிரம்பியிருக்கிறபோது அந்த வேகத்தைப் பதிவு செய்வதற்குச் சொற்கள் உதவும் என்று எப்போது தோன்றத் தலைப்பட்டது?

> மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன.
>
> – எர்னஸ்ட் காசிரர்

மொழி என்ற ஒன்று என்னுள் தோன்றியவுடன்தான் உலகம் எனது கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது. எனது உலகத்தை இழையிழையாகப் பிரித்தும் வகுத்தும் தொகுத்தும் விதவிதமான தூரங்களில் வைத்தும் கொடுத்தது மொழி. இதன்மூலமாக எனக்குள் உலகத்தின்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 2 23-10-2018 10:48:23

பல கதவுகள் திறக்கலாயின. மொழியின் சாவியைப் போட்டுத் திறக்கிறபோதெல்லாம் இதுவரையிலும் பெயர் சூட்டப்பட்டிராத பலவற்றை நானே என் கண்களால் கண்டுபிடிக்கத் தொடங்கினேன். அவற்றிற்கு நானே எனக்குப் பிடித்தமான பெயர்களைச் சூட்டத் தொடங்கினேன். பெயர்களுக்குக் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய வண்ணங்களைப் பூசும் சக்தியை மொழி எனக்குக் கொடுத்தது. அவற்றை விதவிதமான அடுக்குகளில் ஒருமையாகவும் பன்மையாகவும் அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப அடுக்கும் திறனை மொழி எனக்கு வழங்கியது.

### வாளினும் வலிமை

மொழிவழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன் அந்தப் பொருளின்மீது எனக்கொரு அதிகாரம் வந்துவிடுவதை உணர்கிறேன். குழந்தையாக இருந்தபோது, "அம்மா, அம்மா" என்று அழைப்பேன். வேலையில் மூழ்கிய அம்மா, என்னைக் கவனியாதபோது திடீரென்று அவரது பெயரைச் சொல்லி அழைத்திருக்கிறேன். அவர் திடுக்கிட்டுத் திரும்பி என்னிடம் வந்திருக்கிறார். அப்போதுதான் என்னுடைய மொழி, பெயர்கள் இட்டு அழைத்தவுடன் அவற்றின்மீது ஒரு அதிகாரத்தை உருவாக்கிக் கொடுத்ததை உணரத் தலைப்பட்டேன்.

உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன. அவற்றை ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், இடையில் கொடுக்கும் மௌனம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பயன்படுத்திப் பொருள் வேறுபாடுகளை என்னால் ஏற்படுத்த முடியும் என உணர்கிறேன். இதுமட்டுமன்றி, கைகால் அசைவுகள், முகத்தின் தசைநார்ச் சுருக்கங்களின் அபிநயங்கள் ஆகிய உடம்பின் செயல்பாடுகள் என்னுடைய மொழி வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளன.

ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்துவிடுகிறது. இந்தத் திடநிலையை அடைந்த மொழி அது அச்சிடப்பட்ட ஒரு கவிதையாக மாறுகிறபோது என்னிலிருந்து பிரிந்துபோய்விட்ட ஒரு பொருளாக மாறிவிடுகிறது. உலகை, மொழி கட்டியெழுப்பியது என்று சொல்கிறபோது உலகம் மொழியின் கைப்பிடியிலிருந்து நழுவுவதற்குத் தொடர்ந்து முயல்வதாகவும் தெரிகிறது.

### நேரடிமொழி

எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எனவேதான் இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது. எழுத்துமொழி அப்படியன்று. எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது. முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அதனால்தான், பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

எழுத்துமொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது. எழுத்து என்பது ஒரு வகையில் பார்த்தால் தனக்குத்தானே பேசிக்கொள்கிற பேச்சு. ஆனால் பேச்சு என்பது அப்படிப்பட்டதன்று. பேச்சு என்பது தன்னைத் திறந்துகொள்கிற ஒரு செயல்பாடு. உண்மையில் சொல்லப்போனால் பேச்சு என்பது மொழியில் நீந்துவது. பேச்சுமொழியின்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன. இதை உணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவதுபோல அமைக்கின்றனர். இதையே அவர்கள் நேரடிமொழி எனக் கருதுகின்றனர்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 3 23-10-2018 10:48:23

நேரடிமொழி எனப்படும் பேச்சுமொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை. அது வேற்றுமொழி ஆவதில்லை. அது எப்போதும் உயிர்ப்புடனும் மாறிக்கொண்டும் இருக்கிறது. இம்மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்தகாலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்கிறார் மலையாளக் கவி ஆற்றூர் ரவிவர்மா.

பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் மேல்தோல்போல் இயங்குகிறது. ஆனால், எழுத்துமொழியில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை, உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடிவிடுகின்றன. எனவே, கவிதை மரபான தனது செய்யுள் சந்தத்திலிருந்து விடுதலை அடைந்துவிட்டது. அடுத்ததாக, அது கவிதைக்கென இருக்கிற தனித்துவமான மொழிநடையிலிருந்தும் விடுதலை அடைய வேண்டும்.

### பெருங்கவிஞர்களின் வாய்மொழி

பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களில் மூன்று வகையினர் உண்டு. முதல் வகையினர், வால்ட் விட்மனைப் போன்றவர்கள். இவர்களுடைய கவிதைகளில் எந்தவொரு சொல்லும் மற்றொரு சொல்லை விட முக்கியமானதாகிவிடுவதில்லை. எழுத்துகள் எப்படிச் சொற்களில் கரைந்து போகின்றனவோ அதுபோன்று சொற்கள் கவிதைகளில் கரைந்துபோவதில்லை. இவற்றில் சொற்கள் தங்களுக்குத் தாங்களே பேசிக்கொள்வதில்லை. இக்கவிதைகள் இறுக்கிச் சுற்றப்பட்ட கம்பிச்சுருளைப் போன்று அல்லாமல் பேச்சுமொழிக்கே உரிய தளர்வோடு கட்டப்பட்டவை. இதில் பல நேரங்களில் கவிதை என்பது நடனமாடிக் கொண்டிருப்பவன், அவ்வப்போது நடப்பதற்குத் தாவிவிடுவதுபோல வெறுமனே ஒரு பேச்சு என்ற நிலைக்கு நழுவிவிடும்.

கவிஞர் மல்லார்மே போன்றவர்கள் இரண்டாம் வகையினர். இவர்களுடைய பேச்சு எதிராளியை விளித்துப் பேசுவது போன்றது

#### வால்ட் விட்மன்

வால்ட் விட்மன் அமெரிக்காவைச் சேர்ந்தவர். கவிஞர்; இதழாளர்; கட்டுரையாளர்; புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர். இவருடைய 'புல்லின் இதழ்கள்' (Leaves of grass) என்ற நூல் உலகப்புகழ் பெற்றது.



கனவொன்று நான் கண்டேன்
உலகெலாம் திரண்டுவந்து ஒருசேரத்
தாக்கினாலும்
தோற்காத பெருநகரம் ஒன்று கண்டேன்
நண்பர்கள் நகரம் என்றொரு புதுநகரம்
வந்தது என் கனவில்.
அன்பைவிடப் பெரிதென்ற ஒன்றும் அந்நகரில்
இல்லை,
அன்பின் வழித்தடத்தில் மற்றெல்லாம்
சென்றன அதன் பின்னே.
எந்நேரமும், மாந்தர் செய்வது எதுவென்றாலும்,
அன்பேதான் தெரிந்தது அங்கே அவற்றில் எல்லாம்,
மக்கள் தோற்றத்திலும் அன்பே,
அன்பேதான் அவர் மொழியும்.

அன்று. மின்சார ரயிலின் நெருக்கத்தில் படியில் தொங்கிக்கொண்டு போகிறபோது வெளியில் பரந்து கிடக்கும் தனிமையைச் சாட்சியாக வைத்துத் தங்களுக்குத் தாங்களே உதடு பிரித்துப் பேசிக்கொள்ளும் வகை. இவர்களுடைய கவிதைகளில் பேச்சு என்பது மூடிய நிலையில் செயல்படுகின்றது. தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னையே பேசிக்கொள்கிறது. குறியீடுகளின் கூட்டம் ஒரு முனையிலும் மொழி மறுமுனையிலும் இருக்கையில் கவிதையின் பேச்சு, இடையில் இருக்கும் வெளியில் புழங்குகின்றது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 4 23-10-2018 10:48:23

குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவுகூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

மூன்றாவது வகையினர் ஸ்பானிஷ் மொழிக் கவிஞராகிய பாப்லோ நெரூடா போன்றவர்கள். ஒரு கவிதை, ஒரு பொருளைப் பற்றியது என்று தோன்றினாலும் அஃது அப்பொருளைப் பற்றியது அன்று. அது வாழ்க்கையின் வடிவமற்ற தன்மையைப் பற்றிப் பேசுகிறது. ஒரு வடிவம் கொள்ளுதல் என்பதை நோக்கி வாழ்க்கை தொடர்ந்து முயல்கிறபோதும் அது இந்த முயற்சியில் ஒருபோதும் வெற்றி கொள்வதில்லை. இதுபோன்ற கவிதை, எந்தவித முன்கூட்டிய

**ஸ்டெஃபான் மல்லார்மே**

ஸ்டெஃபான் மல்லார்மே பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர். ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரைப் புரிந்துகொள்வதன் மூலமே குறியீட்டியத்தையும் (Symbolism) புரிந்துகொள்ள முடியும்.



புத்தகங்களிலெல்லாம் படித்துவிட்டேன்

நான் தப்பிப் போகத்தான் வேண்டும் அங்கே

ஆனால் உடலோ சோகத்தில்! வானுக்கும்

முன்பின் தெரியாத கடல் நுரைக்குமிடையே

மயக்கத்தில் பறவைகள் பறப்பதை உணர்கிறேன்!

என் கண்களில் பிரதிபலிக்கும் பழைய பூங்காக்களோ

எழுதப்படாத தாளின் தூய வெண்மையின் மீது

என் விளக்கிலிருந்து வீசும் பயனற்ற ஒளியோ

தன் குழந்தைக்குப் பாலூட்டும் அவ்விளம்பெண்ணோ

எதுவும் தடுக்காது கடல்நீரில் நனையும் இந்நெஞ்சை.

நான் கிளம்பிச் செல்வேன்! பாய்மரங்களைத்

தூக்கியெறிந்து விட்டிருக்கும் நீராவிக் கப்பலே

புறப்படு, தொலைதேச இயற்கையை நோக்கி.

இரக்கமற்ற எதிர்பார்ப்புகளில் மனமுடைந்து

ஆடும் கைக்குட்டைகளின் மகத்தான வழியனுப்பலை

இன்னும் நம்பிக்கொண்டிருப்பது வேதனை!

அதோ, பாய்மரமின்றிப் போய்ச்சேரத் தீவுகளின்றி

மூழ்கிவிட்ட கப்பல்களின்மேல் சாய்ந்து

புயலை அழைக்கும் பாய்மரங்கள்தாமே அவை..

ஆனால், இதோ கேள் என் நெஞ்சே

மாலுமிகளின் பாடலை!

**பாப்லோ நெரூடா**

தென் அமெரிக்காவிலுள்ள சிலி நாட்டில் பிறந்தவர். இலத்தீன் அமெரிக்காவின் மிகச் சிறந்த கவிஞர். தன்னுடைய கவிதைகளுக்காக 1971ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்.



எத்துணைப் பெயர்கள்!

திங்கட்கிழமைகள் செவ்வாய்க்கிழமைகளுடனும்

ஆண்டு முழுவதுடன் வாரமும் சிக்கிக் கொண்டுள்ளன.

களைத்துப்போன உம் கத்தரிக்கோலால்

காலத்தை வெட்ட முடியாது.

பகலின் பெயர்கள் அனைத்தையும்

இரவின் நீர் அழைக்கிறது.

இரவில் நான் உறங்குகையில்

என்னை என்னவென்று அழைக்கின்றனர்

அல்லது என்னவென்று அழைப்பதில்லை?

தூங்கும்போது நான் நானாக இல்லையெனில்

விழித்தெழுந்த பின் நான் யார்?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 5 23-10-2018 10:48:23

திட்டமோ, ஒழுங்கமைதியோ இன்றி ஒன்றைச் சுட்டுவதுபோலக் காட்டி உடனே எதையும் சுட்டாமல் முடிந்துபோகிறது. அறியப்பட்டிராததை நோக்கி நகர்கிற அதே நேரத்தில் நெரூடாவின் கவிதை விரிந்ததாகவும் மையத்தை நோக்கி நகர்வதாகவும் இருக்கிறது.

கவிதை என்பது எது? என்ற இந்தக் கேள்விக்கு எனக்குத் தற்சமயம் கிடைக்கும் விடை இதுதான். கவிதை என்பது ஒரு பொருளன்று; அது மொழிக்குள் உலகையும் உலகிற்குள் மொழியையும் முழுவதுமாக நுழைத்துவிடுவதற்காக முயலும் தொடர்ந்த ஒரு படைப்புச் செயல்பாடு. எனவே, கவிதை என்பதே மொழிதான். கவிதைக்குள் உலவும் மொழியின் தர்க்கம் கவிதைக்கான உலகத்தைக் கட்டியெழுப்புகிறது. எனவே, எத்தகைய மொழியை நாம் பயன்படுத்துகின்றோமோ அதன் குணாம்சங்களையும் பேச்சுவழக்குகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியது கவிஞனின் கடமையாகிறது.

### தெரிந்து தெளிவோம்

ஒவ்வொரு மொழியிலும் தோன்றும் கவித்துவ வெளிப்பாடுகளை ஒன்றாக வைத்து நோக்கும்பொழுது கவிதைகள் கேட்போரால் / வாசகர்களால் உள்வாங்கப்பட்டு ரசிக்கப்பெறும் முறையில், காலத்துக்குக் காலம் அழுத்த வேறுபாடுகள் ஏற்படுவது வழக்கம்.

கவிதை என்பது யாது; அது எவற்றைப் பற்றிப் பேசுதல் வேண்டும்; எப்பொழுது எந்த நிலையில் ஒரு கவிதையாக்கம் கவர்ச்சிகரமான கவிதையாக அமையும் என்பன பற்றி, அவற்றின் ஆக்கத்தில் ஈடுபடுவோருடைய கருத்து நிலைப்பாடுகள் கவிதை, கவிதையெனக் கொள்ளப்படுவதற்கான எடுத்துக்கூறல் முறைமைகள் ஆகியன யாவும் ஒருங்கு சேர்கின்றபொழுதுதான் மேலே கூறிய கவித்துவ உணர்வுச் செவ்வியலிலே மாற்றம் தெரிய வரும்.

–தமிழின் கவிதையியல் நூலில் கா. சிவத்தம்பி

### நூல்வெளி

இராசேந்திரன் என்னும் இயற்பெயர் கொண்ட இந்திரன் சிறந்த கலைவிமர்சகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், ஓவியர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர். ஒரிய மொழிக் கவிஞர் மனோரமா பிஸ்வாஸின் "பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்" என்னும் இவரின் மொழிபெயர்ப்பு நூலுக்காக, 2011ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமியின் விருது பெற்றுள்ளார். முப்பட்டை நகரம், சாம்பல் வார்த்தைகள் உள்ளிட்ட கவிதை நூல்களையும் தமிழ் அழகியல், நவீன ஓவியம் உள்ளிட்ட கட்டுரை நூல்களையும் படைத்துள்ளார். வெளிச்சம், நுண்கலை ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார்.

**பாடப்பகுதிக்கான கவிதை மொழிபெயர்ப்புகள்**

- வால்ட் விட்மன் – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : சங்கர் ஜெயராமன்
- மல்லார்மே – பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் : வெ. ஸ்ரீராம்
- பாப்லோ நெரூடா – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : ஆ.இரா. வேங்கடாசலபதி

### கற்பவை கற்றபின்...

1. பாரதியின் வசனகவிதைகளுள் உங்களுக்குப் பிடித்த கவிதையை வகுப்பறையில் படித்துக் காட்டுக.
2. கவிதை குறித்துத் தமிழ்க்கவிஞர்களின் கருத்துகளைத் திரட்டி ஒப்படைவு எழுதுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 6 23-10-2018 10:48:24

இயல் 1

# யுகத்தின் பாடல்

21VLE9

**நுழையும்முன்**

மொழி, மனித இனத்தின் ஆதி அடையாளம். அது, பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு உருவானது. ஓர் இனத்தின் மையப்புள்ளியாக விளங்குவதும் மொழியே. அது, நம் இருப்பின் அடையாளம். நம் தாய்மொழியாம் தமிழ் மொழியின் வேர், சங்கத்தில் தொடங்கி இன்றையகாலம் வரையும் இடர்பல களைந்து, உயர்தனிச் செம்மொழியாய்ச் செழித்தோங்கி இருக்கிறது.

*1. என் அம்மை, ஒற்றியெடுத்த*
*நெற்றிமண் அழகே!*
*வழிவழி நினதடி தொழுதவர்,*
*உழுதவர், விதைத்தவர்,*
*வியர்த்தவர்க்கெல்லாம்*
*நிறைமணி தந்தவளே!*
*உனக்குப்*
*பல்லாண்டு*
*பல்லாண்டு*
*பல்லாயிரத்தாண்டு*

*2. பாடத்தான் வேண்டும்!*
*காற்றிலேறிக்*
*கனைகடலை, நெருப்பாற்றை,*
*மலைமுகடுகளைக் கடந்து*
*செல் எனச் செல்லுமோர் பாடலை*
*கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்*
*காலத்தால் சாகாத தொல் கனிமங்களின்*
*உரமெலாம் சேரப்*
*பாடத்தான் வேண்டும்!*



*ஏடு தொடக்கி வைத்து என்னம்மை*
*மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த*
*விரல்முனையைத் தீயிலே தோய்த்து*
*திசைகளின் சுவரெலாம்*
*எழுதத்தான் வேண்டும்*
*எழுகின்ற யுகத்தினோர் பாடலை.**

*சு. வில்வரத்தினம்*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 7 23-10-2018 10:48:25

## தெரியுமா?

புதுக்கவிதை – விளக்கம்

மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர். படிப்போரின் ஆழ்மனதில் புதுக்கவிதை ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது. இது படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மை கொண்டது. எளியவர்களும் தம் உணர்ச்சிகளைக் கவிதை வாயிலாக வெளிப்படுத்தும் வாய்ப்பைத் தந்தது புதுக்கவிதை எனலாம்.

## நூல்வெளி

கவிஞர் சு. வில்வரத்தினம், யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத் தீவில் பிறந்தவர். இவருடைய கவிதைகள் மொத்தமாக, 'உயிர்த்தெழும் காலத்துக்காக' என்ற தலைப்பில் 2001இல் தொகுக்கப்பட்டன. இவர் கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர். வில்வரத்தினத்தின் இரண்டு கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுத்த பகுதிகள் பாடப்பகுதியில் இடம்பெறுகின்றன.

தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை.

– இரசூல் கம்சதோவ்

### உயிர்ப்பு

*என் புன்னகையைக் கூட*
*மொழிபெயர்க்க முடியாத*
*அந்நிய தேசத்தில்*
*எனக்கு நானே அகதியானேன்.*
*உணர்வுகளைச் சொல்ல முடியாமலும்*
*உதற முடியாமலும்*
*குரலற்றுக் கிடந்தேன்*
*என் காயத்தை வருடிச் சென்றது*
*மின்னலெனக் கடந்த*
*தாய்மொழியின் அமுதிசை*
*துள்ளி உயிர்த்தெழுந்தேன்*
*பரவச வெளியில்*
*நானுமோர் பறவையானேன்.*

## கற்பவை கற்றபின்...

1. தாய்மொழியே முதன்மையானது – இக்கூற்றுக் குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.
2. 'காலத்தை வென்ற மொழி' என்னும் தலைப்பில் கவிதை படைக்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 8 23-10-2018 10:48:25

கவிதைப்பேழை

இயல் 1

# நன்னூல் – பாயிரம்




நூலைப் புரிந்துகொள்ளவும் அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் பாயிரம் உதவுகிறது. தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் இத்தகைய அமைப்பினைக் காணலாம். தொல்காப்பியத்தையும் அதன் உரைகளையும் பின்பற்றி எழுதப்பட்ட நூலான நன்னூலில்பொதுப்பாயிரம்,சிறப்புப்பாயிரம்ஆகியனகுறித்துவிளக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஏழு நூற்பாக்களை நம் பாடப்பகுதியில் பார்ப்போம்.

## பாயிரம் இல்லது பனுவல் அன்றே

1. *முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்*
   *புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்* — *நூ. எண்: 1*

2. *பாயிரம் பொது, சிறப்பு எனஇரு பாற்றே* — *நூ. எண்: 2*

3. *நூலே நுவல்வோன் நுவலும் திறனே*
   *கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்*
   *எல்லா நூற்கும் இவைபொதுப் பாயிரம்* — *நூ. எண்: 3*

4. *ஆக்கியோன் பெயரே வழியே எல்லை*
   *நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே*
   *கேட்போர் பயனோடு ஆயஎண் பொருளும்*
   *வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே** — *நூ. எண்: 47*

5. *காலம் களனே காரணம் என்றுஇம்*
   *மூவகை ஏற்றி மொழிநரும் உளரே** — *நூ. எண்: 48*

6. *ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்*
   *பாயிரம் இல்லது பனுவல் அன்றே* — *நூ. எண்: 54*

7. *மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்*
   *ஆடமைத்தோள் நல்லார்க்கு அணியும்போல் – நாடிமுன்*
   *ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்*
   *பெய்துரையா வைத்தார் பெரிது.* — *நூ. எண்: 55*

*– பவணந்தி முனிவர்*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 9 23-10-2018 10:48:25

## பாயிரம் – அறிமுகம்

நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும் அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறைபற்றிப் பேசுவது பாயிரமாகும்.

## சொல்லும் பொருளும்

பால் – வகை ; இயல்பு – பண்பு; மாடம் – மாளிகை; அமை – மூங்கில்.

## பாடலின் பொருள்

1. பாயிரத்திற்கு உரிய ஏழு பெயர்கள் –

அ) முகவுரை - நூலுக்குமுன் சொல்லப்படுவது.

ஆ) பதிகம் - ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பலவகைப் பொருள்களையும் தொகுத்துச் சொல்வது.

இ) அணிந்துரை, ஈ) புனைந்துரை - நூலின் பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துச் சொல்வது.

உ) நூன்முகம் - நூலுக்கு முகம்போல முற்பட்டிருப்பது.

ஊ) புறவுரை - நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றை நூலின் புறத்திலே சொல்வது.

எ) தந்துரை - நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது.

2. பாயிரம் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இருவகைப்படும்.

3. நூலின் இயல்பு, ஆசிரியர் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை என்னும் ஐந்தையும் கூறுவது பொதுப்பாயிரம்.

4. சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம்

நூலாசிரியர் பெயர்

நூல் பின்பற்றிய வழி

நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு

நூலின் பெயர்


நன்னூல்

இந்நூல்செய்தவர்

சனகபுரம்

பவணந்திமுனிவர்.

இவ்வுரைசெய்தவர்

திருத்தணிகைக்

கந்தப்பையர் குமாரராகிய

விசாகப்பெருமாளையர்

சென்னபட்டணம்

கல்விவிளக்கவச்சுக்கூடத்தில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

நன்னூல் முதல் பதிப்பு (1834) முகப்புப் பக்கம்

தொகை, வகை, விரி என்பவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு

நூலில் குறிப்பிடப்படும் கருத்து

நூலைக் கேட்போர் (மாணவர்)

நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன்

ஆகிய எட்டுச் செய்திகளையும் செம்மையாகத் தெரிவிப்பது சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் ஆகும். இப்பாடல் நூற்பா வகையைச் சார்ந்தது.

5. நூல் இயற்றப்பட்ட காலம், அது அரங்கேற்றப்பட்ட அவைக்களம், அது இயற்றப்பட்டதற்கான காரணம் என்னும் இம்மூன்றையும் மேலே கூறப்பட்டுள்ள எட்டுச் செய்திகளுடன் சேர்த்துக் கூறுவோரும் உள்ளனர்.

6. ஆயிரம் முகத்தைப் பெற்றது போன்று பல்வேறு துறைச் செய்திகளை விரிவாகக் கூறினாலும் பாயிரம் இல்லையேல் அது சிறந்த நூலாக மதிக்கப்படாது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 10 23-10-2018 10:48:25

7. மாடங்களுக்கு ஓவியங்களும் பெரிய நகரங்களுக்குக் கோபுரங்களும் அழகிய தோள்களைக்கொண்ட மகளிருக்கு அணிகலன்களும் எழிலைத் தரும். அவை போன்று எல்லாவகை நூல்களுக்கும் முன்னர் அழகு தருவதற்காக அணிந்துரையைப் புலவர்கள் பெருமையுடன் சேர்த்து வைத்தனர்.



*பவணந்தி முனிவர்*

### இலக்கணக்குறிப்பு

மாநகர் – உரிச்சொற்றொடர்

காட்டல், கோடல் – தொழிற்பெயர்கள்

கேட்போர் – வினையாலணையும் பெயர்

ஐந்தும் – முற்றும்மை

### பகுபத உறுப்பிலக்கணம்

**வைத்தார் – வை + த் + த் + ஆர்**

வை – பகுதி

த் – சந்தி

த் – இறந்தகால இடைநிலை

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

### புணர்ச்சிவிதி

**அணிந்துரை – அணிந்து + உரை**

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் – அணிந்த் + உரை

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – அணிந்துரை

**பொதுச்சிறப்பு – பொது + சிறப்பு**

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் – பொதுச்சிறப்பு.

### நூல்வெளி

நன்னூல், தொல்காப்பியத்தை முதல்நூலாகக் கொண்ட வழிநூல் ஆகும். இது, பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டில் பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலாகும். இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. எழுத்ததிகாரம் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என 5 பகுதிகளாகவும் சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என 5 பகுதிகளாகவும் அமைந்துள்ளன.

சீயகங்கன் என்ற சிற்றரசர் கேட்டுக்கொண்டதால் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் எனப் பாயிரம் குறிப்பிடும்.

ஈரோடு மாவட்டம், மேட்டுப்புதூர் என்ற ஊரில் எட்டாம் தீர்த்தங்கரரான சந்திரப்பிரபாவின் கோவில் உள்ளது. இங்கே பவணந்தியாரின் உருவச் சிற்பம் இன்றும் உள்ளது.

### கற்பவை கற்றபின்...

எல்லாவகை நூல்களுக்கும் அழகு தருவதாக வைக்கப்படுவது அணிந்துரை – எடுத்துக்காட்டுகளுடன் வகுப்பறையில் விவாதிக்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 11 23-10-2018 10:48:26

விரிவானம்

இயல் 1

# ஆறாம் திணை

அ. முத்துலிங்கம்

22EDHJ




காலந்தோறும் நிலையான வாழ்விடங்களைத் தேடிப் புலம்பெயர்ந்தபடியே இருந்த நாடோடி இனம், நிலவுடைமைச் சமூகமாக மாறப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆகின. மண்ணிலிருந்து பயிர்களைப் பிடுங்கியெறிவதுபோல, தாய்மண்ணிலிருந்து மனிதவுயிர்களைப் பெயர்த்து எறியும் போக்கு காலந்தோறும் நடந்துவரும் பேரவலமாகும். தங்களுடைய தாய்நாட்டிலிருந்து வெளியேறியவர்களும் வெளியேற்றப் பட்டவர்களும் எதிர்கொள்ளும் அவலங்களை ஆறாம்திணை ஆறாத வடுவாகப் பதிவு செய்கிறது.

நாங்கள் அப்போது இலங்கையில் மவுண்லவினியா என்னும் இடத்தில் வாடகை வீட்டில் தங்கியிருந்தோம். எங்கள் வீட்டுச் சொந்தக்காரர் பெயர் பிரீஸ். அவருக்குத் தமிழ் தெரியாது. எனக்குச் சிங்களம் தெரியாது.

1958ஆம் ஆண்டு மே மாதம் ஓர் இரவு கலவரம் மெல்ல மெல்ல ஊர்ந்து கொழும்புக்கு வந்தது. எந்த நேரமும் எங்கள் வீடு தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்று உணர்ந்த எங்கள் அண்ணா எங்கள் உயிரையும் உடைமைகளையும் பிரீஸ்தான் பாதுகாக்க வேண்டும் என்று அவரிடம் வேண்டினார். பிரீஸ் அப்போதுதான் தன் நினைவுக்கு வந்ததுபோல் ஒரு புதுமனிதராக மாறினார். எங்கள் பாதுகாப்புக்கு, தான் உத்திரவாதம் என்றார். ஒரு நாற்காலியை எடுத்து வீட்டுக்கு வெளியே போட்டு அன்றிரவு முழுக்க அங்கேயே தங்கினார். தூங்கவே இல்லை. உள்ளே நாங்களும் தூங்காமல் விடிவதற்காகக் காத்திருந்தோம். அடுத்த நாள் காலை அங்கிருந்த மூன்று தமிழ்க் குடும்பங்களில் ஒரு குடும்பத்தின் வீடு உடைந்து சிதிலமாகிவிட்டது என்றார்கள். ஒரு குடும்பத்து ஆட்கள் இரவோடு இரவாக மறைந்துவிட்டார்கள். எஞ்சியது நாங்கள் மட்டும்தான்.

### எனக்குக் கிடைத்த சட்டை

ஒரு போலீஸ் வாகனத்தில் எங்களையும் இன்னும் சில தமிழ்க் குடும்பங்களையும் அகதிகள் முகாமுக்கு அழைத்துச் சென்றார்கள். ஒரேயொரு பெட்டிதான் எடுத்து வரலாம் என்று கட்டளை. என் பங்குக்கு டேனியல் டிஃபோ எழுதிய "ராபின்சன் குரூசோ" என்ற ஒரேயொரு புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டேன். எப்போது வீட்டுக்குத் திரும்பி வருவோம் என்பது நிச்சயமில்லை. அடுத்த வேளை உணவு எப்போது, எங்கேயிருந்து வரும் என்பதும் தெரியாது.

முகாமில் ஒரு தொண்டு நிறுவனம் அகதிகளுக்கு இலவசமாக உடைகள் வழங்கியது. ஏதோவொரு வெளிநாட்டில் யாரோ போட்டு வைத்த உடைகள்தாம் அவை. அதற்காக ஆட்கள் சண்டை போட்டு ஒருவர் மேல் இன்னொருவர் ஏறி நின்று பெற்றுக் கொண்டார்கள். எனக்குப் பெரிசான இரவு ஆடையின் மேல்சட்டை மட்டுமே அகப்பட்டது. கீழ்க் கால்சட்டை யாருக்குப் போனதோ தெரியாது. அந்த மேல்சட்டையின் கடைசிப் பட்டன் என் கைகளுக்கு எட்டாது. ஆனால் மிகச் சந்தோஷமாக அதை நான் பகலிலும் இரவிலும் அணிந்துகொண்டேன்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 12 23-10-2018 10:48:26

அகதி முகாமில் 2000 பேர் வரை இருந்தார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் பல முகாம்கள் இருந்தன என்று பின்னர்க் கேள்விப்பட்டேன். ஒரு மத்தியான நேரத்தின்போது அகதிகளாகிய நாங்கள் மறியல் கைதிகள்போல வரிசையில் தட்டையேந்தி உணவுக்காக நின்றோம். இரண்டு கரண்டி எண்ணி என் தட்டில் விழுந்தது. அது மஞ்சள் நிறத்தில் சோறுபோலவே இருந்தது. பருப்பு முடிந்துவிட்டது. யாரோ ஒருவர் போட்டு முடித்த நீளமான இரவுச்சட்டையோடு நான் நெடுநேரம் அங்கே நின்றேன். அப்பொழுது நான் எனக்குச் சொல்லிக் கொண்டேன் 'இந்த நாளை நன்றாக ஞாபகம் வை. இதுவே உன் வாழ்நாளில் ஆகக் கீழ்மையான தருணம். இனிமேல் இப்படி ஒரு கணம் உன் வாழ்க்கையில் வராமல் பார்த்துக் கொள்'.

யாரோ போட்டு முடித்துத் தானமாகக் கிடைத்த இரவுச் சட்டையை நான் பல வருடங்களாகப் பல தேசங்களுக்கும் ஒரு ஞாபகத்துக்காகக் காவித் திரிந்தேன். ஒரு காலத்தில் நான் வளர்ந்து பெரியவனாகி அந்த உடையை நிரப்புவேன் என்று நினைத்தேன். அது நடக்கவே இல்லை. அந்த உடையும் ஒரு நாட்டை விட்டு இன்னொரு நாட்டுக்கு மாறும் இடைவெளியில் எங்கோ எப்போதோ ஏதோ ஒரு தருணத்தில் என்னை விட்டுத் தப்பியது.

### உயிர் வாழும் திறமை

சில வருடங்களுக்கு முன்னர் நான் புலம்பெயர்ந்த தமிழ் இளைஞர் ஒருவரைச் சந்தித்தேன். முப்பது வயதிருக்கும். உற்சாகமாக இருந்தார். இவருடையது வித்தியாசமான கதை. இலங்கையிலும் பாங்காக்கிலும் சிறையில் இருந்திருக்கிறார். ரஷ்யாவில் பனிப்புதைவில் மயிரிழையில் உயிர் தப்பியவர். ஒன்பது நாள் விசா கெடுவை மீறித் தங்கியதற்காக, சிங்கப்பூரில் இவரைக் குப்புறக் கிடக்க வைத்து ஒன்பது பிரம்படிகள் கொடுத்திருக்கிறார்கள். கழுத்தில் மரப்பூட்டைப் போட்டுவிட்டு ஒரு தடியான மனிதன் பிரம்பினால் அடித்தான். அடித்து முடித்த பிறகு அதே இடத்தில் ஒரு சீனக்கிழவி மயிலிறகால் முதுகில் எண்ணெய் பூசிவிட்டாள். இருவருக்கும் சிங்கப்பூர் அரசு சம்பளம் கொடுத்தது.

அமெரிக்கா போய்ச் சேர்ந்தபோது அவருடைய கள்ள பாஸ்போர்ட்டைக் கண்டுபிடித்துவிட்டார்கள். கையிலும் காலிலும் சங்கிலி மாட்டிக் கையிலே 8 றாத்தல் கனமான இரும்புக்குண்டைக் காவக் கொடுத்து, நடத்திச் சிறைக்குக் கூட்டிச் சென்றார்கள். சிறைவாசம் முடிந்து, மூன்று வருடப் பயணத்துக்குப் பின்னர் கனடாவுக்கு வந்து சேர்ந்தார். அங்கு அகதியாக இருந்தபோது வேலை தேடி 17 கம்பெனிகளில் நேர்முகத் தேர்வுக்குப் போனார். எல்லோரும் அவரிடம், 'உங்கள் கனடிய அனுபவம் என்ன? உங்கள் திறமை என்ன?' என்றே கேள்வி கேட்டார்கள். 18 ஆவது இடத்தில் அவர் இப்படிப் பதில் சொன்னார். 'ஐயா, எனக்குக் கனடா அனுபவம் கிடையாது; ஆனால், என்னிடம் நிறையத் திறமை' உள்ளது. என் திறமை நான் உயிர் வாழ்வது. இன்றுவரைக்கும் உயிர் தப்பி நான் வாழ்கிறேன் என்றால் அது என் திறமை.' இப்பொழுது அவர் கனரக வாகனம் ஓட்டுகிறார். அவருடைய வருமானம் சராசரி கனடியரின் வருமானத்திலும் பார்க்க இரண்டு மடங்கு அதிகம். இது ஓர் உதாரணம்தான். ஒரு புது நாடு கிடைத்துவிட்ட சந்தோஷம் அவருடைய முகத்தில் நிரந்தரமாக இருக்கிறது. கூடவே அகதியாக வாழ்வதன் வலியும்.

### புலம்பெயர் இலக்கியம்

புலம்பெயர்வது ஒன்றும் புதிதல்ல. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மனிதன் புலம்பெயர்ந்தபடியே இருக்கிறான். சங்க இலக்கியத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து நிலங்கள் பற்றிப் பேசும்; பல பாடல்கள் தலைவன், தலைவி பிரிந்து போவதைச் சொல்லும். பொருள்வயின் பிரிவு என்று சொல்வார்கள். பொருள் தேடப் போவதால் புலம் பெயர நேரிடுகிறது. நற்றிணை 153 ஆவது பாடலில்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 13 23-10-2018 10:48:26

## தமிழரின் உலகப் பரவல்





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 14 23-10-2018 10:48:26

தனிமகனார், சினம் கொண்ட அரசனின் கொடுமை தாங்க முடியாமல் துயருற்று, சொந்த ஊரைவிட்டு ஓடியவர்களின் கதையை, 'வெஞ்சின வேந்தன் பகை அலைக்கலங்கி, வாழ்வோர் போகிய பேர் ஊர்ப் பாழ்' என்கிறார். 2000 ஆண்டுகளுக்கு முன்னர் அரசரின் கொலைச் சீற்றத்திற்குப் பயந்து வெளியேறியவர்கள் போலத்தான் சமீப காலங்களில் புகலிடம் தேடி அலைந்து கரை சேர்ந்தவர்களையும் சொல்லலாம்.

கனடாவுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் ஏதோ ஒரு தொடர்பு உண்டு. திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யு. போப் பாதிரியார் கனடாவில் பிறந்தவர். தமிழ் அகதிகள் கனடாவுக்குக் குடிபெயரத் தொடங்கியது 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான். அவர்கள் குடியேறிய சில வருடங்களிலேயே இதழ்கள் ஆரம்பித்துவிட்டார்கள். அகதிக் கோரிக்கை இன்னும் வெற்றி பெறவில்லை. நிரந்தர வேலை கிடையாது. அடுத்த வேளை உணவு பற்றி நிச்சயமில்லை. ஆனால் பத்திரிகைகளும் இலக்கிய இதழ்களும் தொடங்க அவர்கள் தயங்கவில்லை. புது நாட்டுக்கு வந்தவுடன் அவர்கள் செய்தது புது வாழ்க்கையைப் பதிவு செய்ததுதான்.

ஈழத்துக் கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன் எழுதுகிறார்,

*"யாழ்நகரில் என் பையன்*
*கொழும்பில் என் பெண்டாட்டி*
*வன்னியில் என் தந்தை*
*தள்ளாத வயதினிலே*
*தமிழ்நாட்டில் என் அம்மா*
*சுற்றம் பிராங்க்பர்ட்டில்*
*ஒரு சகோதரியோ ப்ரான்ஸ் நாட்டில்*
*நானோ*
*வழிதவறி அலாஸ்கா*
*வந்துவிட்ட ஒட்டகம்போல்*
*ஒஸ்லோவில்"*

கவிதைகள் எழுத முடியாதவர்கள் அவர்கள் சேர்த்துவைத்த நூல்களைச் சுமந்துகொண்டு வர மறக்கவில்லை. ஒருவர் சாண்டில்யனின் கடல்புறாவை 10 வருட காலமாகத் தூக்கிக்கொண்டு நாடு நாடாக அலைந்ததாகச் சொன்னார். இதற்கெல்லாம் காரணம் இருந்தது. 1981ஆம் ஆண்டு மே 31ஆம் தேதியை தமிழர் எவர் ஒருவராலும் மறக்க இயலாது. ஓர் இனத்தை அழிப்பதற்கு அவர்கள் நூல்களை எரித்தால் போதும். அவர்கள் அறிவு மேலும் வளர்வதற்கு முடியாமல் நின்றுவிடும். 'ஃபாரன்ஹீட் 451' நூல் அதைத்தான் சொல்கிறது. அறிவைச் சாகடித்து விட்டால் மனிதன் செத்துவிடுவான்.

## உலக அரங்கில் தமிழ்

புலம்பெயர் தமிழர்களின் இரண்டாம் தலைமுறை, தமிழைக் கைவிட்டுவிடும் என்ற பொதுவான குற்றச்சாட்டு இருக்கிறது. இன்றைய கணினி யுகத்தில் தமிழ் கற்பது இலகுவாகிவிட்டது. புலம்பெயர் நாடுகளில் தமிழ் கற்க முனையும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இதுதான் உண்மை நிலை. இவர்களில் சிலராவது உயர்ந்த இலக்கியங்கள் படைத்துத் தமிழை உலக அரங்கில் முன்னிறுத்துவார்கள்.

தமிழர்கள் எட்டுக்கோடிப் பேர் உலகம் முழுவதும் இருக்கிறார்கள். நியூசிலாந்திலிருந்து அலாஸ்காவரை பரந்துபோய்ப் புலம்பெயர் தமிழர்கள் பத்து லட்சம் பேர் வாழ்கிறார்கள். கனடாவில் மட்டும் மூன்று லட்சம் தமிழர்கள் என்று கணக்கெடுப்புச் சொல்கிறது. ஒரு காலத்தில் பிரித்தானிய அரசைச் சூரியன் மறையாத அரசு என்று அழைத்தார்கள். இப்போதோ சூரியன் மறையாத தமிழ்ப்புலம் என்று சொல்கிறார்கள்.

2012ஆம் ஆண்டு தொடங்கி வரும் எல்லா வருடங்களிலும் ஜனவரி 14ஆம் நாள், தமிழர் பாரம்பரிய நாள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. அத்துடன் உலகத்தில் இரண்டாவது பெரிய தேசமான



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 15 23-10-2018 10:48:26

கனடாவில் முதல்முறையாக ஒரு புதிய சாலை ஒன்றுக்கு 'வன்னி வீதி' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. வன்னி வீதி, தமிழர்களுக்குச் சொந்தமான வீதி. இந்த வீதியை ஒன்றும் இலகுவாகச் சிதைக்க முடியாது. நூலகத்தை எரித்ததுபோல இதை அழிக்க முடியாது. என்றென்றைக்குமாகக் கனடாவில் ஈழத்தமிழரின் புலம்பெயர் வரலாற்றை நினைவுபடுத்தியபடியே இந்த வீதி நிற்கும்.



### பனியும் பனி சார்ந்த நிலமும்

சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகையில் ஒன்று ஐங்குறுநூறு. ஐவகை நிலத்திற்கும் ஒவ்வொரு நூறு பாடலாக ஐந்து நூறு பாடல்கள் கொண்டது. அந்நூலில் பனியும் பனி சார்ந்த நிலத்துக்கும் பாடல்கள் இல்லை. புலம்பெயர்ந்த பத்து லட்சம் மக்கள் சென்றடைந்தது பனிப் பிரதேசங்களுக்குத் தான்.

என்னுடைய கிராமம் கொக்குவில். அங்கே காகம் இருந்தது. ஆறுமணிக்குருவியும் இருந்தது. சரியாக காலை ஆறு மணிக்கு இந்தக் குருவி 'கீஈஈஈய்க்' 'கீஈஈஈய்க்' என்று சத்தமிடும். காகத்துக்குப் பறக்கும் எல்லை இரண்டு மைல் தூரம். ஆறுமணிக்குருவிக்கு எல்லையே கிடையாது. இமயமலைக்குப் பறந்துபோய் மீண்டும் திரும்பும். ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் இந்த ஆறுமணிக்குருவிபோல. அவர்களுக்கு எல்லையே கிடையாது. அவர்கள் உலகம் பனியும் பனி சார்ந்த நிலமும். ஆம், ஆறாம் திணை.



**நூல்வெளி**

எழுத்தாளர் அ. முத்துலிங்கம், இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள கொக்குவில் கிராமத்தில் பிறந்தவர். பணி நிமித்தமாகப் பல நாடுகளுக்குப் பயணித்திருக்கும் இவர் தற்போது கனடாவில் வசித்து வருகிறார். அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகடசக்கரம் உள்ளிட்ட பல சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டிருக்கின்றார். வம்சவிருத்தி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1996ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் முதல் பரிசினைப் பெற்றவர். வடக்கு வீதி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1999இல் இலங்கை அரசின் சாகித்தியப் பரிசையும் பெற்றிருக்கின்றார்.



**கற்பவை கற்றபின்...**

1. அயல்நாட்டில் வசிக்கும் நீங்கள், உங்கள் மண்ணின் நினைவுகளை நண்பருடன் பகிர்வதுபோலொரு கற்பனைக்கடிதம் எழுதுக.
2. நாளிதழ்களில் வெளியாகும் புலம்பெயர் மக்கள் பற்றிய செய்திகளைத் திரட்டிப் படத்தொகுப்பாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 16 23-10-2018 10:48:27

## இனிக்கும் இலக்கணம்

இயல் 1

# மொழி முதல், இறுதி எழுத்துகள்

22N9J7

சொற்கள் எழுத்தொலிகளால் ஆனவை. அவை நாம் ஒலிப்பதற்கு இனிமையாகவும் எளிமையாகவும் இருக்கவேண்டும். இதற்குச் சொற்களின் முதலிலும் இறுதியிலும் ஒலிக்கும் எழுத்தொலிகள் காரணமாக அமைகின்றன. சொற்களின் புணர்ச்சியில், முதற்சொல்லின் இறுதி எழுத்தும் வரும் சொல்லின் முதல் எழுத்துமே சந்திக்கின்றன. அவ்வாறு சந்திக்கும் இடத்தில் வரும் எழுத்துகள் எவையெவையென அறிந்துகொள்ள வேண்டும்.

காவிரி, டமாரம், றெக்கை, பாவை, ராக்கி, கோதை, டப்பா போன்ற சொற்களில் தமிழ்ச்சொற்கள் எவை என்பதை அறிய முடிகிறதா ?

இவற்றுள் காவிரி, பாவை, கோதை ஆகியவை தமிழ்மொழிச் சொற்களாக உள்ளன. டமாரம், றெக்கை, ராக்கி, டப்பா ஆகியவை பிறமொழிச்சொற்களாக உள்ளன. எனவே, சொற்களில் தமிழ்மொழிக்கு உரியவை, பிறமொழிக்கு உரியவை எவைஎவை என்பதை அறிந்து பயன்படுத்த வேண்டும். இதற்குச் சொற்களில் எழுத்துகளின் வருகை குறித்து அறிந்து கொள்ளவேண்டும்.

### மொழிமுதல் எழுத்துகள் – 22

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்.
2. மெய்யெழுத்துகள் தனிமெய் வடிவில் சொல்லுக்கு முதலில் வருவதில்லை. அவை உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் வடிவிலேயே மொழிக்கு முதலில் வருகின்றன.
3. மெய்களில் க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் உயிர்மெய் வடிவங்களாகச் சொல்லின் முதலில் வரும்.

(ஙனம் என்னும் சொல்லில் மட்டுமே ங வரும் ),

4. ட, ண, ர, ல, ழ, ள, ற, ன என்னும் எட்டு வரிசைகள் சொல்லின் முதலில் வருவதில்லை.
5. ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.

> குறள் என்ற சொல்லை க்+உ+ற்+அ+ள் எனப் பிரிக்கலாம். சொல்லின் முதலில் உள்ள 'கு' என்னும் உயிர்மெய் எழுத்தை, க்+உ எனப் பிரிக்கும்பொழுது க் என்ற மெய்யெழுத்தே சொல்லின் முதலில் வருவதை அறியலாம்.

'ங்' என்னும் மெல்லின மெய் 'விதம்' எனப் பொருள் தரும் 'ஙனம்' என்னும் சொல்லில் மட்டும் முதலில் வரும். இந்தச் சொல்லும் தனியாக வராது. அ, இ, உ என்ற சுட்டெழுத்துகளுடனும் எ, யா என்னும் வினா எழுத்துகளுடனும் இணைந்து அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என்று வரும். தற்காலத் தமிழில் இவற்றின் பயன்பாடு அரிதாகவே உள்ளது.

> உங்ஙனம் என்பது தற்பொழுது தமிழகத்தில் வழக்கில் இல்லை. ஆனால், தமிழ்இலக்கியங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்றும் இலங்கைத் தமிழர் உங்கு, உங்ஙனம் போன்ற சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 17 23-10-2018 10:48:27

இவ்விலக்கண வரையறைகள் அனைத்தும் எழுத்து மொழிக்கானவையே அன்றி, பேச்சு மொழிக்கானவை அல்ல. மேற்காட்டிய 22 எழுத்துகள் நீங்கலாக உள்ள பிற எழுத்துகள், சொல்லின் முதலில் வந்தால் அவை தமிழ்ச் சொற்களாக இருக்கமாட்டா; பிறமொழிச் சொற்களாகவோ அல்லது ஒலிபெயர்ப்புச் சொற்களாகவோ இருக்கின்றன.

| மொழிமுதல் எழுத்துகள் | உயிரெழுத்துகள் | மெய்யெழுத்துகள் | மொத்தம் |
|---|---|---|---|
| | 12 | 10 | 22 |

## மொழி இறுதி எழுத்துகள் – 24

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் இறுதியில் வரும்.
2. மெய்களில் ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் பதினோரெழுத்துகளும் சொல்லின் இறுதியில் வரும்.
3. க் ச் ட் த் ப் ற் என்ற வல்லின மெய் ஆறும், ங் எனும் மெல்லின மெய் ஒன்றும் சொல்லின் இறுதியில் வருவதில்லை.
4. பழைய இலக்கண நூலார் மொழி இறுதிக் குற்றியலுகர எழுத்தையும் சேர்த்துக்கொள்வர்.

ஞ் ந் வ் மூன்றும் பழைய இலக்கிய வழக்கில் சொல்லின் இறுதி எழுத்தாக வந்துள்ளன. ஆயினும், இன்றைய வழக்கில் இவை சொல்லுக்கு இறுதி எழுத்தாக வருவதில்லை.

| மொழி இறுதி எழுத்துகள் | உயிரெழுத்து | மெய்யெழுத்து | குற்றியலுகரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | 12 | 11 | 1 | 24 |

## புணர்ச்சி

நாம் பேசும்போது சில சொற்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி ஒருசொல் போலவே பேசுகிறோம். எழுதும்போதும் அவ்வாறே எழுதுகிறோம். தமிழரசி, நாட்டுப்பண் ஆகிய இச்சொற்கள் ஒருசொல் வடிவம் உடையன. ஆயினும், இவை இரண்டு சொற்களின் சேர்க்கையாக உள்ளன.

தமிழ் + அரசி - தமிழரசி நாடு + பண் - நாட்டுப்பண்

இவற்றில் முதலில் நிற்கும் சொல்லை 'நிலைமொழி' என்றும் அதனோடு வந்து சேரும் சொல்லை 'வருமொழி' என்றும் அழைப்பர். இவ்வாறு நிலைமொழியும் வருமொழியும் இணைவதைப் புணர்ச்சி என்பர். நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் புணர்ச்சிக்கு உரியன ஆகும்.

## உயிரீறு, மெய்யீறு

நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும் வடிவம் உயிர் என்பதால் அது 'உயிரீறு' எனப்படும். நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது 'மெய்யீறு' எனப்படும்.

மணி (ண் + இ) + மாலை = மணிமாலை – உயிரீறு; பொன் + வண்டு = பொன்வண்டு – மெய்யீறு

## உயிர்முதல், மெய்ம்முதல்

வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் அது 'உயிர்முதல்' எனப்படும். வருமொழியின் முதலெழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில் நிற்கும் வடிவம் மெய் என்பதால் அது 'மெய்ம்முதல்' எனப்படும்.

வாழை+இலை = வாழையிலை– உயிர்முதல்; தமிழ் + நிலம்(ந்+இ) = தமிழ்நிலம் – மெய்ம்முதல்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 18 23-10-2018 10:48:27

### எழுத்துகளின் அடிப்படையில் புணர்ச்சி

சொற்புணர்ச்சியில் நிலைமொழி இறுதி எழுத்தாகவும் வருமொழி முதலெழுத்தாகவும் எழுத்துகள் சந்திக்கும் முறையை நான்கு விதமாகப் பிரிக்கலாம்.

| வ. எண் | ஈற்றெழுத்து முதலெழுத்து | எ.கா. | சந்திப்பு |
|---|---|---|---|
| 1 | உயிர் + உயிர் | மலை + அருவி | ஐ + அ |
| 2 | மெய் + உயிர் | தமிழ் + அன்னை | ழ் + அ |
| 3 | உயிர் + மெய் | தென்னை + மரம் | ஐ + ம் |
| 4 | மெய் + மெய் | தேன் + மழை | ன் + ம் |

### சொற்களின் அடிப்படையில் புணர்ச்சி

இலக்கண வகையால் சொற்கள் நான்கு வகைப்படும். இவற்றுள் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்தே வருகின்றன. இவ்விரு சொற்களும் நிலைமொழியாகவும் வருமொழியாகவும் வந்தாலும் அவற்றின் புணர்ச்சி, எழுத்துகளின் புணர்ச்சியே ஆகும்.

| வ. எண் | நிலைமொழி வருமொழி | எ.கா. |
|---|---|---|
| 1 | பெயர் + பெயர் | கனி + சாறு |
| 2 | பெயர் + வினை | தமிழ் + படி |
| 3 | வினை + வினை | நடந்து + செல் |
| 4 | வினை + பெயர் | படித்த + நூல் |

புணர்ச்சி என்பது எழுத்துகளின் சந்திப்பாகவும் சொற்களின் சந்திப்பாகவும் அமைகிறது. எனவே, எழுத்துகளும் சொற்களும், ஒலிக்கூறுகளாகவும் பொருள் கூறுகளாகவும் சந்திக்கும் நிகழ்வே புணர்ச்சி ஆகும்.

### குற்றியலுகர ஈறு

| | |
|---|---|
| வீடு + இல்லை = வீடில்லை | நெடில்தொடர்க் குற்றியலுகரம் |
| முரடு + காளை = முரட்டுக்காளை | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| அச்சு + பலகை = அச்சுப் பலகை | வன்தொடர்க் குற்றியலுகரம் |
| பஞ்சு + பொதி = பஞ்சுப்பொதி | மென்தொடர்க் குற்றியலுகரம் |
| மார்பு + கூடு = மார்புக்கூடு | இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| எஃகு + கம்பி = எஃகுக்கம்பி | ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் |

சார்பெழுத்துகளுள் ஆய்தம் சொல்லின் முதலிலோ இறுதியிலோ வராது. குற்றியலுகரமும் (நுந்தை தவிர) குற்றியலிகரமும் இக்காலத்தில் சொல்லின் முதலில் வாரா. ஆயினும், குற்றியலுகரத்தின் ஆறு வகைகளும் சொல்லின் இறுதியில் வருகின்றன. குற்றியலுகர ஈற்றுடன் வரும் நிலைமொழி, குற்றியலுகர ஈறு அல்லது குற்றியலுகர நிலைமொழி எனப்படும்.

என் சொல்லுக்கு என்ன மரியாதை எனத்
தர்க்கம் பேசுவது இருக்கட்டும்
எங்கு இருந்தாலும்
நம் மொழிக்கு முதல் இடம்

ஏற்படுத்தச் சந்தியுங்கள்
இறுதியில்
தாய்மொழியை வளப்படுத்தும்
தனிவழியைச் சிந்தியுங்கள்.



**கற்பவை கற்றபின்...**

உங்கள் வகுப்பறையிலுள்ள மாணவர்களின் பெயர்கள் சிலவற்றின் முதல், இறுதி எழுத்துகளைத் தனித்து எழுதி நீங்கள் பயின்ற இலக்கணப் பகுதியுடன் ஒப்பிட்டு ஆய்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 19 23-10-2018 10:48:27

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. தவறான இணையைத் தேர்வு செய்க.

அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர் இ) கடல் + அலை - உயிர் + மெய்

ஆ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர் ஈ) மண் + வளம் - மெய் + மெய்

2. கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப்பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.

அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் (3)

ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் (10)

இ) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் (6)

ஈ) பொதுவுடைமைக்கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர் (2)



3. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக .

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

இ) காலத்துக்கேத்த மாரிப் புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும்.

ஈ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாப் பதிய வைக்கனும்.

உ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

4. வினாக்கள்

அ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

ஆ) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.

இ) உயிரீறு, மெய்யீறு – விளக்குக.

ஈ) உயிர்முதல், மெய்ம்முதல் – எடுத்துக்காட்டுடன் விவரிக்க.

உ) குரங்குக்குட்டி – புணர்ச்சியை விளக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.

அ ) அ.முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்

ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்

இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை

ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் எழுத்து மொழியும்.

(i) அ, ஆ (ii) அ, ஈ (iii) ஆ, ஈ (iv) அ, இ

2. கபாடபுரங்களைக் காவுகொண்டபின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" - அடி மோனையைத் தெரிவு செய்க.

அ) கபாடபுரங்களை – காவுகொண்ட

ஆ) காலத்தால் – கனிமங்கள்

இ) கபாடபுரங்களை – காலத்தால்

ஈ) காலத்தால் - சாகாத

3. பாயிரம் இல்லது ________ அன்றே. அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

4. ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.

அ. மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்.

ஆ. பேச்சுமொழி, எழுத்துமொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.

இ. எழுத்துமொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.

ஈ. பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.

5. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

அ) அன்னம் , கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம் இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

**குறுவினா**

1. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
2. என் அம்மை, ஒற்றியெடுத்த
நெற்றிமண் அழகே!
வழிவழி நினதடி தொழுதவர்,
உழுதவர், விதைத்தவர்,
வியர்த்தவர்க்கெல்லாம்
நிறைமணி தந்தவளே!

- இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.
3. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
4. உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் - இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?
5. இனம், மொழி குறித்த இரதூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 21 23-10-2018 10:48:27

### சிறுவினா

1. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
2. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
3. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.
4. கூற்று – குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவுகூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

   கவிதை – கூண்டு திறந்தது சிறகடிக்கவா? இல்லை! சீட்டெடுக்க.

   கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடப்படுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?
5. மொழி முதல் , இறுதி எழுத்துகள் யாவை ? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.

### நெடுவினா

1. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.
2. நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
3. தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

தமிழ் இலக்கிய வரலாற்றில், "புலமைக் கதிரவன்" எனத் தமிழறிஞர்கள் போற்றிய தமிழ்மொழிப் பெரும்புலவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் ஆவார். திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள அதவத்தூர் என்னும் ஊரில் பிறந்த இவர், திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவராக விளங்கினார்.



மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் (1815 – 1876)

மீனாட்சி சுந்தரனார், தமிழறிஞர்களைத் தேடிக் கண்டு, வழிபட்டு, செவிதிறந்து கற்றார். திருவாவடுதுறை மடத்தின் தலைவர் சுப்பிரமணிய தேசிகர், சென்னைத் தாண்டவராயர், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஆகியோரிடம் பூக்கள்தோறும் சென்று தேனுண்ணும் வண்டுபோல் பாடம் கற்றார். அவர் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற நூல் அவருடைய பெருமையை என்றும் உணர்த்தும். தல புராணங்கள் பாடுவதில் சிறந்தவர். யமக அந்தாதி, திரிபந்தாதி, வெண்பாஅந்தாதிகள் ஆகியவற்றை உருவாக்கிப் புகழ் பெற்றார். மாலை, கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ் ஆகியவற்றைப் பாடிப் பெருமை அடைந்தார். உ.வே. சாமிநாதர்,



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 22 23-10-2018 10:48:27

தியாகராசர், குலாம்காதிறு நாவலர் முதலானோர் இவரின் மாணவர்கள். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் அவர்களின் புகழ் தமிழ் உள்ளவரையிலும் வாழும்.

1. தமிழிலக்கிய வரலாற்றில் புலமைக் கதிரவன் – இத்தொடரில் புலமைக் கதிரவன் என்பதற்கு இலக்கணக்குறிப்புத் தருக.
2. மேற்கண்ட பத்தியில் இடம்பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்களைக் கண்டறிக.
3. மீனாட்சி சுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் - விடைக்கேற்ற வினாவை அமைக்க.
4. பத்தியில் மொழிமுதல் எழுத்துகளைக்கொண்டு அமைந்த சொற்களுள் எவையெவை வடமொழிச் சொற்கள் எனச் சுட்டுக.
5. விளங்கினார் – பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

**தமிழாக்கம் தருக.**

1. *The Pen is mightier than the Sword.*
2. *Winners don't do different things, they do things differently.*
3. *A picture is worth a thousand words.*
4. *Work while you work and play while you play.*
5. *Knowledge rules the world.*

**பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாடகை | மாதம் | போலீஸ் | நிச்சயம் | உத்திரவாதம் | சந்தோஷம் |
| சம்பளம் | ஞாபகம் | வருடம் | தேசம் | வித்தியாசம் | உற்சாகம் |
| விசா | பாஸ்போர்ட் | கம்பெனி | பத்திரிகை | கோரிக்கை | யுகம் |
| ராச்சியம் | சரித்திரம் | முக்கியத்துவம் | சொந்தம் | சமீபம் | தருணம் |

**கீழ்க்காணும் நிகழ்ச்சிநிரலினைப் படித்துச் செய்திக் கட்டுரையாக மாற்றுக. அச்செய்தியை நாளிதழில் வெளியிட வேண்டி முதன்மை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**நிகழ்ச்சி நிரல்**

**"அரியன கேள் புதியன செய்" ( திங்கள் கூடுகை)**

| நேரம்: 2.30 பிற்பகல் | இடம்: அ.மே.நி.பள்ளி |
|---|---|
| 2.30 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 2.35 | வரவேற்புரை – மாணவர் இலக்கியச்செல்வன் |
| 2.40 | தலைமையுரை – திரு. எழிலன், தலைமை ஆசிரியர் |
| 2.50 | சிறப்புரை – கவிஞர் வாணி |
| "புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை" | |
| 3.45 | நன்றியுரை – மாணவர் ஏஞ்சலின் |
| 4.00 | நாட்டுப்பண் |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 23 23-10-2018 10:48:27

**பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. "தமிழ்கெழு கூடல்" என்றவிடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்', பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன "தமிழ் இவை பத்துமே", மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும். ('பண்பாட்டு அசைவுகள்' – தொ. பரமசிவன்)

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனத்தில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.
4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?
5. பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.

## மொழியோடு விளையாடு

*1. எண்ணங்களை எழுத்தாக்குக.*



*2.* தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.

(எ.கா.) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

அ) மயில் ஓர் அழகான பறவை.

ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.

i) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி

ii) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை

iii) பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.

iv) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?

v) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 24 23-10-2018 10:48:28

3. வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக.
அ) வா ஆ) பேசு இ) தா ஈ) ஓடு உ) பாடு
(எ.கா.) வா – வேர்ச்சொல்
அருணா வீட்டுக்கு வந்தாள். (வினைமுற்று)
அங்கு வந்த பேருந்தில் அனைவரும் ஏறினர். (பெயரெச்சம்)
கருணாகரன் மேடையில் வந்து நின்றார். (வினையெச்சம்)
என்னைப் பார்க்க வந்தவர் என் தந்தையின் நண்பர். (வினையாலணையும் பெயர்)

## செய்து கற்போம்

தமிழ்மொழியின் சிறப்பை உணர்த்தும் செய்திகள், கவிதைகள், படங்களைச் சேகரித்து எட்டுப் பக்க அளவில் தொகுப்பேடு உருவாக்குக.

## சொற்சுவை

தகப்பன்: தந்தை என்ற பொருளில் வருவது இச்சொல். தம் அப்பன் = தமப்பன் என்ற வடிவத்தில்தான் முதலில் இருந்தது. இவ்வடிவமே திரிந்து தகப்பன் என்றாயிற்று.

## நிற்க அதற்குத் தக

| கோபம் வரும்போது... | உடலில் நிகழும் மாற்றங்கள் | மனதில் நிகழும் மாற்றங்கள் | நான் செய்யவேண்டியது |
|---|---|---|---|
| கோபத்தை உடனடியாக வெளிப்படுத்துவது | முகம் இயல்பு நிலையிலிருந்து மாறுதல் | பதற்றம் | கோபத்தைக் கட்டுப்படுத்திப் பொறுமையுடன் செயல்படுவேன் |
| உள்ளேயே ஒளித்துக் கொள்வது | கை கால் நடுக்கம் | தடுமாற்றம் | |
| அமைதியாவது | வியர்வை பெருகுதல் | தவறான முடிவெடுத்தல் | |
| எதிர்மறையாகக் காட்டுவது | தலை வலித்தல் | பொறுமை இழத்தல் | |

## கலைச்சொல் அறிவோம்

அழகியல் – Aesthetics
இதழாளர் – Journalist
கலை விமர்சகர் – Art Critic
புத்தக மதிப்புரை – Book Review
புலம்பெயர்தல் – Migration
மெய்யியலாளர் – Philosopher

## அறிவை விரிவு செய்

நாடற்றவன் – அ. முத்துலிங்கம்
நல்ல தமிழ் எழுத வேண்டுமா? – அ.கி. பரந்தாமனார்
உயிர்த்தெழும் காலத்துக்காக – சு. வில்வரத்தினம்

## இணையத்தில் காண்க

- amuttu.net/ – அ. முத்துலிங்கத்தின் வலைத்தளம்
- www.sirukathaigal.com/tag/அ–முத்துலிங்கம்/
- https://www.poemhunter.com/.../tonight–i–can–write–the–saddest–lin... – பாப்லோ நெரூடாவின் கவிதை வாசிப்பு.
- https://www.biography.com/.../walt–whitman–mini–biography–60832... – வால்ட் விட்மன் பற்றிய ஆவணப்படம்.
- aavanaham.org/islandora/object/noolaham%3A115 வில்வரத்தினத்தின் குரலில் தைப்பாவாய் எனும் கவிதை.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 25 23-10-2018 10:48:28

# இணையச் செயல்பாடு

## சொல்லேர் உழவர்

சொல்லை விரிவு செய் !



படிகள்:

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி tamilpulavar இணையப்பக்கம் செல்க .
- திரையில் தோன்றும் தேடுபெட்டியில் சொல்லை உள்ளீடு செய்து 'பொது' என்னும் தெரிவின் மூலம் சொல்லின் பொருளை அறிக. மேலும் இணை / எதிர், கலைச்சொல், விக்கி, யாப்பறிஞர், சந்தம், அசைதேடல், பழமொழி, செம்மொழி போன்ற பல தெரிவுகளின் வாயிலாக அச்சொல்லின் பயன்பாட்டை அறிக.
- எடுத்துக்காட்டாக அரும்பு என்னும் சொல்லிற்குக் 'கலைச்சொல்' என்பதைத் தெரிவு செய்தால் அச்சொல் பிற துறைகளில் எவ்வாறு பயன்படுகிறது என்பதை அறியலாம்.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :





செயல்பாட்டிற்கான உரலி
/http://www.tamilpulavar.org

B123_11_TAM



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_001-026.indd 26 23-10-2018 10:48:29

இயல் 2

# மாமழை போற்றுதும்



## கற்றல் நோக்கங்கள்

- இயற்கை வேளாண்மை, நீர் மேலாண்மை ஆகியவற்றின் இன்றியமையாமை உணர்ந்து தம் சமூகப் பங்களிப்பை நல்குதல்
- இயற்கைச் சமநிலை தவறுவதால் விளையும் இழப்பு, சூழல் சீர்கேடு குறித்து அறிந்து விழிப்புணர்வு பெறுதல்
- உரையாடல், பள்ளு, குறும் புதினம் ஆகிய வடிவங்களின்வழி கருத்துகளைப் படித்துப் பொருளுணர்தல்
- மொழியைத் தவறின்றிக் கையாளவும் தமிழ்ச்சொற்களிலிருந்து பிறமொழிச் சொற்களைப் பிரித்தறியவும் திறன் பெறுதல்

## பாடப் பகுதி

இயற்கை வேளாண்மை

ஏதிலிக்குருவிகள் – அழகிய பெரியவன்

திருமலை முருகன் பள்ளு – பெரியவன் கவிராயர்

ஐங்குறுநூறு – பேயனார்

யானை டாக்டர் – ஜெயமோகன்

மெய்ம்மயக்கம்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 27 23-10-2018 10:57:18

## உரைநடை உலகம்

## இயல் 2

# இயற்கை வேளாண்மை

**நுழையும்முன்**

மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை. அதனால்தான் 'உழவு உலகிற்கு அச்சாணி' என்று வள்ளுவரும் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாரதியாரும் போற்றுகின்றனர். இயற்கையிலிருந்து விலகி மண்ணுக்கும் மண்ணில் வாழும் உயிர்களுக்கும் ஊறு விளைவிக்கின்ற நிலை மாறவும் இயற்கை வேளாண்மை புதுப்பொலிவு பெறவும் வலியுறுத்துகிறது இவ்வுரையாடல்.

சொக்கலிங்கம் : வா! மங்கை! என்ன ஊரோடு வந்து விட்டாயா? (உட்புறம் பார்த்து) மல்லிகா, இங்கே வா, மங்கை வந்திருக்கிறாள் பார்!

மங்கை : ஆமாம் சித்தப்பா, இங்கே வந்து இரண்டு நாள்கள் ஆகிவிட்டன! சுத்தமான காற்று, கிணற்றுத் தண்ணீர், அம்மா கைச்சமையல் வேறெங்கே கிடைக்கும்?

மல்லிகா : வாம்மா மங்கை! குழந்தைகள் நல்லாருக்காங்களா? உன் கணவர் எப்படி இருக்கிறார்?

மங்கை : எல்லோரும் நல்லா இருக்காங்க. நீங்க நல்லா இருக்கீங்களா?

மல்லிகா : நல்லா இருக்கோம்மா.

மங்கை : நான் இனிமேல் நம்ம கிராமத்தில்தான் இருக்கப் போகிறேன். அப்பாவின் நிலத்தில், நம்மாழ்வார் ஐயாவின் வழியைப் பின்பற்றி இயற்கை முறையில் வேளாண்மை செய்யலாம்னு இருக்கேன்.

மல்லிகா: நல்ல முடிவுதான் எடுத்திருக்கிறாய் மங்கை! நமக்கெல்லாம் அவர்தானே வழிகாட்டி.

சொக்கலிங்கம்: சொல்லம்மா, நான் என்ன உதவி செய்யணும்?

மங்கை : இயற்கை வேளாண்மை செய்ய வேண்டும் என்ற ஆசை மட்டும் எனக்கு இருக்கிறது! ஆனா, அதைப்பற்றி ஒண்ணும் தெரியாது. நீங்கதான் படிப்படியாக எனக்குச் சொல்லித்தர வேண்டும்.

சொக்கலிங்கம்: சொல்றேன்மா. வா, நம்ம பண்ணைக்குப் போய் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தபடி பேசுவோம்....

(மல்லிகா இரண்டு குவளைகளில் மோருடன் வருகிறார். இருவரும் மோர் குடிக்கின்றனர்)

மங்கை : இப்படி வெண்ணெயோடும் வாசனையோடும் மோர் குடித்து எத்தனை நாளாச்சு? எங்க வாங்குறீங்க?

மல்லிகா: மோரை வாங்குவாங்களா? கொல்லையில இருக்குற நம்ம மாட்டோட பால்தான் இவ்வளவு வாசம்.

மங்கை : அப்படியா? எனக்குப் பால், மோர் எல்லாம் நெகிழிப் பையில் வாங்குற பழக்கம். அதான் கேட்டேன்.

(உள்ளிருந்து சொக்கலிங்கம் கிளம்பி வருகிறார். அவருடன் மங்கையும் மல்லிகாவும் கிளம்புகிறார்கள்)

மங்கை : இது என்ன சித்தப்பா, பனைமரம் வளக்கிறீங்களா?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_027-050.indd 28 23-10-2018 10:57:18



சொக்கலிங்கம்: ஆமாம்மா, பனைமரம் நம்ம தமிழ்நாட்டோட மாநில மரம். பனங்கொட்டய மூன்றடிக்கு மூன்றடி இடைவெளி விட்டு நட்டு வச்சிருக்கேன். கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் ஆகுது! இன்னும் ஏழு ஆண்டுல பலன் தரும்.

மங்கை: பனைமரத்துனால என்ன பயன் சித்தப்பா?

சொக்கலிங்கம்: என்னம்மா, இப்படிக் கேட்டுட்ட, பனைமரம் ஏழைகளோட கற்பக விருட்சம்னு சொல்லலாம்; சிறந்த காற்றுத் தடுப்பானும்கூட. ஆழத்தில் நீர்மட்டம் குறையாம நீரைச் சேமிச்சு வைக்கிற தன்மையுடையது. இதனால நிலத்தடி நீர்மட்டம் குறையாது. பனை வளர, பெரிய அளவுக்குத் தண்ணீர் தேவையில்லை. இன்னும் ஏழு ஆண்டில் காய்க்கத் தொடங்கிடும். நுங்கு, பதநீர் மட்டுமல்ல அவற்றிலிருந்து கருப்பட்டி, பனங்கற்கண்டுன்னு மதிப்புக்கூட்டுப் பொருள்களும் உருவாக்கலாம். நம்முடைய மருதம் பண்ணையைச் சுற்றிலும் மொத்தமாக 50 பனைமரம் வெச்சிருக்கேன். வாம்மா, உள்ளே போவோம்!

மங்கை: சித்தப்பா, நீங்க மதுரையில வேலை பார்த்தப்ப பழைய முறையில்தானே வேளாண்மை நடந்திருக்கும். இன்றைக்கு உரம், பூச்சிக்கொல்லி என்று மண்ணே நஞ்சாகிப் போயிருக்கு.

சொக்கலிங்கம்: ஆமா, மங்கை! நிலத்தைச் சரிசெய்வதுதானே முதல் வேலை! அதற்கு முதல்ல அறுவடை முடிந்த பிறகு வைக்கோலைச் சமமாகப் பரப்பி, மடியச் செய்து மறுபருவம் வந்தவுடன் நிலத்தில் நீரைத் தேக்கி உழ வேண்டும்.

மங்கை: வைக்கோலை மடியச் செய்து உழ வேண்டுமா?

மல்லிகா: ஆமாம் மங்கை. இந்த வைக்கோல் மென்மையானதாகவும் லேசானாதாகவும் தெரிகிறது. இந்த வைக்கோலின் உண்மையான மதிப்பை மக்கள் அறிந்துகொண்டால் உலகம் ஒருமுறை குலுங்கும். நிலத்தில் வைக்கோலைப் பரப்புவது, உரச்செடிகளை வளர்ப்பது, நிலத்தில் இருந்து கிடைக்கும் குப்பை கூளம், செடி செத்தைகளை நிலத்திற்கே கொடுப்பது என்ற செயல்கள் நெற்பயிரும் மாரிக்காலப் பயிரும் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு அளிக்கின்றன.

சொக்கலிங்கம்: பரவாயில்லையே! மல்லிகா. இவ்வளவு தெளிவாக வைக்கோலின் மகத்துவம் பற்றி அறிந்து வைத்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வைச் செய்தவர் ஜப்பான் அறிஞர் மசானபு ஃபுகோகா. இவர் 1978ஆம் ஆண்டு, "ஒற்றை வைக்கோல் புரட்சி"

### தெரியுமா?

பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரித்து விற்பதன் மூலம் அதிக வருவாய் கிடைக்கும். இவ்வாறு ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை மதிப்புக் கூட்டுப்பொருள் என அழைக்கின்றனர்.

"இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய். அதேநேரம் எளிதில் சிதைந்துவிடும் வகையில் மென்மையானதும்கூட. நிலத்தின் வளத்தை அக்கறையுடன் நன்முறையில் பராமரித்தால், பதிலுக்கு அதுவும் மனிதத் தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்யும். விவசாயத்தின் வசந்தகாலமாக இயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழும்"

– மசானபு ஃபுகோகா



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 29 23-10-2018 10:57:18

என்னும் நூலை எழுதியவர். உழப்படாத நிலம், வேதியியல் உரம் இல்லாத உற்பத்தி, பூச்சிக் கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு, தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி, ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல் ஆகிய ஐந்து வேளாண்மை மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர். வைக்கோலை மடக்கி உழுவதோடு மட்டுமல்லாமல் பருவம் வந்தவுடன் நீரைத் தேக்கி உழுதல் வேண்டும். உழும்போது தொழு உரம் இடவேண்டும். ஆனா, ஒரே ஆண்டில் நிலத்தின் நஞ்சு நீங்காது, ரெண்டு மூன்று ஆண்டுகள் ஆகும்.

மங்கை : சித்தப்பா, தொழு உரம் என்றால்?

சொக்கலிங்கம்: தொழு உரம்னா, வேற ஒன்றுமில்லை, மாட்டுச் சாணம், கோமியம் ஆகியவற்றைக் கலந்து வைக்கோலை மட்கச் செய்து உருவாக்கவேண்டும். இது நஞ்சை நிலத்துக்கு! புஞ்சைன்னா, காய்ந்த இலைச் சருகு, சாம்பல் ஆகியவற்றைக் கலந்து போட்டால் போதும். சாம்பல்னா எங்காவது போய், தொழிற்சாலைக் கழிவை எடுத்துவந்து போடக் கூடாது! ஆடு, மாடு முதலிய கால்நடைகளின் சாணத்தை எரிப்பதனால் கிடைக்கும் சாம்பல் மட்டும்தான் பயன்படுத்தவேண்டும்.

(இருவரும் பேசியபடி சரிவான பகுதிக்கு வருகிறார்கள்)

மங்கை : என்ன இது? முன்பு உங்கள் நிலத்தில் இப்படி ஒரு குளம் இல்லையே!

சொக்கலிங்கம்: ஆமாம் மங்கை, இந்த மருதம் பண்ணைக்கு வளமே, இந்தக் குளம்தான். பழைய கிணத்துல தண்ணீர் அதிகம் இறங்கிருச்சும்மா! நான் இங்கு வந்து இயற்கை வேளாண்மை செய்ய வேண்டும் என்று நினைத்தபோது, முதல்வேலை நிலத்தில் இருக்குற நச்சுத்தன்மையை நீக்கியது. அடுத்த வேலை, நீர்வளத்தை அதிகப்படுத்தியது.

மங்கை: அப்படின்னா, எத்தனை அடி ஆழத்தில் தண்ணீர் வந்தது! பழைய குளத்தையே, ஆழமாக்கினீங்களா? புதுசா வெட்டினீங்களா?



நம்மாழ்வார்

சொக்கலிங்கம்: அந்தத் தப்பை நான் செய்யவில்லை! சின்னச்சின்னதா வாய்க்கால் வெட்டினேன். பழைய கிணத்தைச் சுற்றிச் சின்னச்சின்ன மரக்கன்றுகளை நட்டேன். என் நல்ல நேரம், நல்ல மழை பெய்தது. வாய்க்கால் மூலமா வந்த தண்ணீர் இந்தக் குளத்துல தேங்குச்சு! தண்ணீரே இல்லாத பழைய கிணத்திலும் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தது!

மங்கை : இந்த இடத்துல சில்லுன்னு நல்லாக் காற்று வருது. இது மரத்துல மோதி வருகிற காற்றா? நீரில் மோதி வருகிற காற்றா? என்ன சிலிர்ப்பு! வெயிலே தெரியவில்லை!

மல்லிகா : மங்கை, பண்ணையத்துக்கு வெயிலும் ரொம்ப முக்கியம்மா! மழைநீர்ச் சேகரிப்பால நமக்குக் கிணத்துத் தண்ணீர் மட்டம் உயர்ந்திருச்சு!

மங்கை: சித்தப்பா, நம்ம பண்ணையில் என்னவெல்லாம் விளைகின்றன? நிறைய மரங்கள் இருக்கின்றன. இதென்ன, இந்தப் பயிர் புதுசா இருக்கு?

சொக்கலிங்கம்: மங்கை, இது உளுந்து. நெல்லுக்கு ஊடுபயிராகப் போடுவது! இதை அறுவடை செய்தபின், அதன் வேர் முடிச்சுகளில் இருக்கும் நைட்ரஜன், நிலத்தின் வளத்தைப் பெருக்கி அடுத்த விளைச்சலை அதிகரிக்கச் செய்யும்.

மங்கை: சரி! ஆனால்? பூச்சி விழுந்தா நாம பூச்சிக்கொல்லியத்தானே பயன்படுத்த வேண்டும்.

மல்லிகா: அதுதான் மங்கை, நாம கவனிக்க வேண்டியது. பூச்சிக்கொல்லி பயிரில்



XI Std Tamil Chap_027-050.indd 30 athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181 23-10-2018 10:57:18

இருக்குற பூச்சிய மட்டும் கொல்லல, விளையற பயிர்க்குள்ளயும் ஊடுருவுகிறது. அதச் சாப்பிடுகிற மக்களுக்கு நெறய நோய் வருது! புற்றுநோய், வயிற்றுப்புண், மலட்டுத் தன்மை, இன்னும் என்னென்னவோ சொல்றாங்க!

**மங்கை :** அது சரி! அப்புறம் எப்படிப் பயிரில் விழுகிற பூச்சிய விரட்டுறது? விளைச்சல் குறையாதா?

**சொக்கலிங்கம்:** ஏன் குறையப் போகுது? இயற்கை வேளாண்மைன்னா, ஒட்டு மொத்தமா விதைக்கிறதுல இருந்து விளைச்சல் முடிகிற வரைக்கும் வேதிக்கலப்பே இருக்கக் கூடாதும்மா!

**மங்கை:** வேதிக்கலப்பு இல்லாத பூச்சிக் கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா?

**சொக்கலிங்கம்:** நம்ம முன்னோர்கள் எந்த வேதியியல் பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்துனாங்க? சொல்லு பார்ப்போம்? வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை எல்லாத்தையும் நல்லா இடிச்சுக் கோமியத்துல ஊற வச்சு அதைத் தெளிச்சா போதும்மா! பூச்சியெல்லாம் போயிரும்!

**மங்கை :** உண்மைதானா? சித்தப்பா!

**சொக்கலிங்கம் :** ஆமா மங்கை! அப்படித்தான் நாங்க செய்யறோம். பூச்சிகள் வருவது படிப்படியாக் குறையுது. அதோட நிலத்துல இருக்குற மண்புழு போன்ற சின்ன உயிர்கள் அழியறது தடுக்கப்படுது. மண்ணில் உள்ள நுண்ணுயிர்ப் பெருக்கத்துனால, மண்ணும் தன்னோட வளத்தை இழக்கிறதில்ல.

**மங்கை:** பூச்சிக்கொல்லி சரி? உரத்துக்கு என்ன பண்ணுறீங்க!

**சொக்கலிங்கம்:** ஏராளமான உரங்கள் போட்டால் விளைச்சல் கூடும்னு நினைச்சோம், மொதல்ல விளைச்சல் கூடுற மாதிரி இருந்தது! அப்புறம் நாளாக நாளாக மண்ணு நஞ்சாகி விளைச்சல் குறைந்தது! அதனால் இப்போதெல்லாம் உரத்தையும் இயற்கையாகவே உருவாக்கிக் கொள்கிறோம்.

**மங்கை:** நாம் பயன்படுத்துற உரம், மருந்து எல்லாமே இயற்கையா நம்மிடம் இருப்பது, சுற்றுச்சூழலைக் காப்பதற்கான வழியல்லவா?

**சொக்கலிங்கம்:** ஆமாம்மா, நுண்ணுயிர்ப் பெருக்கம் குறையாமல்... மண் சத்து வீணாகாமல் நிலமும் நல்லா இருக்கும்.

**மங்கை :** அப்படின்னா, விடாமல் மாறிமாறிச் சாகுபடி செய்யலாமா சித்தப்பா?

**சொக்கலிங்கம்:** இல்லை மங்கை! நிலத்தை ஆறப்போடணும், சரியான கால இடைவெளியில் மாறிமாறிப் பயிரிடணும். இதைப் பற்றியெல்லாம் இன்னும் நீ நிறைய தெரிந்துகொள்ள வேண்டும். அதற்குச் சுற்றியுள்ள பண்ணைகள் சிலவற்றைப் பார்வையிடலாம். அரசும் வேளாண்மை அலுவலகம் மூலம் நிறைய வழிமுறைகளைச் சொல்கிறது; பயிற்சிகளையும் தருகிறது. அவற்றில் நீ கலந்துகொண்டு நல்ல வழிமுறைகளைக் கற்றுக் கொள்ளலாம்.

**மங்கை:** ஆடிப்பட்டத்துல உழவைத் தொடங்குகிறேன். பேசிக்கிட்டு இருந்ததுலே நேரம் போனதே தெரியல. வாங்க, வீட்டுக்குப் போவோம்.

**கற்பவை கற்றபின்...**

1. மாடித்தோட்டம் அமைக்கும் முறையை இணையத்தளம் மூலம் அறிந்து வகுப்பில் கலந்துரையாடுக.
2. பள்ளியில் செயல்படும் தேசியப் பசுமைப்படை, சுற்றுச்சூழல் மன்றம் ஆகியவற்றின் வாயிலாக மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பதில் உங்கள் செயல்பாடு குறித்து உரை நிகழ்த்துக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_027-050.indd 31 23-10-2018 10:57:18

கவிதைப்பேழை

இயல் 2

# ஏதிலிக்குருவிகள்

23FWP5

**நுழையும்முன்**

உயிர்களின் இருப்பை இயற்கைச்சூழலே முடிவு செய்கிறது. இயற்கைக்கும் மனிதர்க்கும் தொப்புள்கொடி மழைத்துளி. மண்ணில் முதல்துளி விழுகையில் உயிர்கள் மலர்கின்றன. சூழலியல் மாற்றத்தால் நிகழ்ந்துகொண்டிருக்கும் அவலத்தைக் காட்சிப்படுத்துகிறது இக்கவிதை.

*குருவிகளையும்*
*கூடுகளையும்*
*பார்க்கக் கூடவில்லை*
*முன்பென்றால் ஊரில்*
*அடைமழைக்காலம்*
*ஆற்றில் நீர் புரளும்*
*கரையெல்லாம் நெடுமரங்கள்*
*கரைகின்ற பறவைக் குரல்கள்*
*போகும் வழியெல்லாம்*
*தூக்கணாங்குருவிக் கூடுகள்*
*காற்றிலாடும் புல் வீடுகள்*
*மூங்கில் கிளையமர்ந்து*
*சுழித்தோடும் நீருடன்*
*பாடிக்கொண்டிருக்கும் சிட்டுகள்*
*மண்ணின் மார்பு*
*சுரந்த காலமது*
*வெட்டுண்டன மரங்கள்*
*வான் பொய்த்தது*
*மறுகியது மண்*
*ஏதிலியாய்க் குருவிகள்*
*எங்கோ போயின.*

*– அழகிய பெரியவன்*



**தெரியுமா?** மார்ச் 20 – உலகச் சிட்டுக்குருவிகள் நாள்

**நூல்வெளி**

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டைச் சேர்ந்த அழகிய பெரியவனின் இயற்பெயர் அரவிந்தன். புதினம், சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற படைப்புத் தளங்களில் இயங்குபவர். 'தகப்பன் கொடி' புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருது பெற்றவர். அரசுப் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். குறடு, நெரிக்கட்டு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும் உனக்கும் எனக்குமான சொல், அரூப நஞ்சு ஆகிய கவிதைத் தொகுப்புகளும் மீள்கோணம், பெருகும் வேட்கை உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் இவரது படைப்புகள்.

**கற்பவை கற்றபின்...**

1. நகரங்களின் பெருக்கமும் பறவையினங்களின் அழிவும் – காரணங்களுடன் வகுப்பறையில் விவாதிக்க.
2. உங்களது மழைக்கால அனுபவங்களைக் கவிதையாக வெளிப்படுத்துக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 32 23-10-2018 10:57:19

இயல் 2

# திருமலை முருகன் பள்ளு

23PSQS

**நுழையும்முன்**

உழவர், உழத்தியரது வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையில் நயம்பட வெளிப்படுத்துவதே பள்ளுச் சிற்றிலக்கியத்தின் உட்கோளாகும். 'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது' என்பர். வேளாண்மை இலக்கியமான பள்ளு, அரிய பல செய்திகளின் கருவூலமாக விளங்குகிறது.

### வடகரை நாடு

*மலரில் ஆரளி இந்துளம் பாடும்*
*மடைஇ டங்கணி வந்துளம் ஆடும்*
*சலச வாவியில் செங்கயல் பாயும்*
*தரளம் ஈன்றவெண் சங்கயல் மேயும்*
*குலமின் னார்மழை பெய்யெனப் பெய்யும்*
*குடங்கை ஏற்பவர் செய்யெனச் செய்யும்*
*புலவர் போற்றும் திருமலைச் சேவகன்*
*புகழ்வட ஆரி நாடெங்கள் நாடே.*

### தென்கரை நாடு

*வளருங் காவில் முகில்தொகை ஏறும்– பொன்*
*மாடம் எங்கும் அகிற்புகை நாறும்*
*குளிரும் மஞ்ஞையும் கொண்டலும் காக்கும்*
*கோல்முறை மன்னர் மண்டலங் காக்கும்*
*இளமின் னார்பொன் னரங்கில் நடிக்கும்–முத்(து)*
*ஏந்தி வாவித் தரங்கம் வெடிக்கும்*
*அளியுலாம் கொன்றை சூடுங் குற்றாலத்– தென்*
*ஐயன்தென் ஆரி நாடெங்கள் நாடே.*

*–பெரியவன் கவிராயர்*



### சொல்லும் பொருளும்

வட ஆரிநாடு – திருமலை, தென் ஆரிநாடு – குற்றாலம், ஆரளி– மொய்க்கின்ற வண்டு, இந்துளம்– இந்தளம் எனும் ஒரு வகைப் பண், இடங்கணி–சங்கிலி, உளம்–உள்ளான் என்ற பறவை, சலச வாவி– தாமரைத் தடாகம், தரளம்– முத்து.

கா–சோலை, முகில்தொகை– மேகக் கூட்டம், மஞ்ஞை– மயில், கொண்டல்– கார்கால மேகம், மண்டலம்– உலகம், வாவித் தரங்கம்– குளத்தில் எழும் அலை, அளி உலாம் –வண்டு மொய்க்கின்ற.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_027-050.indd 33 23-10-2018 10:57:19

### பாடலின் பொருள்

**வடகரை நாடு**

வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் இந்தளம் என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும். மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வண்டின் இசைகேட்டு வாய்க்காலின் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் வாலை ஆட்டிக் கொண்டு அமர்ந்திருக்கும்.

தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும். முத்துகளை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் காணப்படும். மின்னலையொத்த பெண்கள், பெய் என்றால் மழை பெய்யும். உள்ளங்கை ஏந்தி இரந்து உண்ணும் இயல்புடைய முனிவர்கள் கூறும் வார்த்தைகள் மெய்யாகும். இத்தன்மை கொண்ட திருமலையில் புலவர்கள் போற்றுகின்ற திருமலைச் சேவகன் வீற்றிருக்கின்றார்.

**தென்கரை நாடு**

தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும். இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாடமாளிகைகளில் அகில்புகையின் நறுமணம் பரவிக்கொண்டே இருக்கும். இம்மாளிகைகளை மயில்களும் கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும்.

செங்கோலைக் கொண்ட மன்னர் தென்கரை நாட்டை நீதி தவறாது காவல் காப்பர். இளைய பெண்கள் பொன்னாலான அரங்கில் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர். இங்குள்ள குளங்களின் அலைகள் முத்துகளை ஏந்தி வரும். அவ்வலைகள் கரைகளில் மோதும்பொழுது முத்துகள் சிதறி வெடிக்கும். இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரைச் சூடிய தென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றாலநாதர் வீற்றிருக்கின்றார்.



**தெரிந்து தெளிவோம்**

உங்கள் மாவட்டத்திலுள்ள ஆறு, ஏரி, குளங்களின் பெயர்களை அறிவீர்களா? கேட்டறிக.

தமிழகத்தில் முன்னோர்கள் பயிரிட்டு வந்த நெல் வகைகள் தற்பொழுது குறைந்ததற்கான காரணம் அறிவீர்களா?

**இலக்கணக் குறிப்பு**

செங்கயல், வெண்சங்கு – பண்புத்தொகைகள்

அகிற்புகை– ஆறாம் வேற்றுமைத்தொகை

மஞ்சையும் கொண்டலும்– எண்ணும்மை

கொன்றைசூடு – இரண்டாம் வேற்றுமைத்தொகை

**பகுபத உறுப்பிலக்கணம்**

ஈன்ற – ஈன் + ற் + அ

ஈன் – பகுதி

ற் – இறந்தகால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

**புணர்ச்சி விதி**

செங்கயல் – செம்மை + கயல்

ஈறு போதல் – செம் + கயல்
முன்னின்ற மெய் திரிதல் – செங்கயல்

**தெரியுமா?**



பள்ளு 96 வகையான சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இது உழத்திப் பாட்டு எனவும் அழைக்கப்படும். தொல்காப்பியம் குறிப்பிடும் புலன் என்னும் இலக்கிய வகையைச் சாரும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 34 23-10-2018 10:57:20

## திருமலை முருகன் பள்ளு கூறும் நெல் வகைகள்

- சீரகச்சம்பா
- சீதாபோகம்
- ரங்கஞ்சம்பா
- மணல்வாரி
- அதிக்கிராதி
- முத்துவெள்ளை
- புழுகுச்சம்பா
- சொரிகுரும்பை
- புத்தன்வாரி
- சிறைமீட்டான்
- கார்நெல்
- அரியநாயகன்



- கருங்சூரை
- பூம்பாளை
- குற்றாலன்
- பாற்கடுக்கன்
- கற்பூரப்பாளை
- காடைக் கழுத்தன்
- மிளகுச் சம்பா
- பனைமுகத்தன்
- மலைமுண்டன்
- திருவரங்கன்
- குருவைக் கிள்ளை
- முத்துவெள்ளை

## திருமலை முருகன் பள்ளு கூறும்

### மாடு வகைகள்

காரி, தொந்திக்காளை

மால்காளை, மறைகாளை

மயிலைக்காளை, மேழைக்காளை

செம்மறையான், கருமறையான்

### உழவுக் கருவிகள்

கலப்பை, நுகம், பூட்டு,

வள்ளைக்கை, உழக்கோல், கொழு

கயமரம், மண்வெட்டி, வடம்

## சொற்சுவை

**கண்காணி:** பேச்சு வழக்கில் **கங்காணி** என்று பயன்படுத்தப்படுகிறது. கண்காணம் என்பது பயிர்த்தொழிலில் கையாளப்படும் ஒரு சொல். கங்காணம் என்றும் வழங்கப்படுகிறது.

இதன் பொருள், நாள்தோறும் வயலில் நெல் அறுவடை செய்து களத்தில் ஒப்படி செய்யப்படும் நெல் அளவு என்பதாகும். கண்காணி என்பது இந்த ஒப்படியை மேற்பார்வை செய்பவரைக் குறிக்கும்.

## நூல்வெளி

திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்திற்கு அருகில் உள்ளது பண்புளிப்பட்டணம். இவ்வூர் 'பண்பை' என்றும் 'பண்பொழில்' என்றும் அழைக்கப்படும். இங்குள்ள சிறு குன்றின் பெயர் திருமலை. குன்றின் மேலுள்ள முருகக்கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு திருமலைமுருகன் பள்ளு பாடப்பட்டுள்ளது. இந்நூலில் கலித்துறை, கலிப்பா, சிந்து ஆகிய பாவகைகள் விரவி வந்துள்ளன. இந்நூல் 'பள்ளிசை' என்றும் 'திருமலை அதிபர் பள்ளு' எனவும் வழங்கப்படுகிறது. திருமலை முருகன் பள்ளு நூலின் ஆசிரியர் பெரியவன் கவிராயர். இவரின் காலம் 18 ஆம் நூற்றாண்டு.

## கற்பவை கற்றபின்...

உங்கள் பள்ளி வளாகத்தின் இயற்கைச்சூழலை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் ஏற்ற திட்டம் ஒன்றை உருவாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 35 23-10-2018 10:57:20

கவிதைப்பேழை

இயல் 2

# ஐங்குறுநூறு




நுழையும்முன்

இல்லறத்தில் அன்பும் அறனும் சிறக்க வேண்டித் தலைவன் பொன்னும் பொருளும் ஈட்ட வெளியூர் செல்வது பற்றிப் பல சங்கப் பாடல்கள் பேசுகின்றன. மக்கள் வாழ்வோடு இயைந்த மலர்கள், தலைவனின் வரவைத் தலைவிக்கு அறிவிக்கும் பாடலிது.

## ஆடுகம் விரைந்தே

காயா கொன்றை நெய்தல் முல்லை
போதவிழ் தளவமொடு பிடவலர்ந்து கவினிப்
பூவணி கொண்டன்றால் புறவே
பேரமர்க் கண்ணி ஆடுகம் விரைந்தே

–பேயனார்

( கிழவன் பருவம் பாராட்டும் பத்து. 412 )

*(சொன்ன காலத்துக்கும் முன்பே வந்தேன்*
*சொல்லாமல் சொல்லும் மலர்களைக் கண்டேன்)*
*அகன்ற கடைவிழி உடையவளே*
*காயா கொன்றை நெய்தல் முல்லை*
*செம்முல்லை பிடவமாய்க்*
*கொல்லைப் புறத்தில் கொட்டிக்கிடக்கும்*
*பேரழகுப் பூக்களின் பாடலைக்*
*கொண்டாடி மகிழ்வோம் விரைந்தோடி வா.*

*திணை* – *முல்லை*

*துறை* – *பருவங் (கார் காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது.*





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_027-050.indd 36 23-10-2018 10:57:22

### சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம் | - மழைக்கால மலர்கள் |
| போது | - மொட்டு |
| அலர்ந்து | - மலர்ந்து |
| கவினி | - அழகுற |

### பாடலின் பொருள்

[பொருளீட்டுவதற்காக வெளியூர் சென்றான் தலைவன். அவன், தான் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்ற காலத்திற்கு முன்னரே வீட்டிற்குத் திரும்புகிறான். வருவதாகக் கூறிச் சென்ற மழைக்காலம் முடியும் முன்னே வந்துவிட்டதனை உணர்த்த நினைக்கிறான்.] "பெரிய அழகிய கண்களையுடையவளே! அழகிய மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் பூத்திருக்கின்றன. அப்பூக்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட, 'விரைந்து வா' "(என்று தலைவன் தன் தலைவியை அழைக்கிறான்.)

### இலக்கணக்குறிப்பு

ஆல் – அசைநிலை

கண்ணி – அண்மை விளிச்சொல்

ஆடுகம் – தன்மைப் பன்மை வினைமுற்று.

### பகுபத உறுப்பிலக்கணம்

**அலர்ந்து – அலர் + த் (ந்) + த் + உ**

அலர் – பகுதி

த் – சந்தி, ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி

## மழைக்கால மலர்கள்


காயா


கொன்றை


நெய்தல்


முல்லை


தளவம்


பிடவம்

### நூல்வெளி

ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல். திணை ஒன்றிற்கு நூறு பாடல்களாக, ஐந்து திணைகளுக்கு ஐந்நூறு பாடல்கள் கொண்டது. ஐந்து திணைகளைப் பாடிய புலவர்கள்: குறிஞ்சித்திணை – கபிலர், முல்லைத்திணை – பேயனார், மருதத்திணை – ஓரம்போகியார், நெய்தல் திணை – அம்மூவனார், பாலைத்திணை – ஓதலாந்தையார். ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.

பேயனார், சங்ககாலப் புலவர்களில் ஒருவர். இவர் இயற்றிய 105 பாடல்கள் கிடைத்துள்ளன.

### கற்பவை கற்றபின்...

தமிழ் இலக்கியங்கள் காட்டும் பூக்கள் குறித்த செய்திகளைத் திரட்டி, தகவல் பலகையில் காட்சிப்படுத்துக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 37 23-10-2018 10:57:22

# யானை டாக்டர்

– ஜெயமோகன்

248JU3

**நுழையும்முன்**

காட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்கும் யானைகளைக் 'காட்டின் மூலவர்' என்பர். மனிதர்கள் அல்லாத உயிரினங்களில் தன்னை அறியும் ஆற்றலைப் பெற்றதும் மனிதர்களின் குணங்களில் பலவற்றைக் கொண்டதுமான யானைகள் நமது பண்பாடு, கலைகளின் பிரிக்க முடியாத கூறாக விளங்குகின்றன. அவற்றுக்குத் தெரிந்தோ தெரியாமலோ நாம் பல்வேறு இன்னல்களை இழைக்கிறோம். வானத்து நிலவும் மண்ணுலகத்துக் கடலும்போல் என்றும் அலுக்காத யானைகளின் பேருருக் காட்சியைக் காண அவற்றின் தடத்தைப் பின்தொடர்வோம்.

டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி, வனத்துறையின் மிருக டாக்டராக முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் டாப் ஸ்லிப்புக்கு வந்தவர். டாக்டர் கே. என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அவர், காட்டு மிருகங்களுக்கும் பழக்கப்படுத்தப்பட்ட மிருகங்களுக்கும் மருத்துவ உதவி அளிப்பதைப் பணியாகக் கொண்டவர். ஆனால் மெல்ல மெல்ல யானைகளுக்குரிய சிறப்பு மருத்துவராக அறியப்பட்டார்.

தமிழக வனத்துறையில் யானைகளைப் பற்றி நன்கறிந்தவர் என்று ஆன பின்னர் எங்கே யானைக்கு என்ன பிரச்சனை என்றாலும் அவர்தான் செல்ல வேண்டுமென்ற நிலை வந்தது. இந்தியாவில் மட்டுமல்ல, ஒரு கட்டத்தில் உலகத்தின் பல நாடுகளில் உள்ள யானைகளுக்கும் அவர்தான் மருத்துவ ஆலோசகர். டாக்டர் கே. யானைகளின் உடல்நிலையைப் பேணுவதற்காக உருவாக்கிய விதிமுறைகள்தான் இந்திய வனவியல் துறையின் கையேடாக இன்றும் உள்ளது. கிட்டத்தட்ட அதே குறிப்புகளின் இன்னொரு வடிவமே காசிரங்கா காண்டாமிருகங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது என்கிறார்கள்.

ஒருமுறை முதுமலையில் ஒரு யானைக்குக் கால் வீங்கி அது காட்டில் அலைவதாகத் தகவல் வந்தபோது டாக்டர் கே. யுடன் நானும் வனத்துறை அதிகாரி என்ற முறையில் சென்றேன். காட்டுக்குள் அந்த யானை இருக்குமிடத்தைக் குறும்பர் ஏற்கெனவே கண்டு வைத்திருந்தார்கள். அவர்களை ஏற்றிக்கொண்டு ஜீப்பில் காட்டுக்குள் நுழைந்தோம். அதுவும் பழங்காலக் குதிரைப்பாதைதான். நெடுந்தூரம் சென்றபின் ஜீப்பை நிறுத்திவிட்டு நானும் டாக்டரும் காட்டுக்குள் சரிவில் இறங்கிச் சென்றோம். துப்பாக்கியுடன் இரு வனக்காவலர்களும் மற்ற பொருள்களுடன் இரு குறும்பர்களும் எங்களுடன் வந்தார்கள். உடலை அறுக்கும் வேய்மூங்கில் இலைகளை அகற்றி டாக்டர் கே. முன்னால் சென்று





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 38 23-10-2018 10:57:22

கொண்டே இருந்தார். தரையிலுள்ள வேர் முடிச்சுகள் என் கால்களைத் தடுக்கின.

எழுபதை நெருங்கினாலும் டாக்டர் கே. மிகக் கச்சிதமான உடல் கொண்டவர். காடு அவருக்கு மீனுக்குக் கடல்போல. கொஞ்ச நேரத்தில் காட்டில் யானைகளின் நெடி மெலிதாக வர ஆரம்பித்தது. யானைகள் ஏற்கெனவே எங்களைக் கவனித்துவிட்டன என்று தெரிந்தது. மெல்லிய யானை உறுமல் கேட்ட புல்வெளியில் பன்னிரண்டு யானைகள் கூட்டமாக நிற்பதைக் கண்டோம். எங்கள் கண்களை ஓட்டியபோது மேலும் ஆறு யானைகள் மூங்கில் புதர்களுக்குள் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றின் அருகே நான்கு குட்டி யானைகளும் நிற்பது தெரிந்தது.

டாக்டர் கே. தன் கருவிகளை எடுத்துப் பொருத்திக் கொண்டார். சிறிய துப்பாக்கி போன்ற ஒன்று. அதில் மாத்திரையே குண்டாக இருக்கும். யானையைக் கூர்ந்து தொலைநோக்கியால் கவனித்தார். அதன் எடையை அவதானிக்கிறார் என்று தெரிந்தது. எடைக்கு ஏற்பத்தான் அந்த யானைக்கான மயக்க மருந்தின் அளவைத் தீர்மானிக்க முடியும். அவர் முழுமையாகத் தனக்குள் மூழ்கி வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கருவிகளைப் பொருத்திக் கையில் எடுத்துக் கொண்டு, "நீங்க இங்க இருங்க, நான் போய்ப் பார்க்கிறேன்" என்றார். அவரிடம் எதுவும் சொல்ல முடியாதென்று ஏற்கெனவே நான் நன்றாக அறிந்திருந்தேன்.

அந்த யானை, "பெரிய மரத்தடிக்குப் பக்கத்திலே நின்னுக்கிட்டிருக்கு. கீழே விழுந்தா அடிபட்டிரும். அதக் கொஞ்சம் சதுப்புப் பகுதிக்குக் கொண்டு வரணும். மத்த யானைகள் விவரம் புரியாம ரெஸிஸ்ட் பண்ணும்" என்றார். யானைகளுக்குத் தெரியுமா, இந்தக் காயத்துக்குக் காரணம் மனுசங்கதான்னு என்று கேட்டேன். "கண்டிப்பா... ரொம்ப நல்லாத் தெரியும்" என்றார். மனிதனின் கீழ்மைகள் நாள்தோறும் வளர்வதன் சாட்சியாக யானைகளின் மரணங்கள் நிகழ்கின்றன. சுற்றுப்பயணம் என்ற பெயரில் காட்டுக்கு வரும் வசதியானவர்களும் படித்தவர்களும் குடித்துவிட்டு வெறியுடன் காட்டு மரத்தின்மீது வீசி எறியும் மதுக்குப்பிகள் மிகவும் ஆபத்தானவை. மற்ற எந்த மிருகத்தை விடவும் யானைகளுக்கு மிக அபாயகரமானவை. யானையின் அடிக்கால், மணல் மூட்டை போன்றது. மரத்தடியில் கிடக்கும் குப்பியின் பாகங்கள் அதன் மகத்தான எடை காரணமாகப் பாதங்களுக்குள் முழுக்கப் புகுந்துவிடும். நடக்க நடக்க உள்ளே செல்லும். அதன் பின்னால் யானையால் நடக்கமுடியாது. காயம் சீழ் வைக்கும். குருதிப் பாதைகளையோ எலும்பையோ அவை தொட்டுவிட்டதென்றால் அதன்பின் யானை உயிருடன் எஞ்சாது.

"ஆனால், உயிர் போற வலி இருந்தாலும் யானை அலறாது, துடிக்காது. கண் மட்டும் நல்லாச் சுருங்கி இருக்கும். உடம்பு அங்கங்க அதிரும். யானை சம்மதிச்சா அதுக்கு மயக்க மருந்தே கொடுக்காமக்கூட அறுவைச் சிகிச்சை பண்ணலாம். அந்த அளவுக்குப் பொறுமையா ஒத்துக்கிட்டு நிக்கும். என்ன ஒரு படைப்பு. கடவுள் அவரோட நல்ல மனநிலையில் படைச்சிருக்கார்" என்று சொல்லிக்கொண்டே டாக்டர் கே. ஓடையைக் கடந்து இறங்கினார்.

**நிகண்டுகளில் யானையைக் குறிக்கும் வேறு சொற்கள்**

| | |
|---|---|
| 1. கயம் | 12. அரசுவா |
| 2. வேழம் | 13. அல்லியன் |
| 3. களிறு | 14. அனுபமை |
| 4. பிளிறு | 15. ஆனை |
| 5. களபம் | 16. இபம் |
| 6. மாதங்கம் | 17. இரதி |
| 7. கைம்மா | 18. குஞ்சரம் |
| 8. வாரணம் | 19. வல்விலங்கு |
| 9. அஞ்சனாவதி | 20. கரி |
| 10. அத்தி | 21. அஞ்சனம். |
| 11. அத்தினி | |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 39 23-10-2018 10:57:22

யானைகளை நெருங்கியபோது நடுவே நின்ற பெரிய பிடி யானை உரக்கப் பிளிறியது. அதைக் கேட்ட மற்ற யானைகளும் பிளிறின. அவை டாக்டர் கே. யை நோக்கித் திரும்பின. பிடி யானையின் காதுகள் வேகமாக அசைந்தன. தலையை வேகமாகக் குலுக்கியபடி டாக்டரை நோக்கி வந்தது. டாக்டர் கே. அசையாமல் நின்றார். அது மேலும் தலையைக் குலுக்கி எச்சரிக்கை விடுப்பதுபோலப் பிளிறிக்கொண்டு இன்னும் இரண்டடி முன்னால் வந்தது. யானை தலையைக் குலுக்கினால் அது எச்சரிக்கிறது, 'தாக்குவேன்' என்றுதான் அர்த்தம். என் இதயத்துடிப்பை என் காதுகளில் கேட்டேன். டாக்டர் கே. அசையாமல் சில நிமிடங்கள் நின்றார். யானையும் அசையாமல் நின்றது. டாக்டர் கே. மேலும் முன்னே சென்றார். இப்போது அந்த யானை நெருங்கி வந்தது. ஆனால் தலையைக் குலுக்கவில்லை. மத்தகத்தை நன்றாகத் தாழ்த்தியது. அதுவும் எச்சரிக்கை அடையாளம்தான். பல மணி நேரம் நீடித்த இக்காட்சியின் முடிவில் அந்தப் பிடி யானை பின்வாங்கியது. அதனைப் பின்பற்றி அனைத்து யானைகளும் மூங்கில் கூட்டங்களுக்குள் சென்றன.

டாக்டர் கே. கையைத் தூக்கி எங்களை வரும்படி சைகை காட்டினார். நானும் பிறரும் ஓடைக்குள் இறங்கினோம். வனக்காவலர்கள் பின்னால் தங்கிவிட நானும் குறும்பர்களும் முன்னால் சென்றோம். பாதிக்கப்பட்ட யானை சட்டென்று சாய்ந்திருந்த மரம் அதிர நிமிர்ந்து எங்களை நோக்கி வந்தது. அதன் பின்னங்கால் வீங்கி மற்ற கால்களைவிட இருமடங்காக இருந்தது. அதைக் கிட்டத்தட்ட இழுத்துத்தான் அது முன் நகர முடிந்தது.

> மனிதர்கள் தவிர்த்த மற்றைய விலங்குகளில் யானை, அதிக நாள்கள் வாழும் தரைவாழ் விலங்கு ஆகும். வேட்டை விலங்குகளும் காட்டுயிர்களின் உணவுப் படிநிலையில் உயர்நிலையிலுள்ளவையும் ஆன சிங்கம், புலி முதலியனவும் நெருங்க அஞ்சும் வலிமை கொண்டவை. யானைகள் குடும்பமாக வாழும். இவை மிகுதியான நினைவாற்றல் கொண்டவை. யானைகளில் மூன்று சிற்றினங்கள் இன்று உலகில் எஞ்சியுள்ளன. அவை ஆப்பிரிக்கப் புதர்வெளி யானைகள், ஆப்பிரிக்கக் காட்டு யானைகள், ஆசிய யானைகள் ஆகியனவாகும். பொதுவாக எல்லா யானைகளும் ஏறத்தாழ 70 ஆண்டுகள்வரை உயிர் வாழ்கின்றன.



அது நாலடி முன்னால் வந்ததும் டாக்டர் அதைச் சுட்டார். மாத்திரை அதன் தோளுக்கு மேல் பதமான சதையில் புதைந்ததும் யானை உடல் அதிர்ந்து அப்படியே நின்றது. காதுகளை அசைப்பது நின்றது. அதன் அசைவு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. முன் காலைக் கொஞ்சம் வளைத்து ஆடியது. சட்டென்று பக்கவாட்டில் சாய்ந்து சேற்றை அறைந்து புல் மேல் விழுந்தது. துதிக்கையின் நுனியால் எங்களை வாசம் பிடித்தபின் யானை அசைவிழந்தது.

டாக்டர் கே. யானையின் அருகே அமர்ந்து சுறுசுறுப்பாக வேலையைத் தொடங்கினார். நான் அவருக்கு உதவினேன். காடுகளுக்குள் மற்ற யானைகள் எங்களையே கூர்ந்து நோக்கிக்கொண்டு நிற்பதை உணர்ந்தேன். யானையின் காலில் பாதி கண்ணாடிக்குப்பி ஒன்று முழுமையாக உள்ளே ஏறி இருந்தது. அதைச் சுற்றிச் சீழ் கட்டிப் பொருக்கோடியிருந்தது. கத்தியால் டாக்டர் கே. அந்தப் பொருக்கை வெட்டிச் சீழ்பட்ட சதையை முழுக்க, சிறிய கோடாலி போன்ற கருவியால் வெட்டியெடுத்தார். ஆழப் பதிந்திருந்த கண்ணாடிக்குப்பியை எடுத்தெறிந்தார். "ஒரு வாரம்கூட ஆகலை, பொழைச்சுது" என்றார்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 40 23-10-2018 10:57:23

தலையணை அளவுக்குப் பஞ்சை எடுத்து அதில் மருந்தை நனைத்து உள்ளே திணித்து இறுக்கி வைத்துப் பெரிய துணியொன்றால் சுற்றிக் கட்டினார். அதன் பசை இறுக்கமாக ஒட்டிக் கொண்டது. அதன் காலில் கூடாரத் துணி போன்ற தோலின்மீது சிறிய எவர்சில்வர் கிளிப்புகளைக் குத்தி இறுக்கி அதனுடன் துணியைச் சேர்த்து ஒட்டிக்கட்டி இறுக்கி முடித்தார். அதன் மேல் கீழே கிடந்த கரிய சேற்றை அள்ளி நன்றாகப் பூசி மூடினார். யானையின் காதில் அதைத் திரும்பவும் கண்டுபிடிப்பதற்கான சிக்னலர் கம்மலைக் குத்தி அணிவித்துவிட்டு எழுந்தோம். மறைந்திருந்த யானைகள் ஒவ்வொன்றாகத் தரையில் கிடந்த யானையைச் சூழ்ந்து கொண்டன. துணியைத் துதிக்கையால் தடவிப் பரிசோதனை செய்து பெரிய யானை மெல்லப் பிளிற, மற்ற யானைகளும் அதனைத் தொடர்ந்து பிளிறின. ஒரு குட்டி யானை மட்டும் மஞ்சணத்தி மரத்தடியில் நின்று காதுகளை முன்னால் தள்ளி எங்களையே பார்த்தது.

"துணிக்கட்டை அவுத்திராதுல்ல?" என்றேன். "அதுக்குத் தெரியும்". "ஆனா யானைக்குப் பொதுவா வெள்ளை நிறம் பிடிக்காது. சேறு பூசலையன்னா நிம்மதியில்லாம காலை நோண்டிக்கிட்டே இருக்கும்" என்றார். "குணமாயிடுமா" என்றேன். "அனேகமா பதினஞ்சு நாளிலே பழையபடி ஆயிடும். யானையோட ரெஸிஸ்டென்ஸ் பயங்கரம். சாதாரண ஆண்டிபயாட்டிக்கூட அபாரமா வேலை செய்யும்" என்றார். மீண்டும் டாப் ஸ்லிப்புக்குக் காரில் திரும்பும்போது டாக்டர் கே., "என்ன ஒரு அற்புதமான படைப்பு. என்னிக்காவது தமிழ்நாட்டிலே யானை இல்லாமப் போனா அப்புறம் நம்ம பண்பாட்டுக்கே என்ன அர்த்தம்?" என்றார்.

காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு.

– கலித்தொகை 2: 26 –27



அடுத்த முறை அவரை யானை முகாமில் சந்தித்தேன். அவர் வந்ததும் நாற்பத்தெட்டுத் துதிக்கைகள் தலைக்குமேல் எழுந்து அவரை வரவேற்றன. அவர் அவற்றுடன் கொஞ்சியபடி குலவியபடி வேலைகளில் மூழ்கினார். ஒவ்வொரு யானையாகப் பார்த்துப் பரிசோதனை செய்து அறிக்கைகளைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அவர் சொல்லச் சொல்ல நான் எழுதினேன். நடுவே ஷெல்லி, கொஞ்சம் கம்பன், கொஞ்சம் பரணர் பற்றிப் பேசினார். வனத்துறை அதிகாரி என்பதை மறந்த நான் மெல்ல மெல்ல அவரின் உதவியாளராகவும் ரசிகராகவும் மாணவராகவும் மாறிக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் அவர் வீட்டுக்குச் சென்றதுமே அவர் எழுதி வைத்திருந்த பெரிய ஆய்வேட்டை எடுத்து நீட்டினார். "படிச்சுப் பாரு" என்றார். அவருடன் பேசிக்கொண்டே இருந்ததில் இருட்டிவிட்டது. "கௌம்பறியா.. வேணுமானா இங்கேயே தங்கிக்கோ" என்றார். அசதியாக இருந்ததால் நான் படுத்துக்கொண்டே படித்தேன். டாக்டர் இரவு உணவை அரைமணி நேரத்தில் சமைத்தார். இருவரும் அமைதியாகச் சாப்பிட்டோம். கோயில் யானைகளைக் காட்டுக்குள் கொண்டு வந்து பராமரித்துத் திருப்பி அனுப்புவதற்குண்டான செயல் திட்டத்தைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார். இரவு பத்து மணிக்குக் களைப்பு காரணமாக நான் படுத்துத் தூங்கிவிட்டேன்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 41 23-10-2018 10:57:23

மீண்டும் விழித்தபோது அறையில் வெளிச்சம் இருந்தது. டாக்டர் கம்பளிச்சட்டையைப் போட்டுக் கொண்டிருந்தார். "வெளியே ஏதோ சத்தம் கேக்குது... யானை வாசமும் அடிக்குது" என்றார். "யானைக்கூட்டம் வந்திருக்குமோ" என்றேன். "வழக்கமா இந்தப் பக்கம் வராது. ஏதோ காரணம் இருக்கணும்" என்று டார்ச்சை எடுத்துக் கொண்டார். நானும் கிளம்பினேன். ஆனால் அதற்குள்ளாகவே டாக்டர் கே. யானையைப் பார்த்துவிட்டிருந்தார். "குட்டி.. இரண்டு வயசுக்குள்ள இருக்கும்" என்று அவர் சுட்டிக்காட்டிய இடத்தில் சில கணங்களுக்குப் பின் நானும் அந்த யானைக்குட்டியைக் கண்டேன். "இந்த வயசிலே தனியா வராதே" என்றார் டாக்டர். "வா, பாப்போம்". இருட்டில் வெளிச்சத்தை அடித்தால் அதன் பின்சூழலைப் பார்க்க முடியாது என்பதால் இருட்டுக்குள்ளேயே சென்றோம்.

யானைக்குட்டி மெல்லப் பிளிறியபடி துதிக்கையைத் தூக்கி மோப்பம் பிடித்தது. "ஈஸி ஈஸி" என்றார் டாக்டர். யானைக்குட்டி மெல்ல முன்னால் வந்தது. அது நொண்டுவதுபோல் இருந்தது. "காயம் பட்டிருக்கு" என்றேன். யானைக்குட்டி மீண்டும் நின்று ஜெர்ஸி பசு கத்தும் ஒலியில் பிளிறியது. மீண்டும் தள்ளாடியபடி முன் நகர்ந்தது. டாக்டர் என்னிடம், "நில்லு" என்று சொல்லிவிட்டு அருகே சென்றார். அது துதிக்கையை ஊசல்போல் வீசித் தலையை வேகமாக ஆட்டி அவரை வரவேற்றது. அவர் அந்தக் குட்டியானையைத் தட்டித்தட்டி அமைதியாக்கினார். "இவனைப் படுக்க வைக்கணும். இப்பச் சொல்லிப் புரிய வைக்க முடியாது. போய் என்னோட கிட்டை எடுத்துட்டு வா" என்றார். நான் அறைக்குள் ஓடிச்சென்று அவரது பெரிய மருத்துவப் பெட்டியைக் கொண்டு வந்தேன்.

டாக்டர் கே. அதன் வாயில் ஊசி போட்டார். துதிக்கையை முன்னங்கால்களுக்கு நடுவிலிருந்து முன் பக்கம் வரை ஊஞ்சல்போல ஆட்டி முன்னும் பின்னும் உடலை அலைத்தது. ஆட்டம் தளர்ந்து மெல்லப் பக்கவாட்டில் சரிந்து உட்கார்ந்து விழுந்து கால்களை நீட்டிப் படுத்தது. "விளக்கு" என்றார். நான் காட்டினேன். மறுபடியும் மதுக்குப்பி. இம்முறை அதன் கீழ் நுனிக் கால்களுக்கு வெளியே நீட்டித் தெரிந்தது. யானை அதிக எடையில்லாததனாலும் அதிக நாட்கள் ஆகாமல் இருந்ததனாலும் அது உள்ளே செல்லவில்லை. டாக்டர் அதைப் பிடித்து இழுத்து உருவினார். குருதி அவர் கையை நனைத்தது. கையை உள்ளே விட்டு மதுக்குப்பியின் பாகம் ஏதும் இல்லையென்பதை உறுதி செய்து, பஞ்சை மருந்தில் நனைத்து உள்ளே செலுத்திக் கட்டினார்.

"ஒரு மணி நேரத்தில எந்திரிச்சுடுவான்... காலையிலே முதுமலைக்குத் திரும்பிப் போயிடுவான்" என்றார் கே. "முதுமலைக்கா?" என்றேன். "ஆமா, அங்கே இருந்துதானே வந்திருக்கான். நீயும் இவனைப் பாத்திருக்கே. ஒண்ணரை வருசம் முன்னாடி நாம முதுமலையிலே ஒரு யானைக்கு இதேமாதிரி மதுக்குப்பி எடுத்தோமே, அப்போ அந்தப் பெரிய மஞ்சணத்தி மரத்தடியில நின்னது இவன்தான். அப்ப ரொம்பச் சின்னக்குட்டி" என்றார். "எப்படித் தெரியும்?" என்றேன். "ஏன், அங்க பார்த்த ஒரு மனுசனை

யானை டாக்டர் என்று அழைக்கப்பட்ட டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி, தமிழகத்தின் முக்கியமான காட்டியல் வல்லுநர்களில் ஒருவர். யானைகளுக்காகத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்தவர். உலகப்புகழ் பெற்ற அறிவியல் இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். வனப்பேணுநர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான வேணுமேனன் ஏலீஸ் விருதினை 2000ஆம் ஆண்டில் பெற்றார். தமிழகக் கோவில் யானைகளுக்கு வனப் புத்துணர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அரசின்மூலம் செயல்படுத்தியவர்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 42 23-10-2018 10:57:23

உன்னால திரும்பிப் பாத்தா சொல்லிட முடியாதா?" என்றார். பின்னர் டாக்டர் கே. எழுந்து கைகளைப் பஞ்சால் அழுத்தித் துடைத்துக் காகிதப் பைக்குள் போட்டார். "அவ்வளவு தூரம் உங்களைத் தேடியா வந்திருக்கான்.. ஆச்சரியம்!" என்றேன். "பாவம், நல்ல வலியிருந்திருக்கு. யானைகள் அடையாளங்களைக் கண்டுகொண்டு தேடிச் செல்வதைப் பற்றி நிறையவே கேள்விப்பட்டிருக்கேன். முந்நூறு கிலோ மீட்டர் தூரம்கூட யானைகள் தேடிச் செல்வது உண்டு. அவை சிறு தகவலைக்கூட மறப்பதில்லை" என்றார். இருந்தாலும் ஜீப்பில் திரும்பிய எங்களை ஒரு குட்டியானை அத்தனை தூரம் தேடி வந்தது, என்னைப் பிரமிப்பூட்டியது.

நாங்கள் மீண்டும் வீட்டுப் படியை அடைந்ததும் டாக்டர் கே. காட்டை உற்றுப் பார்த்தார். இருளுக்குள் மெல்லிய இருளசைவுகள் உருவாகின. பெரிய யானைக்கூட்டமே அங்கே நிற்பதைக் காண முடிந்தது. நான் விளக்கை அடிக்கப் போனேன். "வேண்டாம்" என்றார் டாக்டர். என்னால் அந்தக் கால் ஊனமான யானையை அதன் மெல்லிய கோணல் கொண்ட நடையை வைத்து அடையாளம் காண முடிந்தது. அவை முன்னால் வந்து அரை வட்டமாகக் காதுகளை அசைத்துக்கொண்டு நின்றன.

"வந்து கூட்டிக்கொண்டு போயிடும், வா" என்று டாக்டர் சொல்லிக்கொண்டே திரும்பியபோது சட்டென்று இருபதுக்கும் மேற்பட்ட யானைப் பிளிறல்கள் ஒன்றாக இணைந்து பேரொலி எழுப்பின. என் உடல் சிலிர்த்துக் கூசிக் கண்கள் பொங்கி நிறைந்து வழிந்தன. நெஞ்சடைக்கக் கை கூப்பியபடி ஒரு சொல் மிச்சமில்லாமல் மனமிழந்து நின்றேன். யானைக்கூட்டம் துதிக்கைகளைத் தூக்கி வீசிச் சேர்ந்து மீண்டும் மீண்டும் பிளிறின. ஆம், தேவ துந்துபிகள் முழங்கின! வான் முரசுகள் இயம்பின! கருமேகம் திரண்ட விண்ணெங்கும் யானை முக வானவர்களின் புன்னகை நிறைந்திருந்தது.

என்னை "வா" என்று சொல்லி உள்ளே சென்றார் யானை டாக்டர்.

**(யானை டாக்டர் குறும் புதினத்தின் சுருக்கப்பட்ட வடிவம்.)**



நூல்வெளி

ஜெயமோகன், நாகர்கோவிலைச் சேர்ந்தவர். விஷ்ணுபுரம், கொற்றவை உள்ளிட்ட பல புதினங்களோடு சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இயற்கை ஆர்வலர். யானையைப் பாத்திரமாக வைத்து ஊமைச்செந்நாய், மத்தகம் ஆகிய கதைகளையும் எழுதியுள்ளார். இந்தக் குறும் புதினம் 'அறம்' என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்று உள்ளது.



கற்பவை கற்றபின்...

1. காட்டுவளமும் காட்டுயிர்களும் பாதுகாக்கப்படுதல் – உயிர்ச்சங்கிலி உயிர்ப்புடன் அமைதல் இரண்டு கருத்துகளுக்கும் வலுச்சேர்க்கும் வகையில் கருத்தாடல் நிகழ்த்துக.
2. நீங்கள் அண்மையில் படித்த சிறுகதை ஒன்றை வகுப்பறையில் கூறுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 43 23-10-2018 10:57:23

## மெய்ம்மயக்கம்

24HFVQ

மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளையும், இறுதியில் வரும் எழுத்துகளையும் அறிந்துகொண்டதைப் போலவே மொழிக்கு இடையில் வரும் எழுத்துகளையும் அறிந்துகொள்ளவேண்டும். இவ்வாறான எழுத்துகள் தமிழ்ச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் கண்டறியவும் பயன்படுத்தவும் உதவுகின்றன.

சொல்லின் இடையில் மெய்யெழுத்துகள் அடுத்தடுத்து வருவது மெய்ம்மயக்கம் எனப்படும். இது உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என இரண்டு வகைப்படும்.

### உடனிலை மெய்ம்மயக்கம்

சொற்களின் இடையில் ஒரே மெய்யெழுத்து அடுத்தடுத்து வருவது உடனிலை மெய்ம்மயக்கம் எனப்படும். தமிழில் க், ச், த், ப் ஆகிய மெய்யெழுத்துகள் தம் எழுத்துகளுடன் மட்டுமே சேரும் உடனிலை மெய்ம்மயக்க எழுத்துகள் ஆகும். இந்த எழுத்துகளின் அருகில் அவற்றுக்குரிய எழுத்து வரிசை மட்டுமே வரும். பிற எழுத்துகள் வாரா. அவ்வாறு வந்தால் அச்சொல் தமிழ்ச்சொல்லாக இருக்காது.

எடுத்துக்காட்டாக, பக்கம் என்ற சொல்லில் (ப+க்+க்+அ+ம்) க் என்னும் மெய்யெழுத்து தொடர்ந்து இருமுறை வந்துள்ளதைப் பாருங்கள். இதுபோலவே ச், த், ப் ஆகிய எழுத்துகளும் வரும்.

| | |
|---|---|
| அச்சம் | எச்சம் |
| மொத்தம் | சாத்தன் |
| அப்பம் | கப்பம் |

### வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

சொல்லின் இடையில் வெவ்வேறு மெய்யெழுத்துகள் தொடர்ந்து வருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும். தமிழில் ர், ழ் ஆகிய இரண்டு மெய்யெழுத்துகள் தம் வரிசை எழுத்துகளுடன் சேர்ந்து வராமல் பிற மெய்யெழுத்துகளுடன் மட்டுமே சேர்ந்து வரும். எனவே, இவ்விரு மெய்யெழுத்துகளும் வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கு மட்டுமே உரியவையாகும்.

| | |
|---|---|
| ர் | – தேர்தல், உயர்வு |
| ழ் | – வாழ்பவன், சூழ்க |

க், ச், த், ப், ர், ழ் ஆகிய ஆறனையும் தவிர்த்தஏனையபன்னிரண்டுமெய்களும் உடனிலை மெய்ம்மயக்கமாகவும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் உள்ளன. இவற்றையும் மெய்ம்மயக்கம் என்றே கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| ட் – பட்டம், காட்சி | ம் – அம்மா, அம்பு |
| ற் – வெற்றி, பயிற்சி | ன் – மன்னன், இன்பம் |
| ங் – அங்ஙனம், தங்கம் | ய் – செய்யலாம், வாய்மை |
| ஞ் – விஞ்ஞானம், மஞ்சள் | ல் – நல்லவன், செல்வம் |
| ண் – தண்ணீர், நண்பகல் | வ் – இவ்விதம், தெவ்யாது |
| ந் – செந்நெறி, தந்த | ள் – உள்ளம், கொள்கை |

### ஈரொற்று மெய்ம்மயக்கம்

தனிச்சொற்களிலோ கூட்டுச்சொற்களிலோ சொற்களின் இடையில் ய், ர், ழ் ஆகிய மெய்கள் ஈரொற்றாய் வரும். (மூன்று மெய்களாக மயங்கி வரும்) இதனை ஈரொற்று மெய்ம்மயக்கம் என்பர்.

| | | |
|---|---|---|
| ய் – காய்ச்சல், நாய்க்கால், | ர் – உயர்ச்சி, தேர்க்கால் | ழ் – வீழ்ச்சி, காழ்ப்புணர்ச்சி |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 44 23-10-2018 10:57:23

**இனவெழுத்து (நட்பெழுத்து)**

மெய்யெழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படும். சொற்களின் இடையில் மெல்லின எழுத்துகளுக்குப்பின் வரும் வல்லின மெய்களை இனவெழுத்துகள் அல்லது நட்பெழுத்துகள் என்பர்.

| | | |
|---|---|---|
| ங் – க் (அங்கம்) | ஞ் – ச் (பஞ்சம்) | ண் – ட் (பண்டம்) |
| ந் – த் (சந்தம்) | ம் – ப் (கம்பம்) | ன் – ற் (தென்றல்) |

பிழையின்றிப் பேசவும் எழுதவும் ணகர, நகர, னகர வேறுபாட்டினை அறிந்துகொள்ளவேண்டும். எங்கெங்கு இவ்வெழுத்துகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை இனவெழுத்துகளால் அறியலாம். ணகர, நகர, னகர வேறுபாட்டினை அறியாமல் எழுதுவதால் ஏற்படும் பிழையை மயங்கொலிப் பிழை என்கிறோம்.

**கற்பவை கற்றபின்...**

பேச்சுவழக்கிலுள்ள பிறமொழிச் சொற்களுள் உடனிலை மெய்ம்மயக்கத்திற்கும், வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கும் உடன்படாதவற்றைத் தேர்ந்தெடுத்துக் காரணம் கூறுக.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. *பத்தியைப் படித்து மயங்கொலிப் பிழைகளைத் திருத்துக.*

   *வேலன் நூலகம் செண்றான். வரிசையாய் அடுக்கி வைத்த புத்தகங்களைக் கன்டு மகிழ்ந்து நிண்றான். அன்டங்கள் குறித்த புத்தகங்களைக் கன்டான். அந்தப் புத்தகங்களிலிருந்து குறிப்புகளை எடுத்துக் கொன்டு நெஞ்சம் மகிழ்ன்தான்.*

2. *மெய்ம்மயக்கச் சொற்களை வகைப்படுத்துக.*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாய்க்கால் | வாழ்க | வாழ்ந்த | பாக்கம் | சேர்தல் | நார்ச்சத்து |
| எச்சம் | மார்கழி | ஆழ்தல் | மொத்தம் | கப்பல் | தாழ்ச்சி |

3. *தொடர்களில் உடனிலையாகவும் வேற்றுநிலையாகவும் இடம்பெற்றுள்ள மெய்ம்மயக்கச் சொற்களைக் கண்டறிக.*

   *அ) இந்திய விண்வெளி ஆய்வுக்கழகம் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.*

   *ஆ) நேர்மை என்னும் சிறந்த கொள்கையைச் சார்ந்து வாழ்பவர்களே உயர்ந்தவர்களாகக் கருதப்படுவர்.*

   *இ) இயற்கைக் காட்சிகளின் வழியாக எளிய சொற்களைக் கொண்டு, கவிதை எழுதப் பழகவேண்டும்.*

   *ஈ) இந்தியா கணினித் தொழில்நுட்பத் துறையில் வேகமான வளர்ச்சி கண்டு வரலாற்றின் பக்கங்களில் இடம்பெற்று வருகிறது.*

   *உ) வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வு செய்து "ஒற்றை வைக்கோல் புரட்சி" என்னும் நூலை ஜப்பான் அறிஞர் எழுதினார்.*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 45 23-10-2018 10:57:23

# நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?

அ) ஏதிலிக் குருவிகள் – மரபுக் கவிதை
ஆ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை
இ) யானை டாக்டர் – குறும் புதினம்
ஈ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை

2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன –

அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

3. "வான் பொய்த்தது" – என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்

அ) வானம் இடிந்தது
ஆ) மழை பெய்யவில்லை
இ) மின்னல் வெட்டியது
ஈ) வானம் என்பது பொய்யானது.

4. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை

அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப்பொருள்கள்

(i) அ- மட்டும் சரி (ii) ஆ – மட்டும் சரி (iii) இரண்டும் சரி (iv) அ – தவறு, ஆ - சரி

5. பிழையான தொடரைக் கண்டறிக

அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.
ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.
இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.
ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறியமுடியும்.

**குறுவினா**

1. தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறு குறிப்பு வரைக.
2. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?
3. வளருங் <u>காவில் முகில்தொகை ஏறும்</u> – பொன்
   மாடம் எங்கும் அகிற்புகை நாறும் - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?
4. அலர்ந்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
5. ய், வ், ஞ், ட், ற், ந் – மெய்களுக்கான வேற்றுநிலை, உடனிலை மெய்ம்மயக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

**சிறுவினா**

1. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தைக் எழுதுக.
2. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
3. "சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
4. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.
5. தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் இனவெழுத்துகளின் பங்கைக் குறிப்பிடுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 46 23-10-2018 10:57:23

### நெடுவினா

1. 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.
2. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.
3. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்



ஆபிரகாம் பண்டிதர்
(1859 – 1930)

தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் தென்காசிக்கு அருகேயுள்ள சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர். இளமையிலேயே புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெருவிருப்பம்கொண்டு, நேரம் கிடைக்கும்போதெல்லாம் அதன் நுட்பங்களைப் பயின்றார். திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும்போதே சித்தமருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று மக்களால் அன்புடன் 'பண்டுவர்' (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார். சில ஆண்டுகள் பணியாற்றியபின் அதைவிடுத்து முழுமையாகச் சித்த மருத்துவத்தில் கவனம் செலுத்தினார். தஞ்சையில் குடியேறினார். மக்கள் அவரைப் 'பண்டிதர்' என அழைக்கத் தொடங்கினர். பண்டைத் தமிழ் நூல்களையெல்லாம் ஆழ்ந்து கற்று, 'சங்கீத வித்தியா மகாஜன சங்கம்' என்னும் அமைப்பை உருவாக்கி, தமது சொந்தச் செலவிலேயே தமிழிசை மாநாடுகள் நடத்தினார். அனைத்திந்திய அளவில் நடந்த இசை மாநாடுகளுக்கும் சென்று உரையாற்றினார். அவருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் 'கருணாமிர்த சாகரம்'. எழுபத்தோராண்டுகள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

### வினாக்களுக்கு விடையளிக்க

1. உடனிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.
2. வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.
3. உடனிலை மெய்ம்மயக்கமாகவும், வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் உள்ள சொற்களை எழுதி, மெய்களை அடிக்கோடிடுக.
4. கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.
   அ) சங்கீதம் ஆ) வித்தியா இ) மகாஜனம் ஈ) சாகரம்
5. இலக்கணக் குறிப்பும் பகுபத உறுப்பிலக்கணமும் தருக. அ) பயின்றார் ஆ) தொடங்கினர்

### தமிழாக்கம் தருக.

1. *Just living is not enough. One must have sunshine, freedom and a little flower – Hans Anderson*
2. *In nature, light creates the colour. In the picture, colour creates the light – Hans Hofmann*
3. *Look deep into nature and then you will understand everything better – Albert Einstein*
4. *Simplicity is nature's first step, and the last of art – Philip James Bailey*
5. *Roads were made for journeys not destinations – Confucius*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 47 23-10-2018 10:57:24

## மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக

1. உலை, உளை, உழை    2. வலி, வளி, வழி    3. கலை, களை, கழை
4. கனை, கணை    5. குரை, குறை    6. பொரி, பொறி

(எ.கா.) உலை, உளை, உழை

மன **உளை**ச்சல் தீரவும் வீட்டில் **உலை** கொதிக்கவும் **உழை**க்க வேண்டும்.

## கீழ்க்காண் விளம்பரத்தைப் பத்தியாக மாற்றி அமைக்க

உடல் வளர்த்தேன்!    உயிர் வளர்த்தேன்!!

இயற்கை உணவுத் திருவிழா

நாள் : தை 5 முதல் 11 வரை    நேரம் : மாலை 6 – 10 மணி    இடம் : தீவுத்திடல், சென்னை



| | |
|---|---|
| ஆவாரம்பூச் சாறு | தூதுவளைச் சாறு |
| குதிரைவாலிப் பொங்கல் | சாமைப் பாயசம் |
| வாழைப்பூ வடை | கேழ்வரகு உப்புமா |
| தினைப் பணியாரம் | கம்புப் புட்டு |
| வல்லாரை அப்பளம் | அகத்திப்பூ போண்டா |
| முடக்கத்தான் தோசை | முள்முருங்கை அடை |

இன்னும் பல.....

## நயம் பாராட்டுக

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!

வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!

கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!

பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!

– கவிமணி

## மொழியோடு விளையாடு

*எண்ணங்களை எழுத்தாக்குக.*





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 48    23-10-2018 10:57:27

**புதிர்களில் மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடிக்க.**

1. ஐந்தெழுத்துக்காரன்
முதலிரண்டோ
பாட்டெழுதுபவரின் பட்டம்
இரண்டும் மூன்றுமோ
பசும்பால் என்பதன் பின் இறுதி
கடைசி இரண்டெழுத்தோ
மானினத்தில் ஒரு வகையாம்
இரண்டும் ஐந்துமோ
பொருளை விற்கத் தேவையாம்
அது என்ன ?

2. இறுதி இரண்டெழுத்தோ
பழத்தின் முந்தைய பச்சை நிலை
தமிழ்க்கடவுளின் முற்பாதியை
முதலிரு எழுத்தில் வைத்திருக்கும்
நடுவிலோ ஒரெழுத்து ஒருமொழி
அதற்கும் முன் பொட்டு வைத்த ஙகரம்
சேர்த்தால் காயாவான்
பிரித்தால் நிலைமொழியில் மரமாவான்
ஏழெழுத்துக்காரன் அவன் யார்?

**இவைபோன்ற சிறுசிறு புதிர்க் கவிதைகளை எழுதிப் பழகுக.**

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, இயற்கைப் பாதுகாப்பு குறித்த முழக்கத்தொடர்கள் எழுதிக் காட்சிப் படுத்துக.**

(எ.கா.) *1. விதைப்பந்து எறிந்திடுவீர்! பூமிப்பந்து காத்திடுவீர்!*
*2. சிட்டுக்குருவிக்குக் கொஞ்சம் அரிசியிடு! உலக உயிர்களுக்கு உன் கருணையிடு!*

## செய்து கற்போம்

வேளாண்மை தொடர்பான சொல் விளக்க அகராதி ஒன்று உருவாக்குக.

## நிற்க அதற்குத் தக

*முன்மாதிரியானவர்கள் என்று யாரைக் கருதுவீர்கள்? அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள விரும்பும் நற்பண்புகளைக் குறிப்பிடுக.*

| முன்மாதிரியானவர் | நான் விரும்பிய நற்பண்பு |
|---|---|
| தந்தை | நேரந்தவறாமை |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர் | எதற்கும் அஞ்சாமை |
| உறவினர் | எதையும் பெரிய துன்பமாக எண்ணாமை |

### கலைச்சொல் அறிவோம்

இயற்கை வேளாண்மை – Organic Farming
வேதி உரங்கள் – Chemical Fertilizers
ஒட்டு விதை – Shell Seeds
தொழு உரம் – Farmyard Manure
மதிப்புக்கூட்டுப் பொருள் – Value Added Product
வேர்முடிச்சுகள் – Root Nodes
தூக்கணாங்குருவி – Weaver Bird
அறுவடை – Harvesting

### அறிவை விரிவு செய்

இயற்கை வேளாண்மை – கோ. நம்மாழ்வார்.
பனைமரமே பனைமரமே – ஆ. சிவசுப்பிரமணியன்.
யானைகள்–அழியும் பேருயிர் – ச. முகமது அலி, க. யோகானந்த்.
பறவை உலகம் – சலீம் அலி
Elephants: Majestic Creatures of the Wild – Shoshani. J.

### இணையத்தில் காண்க

https://www.elephantvoices.org/



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_027-050.indd 49 23-10-2018 10:57:27

# இணையச் செயல்பாடு

## இயற்கை வேளாண்மை

இயற்கை வேளாண்மை அறிவோம் !




படிகள்:

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி 'இயற்கை வேளாண்மை' என்னும் செயலியைப் பதிவிறக்கி நிறுவிக் கொள்க.
- செயலியின் முதல் பக்கத்தில் சங்க காலத்தில் ஏர்ப் பயன்பாடு, சங்க காலத்தில் எள் விளைச்சல் எப்படி இருந்தது போன்ற தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.
- இடப்பக்கம் மேல்பகுதியில் உள்ள பட்டியலில் இயற்கை வேளாண்மை – செய்திப்பிரிவுகளில் இயற்கை உரம், காணொலி, கீரை வகைகள், சிறுதானியச் சமையல், பழமொழி போன்ற பல தெரிவுகள் மூலம் இயற்கை வாழ்வியல் முறையை அறிக.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :







செயல்பாட்டிற்கான உரலி
https://play.google.com/store/apps/details?id=com.Aapp.
– vivasayamintamil&hl=en

B123_11_TAM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே**



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_027-050.indd 50 23-10-2018 10:57:28

இயல் 3

# பீடு பெற நில்



## கற்றல் நோக்கங்கள்

- இலக்கியங்கள்வழி தமிழர் பண்பாட்டுக்கூறுகளை அறிந்து தமதாக்கிக் கொண்டு வாழ்தல்
- பண்புகளோடு இணைந்த வாழ்க்கையே மனிதம் என்பதை உணர்ந்து பின்பற்றுதல்
- வீட்டிலும் சமூகத்திலும் பின்பற்றப்படும் பண்பாட்டு நிகழ்வுகளைப் பொறுப்புடன் கடைப்பிடித்தல்
- சொற்களைப் பொருள்புரிந்து காலத்திற்கேற்பப் பயன்படுத்தும் திறன் பெறுதல்

## பாடப் பகுதி

மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு – ஆர். பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.

காவடிச்சிந்து – சென்னிகுளம் அண்ணாமலையார்

குறுந்தொகை – வெள்ளிவீதியார்

புறநானூறு – கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

வாடிவாசல் – சி.சு. செல்லப்பா

பகுபத உறுப்புகள்

திருக்குறள் – திருவள்ளுவர்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_051-084.indd 51 23-10-2018 15:36:34

உரைநடை உலகம்

இயல் 3

# மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு

– ஆர்.பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.

**நுழையும்முன்**

மலை, மனித சமூகத்தின் ஆதி நிலமாகும். தமிழ் அகத்திணையியல், மலையும் மலை சார்ந்த பகுதியையும் குறிஞ்சி என்று குறிக்கும். குறிஞ்சி நிலம் சார்ந்த சங்கப் பாடல்கள் மலையோடு இயைந்த தமிழர்தம் சீரிய வாழ்வினைப் பேசின. மலை, குன்றுகளின் பெயர்கள் குறித்த ஆய்வை OROLOGY என்ற கலைச்சொல்லால் அழைப்பர். தமிழர் வாழ்வில் மலைகள் பெறும் சிறப்பு குறிப்பிடத்தக்கது.

திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள். திராவிடர்களை, 'மலைநில மனிதர்கள்' என்று அழைக்கிறார் கமில் சுவலபில் (Kamil Zvelebil). "சேயோன் மேய மைவரை உலகம்" என்று உரைக்கிறது தொல்காப்பியம். "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" என்கிறது திருமுருகாற்றுப்படை. மேற்குறிப்பிட்டுள்ள பாடல் அடிகள் தமிழரின் கடவுளையும் மலையையும் தொடர்புபடுத்தும் பண்டைய பதிவுகளாக விளங்குகின்றன.



பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைப்பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர். பெருநிலப் பகுதிகளை ஆண்ட முடிமன்னர்களுக்குக்கூட வழங்காத பெருமையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் இக்குறுநிலத் தலைவர்களுக்கு அளிப்பதைப் பரக்கக் காணலாம்.

## திராவிடர்களின் மலைப்பெருமிதம்

இந்தியாவில் தற்போது வாழும் பல்வேறு திராவிடப் பழங்குடிகளின் இனக்குழுப் பெயர்கள் அப்பழங்குடியினரின் மலை சார்ந்த மானுடப் புவிச்சூழலை வெளிப்படுத்துகின்றன. கீழ்காணும் இனக்குழுப்பெயர்கள் 'மலை' என்ற சொல்லை அடிப்படையாகக்கொண்டு உருவாகியுள்ளன.

| | |
|---|---|
| மால் பஹாடியா | ஜார்கண்ட் |
| மல அரயன் | மேற்குத்தொடர்ச்சி மலைகள் – கேரளம் |
| மல குறவன் | நெடுமங்காடு – கேரளம் |
| மல மூத்தன் | எர்நாட் – கேரளம் |
| மல பணிக்கர் | வட கேரளம் |
| மலயன் | பாலக்காடு – கேரளம் |
| மல வேடா | இடுக்கி – கேரளம் |
| மலேரு | தட்சிண கன்னடா –கர்நாடகம் |

இதைப் போலவே,

| | |
|---|---|
| கோட்டா | நீலகிரி, தமிழ்நாடு |
| கொண்டா தோரா | ஆந்திரப்பிரதேசம் |
| கோண்டு, கொய்ட்டெர் | ஒடிஸா |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 52 23-10-2018 15:36:34

ஆகிய திராவிடப் பழங்குடி இனக்குழுப் பெயர்களும் 'மலை', 'குன்று' என்ற பொருள் தரும் சொற்களையே அடிப்படையாகக்கொண்டு ஆக்கம் பெற்றுள்ளன.

**மலைக்குடியிருப்புகள்**

திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள், அப்பழங்குடியினர்தம் மலை சார்ந்த வாழ்வியலின் சமூக, சமயக்கூறுபாடுகள் குறித்த புரிதலைத் தருகின்றன.

பழங்குடியினர் ஓடும் நீரையே தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்புடையவர்கள். எனவே, அவர்கள் தங்கள் குடியிருப்புப் பகுதியைவிட உயரமான இடத்திலோடும் சிற்றாறுகள், ஓடைகளில் இருந்து நீரெடுத்துப் பருகுகிறார்கள்.

நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள். எனவே அவற்றைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை அமைத்திருக்கின்றனர். அவர்களின் வீடுகளில் திண்டுகள் (மேடைகள்) முக்கிய இடம் பெறுகின்றன.



குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் 'மெட்டு' என்றசொல்அதன்உயரமான, மேடான அமைப்பை விளக்குகின்றது. ஆந்திராவிலும் ஒடிசாவிலும் உள்ள 'ஜதாப்பு' எனப்படும் திராவிடப் பழங்குடியினரின் குடியிருப்புகள் பெரும்பாலும் மலை உச்சிகளில் அமைந்துள்ளன. பழங்குடித் தலைவரின் வீடு, மற்ற வீடுகளை விட உயரமான இடத்தில் அமைந்துள்ளது. உயரமான மேடை, திண்ணை, சுற்றுச்சுவர்கள், மேலோடை நீர் ஆகியவை திராவிடப் பழங்குடியினரின் வாழ்விட வடிவமைப்பிலும் வாழ்வியலிலும் உயரமான இடங்கள் செலுத்தும் தாக்கத்தைக் காட்டுகின்றன.

**வடமேற்குப் பகுதிகளில் திராவிட மலைப்பெயர்கள்**

திராவிடச் சொல்லான 'மலை' என்பது சமஸ்கிருத மொழியில் 'மலய' என்று வழங்கப்படுகிறது. பாண்டிய மன்னன் ஒருவன் 'மலயத்துவஜ' என்று அழைக்கப்பட்டான் என்பதும் 'மலய' என்ற சொல்லின் திராவிடத் தொடர்புக்கு அரண் சேர்க்கிறது. மேலும், வடமொழியில் 'மலய' என்றசொல் மலபாருக்கு மேற்கே உள்ள மலைகளையே குறிக்கிறது.

தமிழில் குறிஞ்சி நிலம் தொடர்பான சொற்களில் 'மலை' என்பது 'உயரமானது' என்றும் 'குன்று' என்பது 'உயரம் குறைவானது' என்றும் பொருள்படுவனவாகும். மலை, குன்று என்னும் இரண்டு சொல்லாட்சிகளும் வெளிக்கொணரும் உயர வேறுபாட்டை வடமேற்குப் பகுதிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மலை சார்ந்த இடப்பெயர்கள் உறுதிசெய்வது வியப்பளிக்கின்றது.

இதைப்போலவே தமிழ் மொழியில் 'வரை' என்ற சொல் கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது. நுனி முதல் அடி வரை மற்றும் அடி முதல் நுனி வரை என்ற தொடர்களில் 'வரை' என்ற சொல் விளிம்பு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 53 23-10-2018 15:36:35

திராவிட நிலப்பகுதிகளின் மலை தொடர்பான சொற்கள், சிந்துவெளிப் பண்பாட்டு நிலப்பகுதிகளில் தற்செயலாக வழங்கப்படவில்லை. அவை, காரணம் கருதியே வழங்கப்பட்டன. சிந்துவெளி மற்றும் திராவிட மலைவாழ் மக்கள் அன்றாடம் புழங்கும் சொற்களில் காணப்படும் இத்தொடர்ச்சி சிந்திக்கத்தக்கது. இந்தியாவின் வடக்கு, மேற்கு, கிழக்கு மாநில இடப்பெயர்களில் திராவிட இடச்சொற்களின் நேரடித் தொடர்பு இன்றுவரை நீடிப்பதை, கீழுள்ள அட்டவணை உறுதிப்படுத்தும்.

| திராவிடச் சொற்கள் | மாநிலம் | மாவட்டம் |
|---|---|---|
| மலை | உத்திராஞ்சல் | சமோலி |
| | ஜார்கண்ட் | கும்லா |
| | உத்திரப் பிரதேசம் | ஜவுன்பூர் |
| வரை | குஜராத் | வல்ஸட் |
| | மஹாராஷ்ட்ரா | தாணே |
| | ஹிமாசலப் பிரதேசம் | காங்க்ரா |
| மலா | பஞ்சாப் | ஜலந்தர் |
| | ராஜஸ்தான் | அஜ்மீர் |
| | கர்நாடகம் | உடுப்பி |

**தென்னிந்தியாவில் 'மலை' என்ற இடப்பெயரின் சிறப்பிடம்**

தமிழ்நாட்டில் மட்டும் 'மலை' என்ற சொல் 17 இடப்பெயர்களில் முன்னொட்டாகவும் 84 இடப்பெயர்களில் பின்னொட்டாகவும் இடம்பெறுகின்றது. ஆந்திர மாநிலத்தில் 'மல்' என்ற வேர்ச்சொல் ஐகார ஈறு பெற்று மலை என வழங்கப்படுவதற்கு மாறாக ஆகார ஈறு பெற்று 'மலா' என்று வழங்கப்படுகிறது.

கர்நாடகத்தில் மலை என்ற வடிவம் 'தோணிமலை' என்னும் இடப்பெயரில் ஒரே ஒரு முறை பயன்படுத்தப்படுகிறது. மலையைக் குறிக்கும் மற்றொரு சொல்லான 'மலே' 15 இடப்பெயர்களில் இடம்பெறுகிறது.

கேரள மாநிலத்தில் பத்து 'மலை' விகுதி இடப்பெயர்கள் உள்ளன. மேற்சொன்ன மலை, மலா, மலே எனப்படும் சொற்கள், தென்னிந்தியாவின் எந்த ஒரு மாநிலத்திலும் முன்னொட்டாகவோ பின்னொட்டாகவோ வருகின்றனவே அன்றி, தனிச்சொல்லாக வழங்கப்படவில்லை.

தமிழ் மொழியில் 'கோட்டை' என்ற சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது. திராவிட வேர்ச்சொல் அகராதி, கோட்டை என்ற சொல்லோடு தொடர்புடைய பல்வேறு திராவிட மொழிச் சொற்களைக் கீழ்வருமாறு பட்டியலிடுகிறது.

| தமிழ் | கோட்டை, கோடு |
|---|---|
| மலையாளம் | கோட்ட, கோடு |
| கன்னடம் | கோட்டே, கோண்டே |
| தெலுங்கு | கோட்ட |
| துளு | கோட்டே |
| தோடா | க்வாட் |

இவ்வாறு, எழுத்து வழக்குக் கொண்ட திராவிட மொழிகளில் மட்டுமல்லாமல் திராவிடப் பழங்குடி மொழிகளிலும்கூட கோட்டை என்ற சொல்லாக்கத்தின் வேர்களை இனங்காண முடிகிறது. இந்தியாவில் 'கோட்டை' என்று முடியும் 248 இடப்பெயர்களும் தமிழ்நாட்டில்தான் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சொல் செயற்கையான காப்பரண்களான கோட்டைகளைக் கட்டியெழுப்பிய நகர நாகரிகத்தின் பின்னணியில் தோன்றியது என்பதைவிட அதற்கும் தொன்மையான மலை சார்ந்த வாழ்வியல் சூழலில் உருப்பெற்றிருக்கும் என்பதுதான் உண்மையாகத் தோன்றுகிறது. ஏனெனில் 'கோடு' என்ற தமிழ்ச்சொல்லுக்கு மலையுச்சி, சிகரம், மலை என்ற பொருளோடு வல்லரண், கோட்டை என்ற பொருள்களும் உண்டு. மலையரண், காட்டரண் போன்ற இயற்கை அரண்கள், மதில் சுவர்களால் அமைந்த செயற்கையான கோட்டைகளை விடவும் தொன்மையானவை. இதைப்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 54 23-10-2018 15:36:35

**கொற்கை , வஞ்சி , தொண்டி, வளாகம்**
**(KVT COMPLEX)**




கொற்கை, வஞ்சி, தொண்டி என்னும் ஊர்ப் பெயர்கள் பழந்தமிழர்களின் அரசியல், பொருளியல், மற்றும் பண்பாட்டு உருவாக்கத்தின் விளைவாக உருவானவை. சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழ்ச் சமூகத்திற்குக் கொற்கை, வஞ்சி, தொண்டி ஆகிய பெயர்கள் ஆணிவேர் அடையாளங்கள் ஆகும். இப்பெயர்களில் ஒன்றைக்கூட வடமொழி இலக்கியங்கள் பதிவு செய்யவில்லை. சங்ககாலத் தமிழ் மன்னர்களின், குறுநிலத் தலைவர்களின் தலைநகரங்கள், துறைமுகங்கள், போர்க்களங்கள் ஆகியவற்றின் பெயர்களோடு வடமேற்குப் பகுதிகளில் உள்ள ஊர்ப்பெயர்கள் பொருந்திப் போகின்றன. கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் (KVT COMPLEX) காட்டும் பொதுத்தன்மைகள் மிக முக்கியமானவை. இவை கடந்த கால வரலாற்றிற்கான அடையாளச் சின்னங்கள்.

போலவே 'கோடை' என்னும் தமிழ்ச்சொல் 'மலை' என்னும் பொருளில் வழங்குவதையும் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும்.

திராவிடர்களின் மலைப் பெருமிதத்தின் நீட்சியாக விளங்கும் இடப்பெயர்கள் வடமேற்கு நாடுகளான பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானின் நெடுமலைகளின் பெயர்களோடு பொருந்திப் போகும் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன. இச்சான்றுகள், அப்பகுதிகளில் திராவிடர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களை உறுதி செய்வதோடு மலை இடப்பெயர் ஆய்வுகளின் இன்றைய வளர்ச்சிப்போக்கினை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

**நூல்வெளி**

இந்தியவியல் மற்றும் திராவிடவியல் ஆய்வாளரான ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப, 28 ஆண்டுகளாக, இடப்பெயராய்வில் ஈடுபட்டு வருகிறார். வடமேற்கு இந்தியாவில் இன்றுவரை வழக்கிலுள்ள 'கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகத்தை' ஆய்வுலகின் கவனத்திற்குக் கொண்டுவந்தவர். தினமணி நாளிதழில் துணையாசிரியராகவும் கணையாழி இலக்கிய இதழின் ஆலோசகர் குழுவிலும் தீவிரப் பங்காற்றியிருக்கிறார். அன்புள்ள அம்மா, சிறகுக்குள் வானம் உள்ளிட்டவை இவர்தம் நூல்கள். 1984ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப்பணித் தேர்வை, முதன்முதலாக, முழுவதுமாகத் தமிழிலேயே எழுதி, முதல் முயற்சியிலேயே தேர்ச்சி பெற்றவர். தற்போது ஒடிசா மாநிலத்தில் கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் அம்மாநிலத்தின் வளர்ச்சி ஆணையராகப் பொறுப்பில் இருக்கிறார். பாடப்பகுதி 'சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்' என்னும் இவரது நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

**கற்பவை கற்றபின்...**

1. உங்கள் ஊரின் அருகிலுள்ள, உங்களுக்குத் தெரிந்த மலைகளின் பெயர்க் காரணத்தை அறிந்து வகுப்பில் பகிர்ந்துகொள்க.
2. மலை குறித்த வேறு சொற்களையும் சார்ந்த கலைச்சொற்களையும் திரட்டிப் பட்டியல் உருவாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 55 23-10-2018 15:36:36

இயல் 3

# காவடிச்சிந்து

25A41N

நுழையும்முன்

காவடி தமிழ்ப் பண்பாட்டுக்கூறுகளுள் ஒன்று. உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது. காவடி தூக்கிச் செல்வோர், அதைச் சுமையாக எண்ணாமல் பாடியவாறே செல்வதற்கு வழிநடைப் பாடல்களை இயற்றியுள்ளனர்.

## கோயில் வளம்

*சென்னி குளநகர் வாசன் – தமிழ்*
*தேறும் அண்ணாமலை தாசன் – செப்பும்*
*செகமெச்சிய மதுரக்கவி*
*யதனைப்புய வரையிற்புனை*
*தீரன்; அயில் வீரன்.*
*வன்ன மயில்முரு கேசன் – குற*
*வள்ளி பதம்பணி நேசன் – உரை*
*வரமேதரு கழுகாசல*
*பதிகோயிலின் வளம்நான்மற*
*வாதே சொல்வன் மாதே!*
*கோபுரத் துத்தங்கத் தூவி – தேவர்*
*கோபுரத் துக்கப்பால் மேவி – கண்கள்*
*கூசப்பிர காசத்தொளி*
*மாசற்று விலாசத்தொடு*
*குலவும் புவி பலவும்.*
*நூபுரத் துத்தொனி வெடிக்கும் – பத*
*நுண்ணிடை மாதர்கள் நடிக்கும் – அங்கே*
*நுழைவாரிடு முழவோசைகள்*
*திசைமாசுணம் இடியோ என*
*நோக்கும் படி தாக்கும்.*



*சந்நிதி யில்துஜஸ் தம்பம் – விண்ணில்*
*தாவி வருகின்ற கும்பம் – எனும்*
*சலராசியை வடிவார்பல*
*கொடிசூடிய முடிமீதிலே*
*தாங்கும்; உயர்ந் தோங்கும்.*
*உன்னத மாகிய இஞ்சி–பொன்னாட்டு*
*உம்பர் நகருக்கு மிஞ்சி – மிக*
*உயர்வானது பெறலால் அதில்*
*அதிசீதள புயல்சாலவும்*
*உறங்கும்; மின்னிக் கறங்கும்.*
*அருணகிரி நாவில் பழக்கம் – தரும்*
*அந்தத் திருப்புகழ் முழக்கம் –பல*
*அடியார்கணம் மொழிபோதினில்*
*அமராவதி இமையோர்செவி*
*அடைக்கும்; அண்டம் உடைக்கும்.*
*கருணை முருகனைப் போற்றித்–தங்கக்*
*காவடி தோளின்மேல் ஏற்றிக் – கொழும்*
*கனல்ஏறிய மெழுகாய்வரு*
*பவர்ஏவரும் இகமேகதி*
*காண்பார்; இன்பம் பூண்பார்.*

*–சென்னிகுளம் அண்ணாமலையார்.*

## காவடிச் சிந்து

தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசைமரபே காவடிச் சிந்து எனலாம். முருகப் பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வோர், ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர். அவர்களின் வழிநடைப்பாடல் வகைகளிலிருந்து காவடிச் சிந்து எனும் பாவடிவம் தோன்றியது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

## சொல்லும் பொருளும்

ஜகம் – உலகம்; புயம் – தோள்; வரை – மலை; வன்னம் – அழகு; கழுகாசலம் – கழுகு மலை; த்வஜஸ்தம்பம் – கொடி மரம்; சலராசி – கடலில் வாழும் மீன் முதலிய உயிர்கள்; விலாசம் – அழகு; நூபுரம் – சிலம்பு; மாசுணம் – பாம்பு; இஞ்சி – மதில்; புயல் – மேகம்; கறங்கும் – சுழலும்.

## பாடலின் பொருள்

சென்னிகுளம் என்னும் நகரில் வாழ்கின்ற அண்ணாமலைதாசன் ஆகிய நான் பாடிய உலகம் போற்றும் காவடிச்சிந்து என்னும் மதுரமான கவிமாலையைத் தன் மலைபோன்ற அகன்ற தோளில் சார்த்திக்கொள்கிறான் முருகன். அந்தக் கழுகுமலைத் தலைவன் முருகனின் கோவில் வளத்தை நான் சொல்கிறேன். கோவில் கோபுரத்தின் தங்கக் கலசம் தேவர் உலகை விட உயர்ந்து ஒளி வீசுகிறது. அவ்வொளி உலகங்கள் பலவற்றிலும் கண்கள் கூசும்படி பரவுகிறது. பெண்ணே! கடலில் வாழும் மீன், மகரம் போன்ற உருவ அமைப்புகள் கொண்ட கொடிகள் எல்லாம் சிறக்க, முருகன் கோவில் திகழ்கிறது. காவடி எடுக்கும் அடியார்கள் பாடும் திருப்புகழ் முழக்கமானது, அமராவதிப் பட்டினத்தில் உள்ள தேவர்களின் செவியைச் சென்று அடைக்கிறது. கழுகுமலை நகரின் கோட்டை உயரமானது. அதில் மேகங்கள் படிகின்றன. அவற்றிலிருந்து உருவாகும் மின்னல்கள் இருளைக் கிழிக்கின்றன. தமது நெஞ்சம் நெகிழ்ந்துருக, தங்கத்தினும் மேலான காவடியைத் தோளில் தூக்கிக் கனலில் உருகிய மெழுகென முருகனை நோக்கி வரும் பக்தர்கள் அருளைப் பெறுவார்; இன்பம் அடைவார்.

## இலக்கணக்குறிப்பு

தாவி – வினையெச்சம், மாதே – விளி

## பகுபத உறுப்பிலக்கணம்

**வருகின்ற – வா (வரு) + கின்று + அ**

| | | |
|---|---|---|
| வா | – | பகுதி, வரு எனத் திரிந்தது விகாரம் |
| கின்று | – | நிகழ்கால இடைநிலை |
| அ | – | பெயரெச்ச விகுதி |

## புணர்ச்சி விதி

**திருப்புகழ் – திரு + புகழ்**

இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்.

திருப்புகழ்

**உயர்ந்தோங்கும் – உயர்ந்து + ஓங்கும்**

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் உயர்ந்த் + ஓங்கும்.

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே உயர்ந்தோங்கும்.

### நூல்வெளி

சென்னிகுளம் அண்ணாமலையார் பாடிய காவடிச்சிந்து அருணகிரியாரின் திருப்புகழ்த் தாக்கத்தால் விளைந்த சிறந்த சந்த இலக்கியமாகும். இப்பாடலின் மெட்டு அண்ணாமலையாராலேயே அமைக்கப்பட்டதாகும். தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியதால், காவடிச் சிந்தின் தந்தை என அழைக்கப்பட்டார்; 18 வயதிலேயே ஊற்றுமலைக்குச் சென்று அங்குக் குறுநிலத்தலைவராக இருந்த இருதயாலய மருதப்பத் தேவரின் அரசவைப் புலவராகவும் இருந்தார். இவர், இந்நூல் தவிர வீரைத் தலபுராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், சங்கரன்கோவில் திரிபந்தாதி, கருவை மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

### கற்பவை கற்றபின்...

1. எந்தெந்த நாடுகளில் காவடி ஆட்டம் இன்றளவும் நிகழ்த்தப்படுகிறது, அதற்கான காரணங்களைத் திரட்டி, கலந்துரையாடல் நிகழ்த்துக
2. நீங்கள் விரும்பும் தலைப்பில் எதுகை, மோனை, சந்தநயம் கொண்ட பாடல் ஒன்றை எழுதி, காட்சிப்படுத்துக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 57 23-10-2018 15:36:36

# குறுந்தொகை

25IZ3B

**நுழையும்முன்**

அன்பும் அறனும் விளையும் திருமண வாழ்வைத் தலைவி விரும்புவதையும் இரு மனம் இணையும் திருமணத்தை உறுதிசெய்ய இரு வீட்டார் முனைவதையும் அகத்திணை இலக்கணத்தின் இலக்கியமாய் விளங்கும் குறுந்தொகை இப்பாடல்வழிக் காட்சிப்படுத்துகிறது.

*அம்ம வாழி தோழி நம்மூர்ப்*
*பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ*
*தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்*
*நன்றுநன் றென்னும் மாக்களோடு*
*இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.* * (146)

– வெள்ளிவீதியார்

*தோழி, நீ வாழி! நானறிய ஒன்று சொல்.*
*(உன் இதயம் உள்ளவன் தான்முயன்று தேடி)*
*இன்று கொடுத்த ஈடிலாப் பரிசம்*
*நன்று நன்றென நம்மூர்ப்*
*பொது அவையில் சொன்ன*
*முதுபெரும் சான்றோர்போல்*
*பிரிந்தோரைச் சேர்ப்போர் இருந்தாரோ அன்றும்.*



**திணை:** குறிஞ்சித்திணை

**துறை:** தலைவன் சான்றோரைத் தலைவியின் தமர்பால் மணம் பேசி வர விடுப்ப, தன் தமர் மறுப்பாரோ என்று அஞ்சிய தலைவியை நோக்கி, "தலைவன் வரைவை நமர் ஏற்றுக்கொண்டனர்; நீ கவலை ஒழிவாயாக" என்று தோழி கூறியது.

**துறை விளக்கம்:** தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச, சான்றோரை அனுப்புகிறான். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்துவிடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவனின்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

தரப்பைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக்கொண்டனர் என்று தேற்றுகிறாள்.

### சொல்லும் பொருளும்

சிதவல் – தலைப்பாகை, தண்டு – ஊன்றுகோல்

### பாடலின் பொருள்

(ஊர் மக்களின் அவையில் முன்பு பலமுறை தலைவனின் பரிசப் பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டன.) "தலைவி! இன்றோ தலைப்பாகை அணிந்து கையில் தண்டுடன் இருக்கும் முதியவர்கள் மூலமாகத்தலைவன் (போதுமென்று சொல்லத்தக்க அளவு பரிசப் பொருட்களைக் கொண்டுவந்து அவைமுன் வைத்துள்ளான்) மணம் பேசச் செய்துள்ளான். அவையில் இருந்த தலைவியின் உறவினரும் கண்டு, 'நன்று நன்று' என்று கூறி மகிழ்ந்தனர். நம்முடைய ஊரில் முன்பெல்லாம் பரிசத்தொகை போதவில்லை என்பதற்காகப் பிரித்துவிடப்பட்ட தலைவன் தலைவியரைச் (போதிய பரிசத்தொகை கிடைத்தவுடன்) சேர்த்து வைப்போர் இருந்தனர்தானே?" என்று தோழி கூறுகிறாள்.

இப்பாடல் நேரிசை ஆசிரியப்பா வகையைச் சார்ந்தது.

### இலக்கணக்குறிப்பு

பிரிந்தோர் – வினையாலணையும் பெயர்

நன்றுநன்று – அடுக்குத்தொடர்

### பகுபத உறுப்பிலக்கணம்

**பிரிந்தோர் – பிரி + த்(ந்) + த் + ஓர்**

பிரி – பகுதி

த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

### புணர்ச்சி விதி

**தண்டுடை – தண்டு + உடை**

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்

தண்ட் + உடை

உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

தண்டுடை

### நூல்வெளி

குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. அகத்திணை சார்ந்த 401 பாடல்களை உடையது. "நல்ல குறுந்தொகை" எனச் சிறப்பித்து உரைக்கப்படுவது. உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல். ஆதலால் இந்நூலே முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூலாகக் கருதப்படுகிறது. இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார். இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.

வெள்ளிவீதியார் சங்ககாலப் பெண்புலவர்களில் ஒருவர். சங்கத்தொகை நூல்களில் 13 பாடல்கள் இவரால் பாடப்பட்டவை.

### கற்பவை கற்றபின்...

திருமணங்களில் மணக்கொடை கேட்பது குற்றமே – விவாதிக்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_051-084.indd 59 23-10-2018 15:36:37

இயல் 3

# புறநானூறு

25SV4Y

நுழையும்முன்

தமிழரின் வாழ்வியல் கருவூலமான புறநானூறு, வீரத்தையும் ஈரத்தையும் மட்டும் பேசாமல், வாழ்வின் விழுமியங்களையும் பேசுகிறது. பிறர்க்கென வாழ்வதே பிறவிப்பயன் என்ற கருத்தினை விளக்கும் இப்பாடல், தனக்கென வாழா மனிதர்களைப் பற்றிப் பேசுகிறது.

*உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்*
*அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்*
*தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!*
*துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்*
*புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்*
*உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;*
*அன்ன மாட்சி அனையர் ஆகித்*
*தமக்கென முயலா நோன்தாள்*
*பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.* * (182)*

*–கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி*



*கிடைத்திருப்பதென்னவோ அரிய அமிழ்தம்!*
*அதனால் என்ன*
*தனித்துண்ணத் தகுமோ?*
*எமக்கது பெரிதில்லை*
*எவரிடத்தும் வெறுப்பில்லை*
*சோம்பல் சுயமழிக்கும்*
*உயர்ந்தோர் அஞ்சுவது அஞ்சுவர் தாமும்*
*புகழா இதோ எம் உயிர்.*
*இகழா பூமிப்பரிசும் பொருட்டில்லை.*
*எமக்குள்ளிருப்பது குறுமனம் அன்று*
*பெருமலையெனத் தமக்கென வாழாது*
*பிறர்க்கென வாழும் தகைசால் மாண்பினர்*
*உளதால் அன்றோ*
*இக்கணமும் உயிர்த்திருக்கிறது உலகம்.*

திணை : பொதுவியல் திணை

வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும் பிற பொதுவான செய்திகளையும் தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

துறை : பொருண்மொழிக்காஞ்சித் துறை

மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக்காஞ்சித் துறையாகும்.

### சொல்லும் பொருளும்

தமியர் – தனித்தவர் ; முனிதல் – வெறுத்தல் ; துஞ்சல் – சோம்பல் ; அயர்வு – சோர்வு ; மாட்சி – பெருமை ; நோன்மை – வலிமை ; தாள் – முயற்சி.

### பாடலின் பொருள்

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள், இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அஃது உயிர்க்காப்பது என்பதற்காகத் தனித்து உண்ண மாட்டார்கள்; யாரையும்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 60 23-10-2018 15:36:38

வெறுக்க மாட்டார்கள்; சோம்பலின்றிச் செயல்படுவார்கள்; பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள்; புகழ்வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்கள்; உலகம் முழுவதும் கிடைப்பதாயிருந்தாலும் பழிவரும் செயல்களைச் செய்யார்; எதற்கும் மனம் தளர மாட்டார்கள். இத்தகைய சிறப்புடையோர் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்பாடல் நேரிசை ஆசிரியப்பா வகையைச் சார்ந்தது.

### இலக்கணக்குறிப்பு

அம்ம – அசைநிலை; உண்டல், துஞ்சல் – தொழிற்பெயர்; முயலா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

### பகுபத உறுப்பிலக்கணம்

**துஞ்சல் – துஞ்சு + அல்**

துஞ்சு – பகுதி, அல் – தொழிற்பெயர் விகுதி

**முனிவிலர் – முனி + வ் + இல் + அர்**

முனி – பகுதி, வ் – உடம்படுமெய், சந்தி

இல் – எதிர்மறை இடைநிலை

அர் – பலர்பால் வினைமுற்று விகுதி

### புணர்ச்சி விதி

**இயைவதாயினும் – இயைவது + ஆயினும்**

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்.

உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

**புகழெனின் – புகழ் + எனின்**

உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

பேராசிரியர் ஜார்ஜ் எல். ஹார்ட் (GEORGE L. HART) என்பவரால் புறநானூறு The Four Hundred Songs of War and Wisdom: An Anthology of Poems from Classical Tamil, the Purananuru என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஜி.யு.போப் (G. U. POPE), புறநானூற்றுப்பாடல்கள் சிலவற்றை "Extracts from purananooru & Purapporul ven–bamalai" என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

சுவடிகளில் எழுதப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்த புறநானூறு பிற்காலத்தில் அழிந்துபோகும் நிலையில் இருந்த பல சுவடிகளை ஒப்பிட்டு ஆய்ந்து தற்காலத் தமிழரும் பயன்பெறும் வகையில், உ. வே. சா. 1894 ஆம் ஆண்டு முதன் முதலாக அச்சில் பதிப்பித்து வெளியிட்டார்.

### நூல்வெளி

புறநானூறு, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது; புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படும்; அகவற்பாக்களால் ஆனது. புறநானூற்றுப் பாடல்கள் சங்ககாலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன.

**கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி:** பாண்டிய மன்னருள் பெருவழுதி என்னும் பெயரில் பலர் இருந்தனர். ஆயினும், அரிய பண்புகள் அனைத்தையும் தம் இளமைக்காலத்திலேயே பெற்றிருந்த காரணத்தால் அக்கால மக்கள், இவரை இளம்பெருவழுதி என்று அழைத்தனர். கடற்பயணம் ஒன்றில் இறந்துபோனமையால் இவர், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்று பிற்காலத்தவரால் அழைக்கப்படுகின்றார். இவரது பாடல்கள் புறநானூற்றில் ஒன்றும் பரிபாடலில் ஒன்றும் இடம் பெற்றுள்ளன.

### கற்பவை கற்றபின்...

1. உலகியல் கருத்துகளைப் பேசும் ஏதேனும் ஓர் இலக்கியப் பாடலின் நயமும் சொல்லும் பொருளும் குறித்து வகுப்பில் பேசுக.
2. உங்களுக்குத் தெரிந்த, நீங்கள் கேள்வியுற்ற "பிறர்க்கென முயலுநர்" எவரேனும் ஒருவர் குறித்த தகவல்களைத் திரட்டிக் கட்டுரை உருவாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_051-084.indd 61 23-10-2018 15:36:38

விரிவானம்

இயல் 3

# வாடிவாசல்

–சி.சு.செல்லப்பா

262R6L

**நுழையும்முன்**

ஒத்தைக்கு ஒத்தையாகக் கோதாவில் இறங்கும் மிருகத்துக்கும் மனுஷனுக்கும் நடக்கும் விவகாரத்துக்கு இரண்டிலொரு முடிவு காணும் இடம் வாடிவாசல். அந்த வாடிவாசலில் மனுஷ ரத்தம் சிந்தலாம்; காளை உடலில் ஒரு சொட்டு ரத்தம் காணக்கூடாது. எதன் கை ஓங்குதோ அதுதான் தூக்கும். மனுஷன் இதை விளையாட்டாக நினைத்தாலும் மிருகத்துக்கு அது விளையாட்டன்று. அதுதான் ஜல்லிக்கட்டு.

வாடிபுரம் காளை!

வாடிவாசலையும் தொழுவத்தையும் பிரித்து நிற்கும் ஆள் உயர வேலி அடைப்பின்மீது உட்கார்ந்து இருந்த ஒரு பையன் கத்தினான்.

"வாடிபுரம் காளை!"

"கருப்புப் பிசாசு!"

கத்திய அத்தனை குரல்களிலும் ஒரு நடுக்கம், திகில் வெடித்துப் பரவியது. வாடிவாசல் அமர்க்களப்பட்டது. சில வினாடிகளில் வாடிவாசலிலே முண்டியடித்து எக்கி நின்ற கூட்டம் போன இடம் தெரியவில்லை. காரிக்கொம்புக்கு எட்டாதபடி எப்படியெல்லாம் பாதுகாத்துக் கொள்வதென்று தவித்து அவனவன் அங்கும் இங்கும் ஓடிப் பதுங்கப் பார்த்தான். திட்டிவாசலைச் சுற்றிக் குழப்பமின்றி விஸ்தாரமாக இருந்தது. அதிலேயும் இரண்டொருத்தன்தான் துணிந்து நின்று காளை உள்ளே அவிழ்க்கப்படுவதைப் பார்த்தான்.

தொழுவத்தில் அதன் அலங்காரங்கள் கலைக்கப்பட்டு உள்வாடிக்குக் கொணரப்பட்ட காளை ஒரு தடவை முக்காரமிட்டுவிட்டு ஒரு சிறுவன்





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_051-084.indd 62 23-10-2018 15:36:38

பிடிகயிற்றுக்கு அடங்கிப் பரம சாதுவாக அடைப்புக்குள் ஆடி அசைந்து வந்தது.

"மருதா" என்று உஷார்படுத்திக் கொண்டு பிச்சி லங்கோட்டை ஒருதரம் இறுக்கிவிட்டு, வயிற்றை எக்கிக் கொடுத்து ஒரு முழு மூச்சு இழுத்தான். குனிந்து இரு கைகளையும் தரையில் தேய்த்து, பிடி வழுக்காமல் இருக்கச் சுரசுரப்பாக்கிக் கொண்டான்.

"கிழக்கத்தியான் காரியைப் பிடிக்கப் போறான்!"

"பய செத்தான்!"

"செல்லாயி வாடியிலே அவனுக்கு முடிவு போட்டிருக்கு!"

"குருத்துப் பையன், அநியாயமா...!"

"பட்டு உருமாவுக்கு ஆசைப்பட்டு உசிரை இந்தான்னு கொடுக்கிறானே பாவி!"

"ரெண்டு பவுனுத் தங்கம் கண்ணுல உறுத்துமுல்லே!"

ஆளுக்கொரு அபிப்ராயமாகக் கூட்டம் பரிமாறிக் கொண்டது.

மேடை ஆசனத்திலிருந்து முன்சாய்ந்து குறுக்குக் கம்பியின்மீது கை வைத்து ஆர்வத்துடன் பார்க்கும்போது அவர் பக்கமாகத் திரும்பிய பிச்சியின் பார்வையை ஜமீன்தார் சந்தித்து விட்டார்.

"ஹூம், பிடி!" என்று சொல்வதுபோலத் தன்னை அறியாமலேயே தலையை ஆட்டி விட்டார்.

"பார்த்தியா, காளை வரவும் கிழக்கத்தியான் பம்மிட்டான்."

"அவ்வளவுதான் பய!"

"சும்மா ஆர்ப்பாட்டக்காரனுங்க!"

தன்னைச் சுற்றி எழுந்த இந்தக் கேலி வார்த்தைகளைக் கேட்ட ஜமீன்தார்,

**கலித்தொகையில் ஏறுதழுவல்**

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே, ஆய மகள்
அஞ்சார் கொலை ஏறு கொள்பவர் அல்லதை,
நெஞ்சிலார் தோய்தற்கு அரிய உயிர்துறந்து
நைவாரா ஆய மகள் தோள்.

– கலி. 103 : 63–67

"உளறாமே பாத்துக்கிட்டிருங்க," என்று சுருக்கெனச் சொல்லி அடக்கினார். "அவன் ஒரு பிறவி! எந்த மாட்டு மேலே எப்படி விழணும்னு அவனுக்குச் சுபாவத்திலேயே ஊறிக் கிடக்கும்!" கண்டன வாய்கள் மூடிக் கொண்டன.

திட்டி வாசலில் காரி ராஜாங்கமாக நின்றது. அதன் புடைத்த பளீரிடும் கருந்திமில் நெஞ்சுயர மரக்கட்டை அடைப்புக்கு மேலாக எடுப்பாகத் துருத்திக் கொண்டு வாடிவாசலில் வந்து நின்றது.

"ராஜாளி மாதிரி வந்து நிக்குது பாரு!"

"நின்னுகுத்திக் காளைன்னா இதுதான்!"

"இதையா கிழக்கத்தியான் பிடிக்கப் போறான்!"

நின்ற காரி, வாடிவாசலில் தன் மீது கை போடும்படி சவால் விட்டமாதிரி இருந்தது. அதன் மூச்சு தரையில் பட்ட இடங்களில் மண் சிதறிப் பறந்தது. ஒருதரம் செறுக்கடித்தது. மறுபடியும் தரையை முகர்ந்து கொண்டிருந்தது.

'அப்பன் ஆசைக்கு மட்டுமன்றி உசிருக்கே உலை வைத்த காரி, அதன் கொம்பில் இன்னும் அப்பன் ரத்தம் வழிந்துகொண்டிருப்பது' போன்ற பிரமை ஏற்பட, பிச்சிக்கு நேரெதிரில் வந்து நின்றபோது அந்தக் கிழக்கத்திய வாலிபனான பிச்சி, அதன் கொம்புக்கு நேராகவும் மருதன் அதன் வால் பக்கமாகவும் அசையாமல் நின்றார்கள். பிச்சியின்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 63 23-10-2018 15:36:38

முகத்தையே சமிக்ஞைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் மருதன். காளைக்கு மேலாகப் பார்த்துப் பிச்சி மருதனுக்குச் சமிக்ஞை செய்ததுதான் தாமதம்...

"டுர்ர்ரீ!"

மருதன் குரல் வாடிவாசல் முணுமுணுப்பைக் கிழித்துக்கொண்டு எழுந்தது. கூவிக்கொண்டே முன் வந்த காளையின் வாலை ஜாடையாகத் தொட்டுவிட்டு வட்ட விளிம்போரமாகப் பின்னரித்தான். மருதன் கைபடவும் காளை அவன் மீது பாய, சடக்கெனத் திரும்பியது. அது பிச்சியை விட்டுவிட்டு ஒரு சிறு கோண அளவுக்குத் திரும்பி இருக்கும்.

சில்வண்டு மாதிரி அட்டத்திலிருந்து பாய்ந்து அதன் திமிலில் இடது கையைப் போட்டு நெஞ்சோடு நெருக்கி அணைத்துக் கழுத்தோடு தன் உடலை ஒட்டிக்கொண்டு அதன் வலக்கொம்பில் கை போட்டான் பிச்சி.

எதிர்பாராத இந்தப் பாய்ச்சல் காளைக்கு எடுத்த எடுப்பில் பிந்திவிட்ட பாதகமாகப் போய்விட்டது. ஆனாலும் அதனுடைய சுபாவமான மிருக குணம் மறுகணத்தில் சமாளிப்பைக் கொடுத்தது. முழு வேகத்துடன் கொம்பை அலைத்துப் பிச்சியைப் பின்னால் குத்தப் பார்த்தது. காளையின் தலை, கீழ்நோக்கி அழுத்தப்படவே காளை உத்தியை மாற்றி ஒரு எகிறு எகிறி நான்கு கால்களையும் உயரே தூக்கித் தவ்வியது. பிச்சியும் அதோடு உயரே போனான்.

"அட! விராலு மாதிரித் துள்ளுதுடா!"

"குதிரை கணக்கா எறியப் பாக்குது!"

"செத்தாண்டா பய ஊட்டி திருகி விழுந்து!"

"தூக்கிப் போட்டுப் பட்டையுரிச்சிடப் போகுது!"

மருதன் கத்தினான். "பிடியை உட்டிராதே, பிச்சி!"



ஆள் உயரத்துக்கு மேல் எழும்பிய காளை அந்தரத்தில் முதுகு குவிந்து தலை உள்ளடக்கிக் கால்களைத் தரையில் அடித்துக்கொண்டு கீழே இறங்கியது. பிச்சியும் பிடி விடாமல் கூடவே இறங்கி, கால்களைத் தரையில் பதித்து நிலைக்கத் துழாவினான். ஆனால், அவன் நிலைக்கு முன்பே மறுபடியும் காளை எம்பித் தவ்வி விட்டது.

"பிடியை விட்டிராதே! விட்டிராதே!" கூட்டத்திலிருந்து பதறின ஆர்ப்பரித்த கத்தல்கள்.

"ஒரு தவ்வுக்கு நின்னுட்டாண்டா!"

"இரண்டாவது தவ்வுல உருட்டிடும்!"

"கிழக்கத்தியான் கை அந்தா சளைக்குதுடா!"

"ஓ! இரண்டு தவ்வுக்கு நின்னுட்டான்!"

"வாடிபுரம் காளை பிடிபட்டுப் போச்சு!"

"பிச்சி, பிச்சி! விட்டுராதே, இந்த ஒரு தவ்வுதான்!"

"காளையும் சளைக்குதுடோய்! மூன்றாவது எம்புல உரமில்லே!"

ஒரு தவ்வு, இரண்டு தவ்வு, மூன்றாவது தவ்வுக்கும் அவன் நின்றுவிட்டான். மூன்று தடவையும் காளை அவனை உருட்டி எறிந்து கிழித்திருக்க வேண்டும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 64 23-10-2018 15:36:39

இந்த நாடகத்தின் கடைசி அங்கம் இருக்கிறது என்பது தெரிந்தும் அடக்க முடியாத களிவெறி கொண்ட கூட்டம் எம்பிஎம்பிக் குதித்துக் கத்தியது. "வாடிபுரம் காளை வாயப் பிளந்துடுச்சுடா!"

கிழக்கத்தியான் வெண்டெடுத்துட்டான்!

பிச்சி, காளையின் நெற்றித்திட்டில் கை போட்டு, கொம்புக்குக் கொம்பு மாறி மாறிச் சுற்றிக் கட்டியிருந்த உருமாப் பட்டைக்கு அடியில் கை கொடுத்து ஒரு இழு இழுத்தான். மெடல், அலங்காரச் சிறு தங்க நகைகள் கோர்த்திருந்த சங்கிலியுடன் பட்டுத்துணி அவன் கைக்குக் கொத்தோடு வந்துவிட்டது. அப்படியே வாயில் கவ்விக் கொண்டான். தரையில் பதித்த கால்களை அழுத்தித் திமிலைச் சேர்த்து, காளையை ஒரு தம் கொடுத்து எதிர்ப்பக்கமாகத் தள்ளிவிட்டு எகிறிப் பின்னால் பாய்ந்தான்.

ஆர்ப்பரித்த வாடிபுரம் கூட்டத்துக்குள் நெக்கி வரமுடியாமல் திணறி, பிச்சியைப் பார்க்கத் தவித்துக்கொண்டிருந்த கிழவன், "இந்தா மவனே" என்று உணர்ச்சிப்பெருக்கால் பிச்சியைப் பார்த்து, "உசிலனூர் அம்பிலியின் பேரைக் காப்பாத்திட்டேடா. நீ மனுசனுக்குப் பொறக்கல்லேடா, புலிக்குப் பொறந்த பய! வேறெத்தைச் சொல்றது!" என்று உருமாப்பட்டையை நீட்ட, பிச்சியின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

**(வாடிவாசல் குறும் புதினத்தின் சுருக்கப்பட்ட வடிவம்.)**

### தெரிந்து தெளிவோம்

அளவில் சிறுகதையைவிட நீளமாகவும் புதினத்தைவிடச் சிறியதாகவும் இருக்கும் கதை குறும் புதினம். இதனைக் குறுநாவல் என்றும் சொல்வர். சிறுகதைக்கும் புதினத்துக்கும் இடைப்பட்ட வடிவம் என்று கொள்ளலாம்.

### நூல்வெளி

- சி.சு. செல்லப்பா சிறுகதை, புதினம், விமர்சனம், கவிதை, மொழிபெயர்ப்பு முதலாக இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் பங்களிப்புச் செய்திருக்கிறார்.
- சந்திரோதயம், தினமணி ஆகிய இதழ்களில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்; "எழுத்து" இதழினைத் தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.
- அவருடைய குறிப்பிடத்தக்க படைப்புகள்: வாடிவாசல், சுதந்திர தாகம், ஜீவனாம்சம், பி.எஸ். ராமையாவின் சிறுகதைப்பாணி, தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது.
- இவருடைய 'சுதந்திர தாகம்' புதினத்திற்கு 2001 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது.

### கற்பவை கற்றபின்...

நீங்கள் கண்டுகளித்த ஏறு தழுவுதல் நிகழ்வின் காட்சிகளை வகுப்பில் நேர்முக வருணனை செய்து காட்டுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 65 23-10-2018 15:36:39

## பகுபத உறுப்புகள்

26BM89

தமிழ்மொழியில் சொல்லுக்கு வழங்கும் பெயர்களுள் ஒன்று பதம் என்பதாகும். இலக்கணவகையில் அமைந்த சொற்கள் நான்கனுள், பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பிரித்துப் பொருள்தரும் நிலையில் இருத்தலால் இவற்றைப் பகுபதங்கள் என்பர். இடைச்சொற்கள் உரிச்சொற்கள் பகாப்பதத்திற்குரியவை ஆகும். இவற்றுள் பெயர்ப்பகுபதச் சொற்களைக் காட்டிலும் வினைப்பகுபதச் சொற்களே வழக்கில் மிகுதியாக உள்ளன.

சொற்களைப் பொருள்நோக்கிலும் பிரித்து எழுதுவர். ஒவ்வொரு சொல்லிலும் உள்ள உறுப்புகள் எவையெவை என்ற வகையிலும் பிரித்து எழுதுவர். அவ்வாறு பிரித்து எழுதும் உறுப்புகளைப் பகுபத உறுப்புகள் என்பர். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் எனப் பொதுவாக ஆறு வகைப்படும்.

ஒரு வினைப்பகுபதத்தில் பகுதியும் விகுதியும் அடிப்படை உறுப்புகளாக உள்ளன. சில சொற்களில் பகுபத உறுப்புகள் ஒன்றோ இரண்டோ குறைந்தும் வரும். சில சொற்கள் ஆறு உறுப்புகள் பெற்றும் வரும். ஒரு பகுபதத்தில் பகுதி, விகுதி, இடைநிலை என்பவையே பொருள் தரும் உறுப்புகளாகும். பகுதி பெரும்பாலும் சொற்பொருளையும் விகுதி, இடைநிலை ஆகியன இலக்கணப் பொருண்மைகளையும் தருகின்றன. இவை மூன்றும் இணையும்போது ஏற்படும் புணர்ச்சி மாற்றங்களே சந்தி, சாரியை, விகாரம் ஆகும்.

### பகுதி

- ஒரு சொல்லின் அடிச்சொல்லே பகுதியாகும். இதை முதனிலை என்றும் கூறுவர்.
- விகுதி பெறாத ஏவல் வினையாக வரும்.
- மேலும் பகுதி விகுதி எனப் பிரிக்க இயலாததாய் இருக்கும்.
- பாடினான் என்னும் வினைமுற்றை, பாடு + இன் + ஆன் எனப் பிரிக்கலாம். இதில் ' பாடு' என்பது பகுதியாகவும் விகுதி பெறாத ஏவல் வினையாகவும் வருகிறது. இது போலவே படி, ஆடு, செய், எழுது, நட, ஓடு போன்றவை பகுதியாகவும் விகுதி பெறாத ஏவல் வினையாகவும் இருக்கின்றன.
- அறிஞர் என்னும் பெயர்ச்சொல்லை அறி + ஞ் + அர் எனப் பிரிக்கலாம். இதில் 'அறி' என்பது பகுதியாகவும் விகுதி பெறாத ஏவல் வினையாகவும் வருகிறது.
- பகுதி சில சொற்களில் ஒற்று இரட்டித்துக் காலம் காட்டும்.

### விகுதி

- ஒரு வினைமுற்றுச் சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் உறுப்பு விகுதி எனப்படும்.

  கொடுத்தான் – கொடு + த் + த் + ஆன் படித்தாள் - படி + த் + த் + ஆள்

  நடந்தது - நட + த்(ந்) + த் + அ + து
- இவற்றுள் ஆன், ஆள், து என்பவை விகுதிகளாகும். 'ஆன்' என்னும் விகுதி உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கைஇடம் என்பனவற்றையும் 'ஆள்' என்னும் விகுதி உயர்திணை,



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 66 23-10-2018 15:36:39

பெண்பால், ஒருமை, படர்க்கைஇடம் என்பனவற்றையும் 'து' என்னும் விகுதி அஃறிணை ஒன்றன்பால், படர்க்கைஇடம் என்பனவற்றையும் வெளிப்படுத்துகின்றன.

வியங்கோள், தொழிற்பெயர், பெயரெச்சம், வினையெச்சம் போன்ற பல்வேறு இலக்கணப் பொருண்மைகளை உணர்த்தவும் விகுதி பயன்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எழுதுக | – | எழுது+க | உரைத்த | – | உரை+த்+த்+அ |
| செய்தல் | – | செய்+தல் | படித்து | – | படி+த்+த்+உ |

## இடைநிலை

- பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் தோன்றும் உறுப்புக்கு இடைநிலை என்று பெயர்.
- வினைப் பகுபதத்தில் வரும் இடைநிலையைக் கால இடைநிலை, எதிர்மறை இடைநிலை என இருவகைப்படுத்துவர்.
- பெயர்ப் பகுபதத்தில் வரும் இடைநிலையைப் பெயர் இடைநிலை என்பர்.

### கால இடைநிலை

- ஒரு வினைப் பகுபதத்தில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து காலம் உணர்த்தும் உறுப்பு கால இடைநிலை அல்லது காலம் காட்டும் இடைநிலை எனப்படும்.

  செய்தான் – செய்+த்+ஆன் செய்கிறான் – செய்+கிறு+ஆன் செய்வான் – செய்+வ்+ஆன்

- இவற்றுள் த், கிறு, வ் என்பன கால இடைநிலைகளாகும். இவை முறையே இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பனவற்றை உணர்த்துகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இறந்தகால இடைநிலைகள் | – | த் | ட் | ற் | இன் |
| நிகழ்கால இடைநிலைகள் | – | கிறு | கின்று | ஆநின்று | |
| எதிர்கால இடைநிலைகள் | – | ப் | வ் | | |
| எதிர்மறை இடைநிலைகள் | – | ஆ | அல் | இல் | |

### எதிர்மறை இடைநிலை

- எதிர்மறை வினைச்சொற்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து எதிர்மறையை உணர்த்தும் இடைநிலை, எதிர்மறை இடைநிலை ஆகும்.
- ஆ என்னும் எதிர்மறை இடைநிலைக்கு அடுத்து உயிர்மெய் வரின் கெடாமல் வரும். உயிரெழுத்து வரின் தன் பொருளை நிறுவிக் கெட்டு வரும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓடாது | - | ஓடு + ஆ + து | காணலன் | - | காண் + அல் + அன் |
| பேசான் | - | பேசு + (ஆ) + ஆன் | எழுதிலன் | - | எழுது + இல் + அன் |

### பெயர் இடைநிலை

ஓர் ஆக்கப்பெயர்ச்சொல்லில் பெயர்ப்பகுதியை விகுதியோடு இணைப்பதற்கு வரும் இடைநிலை, பெயர் இடைநிலை ஆகும். ச், ஞ், ந், த், வ் ஆகிய மெய்கள் பெயர் இடைநிலைகளாக வரும்.

தமிழச்சி – தமிழ் + அ + ச் + ச் + இ; இளைஞர் – இளை + ஞ் + அர்; ஓட்டுநர் – ஓட்டு + ந் + அர்; ஒருத்தி – ஒரு + த் + த் + இ; மூவர் – மூன்று + வ் + அர்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 67 23-10-2018 15:36:39

### சந்தி

- சந்தி என்பதற்குப் புணர்ச்சி என்று பெயர்.
- பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய பகுபத உறுப்புகள் புணரும்போது இடையில் தோன்றும் உறுப்பு, சந்தி எனப்படும்.
- சந்தி, பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது பெருவழக்காகும்.
- புணர்ச்சியின்போது ஏற்படும் விகாரங்களான தோன்றல், திரிதல், கெடுதலைச் சந்தி என்றும் சொல்வர். ஓர் எழுத்துத் தோன்றுதலைச் சந்தி என்றும், மற்றைய திரிதலையும் கெடுதலையும் விகாரம் என்றும் வழங்குவர்.
- பெரும்பாலும் த், ப், க் என்னும் மூன்று எழுத்துகளுள் ஒன்று சந்தியாக வரும்.
- உடம்படுமெய்கள் (ய், வ்) சந்தியாக வருவதுண்டு.

அசைத்தான் – அசை + த் + த் + ஆன்   காப்பார் – கா + ப் + ப் + ஆர்

படிக்கிறார் – படி + க் + கிறு + ஆர்   வணங்கிய – வணங்கு + இ(ன்) + ய் + அ

பகுபத உறுப்புகளில் அடங்காமல் ஏழாவது உறுப்பாக வரும் புறத்துறுப்பு எழுத்துப்பேறு எனப்படும். சாரியை வரவேண்டிய இடத்தில் புள்ளி பெற்ற எழுத்து உயிர் ஏற இடமளித்து வந்தால் அதனை எழுத்துப்பேறு எனக் குறிப்பிடல் வேண்டும். விகுதி தனியே வராமல் துணையாகப் பெற்று வரும் எழுத்தே எழுத்துப்பேறு ஆகும். எழுத்துப்பேறு காலம் காட்டாது.

பாடுதி – பாடு + த் + இ   மொழியாதான் – மொழி + ய் + ஆ + த் + ஆன்

இச்சொற்களில் 'இ' என்னும் முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிக்கு முன்னும் 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலைக்குப் பின்னும் வரும் 'த்' என்பது எழுத்துப்பேறாகும்.

### சாரியை

- பகுதியோடு இடைநிலையும் இடைநிலையோடு விகுதியும் பொருத்தமாகச் சார்ந்து இயைய வரும் உறுப்பு, சாரியை ஆகும்.
- பெரும்பாலும் சாரியை இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.

  பார்த்தனன் – பார் + த் + த் + அன் + அன்

  இச்சொல்லில் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும் 'அன்' என்பதே சாரியையாகும்.
- சந்தி வரவேண்டிய இடத்தில் உயிர்மெய் எழுத்து வந்தால் அதனைச் சாரியை என்று குறிப்பிடல் வேண்டும்.

  தருகுவென் – தா(தரு) + கு + வ் + என்

  இச்சொல்லில் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் 'கு' என்பதே சாரியையாகும்.
- சாரியைக்குப் பொருள் இல்லை.

அன் என்பது விகுதியாக வரும்போது அன் என்பதே சாரியையாக வரும்.

ஆன், ஆள், ஆர் ஆகிய விகுதிகள் வரும்போது அன் சாரியையாக வராது.

### விகாரம்

- பகுதி விகுதி இடைநிலை ஆகியவை புணரும்போது அவற்றின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம், விகாரம் எனப்படும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 68 23-10-2018 15:36:39

- ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிந்தும் கெட்டும் நெடில் குறிலாகவும் மாற்றம் பெறும். இத்தகைய மாற்றமே விகாரம் எனப்படும்.

நின்றான் - நில்(ன்) + ற் + ஆன் - 'நில்' என்னும் பகுதியில், 'ல்' ' ன்' ஆகத் திரிந்தது. வணங்கிய - வணங்கு + இ (ன்) + ய் + அ - இ(ன்) என்னும் இடைநிலையில் னகரம் கெட்டது. கண்டான் - காண் ( கண் ) + ட் + ஆன் - காண் என்னும் பகுதி கண் எனக் குறுகியது. எழுதினோர் - எழுது + இன் + ஓர்(ஆர்) - ஆர் என்னும் விகுதி ஓர் என நின்றது.

**நினைவில் கொள்க.**

| | |
|---|---|
| இறந்தகால இடைநிலைகள் | த், ட், ற், இன் |
| நிகழ்கால இடைநிலைகள் | கிறு, கின்று, ஆநின்று |
| எதிர்கால இடைநிலைகள் | ப், வ் |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |
| தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் | என், ஏன், அல், அன் கு, டு, து, று |
| தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | எம், ஏம், அம், ஆம், ஓம், கும், டும், தும், றும் |
| முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் | ஐ, ஆய், இ |
| முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | இர், ஈர், மின் |
| படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதிகள் | அன், ஆன் |
| படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதிகள் | அள், ஆள், |
| படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதிகள் | அர், ஆர், ப, மார், கள் |
| படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள் | து, று, டு |
| படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று விகுதிகள் | அ, ஆ |
| வியங்கோள் வினைமுற்று விகுதிகள் | க, இய, இயர் |
| தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| தெரிநிலை வினையெச்ச விகுதிகள் | உ, இ, ... |

தமிழ் ஓர் ஒட்டுநிலை மொழி. ஓரெழுத்து ஒருமொழிச் சொற்கள் இருப்பினும் தமிழில் உள்ள எல்லா எழுத்துகளும் சொல்லாவதில்லை. ஒன்றுக்கும் மேற்பட்ட எழுத்துகள் சேர்ந்தே சொல்லாகின்றன. அவ்வாறு சொற்கள் புதிது புதிதாகத் தோன்றுவதற்கு ஒரு மொழியியல் நுட்ப அடிப்படை உள்ளது.

பகுதி ஒருமொழியின் அடிப்படையான வேர்ச்சொல்லாகும். புதிய சொல்லாக்கத்திற்கு வேர்ச்சொற்களின் வருகை அவற்றின் சேர்க்கை பற்றிய மொழியியல் நுட்ப அறிவு இன்றியமையாதது. இதன்மூலம் துறைதோறும் புதிய கலைச்சொற்களை உருவாக்க முடியும்.

திணை, பால், எண், இடம் உணர்த்தும் சிறப்புள்ள மொழி தமிழ்மொழி. இச்சிறப்புக்குக் காரணம் சொல்லின் விகுதி ஆகும். இவ்வாறு வேறு வேறு உறுப்புகளை இணைத்துச் சொற்களை உருவாக்க முடியும். இச்சொற்களை வேண்டும்போது பிரித்துக் கொள்ளலாம்; மறுபடியும் சேர்த்துக் கொள்ளலாம். பிரித்தாலும் சேர்த்தாலும் பொருள் மாறாது.

பகுபதத் தன்மை உள்ள மொழியைக் கற்றுக் கொள்வது எளிது. பிற மொழியினர் தமிழை எளிமையாகக் கற்றுக்கொள்ள இதுவுமொரு காரணம் ஆகும். மேலும், இப்பகுபதத் தன்மையால் எண்ணிறந்த சொற்கள் உருவாகின்றன. இது மொழியின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் இன்றியமையாதது ஆகும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 69 23-10-2018 15:36:39



உரைநடைப் பகுதியில் அமைந்துள்ள எவையேனும் பத்துச் சொற்களுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. பகுபத உறுப்புகள் எத்தனை ? அவை யாவை ?
2. காலம்காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக ?
3. பகுபதத்தில் சந்தி, சாரியை எவ்வெவ்விடங்களில் அமையும் ?
4. விகுதிகள் எவற்றை உணர்த்தும் ?
5. உறுப்பிலக்கணம் தருக.

| | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| அமைந்து | | | | | | |
| பார்த்தான் | | | | | | |
| தோன்றி | | | | | | |
| வருகிறார் | | | | | | |
| செய்க | | | | | | |
| நடந்தனன் | | | | | | |
| கொடுத்த | | | | | | |

6. பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க.

அன் – வந்தனன்　　இன் – முறிந்தது　　கு – காண்குவன்　　அன் – சென்றன

7. பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.




8. வேர்ச்சொல், எதிர்மறை இடைநிலை, விகுதி ஆகியவற்றைச் சேர்த்துச் சொற்களை உருவாக்குக.






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 70　　23-10-2018 15:36:39

## நம்மை அளப்போம்

26KI9H

**பலவுள் தெரிக.**

1. கூற்று – "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.

   விளக்கம் – கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

   அ) கூற்று சரி , விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி

   இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

2. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார் ?

   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

   | | | |
   |---|---|---|
   | 1) வெள்ளிவீதியார் | - | அ) புறநானூறு |
   | 2 ) அண்ணாமலையார் | - | ஆ) சி.சு.செல்லப்பா |
   | 3) வாடிவாசல் | - | இ) குறுந்தொகை |
   | 4) இளம்பெருவழுதி | - | ஈ) காவடிச்சிந்து |

   (i) அ ஆ இ ஈ (ii) ஆ ஈ அ இ (iii) இ ஈ ஆ அ (iv) இ ஈ அ ஆ

4. "இனிதென" – இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.

   அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

   ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

   இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே. ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

5. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?

   அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்

   ஆ) பகுதி, இடைநிலை, சாரியை இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி

### குறுவினா

1. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
2. காவடிச்சிந்து என்பது யாது ?
3. நல்ல குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?
4. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

### சிறுவினா

1. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
2. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_051-084.indd 71 23-10-2018 15:36:39

3. பகுபத உறுப்பிலக்கணம் கூறுக.

அ) வருகின்றாள் ஆ) வாழ்வான் இ) காண்பிப்பார் ஈ) பிரிந்த

4. சங்ககாலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது; இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.

5. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.

### நெடுவினா

1. இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன – கூற்றினை மெய்ப்பிக்க.
2. நடைப்பயணிகளின் வழிநடைப் பாடலாகக் காவடிச்சிந்து உள்ளது – இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.
3. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்.



சி.வை. தாமோதரனார் (1832 – 1901)

'தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன்' என்று போற்றப்படும் சி.வை. தாமோதரனார் இலங்கை, யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தமிழ்நாட்டுக்கு வருகைபுரிந்து, தம் இருபதாவது வயதிலேயே 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டு, அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தார். 1868ஆம் ஆண்டு, தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையையும் பின்னர்க் கலித்தொகை, இறையனார் அகப்பொருள், வீரசோழியம் உள்ளிட்ட பல நூல்களையும் செம்மையாகப் பதிப்பித்துப் புகழ்கொண்டார். அத்துடன் நில்லாது, கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். ஆறாம் வாசகப் புத்தகம் முதலிய பள்ளிப்பாடநூல்களையும் எழுதினார்.

அவருடைய தமிழ்ப்பணியைக் கண்ட பெர்சிவல் பாதிரியார், அவரைத் தாம் நடத்திய 'தினவர்த்தமானி' என்னும் இதழுக்கு ஆசிரியராக்கினார். அவ்வமயம் அவர் ஆங்கிலேயர் பலருக்கும் தமிழ் கற்றுத் தந்தார். அரசாங்கத்தாரால், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டார். பிறகு, பி.எல். தேர்விலும் தேர்ச்சி பெற்று, கும்பகோணத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி, 1884 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். தாமோதரனார் எந்தப் பணி ஆற்றினாலும் தமது சொந்தப் பணியாகக் கருதிக் கடமையாற்றினார்.

1. மாநிலக்கல்லூரி – புணர்ச்சி விதி கூறுக
2. ஆசிரியராக்கினார் – இதன் பகுதி அ) ஆசு ஆ) ஆசிரி இ) ஆசிரியராக்கு ஈ) ஆசி
3. சிறு சிறு தொடர்களாக மாற்றி எழுதுக.

தாமோதரனார் நீதிநெறி விளக்கம் என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டுக் கலித்தொகை, வீரசோழியம் உள்ளிட்ட நூல்களைப் பதிப்பித்துக் கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 72 23-10-2018 15:36:39

4. பெரும்புகழ் – இலக்கணக்குறிப்புத் தருக.

5. கல்லூரி, உயர்நீதிமன்றம், வரலாறு, பணி ஆகியவற்றிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.

**வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

1. குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.
2. அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.
3. கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.
4. தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.
5. சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.

**தமிழாக்கம் தருக.**

1. *Education is the most powerful weapon, which you can use to change the world.*
2. *Looking at beauty in the world is the first step of purifying the mind.*
3. *Culture does not make people. People make culture.*
4. *A people without the knowledge of their past history and culture is like a tree without roots.*
5. *A nation's culture resides in the hearts and in the soul of its people.*

**கீழ்க்காணும் செய்தியைப் படித்து அறிவிப்புப் பதாகை ஒன்றை உருவாக்குக.**

**தமிழ்ப்பண்பாட்டுக் கருத்தரங்கு**

| | |
|---|---|
| ஜனவரி – 10, மதுரை. தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும், பண்பாடு குறித்தான தேடலின் தேவை குறித்தும் சிறகுகள் சமூக அமைப்பின் சார்பாக ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. | மதுரையை மையமாகக் கொண்டு இயங்கி வரும் சமூகநல அமைப்பான சிறகுகள் சார்பில் ஒருநாள் கருத்தரங்கம் தெப்பக்குளம் அருகில், பாரதி கலைக்கூட அரங்கில் ஜனவரி 13ஆம் நாள் நடைபெற உள்ளது. இதில் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும் தொலைத்த பண்பாட்டை மீட்டெடுப்பது குறித்தும் "பண்பாடுகளால் வாழும் தமிழர்" என்னும் தலைப்பில் சமூக ஆர்வலரும் கவிஞருமான அன்பரசி பேசவிருக்கிறார். இதன் இறுதிப்பகுதியாகக் கலந்துரையாடலும் நடைபெற இருக்கிறது. விருப்பம் உள்ள சமூக ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என்று சிறகுகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான இனியன் தெரிவித்துள்ளார். |

**மொழியோடு விளையாடு**

**கட்டுரை எழுதுக.**

"பண்பாட்டைப் பாதுகாப்போம்
பகுத்தறிவு போற்றுவோம்" – என்னும் பொருள்பட ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 73 23-10-2018 15:36:40

## சித்திரகவி

தமிழ்க் கவிதைகளுள் சித்திரகவி அமைப்பும் ஒன்றாகும். சித்திரகவியில் பல வகைகள் உள்ளன. சித்திரகவி என்பது ஏதேனும் ஒரு பொருளைக் காட்சிப்படுத்திக் கவிதையினையும் அதற்குள்ளாக அமைத்து எழுதுவதாகும்.

### மாலைமாற்று

மாலைமாற்று சித்திரகவி வகைகளுள் எளிமையானது. (மாலை – பூக்களால் வரிசையாகத் தொடுத்தது.) மாலையின் தொடக்கத்தில் உள்ள இரண்டு முனைகளிருந்து கீழ்நோக்கினாலும் மாலையின் முடிபாக உள்ள ஒரு முனையிலிருந்து மேல்நோக்கிச் சென்றாலும் அம்மாலை ஒரே தன்மை உடையதாகத் தோன்றும். அதுபோல ஒரு பாடலை முதலிலிருந்து நோக்கினாலும் முடிவிலிருந்து நோக்கினாலும் அதே எழுத்துகள் அமைந்த பாடலாக மாலைமாற்று அமையும். ஆங்கிலத்தில் PALINDROME என்னும் வடிவமும் இத்தகையது என்று ஒருவாறு கூறலாம்.



எழுதிப்பழகுக.



தேரு வருதே நீ வா பாப்பா
பாப்பா வா நீ தேரு வருதே

## உடன்பட்டும் மறுத்தும் பேசுக

### ஆங்கிலேயர் வருகை (உடன்படல்)

ஆங்கிலேயர் வருகையால் இந்தியா முழுவதும் இரயில் பாதைகள் அமைக்கப்பட்டன. தொலைத்தொடர்பு வசதி அவர்களாலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. நமது நாட்டின் மிகப்பெரிய அலுவலகக் கட்டடங்கள் அவர்கள் கட்டுமானத்தால் ஆனவையே. மேலும், நமது தொழில்துறையை மேம்படுத்தியதும் அவர்களே. அவர்களின் காலம், வளர்ச்சிப் படிநிலையின் விடியற்காலம்.

### ஆங்கிலேயர் வருகை (மறுத்தல்)

ஆங்கிலேயர் இந்தியாவில் இரயில் பாதைகளைத் துறைமுகங்களோடு இணைத்து அதன் வழியாக நமது அரிய செல்வங்களையும் உற்பத்திப் பொருள்களையும் பிரிட்டனுக்குக் கொண்டு சென்றது அவர்கள் வாழ்வை மேம்படுத்திக் கொள்வதற்காகவே. தொலைத்தொடர்பு வசதிகளையும் பெரிய கட்டடங்களையும் இந்தியர்களுக்காகச் செய்து கொடுக்கவில்லை. அவர்களின் ஆட்சிமுறைத் தேவைகளுக்காகவே செய்து கொண்டனர். எனவே, ஆங்கிலேயர் நம்மை ஆட்சி செய்த காலம் நம்மை நாமே தொலைத்திருந்த இருள்காலம்.



XI Std Tamil Chap_051-084.indd 74 23-10-2018 15:36:40
athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

மேலும்,

• தொழில்நுட்பத்தால் விளைந்தது வளர்ச்சியே/ வீழ்ச்சியே,

• தற்போதைய உணவுமுறை நல்வாழ்வை வளர்க்கிறது / குறைக்கிறது.

• தமிழர்கள் பண்பாட்டைத் தக்க வைத்திருக்கிறார்கள் / தள்ளி வைத்திருக்கிறார்கள் ஆகிய தலைப்புகளில் பேசவும் எழுதவும் செய்க.

**செய்து கற்போம்**

உங்களின் பெற்றோர் அல்லது முன்னோர்களிடம் தமிழ்ப்பண்பாடு மற்றும் புழங்கு பொருள்கள் குறித்துக் கேட்டறிந்து ஒப்படைவு தயார் செய்க.

(எ-கா.) பண்பாடு – ஏறுதழுவுதல், கார்த்திகை தீபம்...

புழங்கு பொருள்கள் – தாழி, அம்மி.......



**நிற்க அதற்குத் தக**

| வேலைகள் | ஆண் | பெண் | இருவரும் | ஆண் / பெண் ஏதேனும் ஒன்றை மட்டும் தேர்வு செய்தால் அதற்கான காரணத்தை எழுதுக. |
|---|---|---|---|---|
| பூ கட்டுவது | | | | |
| கணினியில் பணி | | | | |
| காவலர் | | | | |
| சமைப்பது | | | | |
| மருத்துவம் | | | | |
| வழக்கறிஞர் | | | | |
| வீட்டின் தூய்மை | | | | |
| தொழில் முனைவோர் | | | | |

**கலைச்சொல் அறிவோம்**

இனக்குழு – Ethnic Group

புவிச்சூழல் – Earth Environment

வேர்ச்சொல் அகராதி – Etymological Dictionary

முன்னொட்டு – Prefix

பின்னொட்டு – Suffix

பண்பாட்டுக்கூறுகள் – Cultural Elements

**அறிவை விரிவு செய்**

- சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம் – ஆர். பாலகிருஷ்ணன்.
- காவடிச் சிந்து – அண்ணாமலையார்.
- வாடிவாசல் – சி.சு. செல்லப்பா.
- எழுத்து இதழ்த் தொகுப்பு – தொகுப்பாசிரியர் – கி.அ. சச்சிதானந்தன்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 75 23-10-2018 15:36:40

# இணையச் செயல்பாடு

## பகுபத உறுப்புகள்

பகுபத உறுப்புகள்
அறிவோம்!



படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி tamilvu என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்லவும்.
- பகுபத உறுப்புகள் பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றை அறிந்து கொள்க.
- விளக்கத்தின் முடிவில் 'தன் மதிப்பீடு' என்று வினாக்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றிக்கான விடைகளைக் கண்டறிந்த பின் 'விடை' என்பதைச் சொடுக்கி விடையைச் சரி பார்க்க.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :







செயல்பாட்டிற்கான உரலி
http://www.tamilvu.org/courses/degree/c021/c0212/html/c0212513.htm#q1

B123_11_TAM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே**



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 76 23-10-2018 15:36:42

# திருக்குறள்

26UEBJ



அடக்கமுடைமை

1) *நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது**

நேர்வழி மாறாது அடக்கமாய் இருப்பவனின் உயர்வு, மலையின் மாண்பைக் காட்டிலும் பெரியது.

2) *யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு**

ஒருவர் எதைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்கவேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சொல்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.

3) *தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினால் சுட்ட வடு**

தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டானாலும் உள்ளே ஆறிவிடும்; நாவினால் சுட்ட புண்ணால் உடலின் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் உள்ளே ஆறாது.

அணி : வேற்றுமை அணி



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_051-084.indd 77 23-10-2018 15:36:43

## ஒப்புரவறிதல்

4) *தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தல் பொருட்டு**

விடாமுயற்சி செய்து ஈட்டிய பொருளெல்லாம் தகுதியானவருக்கு உதவி செய்வதற்கே ஆகும்.

5) *ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும்*

உயர்ந்தாரின் உலக நடைமுறையோடு ஒத்துப் போகிறவனே உயிர் வாழ்பவன். மற்றவன் செத்தவர்களுள் ஒருவனாகவே கருதப்படுவான்.

6) *மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்*
*பெருந்தகை யான்கண் படின் **

பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்தைப் போன்றது.

***அணி : உவமை அணி***

## புகழ்

7) *ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்*
*பொன்றாது நிற்பதொன்று இல்*

இணையற்ற உயர்ந்த புகழைப்போல உலகத்தில் ஒப்பற்ற ஒன்றாக நிலைத்து நிற்பது வேறொன்றும் இல்லை.

8) *தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று**

தோன்றினால் புகழ் தரும் பண்புகளுடன் தோன்றுக! இல்லையெனில் தோன்றாமல் இருப்பதே நல்லது.

9) *வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய*
*வாழ்வாரே வாழா தவர்**

பழியில்லாமல் வாழ்பவரே வாழ்பவர்; புகழில்லாமல் வாழ்பவர் வாழாதவர்.

## தவம்

10) *வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்*
*ஈண்டு முயலப் படும்*

விரும்பியதை விரும்பியவாறே பெற முடியும் என்பதால் செய்ய முடிந்த தவத்தை இங்கேயே முயன்று பார்க்கலாம்.

11) *சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்*
*சுடச்சுட நோற்கிற் பவர்க்கு*

புடமிடச் சுடுகையில் ஒளிவிடும் பொன்போலத் தவமிருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் வளரும்.

***அணி : உவமை அணி***



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 78 23-10-2018 15:36:43

## *நிலையாமை*

12) ***நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை***
***மேற்சென்று செய்யப் படும்***

நாக்கு அடைத்து, விக்கல் வந்து, உயிர்க்கு இறுதி வரும்முன், நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும்.

13) ***நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்***
***பெருமை உடைத்துஇவ் வுலகு****

நேற்று இருந்தவன் இன்று இல்லை என்னும் நிலையாமைப் பெருமை உடையது இவ்வுலகம்!

14) ***ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப***
***கோடியும் அல்ல பல***

ஒரு பொழுதுகூட வாழ்வின் நிலையாத் தன்மையைச் சிந்திக்காதவர்கள் எண்ணும் எண்ணங்கள் கோடி அல்ல; இன்னும் மிகுதி.

## *துறவு*

15) ***யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்***
***அதனின் அதனின் இலன்****

ஒருவன், எந்தெந்தப் பொருள்களிடமிருந்து பற்று நீங்கியவனாக இருக்கின்றானோ அந்தந்தப் பொருள்களால் வரும் துன்பத்தை அவன் அடைவதில்லை.

16) ***பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்***
***பற்றுக பற்று விடற்கு****

பற்றுகளை அகற்றுவதற்காகவே பற்றில்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும்.

***அணி : சொல் பின்வரும் நிலையணி***

## *அவா அறுத்தல்*

17) ***இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்***
***துன்பத்துள் துன்பம் கெடின்***

பேராசை என்னும் பெருந்துன்பம் தொலைந்துபோனால் இன்பத்தை இடைவிடாமல் பெறலாம்.

18) ***ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே***
***பேரா இயற்கை தரும்***

ஒருக்காலும் நிறைவுசெய்ய முடியாத இயல்புடைய ஆசையை விட்டொழித்தால், நிலையான இன்பம் இயல்பாய் வரும்.

## *வலியறிதல்*

19) ***வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்***
***துணைவலியும் தூக்கிச் செயல்****

செயலின் வலிமையையும் தன் வலிமையையும் பகைவனின் வலிமையையும் துணையாளர் வலிமையையும் சீர்தூக்கிச் செயல்படுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 79 23-10-2018 15:36:43

20) *அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை*
*வியந்தான் விரைந்து கெடும்**

மற்றவருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னைப் பெரிதாக நினைப்பவன் விரைவாகக் கெடுவான்.

21) *பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்*
*சால மிகுத்துப் பெயின்*

மயிலிறகுதான் என்றாலும் அளவுக்கு மிகுதியாக ஏற்றினால், ஏற்றிய வண்டியின் அச்சும் முறியும். (எனவே வலிமைக்கேற்பச் செயல்படுக

**அணி : பிறிது மொழிதல் அணி**

22) *அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல*
*இல்லாகித் தோன்றாக் கெடும்**

தன் வருமானத்தின் அளவை அறிந்து வாழாதவனின் வாழ்க்கை, உள்ளதுபோலத் தோன்றிக் கெடும்.

### காலமறிதல்

23) *அருவினை யென்ப உளவோ கருவியான்*
*காலம் அறிந்து செயின்*

உரிய கருவிகளுடன் தக்க காலம் அறிந்து செய்தால் அரிய செயல் என்று ஒன்று இல்லை.

24) *ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*
*கருதி இடத்தால் செயின்**

உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில், ஒரு செயலைச் செய்தால் உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும்.

25) *காலம் கருதி இருப்பர் கலங்காது*
*ஞாலம் கருது பவர்*

உலகத்தை வெல்லக் கருதுபவர், கலங்காமல் உரிய காலத்துக்குக் காத்திருப்பர்.

26) *எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே*
*செய்தற்கு அரிய செயல்*

கிடைப்பதற்கு அரிய காலம் வாய்த்தால், அப்போதே முடிப்பதற்கு அரிய செயலைச் செய்து முடித்து விடுக.

| பால் | அதிகாரம் | இயல் | இயல்களின் பெயர்கள் |
|---|---|---|---|
| அறம் | 38 | 4 | பாயிரவியல் 04, இல்லறவியல் 20, துறவறவியல் 13, ஊழியல் 01 |
| பொருள் | 70 | 3 | அரசு இயல் 25, அமைச்சு இயல் 32, ஒழிபியல் 13 |
| இன்பம் | 25 | 2 | களவியல் 07, கற்பியல் 18 |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 80 23-10-2018 15:36:43

## நூல்வெளி

திருக்குறள், உலகப் பொதுமறை என்று போற்றப்படும் தமிழ் இலக்கியமாகும். இது உலக மக்கள் அனைவருக்கும், எந்தக் காலத்திற்கும் எவ்வகையிலும் பொருந்தும் வகையில் அமைந்தமையால் அவ்வாறு போற்றப்படுகிறது. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படும் வாழ்வியல் நூல்; 1330 குறள்பாக்களால் ஆனது.

உலகப்பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, முப்பால், உத்தரவேதம், தெய்வநூல் எனப் பல பெயர்களாலும் திருக்குறள் அழைக்கப்படுகிறது. இப்பாடல்கள் அனைத்தும் குறள் வெண்பா என்னும் பா வகையால் ஆனவை. பாவின் வகையைத் தன் பெயராகக்கொண்டு உயர்வு விகுதியாகத் 'திரு' என்னும் அடைமொழியுடன் திருக்குறள் என்று அழைக்கப்படுகிறது. ஏழு சீர்களில் வாழ்வியல் நெறிகளைப் பேசும் இந்நூல் உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

திருக்குறளுக்குப் பத்துப் பேருடைய உரை இருப்பதாகப் பழம்பாடல் ஒன்று கூறுகிறது. அவர்கள் பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர், பரிதி, பரிப்பெருமாள், தருமர், தாமத்தர், நச்சர், திருமலையர், மல்லர் ஆகியோர். நாளது வரையிலும் பலர் உரை எழுதும் சிறப்புப் பெற்றது இந்நூல். திருக்குறளின் சிறப்பினை விளக்கப் புலவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு நூலே திருவள்ளுவ மாலை.

தேவர், நாயனார், தெய்வப்புலவர், செந்நாப்போதர், பெருநாவலர், பொய்யில் புலவர், பொய்யாமொழிப் புலவர், மாதானுபங்கி, முதற்பாவலர் என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் திருவள்ளுவரைப் பற்றிய அறுதியான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.

## கற்பவை கற்றபின்...

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

ஆ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

2. துன்பப்படுபவர் ___________

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்

இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

*மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்*
*தலைமிசைக் கொண்ட குடையர் – நிலமிசைத்*
*துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்*
*எஞ்சினார் இவ்வுலகத் தில்.*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 81 23-10-2018 15:36:43

அ) ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.

ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

இ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

4. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

***பூக்களுக்கும் முட்களுக்கும் இடையில்***
***புழுங்குகிறது யோசனை***
***பாசத்துக்கும் நியாயத்துக்கும் நடுவில்***
***நசுங்குகிறது அறம்***
***இன்பத்துக்கும் பேராசைக்கும் நடக்கும்***
***போராட்டத்தில் வெடிக்கின்றன***
***வெளியில் குண்டுகளும்***
***வீட்டில் சண்டைகளும்....***
***ஆசை அறுத்தல் எளிதல்ல!***
***முயன்று பார்க்கலாம் வா!***

அ) அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

ஆ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

5. ஒப்புரவு என்பதன் பொருள் _________

அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

6. பொருத்துக.

| | |
|---|---|
| அ) வாழ்பவன் | i) காத்திருப்பவன் |
| ஆ) வாழாதவன் | ii) மருந்தாகும் மரமானவன் |
| இ) தோன்றுபவன் | iii) ஒத்ததறிபவன் |
| ஈ) வெல்ல நினைப்பவன் | iv) புகழ் தரும் பண்புடையவன் |
| உ) பெரும் பண்புடையவன் | v) இசையொழித்தவன் |
| | vi) வீழ்பவன் |

7. இலக்கணக் குறிப்புத் தருக.

அ) சுடச்சுடரும் ஆ) சுடச்சுடரும் பொன் இ) சுடச்சுட

8. விரைந்து கெடுபவன் யார்?

அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

ஆ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 82 23-10-2018 15:36:43

இ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

9. வேளாண்மை செய்தற் பொருட்டு – பொருள் கூறுக.

10. பற்று நீங்கியவனுக்கு உண்டாவது – பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது

அ) பற்றுகள் பெருகும் – பொருள்களின் இன்பம் பெருகும்

ஆ) பற்றுகள் அகலும் – பொருள்களின் துன்பம் அகலும்

இ) பொருள்களின் துன்பம் அகலும் – பற்றுகள் அகலும்

ஈ) பொருள்களின் இன்பம் பெருகும் – பற்றுகள் பெருகும்

11. அருவினை – புணர்ச்சி விதி கூறுக.

### குறுவினா

1. தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுவது ஏன்?
2. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்

   பெருந்தகை யான்கண் படின். - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.
3. எதற்கு முன் நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும் என்று குறள் கூறுகிறது.
4. சீர்தூக்கி ஆராயவேண்டிய ஆற்றல்கள் யாவை?
5. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

### சிறுவினா

1, தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
   நாவினாற் சுட்ட வடு. - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

2. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறைவழி நின்று கூறுக.
3. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
   மேற்சென்று செய்யப் படும். - இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.
4. சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.
   வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
   துணைவலியும் தூக்கிச் செயல்.
5. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.

### நெடுவினா

1. கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம்வழி நிறுவுக.
2. 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' – இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_051-084.indd 83 23-10-2018 15:36:43

# இணையச் செயல்பாடு

## கலைகளும் பண்பாடும்

ஓவியங்களுடன் ஒரு பயணம் !



**படிகள்:**

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி Google art and culture என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்லவும்.
- ரவி வர்மா அவர்களின் ஓவியங்கள் திரையில் தோன்றும்.
- அவற்றைச் சுட்டி கொண்டு நகர்த்த ஓவியங்கள் 360° கோணத்தில் தோன்றும். நேரில் காணும் அனுபவத்தைப் பெறுக.

**செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :**







**செயல்பாட்டிற்கான உரலி**

https://artsandculture.google.com/streetview/raja-ravi-varma-heritage-foundation-collection-gallery-view/fQFxj6YrcBDJiw?sv_lng=77.59937292692939&sv_lat=12.9757285677438&sv_h=130.35395983915996&sv_p=-9.169553531351482&sv_pid=_IDC-OrBSvDSq8auvbrVtw&sv_z=1.063906826543585

B123_11_TAM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே**



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_051-084.indd 84 23-10-2018 15:36:45

இயல் 4

# இனியொரு விதி செய்வோம்





## கற்றல் நோக்கங்கள்

- அறிவியல், தொழில்நுட்பக் கருத்துகளை மொழிவழி இலகுவாக வெளிப்படுத்துதல்
- தமிழ் இலக்கியங்கள் கூறும் அறிவியல் சிந்தனைகளைப் புதிய இலக்கிய வடிவங்களில் கையாள முனைதல்
- மருத்துவம் சார்ந்த புதிய கலைச்சொற்களை அறிந்து பயன்படுத்துதல்
- புணர்ச்சி இலக்கணத்தைப் பயில்வதன் வாயிலாகச் சொல்லின் அடிப்படைத் தன்மை அறிந்து ஏற்ற இடங்களில் பயன்படுத்தல், சொற்களைப் பொருளுணர்ந்து பிரித்துப் படித்தல்



## பாடப் பகுதி

தலைமைச்செயலகம் – சுஜாதா

விஞ்ஞானி – மீரா

நீலகேசி

புறநானூறு – உறையூர் முதுகண்ணன் சாத்தனார்

இனிக்கும் இன்சுலின்

புணர்ச்சி விதிகள்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 85 23-10-2018 15:48:12

## உரைநடை உலகம்

## இயல் 4

# தலைமைச் செயலகம்

274Q07

– சுஜாதா

### நுழையும்முன்

'எண்சாண் உடம்புக்குத் தலையே பிரதானம்' என்ற பழமொழி, தலைக்குள் இருக்கும் மூளையைத்தான் குறிப்பிடுகிறது. மனித மூளை அதிசயமானது! அதன் செயல்பாடுகள் வியப்பானவை; புதிரானவை. மருத்துவ மேதைகளும் அறிவியலாளர்களும் தொடர்ந்து ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். நமது உடலை அடக்கியும் கட்டளைகளைப் பிறப்பித்தும் இயங்கும் மூளையைத் தலைமைச் செயலகம் என்று கூறுவது பொருத்தமே.

உலகிலேயே மிகமிக ஆச்சரியம், மனித மூளை! அதனுள் பல்லாயிரம் கோடி நுட்பமான உயிரணுக்கள் – செல்கள் உள்ளன. ஒவ்வொரு செல்லையும் ஒரு மணல் துகள் அளவுக்குப் பெரிதாக்கினால், ஒரு லாரி நிரம்பும்! இந்தச் செல்களில் 10000 கோடி நியூரான்கள்; நரம்பு செல்கள் வேறு. இவற்றுக்கு இடையேயான ஓய்வில்லாத மின் இரசாயன நடனம்தான் நம் சிந்தனை! மனிதர் உயிர் வாழும்வரை இந்தச் செல்களிடையே மின் துடிப்புகள் திரிந்தபடியே இருக்கின்றன. இந்த நியூரான்களின் வலைப்பின்னலே புத்திசாலித்தனம், படைப்புணர்ச்சி, ஞாபகம், தன்னுணர்வு எனலாம்.

'உன் மூளையில் களிமண்ணா இருக்கு?' என்று திட்டுவதற்குப் பதிலாக, 'மணலா இருக்கிறது?' என்று கேட்டால் அதில் பொருள் உண்டு. மணலில் சிலிக்கன் இருக்கிறது. எதிர்காலத்தில் நம் மூளையின் பல செயல்பாடுகளைச் சிலிக்கன் சில்லுகள் மூலம் செய்யலாம்.

இன்றைய கணிப்பொறிகளுடன் ஒப்பிட்டால், மூளை ரொம்ப நிதானம்! ஆனால், கணிப்பொறியால் நீச்சலடிக்க முடியாது. உடைத்துப் பார்த்தால் ஒரு பெரிய அக்ரூட் போலிருக்கும் இந்த மூளையைக் கொண்டுதான் விவசாயம் கண்டுபிடித்தோம். சக்கரங்கள் செய்தோம்; மாட்டைப் பழக்கினோம்; காட்டை வெட்டினோம்; வியாதிகளை வென்றோம்; சந்திரனுக்குச் சென்றோம்.

### மூளையின் அமைப்பு



சராசரி மூளை, ஒன்றரைக் கிலோ எடை இருக்கிறது. ஒரு கொரில்லாவின் மூளையைக்காட்டிலும் மனித மூளை மூன்று மடங்கு கனம். குதிரையின் மூளை நம்மில் பாதி. யானையின் மூளையை அதன் உடல்கனத்துடன் ஒப்பிட்டால், விகிதாச்சாரத்தில் நாம்தான் அதிகம் (மனிதன் 2.5%, யானை 0.2%). அதனால்தான், நம்மைப்போன்ற மனிதர்கள் பேச்சைக்கேட்டுப்பயந்துகொண்டே கால்பந்து ஆடுகிறது யானை. ஆனால், நம் மூளைக் கனம் எப்போதும் ஒரே எடையில் இருப்பதும் இல்லை. பிறந்ததில் ஆரம்பித்து, மூன்று மடங்கு அதிகமாகிறது – இளமையில். அதன் பிறகு ஆண்டுக்கு ஒரு கிராம் குறைகிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 86 23-10-2018 15:48:12

மூளை, முதுகுத்தண்டிலிருந்து முளைக்கிறது.தண்டிலிருந்துமடிப்புமடிப்பாக, முட்டைக்கோஸ் இலைகள் வளர்வதுபோல அல்லது வெங்காயம்போல! இதை மூன்று பாகங்களாக,மேம்போக்காகப் பிரிக்கின்றனர். முன்மூளை, நடுமூளை, பின்மூளை. முன்மூளையில் மூக்கு, கண் இவற்றின் முடிவுகள் உள்ளன. பின்மூளையில் உள்ள சிறுமூளைதான் நம் உடலின் அசைவுகளையும் உணர்ச்சிகளின் வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகிறது.

மூளை ரொம்பப் பசியுள்ளது. பசி என்றால் சாம்பார் சாதம், தயிர் சாதம் போன்ற பசியல்ல! உயிர்வளிப் பசி. மூளைக்கு, ஒரு நிமிடத்துக்கு 800 மில்லி குருதி தேவைப்படுகிறது. உடம்பின் எடையில் ஐம்பதில் ஒரு பங்கே இருந்தாலும் குருதி, உயிர்வளி ஆகியவற்றின் மொத்தத் தேவையில் ஐந்தில் ஒரு பாகத்தை மூளையே அபகரித்துக் கொள்கிறது. தூங்கினாலும் விழித்தாலும் எப்போதும் 'குளுக்கோஸ், குளுக்கோஸ்' என்று அலறும் ராட்சதக் குழந்தை அது.

மூளைக்கு அத்தனை சக்தி தேவைதான். தனக்கான சக்தியைச் சேமித்து வைக்க அதற்கு இடமில்லை. அதனால், அதற்குக் குருதியோட்டம் இருந்துகொண்டே இருக்க வேண்டும். பத்து வினாடிக்குக் குருதியோட்டம் இல்லையென்றால் சொத்தென்று மயக்கம் போட்டு விழுந்து விடுவோம்; சில நிமிடம் உயிர்வளி இல்லையென்றால் எந்த ஐன்ஸ்டைனும் வெள்ளரிக்காய் ஸ்தானத்துக்கு (ஜடமாக) மாறிவிடுவார். தனிப்பட்ட மூளை கனத்துக்கும் புத்திசாலித்தனத்துக்கும் உறவில்லை. ஆனால், மூளை அளவுக்கும் உடல் அளவுக்கும் உள்ள உறவு முக்கியம்.

நம்மோடு ஒப்பிட்டால் தேனீக்களுக்கு ரொம்பச் சின்ன மூளை. பத்து மைக்ரோவாட் சக்திதான் அதற்குத் தேவைப்படுகிறது (மைக்ரோவாட் என்பது ஒரு வாட் சக்தியில் பத்து லட்சத்தில் ஒரு பாகம்). அதன் மூளை கணக்கிடும் வேகம், பத்து டெர்ராஃப்ளாப் (Terraflop). தேனீ மூளையின் குறிக்கோள், தேனைச் சுலபமாகவும் கணிசமாகவும் கொண்டுவர வேண்டியது. தேனீக்களால் பார்க்க, முகர, பறக்க, நடக்க, சமப்படுத்திக்கொள்ள முடியும். அளவில் ஒரு சில மில்லிமீட்டர்களே இருக்கும் இதன் அதிசய மூளை, உலகின் மிகச்சிறந்த இன்றைய சூப்பர் கணினியை விடவும் ஆயிரம் மடங்கு வேகம். நான் சொன்னது தேனீ! பத்து லட்சம் நியூரான்கள் கொண்ட எளிய மூளை. உங்களிடம் இருப்பது, 100 பில்லியன்! அதாவது, பத்தாயிரம் கோடி நியுரான்கள் கொண்ட மூளை.

**தெரியுமா?**

மனித மூளை சுமார் 10 வாட் சக்தியை உற்பத்தி செய்கின்றது. இது, ஒரு சிறிய அளவிலான மின் விளக்கை எரிய வைக்கப் போதுமானது. (அதனால்தான் மனித மூளை வேலை செய்வதை பல்பு எரிவதுபோலக் காட்டுகின்றார்களோ!)

- சராசரி மனித மூளையின் எடை – 1349 கிராம்.
- மிக அதிக எடையுள்ள மனித மூளை – 2049 கிராம்.

## மூளையின் இயல்பு

பிறக்கும்போதே நம் கைவசம் – மூளைக்கு எல்லா நரம்பு செல்களும் கிடைத்துவிடுகின்றன. மற்ற உறுப்புகளைப்போல் இல்லாமல் மூளை செல்கள் இறந்தபின், அவை புதுப்பிக்கப்படுவதில்லை. இருபது வயது வந்ததும் நம் மூளையின் செல்கள், தினப்படி ஆயிரக்கணக்கில் பழசாகி இறந்துபோகின்றன. ஆண்டுக்கு ஒரு கிராம் இழக்கிறோம். இருபது வயதுக்கு அப்புறம், நமக்குக் கொஞ்சம் தேய்மானம்தான்! கண்பார்வை, கேட்புத்திறன், ருசி, வாசனைத் திறமை மெல்ல மெல்லக் குறைகின்றன. அனுபவம் என்ற ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு கதை பண்ணிக்கொண்டிருக்கிறோம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 87 23-10-2018 15:48:12

**ஆரோக்கியமான மூளைக்கு..**

மனித மூளையில் 80% தண்ணீரே உள்ளது. நீர் வறட்சி மூளையைப் பாதிப்புக்கு உள்ளாக்கலாம். ஆகையால், நீர் வறட்சி ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமையாகும். தொடர்ச்சியான இடைவெளியில் தண்ணீர் பருகிக்கொண்டிருப்பது ஆரோக்கியமான மூளைச் செயல்பாடுகளுக்கு வழிவகுக்கும்.

தாமஸ் ஆல்வா எடிசன், "உங்கள் உடலின் முக்கியப் பணி, உங்கள் மூளையைத் தாங்கிச் செல்வது!" என்றார். அவர் மூளையை நன்றாக உபயோகப்படுத்தியவர். அவர் சொன்னால் சரியாகத்தான் இருக்கும்.

## ஞாபகமும் மறதியும்

ஞாபகம்! – தலைமைச் செயலகத்தின் மற்றொரு விந்தை.

ஏறக்குறைய பிறந்த சில வருஷங்களிலிருந்து ஒரு வாழ்நாள் முழுவதும் பல விஷயங்கள் நமக்கு ஞாபகம் இருக்கிறது. நம் அடையாளம், நம் ஞாபகத்தைச் சார்ந்தது. உங்கள் பெயரையும் வீட்டுக்குப் போகும் வழியையும் மறந்துவிட்டால், நீர் என்ன ஆவீர்? யோசித்துப் பாருங்கள்! மனித ஞாபகத்தை, ஒருகணிப்பொறியுடனோ,ஒருநூலகத்துடனோ சிலர் ஒப்பிடுகிறார்கள்.

## பேச்சும் மூளையும்

மொழி! அது நம் மூளையில் எங்கே புரிந்துகொள்ளப்படுகிறது என்பதைப் பற்றி 100 வருடங்களுக்குமேல் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். 1861ஆம் ஆண்டில் பியர் பால் ப்ரோக்கா (Pierre Paul Broca) என்னும் பிரெஞ்சு சர்ஜன் கண்டுபிடித்தது சரித்திரப் பிரசித்தமானது.




ஒரு நோயாளி இறந்ததும் அவன் மூளையைத் திறந்து பார்த்ததில் மூளையின் ஒருபகுதி சேதப்பட்டிருந்ததைக் கண்டறிந்தார். இறந்தவனுக்குப் 'பேசவே வராது. ஒரே ஒரு வார்த்தைதான் எல்லாவற்றிற்கும் பதிலாகச் சொல்வான். அந்த வார்த்தை, 'தான் - தான்'. அதனாலே, அவனை அவ்வாறே அழைத்தனர். இந்த மாதிரி இன்னும் எட்டுப் பேர் மூளையைத் திறந்து



பியர் பால் ப்ரோக்கா

கீழ்க்காணும் 15 வார்த்தைகளை ஒருமுறை படித்துவிட்டு, புத்தகத்தை மூடிவிட்டு, எத்தனை வார்த்தைகளை உங்களால் நினைவுபடுத்திச் சொல்ல முடிகிறது பாருங்கள்.

திருஞான சம்பந்தர் – திண்ணைப் பள்ளிக்கூடம் – குற்றியலுகரம் – அரசு நிறுவனம்

யானைக்கும் அடி சறுக்கும் – சங்க இலக்கியம் – பிறமொழிச் சொல் – பாரதியார்

போலீஸ் பட்டாளம் – இந்திர விழா – ஏறு தழுவுதல் – அரிக்கமேடு – கடற்கரை

வானவில் – குறுக்கெழுத்துப் புதிர்

சாதாரணமாக 6 அல்லது 7 நினைவு இருக்கும் – நம் எல்லோருக்கும். பத்துக்கும் மேல் என்றால், பரவாயில்லை. பதினைந்தும் என்றால், ஆ!



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 88 23-10-2018 15:48:13

பார்த்த ப்ரோக்கா, நம்முடைய பேச்சுத் திறமை, நம் மூளையின் இடது முன்பகுதிச் சுளையில் இருக்கிறது என்று கண்டுபிடித்தார். ப்ரோக்காவுக்கு அஞ்சலியாக மூளையின் இந்தப் பகுதியை, ப்ரோக்காவின் பேட்டை – 'ப்ரோக்காஸ் ஏரியா' என்கிறார்கள்.



நோம் சோம்ஸ்கி

மொழி – அதாவது இலக்கண விதியின்படி பேசுவது – மனிதனுக்கு உண்டான தனிப்பட்ட திறமை! சிம்பன்ஸி போன்ற குரங்குகளுக்கு மன்றாடிச் சொல்லிக் கொடுத்தும் இந்தத் திறமை வருவதில்லை. நோம் சோம்ஸ்கி (Noam Chomsky) என்னும் அமெரிக்க உளவியல் மொழியியலாளர், 'நாம் பிறக்கும்போதே சில 'ஆழ்ந்த அமைப்பு'களுடன் பிறக்கிறோம். இந்த ஆழ்ந்த அமைப்புகளில் இலக்கண விதிகளும் அதனை அர்த்தம் பண்ணிக்கொள்ளும் திறமையும் பொதிந்திருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்தார்.

கற்பது நம் மூளையில் மாறுதல்களை ஏற்படுத்துகிறது என்பது பரிசோதனை மூலம் கண்டறிந்த விஷயம்.நாம் தினமும் கற்கிறோம். கற்கக்கற்க மூளையின் எடை கொஞ்சம் கூடுகிறது. நியுரான்களின் இணைப்புச் சிக்கல்களும் அதிலுள்ள ப்ரொட்டீன் அளவும் அதிகமாகிறது. நியுரோ ட்ரான்ஸ்மிட்டர்களைக் கட்டுப்படுத்தும் வினையூக்கி அளவும் அதிகமாகிறது. பெப்டைட் என்னும் சங்கதியும் அதிகம் உண்டாகிறது. கற்பது, அனுபவ அறிவு ஆகியவை மூளையின்

| | |
|---|---|
| பொ.ஆ.மு. 6ஆம் நூற்றாண்டு | பித்தகோரஸ்தான் முதலில், 'மனம் என்பது மூளையில் இருக்கிறது' என்றார். |
| 1637 | டெஸ்கார்ட்டெஸ் என்னும் தத்துவ ஞானி, 'மனமும் மூளையும் வேறு' என்றார். |
| 1865 | ஆட்டோ டியட்டர்ஸ் என்னும் ஜெர்மானியர் நியூரானின் முதல் உண்மையான சித்திரத்தைப் பிரசுரித்தார். |
| 1874 | வெர்னிக் என்பவர் வார்த்தைகள் அறியப்படும் இடத்தைக் கண்டறிந்தார். |
| 1953 | நோம் சாம்ஸ்கி, 'மொழி அறிவு மூளைக்குள் பதிந்திருக்கிறது' என்று கண்டறிந்தார். |

பல பகுதிகளைப் பாதிக்கின்றன என்பது மட்டும் உத்தரவாதம்.

### இடதும் வலதும்

மூளைக்குச் செல்லும் நரம்புகளில் இட – வல மாற்றம் நிகழ்கிறது. அதாவது, வலப்பக்கச் செய்திகள் மூளையின் இடதுபாதிக்கும் இடப்பக்கச் செய்திகள் வலதுபாதிக்கும் இடம் மாறுகின்றன. நம்மில் பெரும்பாலானோர் வலது கைக்காரர்களாக இருப்பதற்குக் காரணம், நம் மூளையின் இடதுபாதியின் அதிகப்படியான செல்வாக்கினால் என்று சொல்கிறார்கள். இடது பாதிதான் பேச, எழுத, கணக்கிட, தர்க்கரீதியில் சிந்திக்க உதவுகிறது. நிறைய மார்க், பிரச்சனைகளை அலசுவது, சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் சிறப்பது இதெல்லாம் இடதுபாதி. நம் மொழியறிவு முழுவதும் இடது. இடது ஆக்கிரமிப்பு அதிகம் இருப்பவர்கள் பட்டயக் கணக்கர்கள், கணக்கு ஆசிரியர்கள், இந்திய



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 89 23-10-2018 15:48:13

ஆட்சிப்பணிக்குப்படித்தவர்கள், வருமானவரி அதிகாரிகள்.

இடதுபாதி அண்ணன் என்றால் வலதுபாதி தம்பி. ஆனால், தம்பியும் முக்கியம்தான். இந்தப் பாதியில்தான் நாம் வடிவங்களை உணர்கிறோம். வலதுபாதி சரியில்லை எனில் வீட்டுக்குப் போக வழி தெரியாமல் திண்டாடுவோம். சட்டை போட்டுக்கொள்ள முடியாமல் திணறுவோம். கவிதை எழுதுவது, படம் போடுவது, நடனம் ஆடுவது, நடிப்பது போன்ற கலை வடிவங்கள் எல்லாம் வலதுபாதியினால்தான் நடக்கிறது. நம்மில் சிலருக்கு வலது ஆக்கிரமிப்பு அதிகமாக இருக்கும். இவர்கள் நடிகர்கள், நடனக் கலைஞர்கள், சித்திரக்காரர்கள், பாடகர்கள், இசைக் கருவிகளைக் கையாள்பவர்கள் இன்ன பிறர்.

உலகின் அதிவிரைவுக் கணினி ஒரு நொடிக்கு மேற்கொள்ளும் கணக்குகளைவிட அதிகமாகவே மனிதமூளையால் மேற்கொள்ள முடியும் என்று கூறுகின்றார் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் க்வாபெனா போஹென். சமீபத்திய ஆராய்ச்சியில் மூளை பற்றிக் கிடைத்த ஆறுதலான விஷயம் உடலின் சக்தியை அதிகரிப்பதன்மூலம் மூளையின் ஆற்றலும் அதிகரிக்கும் என்பதுதான். இதைத்தான் நம்மவர்கள் 'சுவரில்லாமல் சித்திரம் இல்லை' என்று குறிப்பாகச் சொல்லியிருப்பார்கள். நாம் நம்முடைய சுவரைப் பாதுகாப்பதோடு மேல்மாடியான மூளையையும் பாதுகாப்போம்.

**இணையத்தில் காண்க**

https://www.livescience.com/29365-human-brain.html

**நூல்வெளி**

சுஜாதாவின் இயற்பெயர் ரங்கராஜன். அறிவியல், புனைகதைகள், கட்டுரைகள், நாடகங்கள், திரைப்படம் என்று இவருடைய படைப்புகளின் பரப்பு விரிவானது. கணிப்பொறியின் கதை, சிலிக்கன் சில்லுப்புரட்சி, அடுத்த நூற்றாண்டு ஆகியவை இவருடைய புகழ்பெற்ற அறிவியல் நூல்கள். அறிவியலை எளிய தமிழில் ஊடகங்களில் பரப்பியதற்காக, மத்திய அரசின் விருது பெற்றவர். இந்தியாவில் மின்னணு வாக்குப்பதிவுக் கருவியைக் கொண்டுவந்ததில் சுஜாதாவின் பங்களிப்பு மிகுதி.

**கற்பவை கற்றபின்...**

1. அறிவியல் செய்திகளைக் கூறும் உரைநடைக்கும் இயற்கைச் செய்திகளைக் கூறும் உரைநடைக்கும் உள்ள வேறுபாடுகள் குறித்துக் கலந்துரையாடுக.
2. எழுத்தாளர் சுஜாதா அவர்களின் கட்டுரை ஒன்றை வகுப்பறையில் படித்துக் காட்டுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 90 23-10-2018 15:48:13

# விஞ்ஞானி

27D6EU



## நுழையும்முன்

தமிழில் புதுக்கவிதை இயக்கம் வளர்ந்தோங்கிய காலத்தில் அவை, கவியரங்க மேடைகளிலும் அரங்கேறின. கவிஞர்களின் குரலிலேயே அதற்குரிய வீச்சோடு வெளிப்பட்ட இக்கவியரங்கக் கவிதைகளில் எதுகை, மோனை முதலான தொடைநயம், சிலேடை, அங்கதம், நகைச்சுவை போன்ற வெளிப்பாட்டு உத்திகள் கேட்போரை ஈர்த்தன. கவிஞர் மீரா படைத்த இக்கவியரங்கக் கவிதை, கவிஞர் கண்ணதாசன் தலைமையில் அரங்கேற்றப்பட்டதாகும்.

*இன்று பொழுதெல்லாம்
இலக்கியத்துக் கடல் மூழ்கிக்
களைத்தும் உடல் மெலிந்தும்
கற்பனைக்கு உளங்கொடுத்தும்
இளைத்தும் இருக்குமெனை
விஞ்ஞானியாய் மாறி
வாகைதனைச்சூட
வாவென்று இழுத்துவந்தீர்
ஈகைக் குணமுடையீர்
என் செய்வேன்....
முயல்கின்றேன்!*

*உலகை உயரத்தில்
உண்மையிலே தூக்கி வைக்கப்
பலகை கொடுத்தவன் யார்?
பகுத்தறிவை வளர்த்தவன் யார்?
காற்றை அடக்கிக்
கடல்மீதும் ஆணையிடும்
ஆற்றல் மிகுந்தவன் யார்?*



*ஆற்றில் மிகும் நீரைத்
தேக்கியளிக்கின்ற
திட்டம் அளித்தவன் யார்?
நீக்கமற எங்கும்
நிறைந்துள்ள மின்வெளிச்சம்
படைத்துக் கொடுத்தவன் யார்?
பாருலகச் செய்திகளைத்
தொகுத்தெளிதாய் அச்சாக்கும்
தொழில் கற்றுத் தந்தவன் யார்?*

*காலைச் சிற்றுண்டியினைக்
கல்கத்தாவில் முடித்து
மாலை விருந்துக்கு
மதுரை வரச் செய்தவன் யார்?
அமெரிக்க நாட்டில் ஓர்
அறிவாளி பேசுவதைக்
குமரிக் கரையிருப்போர்
செவி குளிரக் கேட்டிருக்கச்
செய்தவன் யார்? வேண்டுங்கால்
செயற்கை மழைநீரைப்
பெய்விக்க முயலும்
பெருமைக் குரியவன் யார்?* →



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 91 23-10-2018 15:48:13

*மருட்சி பெறச் செய்யும்*
*மகத்தான காட்சியுடன்*
*திரைப்படத்தை உருவாக்கித்*
*தந்தவன் யார்? விஞ்ஞானி.*
*விஞ்ஞானி பரப்பும்*
*வெளிச்சம் இல்லையென்றால்*
*அஞ்ஞான இருளை*
*அகற்ற வழியில்லை*
*இந்நாளில் காணும்*
*ஏற்றமிகு கருவியெல்லாம்*
*முன்னாளில் கிடையாது;*
*முன்னேற்றம் கிடையாது.*
*கடல்நீரில் பயிர்விளைச்சல்*
*கண்டு பெருக்கிடவும்*
*படகேறிச் சுடுகின்ற*
*பாலையிலே சென்றிடவும்*
*மாண்டவனை எழுப்பிடவும்*
*மனிதன் தனையுயர்த்தி*
*ஆண்டவனைப் போலெங்கும்*
*ஆட்சி செலுத்திடவும்*
*விஞ்ஞானம் வழிவகுக்கும்*
*வெற்றிக் கையெழுத்திட்டு*
*மெய்ஞ்ஞானப் பத்திரத்தை*
*மேதினிக்கு இயற்றி வைக்கும்.*

*– மீரா*

**நூல்வெளி**

மீ. ராசேந்திரன் என்ற இயற்பெயர் கொண்ட மீரா மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகிய இரு தளங்களிலும் பரவலாக அறியப்பட்டவர். சிவகங்கை அரசுக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். இவருடைய 'ஊசிகள்', 'கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்' போன்ற கவிதை நூல்கள் நல்ல வரவேற்பைப் பெற்றவை. இவர் அன்னம் விடு தூது, கவி ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார்.

தில்லி வானொலி நிலையம் உருது மொழியில் 'முஷைரா' என்னும் கவியரங்கத்தை முதன்முறையாக ஒலிபரப்பியது. அதுபோல் தமிழிலும் கவிதைகளை ஒலிபரப்பவேண்டுமென்ற விருப்பத்தில் 'சிட்டி'யும் (சுந்தரராஜன்) சோமுவும் (மீ.ப. சோமசுந்தரம்) 'கவியரங்கம்' என்று பெயரிட்டு ஒரு நிகழ்ச்சியை நடத்தினர். திருச்சி வானொலி நிலையம் இம்முதல் கவியரங்கத்தைத் தமிழ்ப்புத்தாண்டு நாளையொட்டி 13.04.1944 அன்று ஒலிபரப்பியது. 'எழில்' என்ற தலைப்பில் நடந்த இக்கவியரங்கமே தமிழ்நாட்டில் நடந்த முதல் கவியரங்கமாகும்.

**கற்பவை கற்றபின்...**

அறிவியல் முன்னேற்றம் வளர்ச்சியா? வீழ்ச்சியா? விவாதிக்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 92 23-10-2018 15:48:13

கவிதைப்பேழை

இயல் 4

# நீலகேசி

27IESK

**நுழையும்முன்**

தொழில் நுட்ப அறிவியல் இன்று மிகப் பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளது. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகளின் இணைச்சிந்தனைகளைத் தமிழர்தம் பண்டைய இலக்கியங்களிலேயே காணலாம். புத்தமதத் துறவியருடன் நீலகேசி வாதம் புரியும் பகுதியில் விரவியிருக்கும் அறிவியல் சிந்தனைகளை ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றான நீலகேசி விளக்குகிறது.

### தாவரங்களுக்கு உயிர் உண்டு!

*யாதினு மாழ்கும்அம் மாழ்கியும் என்றுழி*
*நீதின்னும் தோலை நெருப்பொடு கூட்டத்தின்*
*ஓதினை தேறுற நீர்க்குரைத் தாய்மற்றும்*
*சேதனை இல்லாய் திரிவு என்னை வண்ணம்.*

*(மொக்கல வாதச் சருக்கம் 364)*

### சொல்லும் பொருளும்

மாழ்கி - தொட்டால் சுருங்கி எனும் தாவரம்; மாழ்குதல் – மயங்குதல்; சேதனை – அறிவு.

### பாடலின் பொருள்

(மொக்கலனே!) நீ உண்ணும் பழத் தோலிற்கு உயிர் இல்லாததைப்போன்று தாவரங்களுக்கும் உயிரில்லை என்கிறாய். நீ உண்ணும் பழத்தோல் நெருப்பில்பட்டுச் சுருங்கினால் அது மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பாது. ஆனால், தொட்டால் சுருங்கித் தாவரம் நாம் தொடுவதை நிறுத்தினால் சற்று நேரத்தில் மீண்டும் பழைய நிலையை எய்திவிடும். எனவே, தாவரங்களுக்கும் உயிர் உண்டு. இதிலிருந்து உன் கருத்து உண்மைக்கு மாறுபட்டது என்பதை அறிந்துகொள்ள முடியும்.

*அரும்பும் மலரும் அரும்பிணி தீர்வும்*
*ஒருங்குதம் காரணத்து ஆக்கம் உணர்த்தும்*
*மரங்களும் மன்னுயிர் எய்தின என்ன*
*இரும்பொடு காந்தம் இயைவுஇல் திரிவே.*

*(மொ.வா.ச.365)*

### சொல்லும் பொருளும்

அரும்புதல் – பருத்தல்; இயைபுஇல் – பொருத்தமற்றது; ஆக்கம் – உயிருடைத்து.

### பாடலின் பொருள்

இளவேனிலில் மரங்கள் வளர்கின்றன; மலர்கின்றன; நோய்வாய்ப்பட்டுப் பிறகு மீள்கின்றன. இவ்வாறு தாவரங்கள் உயிரினப் பண்புகளைப் பெற்றுள்ளன. இதுவே என் கருத்து. ஆனால் , நீயோ "காந்தம் இரும்பைக் கவருகின்றது; அதனால், காந்தத்திற்கு உயிருண்டு" எனப் பொருந்தாத உவமையைக் கூறுகின்றாய்.

*ஒப்ப மரங்கட்கு உயிர்உண்மை யாம்இனி*
*இப்படித் தோன்றும் இருதுக்கள் சார்ந்தெனச்*
*செப்பிய வேதுத் திரிவு எனக் காட்டிய*
*வெப்பம் குளிர்அவை தாம்அவை யேயால்.*

*(மொ.வா.ச.366)*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 93 23-10-2018 15:48:13



### பாடலின் பொருள்

தாவரங்களுக்கும் உயிர் உண்டு. அவை பருவ மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றத்திற்கு உட்படுகின்றன என நான் கருத்துரைக்கின்றேன். பருவ காலங்கள் மாறுகின்றன. அதனால், பருவங்களுக்கு உயிர் உண்டோவென வினவுகிறாய். உன் கருத்துப் பொருந்தாது.

> அறிவியல் உலகில், தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்ற உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தியவர் 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜகதீச சந்திரபோஸ்.

### ஒலி, ஒளித் திசைவேகம்

*உற்றில வாய்ஒலி கொள்ளும் செவியென ஓதுகின்றாய்*
*கற்றிலை மெய்ம்மைநீ கட்புலம் தன்னோடுஓர் காலத்தினால்*
*பெற்றில நாம்அதன் பின்கொளல் தானும் பெருந்தவத்தாய்*
*மற்றிது தான்தன் பொறியுறு காறும் வரலின் அன்றே.**

*(புத்த வாதச் சருக்கம் 516)*

**சொல்லும் பொருளும்**

கற்றிலை – அறியவில்லை; பெருந்தவத்தாய் – பெரிய தவமுடையவர்.

### பாடலின் பொருள்

காதுகள் ஒலியைக் கவரும் என்கிறாய். காதுகளால் ஒலியைக் கவர இயலாது. ஒரே நேரத்தில் தோன்றுகின்ற ஒளி ஒலியை நாம் ஒரு சேரப் பெறுவதில்லை. ஒளியை முன்னரே காண்கிறோம். அதன் பின்னரே ஒலியைக் கேட்கின்றோம். எனவே, ஒலிதான் செவியை வந்தடைகின்றது. செவி ஒலியை அடைவதில்லை.

*வாய்த்துரை ஈதென வாமன்இது சொல்லும் வந்துறுமேல்*
*சேய்த்தெனக் கோடலும் சேராது ஒலிசெவிக் கண்ணதுஎனின்*
*ஈத்தன தாமல வாயினு நீசொல்லு முற்றறிவின்*
*தீத்தனைப் போலவும் தேறென்று அவனைத் தெருட்டினளே.*

*(பு.வா.ச.517)*

**சொல்லும் பொருளும்**

வாய்த்துரை – பொருத்தமான உரை; வாமன் – அருகன்; தேறு – தெளிவாக.

இப்பாடல் கட்டளைக் கலித்துறையைச் சார்ந்தது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 94 23-10-2018 15:48:13

## பாடலின் பொருள்

ஒலியானது வெளியில் இருந்து வந்து காதுகளை அடைகிறது. ஒலி உள்ளே தோன்றுவது கிடையாது. ஒலியைக் காதுகள் ஈர்ப்பது இல்லை, உணர்கின்றன. நம் புலன்கள் உணர்வுடையன. தீயின் வெப்பத்தை உடல் உணர்கின்றது. அதைப்போன்று புலனறிவின் மூலம் காதும் ஒலியை உணர்கின்றது.

17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமர் ஒளியின் திசைவேகத்தையும், பியரி கேசன்டி ஒலியின் திசைவேகத்தையும் உலகிற்கு வெளிப்படுத்தினர். ஒலியின் திசைவேகம் 331 மீ/வி. ஒளியின் திசைவேகம் $3 \times 10^8$ மீ/வி. எனவே ஒலியும் ஒளியும் ஒரே நேரத்தில் தோன்றினாலும் ஒளியே நம்மை விரைவில் வந்தடையும்.

## இலக்கணக்குறிப்பு

அரும்பும் மலரும் – எண்ணும்மை; அரும்பிணி– பண்புத்தொகை; வெப்பம் குளிர் – உம்மைத்தொகை; கொளல் – தொழிற்பெயர்.

## பகுபத உறுப்பிலக்கணம்

**காட்டிய – காட்டு + இ(ன்) + ய் + அ**

காட்டு – பகுதி

இ(ன்) – இறந்தகால இடைநிலை;னகரம் புணர்ந்து கெட்டது.

ய் – உடம்படுமெய் சந்தி, அ – பெயரெச்ச விகுதி

## புணர்ச்சி விதி

**மன்னுயிர் – மன் + உயிர்**

தனிக்குறில் முன்னொற்று உயிர்வரின் இரட்டும் – மன்ன் + உயிர்

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – மன்னுயிர்.

பெருந்தவத்தாய் – பெருமை + தவத்தாய்

ஈறு போதல் – பெரு + தவத்தாய்

இனம் மிகல் – பெரு + ந் + தவத்தாய்

பெருந்தவத்தாய்.

## நூல்வெளி

நீலகேசி என்பது ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று; விருத்தப்பாவால் ஆனது: இதற்கு நீலகேசித் தெருட்டு என்றும் பெயர் உண்டு. இது குண்டலகேசி என்னும் நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்டது. நீலகேசி என்னும் சமண சமயப் பெண், சமயத் தலைவர் பலரிடம் வாதம் செய்து, சமண நெறியை நிலைநாட்டுவதாக நூல் அமைந்துள்ளது. தமிழில் எழுதப்பட்ட முதலாவது தருக்க நூல் இது என்பர். இந்நூலில் கடவுள் வாழ்த்து உட்பட, பதினொரு பகுதிகளிலும் மொத்தமாக 894 பாடல்கள் உள்ளன. இதை எழுதியவர் யார் என அறியப்படவில்லை. இதன் உரையாசிரியர் சமய திவாகர வாமன முனிவர். இந்நூலில் உள்ள மொக்கலவாதச் சருக்கத்திலிருந்து மூன்று பாடல்களும் புத்தவாதச் சருக்கத்திலிருந்து இரண்டு பாடல்களும் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளன.

## கற்பவை கற்றபின்...

அறிவியலில் சிறந்து விளங்கும் தமிழர்களையும் அவர்களின் கண்டுபிடிப்புகளையும் திரட்டிப் படத்தொகுப்பேடு உருவாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_085-112.indd 95 23-10-2018 15:48:13

கவிதைப்பேழை

இயல் 4

# புறநானூறு

27H2GH

**நுழையும்முன்**

பழந்தமிழரின் வாழ்வியல் கருவூலமாகக் கருதப்படும் எட்டுத்தொகை நூல் புறநானூறு. பழந்தமிழரின் நாகரிகம், செல்வம், மக்களின் வாழிடங்கள், போர்நிகழ்வுகள், அரசர்கள் வரலாறு, குறுநில மன்னர்கள் வரலாறு, வானவியல், இயற்பியல் போன்ற தகவல்களைப் புலவர்கள் பலவிடங்களில் பாடியுள்ளனர். செங்கதிரோன் வீதியும் செம்மையான இயக்கமும் பற்றி வெளிப்படுத்தி உள்ளனர். வானியல் பற்றிக் கணிப்பவர்கள் அன்றே இருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கும் பாடல்.

*செஞ்ஞா யிற்றுச் செலவும்*
*அஞ்ஞா யிற்றுப் பரிப்பும்*
*பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்*
*வளி திரிதரு திசையும்*
*வறிது நிலைஇய காயமும் என்றிவை*
*சென்றுஅளந்து அறிந்தோர் போல என்றும்*
*இனைத்து என்போரும் உளரே அனைத்தும்*
*அறிவுஅறிவு ஆகாச் செறிவினை ஆகிக்*
*களிறுகவுள் அடுத்த எறிகல் போல*
*ஒளித்த துப்பினை ஆதலின் வெளிப்பட*
*யாங்ஙனம் பாடுவர் புலவர் கூம்பொடு*
*மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது*
*புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅர்*
*இடைப்புலப் பெருவழிச் சொரியும்*
*கடல்பல் தாரத்த நாடுகிழ வோயே! (30)*

*– உறையூர் முதுகண்ணன் சாத்தனார்*



திணை : பாடாண்

துறை : இயன்மொழி

பாடாண் – பாடப்படும் ஆண்மகனது சிறப்புகளைக் கூறுதல்.

இயன்மொழி – ஒரு வேந்தன் முன்சென்று அவன் தன்மையைக் கூறிப் புகழ்வது இயன்மொழித் துறையாகும்.

**சொல்லும் பொருளும்:**

செலவு – வழி; பரிப்பு – இயக்கம்; துப்பு – வலிமை; கூம்பு – பாய்மரம்; புகாஅர் – ஆற்றுமுகம்; தகாஅர் – தகுதியில்லார்; பல்தாரத்த – பல்வகைப்பட்ட பண்டம்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 96 23-10-2018 15:48:14

*செங்கதிரோன் நகர்வு சீரிய இயக்கம்*

*இயங்கும்வெளி சூழ்ந்த பால்வீதி*

*காற்றின் விசைதிசை*

*கதியற்றுத் தொங்கும் ஆகாயம்*

*என்றிவற்றை நேரில் அளந்தறிந்தோர் போல*

*வானியல் இதுவென வரையறுப்போர் உண்டே*

*அறிவானும் அறியாச் செறிவான திறன்கொண்டு*

*யானை உமிழ்கையில் வெளிவரும் பெருங்கல்*

*வாய்க்குள் மறைந்த வழுமை போல*

*நுண்ணறிவு வலிமை உடையவன் புகழை*

*வெளிப்பட எவ்விதம் பாடுவர் புலவர்*

*பாய்மரம் கழற்றாது பொதிபொருள் குறைக்காது*

*துறைமுகம் வந்த பெருமரக் கலத்துக்*

*கடல்வளம் நிறைதரும் நாடுடை யோனே*

## பாடலின் பொருள்

கடலில் கூம்புகளையும் பாய் மரங்களையும் செலுத்திப் பொருள் ஈட்டி வரும் வளமுடையவை பரதவர்களின் கலங்கள். அவை வழிநெடுகிலும் சிந்தும் பொருள்களைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடும் அளவிற்கு வளங்கொண்ட நாட்டின் தலைவன் நலங்கிள்ளி. அவன் நாட்டில் கதிரவனின் வீதியையும் அதன் இயக்கத்தையும் காற்றின் திசையையும் முடிவில்லாத வானத்தையும் நேரில் சென்று அறிந்தவர்கள்போல அவற்றின் தன்மைகளையும் கூறும் அறிஞர்கள் உள்ளனர். அவர்களால்கூட அறிந்துகொள்வதற்கு அரியவன் நலங்கிள்ளி. அவன், யானை தன் கதுப்பில் அடக்கி எறியும் கல்லைப்போலத் திறமையை ஒளித்து வைத்திருக்கும் ஆற்றல் படைத்தவன். அதனால், புலவர்கள் அவனை எங்ஙனம் பாடுவர்?

## இலக்கணக் குறிப்பு

செஞ்ஞாயிறு, பெருங்கலம், பெருவழி – பண்புத்தொகைகள்; சூழ்ந்த, புகுந்த – பெயரெச்சங்கள்; நிலைஇய – சொல்லிசை அளபெடை; தகாஅர், புகாஅர் – இசைநிறை அளபெடைகள்; எறிகல் – வினைத்தொகை.

## பகுபத உறுப்பிலக்கணம்

**சூழ்ந்த – சூழ் + த்(ந்) + த் + அ**

சூழ் – பகுதி, த் – சந்தி, ந் – ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

**அறிந்தோர் – அறி + த்(ந்) + த் + ஓர்**

அறி – பகுதி, த் –சந்தி, ந் – ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

## புணர்ச்சி விதி

என்றிவை – என்று + இவை

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் – என்ற் + இவை

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – என்றிவை.

**பெருங்கலம் – பெருமை + கலம்**

ஈறு போதல் – பெரு + கலம்

இனமிகல் – பெரு + ங் + கலம்

பெருங்கலம்.



கற்பவை கற்றபின்...

அறிவியல் செய்தி உள்ளடங்கிய மற்றொரு புறநானூற்றுப் பாடலைக் கண்டறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

விரிவானம்

இயல் 4

# இனிக்கும் இன்சுலின்

27SAU8




உலக நல நிறுவனத்தின் (WHO) 2015ஆம் ஆண்டின் அறிக்கையின்படி ஏறத்தாழ 34 இலட்சம் மக்கள் குருதிச் சர்க்கரை உயர்வினால் இறந்திருக்கின்றனர். அதிலும் குறிப்பாக, உலகில் 80% நீரிழிவு இறப்புகள் குறைந்த, நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில்தாம் நிகழ்ந்திருக்கின்றன என்பது வருத்தமளிக்கும் செய்தியாகும். மேலும், 2016இல் இருந்து 2030க்குள் இந்த எண்ணிக்கை இரு மடங்காக உயரும் என்ற அதிர்ச்சிகரமான புள்ளிவிவரத்தையும் அந்நிறுவனம் தந்துள்ளது.

### தலைமைச் சர்க்கரையகம்

வெல்லம் போட்ட கடுங்காப்பியைக்கூட இரண்டாம் முறை கேட்டுப் பருகிய வழக்கம் இருந்தது ஒரு காலம். இன்றைக்குக் காப்பியோ, தேநீரோ எதுவானாலும் கேட்கும் குரல்கள் இவைதாம். "எனக்கு அரைச் சர்க்கரை", "எனக்குச் சர்க்கரை கம்மியா", "எனக்குச் சர்க்கரையே போட வேண்டாம்", "எனக்குச் சர்க்கரையில்லாச் சர்க்கரை (Sugarfree Cube) இருந்தால் கொடுங்க". இவ்வகையில், உணவுப் பொருள்களில் சர்க்கரைப் பயன்பாடு அனைவரையும் ஆட்டிப் படைக்கிறது. உங்களுக்குத் தெரியுமா? உலகத்திலேயே இரண்டாம் வகை நீரிழிவுக் குறைபாடு என்னும் சர்க்கரை நோயின் தலைமையகமாக 5 கோடி மக்கள் தொகையுடன் இந்திய நாடு முன்னணியில் உள்ளது.

### அறிக்கை – எச்சரிக்கை

இந்தியாவில் 2010ஆம் ஆண்டில் மட்டும் 5 கோடியே 10 இலட்சமாக இருந்த நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை 2030க்குள் 8 கோடியே 70 இலட்சமாக உயரும் என்று கணித்துள்ளனர். நீரிழிவுக் குறைபாட்டை முற்றிலும் குணப்படுத்த முடியாது. ஆனால், கட்டுப்படுத்தி வைக்கலாம் என்பதே மருத்துவ உலகின் கூற்று. முறையாகக் கவனிக்கப்படாத நீரிழிவுக் குறைபாடு இதய நோய், சிறுநீரகச் செயலிழப்பு, கண் பார்வைக் குறைபாடு, நரம்பு மண்டலக் குறைபாடு போன்ற பல உடல் உறுப்புகளை முடமாக்கும் நோய்களின் பிறப்பிடமாகும்.

### நீரிழிவின் வகைகள்

- முதல் வகை: இன்சுலின்சார் நீரிழிவு நோய் (Insulin Dependent Diabetes Meli–tus)
- இரண்டாம் வகை: இன்சுலின் எதிர்ப்பு நீரிழிவு நோய் (Insulin Resistant Diabetes)
- மூன்றாவது வகை: நீரிழிவு நோயின் அறிகுறிகளுடன் காணப்படுபவர்.

### இந்தியாவில் நீரிழிவு

மருத்துவ ஆராய்ச்சிக்கான இந்திய அமைப்பும் (Indian Council of Medical Research) இந்திய நடுவண் நல அமைச்சகத்தின் நல ஆராய்ச்சிப் பிரிவும் (Department of Health Research in the Ministry of Health) 15 மாநிலங்களில் 57,000 மக்களிடம் ஆய்வு நடத்தினர். அவர்களுக்கு குளுக்கோஸ் தாங்கும் திறனறி சோதனை (Glucose Tolerance Test) நடத்தப்பட்டது. அந்த ஆய்வின் முடிவில்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 98 23-10-2018 15:48:14

நீரிழிவுக் குறைபாட்டின் தாக்கம் 7.3% எனக் கண்டறியப்பட்டுள்ளது. ஆய்வு நடத்தப்படும் வரைக்கும் அவர்களுள் பாதிப்பேருக்குத் தங்களுக்கு நீரிழிவுக் குறைபாடு இருப்பதே தெரியவில்லை!

இந்தியாவில் சராசரியாகக் கிராமப் பகுதிகளில் 5.2 விழுக்காடும் நகரப் பகுதிகளில் 11.2% விழுக்காடும் நீரிழிவுக் குறைபாடு இருக்கிறது. மூன்றாவது வகையாகக் கருதப்படும் நீரிழிவுக் குறைபாட்டின் தொடக்க நிலையில், 10.3% பேர் இருக்கின்றனர். இந்த நிலையானது, நீரிழிவிற்கான விழிப்புணர்வை நகரப் பகுதிகள் மட்டுமன்றி, கிராமப் பகுதிகளுக்கும் அளிக்கப்படவேண்டும் என்பதைக் காட்டுகிறது.

'மூன்று மாத குளுக்கோஸ் சராசரிக்கு' என்று ஒரு ஆய்வு இருக்கிறது. அதனை, HbA1c என்பர். ஹீமோகுளோபின் Hb என்பது குருதியில் உயிர்வளியை உடம்பு முழுக்க எடுத்துச் செல்லும் பகுதி; A1c என்பது குருதியில் குளுக்கோஸை ஏற்றிச் செல்லும் பகுதி. இதை வைத்து மூன்று மாத குளுக்கோஸ் சராசரியைச் சொல்லிவிடுவார்கள்.

### இன்சுலின்

இன்சுலின் என்பது நாளமில்லாச் சுரப்பி உற்பத்தி செய்யும் ஹார்மோன் ஆகும். இது கணையத்தில் காணப்படும் லாங்கர்ஹான் திட்டுகளில் இருக்கும் பீட்டா செல்களால் உற்பத்தி செய்யப்படும் புரத மூலக்கூறு. இது, கார்போஹைடிரேட்டின் (மாவுப் பொருள்) வளர்சிதை மாற்றத்துக்கு மிகவும் இன்றியமையாத புரதமாகும்.

குளுக்கோஸை உடலில் உள்ள ஒவ்வொரு செல்லுக்கும் கொண்டு சென்று, உடல் இயங்கத் தேவையான ஆற்றலை அளிப்பது இன்சுலின் ஆகும். இன்சுலின் ஹைப்போதாலமஸைக் கட்டுப்படுத்துகிறது. ஹைப்போதாலமஸ் பசியைத் தூண்டுகிறது. பசியினால் உணவு உண்பர். சாப்பிட்ட உணவு, உடலில் குளுக்கோஸாக மாற்றப்படும்.

இரவு உணவு உண்ட 12 மணி நேரம் கழித்து, வெறும் வயிற்றில் காலையில் எடுக்கும் குருதிப் பரிசோதனையில்,

- ஒரு டெசி லிட்டர் குருதிக்கு 70 முதல் 100 மில்லிகிராம் குளுக்கோஸ் இருந்தால், அது நீரிழிவுக் குறைபாடு அற்ற நிலை.
- ஒரு டெசி லிட்டர் குருதிக்கு 100 முதல் 126 மில்லிகிராம் குளுக்கோஸ் இருந்தால், அது நீரிழிவின் தொடக்க நிலை.
- ஒரு டெசி லிட்டர் குருதிக்கு 126 மில்லிகிராமுக்குமேல் குளுக்கோஸ் இருந்தால், அது முதிர்ந்த நிலை.

கல்லீரலிலும் உடல் தசைகளிலும் கிளைக்கோஜனைச் சேமிக்கச் செய்வது இன்சுலினே. அதிகப்படியான குளுக்கோஸ் கொழுப்பாகச் சேமிக்கப்படும். உடலில் குளுக்கோஸ் குறையும்போது, சேமித்த கிளைக்கோஜனை மீண்டும் குளுக்கோஸாக மாற்றுவதற்கும் சர்க்கரையின் அளவு சீராக இருப்பதற்கும் இன்சுலின் அவசியம்.

### ஆரம்பகால ஆராய்ச்சிகள்

1889இல் ஆஸ்கர் மின்கோஸ்கி (Osker Minkowski) ஜோசப் வான் மெரிங் (Joseph Von Mering) என்ற இரு ஜெர்மானிய அறிவியல்



ஆஸ்கார் மின்கோஸ்கி ஜோசப் வான் மெரிங்

அறிஞர்கள், நாய் ஒன்றின் கணையத்தை அகற்றி ஆராய்ச்சி செய்தனர்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 99 23-10-2018 15:48:14

அந்த நாய்க்குச் சர்க்கரை அதிகமாகிச் சில நாள்களில் செத்துப்போனது. இவர்களே, இந்த உலகுக்குச் சர்க்கரைக்கும் கணையத்துக்கும் உள்ள தொடர்பை முதன் முதலாக அறிவித்த அறிவியல் அறிஞர்கள் ஆவர்.

### இன்சுலின் ஹார்மோன் கண்டுபிடிப்பு

1910-இல் கணையத்தில் உள்ள லாங்கர்ஹான் திட்டுகளை ஆராயத் தொடங்கிய சர் எட்வர்டு ஆல்பர்ட் ஷார்பே சாஃபே (Sir Edward Albert Sharpey – Schafer)



சர் எட்வர்டு ஆல்பர்ட் ஷார்பே சாஃபே

என்ற அறிவியல் அறிஞர் சர்க்கரை நோயாளிகளுக்குக் கணையத்தில் ஒரு வேதிப்பொருள் குறைவதைக் கண்டறிந்து அந்த வேதிப் பொருளுக்கு இன்சுலின் என்று பெயரிட்டார்.

### மகத்தான கண்டுபிடிப்பு

1921-இல் கனடாவைச் சேர்ந்த ஃபிரெடெரிக் பாண்டிங் (Sir Frederick Grant Banting) என்பவரும், அவருடைய உதவியாளர்



சார்லஸ் பெஸ்ட் – ஃபிரெடெரிக் பாண்டிங்

சார்லஸ் பெஸ்ட் (Charles Herbert Best) என்பவரும் நாயின் கணையத்திலிருந்து இன்சுலினைப் பிரித்தெடுப்பதில் வெற்றி பெற்றனர். இந்த இன்சுலினை வைத்து, இன்னொரு சர்க்கரை நோயுள்ள நாயை எழுபது நாள்கள் பிழைக்க வைத்தனர்.

இந்த வெற்றிக்குப் பிறகு அவர்களுடன் ஜே.பி. காலிப் (James Bertram Collip) என்பவரும் ஜான் மக்லியாடு (John Macleod) என்பவரும் இணைந்தனர். இவர்கள் ஒரு குழுவாகச் செயல்பட்டுத் தூய இன்சுலினை விலங்குகளிடமிருந்து பிரித்தெடுப்பதில் வெற்றி கண்டனர். 1923இல் இவர்கள் அனைவருக்கும் நோபல் பரிசு கிடைத்தது. முதல் மரபணுப் பொறியியல் தொழில்நுட்பச் செயற்கை மனித இன்சுலின், 1978இல் பாக்டீரியாவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது.

### சர்க்கரைக் குழந்தைகள்

தற்காலத்தில் பள்ளிகளில் முதல் வகைச் சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் காண நேர்கிறது. வீட்டில் உள்ளவர்களில் யாருக்காவது இக்குறைபாடு இருந்தால், அவர்களின் மரபுரிமையர்க்கும் இந்நோய் வருவதற்கான வாய்ப்புள்ளது.

அக்குழந்தைகளின் பெற்றோர்க்குப் பள்ளியின் ஆசிரியர்கள் இதுகுறித்த விழிப்புணர்வை உருவாக்குதல் வேண்டும். மற்றவர்களைப் போலவே இயங்க விரும்பும் அக்குழந்தைகளின் நலத்தைப் பெற்றோரும் ஆசிரியரும் ஒருங்கிணைந்து கண்காணிப்பதோடு அவர்களுக்குரிய சமச்சீர் உணவு மற்றும் உடற்பயிற்சியின் இன்றியமையாமையை மருத்துவரின் உதவியுடன் வலியுறுத்த வேண்டும்.

ஃப்ரெடெரிக் பாண்டிங்கின் பிறந்த நாளான நவம்பர் 14–ஐ, உலக நல நிறுவனம், 1991 முதல் உலக நீரிழிவு நோய் நாளாகக் கடைப்பிடித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 100 23-10-2018 15:48:14

### சர்க்கரை உயர்தல் குறியீட்டு எண்கள் (Glycemic Index)

உண்டு முடித்த இரண்டு மணிநேரம் கழித்து, குருதிச் சர்க்கரையின் உயர்வை அளந்து, அதன் அடிப்படையில் உணவுகளை மூன்று நிலையுள்ளவையாக அறிவியல் உலகம் பிரிக்கிறது. குளுக்கோஸ் எனப்படும் சர்க்கரையின் ச.உ.கு. எண் 100 ஆகும். இதை வைத்து அனைத்து உணவுகளையும் குறைந்த, நடுத்தர, அதிக ச. உ. கு. எண்கள் உடையவை என்று வகைப்படுத்துகிறார்கள். பெரும்பாலான காய்கறிகளும் கீரைகளும் குறைந்த சர்க்கரைக் குறியீட்டு எண்கள் உடையவை. பழங்களில் கொய்யா, ஆப்பிள் போன்றவை குறைந்த ச.உ.கு. எண்கள் உடையவை. அதிக ச.உ.கு. எண்கள் உடைய பழங்களையும், உணவு வகைகளையும் கேட்டறிந்து அவற்றைத் தவிர்த்தல் நன்மை பயக்கும்.

தொற்றா நோய் (Non-Communicable disease) வகையில் தலையாயதாக உள்ள இந்த நீரிழிவுக் குறைபாட்டைப்பற்றிய புரிதலும், அதற்கான மருந்துகளைத் தேடுவதிலும் உருவாக்குவதிலும் உலகெங்குமே பல சிக்கல்களும் தடைகளும் வணிகப் பிடிகளும் நிறைந்திருக்கின்றன. இனிப்பு உண்பதும், பட்டை தீட்டப்பட்ட தானியங்களை அதிகமாகப் பயன்படுத்துவதும் உணவு உண்பதில் இருக்கும் ஒழுங்கின்மையும் மன அழுத்தமும் உடல் உழைப்பு இன்மையும் சர்க்கரைக் குறைபாடு விரைவில் வருவதற்கான முக்கிய காரணிகள்.

### நீரிழிவுக் குறைபாட்டுக்கான மாற்று மருத்துவம்

சித்த மருத்துவத்தில் நீரிழிவு நோய்க்கு வீட்டிலேயே செய்து உண்ணும் மருந்துகள் பரிந்துரைக்கப்படுகின்றன. சிந்தித்துப் பார்த்தால் அவையனைத்தும் குறைந்த ச.உ.கு. எண் உள்ள உணவு வகைகளாக உள்ளன என்பதை உணரலாம்.

ஆயுர்வேத மருத்துவ முறையில் இக்குறைபாட்டை மதுமேகம் என்று சொல்கிறார்கள். இம்மருத்துவ முறையில் உடற்பயிற்சிக்கும் உணவுக் கட்டுப்பாட்டுக்கும் அதிக முக்கியத்துவம் தருகிறார்கள். 30 விழுக்காட்டு நபர்களுக்கு மட்டும் ஆயுர்வேத மருந்துகள் தருகிறார்கள். ஹோமியோபதியிலும் இக்குறைபாட்டிற்கான மருந்துகள் உண்டு. அக்குபஞ்சரிலும் மருத்துவம் செய்கிறார்கள்.

எந்த மருத்துவமுறை சார்ந்த மருந்துகளை உட்கொண்டு வந்தாலும் உணவில் கவனம், சரியான உடற்பயிற்சி, உள்ளத்தையும் உடலையும் ஒருங்கே சீரமைக்கும் யோகாசனப் பயிற்சி இவை போன்ற அனைத்தும் சேர்ந்திருந்தால் மட்டுமே படிப்படியாகச் சர்க்கரை அளவைக் கட்டுக்குள் கொண்டுவர முடியும். முறையான உடற்பயிற்சியின் துணையுடன் அவரவர் உடலுக்குப் பொருந்திப்போகும் சரியான மருத்துவத்தின் துணையுடன், தேர்ந்தெடுத்த உணவுகளுடன் நீரிழிவை நாம் நிச்சயமாக வெல்ல முடியும் என்பதே மருத்துவர்களின் கூற்று.

### இனிப்பு நோய் அணுகாத இனிய சூழல்

முதல் வகை நீரிழிவு வந்தவர்களைத் தவிர, இரண்டாம் வகையினர் முறையான வாழ்க்கையின்மூலம் அதன் தாக்கத்திலிருந்து விடுபடலாம். மூன்றாம் வகையினர், உடற்பயிற்சிகளோடு மெல்லோட்டத்தையும் வழக்கமாக்கிக்கொண்டு பிடித்த விளையாட்டுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம். ஆயத்த உணவுகளை முற்றிலும் தவிர்ப்பதோடு அன்றாட உணவில் காய்கறி, கீரை வகைகள், பழங்கள் ஆகியவற்றை மிகுதியாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

நீரிழிவுக் குறைபாட்டுக்கான அறிகுறி உள்ளவர்கள் ஆண்டுக்கு ஒருமுறையாவது அதைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளைச் செய்துகொள்ளுதல் சிறப்பு. தகுந்த முறையில் நம்மைத் தற்காத்துக்கொண்டால் 'விழித்துக்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 101 23-10-2018 15:48:15

கொண்டோரெல்லாம் பிழைத்துக் கொள்வார்!' ஒவ்வொருவரும் தங்கள் வயதுக்கும், உயரத்துக்கும் ஏற்ற எடையைப் பராமரித்தல் இன்றியமையாதது. உடல் பருமனைக் குறைத்தாலே சர்க்கரை அளவு குறைவது உறுதி.

வள்ளுவர் யாகாவாராயினும் நா காக்கச் சொன்னதை நாம் உணவிலும் கடைப்பிடித்தால், சர்க்கரைப் பகைவனை வெல்லலாம். அருந்தியது அற்றதன் பின்னர் உணவைப் போற்றியுண்டால், யாக்கைக்கு மருந்தென எதுவும் வேண்டாம்.

**கற்பவை கற்றபின்...**

நீரிழிவு நோய்க்கான விழிப்புணர்வு நாடகம் ஒன்றை உருவாக்குக

## இணையச் செயல்பாடு

### மூளையோடு விளையாடு




**விளையாடுவோமா!**

படிகள்:

- ••கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி Brain Training என்னும் செயலியைப் பதிவிறக்கி நிறுவிக் கொள்க.
- செயலியின் முதல் பக்கத்தில் Quick Search Skill, Left Vs Right Brain, Memory Power, Remem–ber Power, Concentration போன்ற பல தெரிவுகள் கொடுக்கப்பட்டிருப்பதில் விரும்பியதைத் தெரிவு செய்க.
- எடுத்துக்காட்டாக Left Vs Right Brain என்னும் தெரிவில் நிறத்தின் பெயர் வெவ்வேறு நிற எழுத்துகளில் தோன்றும். அதைச் சரியாகத் தேர்வு செய்ய வேண்டும்

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :





செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.raghu.braingame

B123_11_TAM

படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_085-112.indd 102 23-10-2018 15:48:16

இனிக்கும் இலக்கணம்

இயல் 4

# புணர்ச்சி விதிகள்

27VXI5

சொற்புணர்ச்சியின்போது நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் ஏற்படும் மாற்றங்களைச் சுருங்கச் சொல்லும் வரையறைகளைப் புணர்ச்சி விதிகள் என்பர். மொழியைப் பிழையின்றிக் கையாளவும் பாடலடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் பிரித்தறியவும் மொழி ஆளுமையைப் புரிந்து கொள்ளவும் இப்புணர்ச்சி விதிகள் பயன்படுகின்றன.

## உயிரீற்றுப் புணர்ச்சி

### அ) உடம்படுமெய்ப் புணர்ச்சி

நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் உயிரெழுத்துகளாய் இருந்தால் உச்சரிப்பின்போது ஒலி உடன்பாடு இல்லாமல் இடைவெளி ஏற்படும். எனவே, உடன்படாத அவ்விரு மொழிகளையும் சேர்த்துப் புணர்க்க வரும் மெய், உடம்படுமெய் ஆகும். பதினெட்டு மெய்களுள் ய், வ் ஆகிய இரு மெய்கள் மட்டும் உடம்படுமெய்களாக வரும்.

காட்சியழகு - காட்சி + ய் + அழகு ( இகர ஈறு )

தீயணைப்பான் - தீ + ய் + அணைப்பான் ( ஈகார ஈறு )

கலையறிவு - கலை + ய் + அறிவு (ஐகார ஈறு )

மாவிலை - மா + வ் + இலை ( ஆகார ஈறு )

பூவழகு - பூ + வ் + அழகு ( ஊகார ஈறு )

சேயிழை - சே + ய் + இழை
சேவடி - சே + வ் + அடி } ஏகார ஈறு யகர, வகர உடம்படுமெய்கள் பெற்று வருகின்றன

| | |
|---|---|
| இ ஈ ஐவழி யவ்வும் ஏனை<br>உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்<br>உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்<br>( நன்னூல் – 162 ) | இ, ஈ, ஐ } – ய்<br>பிற உயிர்கள் – வ்<br>ஏ – ய், வ் |

### ஆ) குற்றியலுகரப் புணர்ச்சி

i) குற்றியலுகரச் சொற்களில் நிலைமொழியின் இறுதியில் உள்ள குற்றியலுகரம் வருமொழியின் முதலில் உள்ள உயிரெழுத்துடன் புணரும்போது, தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய், வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 103 23-10-2018 15:48:16

மாசற்றார் – மாசு + அற்றார்

மாசு(ச்+உ) + அற்றார் – 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதிப்படி 'உ' மறைந்தது.

மாச் + அற்றார் – 'உடல்மேல்உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி 'மாசற்றார்' எனப் புணர்ந்தது.

> உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் ( நன்னூல்–164 )

ii) ட், ற் என்னும் இரு மெய்களோடு ஊர்ந்துவரும் நெடில்தொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் வருமொழியோடு சேரும்போது ஒற்று இரட்டித்துப் புணரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| வீடு + தோட்டம் | – | வீட்டு + தோட்டம் | – | வீட்டுத்தோட்டம் |
| காடு + மரம் | – | காட்டு மரம் | | |
| முரடு + காளை | – | முரட்டு + காளை | – | முரட்டுக்காளை |
| பகடு + வாழ்க்கை | – | பகட்டுவாழ்க்கை | | |
| சோறு + பானை | – | சோற்று + பானை | – | சோற்றுப்பானை |
| ஆறு + நீர் | – | ஆற்றுநீர் | | |
| வயிறு + பசி | – | வயிற்று + பசி | – | வயிற்றுப்பசி |
| கயிறு + வண்டி | – | கயிற்றுவண்டி | | |

> நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள்
> டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே. (நன்னூல்–183)

### இ) முற்றியலுகரப் புணர்ச்சி

நிலைமொழியின் இறுதியில் உள்ள முற்றியலுகரமும் குற்றியலுகரத்தைப் போலவே தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய் வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.

வரவறிந்தான் – வரவு + அறிந்தான்

வரவு (வ் +உ) + அறிந்தான் – 'முற்றும் அற்று ஒரோவழி' என்னும் விதிப்படி 'உ' மறைந்தது.

வரவ் + அறிந்தான் – 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி 'வரவறிந்தான்' எனப் புணர்ந்தது.

> முற்றும் அற்று ஒரோவழி (நன்னூல்–164 )

### ஈ) இயல்பீறு, விதியீறு– புணர்ச்சி

இயல்பீறாகவோ விதியீறாகவோ வரும் நிலைமொழியின் இறுதியில் நிற்கும் உயிரெழுத்துடன், க ச த ப என்னும் வல்லின மெய்களை முதலில் கொண்ட வருமொழிச்சொல் சேரும்போது அவற்றிடையே வல்லொற்று மிகுந்து புணரும்.

> இயல்பீறு என்பது இயல்பாக நிற்கும் சொல்லின் வடிவம்
> பள்ளி + தோழன் – பள்ளித்தோழன்
> விதியீறு என்பது புணர்ந்தபின் நிற்கும் சொல்லின் வடிவம்
> நிலம்+ தலைவர் – நில + தலைவர் ( விதியீறு ) – நிலத்தலைவர்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 104 23-10-2018 15:48:16

திரைப்படம் – திரை + படம்

திரை + ப் + படம் – ' இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும் ' என்னும் விதிப்படி 'திரைப்படம்' எனப் புணர்ந்தது.

மரக்கலம் – மரம் + கலம் – மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் என்னும் விதியின்படி

மர + கலம் – இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும் 'என்னும் விதிப்படி 'மரக்கலம்' எனப் புணர்ந்தது.

**இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்**
**க ச த ப மிகும்; விதவாதன மன்னே. ( நன்னூல்–165)**

## உ) பூப்பெயர்ப் புணர்ச்சி

பூ என்னும் சொல் நிலைமொழியாய் நிற்க வருமொழியின் முதலில் வல்லின மெய்யெழுத்துகள் வரும்போது வல்லினமெய் மிகுந்து புணர்வது மட்டுமன்றி, அவற்றிற்கு இனமான மெல்லின மெய் மிகுதலும் உண்டு. எனினும், மெல்லின மெய் மிகுதலே பெருவழக்காக உள்ளது.

பூ + கொடி – பூக்கொடி, பூங்கொடி பூ + சோலை – பூச்சோலை, பூஞ்சோலை

பூ + தொட்டி – பூத்தொட்டி, பூந்தொட்டி பூ + பந்து – பூப்பந்து, பூம்பந்து

**பூப்பெயர் முன் இனமென்மையுந் தோன்றும் (நன்னூல்–200)**

## ஊ) மெய்யீற்றுப் புணர்ச்சி

நிலைமொழியீற்றின் இறுதி எழுத்து, மெய்யெழுத்தாக நிற்க வருமொழியின் முதலாக வரும் உயிரெழுத்துடனும் மெய்யெழுத்துடனும் சேரும் புணர்ச்சியை மெய்யீற்றுப் புணர்ச்சி என்பர்.

வாயொலி – வாய் + ஒலி – 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே ' என்னும் விதிப்படி 'வாயொலி' எனப் புணர்ந்தது.

**உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (நன்னூல் – 204)**

மண் + மகள் – மண்மகள் என்பதில் நிலைமொழி இறுதியும் வருமொழி முதலும் மெய்யெழுத்தாக நிற்க இயல்பாகப் புணர்ந்தது.

## எ) தனிக்குறில்முன் ஒற்று – புணர்ச்சி

நிலைமொழி தனிக்குறில் சார்ந்த மெய்யெழுத்தாக நின்று, வருமொழியின் முதல் உயிரெழுத்தாக இருப்பின் நிலைமொழி ஒற்று இரட்டிக்கும்.

கல் + அதர் – கல்லதர் – தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்

கல்ல் + அதர் – உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி கல்லதர் எனப் புணர்ந்தது.

**தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் (நன்னூல் – 205)**



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 105 23-10-2018 15:48:16

### ஏ) மகர ஈற்றுப் புணர்ச்சி

நிலைமொழிச் சொல்லின் இறுதி எழுத்தாக மகரமெய் வரும்போது, அச்சொல் மூன்று நிலைகளில் புணரும்.

- மகரமெய் கெட்டுப் புணரும்
- மகரமெய் கெட்டு இன மெல்லெழுத்துத் தோன்றிப் புணரும்.
- மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப் புணரும்.

பாடம் + வேளை - பாடவேளை - மகரமெய் கெட்டுப் புணர்ந்தது.

காலம் + கடந்தவன் - கால + கடந்தவன் - காலங்கடந்தவன்
- மகரமெய் கெட்டு இன மெல்லெழுத்து தோன்றிப் புணர்ந்தது.

பழம் + தோல் - பழ + தோல் - பழத்தோல்
- மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப் புணர்ந்தது.

> மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
> வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் (நன்னூல்–219)

### ஐ) பண்புப்பெயர்ப் புணர்ச்சி

பண்புப்பெயர்ச்சொல் நிலைமொழிச் சொல்லாக நின்று வருமொழிச்சொல்லுடன் புணரும்போது பின்வரும் மாற்றங்களை அடையும்.

1. நிலைமொழியின் இறுதியில் உள்ள மை கெட்டுப் புணரும்.

   பெருவழி - பெருமை + வழி - 'ஈறுபோதல்' விதிப்படி 'மை' விகுதி கெட்டுப் பெருவழி எனப் புணர்ந்தது.

2. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல்லின் இறுதியில் உள்ள உகரம் இகரமாகத் திரியும்.

   பெரியன் - பெருமை + அன்

   பெரு + அன் - ஈறுபோதல்

   பெரி + அன் - இடை உகரம் இய்யாதல்

   பெரி + ய் + அன் - உடம்படுமெய் 'ய்' இடையில் தோன்றும்

   பெரியன் - (ய்+அ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

3. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல்லின் முதலில் உள்ள குறில் எழுத்து நெடில் எழுத்தாய் மாறும்.

   மூதூர் - முதுமை + ஊர்

   முது + ஊர் - ஈறுபோதல்

   மூது + ஊர் - ஆதிநீடல்

   மூத் + ஊர் - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

   மூதூர் - (த்+ஊ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

4. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல்லின் முதலில் உள்ள அகரம் ஐகாரமாக மாறும்.

   பைந்தமிழ் - பசுமை + தமிழ்

   பசு + தமிழ் - ஈறுபோதல்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_085-112.indd 106 23-10-2018 15:48:16

பைசு + தமிழ் – அடி அகரம் 'ஐ' ஆதல்

பை + தமிழ் – இனையவும் 'சு' கெட்டது

பைந்தமிழ் – (ந்) இனமிகல் என்னும் விதிப்படி.

5. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல் ஒற்று இரட்டிக்கும்.

நெட்டிலை – நெடுமை + இலை

நெடு + இலை – ஈறுபோதல்

நெட்டு + இலை – தன்னொற்றிரட்டல்

நெட்ட் + இலை – உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

நெட்டிலை – (ட்+இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் தன்னொற்றிரட்டல் என்னும் விதியைப் பயன்படுத்த வேண்டும்.

வெற்றிலை – வெறுமை + இலை – வெற்று + இலை – வெற்றிலை எனப் புணர்ந்தது.

6. ஈறுபோதல் விதியின்படி மை கெட்டு நிலைமொழியின் இறுதி எழுத்து மகர மெய்யாக இருந்தால் 'முன் நின்ற மெய் திரிதல்' விதியின்படி புணரும்.

செந்தமிழ் – செம்மை + தமிழ்

செம் + தமிழ் – ஈறுபோதல்

செம் + தமிழ் – (ம்–ந்) முன் நின்ற மெய் திரிதல்

7. ஈறுபோதல் விதியின்படி மை விகுதி கெட்டு, நிலைமொழியின் இறுதி எழுத்து உயிரெழுத்தாய் இருந்து வருமொழி வல்லின மெய்யாக இருப்பின் 'இனமிகல்' விதியின்படி புணரும்.

கருங்கடல் – கருமை + கடல்

கரு + கடல் – ஈறுபோதல்

கரு + கடல் – (ங்) இனமிகல்

8. மை விகுதி கெட்டு நிற்கும் நிலைமொழியின் இறுதி எழுத்து மேற்சொன்ன எவ்விதியிலும் பொருந்தாதிருப்பின் இனையவும் என்னும் விதியைப் பயன்படுத்த வேண்டும்.

பைந்தளிர் – பசுமை + தளிர்

பசு + தளிர் – ஈறுபோதல்

பைசு + தளிர் – அடி அகரம் 'ஐ' ஆதல்

பை + தளிர் – இனையவும்

பை + தளிர் – (ந்) இனமிகல்

ஈறு போதல் இடைஉகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடிஅகரம் ஐ ஆதல்
தன்னொற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்
இனம் மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே (நன்னூல்–136)



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 107 23-10-2018 15:48:16

புணர்ச்சி விதிகள் ஏன்? இதிலிருந்து நீங்கள் பெறும் பயன்களைத் திரட்டுக.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. குற்றியலுகரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக
2. கருவிழி, பாசிலை, சிறியன், பெருங்கல் ஆகிய சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக
3. புணர்ச்சிவிதி தந்து விளக்குக :

   புலனறிவு, வில்லொடிந்தது, வழியில்லை, திரைப்படம், ஞாயிற்றுச்செலவு
4. விதி வேறுபாடறிந்து விளக்குக:

   தன்னொற்றிரட்டல் - தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.

   இனமிகல் - வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்.

**5. பொருத்துக**

| | | |
|---|---|---|
| அ) அடி அகரம் ஐ ஆதல் | - | செங்கதிர் |
| ஆ) முன் நின்ற மெய் திரிதல் | - | பெருங்கொடை |
| இ) ஆதிநீடல் | - | பைங்கூழ் |
| ஈ) இனமிகல் | - | காரிருள் |

**6. கூற்றுகளைப் படித்துக் கீழ்க்காண்பனவற்றுள் சரியானதைத் தேர்க.**

அ) நிலைமொழியில் குற்றியலுகரமாகவும் வருமொழியின் முதல் உயிரெழுத்தாகவும் அமையும்போது 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதியைப் பெறும்.

ஆ) நிலைமொழியின் ஈற்றில் இஈஐ வரும்போது வகர உடம்படுமெய் பெறும்.

இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் 'ஈறுபோதல்' என்னும் விதியே முதன்மையானதாக விளங்கும்.

ஈ) தன்னொற்றிரட்டல் என்னும் விதி பண்புப்பெயர்ப் புணர்ச்சிக்குப் பொருந்தும்.

i) அ, ஆ, இ சரி, ஈ தவறு ii) அ, இ, ஈ சரி, ஆ தவறு

iii) அ, ஆ சரி, இ, ஈ தவறு iv) அ, ஆ, ஈ சரி, இ தவறு



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

## நம்மை அளப்போம்

2826VV

**பலவுள் தெரிக.**

1. பொருந்தாத ஒன்றைச் சுட்டுக

   அ) தாமஸ் ஆல்வா எடிசன்  ஆ) ஐன்ஸ்டீன்

   இ) ஸ்டீபன் ஹாக்கிங்  ஈ) நோம் சோம்ஸ்கி

2. மீரா பற்றிய கூற்றுகளுள் தவறானதைத் தேர்க

   அ) 'விஞ்ஞானி' என்பது மீராவின் கவியரங்கக் கவிதை ஆகும்

   ஆ) அன்னம் விடு தூது இதழை நடத்தியவர்

   இ) கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் என்பது மீராவின் கவிதை நூல்

   ஈ) எழுத்து என்னும் இதழின் ஆசிரியராக விளங்கியவர்

3. 'செஞ்ஞாயிற்றுச் **<u>செலவும்</u>** அஞ்ஞாயிற்று'– இப்பாடலடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்

   அ) நிறுத்தம்  ஆ) பயணம்  இ) அழிவு  ஈ) பணம்

4. பெருங்கலம் என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகளைத் தேர்வு செய்க.

   அ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல்  ஆ) ஈறுபோதல், இனமிகல்

   இ) ஈறுபோதல், ஆதிநீடல்  ஈ) ஈறுபோதல், இனையவும்

5. WHO என்பதன் தமிழ் விரிவாக்கம்

   அ) உலக வர்த்தக மையம்  ஆ) உலக நல நிறுவனம்

   இ) உலக வணிக அமைப்பு  ஈ) உலகப் பொருளாதார மன்றம்

**குறுவினா**

1. மனிதனிடம் உள்ள தனிப்பட்ட திறமையாக நோம் சோம்ஸ்கி எதனைக் கூறுகிறார்?
2. 'களிறுகவுள் அடுத்த எறிகல் போல' உவமையைப் பொருளோடு பொருத்துக ?
3. தன்னொற்றிரட்டல் – விதியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. ஒலி, ஒளி பற்றி நீலகேசி தரும் அறிவியல் செய்தி யாது ?

**சிறுவினா**

1. இடப்பக்க மூளையில் செய்திகள் பதிவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து சுஜாதாவின் கருத்துகளை விளக்குக.
2. இன்னும் எவற்றிற்கெல்லாம் விஞ்ஞானம் வழிவகுக்குமென மீரா கூறுகிறார்?
3. "உற்றில வாய்ஒலி கொள்ளும் செவியென ஓதுகின்றாய்"– இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
4. சங்ககாலத் தமிழர்களின் வானியல் அறிவினை, முதுகண்ணனார் பாடல்வழிப் புலப்படுத்துக.
5. சான்று தந்து விளக்குக: குற்றியலுகரப் புணர்ச்சி, முற்றியலுகரப் புணர்ச்சி.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_085-112.indd 109  23-10-2018 15:48:16

### நெடுவினா

1. அறிவியல் கருத்துகளைத் தமிழ் மொழி வாயிலாக எளிதில் விளக்க இயலும் என்பதைத் 'தலைமைச் செயலகம்' என்னும் பாடம் வழி நிறுவுக.
2. அறிவியல் சிந்தனைகள் நிரம்பிய காப்பியம் நீலகேசி - இக்கருத்தினை நும் பாடப்பகுதி வாயிலாக ஆராய்க.
3. இனிக்கும் இன்சுலின் கட்டுரைச் செய்திகளை உரையாடல் வடிவில் தருக.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

'அறிவியல் தமிழர்' என்று போற்றப்படும் பெ.நா.அப்புசாமி, தமிழ்நாட்டின் நெல்லை மாவட்டத்தில் பெருங்குளத்தில் பிறந்தவர். வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டதோடு அறிவியல் கட்டுரைகளை எழுதித் தமிழில் அறிவியலை எழுதமுடியும் என்று உணர்த்தினார்; அறிவியல் தமிழின் முன்னோடியெனப் போற்றப்பட்டார். இவர் தமிழ் , ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய பன்மொழிப் புலமை கொண்டவர். அறிவியல் தமிழுக்காக 70 ஆண்டுகள் தொண்டாற்றினார். 'தமிழர் நேசன்' தமிழில் வந்த முதல் அறிவியல் இதழ். அதில் குறிப்பிடத்தகுந்த பல கட்டுரைகளை எழுதினார். கலைமகள், பாரதமணி, அமுதசுரபி, பிரசண்ட விகடன், சுதேசமித்திரன் போன்ற பல இதழ்களில் தொடர்ந்து அறிவியல் கட்டுரைகளை எழுதியுள்ளார். பொங்கியெழு கேணி (Artesian Well), நுண்துகள் கொள்கை (Corpuscullar Theory), அறிவுக்குறி எண் (Intelligent Quotient) போன்ற நல்ல தமிழ்த் தொடர்கள் அவர் உருவாக்கியவை. மின்சாரம், வானக்காட்சி, இன்றைய விஞ்ஞானமும் நீங்களும், அணுசக்தியின் எதிர்காலம், ராக்கெட்டும் துணைக்கோள்களும் உள்ளிட்ட பல நூல்கள் அவர் எழுதியவை.



பெ. நா. அப்புசாமி
(31.12.1891 – 16.05.1986)

'பேனா' என்ற புனைபெயரில் பல நூல்களை எழுதியுள்ளதோடு 25 அறிவியல் நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். மேலும், பாரதியார் கவிதைகள், சங்கப்பாடல்கள் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். இசையில் ஆர்வம் கொண்டிருந்த இவர், பல இசைவிமர்சனக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். மர்ரே நிறுவன அதிபரான எஸ்.ராஜம் பல தமிழ் இலக்கியங்களைத் தொகுப்பாகக் கொண்டு வந்தபோது அவை செம்மையாக வெளிவர உறுதுணையாக இருந்தார். இவருடைய பணிகளைப் பாராட்டி மதுரைப் பல்கலைக்கழகம் 'தமிழ்ப்பேரவைச் செம்மல்' என்ற பட்டத்தை வழங்கியது. தமது இறுதி மூச்சு அடங்கும் அன்றுகூட இவர் இதழொன்றுக்கு எழுதி அனுப்பிவிட்டே மறைந்தார்.

1. இராக்கெட்டும் துணைக்கோள்களும் – இலக்கணக் குறிப்புத் தருக.
2. பெருங்குளம், பேரவைத்தலைவர் – புணர்ச்சிவிதி கூறுக.
3. நண்பன் – இம்மொழியாக்கத்திற்குரிய வடசொல்லைப் பத்தியிலிருந்து தேர்ந்தெடுக்க.
4. பேனா- என்னும் புனைபெயரில் அப்புசாமி பலநூல்களை எழுதியுள்ளார் – இத்தொடரில் இடம்பெறும் வினைத்தொகை எது?
5. தமிழில் வெளிவந்த முதல் அறிவியல் இதழ் எது?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 110 23-10-2018 15:48:16

**தமிழாக்கம் தருக.**

*The Zero !!! One of the grandest creations of Indian genius. The discovery of Zero is probably one of the few areas where India is accorded its rightful standing in the development of mathematics. This is not known for certain that who discovered zero and when. The importance of Zero is manifested by their wide spread use in today's world. This discovery is certainly one that has helped science to reach its current status.*

**பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்குக.**

ஹீமோகுளோபின் என்பது இரும்புச் சத்தும் புரதமும் இணைந்த ஒரு கூட்டுப்பொருள். இது ரத்தச் சிவப்பணுக்களில் அதிக அளவில் காணப்படும். சிவப்பணுவின் பிறப்பிடம், எலும்பு மஜ்ஜை. அங்குச் சிவப்பணுக்கள் உற்பத்தியாவதற்கு இரும்புச்சத்து, புரதச்சத்து, வைட்டமின்-பி12, வைட்டமின்-சி மற்றும் ஃபோலிக் அமிலம் தேவை.

உணவில் தேவையான அளவுக்கு இரும்புச் சத்தும் ஊட்டச்சத்தும் இல்லாதபோது ரத்தசோகை ஏற்படுகிறது. சிவப்பணுக் கோளாறு, ரத்தமிழப்பு, குடல் புழுக்கள், ரத்தப்புற்றுநோய் மற்றும் மலேரியா, மஞ்சள் காமாலை போன்ற தொற்று நோய்கள் காரணமாகவும் இந்த நோய் ஏற்படுவதுண்டு.

உடல் திசுக்களுக்கு ஆக்ஸிஜனைக் கொண்டுசேர்ப்பது ஹீமோகுளோபினின் வேலை. இதன் அளவு குறையும்போது, திசுக்களுக்கு ஆக்ஸிஜன் கிடைப்பது குறையும். உடலில் அதிகமான சோர்வும் களைப்பும் உண்டாகும். அடிக்கடி தலைவலி, உடல்வலி, கைகால் குடைச்சல், தூக்கமின்மை ஏற்படும். கடுமையான வேலைகள் செய்தால் மூச்சுத் திணறுவது, படபடப்பாக வருவது, நெஞ்சு வலிப்பது, பெருமூச்சு வருவது, தலைச்சுற்றல் மற்றும் மயக்கம் வருவது போன்ற அறிகுறிகள் தெரியும். நகங்களில் 'ஸ்பூன்' மாதிரி குழி விழும். தலைமுடி உதிரும். சிறுவர், சிறுமிகளுக்கு வயதுக்கேற்ற உடல் வளர்ச்சி இருக்காது. நினைவாற்றல் குறையும். படிப்பில் ஆர்வம் குறையும். தோல், நகம், கண், நாக்கு ஆகியவை வெளுத்துக் காணப்படுவதும் முகம் மற்றும் கணுக்கால்கள் வீங்குவதும் இந்த நோய்க்கே உரித்தான முக்கிய அறிகுறிகள்.

**குறிப்புகளைக் கொண்டு பத்தியாக எழுதுக.**

வீடு - மின்சாதனக் கருவி - கவனம் - ஈரக்கை - தவிர்த்தல் - தொலைக்காட்சி - அலைபேசி - இரவு - அணை - அதிகாலை - பள்ளிகள் - பொதுவிடங்கள் - திடல் - மின்கம்பம் - கவனம்.

**இலக்கிய நயம் பாராட்டுக.**

ஆயிரம் வண்ணம் காட்டும்
அடிவான முகில்கள் ஓடிப்
பாய்கதிர் ஒளிம றைக்கும்!
பலமலைக் குன்றைச் சுற்றிப்
போய்விழும் ஓடைபோலத்
தோன்றிடும்; புதுவெள் ளத்தில்
மாய்கதிர்ச் செக்கர் வானம்
எழிலோவி யம்பார் தம்பி!

களிமயில் அகவும்; புள்ளிக்
கருங்குயில் பாட்டி சைக்கும்;
விளித்திடும் துணைபி ரிந்த
புள்ளினம்; விளாம ரத்தில்
ஒளித்துண்ணும் அணிலோ, கிள்ளை
ஒளிமூக்கை மிளகா யென்று
களித்துண்ணப் பாயும்; காட்டில்
காண்எழில் ஓவி யத்தை!

– வாணிதாசன்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 111 23-10-2018 15:48:16

## மொழியோடு விளையாடு

### அடைப்புக்குறிக்குள் உள்ள விடைகளுக்கேற்ப வினாக்கள் அமைக்க

(*தாய்மொழிக் கல்வி, அப்துல்கலாம், பால் ப்ரோக்கா, கணினிப்புரட்சி*)

*1.* ____________________ *2.* ____________________

*3.* ____________________ *4.* ____________________

### விடுகதைப்பாடல்

*எண்ணங்களை எழுத்தாக்கிடுவான்*
*அதற்கு வண்ணமும் தீட்டிடுவான்*
*தொடுதிரையோடு வந்து*
*மிடுக்காக நின்றிடுவான்*
*அகிலத்தைத் தன்னுள் அடக்கி*
*அறிவை விரிவு செய்விப்பான்*
*நினைவுகளைச் சேமித்திடும் நல்லன்*
*மடித்தால் ஒரு பெயரெடுப்பான்*
*கைக்குள் அடைத்தால் மறுபெயரில்*
*அவதரிப்பான்*
*அவன் யார் ?*

### செய்து கற்போம்

*உங்களது பள்ளியில், மாவட்டத்தில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் பார்த்தவற்றையும், அதில் உங்களது பங்களிப்புப் பற்றியும் ஒப்படைவு தயார் செய்க.*

## நிற்க அதற்குத் தக

### சமூக வலைத்தளங்களில் செய்யக்கூடாதவை

| சமூக வலைதளங்களில்.... | நான் | காரணம் |
|---|---|---|
| எந்நிலையிலும் முகம் தெரியாதவர்களிடம் முகவரியைப் பகிர்தல் | செய்வேன் / செய்யமாட்டேன் | |
| அறிமுகம் இல்லாதவர்களை நண்பர்களாகச் | சேர்ப்பேன் / சேர்க்க மாட்டேன் | |
| அறிமுகம் இல்லாத நபர்கள் நேரில் அழைத்தால் | செல்வேன் / செல்ல மாட்டேன் | |

### கலைச்சொல் அறிவோம்

கடத்தி – Transmitter
கணையம் – Pancreas
கணையச் சுரப்பு நீர் – Insulin
பயன்பாட்டு மென்பொருள் – Application software
வினையூக்கி – Catalyst
முதுகுத்தண்டு - Spinal cord
மரபணு - Gene
நாளமில்லாச் சுரப்பி – Endocrine gland
உளவியல் மொழியியலாளர் – Linguistic psychologist

### அறிவை விரிவு செய்

அக்னிச்சிறகுகள் – அப்துல் கலாம், அறிவியல் தமிழ் – வா.செ. குழந்தைசாமி, கணினியை விஞ்சும் மனித மூளை – கா. விசயரத்தினம்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_085-112.indd 112 23-10-2018 15:48:16

இயல் 5

# கேடில் விழுச்செல்வம்



## கற்றல் நோக்கங்கள்

- காலந்தோறும் கல்வி அளிக்கப்பட்ட வரலாற்றை அறிந்து கற்பதோடு, கல்லாத மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுதல்
- தமிழ் ஆளுமையின் பன்முகப் பண்புகளைப் போற்றிப் பின்பற்றுதல்
- மாணவர் எவ்வாறு கல்வி கற்க வேண்டும் என்பதை இலக்கண நூல்வழி அறிந்து பின்பற்றுதல்
- படைப்பாக்க உத்திகளைப் புரிந்துகொண்டு கவிதைகளைச் சுவைத்தல், படித்தல், படைத்தல்

## பாடப் பகுதி

தமிழகக் கல்வி வரலாறு
பிள்ளைக்கூடம் – இரா. மீனாட்சி
நற்றிணை – போதனார்
தொல்காப்பிய சிறப்புப் பாயிர உரை விளக்கப் பாடல்
இதழாளர் பாரதி
படைப்பாக்க உத்திகள்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 113 23-10-2018 12:20:00

இயல் 5

# தமிழகக் கல்வி வரலாறு

285TJS

**நுழையும்முன்**

கல்வியின் நோக்கம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்ப்பதாகும். பன்னெடுங்காலமாக முன்னோர்களால் வளப்படுத்தப்பட்ட அறிவாற்றலையும் அனுபவத்தையும் ஒவ்வொரு தனிமனிதனும் பெறுமாறு செய்வதுமாகும். ஒருவரின் வாழ்க்கை முழுவதும் தொடர் நடைமுறையாகத் திகழும் கல்வியானது சமூக மாற்றத்தின் இன்றியமையாக் காரணியாகவும் விளங்குகிறது. கல்வியின் முதன்மை நோக்கமான, 'தனிமனிதனைச் சமுதாயத்துக்கு ஏற்றவனாக மாற்றுதல்' என்னும் சீரிய பணியில் தமிழகம் கடந்து வந்த பாதை போற்றுதலுக்குரியது.

வாழ்க்கையை நடத்துவதற்கான அடிப்படைத் திறன்களை வளர்ப்பதற்கு ஒவ்வொரு சமூகத்திலும் வயதில் மூத்தவர்களால் கதைகள், கருத்துகள்வழி வாழ்க்கை நெறிகள் மற்றும் உலகப்பார்வை சார்ந்த கருத்துகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. அவை கற்பவர் மனத்தில் ஆழப் புதைந்துள்ள திறன்களைத் தோண்டி வெளிக்கொண்டு வருவதால் 'கல்லுதல்' என்ற பொருளின் அடிப்படையில் கல்வி என வழங்கலாயிற்று. 'கல்வியில் சிறந்த தமிழ்நாட்டில்' காலந்தோறும் மக்களின் தேவைகளுக்கேற்பக் கற்றலும் கற்பித்தலும் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வளர்ந்துள்ளன.

## தமிழ் இலக்கியங்களில் கல்வி

பண்டைத் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம், கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை ஓதற்பிரிவு (தொல். அகத். 25) எனக் குறிப்பதோடு எண்வகை மெய்ப்பாடு பற்றிக் கூறும்போது கல்வியின் பொருட்டு ஒருவருக்கு, 'பெருமிதம்' தோன்றும் (தொல்.மெய். 9) என்றும் கூறுகிறது. தொல்காப்பியமும் நன்னூலும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ளன. சங்க இலக்கியங்களும் கல்வியின் சிறப்பைப் பெரிதும் போற்றுகின்றன.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே!" (புறம் 183, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்) என்ற புறநானூற்று அடிகள் பொருள் கொடுத்தும் தொண்டு செய்தும் ஆசிரியரிடம் மாணவர்கள் கல்வி கற்றதைச் சிறப்புடன் குறிக்கின்றன.

சங்க காலத்தவர் குடும்பம், அரசு, சமூகம் என்ற மூன்று நிலைகளிலும் சிறப்பினைப் பெறக் கல்வி தேவை என்பதனை உணர்ந்து கற்றனர்.

"சங்ககாலத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக, இலக்கிய மொழியாக விளங்கியுள்ளது; தமிழகம் அப்போது பெற்றிருந்த அரசியல்

**கல்வியின் சிறப்பு**

துணையாய் வருவது தூயநற் கல்வி – திருமந்திரம்.

கல்வி அழகே அழகு – நாலடியார்

இளமையில் கல் – ஔவையார்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_113-138.indd 114 23-10-2018 12:20:00

சுதந்திரத்தினால், தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சிமொழியாகவும் கல்விமொழியாகவும் சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கி வந்தது" என்னும் மா. இராசமாணிக்கனாரின் கருத்து, தமிழகத்தில் அன்று நிலவிய கல்விமுறையின் சிறப்பினை எடுத்துக் கூறுகிறது. சங்கம் என்ற அமைப்பு, பலர் கூடி விவாதிக்கும் பாங்குடையது. இதுதவிர, மன்றம், சான்றோர் அவை, அறங்கூர் அவையம், சமணப்பள்ளி, பௌத்தப் பள்ளி போன்ற அமைப்புகள் சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் கற்பித்தல் பணியைத் தமிழகத்தில் செய்து வந்துள்ளன. மன்னராட்சிக் காலத்தில் போர்ப்பயிற்சிகளைத் தருவதும் முக்கியமான கல்வியாகக் கருதப்பட்டது.

கற்பிக்கும் ஆசிரியர்களும் மூவகைப் பிரிவினராக இருந்தனர்.

இவர்களிடம் கற்ற மாணவர்களை முறையே சிறுவன், மாணவன், கேட்போன் என்று வகைப்படுத்தினர்.

| | |
|---|---|
| கணக்காயர் | எழுத்தும் இலக்கியமும் உரிச்சொல்லும் (நிகண்டு) கணக்கும் கற்பிப்போர். |
| ஆசிரியர் | பிற்காலத்தில் ஐந்தாக விரிக்கப் பட்ட மூவகை இலக்கணத்தையும் அவற்றுக்கு எடுத்துக்காட்டான பேரிலக்கியங்களையும் கற்பிப்போர். |
| குரவர் | சமய நூலும் தத்துவ நூலும் கற்பிப்போர். |

| | |
|---|---|
| பள்ளிகள் | கலைகள், கல்வி கற்பிக்கும் இடங்களாக விளங்கின. |
| மன்றம் | கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடமாகத் திகழ்ந்தது. |
| சான்றோர் அவை | செயல்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் அவையாக இருந்தது. |

கல்வி கற்பிக்கப்படும் இடங்களைப் 'பள்ளி' என்று பெரிய திருமொழியும் ஓதும் பள்ளி என்று திவாகர நிகண்டும் கல்லூரி என்று சீவக சிந்தாமணியும் குறித்துள்ளன. கற்றலுக்கு உதவும் ஏட்டுக் கற்றைகளை ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல், நூல் எனப் பல பெயரிட்டு அழைத்தனர். முன் மூன்றும் ஓலைக்கற்றையையும் பின்னிரண்டும் உட்பொருளையும் சிறப்பாகக் குறித்தன.

### சமண, பௌத்தப் பள்ளிகள்

கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய நான்கு கொடைகளும் சமண சமயத்தின் தலையாய அறங்களாகும். சமணத்தைச் சேர்ந்த திகம்பரத் துறவிகள் மலைக்குகையில் தங்கினர். அவர்கள் தங்களின் தங்குமிடங்களிலேயே கல்வியையும் சமயக் கருத்துகளையும் மாணவர்களுக்குப் கற்பித்தனர். 'பள்ளி' என்ற சொல்லுக்குப் 'படுக்கை' என்று பொருள். அவர்களின் படுக்கைகளின் மீது மாணவர்கள் அமர்ந்து கற்றதனால் கல்விக்கூடம், பள்ளிக்கூடம் என அழைக்கப்படலாயிற்று. பள்ளி என்னும் சொல் சமண, பௌத்த சமயங்களின் கொடையாகும்.

சமணப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு எடுத்த படுக்கைகள்பற்றித் திருச்சி மலைக்கோட்டையிலும் தமிழகத்தின் புகழ்பெற்ற சமணக் குன்றான கழுகுமலையிலும் உள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 115 23-10-2018 12:20:00

வந்தவாசி அருகிலுள்ள வேடல் என்னும் ஊரில் இருந்த சமணப் பள்ளியில் பெண் சமண ஆசிரியர் ஒருவர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார். பட்டினிக்குரத்தி என்னும் சமணப் பெண் ஆசிரியர் விளாப்பாக்கத்தில் சமணப் பள்ளியொன்றை நிறுவியிருந்தார். இவை, சமணப் பள்ளிகளில் பெண்களும் ஆசிரியர்களாக இருந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்துகின்றன. பெண்களுக்கெனத் தனியாகக் கல்வி கற்பிக்கும் சமணப் பள்ளிகள் பெண் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன.

தமிழர்கள் இன்று பரவலாக ஏற்றுக்கொண்டிருக்கும் பட்டிமண்டபம் என்ற கலைவடிவம் சமயத் துறையிலிருந்து தோன்றியது. பட்டிமண்டபம் என்பது சமயக் கருத்துகள் விவாதிக்கும் இடமென்று மணிமேகலையில் சுட்டப்படுகின்றது. 'ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்' என்று அந்நூல் பேசுகிறது.

தமிழகத்திலுள்ள காஞ்சிபுரத்திற்கு வந்து சேர்ந்த சீனப்பயணி யுவான் சுவாங், அங்கிருந்த பௌத்தப் பல்கலைக்கழகத்தில் தங்கிச் சிறப்புரை ஆற்றியிருக்கிறார் என்ற செய்தி பௌத்தமும் சமணமும் தமிழகத்தின் கல்வி வரலாற்றுக்குச் செய்த பெரும்பங்கினை விளக்குகிறது.

## மரபுவழிக் கல்வி முறைகள்

### (அ) குருகுலக் கல்விமுறை

இம்முறையில் மாணவர்கள் ஆசிரியர்களை அணுகி அவருடன் பல ஆண்டுகள் தங்கி, அவருக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்து கல்வி கற்றனர். செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்ற அடிப்படையில் இக்குருகுலக் கல்விமுறை அமைந்திருந்தது. இம்முறை, போதனா முறையைத் தாண்டி வாழ்வியலைக் கட்டமைப்பதில் சிறப்பானதாக விளங்கியது.

### (ஆ) திண்ணைப் பள்ளிக் கல்விமுறை

19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஊர்கள்தோறும் பெருமளவில் திண்ணைப் பள்ளிகள் இருந்தன. அவற்றினைத் தெற்றிப் பள்ளிகள் என்றும் அழைத்தனர். திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் கணக்காயர்கள் என்றே அழைக்கப்பட்டனர். அக்காலக் கல்விமுறை, திண்ணைப் பள்ளிமுறை என்றே தமிழகத்தில் அழைக்கப்பட்டது. இப்பள்ளிகள் ஒரேமாதிரியான வரன்முறையுடன் செயல்படவில்லை. எனவே, ஆங்கிலேயர்கள், திண்ணைப் பள்ளிகள், பாட சாலைகள், மக்தாபுகள், மதரஸாக்கள் போன்ற கல்வி அமைப்புகளை நாட்டுக்கல்வி (Indigeneous Education) என்று அழைத்தனர். இப்பள்ளிகளில் பாடத்திட்டம், பள்ளி நேரம், பயிற்றுவிக்கும்முறை ஆகியன ஆசிரியரின் விருப்பப்படியே அமைந்திருந்தன. ஆயினும் பொதுமக்களுடைய கல்வித்தேவையை

**தெரியுமா?**

ரெவரெண்ட் பெல் என்ற ஸ்காட்லாந்து பாதிரியார் தமிழகத் திண்ணைப் பள்ளிக் கல்விமுறையைக் கண்டு வியந்தார். இம்முறையில் அமைந்த ஒரு பள்ளியை ஸ்காட்லாந்தில் 'மெட்ராஸ் காலேஜ்' என்னும் பெயரில் நிறுவினார். அங்கு இக்கல்விமுறை மெட்ராஸ் சிஸ்டம், பெல் சிஸ்டம் மற்றும் மானிடரி சிஸ்டம் என்றும் அழைக்கப்பட்டது.





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 116 23-10-2018 12:20:01

**தமிழகத்தில் விடுதலைக்கு முன் கல்வி வளர்ச்சி**

| ஆண்டு | நிகழ்வு |
|---|---|
| 1826 | சென்னை ஆளுநர் சர். தாமஸ் மன்றோ ஆணைக்கிணங்கப் பொதுக்கல்வி வாரியம் தொடங்கப்பட்டது. |
| 1835 | சென்னை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. இது இந்தியாவில் முதன் முதலில் தொடங்கப்பட்ட இரண்டு மருத்துவக் கல்லூரிகளுள் ஒன்று. |
| 1854 | பொதுக்கல்வித் துறை நிறுவப்பட்டு முதல் பொதுக்கல்வி இயக்குநர் (DPI) நியமிக்கப்பட்டார். |
| 1857 | சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. |
| 1859 | 1794இல் தொடங்கப்பட்ட ஸ்கூல் ஆஃப் சர்வே என்ற நிறுவனம், 1859இல் கிண்டி பொறியியல் கல்லூரியாக வளர்ச்சி அடைந்தது. |
| 1910 | தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம் தொடங்கப்பட்டது. |
| 1911 | பள்ளியிறுதி வகுப்பு – மாநில அளவிலான பொதுத்தேர்வில் நடைமுறைக்கு வந்தது. |

இப்பள்ளிகள் ஓரளவேனும் நிறைவு செய்தன.

சென்னை மாகாணத்தில் 12,498 திண்ணைப் பள்ளிகள் இயங்கி வந்தன என்றும் அவற்றின் கல்வித்தரம் பல ஐரோப்பிய நாடுகளின் அப்போதைய கல்வித்தரத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவே காணப்பட்டது என்றும் தாமஸ் மன்றோ காலத்தில் நடத்திய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### (இ) உயர்நிலைக் கல்விமுறை

தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்விமுறை என்ற வகைமைக்குள் இக்கல்விமுறை அடங்கும். திருவாவடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப்புலவராக விளங்கிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனாரிடம் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதர் இம்முறையில்தான் பாடம் பயின்றார்.

## தமிழகத்தில் ஐரோப்பியர்களின் கல்விப்பணி

> கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்
> மூத்தோரை இல்லா அவைக்களனும் – பாத்துண்ணும்
> தன்மை யிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
> நன்மை பயத்தல் இல் (திரிகடுகம் – 11)

1453ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஜெர்மனி நாட்டவரான ஜான் கூட்டன்பர்க் (John Gutenberg) வடிவமைத்த அச்சு இயந்திரம் கல்வி பெருகக் காரணமாயிற்று. கி.பி. 1706 ஆம் ஆண்டு முதல் டச்சுக்காரர்களின் சமயப் பரப்புச் சங்கம் தமிழகத்தில் முதன்முதலாகக் கல்விப் பணியில் ஈடுபட்டது. தரங்கம்பாடியில் முதன்முதலில் அச்சுக்கூடத்தை ஏற்படுத்தி, மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்களை அச்சடித்தனர். இந்தியாவில் முதன்முதலில் அச்சேறிய மொழி தமிழே ஆகும். டச்சுக்காரர்கள் அறப்பள்ளிகளை (Missionaries) நிறுவியதோடு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளையும் அமைத்தனர்.

1813ஆம் ஆண்டு சாசனச் சட்டப்படி லண்டன் பாராளுமன்றம், இந்தியர்களின் கல்விக்காக ஆண்டுக்கு 1 லட்சம் ரூபாய் ஒதுக்கியது.

அக்காலத்தில் இந்தியாவில் தாய்நாட்டு இலக்கியங்களையும் கீழைத்தேசத்துக் கலைகளையும் பயிற்றுவிக்க வேண்டும் என்னும் கொள்கை கொண்டவர்கள் கீழைத்தேயவாதிகள் (Orientalists) என்று அழைக்கப்பட்டனர். மாறாக, மேற்கத்தியப் பாணிக் கல்விமுறையான ஆங்கிலவழிக் கல்விமுறை மூலமாகவே இந்தியர்களை முன்னேற்ற முடியும் என்று ஒரு சாரார் வாதிட்டனர். இவர்கள் மேற்கத்தியவாதிகள்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 117 23-10-2018 12:20:01

> ஆசிரியரால் சர்வ வல்லமையிலும் பாதிப்பினை ஏற்படுத்த இயலும். அவரால், ஏற்படப்போகும் நல்ல விளைவுகள் அவர்களாலேயே மதிப்பிட இயலாது
>
> ஹென்றி ஆடம்ஸ்

(Anglicists) என்று அழைக்கப்பட்டனர். இக்கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்காக, 1835ஆம் ஆண்டில் மெக்காலே கல்விக்குழு உருவாக்கப்பட்டது.

1854ஆம் ஆண்டு சார்லஸ் வுட் தலைமையிலான குழுவின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு, தற்காலக் கல்வியும் தேர்வுமுறையும் உருவெடுத்தன. சார்லஸ் வுட்டின் அறிக்கை, 'இந்தியக் கல்வி வளர்ச்சியின் மகாசாசனம்' என்று போற்றப்படுகிறது. கி.பி. 1882ஆம் ஆண்டு உருவான ஹண்டர் கல்விக்குழு சீருடை முறை, தாய்மொழிவழிக் கல்வி போன்றவற்றைக் கட்டாயமாக்கியது. மேலும், புதிய பள்ளிகளைத் தொடங்கி நடத்தும் பொறுப்பைத் தனியாருக்கும் வழங்கப் பரிந்துரைத்தது.

ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த 19ஆம் நூற்றாண்டில் நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவரின் எண்ணிக்கை 15 விழுக்காடாக இருந்தது. நாடு விடுதலை பெற்றவுடன் இந்நிலையை மாற்றக் கருதிய நம் அரசு இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுப்பு 45இன் கீழ் நாட்டிலுள்ள 14 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தியது.

சட்டமியற்றியதுடன் அக்குறிக்கோளை நிறைவேற்ற ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்தது. இதன் விளைவாக நாடெங்கிலும் கல்விநிலையில் வளர்ச்சி ஏற்பட்டது. குறிப்பாக, தமிழகத்தில் கல்விநிலை சீராக வளரத் தொடங்கியது. மேலும், அரசு வளர்ந்து வரும் காலத்திற்கேற்ற கல்விமுறையில் மாற்றமும் ஏற்றமும் கொண்டுவரப் பல குழுக்களை அமைத்தது.

கல்விக்குழுக்களின் பரிந்துரைகள் நம்முடைய நாட்டின் கல்வி வரலாற்றில் முக்கியத் திருப்புமுனைகளாக அமைந்ததோடு இன்றைய ஏற்றமிகு வளர்ச்சிக்கு அடிப்படைகளாகவும் விளங்கின. குருகுலக் கல்விமுறை, திண்ணைப் பள்ளி, கல்வி நிலையம் என்னும் பல்வேறு வளர்ச்சிகளைக் கண்ட கல்வி அமைப்புமுறை இன்று அறிவியல் தொழில்நுட்பத்தின் உதவியால் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

நம் தமிழக அரசின் கல்வித்துறை பல்வேறு நலத்திட்டங்களை வகுத்துத் திறம்படச் செயல்படுத்தி வருகிறது. அதன் விளைவாக, இக்காலம் கல்வித்துறையின் பொற்காலம் என்று சொல்லும் வகையில் நம் கல்விமுறை மாற்றமும் ஏற்றமும் பெற்று, நாட்டிலேயே முன்னோடி மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது.

*சொந்தமொழி கற்பிக்கும்*

**கற்பவை கற்றபின்...**

1. தமிழகத்தின் பண்டைக் கல்விமுறைகள் குறித்துச் செய்திப்படக் கட்டுரை ஏடு ஒன்றை உருவாக்குக.
2. தமிழகத்தில் விடுதலைக்குப் பிறகு கல்விமுறையில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடி முடிவுகளைப் பதிவு செய்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-138.indd 118 23-10-2018 12:20:02

# பிள்ளைக்கூடம்

28B2XI

**நுழையும்முன்**

இளமையின் சிறகை முறிக்காத இனிய சூழலில், பிள்ளைகளுக்குப் பிடித்த பள்ளிக்கூடம் எவ்வாறு இருக்க வேண்டும் என்றொரு கனவு அனைவருக்கும் இருக்கும். அந்தக் கனவை ஓர் ஓவியர் வரைந்து காட்டலாம்; ஒரு பாடகர் பாடிக் காட்டலாம்; இங்கொரு கவிஞர் எழுதிக் காட்டுகிறார்.

*இந்தப் பள்ளிக்கூடம்*
*மிகவும் பிடித்துப் போய்விட்டது.*

*இங்கே, ஐம்பதாண்டு வேம்பு*
*கோடையில் கொட்டும் பூக்களை*
*எண்ணச் சொல்கிறார்கள்.*

*வேலி ஓணான்*
*கருங்கல் தூணில் வந்து அமர்ந்து*
*தியானிக்கும் நேரத்தைக்*
*குறித்து வைக்கச் சொல்கிறார்கள்.*

*வெட்டவெளியில்*
*தட்டுக்கூடையில்*
*சர்க்கரைப்பண்டம் வைத்தவுடன்*
*எங்கிருந்தோ வந்து சேரும்*
*எறும்புகளின் வேகத்தை*
*அளக்கச் சொல்லுகிறார்கள்*

*மழை பெய்ய ஆரம்பித்தால்*
*வட்டரங்க நடுமேடையில்*
*வீழ்ந்து வழியும்*
*துளிகளின் வடிவத்தை*

*ஓவியமாய்த் தீட்ட,*
*செம்மண்தாளும்*
*வண்ணக்குச்சிகளும் தருகிறார்கள். மேலும்,*

*காலையில் மயிலுடன் நடக்க வேண்டுமாம்.*
*மாமரக் குயிலுடன் இசைக்க வேண்டுமாம்.*
*வண்ணத்துப்பூச்சியுடன் பறந்து*
*ஆடித்திரிய வேண்டுமாம்.*

*மாலையில் மரங்களின் முதுகினைச்*
*செல்லமாய் வருடிவிட வேண்டுமாம்.*
*குறுஞ்செடிகளுடன் உற்சாகமாய்ப்*
*பேச வேண்டுமாம்.*

*இந்தப் பள்ளியில்*
*சேர்ப்பார்களா*
*என்னைப் பெற்றவர்கள்?*

*தாய்மொழியிலே பயின்று*
*யாதும் ஊரென*
*உலகின் உறவாகவே*
*விரும்புகிறேன் நான்.*

**– இரா. மீனாட்சி**

**நூல்வெளி**

இரா. மீனாட்சி, 1970களில் எழுதத் தொடங்கி நெருஞ்சி, சுடுபூக்கள், தீபாவளிப்பகல், மறு பயணம், வாசனைப்புல், உதயநகரிலிருந்து, கொடி விளக்கு உள்ளிட்ட கவிதைத்தொகுப்புகளைப் படைத்துள்ளார். இவர் பாண்டிச்சேரி ஆரோவில்லில் வாழ்ந்து வருகிறார்; ஆசிரியப்பணியிலும் கிராம மேம்பாட்டிலும் ஈடுபாடு கொண்டவர். 'கொடி விளக்கு' என்னும் நூலிலிருந்து இக்கவிதை எடுத்தாளப்பட்டுள்ளது.

**கற்பவை கற்றபின்...**

தாய்மொழிவழிக் கல்வி பற்றிய உங்கள் எண்ணங்களைக் கவிதையாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-138.indd 119 23-10-2018 12:20:02

கவிதைப்பேழை

இயல் 5

# நற்றிணை

28EPLF

**நுழையும்முன்**

வளமையும் வறுமையும் வாழ்க்கையென்னும் நாணயத்தின் இருபக்கங்களாகும். வறுமையில் செம்மையாய் வாழ அறிவுறுத்துவது கல்வி. இம்மாண்பு சிலருக்கு இயல்பிலேயே கைகூடும். வளமான மனையில் பிறந்த பெண்ணொருத்தி, குறைந்த வளமுடைய தலைவன் வீட்டிலும் தன்னிலை மாறாது வறுமையிற் செம்மையாய் வாழ்கின்ற காட்சியைப் படம் பிடிக்கிறது நற்றிணையின் இப்பாடல்.

*பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்*
*விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்*
*புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்*
*உண்என்று ஒக்குபு புடைப்பத் தெண்ணீர்*
*முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று*
*அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்*
*பரீஇ மெலிந்துஒழியப் பந்தர் ஓடி*
*ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி*
*அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள் கொல்*
*கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்*
*கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்*
*ஒழுகுநீர் நுணங்கறல் போலப்*
*பொழுது மறுத்து உண்ணும் சிறுமது கையளே. (110)*

– போதனார்

*தித்திக்கும் தேனும் பாலும்*
*பொற்கிண்ணத்தில் கலங்க*
*ஒருவாய் சுவைக்கவும் ஒவ்வாமை காட்டி*
*முத்துப் பந்தலில் ஓடி விளையாடி*
*மூச்சிறைக்க வைத்த செல்லச் சிறுமகள்*
*மலர்ச்செண்டும் தோற்க வளமனை சாடி*
*மறுகை மறுத்து மறைவாள் அன்று*

*இன்றோ*
*ஒருநேர உணவே அமிழ்தென நுகரும்*
*பெருந்தனப் பாங்கு பெற்றது எங்கே?*
*இல்லவன் செல்வத்து இருப்புக்கு ஏற்ப*
*பிறரை நயவாப் பொருளியல் பெருமிதம்*
*பேரறிவு ஒழுக்கம் பெற்றது எப்படி?*

திணை : பாலை துறை : மகள் நிலை உரைத்தல்

கூற்று : தலைவி இல்லறம் ஆற்றும் செவ்வியைப் பாராட்டிச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறியது.

**கூற்று விளக்கம்:** திருமணம் முடிந்து கணவன் வீட்டில் வசிக்கும் தலைவியைக் காணச் சென்றுவந்த செவிலி, நற்றாயிடம் மகள் வறுமையிலும் செம்மையாக வாழ்வதைச் சொல்லி, இத்தகைய இல்லற அறிவை எப்படிப் பெற்றாள் என வியந்து கூறுதல்.

**துறை விளக்கம்:** "மகள் நிலை உரைத்தல்" என்பது தலைவனோடு உடன்போகிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் எண்ணிக் கூறுவது. இத்துறை "மனைமருட்சி" என்றும் கூறப்படும்.

**சொல்லும் பொருளும்**

பிரசம் – தேன்; புடைத்தல் – கோல்கொண்டு மிரட்டுதல்; கொழுநன் குடி – கணவனுடைய வீடு; வறன் – வறுமை; கொழுஞ்சோறு – பெருஞ்செல்வம்; உள்ளாள் – நினையாள்; மதுகை –பெருமிதம்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 120 23-10-2018 12:20:02

## பாடலின் பொருள்

"நம் வீட்டில் தேன் கலந்த இனிய பால் உணவை ஒளிமிக்க பொற்கலத்தில் இட்டுச் செவிலித்தாயர் ஒரு கையில் ஏந்தி வருவர். நம் மகளை உண்ண வைப்பதற்காக இன்னொரு கையில் பூச்சுற்றிய மென்மையான சிறு கோலை வைத்திருப்பர். வீட்டின் முற்றத்தில் பந்தரின்கீழ் 'இதை உண்பாயாக' எனச் செல்லமாக அக்கோலால் அடித்து வேண்டுவர். மகளோ, 'நான் உண்ணேன்' என மறுத்து முத்துப்பரல்கள் இட்ட பொற்சிலம்பு ஒலிக்க அங்குமிங்கும் ஓடுவாள். செவிலித்தாயர் அவளைப் பின்தொடர முடியாமல் நடை தளர்ந்து நிற்பர். இப்படிப்பட்ட விளையாட்டுப் பெண், நம் மகள். இவள் எப்படி இப்போது இத்தகைய அறிவையும் இல்லற நடைமுறையும் கற்றாள்? தான் மணந்துகொண்ட கணவன் வீட்டில் வறுமையுற்ற நிலையிலும் தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவினைப் பற்றி நினைத்துப் பாராள். ஓடுகின்ற நீரிலே கிடக்கும் நுண்மணலில் இடைவெளி இருப்பதுபோல் ஒரு பொழுது இடைவெளி விட்டு ஒரு பொழுது உண்ணும் வன்மை பெற்றிருக்கிறாள். இது என்ன வியப்பு?"

## இலக்கணக் குறிப்பு

வெண்சுவை, தீம்பால் – பண்புத்தொகைகள்; விரிகதிர், ஒழுகுநீர் – வினைத்தொகைகள்; பொற்கலம், பொற்சிலம்பு – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்; கொண்ட – பெயரெச்சம்; அறிவும் ஒழுக்கமும் – எண்ணும்மை; பந்தர் – பந்தல் என்பதன் ஈற்றுப்போலி.

## பகுபத உறுப்பிலக்கணம்

**மெலிந்து – மெலி + த்(ந்) + த் + உ**

மெலி – பகுதி; த் – சந்தி, ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி

**மறுத்து – மறு + த் + த் + உ**

மறு – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி

## புணர்ச்சி விதி

சிறுகோல் – சிறுமை + கோல்

ஈறு போதல் – சிறுகோல்

பொற்சிலம்பு – பொன் + சிலம்பு

ணன வல்லினம் வர ட ற வும் – பொன்சிலம்பு

### நூல்வெளி



நற்றிணை எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்துப் போற்றப்படுவதாகும்; 'நல்ல திணை' என்ற அடைமொழியால் போற்றப்படும் சிறப்பினை உடையது. இது, நானூறு பாடல்களைக் கொண்டது. 9 அடிகளைச் சிற்றெல்லையாகவும் 12 அடிகளைப் பேரெல்லையாகவும் கொண்டது. நற்றிணையைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. இதன் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். போதனார்: சங்ககாலப் புலவர். நற்றிணையில் 110ஆம் பாடலை மட்டும் பாடியுள்ளார். நற்றிணையின் பேரெல்லை 12 அடி. இருப்பினும் விதிவிலக்காக 13 அடிகளைக் கொண்டதாக இவரது பாடல் அமைந்துள்ளது.

### கற்பவை கற்றபின்...



சூழலோடு பொருந்திக் கல்வியை வளர்த்துக்கொள்பவர் பெண்ணே! ஆணே! – கலந்துரையாடல் நிகழ்த்துக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_113-138.indd 121 23-10-2018 12:20:02

கவிதைப்பேழை

இயல் 5

28JXZ6

# தொல்காப்பியம்

## சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல்

**நுழையும்முன்**

தொல்காப்பியரால் தொகுத்தும் பகுத்தும் சேர்த்தும் எழுதப்பட்ட நூல் தொல்காப்பியமாகும். இந்நூல் எழுத்து, சொல் மட்டுமன்றிப் பொருள் இலக்கணமான வாழ்வின் இலக்கணத்தையும் வகுத்துக் கூறுவதாகும். நாட்டின் எதிர்காலமாய் விளங்கும் மாண்பு பொருந்திய மாணவர் எவ்வாறு கற்க வேண்டும் என்பதை இதன் சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல் தெள்ளிதின் விளக்குகிறது.

*வழக்கின் இலக்கணம் இழுக்கின்று அறிதல்*
*பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்*
*ஆசாற் சார்ந்துஅவை அமைவரக் கேட்டல்*
*அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்*
*வினாதல் வினாயவை விடுத்தல் என்றின்னவை*
*கடனாக் கொளினே மடம்நனி இகக்கும்.* 1

*ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பிற்*
*பெருக நூலிற் பிழைபா டிலனே.* 2

*முக்காற் கேட்பின் முறையறிந்து உரைக்கும்.* 3



### சொல்லும் பொருளும்

இகக்கும்– நீக்கும்; இழுக்கு– குற்றம்; வினாயவை– கேட்டவை.

### பாடலின் பொருள்

சிறப்புடைய மாணவர் எனப்படுவோர் உலக வழக்கு, நூல் வழக்கு ஆகிய இலக்கணங்களை ஆசிரியர்களிடம் குற்றமின்றி அறிவர். பாடங்களைப் போற்றிக் கற்பர். ஆசிரியர்களிடம் கற்ற பாடங்களை மீண்டும் நினைத்துப் பயிற்சி பெறுவர். ஆசிரியரை அணுகிப் பாடக்கருத்துகளைக் கேட்டுத் தெளிவு அடைவர். ஆசிரியர்களைப் போன்ற உயர்சிந்தனை உடையவர்களுடன் கலந்துரையாடிப் பயிற்சி பெறுவர். தங்களது ஐயங்களை ஆசிரியர்களிடம் வினவித் தெளிவுறுவர். அவ்வாறு தெளிவுற்ற கருத்துகளைப் பிறர்க்கு உணர்த்தித் தெளிவடையச் செய்வர். ஆசிரியர் கூறும் கருத்துகளை ஒருமுறைக்கு இருமுறை கேட்கும் மாணவர்கள் நூலைப் பிழையின்றிக் கற்கும் திறன் பெறுவர். மூன்றுமுறை கேட்போர் பாடக்கருத்துகளைப் பிறர்க்கு முறையாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெறுவர். இத்தன்மையில் பாடம் கேட்டலைக் கடமையாகக் கொண்ட மாணவர்கள் அறியாமையிலிருந்து நீங்கிச் சிறந்து விளங்குவர்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 122 23-10-2018 12:20:03

**இலக்கணக்குறிப்பு**

அறிதல், போற்றல், நினைத்தல், கேட்டல், பயிறல் – தொழிற்பெயர்கள்; நனிஇகக்கும் – உரிச்சொற்றொடர்

**பகுபத உறுப்பிலக்கணம்**

**விடுத்தல் – விடு + த் + தல்**

விடு – பகுதி; த் – சந்தி;

தல் – தொழிற்பெயர் விகுதி

**அறிந்து – அறி + த்(ந்) + த் + உ**

அறி – பகுதி. த் – சந்தி, ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி

**புணர்ச்சி விதி**

இழுக்கின்றி – இழுக்கு + இன்றி

உயிர் வரின் உக்குறள் மெய் விட்டோடும்

– இழுக்க் + இன்றி

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – இழுக்கின்றி

**முறையறிந்து – முறை + அறிந்து**

இ ஈ ஐ வழி யவ்வும் – முறை + ய் + அறிந்து

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – முறையறிந்து



தொல்காப்பியம்.

தொல்காப்பியமகாரிஷியினால்

நச்சினார்க்கினியரால்

அருளிச்செய்யப்பட்ட வுரையும்

மகாலிங்கையரவர்களால்

வீரபத்திரையரால்

தொல்காப்பியம் முதல் பதிப்பு (1847) முகப்புப் பக்கம்

## நூல்வெளி

நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்களில் காலத்தால் பழமையான இலக்கணநூல் தொல்காப்பியம். இதன் ஆசிரியர் தொல்காப்பியர். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்பது இயல்களாக மொத்தம் இருபத்தேழு இயல்கள் உள்ளன. தொல்காப்பியத்திற்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவர்களுள் பழமையான உரையாசிரியர்கள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடனார், சேனாவரையர், தெய்வச்சிலையார், பேராசிரியர் ஆகியோர் ஆவர். நச்சினார்க்கினியரின் சிறப்புப்பாயிர உரைவிளக்கத்தில் உள்ள பாடல் பாடமாக இடம் பெற்றுள்ளது.

## கற்பவை கற்றபின்...

தொல்காப்பியம் குறித்து நீங்கள் அறிந்த செய்திகளைத் தொகுத்து ஒப்படைவு உருவாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-138.indd 123 23-10-2018 12:20:03

விரிவானம்

இயல் 5

# இதழாளர் பாரதி

28NKN3




கல்வி என்பது பள்ளியில் அல்லது கல்லூரியில் மட்டும் பெறப்படுவதன்று. கல்வி கற்பவர், இதழ்களிலும் நடைமுறை அறிவைப் பெறுவதுடன் அதற்கேற்ப வாழவும் முனைகின்றனர். இவ்விதழ்களின் ஆசிரியர்கள் சமூகத்திற்குத் தேவையான பாடங்களை முன்வைக்கின்றனர். சிறந்த பத்திரிகையாளன் 'நல்ல ஆசான்' என்பதில் ஐயமில்லை. பாரதியும் இதற்கு விலக்கன்று. செம்மொழியாகத் திகழும் நம் மொழி புதிய நடையும் புதிய உடையும் புதிய பொருளும்கொண்டு எழுச்சியுடன் திகழக் காரணமாக அமைந்த தமிழ்ச்சிற்பி பாரதியின் மற்றொரு பரிமாணம் இதழியல் பணி.

*10.10.2018*

*10:15 மு.ப.*

**அன்புசால் அப்பாவிற்கு,**

*கடிதம் எழுதுவதே மறந்துபோன இன்றைய சூழலில் அத்தனையும் பேசிவிட முடியாத காலப்பெரு இடைவெளியில் இதை எழுதுகிறேன். இப்பொழுது மின்னஞ்சல் வசதி இருப்பதால் கடிதத் தொடர்பில் ஏற்பட்ட பெரும் இடைவெளி குறைந்தது. சிறுவயதில் எனக்குப் பாரதியின் கவிதைகளை அறிமுகப்படுத்தியவர் நீங்கள்தாம். 'மகாகவி என்ற பேரொளியில் பாரதியின் பல பரிமாணங்கள் மறைந்துள்ளன' என நீங்கள் அடிக்கடி கூறுவீர்கள். அண்மைக்காலமாக, பாரதியின் இதழியல் பணி பற்றிய நூல்களைப் படித்து வருகின்றேன். இதைத் தங்களிடம் பகிர்ந்துகொள்ளவே இம்மின்னஞ்சல்.*

*ஆம் அப்பா, நீங்கள் கூறியதுபோலப் பாரதி கவிஞர் மட்டுமல்லர், சிறந்த பேச்சாளர்; பாடகர்; கட்டுரையாளர்; கதை ஆசிரியர்; மொழிபெயர்ப்பாளர்; அரசியல் அறிஞர்; ஆன்மிகவாதி. இவை அனைத்திற்கும் மேலாக மிகச்சிறந்த இதழாளர் என்பதை அறிந்தபொழுது நான் பாரதியை எண்ணி எண்ணி வியந்தேன்.*

*அப்பா, எட்டையபுரம் சமஸ்தானத்தின் பணிக் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறிய பாரதி, மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியில் சேர்ந்தார். அங்கிருந்து வெளியேறிய அவர், சுதேசமித்திரன் இதழில் உதவி ஆசிரியராகப் பொறுப்பேற்றார். பாரதியின் உலகளாவிய பார்வை கூர்மைப்பட இதழியல் பணியே தூண்டுகோலாக இருந்திருக்கவேண்டும்.*

*இதழியல் துறைக்குப் பாரதி வந்தது சாதாரண நிகழ்வாக இருக்கலாம். ஆனால் அதில் அசாதாரணமானவற்றை நிகழ்த்திக் காட்டினார். சுதேசமித்திரன், சக்ரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி அல்லது யங் இந்தியா, விஜயா, சூர்யோதயம், கர்மயோகி ஆகிய பல இதழ்களில் ஆசிரியராகவும் துணையாசிரியராகவும் பங்காற்றிய அவரை நாம் இதழாளராகக் கொண்டாடத் தவறிவிட்டோம். அப்பா, பாரதியை எண்ணும்போதெல்லாம் நாட்டின் முன்னேற்றத்தில் எனது*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 124 23-10-2018 12:20:03



பங்கும் இடம்பெற வேண்டும் என்ற உந்துதல் ஏற்படுகின்றது.

பாரதி யானை மிதித்துச் சாகவில்லை, வறுமை மிதித்துச் செத்தார் என எங்கேயோ கவித்துவமாகப் படித்த நினைவு. இத்தனை வாழ்க்கைப் போராட்டத்திலும் உலகப் பார்வை கொண்டவராகப் பாரதி இருந்ததை நினைத்தால் வியப்பாய் இருக்கிறது. படைப்பாளர்களும் சிந்தனையாளர்களும் கொண்டாடப்படவேண்டும். இனி, எந்த ஓர் ஆளுமையையும் இத்தகைய நிலையில் நாம் விட்டுவிடக்கூடாது.

சர்வஜன மித்திரன், ஞானபாநு, காமன் வீல், கலைமகள், தேசபக்தன், கதாரத்னாகரம் போன்ற இதழ்களிலும் பாரதி தம் படைப்புகளை வெளியிட்டுள்ளார். இத்தனைக்கும் பாரதிக்கு எப்படி நேரம் இருந்ததோ? 'நேர மேலாண்மையே பாதி வெற்றி' என நீங்கள் கூறுவதை இப்பொழுதும் நினைவுகூர்கிறேன் அப்பா.

தம் பெயரையும் தம்மையும் முன்னிலைப்படுத்திக்கொள்ள விரும்பும் மனிதர்களுக்கிடையில் "தான்" என்ற ஒன்றை ஒழித்தவர் பாரதி. ஆங்கிலேயர்களின் கெடுபிடிகளால், விடுதலை வேட்கையூட்டும் கருத்துகள் மக்களைச் சென்றடைந்தால் போதும் என்று எண்ணி இளசை சுப்ரமணியன், சாவித்திரி, சி.சு.பாரதி, வேதாந்தி, நித்திய தீரர், உத்தமத் தேசாபிமானி, ஷெல்லிதாசன், காளிதாசன், சக்திதாசன், ரிஷிகுமாரன், காசி, சரஸ்வதி, பிஞ்சுக்காளிதாசன், கிருஷ்ணன் எனப் பல புனைபெயர்களில் எழுதியுள்ளார்.

கருத்துடன் காட்சியும் இடம்பெறுவது வாசகர்களைக் கவரும்தானே அப்பா. பாரதி அன்றே தாம் பணியாற்றிய இதழ்களில் கருத்துப்படங்களையும் கேலிச்சித்திரங்களையும் வெளியிட்டுள்ளார். தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாகக் கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் பாரதிதானே! லண்டன் பஞ்ச், இந்தி பஞ்ச் முதலிய கருத்துப்படங்களைக்கொண்ட இதழ்களைப் பார்த்த பாரதி, தமிழில் 'சித்திராவளி' என்ற பெயரில் கருத்துப்படங்களை மட்டுமே கொண்ட இதழ் ஒன்றையும் நடத்த விரும்பினார். அதைச் செயல்படுத்த முடியாவிட்டாலும் இந்தியா, விஜயா ஆகிய இரு இதழ்களிலும் கருத்துப்படங்களை வெளியிட்டுள்ளார்.

காட்டின் நெருக்கமான வழிகளில் யானை நடக்கும் தடத்தைப் பின்பற்றிப் பிற விலங்குகளும் அப்பாதையில் சுலபமாக நடக்கும். அதைப்போலவே இதழியலில் பாரதியின் தடம்பற்றி நடந்தவர்கள் பலர் இருந்தனர். அவர்களுள் பாரதியிடம் துணையாசிரியர்களாகப் பணியாற்றியவர்களான பி.பி.சுப்பையா, ஹரிஹரர், என். நாகசாமி, வ. ராமசாமி, பரலி. சு.நெல்லையப்பர், கனகலிங்கம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆங்கிலக் கலப்பின்றித் தமிழில் பேசுவதையே வியப்பாகப் பார்ப்பவர்களுக்கு இடையில் தமிழ் இதழ்களில் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் ஆகியவற்றை முதன்முதலாகக்



XI Std Tamil Chap_113-138.indd 125
athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
23-10-2018 12:20:03

குறித்தவர் பாரதி. அவரது மூச்சும் பேச்சும் பணியும் தமிழின் வளர்ச்சியை முன்னிட்டே இருந்திருப்பது என்போன்ற இளையோருக்கு, இன்றைக்கு நினைத்தாலும் பெரும் ஊக்கமாக உள்ளது.

அப்பா, உங்களுக்கு ஒன்று தெரியுமா? பெண் விடுதலைக்குப் பாடுபட்ட பாரதி பெண்களுக்காகத் தமது 'சக்ரவர்த்தினி' இதழில் குறள் வெண்பா எழுதியுள்ளார். அக்குறள்,

கூடியவரை பேசுவதுபோலவே எழுதுவதுதான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம், எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது.

பாரதியார் கட்டுரைகள்

***பெண்மை அறிவுயரப் பீடோங்கும் பெண்மைதான்***

***ஒண்மை யுறஓங்கும் உலகு.***

எடுத்துக்கொண்ட ஒவ்வொரு செயலிலும் தமது கொள்கையையும் உணர்வையும் வெளிப்படுத்தும் பண்பைப் பாரதியிடமிருந்து இளைய சமுதாயம் கற்றுக்கொள்ள வேண்டும்.

பாரதியைப் போன்றே பிற ஆளுமைகள் பற்றியும் நீங்கள் கூறியதுண்டு. பிற அறிஞர்களின் பலதுறை அறிவையும் கற்றுப் போற்ற வேண்டியது இன்றைய தேவை. எனக்கு ஓர் ஐயம் உண்டு. "இந்தியா" இதழைச் சிவப்பு வண்ணத்தாளில் ஏன் பாரதி வெளியிட்டார் அப்பா? அதை அறிந்து கொள்ள ஆவல். பாரதியைப் பற்றிக் கூடுதலாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் பன்மடங்காகியுள்ளது. தங்களின் பதில் கடிதத்தில் எழுதுவீர்களென்று நம்புகிறேன். பாரதியைப் படித்ததில் அவரைப் பற்றிப் பகிர்ந்து கொள்வதிலேயே கவனமாக இருந்துவிட்டேன். அம்மாவும் தம்பியும் நலம்தானே? என் நினைவு முழுவதும் நம் வயல்வெளியும் கன்றுக்குட்டியும்தாம். உங்களுக்கு என் அன்பும் வணக்கமும் அப்பா.

தங்கள் அன்பு மகள்,

வானதி.



கருத்துப் படம் 25.5.1907

*11.10.2018, 20:10*

அன்பு மகள் வானதிக்கு,

உன் மின்னஞ்சல் கிடைக்கப்பெற்றேன். பெருமகிழ்வு கொண்டேன். நீயும் உன் நண்பர்களும் நலமாக உள்ளீர்களா? எவ்வளவு கடுமையான வேலைகள் இருப்பினும் காலை உணவைத் தவிர்க்காதே. இங்கு அம்மா, தம்பி, வயல்வெளி, உன் கன்றுக்குட்டி எல்லோரும் நலமே. பாரதி பற்றி அறிந்திருந்த செய்திகளை நீ பகிர்ந்திருந்தது மகிழ்ச்சி. நூல்களை வாசிப்பதை இன்றைய இளைய சமுதாயம் மறந்துபோனதோ என்றெண்ணிக் கவலை கொண்டிருந்தேன். உன் மின்னஞ்சலால் என் பெருங்கவலை தீர்ந்தது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-138.indd 126 23-10-2018 12:20:03

பாரதி இந்தியா இதழை ஏன் சிவப்பு வண்ணத்தாளில் வெளியிட்டார் எனக் கேட்டிருந்தாய் அல்லவா? சிவப்பு வண்ணம் புரட்சியையும் விடுதலையையும் குறிப்பது என்பதால் அடிமைத்தளையில் இருந்து இந்தியாவை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் பாரதியின் இந்தியா இதழின் வண்ணத்திலும் வெளிப்பட்டது.

> **பாரதியார் இறக்கும் பொழுதும் இதழாளராகவே இறந்தார்.**
>
> இறந்து போவதற்கு முதல்நாள் இரவு, தூங்கச் செல்லும் முன்பு, நாளைக்கு,"அமானுல்லா கானைப் பற்றி ஒரு வியாசம் எழுதி ஆபிசுக்கு எடுத்துக்கொண்டு போகவேண்டும்" என்று இறுதியாகப் பாரதியார் கூறியுள்ளார்.
>
> – 'பாரதியைப் பற்றி நண்பர்கள்', ரா. அ. பத்மநாபன்.

வானதி, பாரதியின் புனைபெயர்களைப் பட்டியலிட்டிருந்தாய், நல்லது. பாரதி தம்மைப்போலவே பிறரையும் நேசிக்கும் பண்பாளர். அதனால்தான் தமக்கு மட்டுமல்ல தம் நண்பர்களுக்கும் ஆங்கிலேயர்களால் எந்தக் கெடுபிடியும் வந்துவிடக் கூடாது என்பதற்காக நண்பர்களின் பெயர்களையும் அவர்கள் கூடிப்பேசும் இடங்களையும் புனைபெயரில் பயன்படுத்தி வந்துள்ளார். இப்புனைபெயர்களை நகைச்சுவை உணர்வோடு வெளிப்படுத்தியிருப்பது எண்ணிஎண்ணி மகிழத்தக்கதாகும். மேலும், மற்றவர் பெயரை வெளிப்படுத்த விரும்பாத பாரதியின் இதழியல் அறத்தையும் இப்புனைபெயர்களில் காணலாம். தம் மனைவி செல்லம்மாவையும் கண்ணம்மா, வள்ளி என்ற புனைபெயர்களிலேயே குறிப்பிட்டிருப்பார்.

வானதி, தமிழ் இதழ்களில் தமிழ் மாதம், ஆண்டு குறிப்பிடும் முறையைக் கையாண்டதில் முன்னோடியாகப் பாரதி திகழ்ந்ததாக எழுதியிருந்தாய். அதைப்போலவே தமிழ் இதழ்களில் தமிழில் தலைப்பிடுவதற்கும் பாரதியே முன்னோடி. செய்திகளுக்கு ஆங்கிலத்தில் தலைப்பு எழுதிக் கீழே தமிழில் தலைப்பிடுவது அக்கால இதழ்களின் வழக்கம். தலைப்பிடலை 'மகுடமிடல்' என்றே பாரதியார் கூறுகின்றார். இந்தியா, சக்கரவர்த்தினி போன்ற இதழ்களில் 1905-07 காலப்பகுதியில் ஆங்கிலத் தலைப்பையும் கலந்து பயன்படுத்திய பாரதி, பிறகு ஆங்கிலத் தலைப்பு வைப்பதைக் கைவிட்டதோடு சுதேசமித்திரனில் அதைச் சாடியும் எழுதினார். மேலும், ஆங்கிலேயர்களின் கெடுபிடியால் பாரதி பாண்டிச்சேரி சென்றபோது இந்தியா இதழும் உடன் சென்றது வானதி.

எந்த நெருக்கடியான காலகட்டத்திலும் பாரதி தம் இதழியல் பணியைக் கைவிடவில்லை. இந்த இதழ்கள் எல்லாம் சிறப்பாகத் தொகுக்கப்பட்டு இன்றைக்கு நூலாக்கம் பெற்றுள்ளன. இதைப் போலவே பாரதியின் கடிதங்களும் கருத்துப்படத் தொகுப்பும் நூலாக்கம் பெற்றுள்ளன. இவையெல்லாம் தமிழினத்தின் பேறு. இதழாளராகப் பாரதியை நீ அடையாளம் கண்டதைப்போலவே தமிழின் இன்னும் பல ஆளுமைகளையும் அடையாளம் கண்டு எழுத வேண்டும். உன் விசாலப் பார்வைக்கு என் பாராட்டுகள். உன் மின்னஞ்சல்களுக்காகக் காத்திருக்கிறேன் மகளே!

என்றும் உன்,
அன்பு அப்பா.



**கற்பவை கற்றபின்...**

பாரதி பணிபுரிந்த இதழ்களின் அட்டைப் படங்களையும் கருத்துப்படங்களையும் இணையத்தில் சேகரித்துப் படத் தொகுப்பு செய்யவும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 127 23-10-2018 12:20:03

## படைப்பாக்க உத்திகள்

28TU1T

### உவமை

ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பார்ப்பது நம்மிடம் இயல்பாக அமைந்துள்ள பண்பாகும். தெரிந்தவற்றைக் கொண்டு தெரியாதவற்றை அறிந்துகொண்டு மனித அறிவு வளர்ந்து வந்திருக்கிறது. மொழி தோன்றிய அன்றே உவமையும் தோன்றியிருக்க வேண்டும். கருத்தைச் சொல்கையில் கேட்போர் மனத்தை ஈர்க்கும் வகையிலும் சொல்வதை எளிதில் உணரும் வகையிலும் கூற உவமைகளை (ஒப்பீடுகளை)ப் பயன்படுத்தினர்.

உவமை வினை(தொழில்), பயன், வடிவம்(மெய்), உரு(நிறம்)என்ற நான்கின் அடிப்படையில் தோன்றும் என்பார் தொல்காப்பியர்.

> வினை பயன் மெய் உரு என்ற நான்கே
> வகைபெற வந்த உவமத் தோற்றம்
>
> (தொல்காப்பியம் – 1222)

புலி போலப் பாய்ந்தான் – வினை (தொழில்)

மழை போலக் கொடுக்கும் கை – பயன்

துடி போலும் இடை – வடிவம் ( மெய் )

தளிர் போலும் மேனி – உரு (நிறம் )

கண்ணன் புலிபோலப் பாய்ந்தான் என்பதில் கண்ணன் – உவமேயம் (பொருள்), புலி – உவமானம் (உவமை), போல – உவம உருபு, பாய்தல் – பொதுத்தன்மை. இந்த நான்கு உறுப்புகள் உவமையை அமைக்கின்றன.

ஒன்றை விளக்கவும் தெளிவுபடுத்தவும் அழகுபடுத்தவும் உவமையே எளியதும் தொன்மை மிக்கதாகவும் உள்ளது. சங்கப்பாடல்களில் பெரும்பாலும் உவமை அணியே இடம்பெற்றுள்ளது. பிற அணிகள் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியத்தைத் தொகுத்தவர்கள் பாடல் ஆசிரியர்களின் பெயர் தெரியாதபோது அப்பாடலில் உள்ள உவமையைக் கொண்டே பெயர் சூட்டினர். செம்புலப்பெயல்நீரார், தேய்புரிபழங்கயிற்றினார், அணிலாடு முன்றிலார் என்பவை அப்படிப்பட்ட பெயர்கள்.

> *ஊர்க் குறுமாக்கள் வெண்கோடு கழாஅலின்*
> *நீர்த்துறை படியும் பெருங்களிறு போல*
> *இனியை பெரும எமக்கே மற்றதன்*
> *துன்னரும் கடாஅம் போல*
> *இன்னாய் பெரும!நின் ஒன்னா தோர்க்கே*
>
> (புறம்–94)

ஔவையார் அதியமானின் வெற்றிப் புகழையும் வீரச் சிறப்பையும் மிகச் சுருங்கிய அடிகளில் அழகாகப் புனைகிறார். குளத்தில் ஊர்ச்சிறு பிள்ளைகள் யானைமீது நீரை இறைத்தும் வெண்கொம்புகளைத் கழுவியும் விளையாடுவர். அவ் யானைக்கு மதம் பிடித்துவிட்டால் யாரும் பக்கத்தில் அணுக முடியாது. அதியமானும் அப்படிப்பட்டவன்தான். பரிசிலர்க்கு இனியன். பகைவர்க்கு இன்னாதவன். யானை பற்றிய உவமை இப்பாடலுக்கு உயிரூட்டுகிறது.

> *கண்ணீரை நீ*
> *துடைத்த போது*
> *நட்சத்திரங்கள் துடைக்கப்பட்ட*
> *வானம் போல்*
> *உன் முகம்*
> *இருண்டு போயிருந்தது......*

என்னும் புதுக்கவிதை அடிகளிலும் உவமை அமைந்துள்ளதைக் காணலாம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 128 23-10-2018 12:20:04

**வினை உவமை**

*அவர்கள் மூளையில்*
*விதையைப் போல்*
*தூவப்பட வேண்டிய அறிவு*
*ஆணியைப்போல்*
*அறையப்படுகின்றது.*

**பயன் உவமை**

*வறண்ட வாழ்வு*
*துளிர்க்க*
*மழைபோல் வந்தாய் நீ!*

**மெய் உவமை ( வடிவம்)**

*சுருக்கிய*
*குடையைப் போலத்*
*தோன்றும்*
*அசோகமரம்.*

**உரு உவமை ( நிறம் )**

*சோடிய விளக்காய்*
*மாலைநேரச் சூரியனின்*
*மஞ்சள் வெளிச்சம்*
*தெருவில் நிரம்பி வழிந்தது.*

ஆகிய கவிதைகளில் உவமை தோன்றும் களங்கள் வெளிப்பட்டுள்ளன.

**உருவகம்**

ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்பொழுது அது உருவகம் எனப்படுகிறது. உவம உருபுகளை விரித்துச் சொல்வதைவிடத் தொகுத்தும் சுருக்கியும் சொல்லுவதில் ஆற்றலும் அழகும் இனிமையும் இருப்பது தெரிந்திருக்கும். அந்தவகையில் உவமை, உவமைத்தொகையாகி உருவகமாக ஆயிற்று.

உவமையையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறுபடுத்தாமல் இரண்டும் ஒன்றே எனக்கூறுவது 'உருவகம்' ஆகும். உருவகத்தொடரில் உவமேயம் (உவமிக்கப்படும் பொருள்) முன்னும், உவமை (ஒப்பாகக் காட்டப்படும் பொருள்) பின்னுமாக அமையும்.

உவமையின் செறிவார்ந்த வடிவமே உருவகம். தாமரை போலும் முகம் என்ற உவமை செறிவூட்டப்பட்டு முகத்தாமரை என உருவகத்தை உருவாக்குகிறது. உவமையை விட உருவகம் ஆழமானது. உவமை அணியில் உவமானமும் உவமேயமும் வேறுவேறானவை என்ற எண்ணம் இருந்துகொண்டிருக்கும். உருவகத்தில் இரண்டும் ஒன்றே என்ற உணர்வு கிடைக்கிறது.

தீ போல் சினம் என்பதைச் சினத்தீ என்பார் பாரதியார். பாடல் முழுவதும் உருவகமாக அமைவதும் உண்டு.

*சுட்டும் விழிச்சுடர்தான் – கண்ணம்மா*
*சூரிய சந்திரரோ ?*
*வட்டக் கரியவிழி – கண்ணம்மா*
*வானக் கருமை கொல்லோ ?*
*பட்டுக் கருநீலப் புடவை*
*பதித்த நல்வயிரம்*
*நட்ட நடுநிசியில் – தெரியும்*
*நட்சத்திரங்களடி...*

– பாரதி–கண்ணம்மா என் காதலி

என்னும் கவிதையில்தான் எத்தனை உருவகங்கள். பாஞ்சாலி சபதத்தில் அர்ச்சுனன் பாஞ்சாலியிடம் கதிரவன் ஒளிபட்டு விதவிதமான மாயம் கொள்ளும் மேகங்களுக்குக் கூறுகின்ற உருவகங்கள் உள்ளம் கவர்ந்தவை. தீயின் குழம்புகள், செழும்பொன் காய்ச்சிவிட்ட ஓடைகள், தங்கத்தீவுகள், நீலப்பொய்கைகள், தங்கத்தோணிகள், கருஞ்சிகரங்கள், தங்கத் திமிங்கலங்கள் என்றெல்லாம் உருவகிப்பது அழகூட்டுகிறது.

உருவகத்திலும் வினை உருவகம், பயன் உருவகம், வடிவ (மெய்) உருவகம், உரு (நிறம்) உருவகம் என்ற பகுப்பு உண்டு.

எண்ணவலை பின்னும் மூளைச் சிலந்தி... (சிந்தனை) – வினை

ஆவேசப் புயல்களாலும் அசைக்க முடியாத ஆகாசப் பூ... (கதிரவன்) – பயன்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 129 23-10-2018 12:20:04

நீலவயலின் நட்சத்திர மணிகள்... (வானமும் விண்மீன்களும்) - மெய்

மலைக்கிழவியின் நரைத்த கூந்தல்... (அருவி) - நிறம்

## உள்ளுறை உவமம்

கவிஞர் தான் கூறக்கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல், அகமாந்தரின் மன உணர்வுகளைக் கருப்பொருள்கள் மூலம் உவமைப்படுத்துவதை உள்ளுறை உவமம் (உவமை) என்பர்.

உள்ளுறை உவமம் என்பது தமிழ் இலக்கியத்திற்கே உரிய ஒப்பற்ற நெறி. அன்பிற்கு ஆட்படும் தலைவன் தலைவியரின் எண்ணங்களைச் சொற்களால் வெளிப்படுத்தாமல் நாகரிகமாக மறைத்துக் கூறுவதற்காக அமைத்துக்கொள்ளும் வடிவமாகவும் இதைக் கருதுகின்றனர்.

இலக்கியங்களில் காணப்படும் கருப்பொருள்களின் காட்சி இயற்கைப் புனைந்துரைகளாக மட்டும் நின்றுவிடாமல், பாடல்களில் இடம்பெறும் மாந்தர்களின் உள்ளத்தெழும் உணர்வுகளின் குறிப்புப் பொருளாகவும் உள்ளுறை அமையும்.

ஓவியம், சிற்பம் முதலிய நுண்கலைகளிலும் குறிப்புப் பொருள்கள் உண்டு. ஆனால், அவை எல்லாருக்கும் எல்லாக் காலத்திலும் விளங்கும் என்று கூறமுடியாது. கவிதைகளில் உள்ள குறிப்புப்பொருள் காலம் கடந்து நிற்கும் ஆற்றல் உடையது. எனவே கருப்பொருள் கொண்டு விளக்கப்படும் குறிப்புப் பொருளாகிய உள்ளுறை உவமம் தமிழிலக்கியத்தின் நேரிய, இனிய, நாகரிக வழியாகும்.

தோழிக்குச் சொல்வதுபோல் தலைவி, மறைந்து நிற்கும் தலைவனுக்குச் சொல்வதாகப் பெருங்குன்றூர் கிழார் பாடிய பாடல் ஒன்றில் உள்ளுறை உவமம் அமைந்துள்ளதைக் காண்போம்.

| உள்ளுறை |
|---|
| வினை, பயன் போன்ற அடிப்படைகளில் தோன்றும். |
| குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும். |

*ஈயல் புற்றத்து ஈர்ம்புறத்து இறுத்த*
*குறும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை*
*தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்*
*பாம்புமதன் அழியும் பானாட் கங்குல்*

– அகம். 8



தலைவன் பிறர் அறியாமல் தலைவியைச் சந்திக்க இரவு நேரத்தில் வருகிறான். அவ்வேளையில் பசியுடன் அலையும் கரடியொன்று ஈசல்கள் நிறைந்த புற்றில் கையைவிட்டுப் பார்க்கிறது. அந்த ஈசல் புற்றில் சுருண்டு படுத்திருந்த பாம்பினைக் கரடி அறியவில்லை. கரடியின் நகங்கள் பட்டு, பாம்பு வலியால் துடிக்கிறது. இங்குக் கரடியின் செயலும் பாம்பின் துன்பமும் காட்டப்படுகின்றன.

ஆனால், உள்ளே உறைந்திருக்கும் செய்தி வேறு. இரவு நேரத்தில் காட்டைக் கடந்துவரும் தலைவன் செயலால் தலைவி அஞ்சி வருந்துவதை இப்பாடல் தெரிவிக்கிறது. கரடி தலைவனுக்கும் பாம்பு தலைவிக்கும் குறியீடுகளாய் அமைந்து உள்ளுறை உவமம் உருவாகிறது. மேலும் இப்பாடலில் உள்ளுறை உவமத்துடன் இறைச்சிப் பொருளும் அமைந்துள்ளது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 130 23-10-2018 12:20:04

### இறைச்சி

உள்ளுறை போன்றே இறைச்சி என்பதும் அகப்பாடலில் வருகின்ற மற்றொரு உத்தி ஆகும். இதுவும் குறிப்புப்பொருளில்தான் வரும்.

இறைச்சியில் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே

(தொல். பொருள் 36)

இறுத்தல் என்றால் தங்குதல் எனப் பொருள்படும். உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருளே இறைச்சி ஆகும். இது வடமொழியினர் குறிப்பிடுகிற தொனிக்கு இணையானது. தொனி அகப்பாடலிலும் புறப்பாடலிலும் வரும். ஆனால், இறைச்சி அகப்பாடலில் மட்டுமே வரும்.

*நசைபெரிது உடையர் நல்கலும் நல்குவர்*
*பிடிபசி களைஇய பெருங்கை வேழம்*
*மென்சினை யாஅம் பொளிக்கும்*
*அன்பின தோழிஅவர் சென்ற ஆறே*

(குறுந்தொகை – 37)



## தெரிந்து தெளிவோம்

கவிஞர், தெரியாத பொருள் ஒன்றைத் தெளிவாக விளக்குவதற்குத் தெரிந்த பொருளை உவமையாகப் பயன்படுத்துவர். வெளிப்படையாகப் பொருள்கூறினால் உவமை. உவமைக்குள் மற்றொரு பொருளைக் குறிப்பாக உணர்த்தினால் உள்ளுறை உவமை. குறிப்புப் பொருளுக்குள் மேலும் ஒரு குறிப்புப் பொருள் அமைந்திருக்குமானால் அதற்கு இறைச்சி என்று பெயர். உள்ளுறை உவமம் கவிதைப் பொருளோடு சேர்ந்து காணப்படுகிறது. இறைச்சிப் பொருள் கவிதைப்பொருளின் புறத்தே குறிப்புப் பொருளாய் வெளிப்படுகிறது.

தலைவன் விரைவில் வருவான் எனத் தோழி தலைவியை ஆற்றுவிக்கிறாள். தலைவன் செல்லும் வழியில் யானை தன் பெண்யானையின் பசியைப் போக்குவதற்காக யா மரத்தின் பட்டையை உரித்து அதிலுள்ள ஈரச்சுவையைப் பருகச்செய்யும். இதுதான் பாடலின் கருத்து. ஆனால், இதில் சொல்லப்படாத குறிப்பு ஒன்றுள்ளது. தலைவன் இந்த அன்புக்காட்சியைப் பார்ப்பான்; உடனே திரும்பி வந்து தலைவியின் துன்பத்தைத் தீர்ப்பான் என்பது இதிலுள்ள குறிப்புப் பொருளாகும். இக்குறிப்புப் பொருளே இறைச்சி ஆகும். உரிப்பொருளின் புறத்தே நின்று அதன் கருத்தை மேலும் சிறப்பிக்கப் பயன்படுகிறது இறைச்சி.

சொல்லாமல் சொல்வதில்தான் கவிதை இன்பம் சிறக்கிறது. தலைவனின் செயலைக் கண்டிப்பதற்கும் எள்ளி நகையாடுவதற்கும் வருத்தத்தை வெளிப்படுத்தவும் திருமணத்தை வலியுறுத்தவும் இறைச்சி உத்தி பயன்படுகிறது.

"நீ விளையாடி மகிழும் இடத்தில் உள்ள இப்புன்னைமரம் உன்னைவிடச் சிறந்தது என்றும் உனக்குத் தங்கையாவாள் என்றும் நற்றாய் என்னிடம் கூறினாள். அதனால்,



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_113-138.indd 131 23-10-2018 12:20:04

இம்மரத்தடியில் உம்முடன் விளையாட நாணுகிறேன். ஏனெனில் தங்கை அருகிருக்க தலைவனுடன் பழகுவது முறையா?" என்று தலைவி தலைவனிடம் கூறினாள்.



*நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று*
*அன்னை கூறினள் புன்னையது சிறப்பே*
*அம்ம நாணுதும் நும்மொடு நகையே*

(நற்றிணை – 172)

இப்பாடலில், நாம் வேறு இடத்தில் சந்திக்கலாம் என்னும் குறிப்புப்பொருளும் தலைவியைத் தலைவன் விரைவில் மணந்துகொள்ள வேண்டும் என்னும் குறிப்புப் பொருளும் அமைந்துள்ளன. இக்குறிப்புப் பொருளே இறைச்சி ஆகும்.

கற்பவை கற்றபின்...



1. பூவை விட்டு இறங்காதே
இறக்கை முறிந்த வண்ணத்துப் பூச்சியே
உனக்காக எறும்புகள்.

2. மனிதர்க்கு உணவாவதை எண்ணி
கண்ணீர் விட்டனவோ மீன்கள்
கடல் நீரில் உப்பு.

– இக்கவிதைகள் படைப்பாக்க உத்திகளால் தனித்துவம் பெற்றுள்ளன – விளக்குக.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும் ?

2. உவமைத்தொடர்களால் அழைக்கப்பெறும் சங்கப்புலவர்கள் பெயர்களைத் தொகுத்து அவற்றில் உள்ள உவமையைக் கண்டறிக.

3. ஒட்டுப் போடாத
ஆகாயம் போல – இந்த
உலகமும் ஒன்றேதான்... - இக்கவிதையில் பயின்றுவருவது

அ) உவமை  ஆ) உருவகம்  இ) உள்ளுறை  ஈ) இறைச்சி

4. கீழ்க்காண்பனவற்றுள் 'இறைச்சி 'பற்றிய கூற்றைத் தேர்க.

அ) குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்.
ஆ) ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்.
இ) வினை, பயன், வடிவம், நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்.
ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருள்.

5. உள்ளுறைக்கும் இறைச்சிக்கும் உள்ள வேறுபாட்டினைச் சான்றுகளுடன் ஆய்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 132 23-10-2018 12:20:04

# நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் --- என்பதாகும்

   அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

2. சரியான விடையைத் தேர்க.

| | | |
|---|---|---|
| அ) கல்வி அழகே அழகு | - | 1) தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைப்பாடல் |
| ஆ) இளமையில் கல் | - | 2) திருமந்திரம் |
| இ) துணையாய் வருவது தூயநற்கல்வி | - | 3) ஆத்திசூடி |
| ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் | - | 4) திருக்குறள் |
| | - | 5) நாலடியார் |

   *i)* அ-2, ஆ-3, இ–4, ஈ-1 *ii)* அ-3, ஆ-4, இ–1 , ஈ-2

   *iii)* அ-5, ஆ-3, இ–2 , ஈ-1 *iv)* அ-4, ஆ-1, இ–2 , ஈ-5

3. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும்கொண்ட நூல்

   அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

4. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை

   அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

5. நிழல்போலத் தொடர்ந்தான் – இது எவ்வகை உவமை?

   அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) மெய்

**குறுவினா**

1. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?
2. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
3. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
   கோடையில் கொட்டும் பூக்களை
   எண்ணச் சொல்கிறார்கள் – எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
4. கொழுஞ்சோறு - புணர்ச்சி விதி கூறுக.
5. உவமை, உருவகம் – வேறுபடுத்துக.

**சிறுவினா**

1. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
2. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.
3. "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
   அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 133 23-10-2018 12:20:04

4. *சின்னதொரு துண்டைத்*
*திரும்பத் திரும்பக் கட்டி*
*அழகு பார்க்கிறாள் செல்ல மகள்*
*முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொள்கிறாள்*
*ஒரு குட்டி நாற்காலியே வீடாகிவிடுகிறது*
*துண்டைக் கட்டிக்கொண்டு தாயாகவும்*
*மாறிக்கொள்ள முடிகிறது அவளால்.*
*துண்டு ஒன்றுதான்...*
*அதுவே அவளது மகிழ்ச்சியும்*
*என் துக்கமும்*

– இப்புதுக்கவிதையில் வெளிப்படும் கருத்தை ஆராய்ந்து எழுதுக.

5. உள்ளுறை உவமை, இறைச்சி – எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**நெடுவினா**

1. பௌத்தக் கல்வி , சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.
2. தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?
3. பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்**

### ஜி.யு. போப்

செந்தமிழ்ச் செம்மல் டாக்டர் ஜி.யு. போப், 1839ஆம் ஆண்டில், தென்னிந்தியாவுக்கு வந்தார். சென்னையை அடைந்த போப், 'சாந்தோம்' என்னும் இடத்தில் முதன்முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார். ஆங்கிலேயரான அவரின் தமிழுரை கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது. தமிழ் மொழியைப் பயிலத்தொடங்கிய சிறிது காலத்திலேயே, ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தில், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.



ஜி.யு. போப்
(1820–1908)

போப் அவர்கள் தஞ்சாவூரில் வாழ்ந்தபோது, தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுற அறிந்தார். அப்போதுதான் தொல்காப்பியம், நன்னூல் முதலிய பேரிலக்கண நூல்களைப் பாடசாலை மாணவர் படிப்பது எளிதன்று என்பதைக் கண்டு, சிறிய தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை எழுதி வெளியிட்டார். ஐரோப்பியர், தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்குரிய நூல் ஒன்றை (Tamil Hand Book) எழுதினார். ஆங்கில மொழியில் எழுதப்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-138.indd 134 23-10-2018 12:20:04

பெற்றிருந்த தமிழ்நாட்டு வரலாற்றை, தமிழில் எழுதிப் பதிப்பித்தார். பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார். எழுபது ஆண்டுகள் தமிழோடு வாழ்ந்திருந்து, தமிழுக்கு நலம் செய்த பெரியார் ஜி.யு. போப் ஆவார்.

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக:**

1. இலக்கணக் குறிப்புத் தருக. அ) பிறந்தார் ஆ) அருளிய
2. திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு. போப் – விடைக்கேற்ற வினாவை எழுதுக.
3. பதிப்பித்தார் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
4. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

   பள்ளிகூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்து துறை கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகையக் கல்வியேப் பயனளிக்குமென்றும் போப் கருதினார்.
5. பொருத்துக.

   அ) தொல்காப்பியம் - i) சங்க நூல்

   ஆ) திருக்குறள் - ii) பக்தி நூல்

   இ) புறநானூறு - iii) அற நூல்

   ஈ) திருவாசகம் - iv) இலக்கண நூல்

**செய்திக்குக் கீழுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை மொழிபெயர்ப்புப் பகுதியிலிருந்து கண்டறிந்து எழுதுக.**

| | |
|---|---|
| The Chinese have no religious science. The practices of their religion (Buddhism) are derived from India. They believe that it is the Indians who brought idols to them and that the latter were their religious educators. In China and in India they believe in metempsychosis. The Chinese and Indians draw from the same religious principles different conclusions. In India medicine and philosophy are practiced. The Chinese practice medicine equally. Their chief treatment is cauterization. The Chinese practice astronomy but the Indians practice this science still more.<br>Written by Abu Zayd Al Sirafi, traveler, 10th century.<br>– Foreign notices of South India by K.A. Neelakanda sastri | சீனாவுக்கென்று தனியாக மதங்கள் இல்லை. இந்தியாவின் மதத்தை (பவுத்தம்) அவர்கள் கடைப்பிடிக்கின்றனர். சிலைகளைத் தங்களுக்கு அறிமுகம் செய்தோர் இந்தியர்கள் என்று நம்பும் சீனர்கள், இந்தியர்களே தங்களின் மத ஆசிரியர்கள் என்றும் கருதுகின்றனர். இந்தியாவிலும் சீனாவிலும் மரணத்துக்குப் பின்னான மறுபிறப்பை நம்புகின்றனர். ஒரே மத கோட்பாடு இருந்தாலும், சீனர்களும் இந்தியர்களும் வெவ்வேறு தீர்மானங்களுக்கு வருகிறார்கள்.<br>இந்தியாவில் மருத்துவமும், தத்துவமும் நடைமுறையில் உள்ளன. அவர்களுக்குச் சமமாகச் சீனர்களும் மருத்துவத்தை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். 'தீய்த்தல்' அவர்களது பிரதான சிகிச்சை முறை. சீனர்கள் வானியல் சாஸ்திரப் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். ஆனால் இந்த அறிவியலை இந்தியர்கள் இன்னும் அதிகமாய்ப் பயன்படுத்துன்றனர். |

Religion ------------------ Medicine --------------

Philosophy ------------------ Science --------------- Idols -------------



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

**கீழ்க்காணும் பத்தியில் உள்ள உருவகங்களையும் உவமைகளையும் பட்டியலிடுக. உருவகங்களை உவமைகளாக மாற்றுக. உவமைகளை எவ்வகை உவமைகள் என்று எழுதுக.**

விழிச்சுடர் வாசலில் உட்கார்ந்திருந்தாள். அவளது எண்ணவலையில் மின்னல்களைப் போன்ற சொற்கள் தோன்றி மறைந்தன. அடுக்கிவைக்கப்படாத புத்தகங்களைப்போலக் குழம்பிய எண்ணங்களை ஒழுங்குபடுத்த நினைத்தாள். நேரம் நத்தையைப்போல மெதுவாக நகர்ந்தது. அண்ணாந்து பார்த்தாள். நீலப்பட்டு உடுத்தியதைப் போன்ற வானம் அம்மாவை நினைவூட்டியது. பூனைக்குட்டியைப்போல அம்மாவின் முந்தானைக்குள் சுருண்டுகொள்ள நினைத்தாள். பூனைக்குட்டியை மடியில் வைத்துக்கொண்டதைப்போல அம்மாவின் கதகதப்பை உணர்ந்தாள். பசிக்கயிற்றால் சுண்டிவிடப்பட்டவள், பூட்டியிருந்த வீட்டுக்கதவின்மேல் சாய்ந்தபடி அம்மாவின் வருகைக்காகக் காத்திருக்கத் தொடங்கினாள்.

**கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

கல்வி என்றால் என்ன? அது புத்தகங்களைப் படிப்பதா? அல்லது அது பலவிதமானதைக் குறித்த அறிவா? அதுவும் இல்லை. எத்தகைய பயிற்சியின்மூலம் மனத்தின் ஆற்றலும் அது வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுப் பயன்தரும் வகையில் அமைகிறதோ, அந்தப் பயிற்சிதான் கல்வியாகும். அக்கல்வி வளர்ச்சிக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் மனத்தை ஒருமுகப்படுத்தும் பயிற்சி. கல்வியின் நோக்கம் செய்திகளைப் பற்றிய அறிவைச் சேமிப்பதன்று. கல்வியின் நோக்கமே மனத்தை ஒருமுகப்படுத்துவதுதான். மனவொருமைப்பாடே கல்வியின் அடிப்படை.

எல்லோரும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கு அம்முறையைத்தான் பின்பற்றியாக வேண்டும். மனத்தை ஒருமுகப்படுத்தும் அளவுக்கு அறிவும் வளரும். இயற்கையால் மூடப்பட்டிருக்கும் அறிவுச்சுடரைத் திறப்பதற்கு இதுவொன்றே சிறந்த வழியாகும். மனிதன் தன் சக்தியை நூற்றுக்குத் தொண்ணூற்று விழுக்காடு வீண் செய்து விடுகிறான். இதனால்தான், அவன் அடிக்கடி தவறுகள் செய்கிறான். பண்புடைய மனத்தைப் பெற்றவன் ஒரு தவற்றையும் செய்ய மாட்டான்.

மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள முக்கிய வேறுபாடு மனத்தை ஒருமுகப்படுத்துவதில்தான் இருக்கிறது. எத்துறையிலும் வெற்றி பெறுவது, இதைப் பொறுத்துத்தான் அமைகிறது. இசை, ஓவியம், சிற்பம் முதலிய எல்லாக் கலைகளிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெறச் செய்வது மன ஒருமைப்பாடுதான். மேலும், உலகத்தின் புதிர்களை மூடி வைத்திருக்கும் கதவுகளைத் திறக்கக்கூடிய வலிமையை நாம் பெற வேண்டும். இவ்வலிமையை நமக்கு அளிக்கக்கூடியது மன ஒருமைப்பாடுதான். அதுவே கல்விக்கு அடிப்படையாகும். ( கல்வி – சுவாமி விவேகானந்தர்)

**இலக்கிய நயம் பாராட்டுக.**

*பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி*
*பேணி வளர்த்திடும் ஈசன்;*
*மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல*
*மாதர் அறிவைக் கெடுத்தார்.*
*கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி*
*காட்சி கெடுத்திட லாமோ?*
*பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்*
*பேதமை யற்றிடும் காணீர்*

*– பாரதியார்*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_113-136.indd 136 23-10-2018 12:20:04

## மொழியோடு விளையாடு

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



**மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடிக்க.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கோ | ஸா | ல் | சு | யா | ம் | மா | ண் | பு | பௌ |
| த் | ர | வ | வ | ஜ | ற | யா | ஜ | வி | த் |
| தா | த | னு | டி | வி | ன் | தி | வே | க் | த |
| ரி | ம | ப | ட் | டி | ம | ண் | ட | ப | ம் |
| ர் | ம் | க | ந | ற் | றி | ணை | ல் | போ | ட |
| னா | ண | ண | ம் | பா | ர் | ப் | ர | த | கூ |
| ட | க | க் | க | ல | யா | ப | ம் | னா | க் |
| லா | க் | கா | த | பா | தி | ள் | ண | ர் | ளை |
| ல் | ல | ய | த் | ர | ர | ளி | ம | கு | ள் |
| க | இ | ன் | பொ | தி | பா | ம் | ச | ர | பி |

**சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

(எ.கா.) *கால்நடை*

– *கால்நடைகளை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிக் கொண்டு போனார்கள்.*

– *சிறிய தொலைவைக் கடக்கக் கால் நடையாகச் செல்வது உடலுக்கு நலம் பயக்கும்.*

1. *பிண்ணாக்கு –*
   *பிள்நாக்கு –*
2. *எட்டுவரை –*
   *எள்துவரை –*
3. *அறிவில்லாதவன் –*
   *அறிவில் ஆதவன் –*
4. *தங்கை –*
   *தம் கை –*
5. *வைகை –*
   *வை கை –*
6. *நஞ்சிருக்கும் –*
   *நஞ்சு இருக்கும் –*

**செய்து கற்போம்**

*அருகில் உள்ள மாற்றுத் திறனாளர் பள்ளிக்குக் களப்பயணம் சென்று, அம்மாணவர்கள் கற்கும் முறைகள் குறித்து எழுதுக.*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_113-136.indd 137 23-10-2018 12:20:05

## நிற்க அதற்குத் தக

கல்வி. நம்மைப் பண்படுத்த வேண்டும். நாம் பண்பட்டிருக்கிறோமா?

| கல்வியின் விளைவு | என்ன செய்தீர்கள் / செய்வீர்கள் ? |
|---|---|
| பெரியவர்களுக்கு மதிப்பளித்தல் | |
| பகுத்தறிவுச் சிந்தனையை வளர்த்தல் | |
| பொறுமையைக் கடைப்பிடித்தல் | |
| தன்னை அறிதல், தன்னம்பிக்கை வளர்த்தல் | |
| சமத்துவம் பேணுதல் | |
| உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் | |

### கலைச்சொல் அறிவோம்

கல்விக்குழு – Education Committee உள்கட்டமைப்பு – Infrastructure செம்மொழி – Classical Language
மூதாதையர் – Ancestor மதிப்புக்கல்வி – Value Education மன ஆற்றல் – Mental Abilities

**தமிழகக் கல்வி – 1826ஆம் ஆண்டு நிலை**

| மாவட்டம் | பள்ளிகள் | | கல்லூரிகள் | | ம. தொகை |
|---|---|---|---|---|---|
| | எண். | மாணவர் | எண். | மாணவர் | |
| மலையாளம் | | | | | |
| மலபார் | 759 | 14153 | 1 | 75• | 907575 |
| தமிழ் | | | | | |
| வடஆற்காடு | 630 | 7326 | 69 | 418 | 892292 (577020) |
| தென் ஆற்காடு | 875 | 10523 | | | 455020 (420530) |
| செங்கல்பட்டு | 508 | 6845 | 51 | 398 | 363129 |
| தஞ்சாவூர் | 884 | 17582 | 109 | 769 | 901353 (382667) |
| திருச்சிராப்பள்ளி | 790 | 10331 | 9 | 131 | 481292 |
| மதுரை | 844 | 13781 | | • | 788196 |
| திருநெல்வேலி | 607 | 9377 | | | 564957 |
| கோயம்புத்தூர் | 763 | 8206 | 173 | 724 | 638199 |
| சேலம் | 333 | 4326 | | 324 | 1075985 |
| மதராஸ் | 322 | 5699 | | • | 462051 |
| தமிழ் பேசும் பகுதியில் மொத்த மாணவர்கள் | | 93996 | | | |
| மொத்தம் | 11575 | 157195 | 1094 | 5431 | 12850941 |

• மாறுபட்ட எண்ணிக்கை அடைப்புக்குறிக்குள் இடம்பெற்றுள்ளன.

1800களில் இந்தியாவில் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கையும் கற்றுத் தரப்பட்ட பாடங்களும் பெரும்பாலான விஷயங்களில் பல மடங்கு மேலானதாக இருந்திருக்கின்றன. பிரிட்டனில் அப்போது கற்றுத் தரப்பட்ட பாடங்களைவிட இந்தியாவில் கற்றுத்தரப்பட்ட பாடங்கள் உயர்வாக இருந்திருக்கின்றன. கல்விகற்கும் காலஅளவும் அதிகமாகவே இருந்திருக்கிறது. கற்றுக் கொடுக்கும் முறையும் மேலானதாக இருந்திருக்கிறது. இந்தியாவில் இருந்த வழிமுறையே இங்கிலாந்தில் அனைவருக்கும் கல்வியைக் கொண்டுவர வழிகாட்டி இருக்கிறது. ஆனால் அது இந்தியாவில் அதற்கு முன்பே பல நூற்றாண்டுகளாக இருந்திருக்கிறது.

பள்ளிக்கு வருபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த நிலையில் இருந்த 1822–25 காலகட்டத்தில்கூட மதராஸ் பிரஸிடென்ஸியில் படித்தவர்களின் எண்ணிக்கையானது 1800களில் இங்கிலாந்துப் பள்ளிகளோடு ஒப்பிடும்போது பலமடங்கு அதிகமாகவே இருந்திருக்கிறது. இந்தியாவில் பள்ளிச்சூழல் மிகவும் இயல்பானதாகவும் நெருக்கடிகள் இல்லாததாகவும் இருந்திருக்கிறது.

– தரம் பால்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_113-138.indd 138 23-10-2018 12:20:05

இயல் 6

# நாளெல்லாம் வினைசெய்



## கற்றல் நோக்கங்கள்

- நாட்குறிப்பு இலக்கியத்தின் இன்றியமையாமையை உணர்ந்து நாட்குறிப்பு எழுதுதல்
- சமய நல்லிணக்கத்தினைப் போற்றிப் பின்பற்றுதல்
- வாழும் நகரின் வரலாற்றுச் சிறப்புகளைப் படைப்பின்வழி வெளிப்படுத்துதல்
- ஆசிரியப்பாவின் இலக்கணத்தைப் பாடல்கள்வழி அறிந்து எழுத முனைதல்
- சிறுகதை இலக்கியத்தின் மையக்கருத்தை உணர்ந்து திறனாய்வு செய்யும் திறன் பெறுதல்

## பாடப் பகுதி

ஆனந்தரங்கர் நாட்குறிப்பு
சீறாப்புராணம் – உமறுப்புலவர்
அகநானூறு – வீரை வெளியன் தித்தனார்
பிம்பம் – பிரபஞ்சன்
பா இயற்றப் பழகலாம்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_139-170.indd 139 23-10-2018 12:50:20

# ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

293Q3G

## நுழையும்முன்

பன்மொழிப் புலமையும் பல்துறை ஆளுமையும் கொண்ட ஆனந்தரங்கர் புதுச்சேரி வரலாற்றினைப் பதிவு செய்தவர்களில் முதன்மையானவர். அவருடைய நாட்குறிப்பு, 18ஆம் நூற்றாண்டின் புதுவை வரலாற்றினை அறிந்துகொள்ள நமக்குக் கிடைத்த அரிய பெட்டகமாகும். புதுச்சேரியில் பிரெஞ்சு ஆட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும் அவரின் வாழ்வோடு ஒன்றியிருப்பது ஓர் அரிய நிகழ்வு.

நாட்குறிப்பு என்பது தனிமனிதர் ஒருவரின் அன்றாட நிகழ்வுகளை அல்லது பணிகளைப் பதிவு செய்யும் ஏடாகும். இதனை ஆங்கிலத்தில் டைரி என்று அழைப்பர். டைரியம் என்னும் இலத்தீன் சொல்லின் மூலமான டைஸ் என்ற சொல்லில் இருந்து இச்சொல் உருவாயிற்று.

நாட்குறிப்புகளின் முன்னோடியாகத் திகழ்வது EPHEMERIDES என்று அழைக்கப் பெறும் கிரேக்கக் குறிப்பேடு ஆகும். இச்சொல் ஒரு நாளுக்கான முடிவு என்னும் பொருளைத் தரும். முகலாய மன்னர்களில் பாபர் காலம் முதல் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இருந்து வந்துள்ளது. ஔரங்கசீப் ஆட்சிக்காலத்தில் நாட்குறிப்பு எழுதுவது தடை செய்யப்பட்டிருந்தது. 1498இல் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கடல்வழியைக் கண்டுபிடித்த போர்ச்சுகீசிய மாலுமி வாஸ்கோடகாமா நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உள்ளவர். அவருடைய நாட்குறிப்புகள் ஆல்வாரோ வெல்லோ என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆனந்தரங்கர் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் குழுமத்தின் மொழிபெயர்ப்பாளராகவும் துய்ப்ளே என்ற பிரெஞ்சு ஆளுநரின் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர். இவருடைய நாட்குறிப்புகள் 25 ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துவதோடு. அக்காலத்திய பிரெஞ்சு அரசு பற்றி அறிய உதவும் சிறந்த வரலாற்று ஆவணமாகவும் இலக்கியமாகவும் திகழ்கின்றன.

### ஆனந்தரங்கர்



பிரான்சுவா மர்த்தேனுக்குப் பிறகு கியோம் ஆந்த்ரே எபேர் புதுச்சேரியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். அவர்தம் தரகராக நைனியப்பர் நியமிக்கப்பட்டார். நைனியப்பரின் மைத்துனர் திருவேங்கடம் என்பவரின் மகன் ஆனந்தரங்கர். இவர் 1709ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 30ஆம்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_139-170.indd 140 23-10-2018 12:50:20

நாள் சென்னையிலுள்ள பெரம்பூரில் பிறந்தார். தம்முடைய பதினேழு வயதில் தந்தையை இழந்த ஆனந்தரங்கர், பிரெஞ்சு மேலதிகாரி அலனுவார் உதவியால் பரங்கிப் பேட்டை நெசவுச்சாலைக்கும் சாயம் தோய்க்கும் கிடங்குக்கும் தலைவராக நியமிக்கப்பட்டார்.

உழைப்பும் உண்மையும் உறுதியும் மிக்க ஆனந்தரங்கர் பிரெஞ்சு ஆளுநர் துய்ப்ளே காலத்தில் தலைமைத் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். வல்லாண்மை மிக்க பிரெஞ்சு ஆட்சியரின் நம்பிக்கைக்கு உரியவராக, மிகுந்த அரசியல் செல்வாக்குடன் திகழ்ந்தார்.

ஆனந்தரங்கர், தம்முடைய நாட்குறிப்பில் ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, அந்த நாளின் நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டே செய்திகளை எழுதியுள்ளார். ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் 12 தொகுதிகளாகத் தமிழில் வெளிவந்துள்ளன.

## நாட்குறிப்பு வெளிப்படுத்தும் அரசியல் செய்திகள்

ஆனந்தரங்கர் நாட்குறிப்பு அக்கால கட்டங்களில் புதுவையிலும், தமிழகத்திலும்,



ஆனந்தரங்கரின் கையெழுத்து

தென்னிந்தியாவிலும் நிகழ்ந்த பல்வேறு அரசியல் நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது.

*10.09.1736*ஆம் நாள் குறிப்பு பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ் நாணய அச்சடிப்பு உரிமையைப் பெற்றதை விளக்குகிறது. இந்த உரிமையைப் பெறுவதற்காக ஆளுநர் செலவழித்த பெருந்தொகையையும் ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார்.

பிரெஞ்சுக் கப்பல் தளபதி லெபூர்தொனே ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்த சென்னையை, *1746*இல் கைப்பற்றியதையும் அதனால் சினமுற்ற ஆற்காடு நவாபு அன்வர்தீன்கானின் மூத்த மகன் மகபூஸ்கான் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போரிட்டதையும் நேரில் கண்டு உரைப்பதுபோல் நாட்குறிப்பில் கூறியுள்ளார்.

தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயருடன் பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு, புகழ் பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள், தஞ்சைக் கோட்டை மீது நடத்திய முற்றுகை, இராபர்ட் கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை இட்டது முதலியவற்றையெல்லாம் வரலாற்று ஆசிரியர் போன்று நாட்குறிப்பில் விளக்கிக் கூறியுள்ளார்.

*1758*ஆம் ஆண்டு இறுதியில் சென்னைக் கோட்டை முற்றுகையை லல்லி என்பார் தொடங்கினார். கோட்டையை இடித்தும் வீடுகளைத் தரை மட்டமாக்கியும், மதிலை இடித்து அகழியைத் தூர்த்தும் கூடக் கோட்டையை லல்லியால் கைப்பற்ற

**தெரியுமா?**

உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் சாமுவேல் பெப்பிசு ஆவார். ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்து நிகழ்வுகளை (1660 – 1669) நாட்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார். இவரைப் போலவே ஆனந்தரங்கரும் 06.09.1736 முதல் 11.01.1761 வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாட்குறிப்பு இந்தியாவின் முதன்மையான நாட்குறிப்பாகும். இதனால், ஆனந்தரங்கர் இந்தியாவின் பெப்பிசு என்று அழைக்கப்படுகிறார்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_139-170.indd 141 23-10-2018 12:50:20

முடியவில்லை. அக்கோட்டையின் கவர்னர் மேஸ்தர் பிகட் மகத்தான வெற்றி பெற்றார்.

## நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள்

இவரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச்சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. பண்பாடு, சமயம், சாதி, நீதி, வணிகம், நம்பிக்கைகள் முதலான பல்வேறு கூறுகள் அடங்கிய நிகழ்வுகளை ஆனந்தரங்கர் பதிவு செய்துள்ளார்.

'11.06.1739ஆம் நாள் புதுச்சேரியின் ஆளுநர் துய்மா பிறப்பித்த ஆணையில், புதுச்சேரிப் பட்டணத்திற்குள்ளேயும், சம்பாக் கோவிலுக்குத் தெற்காகப் போகிற உப்பங்கழிப் பகுதியிலும் பட்டணத்தின் வீதிகள் எவ்விடத்திலும் காலைக்கடன் கழிப்பவர்களுக்கு ஆறு பணம் தண்டம் விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மீறியவர்களிடமிருந்து பெறப்பட்ட தண்டத்தொகையில் இரண்டு பணம் பிடித்துக் கொடுப்பவருக்கும், மீதி நான்கு பணம் சாவடிக்கும் உரியது என்று அறிவிக்கப்பட்டது. இது தெரியாமல் பலரும் தண்டம் கட்டியதாக' ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

நீதி வழங்குதல், தண்டனை அளித்தல் முதலிய செய்திகளையும் இவருடைய நாட்குறிப்பு, பதிவு செய்துள்ளது. பல்வேறு காரணங்களுக்காக மரணதண்டனை வழங்கல், காதறுத்தல், சாட்டையடி, கிடங்கில் போடுதல் முதலிய தண்டனைகள் அக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.

**ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்து உ. வே. சா.**

தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.

அந்தக் காலத்தில் நடந்த செய்திகளையெல்லாம் முக்கியமானது, முக்கியமில்லாதது என்று கூடக் கவனிக்காமல், ஒன்று தவறாமல் சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப் போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார், ஆனந்தரங்கர் .

– வ.வே.சு.

தொடர்ந்து வீடுகளில் திருடி வரும் கும்பல் ஒன்று பிடிபட்டபோது, அவர்களுள் தலைமைத் திருடனைக் கடைத்தெருவில் தூக்கில் தொங்கவிட்டனர். ஏனைய இருவருக்கும் இரண்டு காதுகளை அறுத்து, ஐம்பது கசையடிகளும் தரப்பட்டன.

ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் பெரும்பகுதி வணிகச் செய்திகளையே விவரித்துள்ளது. கணக்கு வரவு செலவுப் பட்டியல் என அச்செய்திகள் நீண்டுள்ளன. ஆனந்தரங்கரும் பிறரும் வணிகத்திற்கு முதன்மை அளித்துள்ளதை உணரமுடிகிறது. பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம் வணிகர் பலரைப் பங்குதாரராகக் கொண்ட கூட்டு நிறுவனம் ஆகும். தமது மூலதனத்திற்கு ஏற்ப ஒவ்வோராண்டும் எத்தனை கப்பல்களைக் கீழை நாடுகளுக்கு அனுப்புவது என்பது முன்பே திட்டமிடப்பட்டது. புதுச்சேரியில் இருந்து மணிலாவுக்குச் சென்ற கப்பலில் அழகப்பன் என்ற தமிழ் மாலுமி பணியாற்றியதையும் அவர் பதிவு செய்துள்ளார்.

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு ஆறு திங்கள் தேவைப்பட்டன. 11.11.1737 அன்று பிரான்சிலிருந்து புறப்பட்ட கப்பல் 08.05.1738 அன்று புதுச்சேரியை அடைந்துள்ளது. கப்பல் வந்தவுடன் பீரங்கி முழங்குதல் வழக்கத்தில் இருந்துள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் துணிகளுக்காக வர்த்தகரிடமும் தரகரிடமும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. சிலர், கழகத்தின்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 142 23-10-2018 12:50:20

வர்த்தகர் என்ற அங்கீகாரத்தைப் பெற்றிருந்தனர். துணிகள், வர்த்தகருக்கு விற்கப்பட்டபோது உரிய இரசீதுகள் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. 100க்கு 320 என்ற விகிதத்தில் அவர்கள் ஆறு திங்களுக்குள் கழகத்திற்குப் பணத்தைச் செலுத்திவிடுவதாகவும் கையெழுத்திட்டுக் கொடுத்தனர். வணிகக் கழகத்தின் அதிகாரியான கொர்னே இவற்றைப் பெற்றுப் பாதுகாத்துள்ளார்.

புதுச்சேரியில் நாணயம் அச்சிடும் உரிமையை நிஜாமிடமிருந்து பிரெஞ்சு வணிகக் கழகம் பெற்றது. இதற்கான ஆணையை 10.09.1736 அன்று கனகராயர் பல்லக்கில் வைத்து ஊருக்குள் கொண்டு வந்தார். 21 பீரங்கிகள் முழங்கின. எட்டு மாற்றுக்குக் குறைவான வராக நாணயங்களை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று பிரெஞ்சு மன்னரின் ஆணையின் பேரில் 1739ஆம் ஆண்டு மே திங்களில் அறிவிக்கப்பட்டது. பல்வேறுவிதமான வராகன்களை ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார். அவை புதுச்சேரிப் பிறை வராகன், சென்னைப் பட்டணத்து நட்சத்திர வராகன், வட்ட வராகன், பரங்கிப் பேட்டை வராகன், ஆரணி வராகன் முதலியன.

ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்கள்

480 காசு – ஒரு ரூபாய்

60 காசு – 1 பணம்

8 பணம் – 1 ரூபாய்

24 பணம் – ஒரு வராகன்

1 பொன் – 1/2 வராகன்

1 வராகன் – 3 அல்லது 3.2 ரூபாய்

1 மோகரி – 14 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம்

1 சக்கரம் – 1/2 வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்க நாணயம்.

## ஆனந்தரங்கரின் பதிவுகள்

1745ஆம் ஆண்டு 21ஆம் நாள் வியாழக்கிழமை மாலைப் பொழுதிலே வீசிய பெருங்காற்று புதுச்சேரியைச் சூறையாடியதனை,

"அஸ்தமித்த உடனே துவங்கிப் பெருங்காற்று அடித்தது. ஊரிலே உண்டான மரங்களெல்லாம் படுகாடாய் விழுந்து போனதும், வீடுகள் வெள்ளத்தில் முழுகிப்போய், அந்த வெள்ளத்திலே வீடுகளை அடித்துக்கொண்டு போனதும், மாடுகள், கன்றுகள், மனுஷர் செத்ததும் தெருவுக்குத்தெரு பிணநாற்றமாய் இருந்தது!"

என்று மனம் நொந்து எழுதியுள்ளார்.

இப்பேரிடர் புதுச்சேரியில் நிகழ்ந்தபோது மக்கள் எல்லோரும் உணவும் நீரும் இன்றி வாடினர். அப்போது ஒழுகரையிலே கனகராயர், பெருஞ்சோறு அளித்துத் தமிழரின் இரக்கத்தையும் ஈரத்தையும் வெளிப்படுத்தியதை ஆனந்தரங்கர் பெருமிதத்துடன் பதிவு செய்துள்ளார்.

இங்கிலாந்திற்கும், பிரான்சுக்கும் இடையே போர் மூண்டதால் கப்பல் வணிகம் பெரிதும் தடைபட்டது. புதுச்சேரிக்குக் கப்பல்களின் வருகை 1745ஆம் ஆண்டில் தடைபட்டுப் பெரும் பொருளாதாரத் தட்டுப்பாடு தோன்றியது. புதுச்சேரி வணிகம் முழுவதும் வீழ்ந்தது. மக்கள் எல்லோரும் கப்பல் வருகையையே எதிர்பார்க்கத் தொடங்கினர். ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கக்கூடப் பணம் இல்லாமல் ஆளுநர் துன்பப்பட்டார். இந்நிலையில் 08.06.1746ஆம் நாள் லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வந்தன. இது பற்றி ஆனந்தரங்கர், "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும், நீண்டநாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும்,



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 143 23-10-2018 12:50:21

தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள்; அதைக் காகிதத்தில் எழுத முடியாது" என்று நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

## ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புகள்

அவருடைய இறுதிக்கால நாட்குறிப்புகள் ஆங்கிலேயர் புதுச்சேரி மீது நிகழ்த்திய முற்றுகையையும் புதுச்சேரியின் வீழ்ச்சியையும் மிக விரிவாகப் பேசியுள்ளன. 1760 பிப்ரவரியில் புதுச்சேரியைத் தாக்க ஆங்கிலேயக் கப்பல்கள் வந்துகொண்டிருந்ததாகவும் செஞ்சியைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்று ஆங்கிலத் தளபதி, புதுச்சேரியை நெருங்கிவிட்டதாகவும் தகவல் வந்துள்ளது. ஆங்கிலேயப் படைகள் சாரம் வரை வந்துவிட்டதைப் பொதுமக்கள் வேடிக்கை பார்த்தனர். குண்டு சாலையை ஆங்கிலேயர் பிடித்ததும் புதுச்சேரி நகரில் பீதி நிலவியது. தேவனாம்பட்டணத்தில் மேலும் மேலும் துருப்புகளை ஆங்கிலேயக் கப்பல்கள் இறக்கின. புதுச்சேரியைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர்.

புதுச்சேரியின் ஆளுநராக லெறி இருந்த காலத்தில், புதுச்சேரியின் இராணுவ அரசியல் செய்திகளை முகலாயருக்கும், ஆங்கிலேயருக்கும் கூறுவதாக ஆனந்தரங்கர் மீது பழி சுமத்தப்பட்டது.

அப்போது ஆளுநரிடம், ஆனந்தரங்கர், "இப்பட்டணத்தில் உம்முடைய அதிகாரம்தான் இறுதியானது. அநீதியாகவும் உண்மைக்கு மாறாகவும் நடக்க நீர் விரும்பினால் உம்மைத் தடுக்கும் அதிகாரம் ஒருவருக்கும் இல்லை. ஆகவே, என்னைக் காவலில் போட விரும்பினால் உடனே செய்யலாம். பிற தண்டனையும் வழங்கலாம். இரண்டு சல்லிகூட நான் செலுத்த மாட்டேன். சிறையில் அடைத்துவிடுவீர் எனப் பயந்து ஒரு வாரத்தில் பணம் தருவேன் என்று நீர் கருத வேண்டாம்.

( தொகுதி. 11 பக்.81–84)

ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள் சில

1. ஆனந்தரங்கன் கோவை – தியாகராய தேசிகர்
2. ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் – புலவரேறு அரிமதி தென்னகன்
3. வானம் வசப்படும் – பிரபஞ்சன்

புதுச்சேரியின் இவ்வாறான சூழ்நிலையில் ஏற்கெனவே நோய்வாய்ப்பட்டு இருந்த ஆனந்தரங்கரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. 12.01.1761 திங்கள் கிழமை ஐந்து நாழிகைக்குப் பட்டணத்தின் மீது பீரங்கிக் குண்டுகள் விழுந்து கொண்டிருந்த வேளையில் ஆனந்தரங்கர் மறைந்தார்.

1736ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் நாள் தொடங்கி ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றைப் பதிவுசெய்த ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 1761ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் நாளோடு முடிவடைந்துள்ளது. புதுச்சேரியின் முற்றுகை பற்றிய முடிவினைக் கூறாமலேயே நாட்குறிப்பும் முடிந்துள்ளது. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு 12 தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது வெளிப்படுத்தும் விரிவான செய்திகளை, வரலாற்றறிஞர் தம் குறிப்புரைகளின் துணையோடு கண்டறிய முடியும்.

கற்பவை கற்றபின்...

1. உங்களது ஒரு வாரத்திய நிகழ்வுகளை நாட்குறிப்பில் பதிவு செய்க.
2. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு விவரிக்கும் நிகழ்வுகளைக் காலக்கோட்டில் அமைத்துக் காட்டுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 144 23-10-2018 12:50:21

கவிதைப்பேழை

இயல் 6

# சீறாப்புராணம்

297CRD




அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனின் திருத்தூதர் நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்று இலக்கியம் சீறாப்புராணம். இது தமிழ் இலக்கிய மரபுகளைப் பின்பற்றி எழுதப்பட்ட தலைசிறந்த இசுலாமிய இலக்கியமாகும். பகையும் வறுமையும் நோயும் தீண்டாப் பொருள்வளம் நிறைந்த மதீனா நகரில் தானத்திலும் தவத்திலும் சிறந்து விளங்கிய மக்கள் தீன் நெறியை வளர்த்த பாங்கினைச் செலவியற் காண்டம் (ஹிஜிறத்துக் காண்டம்) காட்சிப்படுத்துகிறது.

## ஹிஜிறத்துக் காண்டம் – மதீனம் புக்க படலம்

ஹிஜிறத் என்ற அரபுச் சொல்லுக்கு இடம் பெயர்தல் என்பது பொருள். மக்கா நகரத்தின் குறைசி இன மக்கள், நபிகள் நாயகத்திற்குக் கொடுமைகள் பல செய்தனர். நபிகள் நாயகம் மக்காவை விட்டு, மதீனாவிற்கு வரவேண்டுமென்று மதீனா மக்கள் அழைத்தனர். அந்த அழைப்பை நபிகள் நாயகம் ஏற்றார். இசுலாமிய அறநெறிகளை வளர்க்க மக்காவை விட்டு மதீனா நகரத்திற்குத் தம் துணைவரான அபூபக்கர் முதலானோருடன், முல்லை நிலத்தையும் குறிஞ்சி நிலத்தையும் கடந்து மதீனா நகரத்தில் நுழைந்தார். அந்நகரினைக் காப்பிய இலக்கண நெறி நின்று உமறுப்புலவர் புகழ்ந்து பாடியுள்ளார்.

*மாளிகை நகரம்*

*வடவரை பொருவென மலிந்த மேனிலைக்*
*கடலென ஒலித்ததா வணத்தின் கம்பலைப்*
*புடவியை அளந்தன போன்று வீதிகள்*
*இடனற நெருங்கின மாடம் எங்குமே*

*கொடை நகரம்*

*கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணிய(து)*
*இலையெனா(து) அரும்பொருள் யாவும் எய்தலால்*
*மலைவிலா(து) அருளிய வள்ளி யோரினும்*
*தொலைவிலாப் பெரும்புகழ் படைத்த தொன்னகர்*

*பொன்னகரம்*

*தோரணத் தொடும் கொடிக்காடு துன்னலால்*
*வாரண மதமலை மலிந்து நிற்றலால்*
*காரணத் தொடும்வர வாறு காணலால்*
*பூரணப் புவியெனப் பொலிந்த பொன்னகர்*

*மனைநகரம்*

*சுதையொளி மேனிலை துலங்கித் தோன்றலால்*
*புதுமலர்த் தெருத்தொறும் சிந்திப் பொங்கலால்*
*எதிர்பணிந்(து) இடுவிருந்து இனிதின் நல்கலால்*
*வதுவையின் மனையென இருந்த மாநகர்*

*மாநகரம்*

*உறுபகை வறுமைநோய் ஓட ஓட்டிமேல்*
*குறைவற மனுமுறைக் கோன்(ந) டாத்திநீள்*
*நிறைதரு பெரும்புகழ் நிலைநி றுத்தியோர்*
*மறுவிலாத அரசென இருந்த மாநகர்*

*ஒண்ணகரம்*

*தெண்டிரை ஆரமும் பூணுஞ் சிந்தலால்*
*விண்டுபற் பலபல மொழிவி ளம்பலால்*
*மண்டிய வளந்தலை மயங்க லால்மது*
*உண்டவர் எனமதர்த்(து) இருந்த ஒண்ணகர்*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

*செம்மை நகரம்*

*தானமும் ஒழுக்கமும் தவமும் ஈகையும்*
*மானமும் பூத்ததிண் மறனும் வெற்றியும்*
*ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்*
*தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்.*

*– உமறுப்புலவர்*

## சொல்லும் பொருளும்

வரை – மலை; கம்பலை – பேரொலி; புடவி – உலகம்; எய்துதல் – பெறுதல்; வாரணம் – யானை; பூரணம் – நிறைவு; நல்கல் – அளித்தல்; வதுவை – திருமணம்; கோன் – அரசன்; மறுவிலா – குற்றம் இல்லாத; துன்ன – நெருங்கிய; பொறிகள் – ஐம்பொறிகள்; தெண்டிரை – தெள்ளிய நீரலை; விண்டு – திறந்து; மண்டிய – நிறைந்த; காய்ந்த – சிறந்த; தீன் – மார்க்கம்.

## பாடலின் பொருள்

மேருமலையினைப்போன்று மதீனா நகரின் மேன்மாடங்கள் உயர்ந்திருந்தன. அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடலொலிபோன்று இருந்தது. மதீனா நகரின் வீதிகள் பேரண்டத்தைப்போன்று பரந்திருந்தன. அந்நகரில் சிறிதும் இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.

பழைமையான மதீனா நகரம், கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தைக் கொண்டது. அங்கு எந்தப் பொருளும் இல்லையென்று சொல்வதற்கு இல்லை. அப்படிக் கேட்போர்க்கும் அப்பொருளை எல்லாம் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் உண்டு. அவ்வள்ளல்களை விடக் குறையாத பெரும் புகழைப் பெற்றது மதீனா நகரம்.

கட்டப்பட்ட தோரணங்களும் கொடிகளும் காடுபோல நெருங்கியிருந்தன; மலைபோன்ற யானைகள் அவ்விடத்தில் நிறைந்திருந்தன; வழிகள் யாவும் ஒழுங்குடன் காணப்பட்டன; இவற்றால் முழுமை பெற்ற பூமியைப்போல மதீனா நகரம் பொன்னெனப் பொலிந்தது.

மதீனா நகரத்தில் வெண்சுண்ணச் சாந்தினைக்கொண்ட மாளிகைகள் ஒளிர்ந்தன; வீதிகளில் புதிய பூக்கள் சிந்திக் கிடந்தன; ஒவ்வொருவரையும் அழைத்துக் கொடுக்கும் விருந்தானது இனிமையுடன் இருந்தது; இதனால் அந்நகர் திருமண வீட்டைப்போன்று பொலிவுடன் காட்சியளித்தது.

பகை, வறுமை, நோய் முதலியவை மதீனா நகரிலிருந்து ஓடிவிட்டன. மேலும், குறைவில்லாத மானுட அறத்தை உடைய செங்கோல் ஆட்சி நடத்திப் பெரும்புகழ் பெற்ற சிறந்த அரசைப்போலப் பொலிவுடன் இருந்தது மதீனா நகரம்.

அலைகடலானது முத்தையும் பல்வேறு அணிகளையும் சிதறுவதுபோல மதீனா நகரில் மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசுகின்றனர். தேன் அருந்தியவர்கள் மயங்குவதுபோலப் பலவாறான பொருள் வளத்தால் ஒளி பெற்றுத் திகழ்கிறது மதீனா நகரம்.

மதீனா நகரில் தானம், ஒழுக்கம், தவம், ஈகை, மானம் முதலியன பூத்திருந்தன; திண்ணிய வலிமை நல்கும் வெற்றி, அவ்வெற்றியைத் தருகின்ற குறைவற்ற ஊக்கம் முதலியன காய்த்திருந்தன. தீன் எனும் செல்வம் பழுத்திருந்த செம்மை பொருந்திய நகராக மதீனா இருந்தது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 146 23-10-2018 12:50:21

### இலக்கணக்குறிப்பு

மலிந்த, மண்டிய, பூத்த, பொலிந்த – பெயரெச்சங்கள்; இடன் – ஈற்றுப் போலி; தரும் – செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம்; பெரும்புகழ், தெண்டிரை – பண்புத்தொகைகள்;

பொன்நகர் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை;

மாநகர், உறுபகை – உரிச்சொல் தொடர்கள்;

ஐந்தும் – முற்றும்மை; தானமும் ஒழுக்கமும், தவமும் ஈகையும் – எண்ணும்மைகள்

### பகுபத உறுப்பிலக்கணம்

**மலிந்த – மலி + த்(ந்) + த் + அ**

மலி – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

**நெருங்கின – நெருங்கு + (இ) ன் + அ**

நெருங்கு – பகுதி, (இ) ன் – இறந்தகால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

### புணர்ச்சி விதி

**அரும்பொருள் – அருமை + பொருள்**

ஈறு போதல் – அரு + பொருள்

இனமிகல் – அரும்பொருள்.

**மனையென – மனை + என**

இ ஈ ஐ வழி யவ்வும் – மனை + ய் + என

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – மனையென.

#### நூல்வெளி



இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் முதன்மையானதாக விளங்குவது சீறாப்புராணம். 'சீறா' என்பது சீறத் என்னும் அரபுச் சொல்லின் திரிபு ஆகும். இதற்கு வாழ்க்கை என்பது பொருள். புராணம் – வரலாறு. நபிகள் பெருமானின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறும் இந்நூலை வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளுக்கு இணங்க உமறுப்புலவர் இயற்றினார் என்பர். இந்நூல் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக்காண்டம், ஹிஜிறத்துக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களையும் 92 படலங்களையும் 5027 விருத்தப் பாடல்களையும் கொண்டது. நூலை முடிப்பதற்கு முன்பே உமறுப்புலவர் இயற்கை எய்திய காரணத்தால் பனி அகமது மரைக்காயர் இதன் தொடர்ச்சியாக சின்னச்சீறா என்ற நூலைப் படைத்துள்ளார். உமறுப்புலவர் எட்டயபுரத்தின் அரசவைப் புலவர். கடிகை முத்துப் புலவரின் மாணவர். நபிகள் நாயகத்தின் மீது முதுமொழிமாலை என்ற நூலையும் இயற்றியுள்ளார். வள்ளல் சீதக்காதி, அபுல்காசிம் மரைக்காயர் ஆகியோர் இவரை ஆதரித்தனர்.

#### கற்பவை கற்றபின்...



1. நீங்கள் வாழும் நகரத்தின் வரலாற்றுச் சிறப்புகளைத் திரட்டிப் படக் கட்டுரையாக்குக.
2. 'நான் பார்க்க விரும்பும் இடம்' என்னும் தலைப்பில் உங்களின் கருத்துகளைக் காரணங்களுடன் பதிவுசெய்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_139-170.indd 147 23-10-2018 12:50:21

கவிதைப்பேழை

இயல் 6

# அகநானூறு

29CL54

**நுழையும்முன்**

சொல்ல வந்த கருத்தை 'உள்ளுறை' வழியாக உரைப்பது அகநானூற்றுப் பாடல்களின் சிறப்பு. அதனைப் பாடும் கவிஞர் சொல்லின் பயன்பாடு குறையாமல் கூறுவதோடு மரபின் நாகரிகம் குறைவுபடாது கூறவும் வேண்டும். அன்பை மறைக்கவும் வேண்டும்; பயன்பாடு கருதி வெளிப்படுத்தவும் வேண்டும். தலைவியைத் தலைவன் சந்திக்க வேண்டிய குறியிடத்தைக் குறிப்பைப் பொதிந்து வெளியிடுவது தோழியின் பொறுப்பு.

*பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ!*
*இருண்டுஉயர் விசும்பின் வலனேர்பு வளைஇப்,*
*போர்ப்புஉறு முரசின் இரங்கி, முறைபுரிந்து*
*அறன் நெறி பிழையாத் திறன்அறி மன்னர்*
*அருஞ்சமத்து எதிர்ந்த பெருஞ்செய் ஆடவர்*
*கழித்துஎறி வாளின், நளிப்பன விளங்கும்*
*மின்னுடைக் கருவியை ஆகி, நாளும்*
*கொன்னே செய்தியோ, அரவம்? பொன்னென*
*மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சிப்*
*பொலிந்த ஆயமொடு காண்தக இயலித்*
*தழலை வாங்கியும் தட்டை ஒப்பியும்,*
*அழலேர் செயலை அம்தழை அசைஇயும்,*
*குறமகள் காக்கும் ஏனல்*
*புறமும் தருதியோ? வாழிய, மழையே!*

*(அகம்.188)*

*– வீரை வெளியன் தித்தனார்*



**திணை :** குறிஞ்சி

**துறை:** இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

**சொல்லும் பொருளும்**

கொண்மூ – மேகம்; சமம் – போர்; விசும்பு – வானம்; அரவம் – ஆரவாரம்; ஆயம் – சுற்றம்; தழலை, தட்டை – பறவைகளை ஓட்டும் கருவிகள்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

*பெருங்கடலில் நீர்முகக்கும் முகிலே சொல்நீ*
*வான்வெளி இருளப் பரபரப்பாய் வரும்உலா*
*போர்க்கள முரசாய்ப் பொழுதுக்கும் இடிமுழக்கம்*
*அறநெறியாளன் ஆட்சியில் காக்கும்*
*போர்க்கள வீரர் வாள்போல் பொறிமின்னல்*
*நாளும் இவையெல்லாம் சும்மா நடிப்பா?*
*அல்லது*
*ஆளை அலைக்கழிக்கும் மழை ஆரவாரமா?*
*பொன்பூ வேங்கை மாலை தொடுத்து*
*அணியும் தோழியர் ஆயத்துடன் இருப்பாள்*
*அழல்எரி அசோகஇலை ஆடை உடுப்பாள்*
*காண்பதற்கு இனிய ஒயிலுடன் நடப்பாள்*
*தழலை தட்டைக் கருவியொலி எழுப்பிப்*
*பறவைகள் விரட்டித் தினைப்புனம் காப்பாள்*
*தலைவியின் காட்டிலும் பொழிவாயா?*
*இல்லை*
*தப்பிப் பிழைத்துப் போய்விடுவாயா?*

### பாடலின் பொருள்

தலைவனுக்குக் குறியிடம் சொல்லும் தோழி மேகத்திடம் சொல்வதுபோல் சொல்கிறாள்: "பெருங்கடலில் நீரை முகந்துகொண்டு செல்லும் மேகக் கூட்டமே! வானம் இருளும்படி உலாவுகிறாய். போர் முரசம்போல முழங்குகிறாய். முறைமை தெரிந்து அறநெறி பிழையாமல் திறமையுடன் ஆளும் அரசனின் போர்க்களத்தில் திறமை மிக்க போர்வீரன் சுழற்றும் வாள்போல மின்னுகிறாய். முழக்கமும் மின்னலுமாக நாள்தோறும் வெற்று ஆரவாரம் செய்கிறாயா அல்லது மழை பொழிவாயா? பொன்னென மலர்ந்த வேங்கை மலரைக் கட்டி அணிந்துகொண்டிருக்கும் தோழியர் ஆயத்தோடு மெல்ல மெல்ல நடந்து குறமகள் தினைப்புனம் காப்பாள். தழலை, தட்டை ஆகிய கருவிகளில் ஒலியெழுப்பிப் பறவைகளை ஓட்டிக்கொண்டு காப்பாள். அவள் அசோக இலைகளால் தழையாடை அணிந்திருப்பாள். குறமகள் அப்படித் தினைப்புனம் காக்கும் பகுதியிலும் நீ மழை பொழிவாயா? "

தலைவி தினைப்புனம் காக்கும் இடத்துக்குத் தலைவன் வரலாம் என்பது குறிப்பு. இது இறைச்சிப் பொருள்.

### இலக்கணக்குறிப்பு

அருஞ்சமம் – பண்புத்தொகை; வளைஇ, அசைஇ – சொல்லிசை அளபெடைகள்; எறிவாள்– வினைத்தொகை; அறன், திறன் – ஈற்றுப்போலி; பிழையா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

#### நூல்வெளி

அகநானூறு 145 புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு. இது, களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கு நெடுந்தொகை நானூறு என்ற பெயரும் உண்டு. இந்நூலின் தொகுப்பு முறையில் ஓர் ஒழுங்கு உண்டு. **வீரை வெளியன் தித்தனார்** பாடிய ஒரேயொரு பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

| திணை | பாடல் வரிசை | எண்ணிக்கை |
|---|---|---|
| பாலை | 1, 3, 5, 7... | 200 |
| குறிஞ்சி | 2, 8, 12, 18... | 80 |
| முல்லை | 4, 14, 24, 34... | 40 |
| மருதம் | 6, 16, 26, 36... | 40 |
| நெய்தல் | 10, 20, 30, 40... | 40 |

#### கற்பவை கற்றபின்...

சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள கூற்றுமுறைகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 149 23-10-2018 12:50:22

## முதற்பொருளும் உரிப்பொருளும்

| திணை | நிலம் | பெரும்பொழுது | சிறுபொழுது | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த நிலமும் | கூதிர், முன்பனி | யாமம் | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த நிலமும் | கார் | மாலை | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த நிலமும் | ஆறு பெரும் பொழுதுகளும் | வைகறை | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த நிலமும் | ஆறு பெரும் பொழுதுகளும் | எற்பாடு | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | சுரமும் சுரம் சார்ந்த நிலமும் | இளவேனில் முதுவேனில் | நண்பகல் | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

## கருப்பொருள்

| நிலம் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | சேயோன் | மாயோன் | வேந்தன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி, | குறும்பொறை, நாடன், தோன்றல், கிழத்தி | ஊரன், மகிழ்நன், மனைவி | சேர்ப்பன், புலம்பன் | விடலை, மீளி, எயிற்றி |
| | குறவர், குறத்தியர், கானவர் | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் | உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் | நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், | எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் |
| புள் | கிளி, மயில் | காட்டுக்கோழி | நாரை, மகன்றில், அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து, கழுகு |
| விலங்கு | சிங்கம், புலி, கரடி, யானை | மான், முயல் | எருமை, நீர்நாய் | சுறாமீன் | செந்நாய் |
| ஊர் | சிறுகுடி | பாடி | பேரூர், மூதூர் | பாக்கம், பட்டினம் | குறும்பு |
| நீர் | அருவி நீர், சுனைநீர் | குறுஞ்சுனை கானாறு | ஆற்று நீர், கிணற்று நீர், குளத்து நீர் | உவர்நீர்க் கேணி, சுவர் நீர்க்கேணி | நீரில்லாக் குழி, கிணறு |
| பூ | வேங்கை, காந்தள், குறிஞ்சி | முல்லை, பிடவம், தோன்றி | தாமரை, குவளை | நெய்தல், தாழை | குராஅம்பூ, மராம்பூ |
| மரம் | சந்தனம், தேக்கு, அகில், மூங்கில் | கொன்றை, காயா, குருந்தம் | மருதம், வஞ்சி, காஞ்சி | புன்னை, ஞாழல் | பாலை, உழிஞை, ஓமை |
| உணவு | மலைநெல், தினை, மூங்கிலரிசி | வரகு, சாமை, முதிரை | செந்நெல், வெண்ணெல் | உப்பும் மீனும் விற்றுப் பெற்ற பொருள் | வழியிற் பறித்த பொருள் |
| பறை | தொண்டகப் பறை | ஏறுகோட்பறை | நெல்லரிகிணை, மணமுழவு | மீன்கோட் பறை, நாவாய்ப் பம்பை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லையாழ் | மருதயாழ் | விளரியாழ் | பாலையாழ் |
| பண் | குறிஞ்சிப் பண் | சாதாரிப் பண் | மருதப் பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | வெறியாடல், மலை நெல் விதைத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் | சாமை, வரகு விதைத்தல், களைகட்டல், அரிதல் | வயலில் களை கட்டல், நெல்லரிதல் | உப்பு உண்டாக்கல், விற்றல், மீன் பிடித்தல், உணக்கல் | போர் செய்தல் சூறையாடல் |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 150 23-10-2018 12:50:22

விரிவானம்

இயல் 6

# பிம்பம்

– பிரபஞ்சன்




நம் ஒவ்வொருவரிடமும் தனித்தன்மைகள், விருப்பங்கள் உள்ளன. ஆயினும், பிறரோடு உறவு கொள்கையில் அவர்களுக்கேற்றவாறு நம்மை மறைத்து, மாற்றிக் கொள்கிறோம்; வளைந்து கொடுக்கிறோம். ஆனால் நம் மனசாட்சி நம்முடைய இயல்பை நினைவூட்டிக்கொண்டே இருக்கும். நாம் மற்றவர்களுக்காக அவர்களுக்கேற்ற முகமூடிகளை மாட்டிக்கொள்கிறோம். முகம் மாற்றி முகம் மாற்றி நம் உண்மை முகத்தையே இழந்து அடையாளமற்ற தன்மையில் காட்சியளிக்கிறோம். மாற்றி மாற்றி நாம் காட்டுகிற பிம்பம் பற்றி நம் மனசாட்சியைக் கேள்வி கேட்பதோடு நம் அசலையும் நினைவூட்டுகிறது இச்சிறுகதை.

கதவைத் தட்டும் சத்தம் கேட்டதும், தட்டுவது யார் என்று எனக்குத் துல்லியமாகவே விளங்கியது. அதுதான் இந்த நேரத்தில் இப்படியெல்லாம் வரும். அதற்கு நேரம் காலம் கிடையாது. கிடைப்பதில்லை என்பதுவுமே ஒரு காரணம். என்னுடனே வளர்ந்து நானாகவே ஆகிவிட்ட அதுக்கு என்மேல் இருக்கும் சுவாதீனமும் ஒரு காரணம்.

கதவைத் திறந்தேன். அது உள்ளே வந்தது. உட்காரச் சொன்னேன். அது உட்காரவில்லை. என் வீடு நாலு கைத் தாழ்வாரமும் நடுவே பெரிய 'ப' மாதிரி ஒரு வாசலும் கொண்ட அடக்கமான வீடு. நான் என் சாய்வு நாற்காலியைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்த இடம் நடுவாசலில்தான். அங்கிருந்து அண்ணாந்து பார்த்தால் வானம் என் மீது வழியும். காற்று கைவீசி வரும். மனசால் நான் வாழும் வாழ்க்கை ஸ்தாபிதமாவதும், சூல்கொள்வதும் கலைவதும் இங்கே இந்த இடத்தில்தான். என்னைத் தேடி சம்பாஷணைக்காக வருவோரை நான் இந்த இடத்தில்தான் உட்கார்த்தி வைப்பது. என்னை இம்சிக்க வருவோர்க்கும் இதுவே இடம்.

வந்தது வீட்டைச் சுற்றி நோட்டம் விட்டது. இடதுகைத் தாழ்வாரச் சுவரும் நேர்ச் சுவரும் சந்திக்கும் இடத்தில் அதன் பார்வை வந்து நிலைகுத்தியதை நானும் உணர்ந்து அந்த இடத்தைப் பார்த்தேன். நான் மென்று, சுவைத்துத் துப்பிய எலும்புத் துண்டுகள் வாரப்படாமலும் கூட்டிக் குப்பையில் எறியப்படாமலும் அந்த மூலையில் குவிந்திருந்தன. சாரை சாரையாக எறும்புகள் தம் உணவை அதில் கண்டு, தம் சக்திக்குட்பட்ட விகிதங்களில் எடுத்துக்கொண்டு போவதையும் ஈக்கள் கும்பலாய்ச் சுள்ளென்று பறந்து மொய்ப்பதையும் நான் பார்த்தேன்.

குறுநகையோடு அது என்னைப் பார்த்தது. எனக்கு வெட்கமாகப் போச்சு. யாரும் கண்டுகொள்ளும் முன்னமேயே அந்த எலும்புகளை வாரிக் குப்பைத் தொட்டியில் கொட்டியிருக்கலாம். அல்லது பூ வேலை செய்த அழகிய துணியை அதன்மேல் போர்த்தி, மறைத்து, அவ்விடத்தைப் பார்ப்போர், கண்ணுக்கும் புலனுக்கும் புலப்படா வண்ணம் மறைத்து இருக்கலாம். இரண்டில் ஒன்றையும் நான் செய்யவில்லை. ஏன் செய்யாமல் போனோம் என்று வருந்தினேன்.

படுத்தவாறே அண்ணாந்து பார்க்கிறேன். வானம் கறுப்பாக. நிலவு எங்கோ எதிலோ மறைந்து கொண்டாற்போல. ஆனாலும் காற்று வீசி மேகம் கலைய...

இடக்கைத் தாழ்வாரத்தில் ஓர் அறை இருக்கிறது. அது 'நான் இதன் உள்ளே நுழைகிறேன்' என்றது. அனுமதி கேட்பது



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 151 23-10-2018 12:50:22

மாதிரி இல்லை. தேவையில்லை என்று நினைத்தது போலும். உள்ளே போனது, எதையோ கையில் எடுத்துக்கொண்டு வெளியே வந்து என்முன் நின்றது.

'இது என்ன?' – அது கேட்டது.

இது அப்பாவின் சட்டை. முக்கால் கைச்சட்டை என் அளவுக்கு ரொம்பத் தொள தொளவென்று இருக்கும். என்போல் மூவர் ஒரே சமயத்தில் நுழையலாம். அவ்வளவு பெரிசு. பல இடங்களில் துணி நைந்து கிழிஞ்சு போச்சு. பல இடங்களில் ஒட்டு. கொஞ்சம் வேகமாகவோ முரட்டுத்தனமாகவோ கையாண்டால் கிழியும் என்பது நிச்சயம். துவைக்காததால் எழும் துர்வாசம் இதனோடயே ஐக்கியமாகிப் போச்சு.

'இதை இன்னமும் எதற்கு வைத்திருக்கிறாய்..' அது கேட்டது.

'உபயோகப்படுத்தத்தான்' – நான் சொன்னேன்.

'இதை இன்னுமா உபயோகப் படுத்துகிறாய்?' அதன் புருவம் மேலே உயர்ந்தது.

'ஆம். பல சமயங்களில், சந்தர்ப்பங்களில்'

'உன்னிடம் உன் சட்டை இருக்குமே...?

'இருக்கும்... அதோடு இதையும் அவ்வப்போது உபயோகப் படுத்திக்கொள்கிறேன்.'

அது பதில் வேண்டியது. சொல்லலாமா என்று யோசித்தேன். சொல்லத்தான் வேண்டும். அதுக்கு என்னில் அறியாதது எதுவுமே இல்லை என்கிற பயம் என்னை உசுப்பியது. மேலும், அதன் சம்பாஷணை என் சுகம், அதன் சிநேகிதமான பார்வை, எனக்குத் தூண்டில். எனவே, என் பதில் எனக்கு ஆறுதல். சொன்னேன்.

'என் சட்டை என்னை முழுதும் போர்த்தாதபோது அப்பாவின் சட்டையை நான் அணிந்துகொள்வேன். அவர் சட்டையைப் போட்டுக்கொண்டால் என் குளிரை அது போக்கி விடுகிறது. அதோடு பல சமயங்களில் என்னைப் பாதுகாக்கிறது. இது எனக்குக் கவசம். இதுவே எனக்கு அம்பு. இதுவே எனக்கு அட்சயப் பாத்திரம். இப்போது தைத்த என் சட்டை புது மோஸ்தர். இது சமயங்களில் என்னை இறுக்கிக்கொள்கிறது. உனக்குத் தெரியாதா...'

நான் பரிதாபத்தோடு சொன்னதை அது பார்த்திருக்கக் கூடும். 'சரி' என்று அறைக்குள் சென்று சட்டையைப் போட்டுவிட்டு வெளியே வந்தது.

என் வாசலை மிகவும் ஒட்டி இரண்டு அறைகள். முதல் அறைக்குள் அது என் அனுமதி இன்றியே போய் எதையோ தூக்கிக் கொண்டு வெளியே வந்தது.

'இது என்ன?'

இது ஒரு கவுன்... ஏழெட்டு வயசுப் பெண் குழந்தைகள் கவுன். கால மறைவாலும் மாற்றத்தாலும் பழசாகித் தேய்ந்து, நைந்து போய் இருந்தது. இன்றைய குழந்தைகள் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத வினோதமான தையலும் பூவளையுமாய் மிளிர்ந்தது.

'இந்தக் கவுன் உனக்கெதுக்கு?'

'சமயா சமயங்களில் போட்டுப் பார்த்துக் கொள்ளத்தான்.'

'இதைக் கூடவா நீ போடுகிறாய்?'

'சொல்றேனே... சமயா சமயங்கள்.'

'இதைப் போட்டுக்கொண்டு எப்படி வெளியே வருகிறாய். ஒரு ஆண் மகனாய் எப்படி வெளியே பிரவேசிக்கிறாய்...'

'இந்த கவுன் அம்மா எனக்காக வாங்கியது. அம்மாவின் உதரத்தில் பெண் குழந்தைகள் ஜனிக்கவில்லை.'

ஜனித்தாலும் லபிக்கவில்லை. ஆணாகப் பிறந்த என்னை அம்மா தன் ஆசைக்காக இந்த கவுனுக்குள் அடக்கி வளர்த்தாள். காலப்போக்கில் வளர்ந்து வந்த என் பௌருஷ ஆகிருதியை இந்தச் சின்ன கவுனுக்குள் நுழைத்து நுழைத்து அதில் வெற்றி கண்டாள். நான் சாமானியத்தில் அதனுட்கொள்ளவில்லை. எனினும், எப்படியோ என்னை நுழைப்பதில்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 152 23-10-2018 12:50:22

அவள் திருப்தி கொண்டாள். பதின்வயதின் இளைஞனாகிய நான் அந்த கவுனில் நூதனமாக எனக்கே காட்சி கொடுத்தேன்.

அம்மா என்னை ஒரு போட்டோ எடுத்தாள். ஒரு பிரதியை இந்த கவுனின் மார்பில் ஒட்டினாள். மற்றொன்றைத் தன் தலைக்கு மேல் ஒட்டி வைத்தாள். இந்தப் போட்டோவுக்குள் பொட்டு வைத்த நான். கண்ணுக்கு அழகாக மை தீட்டிய நான். கோண வகிடெடுத்து அழகாக ஜடை பின்னி, ஜடை முனையில் பூ வைத்த நான். வளையல், கொலுசு, ஒட்டியாணம் அணிந்த நான்.

நான் குனியும்போது மார்பில் போட்டோ என்னைக் குத்தி நிமிர்த்தியது. நான் நிமிரும்போது தலைக்குமேல் போட்டோ. என்னைக் குட்டித் தாழ்ந்தது.

என் கவுன் ஓட்டுக்குள் என் புலன்கள் நுழைக்கும்– ஆமை நான்.

முதலில் இது கஷ்டமாக இருந்தது – வாஸ்தவமாய். பின் இது சவுகரியமாய்ப் போச்சு– எதார்த்தமாய். இப்போது இதுவே சுகமாய்ப் போச்சு– நிர்ப்பந்தமாய்.

என்னை, ஆம்பிளையான என்னை, இந்த வனாந்தரங்களில் மேயும் எந்த துஷ்ட மிருகங்களாவது சீண்ட ஓட்டுக்குள் என்னை நுழைத்துக்கொள்வேன். அவை என்னைப் புரட்டிப்பார்க்கும். வெறும் ஓடென்று விலகிப்போகும்.

'அதற்குத்தான் ..... அதனால்தான்'

நான் சொன்னேன்.

நான் நிறுத்தினேன். அது என்னையே பார்த்துக் கொண்டிருந்தது. என்னைப் பார்த்துச் சிரித்தது...

'ஆகவே, நீ தப்பிக்கிறாய்.....' என்றது அது.

'ஆம்.. எல்லாமே எதனிடமிருந்தோ தப்புதல்தான்...'

அது மௌனமாக அறைக்குள் சென்றது. மீண்டும் அறைக்குள்ளிருந்து எதையோ வாரிக் கொண்டு வந்து என்முன் போட்டது.



மேலே வானமூட்டம் இன்னும் விலகவில்லை. கறுப்பு இன்னும் வெளுக்கவில்லை. நிலா காணோம். எந்தச் சேற்றில் போய்ப் புதைந்துவிட்டதோ – பாவம்.

படபடவென்று சரியும் ஒலி என் புலனைத் தாக்க என்முன் குவிந்த பொருள்களை நான் பார்த்தேன்.

'இதெல்லாம் என்ன' – அது.

'இவை என் முகங்கள்' – நான்.

'இத்தனை முகங்கள் உனக்கெதுக்கு?'

'இவை என் பார்வைகள். தேவைகள். சிரமமில்லாமலும், சிரமத்தோடும் சமயா சந்தர்ப்பங்களில் நான் சேர்ந்து அணிந்து கொள்ளும் முகங்கள் இவை.'

'நீ என்னையும் உன்னையும் ஏமாற்றுகிறாய்...' என்று வருத்தத்தோடு அது சொன்னது.

'ஆம்... என்னை நானும் உன்னை நீயும் முறை மாறி என்னை நீயும் உன்னை நானும் ஏமாற்றிக் கொள்ளுதலே நம் விஸ்தரிப்புகள், நம் ஆக்கங்கள், நம் விகசிப்புகள்.'

நான் குனிந்து பார்த்தேன். என் காலடியில் பலவிதமான முகங்கள் பல வர்ணங்களில், பல அளவுகளில் பல கோணங்களில் சிதறிக்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 153 23-10-2018 12:50:22

கிடந்தன. சிலது ரொம்பப் பழசு; சிலது ரொம்பப் புதுசு. சிலது பழசாகி இருந்து புதுசானவை. சிலது புதுசாகி இருந்து பழசானவை.

இவற்றில் இடமும் காலமும் மாறிச் சூழ்நிலை தவறி, பாத்திரம் தவறி, முகத்தை மாட்டிக் கொள்ள மாட்டாயா? என்று அது சந்தேகித்தது.

'மாறாது. மாட்டேன். என்முன் முகம் காட்டும் முகங்கள் என் கண்ணாடி. எந்த முகத்தை நான் என் கண்ணாடியில் பார்க்கிறேனோ, அதைப்போலவே இருக்கும் என் முகச் சிதறல்களில் ஒன்றை எடுத்துப் போட்டுக்கொள்வேன். ஏ-க்கு ஏ-யும் இசட்டுக்கு இசட்டும் தான்.'

'அம்மாவிடம் கூடவா...'

'ஆட்சேபமில்லாமல். அவளிடம் என்னிடம் காட்ட ஒரு முகம் இருந்தது. அதேபோல் என்னிடமும் ஒன்று இருக்கிறது.'

'மனைவியிடம் கூடவா...'

'நீ சுவாரசியமாகவே கேட்கிறாய். வாஸ்தவத்தில் இந்த இடத்துக்குப் பல முகங்கள் எனக்குத் தேவை. அவளிடமும் பலமுகம் தயாராகவே தயார் நிலையில் இருந்தன. அதோடு , அவள் என்னின் இருமையையும் கண்டவள். கொண்டவள். நானும் கண்டவன். துய்த்தவன். வினாடிக்கு ஒருமுறை முகம் மாற்றும் சித்தி இதுக்குத் தேவை. அச்சித்தி எனக்கு லபித்திருந்தது. ஆனால், ஒரு விசயம். என் முகத்தை அவளுமோ அவள் முகத்தை நானுமோ இன்றுவரை பார்த்ததில்லை. இவை போலிகள் என்று எங்கள் இருவருக்கும் தெரியும். வாய்விட்டுச் சொல்லிக் கொள்வதில்லை.'

நான் காலடியில் குவிந்திருந்த பல முகங்களில் ஏழெட்டைக் காலால் தள்ளி, 'இவை என் சிநேகிதர்களுக்காக' என்றேன். சிலவற்றைத் தள்ளி , 'இவை என் தெருவுக்காக, ஊருக்காக' என்றேன்.

அது நின்றபடியே நின்றிருந்தது. பார்த்தபடியே கண்டிருந்தது.

'நீ இப்போது போட்டிருப்பதுகூட....'

'பொய்தான். போலிதான்.'

நான் என் முகத்தைக் கழட்டிக் கீழே போட்டேன்.

'இது' அது என் முகத்தைக் காட்டியது.

'இதுவும்' – நான்.

நிமிஷங்கள் கரைந்து நீராயின. அப்புறம் கொஞ்சநாழி அது இருந்தது.

'போய் வருகிறேன்' என்றது.

'சரி..'

கதவைத் திறந்து விடை கொடுத்தேன். வெளியே சென்றது, சற்று நின்றது.

'கடைசியாக ஒன்று. உன்னுடைய முகம்தான் எது...'

'எனக்கு முகமே கிடையாது...'

நான் சொல்லி, கதவைத் தாழிட்டுக் கொண்டேன்.

### நூல்வெளி

புதுச்சேரியைச் சேர்ந்த பிரபஞ்சனின் இயற்பெயர் வைத்தியலிங்கம். இவர் சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை என்று இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் இயங்கி வருபவர். 1995இல் இவருடைய வரலாற்றுப் புதினமான 'வானம் வசப்படும்' சாகித்திய அகாதெமி விருது பெற்றது. இவருடைய படைப்புகள் தெலுங்கு, கன்னடம், இந்தி, பிரெஞ்சு, ஆங்கிலம், ஜெர்மன் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

### கற்பவை கற்றபின்...

"இந்த உலகமே நாடகமேடை; அதில் அனைத்து ஆண்களும் பெண்களும் வெறும் நடிகர்களே. ஒவ்வொருவருக்கும் அறிமுகமும் முடிவும் உண்டு. ஒருவருக்கே பல வேடங்களும் உண்டு." – ஷேக்ஸ்பியரின் இக்கருத்தை 'பிம்பம்' சிறுகதையுடன் ஒப்பிட்டுப் பார்க்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 154 23-10-2018 12:50:22

## இனிக்கும் இலக்கணம்

இயல் 6

## பா இயற்றப் பழகலாம்

29LH6R

### ஆசிரியப்பா

பா, செய்யுள், தூக்கு, கவி, கவிதை, பாட்டு ஆகிய சொற்கள் ஒரே பொருளில் வருவன. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, ஆகியன செய்யுள் உறுப்புகளாகும். பாக்களின் வகைகள், அப்பாக்களின் ஓசைகள், பாக்கள் இயற்றுவதற்குரிய விதிமுறைகள் முதலியவற்றை விளக்குவது யாப்பருங்கலக்காரிகை என்னும் நூலாகும். இது யாப்பு என்னும் கடலைக் கடக்க உதவும் நூலாக உள்ளது.

தமிழ்ச் செய்யுள் வடிவங்கள் பெரும்பாலும் இசையை அடிப்படையாகக் கொண்டவை. ஓசையே தமிழ்ச் செய்யுளை மெருகேற்றும். இவ்வோசை, செய்யுளுக்கு மேலும் அழகு சேர்க்கிறது. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாவகைகள் முறையே செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என்னும் ஓசை வடிவம் கொண்டவை.

செய்யுளில் மோனை, எதுகை, இயைபு போன்றவை இசையைப் பிணைக்கின்றன. சீர் அடிப்படையில் அடிகள் வரையறை செய்யப்படுகின்றன. குறளடி இரண்டு சீர்களாகவும் சிந்தடி மூன்று சீர்களாகவும் அளவடி அல்லது நேரடி நான்கு சீர்களாகவும் நெடிலடி ஐந்து சீர்களாகவும் கழிநெடிலடி ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பல சீர்களாகவும் வரும்.

பா இயற்றுவதற்குரிய எளிய வடிவமாக ஆசிரியப்பாவைக் கூறலாம். அகவல் ஓசை பெற்றதால் ஆசிரியப்பாவை 'அகவற்பா' என்றும் கூறுவர். பெரும்பாலும் ஆசிரியப்பா, இரண்டு அசைகளால் அமையும். ஆசிரியப்பாக்களால் ஆன பாடல்களே சங்ககாலத் தமிழில் மிகுதியாக உள்ளன.

### அமைப்பும் படைப்பும்

யாப்பில் 'எழுத்து', அசையை அமைக்க உதவும். அசை என்பது இசை (மாத்திரை) சேர்ந்து வருவதாகும். அசை நேர், நிரை என இருவகையாக அமையும். அவை பின்வருமாறு,

| நேரசை | எ.கா. | நிரையசை | எ.கா. |
|---|---|---|---|
| குறில் தனித்து வருதல் | க | இருகுறில் இணைந்து வருதல் | அக |
| குறில் ஒற்றுடன் வருதல் | கண் | இருகுறில் இணைந்து ஒற்றுடன் வருதல் | அகம் |
| நெடில் தனித்து வருதல் | பா | குறில்நெடில் இணைந்து வருதல் | கலா |
| நெடில் ஒற்றுடன் வருதல் | பார் | குறில்நெடில் இணைந்து ஒற்றுடன் வருதல் | கலாம் |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 155 23-10-2018 12:50:22

சீர் ஒன்றின் அசைப் பிரிப்பில் தனி மெய்யெழுத்து வந்தாலோ இரண்டு மெய்யெழுத்துகள் இணைந்து வந்தாலோ அசையாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது.

ஆல் – நேரசை – இருமாத்திரை அளவே கொள்ள வேண்டும் ( 'ல்' அலகு பெறாது )

இகழ்ச்சி – நிரையசை – இருமாத்திரை அளவே கொள்ள வேண்டும் ('ழ்', 'ச்' அலகு பெறாது)

## சீரும் தளையும்

அசைகள் சேர்ந்து அமைந்தால் சீர் பிறக்கும். ஆசிரியப்பாவிற்கு உரிய சீர் 'இயற்சீர்' ஆகும். இதனை ஆசிரிய 'உரிச்சீர்' என்றும் கூறுவர். தேமா, புளிமா ஆகிய இரண்டும் நேரீற்று ஈரசைச் சீர்களாகவும் கருவிளம், கூவிளம் ஆகிய இரண்டும் நிரையீற்று ஈரசைச் சீர்களாகவும் வரும். எனவே, ஆசிரிய உரிச்சீர் நான்கு வகைப்படும். வெண்பாவிற்குரிய தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் ஆகிய நேரீற்று மூவசைச் சீர்களால் அமைந்த 'காய்ச்சீர்' கலந்தும் வரலாம்.

நேர் நேர் – தேமா
நிரை நேர் – புளிமா
} மாச்சீர்

நிரை நிரை – கருவிளம்
நேர் நிரை – கூவிளம்
} விளச்சீர்

மாச்சீர், விளச்சீர் } இயற்சீர்

நேர் நேர் நேர் – தேமாங்காய்
நிரை நேர் நேர் – புளிமாங்காய்
நிரை நிரை நேர் – கருவிளங்காய்
நேர் நிரை நேர் – கூவிளங்காய்
} காய்ச்சீர்

## ஆசிரியத்தளை

மாமுன் நேர் ஒன்றி வந்தால் நேரொன்றாசிரியத் தளையாகும்

நல்லார் சொல்லோ – நல்/லார் – தேமா, சொல்/லோ – நேர் நேர் ( தேமா )

விளம்முன் நிரை ஒன்றி வந்தால் நிரையொன்றாசிரியத் தளையாகும்.

கருவினில் திருமுகம் – கரு/வினில் – கருவிளம், திரு/முகம் – நிரை நிரை ( கருவிளம் )

இவ்வாறு ஆசிரியப்பாவானது இயற்சீரும் ஆசிரியத் தளையும் பெற்று வரும்.

## ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்

- அகவலோசை கொண்டது.
- எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் (அளவடி) பெற்றுவரும்.
- இயற்சீர் மிகுந்தும் பிறசீர் கலந்தும் வரும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 156 23-10-2018 12:50:22

- ஆசிரியத்தளை மிகுந்தும் பிற தளை கலந்தும் வரும்.
- நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீர் (கூவிளங்கனி, கருவிளங்கனி) வராமல் அமையும்.
- இறுதி அடியின் இறுதி எழுத்து பிற எழுத்தால் முடியும் என்றாலும், 'ஏ' என்னும் எழுத்தால் முடிவது சிறப்பு. ஏகாரத்துடன் ஓ, ஈ, ஆய், என், ஐ ஆகிய ஈறுகளாலும் முடியும்.
- மூன்றடிச் சிற்றெல்லையாக அமையும். பேரெல்லை பாடுவோன் எண்ணத்திற்கேற்ப (கற்பனைக்கேற்ப) அமையும்.

### ஆசிரியப்பாவின் வகைகள்

- "கடை அயற்பாதம்"

  இறுதி அடிக்கு முந்தைய அடி மூன்று சீர்களைப் பெற்று வருவது நேரிசை ஆசிரியப்பாவாகும். மற்ற அடிகள் நான்கு சீர்களைப் பெற்று வரும்.

- "இடைபல குன்றின் இணைக்குறள்"

  முதலடியும் இறுதியடியும் நான்கு சீர்களைப் பெற்று இடையடிகள் இணை இணையாய் இருசீர்களாகவும் (குறளடி) மூன்று சீர்களாகவும் (சிந்தடி) வருவது இணைக்குறள் ஆசிரியப்பாவாகும்.

- "எல்லா அடிகளும் ஒத்து நடைபெறுமாயின் நிலைமண்டில ஆசிரியப்பா". எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் பெற்று வருவது நிலைமண்டில ஆசிரியப்பாவாகும். 'ஏ' என்ற எழுத்தாலும் 'என்' என்ற அசைச் சொல்லாலும் முடியும். (அசைச்சொல் – யாப்புக்காக ஆக்கப்படும் பொருளில்லாத சொல்)

- "நடு ஆதி அந்தத்து அடைதரு பாதத்து அகவல் அடிமறி மண்டிலமே"

  பாடலில் உள்ள அடிகளை மாற்றி மாற்றி அமைத்தாலும் ஓசையும் பொருளும் மாறாது அமைவது அடிமறிமண்டில ஆசிரியப்பாவாகும்.

  ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம் என்பன ஆசிரியப்பாவின் இனங்கள் ஆகும்.

### ஆசிரியப்பாவில் அமைந்த பாடல்–விளக்கம்

தமிழ்க்கவிஞர் பலர் ஆசிரியப்பாவால் எழுதியுள்ள பாடல்களில் ஆசிரியப்பாவின் இலக்கணங்களைக் கண்டறிந்து பயிற்சி பெறலாம்.

"வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க
நன்மைவந் தெய்துக தீதெலாம் நலிக......"

பாரதியாரின் இப்பாடல் ஒவ்வோரடியும் நான்கு ஈரசைச் சீர்களால் அமைந்து இடையில் காய்ச்சீராகிய மூவசைச் சீர்களைப் பெற்றுவந்த ஆசிரியப்பாவாகும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 157 23-10-2018 12:50:22

**மேற்காண் பாடலைக் கீழ்க்கண்டவாறு அசையாகப் பிரிக்கலாம்.**

| | | | |
|---|---|---|---|
| நேர் நிரை | நேர் நிரை | நேர் நிரை | நிரை நேர் |
| நேர் நிரை | நேர் நிரை | நிரை நிரை | நேர் நேர் |
| நேர் நிரை | நிரை நேர் | நேர் நேர் நேர் | நேர் நேர் |
| நேர் நேர் நேர் | நேர் நிரை | நேர் நிரை | நிரை நேர் |

மாச்சீர் என்று கூறினால், முதலில் அது ஈரசைச்சீர் என்றும், பிறகு நேரசையை ஈற்றிலே உடைய ஈரசைச்சீர் என்றும், காய்ச்சீர் என்று கூறினால் முதலில் அது மூவசைச்சீர் என்றும், பிறகு நேரசையை ஈற்றிலே உடைய மூவசைச்சீர் என்றும் நினைவுக்கு வரவேண்டும்.

**பாடலின் அசைக்குரிய வாய்பாடு**

| | | | |
|---|---|---|---|
| கூவிளம் | கூவிளம் | கூவிளம் | புளிமா |
| கூவிளம் | கூவிளம் | கருவிளம் | தேமா |
| கூவிளம் | புளிமா | தேமாங்காய் | தேமா |
| தேமாங்காய் | கூவிளம் | கூவிளம் | புளிமா |

( இயற்சீரும்(ஈரசைச்சீர்) காய்ச்சீரும்( மூவசைச் சீர்) பயின்று வந்துள்ளன )

**வாய்பாட்டிற்குரிய தளை**

| | | | |
|---|---|---|---|
| விளம் முன் நேர் | விளம் முன் நேர் | விளம் முன் நிரை | மா முன் நேர் |
| விளம் முன் நேர் | விளம் முன் நிரை | விளம் முன் நேர் | மா முன் நேர் |
| விளம் முன் நிரை | மா முன் நேர் | காய் முன் நேர் | மா முன் நேர் |
| காய் முன் நேர் | விளம் முன் நேர் | விளம் முன் நிரை | மா முன் நேர் |

(நேரொன்றாசிரியத் தளை, நிரையொன்றாசிரியத் தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய தளைகள் அமைந்துள்ளன )

இவ்வாறு இரண்டசைகளை உடைய எளிய சொற்களைக் கொண்டு ஆசிரியப்பாவிற்குரிய தளைகளோடு பாடல்களை எழுதிப் பழகுதல் வேண்டும்.

**ஆசிரிய விருத்தம்**

ஆசிரிய விருத்தத்தால் அமைந்த பாடல்களே இன்று பெருவழக்கில் உள்ளன. இவ்வகையான பாடல்களை எளிதாகக் கையாளலாம். ஆசிரியப்பாவின் இனங்களுள் ஒன்றே விருத்தம் . ஆறு சீர்களால் அமைந்த பாடலை அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்றும், ஏழு சீர்களால் அமைந்த பாடலை எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்றும் எட்டுச்சீர்களால் அமைந்த பாடலை எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்றும் பாவகையைக் குறிப்பிடுவர். ஆறு அல்லது அதற்கும் மேற்பட்ட எத்தனை சீர்கள் வந்தாலும் அந்த அடி 'கழிநெடிலடி' ஆகும்.

**அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் அமையும் முறை**

அறுசீர்க்கழிநெடிலடிகள் நான்கு கொண்டதாக அமைந்து, நான்கடியும் அளவொத்து வரவேண்டும். முதற்சீரிலும் நான்காம் சீரிலும் மோனை அமைத்தும், முதற்சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை அமைத்தும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் எழுதலாம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 158 23-10-2018 12:50:22

*யாப்பிலாப் பாட லேனும்*
*யார்தரும் கவிதை யேனும்*
*மாப்பலாப் போல எண்ணி*
*மடியிலே வாங்கிக் கொண்டு*
*காப்பிலாத் தமிழர் நெஞ்சில்*
*காலமெல் லாமும் வாழும்*
*மூப்பிலாத் தமிழே ! உன்னை*
*முதன்முதல் வணங்கு கின்றேன் !"*

இப்பாடலில் அடிதோறும்

ஆறு சீர்கள் பெற்று, முதற்சீரிலும் நான்காம் சீரிலும் மோனை அமைந்து நயம் சிறக்கக் காணலாம்.

சீர் அமைப்பை வைத்து அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் பல்வேறு வகையாக எழுதப்படுகின்றன.

- ஓரடியுள் அரை அடிக்கு ஒரு விளச்சீரும் இருமாச்சீர் வருவனவும்
- ஓரடியுள் அரை அடிக்கு இரு மாச்சீரும் ஒரு காய்ச்சீர் வருவனவும்
- ஓரடியுள் நான்கு காய்ச்சீரும் இரு மாச்சீர் வருவனவும் உண்டு.



கற்பவை கற்றபின்...

*பச்சைமா மலைபோல் மேனி*
*பவளவாய்க் கமலச் செங்கண்*
*அச்சுதா அமரர் ஏறே!*
*ஆயர்தம் கொழுந்தே என்னும்*
*இச்சுவை தவிர யான்போய்*
*இந்திர லோகம் ஆளும்*
*அச்சுவை பெறினும் வேண்டேன்!*
*அரங்கமா நகரு ளானே!*

– தொண்டரடிப்பொடி ஆழ்வார்

*சீரிய நெற்றி எங்கே?*
*சிவந்தநல் இதழ்கள் எங்கே?*
*கூரிய விழிகள் எங்கே?*
*குறுநகை போன தெங்கே?*
*நேரிய பார்வை எங்கே?*
*நிமிர்ந்தநன் னடைதான் எங்கே?*
*நிலமெலாம் வணங்கும் தோற்றம்*
*நெருப்பினில் வீழ்ந்த திங்கே!*

– கண்ணதாசன்

மேற்கண்ட ஆசிரிய விருத்தங்களை அசையாகவும் அசைக்குரிய வாய்பாடாகவும் வாய்பாட்டிற்குரிய தளையாகவும் எழுதுக.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
2. ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை ?
3. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களின் வகைகளையும் அவற்றை இயற்றுவதற்கான விதிகளையும் கூறுக.
4. பொருத்துக

| | | |
|---|---|---|
| அ) நேரிசை ஆசிரியப்பா | – | i. முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும் |
| ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா | – | ii) அடிகளை மாற்றினாலும் ஓசையும்பொருளும் மாறாது வரும் |
| இ) நிலைமண்டில ஆசிரியப்பா | – | iii) இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும் |
| ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா | – | iv) எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும். |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 159 23-10-2018 12:50:22

5. பின்வரும் அறுசீர் விருத்தப் பாடல்களில் உள்ள விடுபட்ட சீர்களை ஏற்றவகையில் அமைத்துப் பயிற்சி பெறுக

## பயிற்சி 1

ஒரே அடியில் 6 சீர் ; 1, 4 சீர்களில் மோனை வரவேண்டும். 1, 2, 4, 5 ஆகியன தேமா அல்லது புளிமாவாக வரவேண்டும். 3, 6 சீர்கள் ஏதேனும் ஒரு காய்ச்சீராக வரவேண்டும். வேறு தளைகள் பார்க்கத் தேவையில்லை. இவ்வகையில் பின்வரும் பயிற்சியை அமைக்க.

மாச்சீர் + மாச்சீர் + காய்ச்சீர் – வாய்பாடு

மண்ணுக் கழகு மரமாகும்
மரத்திற் கழகு கிளையாகும்
கண்ணுக் கழகு ________
கவிதைக் கழகு ________
விண்ணுக் கழகு ________
வீதிக் கழகு ________
எண்ணுக் கழகு ________
எழுத்துக் கழகு ________

## பயிற்சி 2

மண்ணுக்கு அழகு என்னும் இரு சீர்களின் பின் ஆகும் / தெளிவுடைமை/ தெளிவாகும் / கிழியாமை / பயன்படுதல் / நற்கருத்து.... எனப் பல வகைகளில் சீர்களை அமைத்துக்கொள்ளலாம்.

நாட்டுக் கழகு ________
________ கழகு ________
வீட்டுக் கழகு ________
________ கழகு ________
காட்டுக் கழகு ________
________ கழகு ________
ஏட்டுக் கழகு ________
________ கழகு ________

## பயிற்சி 3

ஒவ்வோரடியும், முதலிரு சீர்கள் ஈரசையாகவும் இறுதிச்சீர் நேரீற்று மூவசைச் சீராகவும் அமைத்துப் பழகுக.

காற்றைத் தந்த வான்வாழ்க !
________ ________ ________
________ ________ ________
________ ________ ________
________ ________ ________
________ ________ ________
________ ________ ________
________ ________ ________



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

# நம்மை அளப்போம்

29Q4UN

**பலவுள் தெரிக.**

1. பொருந்தாததைத் தேர்க.

அ) ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன

ஆ) ஒவ்வொருநாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிடாமல் செய்திகளை எழுதியுள்ளார்

இ) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது

ஈ) ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு எட்டுத்திங்கள் தேவைப்பட்டன

*i)* அ, ஆ  *ii)* ஆ, இ  *iii)* அ, இ  *iv)* ஆ, ஈ

2. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?

அ) மொழிபெயர்ப்பாளர்

ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத் துவிபாஷி

ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

3. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு

அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி  ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்

இ) வினையெச்சம், வினைத்தொகை  ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

4. சரியானதைத் தேர்ந்தெடுக்க.

அ) வரை – மலை  ஆ) வதுவை – திருமணம்  இ) வாரணம் – யானை  ஈ) புடவி – கடல்

*i)* அ, ஆ, இ – சரி; ஈ-தவறு  *ii)* ஆ, இ, ஈ – சரி; அ-தவறு

*iii)* அ, இ, ஈ – சரி; ஆ-தவறு  *iv)* அ, ஆ, ஈ - சரி; இ-தவறு

5. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது

அ) காய் முன் நேர்  ஆ) காய் முன் நிரை

இ) கனி முன் நிரை  ஈ) மா முன் நேர்

**குறுவினா**

1. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
2. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
3. நெருங்கின, இரங்கி – உறுப்பிலக்கணம் தருக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 161 23-10-2018 12:50:23

4. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்"
– இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?

5. ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை ?

### சிறுவினா

1. "கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது" - யாது?
2. "மறுவிலாத அரசென இருந்த மாநகர்" – உவமையைப் பொருளுடன் விளக்குக.
3. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.
4. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?
5. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.

### நெடுவினா

1. தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.
2. மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
3. பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

#### இரசிகமணி டி.கே. சிதம்பரநாதர் (1882 – 1954)

"தமிழில் எல்லாம் உண்டு; தமிழின் கவிச் சுவைக்கு ஈடுமில்லை இணையுமில்லை; தமிழால் அறிவியல் மட்டுமன்று; அனைத்து இயல்களையும் கற்கமுடியும்" எனச் சான்றுகளுடன் எடுத்துச் சொன்ன பெருந்தகை இரசிகமணி டி.கே. சிதம்பரநாதர். இவர், தமது இலக்கிய இரசிகத் தன்மையால் தமிழுக்கும் தமிழருக்கும் புத்துணர்வு ஊட்டியவர். டி. கே. சி. யின் வீட்டுக் கூடத்தில் வட்டவடிவமான தொட்டிக் கட்டில், ஞாயிறுதோறும் மாலை ஐந்து மணிக்குக் கூடிய கூட்டம், இலக்கியத்தைப் பற்றிப்பேசியது. அவ்வமைப்பு 'வட்டத் தொட்டி' என்றே பெயர்பெற்றது. டி. கே. சி. இலக்கியங்களின் நயங்களைச் சொல்லச் சொல்லக் கூட்டத்திலுள்ள அனைவரும் தங்களை மறந்து இலக்கியத்தில் திளைப்பர். தமிழின் இனிமை என்பது மட்டும் அவர்கள் உள்ளங்களில் நிறைந்திருக்கும். வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார். தமிழ்க்கலைகள், தமிழ்இசை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றின் சுவையையும் மேன்மையையும் தனித்தன்மையையும் எடுத்துச் சொன்னார். கடிதங்களிலும் அவற்றையே வியந்து எழுதினார். அவர்தம் கடிதங்கள் இலக்கியத் தரம் கொண்டு


டி.கே. சி. (1882 – 1954)



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 162 23-10-2018 12:50:23

புதிய இலக்கிய வகையாகவே கருதப்பட்டன. இதய ஒலி, கம்பர் யார்? முதலான நூல்களும் முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம் ஆகியவற்றுக்கு எழுதிய உரையும் அவர்தம் இலக்கிய நுகர்வுக்கடலின் சில அலைகள் எனலாம். சென்னை மாநில மேலவையின் உறுப்பினராகவும் அறநிலையத் துறையின் ஆணையராகவும் திகழ்ந்த டி. கே. சி. ஏற்றிய இலக்கியஒளி தமிழ் அழகியலை வெளிச்சப்படுத்தியது.

### வினாக்களுக்கு விடையளிக்க.

1. அன்று, அல்ல என்பவற்றுக்கான பொருள்வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.
2. சொல்லச் சொல்ல, திளைப்பர் – இலக்கணக் குறிப்புத் தருக.
3. ரசிகர் – தமிழ்ச்சொல் எழுதுக. மாநில மேலவை–ஆங்கிலக் கலைச்சொல் தருக.
4. வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி விரும்பினார் – விடைக்கேற்ற வினா அமைக்க.
5. மேலவை, புத்துணர்வு – இச்சொற்களின் புணர்ச்சி வகையைக் கண்டறிக.

### தமிழாக்கம் தருக.

*The folk songs of Tamilnadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country. But what is special in these Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality. This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition. Folk songs are so old and yet so full of life that they are always new and progressively modern. These songs were born several centuries ago; they are being born every generation; they will be born and reborn over and over again!*

### கீழ்க்காணும் பாடலின் முதலடியைக் கவனித்து, பிற அடிகளில் உள்ள சீர்களை ஒழுங்கு செய்க

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த

குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே

ஓடையிலேஊறுகின்றதீஞ்சுவைத்தண்ணீரே

உகந்ததண்ணீர்இடைமலர்ந்தசுகந்தமணமலரே

மேடையிலேவீசுகின்றமெல்லியபூங்காற்றே

மென்காற்றில்விளைசுகமேசுகத்திலுறும்பயனே

ஆடையிலேஎனைமணந்தமணவாளாபொதுவில்

ஆடுகின்றஅரசேஎன்அலங்கலணிந்தருளே.

### படித்துப்பார்த்துப் படைத்துக்காட்டுக.

**புத்தகத் திருவிழாவின் தொடக்க நிகழ்ச்சிக்கு வருகை தந்த சான்றோர் குறித்த அறிமுகஉரை**

பேரன்பு கொண்டோரே! பேரறிவுச் செல்வமே பெருஞ்செல்வம் எனக் கருதி வந்திருக்கும் சான்றோரே! இளைய தலைமுறையே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தக வாசிப்பை மூச்சுக்காற்றாய்ச் சுவாசித்து வாழ்கின்ற படிப்பாளர்களாகிய உங்கள் முன்பு படைப்பாளர் ஒருவரை, மிகச் சிறந்த பண்பாளரை அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 163 23-10-2018 12:50:23

சிறுவயது முதலாகத் தனக்குப் பெற்றோர்கள் அளித்த சில்லறைகளைச் சேகரித்து ஆண்டுதோறும் புத்தகம் வாங்கும் வழக்கத்தைக் கொண்டவர். புத்தகங்களோடு வாழ்ந்து வருபவர்; புத்தகத்தை வாங்குவதோடு மட்டுமல்லாமல் முழுமையாக அவற்றை வாசிப்பதும் குறிப்பெடுப்பதும் இளையதலைமுறையினர்க்குத் தன்னம்பிக்கை அளிக்கும் கூட்டங்களில் பேசுவதும் எனப் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருபவர்.

ஷேக்ஸ்பியர் என்னும் மாபெரும் படைப்பாளனின் பிறந்த நாளான ஏப்ரல் 23 உலகம் முழுவதும் புத்தகநாளாகக் கொண்டாடப்படுகிறது. அதற்குக் காரணம் அவரிடம் இருந்த வாசிப்புப் பழக்கமே ஆகும்.

அவ்வகையில் வாசிப்பையே தம் வாழ்க்கையாய்க் கொண்டிருக்கும் நம் சிறப்பு விருந்தினர் நமக்கெல்லாம் முன்மாதிரியானவர். அவர்வழியில் புத்தக வாசிப்பைத் தொடர்வோம்! புதியதோர் உலகம் படைப்போம்! வெல்வோம்!

**உங்கள் பகுதி நூலகத்தில் வாசகர்களுக்கு நூலக உறுப்பினர் அட்டை வழங்க வருகைதரும் அறிஞர் ஒருவரைக் குறித்து அறிமுகஉரை எழுதுக.**

**இலக்கியநயம் பாராட்டுக.**

*செந்நெலும் கரும்பும் விளைந்தனவே – நல்ல*
*தேன்பொழி மலர்களும் விரிந்தனவே*
*இன்னலும் பசியும் போயொழிக – தேசம்*
*எழிலுடன் கூடியே நலமுறுக*

*பிரிவுகள் பேசியே பூசலிட்ட – பழம்*
*பேதமை தனைத்தள்ளி அனைவருமே*
*ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் – நம்முள்*
*ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்*

*தமிழன் திருநாள் பொங்கலென்றால் – அதில்*
*தமிழன் பண்புகள் பொங்குமன்றோ?*
*புவியெலாம் சேர்ந்தொரு வீடதிலே – யாரும்*
*புறம்பிலை என்றசொல் தமிழன்றோ?*

*யாதும் ஊரெனச் சாற்றியதும் – மக்கள்*
*யாவரும் கேளிர் என்றதுவும்*
*மேதினிக் குரைத்தவர் நம்முன்னோர் – இன்று*
*வேற்றுமை நாமெண்ணல் சரியாமோ?*

*– பெ. தூரன்*

**மொழியோடு விளையாடு**

**கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.**






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 164 23-10-2018 12:50:23

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



**புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)

1. எலியும் நுழையும் ; எழிலரசி கையும் நுழையும் ----------------------
2. அடிக்கவும் செய்யலாம் ; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் -----------------
3. கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம். --------------------
4. அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவேதான்; ----------------
5. பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே ----------------
6. வண்டியையும் இயக்கும்; பெரும் கப்பலையும் தாங்கும் -----------------

**செய்து கற்போம்**

நீங்கள் படித்துச் சுவைத்த ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம் சார்ந்த ஐந்து பாடல்களைத் திரட்டி வகுப்பறையில் வழங்குக.

**நிற்க அதற்குத் தக**

| நாகரிகம் | கடைப்பிடிப்போம் |
| --- | --- |
| கலைவாணன் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கிறான். கடைக்குச் சென்ற அவன் தாத்தா பை நிறையப் பொருள்களைத் தூக்கிக் கொண்டு வருகிறார், சுமை தாங்காது உதவிக்கு அழைக்கிறார். தொலைக்காட்சியில் வைத்தகண் வாங்காமல் நிகழ்ச்சியொன்றினைப் பார்த்துக்கொண்டிருக்கும் அவன் என்ன செய்ய வேண்டும்? | |
| உங்களது வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்திருக்கிறார். முன்னறிவிப்பின்றி வந்திருக்கும் அவர் மிகவும் களைப்புடன் காணப்படுகிறார். நீங்கள் அவரை எவ்விதம் வரவேற்பீர்கள்? | |

**கலைச்சொல் அறிவோம்**

| | | |
| --- | --- | --- |
| ஆவணம் – Document | உப்பங்கழி – Backwater | ஒப்பந்தம் – Agreement |
| படையெடுப்பு – Invasion | பண்பாடு – Culture | மாலுமி – Sailor |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 165 23-10-2018 12:50:23

அறிவை விரிவு செய்

1. மறைக்கப்பட்ட இந்தியா – எஸ். இராமகிருஷ்ணன்
2. பிரபஞ்சன் சிறுகதைகள்

இணையத்தில் காண்க

*http://www.sirukathaigal.com/tag/பிரபஞ்சன்*

## இணையச் செயல்பாடு

### தமிழ் மின் நிகண்டு

ஒத்த சொல் அறிவோம்!




**படிகள்:**

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி 'Visual Thesaurus for Tamil தமிழ் மின் நிகண்டு' என்னும் செயலியைப் பதிவிறக்கி நிறுவிக் கொள்க.
- இப்போது திரையில் தோன்றும் 'தேடும் சொல்' என்னும் பெட்டியில் தேவையான சொல்லை இட்டு அதற்கொத்த பல சொற்களை அறிக.
- எடுத்துக்காட்டாக 'கூதிர்' என்னும் சொல்லை உள்ளீடு செய்து பனிக்காற்று, குளிர், குளிர்காலம் போன்ற வழக்கில் உள்ள சொற்களை அறிக.

**செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :**



**செயல்பாட்டிற்கான உரலி**
https://play.google.com/store/apps/details?id=com.tamilvu.visualthesarurs_mobileapp

B123_11_TAM

படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 166 23-10-2018 12:50:24

வாழ்வியல்

இயல் 6

# திருக்குறள்

29VD8E

## பொச்சாவாமை

*1) இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்*
*மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து*

தங்களின் மகிழ்ச்சியில் கடமையை மறக்கும்போது மறதியால் கெட்டவர்களை நினைத்துப் பார்த்துக் கொள்க.

*2) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்*
*உள்ளியது உள்ளப் பெறின்*

எப்போதும் எண்ணியதையே எண்ணிக்கொண்டிருந்தால், எண்ணியதை அடைதல் எளியதே!

## குறிப்பறிதல்

*3) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்*
*யாது கொடுத்தும் கொளல்**

முகக்குறிப்பில் அகக்குறிப்பை அறிபவரை என்ன பொறுப்பைக் கொடுத்தாவது துணையாக்கிக் கொள்க.

*4) பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்*
*வகைமை உணர்வார்ப் பெறின்*

கண்ணின் குறிப்புகளை உணர வல்லவற்கு, பிறருடைய பகைமையையும் நட்பையும் அவரது கண்ணே அறிவித்துவிடும்.

## படைமாட்சி

*5) மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்*
*எனநான்கே ஏமம் படைக்கு*

வீரம், மானம், முன்னோர் வழியில் நடத்தல், நம்பிக்கைக்கு உரியவர் ஆதல் ஆகிய நான்கே படைக்குப் பாதுகாப்பு.

## பகைத்திறம் தெளிதல்

*6) பகைஎன்னும் பண்பில் அதனை ஒருவன்*
*நகையேயும் வேண்டற்பாற்று அன்று*

பகை என்னும் பண்பற்றதை ஒருவன் விளையாட்டுக்குக் கூட விரும்பக் கூடாது!



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 167 23-10-2018 12:50:24

7) *வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க*
*சொல்லேர் உழவர் பகை**

வில் வீரரின் பகையைப் பெற்றாலும், சொல்வன்மை உடைய அறிஞரின் பகையைப் பெறக்கூடாது!

8) *இளைதாக முள்மரம் கொல்க களையுநர்*
*கைகொல்லும் காழ்த்த இடத்து**

சிறியதாக இருக்கையிலேயே முள்மரத்தைக் களைந்து விடுக! முதிர்ந்துவிட்டால் வெட்டுபவரின் கையையே காயப்படுத்தும்.

**அணி : பிறிதுமொழிதல் அணி**

### மருந்து

9) *மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின்**

உண்டதும், செரித்ததும் அறிந்து உண்டால் மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

10) *நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்**

நோயையும் அதன் காரணத்தையும் அதை நீக்கும் வழியையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

**அணி : சொற்பொருள் பின்வரும் நிலையணி**

11) *உற்றான் அளவும் பிணியளவும் காலமும்*
*கற்றான் கருதிச் செயல்*

நோயாளியின் வயதையும் நோயின் அளவையும் குளிர்காலம், வேனிற்காலம் முதலிய பருவங்களையும் அறிந்து மருத்துவர் செயல்படவேண்டும்

12) *உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று*
*அப்பால்நாற் கூற்றே மருந்து*

நோயாளி, மருத்துவர், மருந்து, மருத்துவ உதவியாளர் – என்று மருத்துவம் நான்குவகையில் அடங்கும்.

### இரவச்சம்

13) *இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகியற்றி யான்**

பிறரிடம் கையேந்தி உயிர்வாழும் நிலை இருக்கும் எனில், அப்படி அந்நிலையை உருவாக்கியவன் அலைந்து கெடட்டும்.

14) *இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்*
*பார்தாக்கப் பக்கு விடும்*

பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும்.

**அணி : உருவக அணி**



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 168 23-10-2018 12:50:24

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை

ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

2. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.

கொடி தவித்ததைப் பாரி
அறிந்துகொண்டான்
மயில் தவித்ததைப் பேகன்
உணர்ந்துகொண்டான்
பிள்ளையின் பரிதவிப்பைத்
தாய் அறிவாள்
பளிங்கு முகத்தைப் படித்துக்கொள்
அப்படிப் படித்தவர்களைப்
பிடித்துக்கொள்.

அ) இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்

இ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 169 23-10-2018 12:50:24

3. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து -------- நினை.

அ) முகக்குறிப்பை அறிந்தவரை

ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை

ஈ) சொல்லேர் உழவரை

4. பொருள் கூறுக

அ) ஏமம்

ஆ) மருந்துழைச் செல்வான்

5. இலக்கணக்குறிப்புத் தருக

அ) கெடுக

ஆ) குறிப்புணர்வார்

**குறுவினா**

1. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?
2. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?
3. பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வென்றுவிடவேண்டும் என்னும் குறட்பாவைக் கூறுக.
4. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

**சிறுவினா**

1. உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குக.
2. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
   கைகொல்லும் காழ்த்த இடத்து. - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.
3. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

**நெடுவினா**

வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_139-170.indd 170 23-10-2018 12:50:24

இயல் 7

# பல்கலை நிறுவு



## கற்றல் நோக்கங்கள்

- தமிழர் கலைகளை அவை படைக்கப்பட்ட காலப்பின்னணி, அறிவியல் நுட்பங்களுடன் இணைத்துப் போற்றுதல்
- இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள பல்வேறு உரையாடல் வடிவங்களைச் சுவைத்துப் பின்பற்றுதல்
- வாழும் காலத்து ஆளுமைகளின் திறமைகளை உணர்ந்து முன்னோடியாகக் கொள்ளுதல்
- கலைச்சொல்லாக்கத்தின் இன்றியமையாமையை உணர்ந்து புதிய சொற்களை உருவாக்கிப் பயன்படுத்துதல்

## பாடப் பகுதி

காலத்தை வென்ற கலை

கேள்வி, ஒரு புளியமரம் – ஆத்மாநாம்

குற்றாலக் குறவஞ்சி – திரிகூட ராசப்பக் கவிராயர்

திருச்சாழல் – மாணிக்கவாசகர்

இசைத்தமிழர் இருவர்

கலைச்சொல்லாக்கம்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_171-196.indd 171 23-10-2018 13:15:10

உரைநடை உலகம்

இயல் 7

# காலத்தை வென்ற கலை

2A59A2




கலையும் அறிவியலும் மனித குல வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்தவை. மனிதனின் படைப்புத் திறனால் உருவானது கலையாகும்; அது நம் மனத்தில் அழகுணர்வை ஏற்படுத்தி மகிழ்வையும் தருகிறது. நுண்கலை, பயன்கலை, பருண்மைக்கலை, கவின்கலை, நிகழ்த்துகலை எனக் கலைகள் பலவகைப்படும்.. கலை ஒரு சமூகத்தின் நாகரிகத்தையும் பண்பாட்டு மேன்மையையும் எதிரொலிக்கின்றது. தமிழகத்தில் பழங்காலத்திலேயே சிற்பம், கட்டடம், ஆடல், பாடல் முதலிய கலைகள் சிறப்புற்றிருந்தன. ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் தஞ்சைப் பெரிய கோவிலின் கட்டடக் கலைநுட்பம் நம்மை வியப்படையச் செய்கிறது..

கதிரும் நிலாவும் அண்ணா பல்கலைக் கழகத்தில் கட்டட அழகியல் கலைஞர்களுக்கான பட்டப்படிப்பின் (B.Arch.,) இறுதியாண்டு மாணவர்கள். கல்வெட்டுக்கலைப் பயிற்சியுள்ளவர்கள். தொன்மையான கோவில்களுக்குச் சென்று கலையழகையும் நுட்பங்களையும் விருப்பத்துடன் ஒளிப்படம், ஆவணப்படங்களை எடுத்துத் தங்கள் வலைத்தளத்தில் கட்டுரைகளோடு பதிவேற்றுவார்கள்.

கல்லூரியில் மூன்று நாள்கள் விடுமுறை கிடைத்தபோது அவ்விருவரும் தங்களின் பல நாள் கனவான தஞ்சாவூர்க் கோவிலுக்குச் செல்வதென்று முடிவெடுத்தனர். விடியலில் குளிர்காற்றின் மென்மையை அனுபவித்தபடி தஞ்சையில் இறங்கிய இருவரும் உறவினர் வீட்டில் ஓய்வு எடுத்தனர். பின்னர், நிழற்படக் கருவி, வரைபடத் தாள்கள் உள்ளிட்ட பொருள்களைக் கதிர் எடுத்துக்கொள்ள, நிலா கோவிலை நோக்கித் தன் வாகனத்தை ஓட்டினாள்.

கோவிலுக்குள் நுழைந்ததும், ஒளிப்படம் எடுப்பதற்கான அனுமதிச்சீட்டை வாங்கிக்கொண்டு உள்ளே சென்றனர். சுற்றிப் பார்த்து ஆங்காங்கே நின்று ஒளிப்படங்கள் எடுத்தபடி, அதன் நுணுக்கங்களைக் கவனித்து வியந்த இருவரும் சற்றே களைத்தவர்களாய்த் திருச்சுற்று மாளிகையில் அமர்ந்தனர்.

பெரியகோவிலின் கோபுரங்களில் உயரமானது, கேரளாந்தகன் கோபுரம். இராசராசன் 988ஆம் ஆண்டு சேரநாட்டை வெற்றிகொண்டதைப் போற்றும் வகையில் இக்கோபுரத்திற்குக் "கேரளாந்தகன் வாயில் கோபுரம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

நிலா: கதிர், கவனித்தாயா, இந்தக் கோவிலில் இரண்டு கோபுரங்கள் இருக்கின்றன.

கதிர்: ஆமாம். முதலில் உள்ளது கேரளாந்தகன் திருவாயில்; அதை அடுத்து உள்ளது இராசராசன் திருவாயில். இவை சோழர்களின் தனி அடையாளம். ஆமாம் நிலா, இங்குக் கோபுரத்தின் நிழல் விழாது என்று கேள்விப்பட்டிருக்கிறேன், உண்மையா?

நிலா : விமானத்தின் நிழல் விழாது என்பது கட்டுக்கதை. தினமும் இருவேளையும் விமானத்தின் நிழல் முழுவதுமாகவே விழும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 172 23-10-2018 13:15:10

புதிய குரல்: "தம்பி, நீங்கள் கோபுரமென்றது தவறு. இந்தப் பெண் சொன்னதுதான் சரி". (குரல் வந்த திசையில் பார்த்தபோது அவர்களுக்குப் பின்னால் தூணில் தூய வெண்ணிற ஆடையில் அறிவின் களையுடனும் சோர்ந்த முகத்துடனும் 70 வயது மதிக்கத்தக்க பெரியவர் ஒருவர் தூணில் சாய்ந்து அமர்ந்திருந்தார்.)

பெரியவர்: கோபுரமென்பது வாயில்களின் மேலே அமைக்கப்படுவது. விமானமோ, 'அகநாழிகை'யின்மேல் அமைக்கப்படுவது.

கதிர்: அகநாழிகையா?

பெரியவர் : கருவறையைத்தான் அகநாழிகை என்று அழைப்பார்கள். நீங்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். இரண்டு நுழைவாயில் கோபுரங்கள் என்பது பிற்காலச் சோழர்களின் தனிச்சிறப்பு.

நிலா: இதை ஏன் பெரிய கோவில் என்று அழைக்கிறார்கள் ஐயா?

பெரியவர்: (குறு நகையுடன்) தஞ்சைப் பெரிய கோவில் நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களிலேயே பெரியதும் உயரமானதும் ஆகும் அம்மா. இராசராச சோழனால் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் முயன்று இது கட்டி முடிக்கப்பட்டது. 'தட்சிண மேரு' என்று இராசராசனால் பெருமையுடன் அழைக்கப்பட்ட இக்கோவில் விமானம் 216 அடி உயரம் உடையது. கருவறை விமானம் 13 தளங்களையுடையது.

கதிர்: கற்றளிக் கோயில்களென்றால்.....

பெரியவர்: செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவதுபோல, கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் கற்றளி என்று பெயர். ஏழாம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னன் உருவாக்கிய வடிவம் இது. மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில் ஆகியவற்றை இதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். அந்த வகையில் முழுமையாகக் கற்களைக்கொண்டே கட்டப்பட்ட மிகப் பெரிய கோவில் இதுதான்.

நிலா: பழங்காலத்தில் கோவில்கள் எப்படிக் கட்டப்பட்டன ஐயா?

பெரியவர்: தொடக்கத்தில் மண்ணால் கட்டி, மேலே மரத்தால் சட்டகமிட்டனர். தில்லைக் கோவில், குற்றாலநாதர் கோவில் ஆகியன அவ்வாறு கட்டப்பட்டவை. அதன்மேல் செப்பு, பொன் தகடுகளால் கூரை வேய்ந்தார்கள். அடுத்த நிலையில் செங்கற்களை அடுக்கிக் கோவில் கட்டினார்கள். அந்த வகையில்

11ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த முதலாம் இராசராச சோழன் தஞ்சைப் பெரிய கோவிலை 1003ஆம் ஆண்டு தொடங்கி 1010ஆம் ஆண்டுவரை கட்டினான். 2010இல் இக்கோவிலின் 1000ஆவது ஆண்டு நிறைவடைந்தது.



தஞ்சைப் பெரிய கோவில் – குறுக்கு வெட்டுத் தோற்றம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_171-196.indd 173 23-10-2018 13:15:10

சோழன் செங்கணான் எழுபத்தெட்டுக் கோவில்களைக் கட்டியிருப்பதாகத் திருநாவுக்கரசர் தம் பதிகமொன்றில் கூறுகிறார்.

நிலா: கோவில்கள் ஏன் பெரிதாகக் கட்டப்பட்டன?

பெரியவர்: கோவில் என்பது வெறும் வழிபடும் தலம் மட்டுமன்று. அங்கே இசை, நடனம், நாடகம் போன்ற அருங்கலைகள் வளர்க்கப்பட்டன. அது, மக்கள் ஒன்றுகூடும் இடமாகவும் இருந்தது. எனவே மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகள் அனைத்துமே அங்கே கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டன. அதுமட்டுமல்லாமல் பஞ்ச காலத்தில் மக்களுக்கு உதவுவதற்கான தானியக் கிடங்குகளும் கோவிலுக்குள் அமைக்கப்பட்டிருந்தன. கருவூலமாகவும் மருத்துவமனையாகவும், போர்க்காலங்களில் படைவீரர்கள் தங்கக்கூடிய இடமாகவும் கோவில்கள் பயன்பட்டன என்றால் நீங்கள் வியப்படைவீர்கள்.

கதிர்: சரிதான், பல்லவர்கள்தாம் கோவில் கட்டுவதில் வல்லவர்கள் என்று நினைத்திருந்தேன்.

பெரியவர்: செங்கல், சுண்ணம், மரம், உலோகம் முதலியவை இல்லாமலே பிரம ஈசுவர விஷ்ணுக்களுக்கு 'விசித்திர சித்தன்' என்று அழைக்கப்பட்ட முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் குடைவரைக் கோவில்களை அமைத்ததாக மண்டகப்பட்டுக் கல்வெட்டு கூறுகின்றது. அவர்கள்வழி வந்த இராசசிம்மனோ தம் முன்னோர்களையும் விஞ்சும் வகையில் உன்னதச் சிறப்பும் எழிலும் வாய்ந்ததாகக் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலை அமைத்து அழியாப் புகழ் பெற்றான்.

நிலா: இராசசிம்மேச்சுரம் என்று அழைக்கப்பட்ட அக்கோவிலே இராசராசனுக்கு, அதுபோன்றதொரு பெரிய கோவிலைக் கட்ட வேண்டுமென்ற ஆர்வத்தைத் தூண்டியது அல்லவா?

> கட்டடக்கலை என்பது உறைந்துபோன இசை
> – பிரடிரிகா வொன்ஸ்லீவிங்

பெரியவர்: பரவாயில்லையே, நிறையத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். ஆனால், தஞ்சைப் பெரிய கோவிலை இராசராசன்தான் கட்டினான் என்பதற்குச் சான்று எங்கே உள்ளது? இக்கோவில் எந்தக் கலைப் பாணியைச் சேர்ந்தது? சொல்லுங்கள் பார்ப்போம்.

கதிர்: இந்தியக் கட்டடக் கலைப்பாணியை நாகரம், வேசரம், திராவிடம் என்று மூன்றாகக் கூறுவர். அதில் தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.

பெரியவர்: முதல் கேள்விக்குப் பதில் சொல்லலையே தம்பி?

நிலா: நான் சொல்கிறேன் ஐயா. 1886ஆம் ஆண்டு ஜெர்மனி அறிஞர் ஷூல்ஸ் ஆறு ஆண்டுகள் தீவிரமாகக் கல்வெட்டுகளைப் படியெடுத்து வாசித்து இக்கோவிலை இராசராச சோழன்தான் கட்டினான் என்று உறுதி செய்தார்.



பெரியவர்: சரியாகச் சொன்னாய் அம்மா. இக்கோவிலில் அரிய ஓவியங்களும் இருக்கின்றன தெரியுமா?

கதிர்: செய்தித்தாள்களில் படித்த நினைவு இருக்கிறது. ஆனால், சரியாகத் தெரியவில்லை.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 174 23-10-2018 13:15:10

பெரியவர் : 1930ஆம் ஆண்டில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்த எஸ்.கே. கோவிந்தசாமி தஞ்சைப் பெரிய கோவில் கருவறையின் இரு தளங்களில் உள்ள சுற்றுக்கூடம், சாந்தார நாழிகைப் பகுதிச்சுவர்களில் ஓவியங்கள் காணப்பட்டதை முதன்முதலில் கண்டறிந்தார். அதில், தட்சிணாமூர்த்தி ஓவியம், சுந்தரர் வரலாறு, திரிபுராந்தகர் ஓவியம் முதலியன சுவர் முழுவதுமாகப் பெரிய அளவில் வரையப்பட்டுள்ளன.

நிலா : ஃப்ரெஸ்கோ வகை ஓவியங்களைத்தானே சொல்கிறீர்கள்? சோழர் கால ஓவியங்கள் மீதே நாயக்கர் ஆட்சியில் ஓவியங்கள் வரைந்திருந்ததை அறிந்து அதனை வெளியுலகத்துக்குத் தெரியப்படுத்தியவரும் அவர்தானே ஐயா!

கதிர்: அந்த ஓவியங்களை நாங்கள் பார்த்துப் படமெடுக்க இயலுமா?

பெரியவர்: பொது மக்களுக்கு அனுமதியில்லையப்பா. சிறப்பு அனுமதி பெற்றவர்கள் மட்டுமே பார்க்க முடியும்.

கோவில்களுக்கோ, தொல்லியல் இடங்களுக்கோ செல்பவர்கள் அதன் முக்கியத்துவத்தை உணராமல் சிலைகளைச் சேதப்படுத்துதல், சுவர்களில் கிறுக்குதல், தொல்லிடங்களில் குப்பை போடுதல் போன்ற இழிவான செயல்களில் ஈடுபடுகிறார்கள். நம்முடைய தொன்மையையும் பாரம்பரியத்தையும் பேசும் அந்த இடங்களை நாம் பாதுகாக்க வேண்டாமா? ஏற்கெனவே நாம் பல இடங்களை, அதன் முக்கியத்துவம் உணராமல் கற்களைப் பெயர்த்தும் கோபுரங்களைச் சிதைத்தும் சிலைகளை உடைத்தும் அழித்துவிட்டோமே தம்பி.

கதிர்: ஆமாம் ஐயா. நீங்கள் சொல்வது சரியே. வரலாற்றைப் படைத்த நமக்கு அதனைப் பாதுகாக்கத் தெரியவில்லை.

**திட்பமும் நுட்பமும்**



ஃப்ரெஸ்கோ ஓவியங்கள்

ஃப்ரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள். சுண்ணாம்புக் காரைப்பூச்சு மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழமையான ஓவியக் கலைநுட்பம் இது. இவ்வகை ஓவியங்களை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களிலும் காணலாம்.

தஞ்சைக் கோவிலில் நந்தியும் சிகரமும் ஒற்றைக்கல்லால் ஆனதுன்னு கேள்விப்பட்டிருக்கேன் ஐயா.

பெரியவர் : இங்குள்ள நந்தி, சோழர் காலத்தைச் சார்ந்தது அன்று. நாம் பார்க்கும் இந்தப் பெரிய நந்தியும் மண்டபமும் நாயக்கர் காலத்தது தம்பி. சோழர் காலத்து நந்தி தற்போது தென்புறத் திருச்சுற்றில் உள்ளது. இன்னொரு செய்தி சொல்கிறேன் கேளுங்கள், அந்தச் சிகரத்திலுள்ள பிரமந்திரக் கல் ஒற்றைக்கல் அன்று. பதின்மூன்று தளங்களை உடைய கருவறை விமானத்தின்மேல் எண்பட்டை அமைப்பில் ஆரஞ்சுப்பழச்சுளை போன்று எட்டுக் கற்கள் நெருக்கமாக வைத்து ஒட்டப்பட்டன.

நிலா : புதிய செய்தி ஐயா. கோபுரங்களை உயரமாகக் கட்டுவது என்பது பின்னால் வந்த பழக்கமில்லையா கதிர்? பழைய கோவில்களில் கோபுரங்கள் சிறியதாக இருப்பதைப் பார்த்திருக்கிறேன். நம்முடைய தமிழக அரசின் சின்னமே கோவில் கோபுரம்தானே!



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 175 23-10-2018 13:15:10

கதிர்: 12ஆம் நூற்றாண்டிலிருந்து கோபுரங்கள் தனிச்சிறப்புப் பெற்றன என்று சொல்லலாம். வெளிக்கோபுரத்தை உயரமாகவும் உட்கோபுரத்தை உயரம் குறைவாகவும் இரண்டு வகைக் கோபுரங்களைக் கட்டும் புதிய மரபைத் தோற்றுவித்தவன் இராசராசன். அதனைத் திருவாயில் என்று சொல்வார்கள். கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், திரிபுவனம் ஆகிய இடங்களில் இரண்டு வாயில்கள் இருப்பதைப் பார்த்திருக்கிறோம்தானே நிலா!

பெரியவர்: நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப் பெறும் மரபு, இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்திலிருந்து தொடங்கியது. கீழ்ப்பகுதியைக் கல்லாலும் மேற்பகுதியைச் செங்கற்களாலும் கட்டியிருப்பர். புகழ்பெற்ற கோவில்கள் பலவற்றிலும் மிகவுயர்ந்த கோபுரத்தை எழுப்பியது விஜயநகர அரசு. காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை, திருவரங்கம், மதுரை ஆகிய இடங்களில் உள்ள கோவில்களில் உள்ள கோபுரங்கள் எல்லாமே 150 அடிக்கு மேல் உயரம் உள்ளவை.

நிலா: இராசராசன் காலத்தில் பெண் அதிகாரிகள் அரசுப்பணிகளில் இருந்திருக்கிறார்கள் தெரியுமா! இராசராசனின் பட்டத்தரசி ஒலோகமாதேவி திருவையாற்றில் கட்டிய கோவில் ஒலோகமாதேவீச்சுரம் என்று வழங்கப்படும். அந்தக் கோவிலில் உள்ள கல்வெட்டில்,

"உடன் கூட்டத்து அதிகாரம் செய்கின்ற
கோவலூரு டையான் காடந்
னூற்றெண்மமநையும் அதிகாரிச்சி
எருதந் குஞ்சிர மல்லியையும்"

என்ற வரிகளில் 'எருதந் குஞ்சிர மல்லி' என்ற பெண் அதிகாரியைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரியவர் : அதே கோவிலில் முதலாம் இராசாதிராசன் காலத்திலும் ஓர் அதிகாரிச்சி பற்றிய குறிப்பு இருக்கிறது. அவர் பெயர், அதிகாரிச்சி சோமயன் அமிர்தவல்லி. மகிழ்ச்சிதானே!

கதிர்: ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் அதிகாரிகளாகப் பணிபுரிந்திருக்கின்றனர் என்பது ஆச்சரியமாக இருக்கே! நிலா, இந்தச் செய்திகளைப் பற்றி எனக்குச் சொல்லவேயில்லையே!

நிலா: அது இருக்கட்டும். ஐயா, நாங்கள் இருவரும் தொடர்ச்சியாக, கட்டடக்கலை பற்றி ஆய்வு செய்து வருவதால் ஓரளவு இந்தச் செய்திகள் தெரியும். உங்களைப் பார்த்தால் சாமியாரைப் போல் இருக்கிறீர்கள். ஆனால், எங்களுக்குத் தெரியாத தகவல்களையும் சொல்கிறீர்களே.....

பெரியவர்: இதே ஊரில் வசிக்கும் கல்தச்சன் நான். என் முன்னோர்கள் அல்லவா இப்படிப்பட்ட பெருங்கோயில்களை எழுப்பியிருக்கிறார்கள். கற்களே கிடைக்காத காவிரிச் சமவெளிப் பகுதியில் இவ்வளவு உயரத்தில் ஒரு கற்கோவில். தஞ்சையின் பெருமை இந்தக் கோவில். அடடா! இரண்டு, மூன்று தளங்களை மட்டுமே கொண்டு கோவில் கட்டிவந்த காலத்தில் புதிய மரபு படைத்தவன் இராசராசன். என் தந்தை காலத்தில்கூட, கற்சிற்பங்கள் செய்திருக்கிறோம். அவ்வப்போது இந்தக் கோவிலுக்கு வருவேன். இங்கு வந்துவிட்டால் என் காதில் கற்களைச் செதுக்கும் உளியின் ஓசையும் பெருந்தச்சனின் ஆணைகளும் ஒலிக்கத் தொடங்கிவிடும். அதன் கண்ணியைப் பிடித்துக்கொண்டு அந்த நூற்றாண்டின் பெருந்தச்சர்களான என் முன்னோர்களை வியந்தபடி இங்கே அமர்ந்திருப்பேன்.

(பேசியவாறே விடைபெற்றுச் செல்கிறார் பெரியவர்)



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 176 24-10-2018 14:56:54

கோவிலை எடுப்பித்தவர்கள் பற்றிய கல்வெட்டில்,

"நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், கொடுப்பார் கொடுத்தனவும் இந்த கல்லிலே வெட்டி அருள்க...."

என்று கோவில் கட்ட உதவியவர்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். தான் மட்டுமே பங்களிக்காமல் மற்றவர்களின் உதவியையும் பெற்றதோடு அதனைக் கல்வெட்டாகவும் ஆவணப்படுத்தியிருக்கும் இராசராசனின் பாங்கு போற்றத்தக்கது. தனக்கு அடுத்தபடியான இடத்தைத் தன் தமக்கை குந்தவை தேவிக்கு (அக்கன்) அளித்துள்ளார். அடுத்து, பெண்டு என்னும் சொல்லால் அவருடைய மனைவியர் கொடுத்த கொடையைக் குறிப்பிடுவதோடு கொடுப்பார் கொடுத்தனவும் என்று சொல்வதன் மூலம் இராசராசன், மற்றவர்களின் கொடையையும் உலகம் அறியும்படி செய்துள்ளார்.

*கதிர் :* *தஞ்சைக் கோவிலை எந்த வகையிலும் மறக்க முடியாது. எத்தனை எத்தனை சிறப்புகள், அடடா! பெரியவர் சொன்ன புதிய தகவல்கள் ஆச்சரியம் இல்லையா நிலா. இப்போது, திரும்பவும் கோவிலைச் சுற்றிப் பார்க்கலாம்; படங்கள் எடுக்கணும். இவ்வளவு தகவல்கள் சொன்னவர் பெயரைக்கூட நாம் கேட்க மறந்து விட்டோமே..... சரி, நாமும் கிளம்புவோம்.*

*(இருவரும் கோவிலை மீண்டும் சுற்றி வருகின்றனர்)*

*நிலா:* *கதிர், இங்கே பாரேன், கோவிலைக் கட்டிய தச்சர்களின் பெயர்களைப் பொறிச்சிருக்காங்க. வீரசோழன் குஞ்சரமல்லன் இராசராசப் பெருந்தச்சன், மதுராந்தகனான நித்தவினோதப் பெருந்தச்சன், இலத்திசடையனான கண்டராதித்தப் பெருந்தச்சன். எடுப்பித்தவன் பெயர் மட்டுமே பொறிக்கப்படும் நிலையில், தச்சர்களின் பெயரும் இந்த அழியாக் கோவிலில் பதித்திருப்பது மேலும் ஒரு புதுமை.*

*கதிர் :* *ஆமாம் நிலா. இந்த வாரம் நம்முடைய வலைத்தளத்தில் தஞ்சைப் பெரிய கோவிலைப் பற்றி விரிவான கட்டுரையையும் படங்களையும் பதிவேற்றுவோம்.*

கற்பவை கற்றபின்...

1. அருகிலுள்ள கோவில் சிற்பங்கள், கோபுரங்கள் குறித்த சிறப்புத் தகவல்களைத் திரட்டிப் படங்களுடன் தொகுப்பேடு உருவாக்குக.
2. 'தட்சிண மேரு' – குறித்துப் பாடத்தில் சொல்லப்படாத பல்வேறு தகவல்களைத் திரட்டி வகுப்பில் கலந்துரையாடுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 177 23-10-2018 13:15:11

கவிதைப்பேழை

இயல் 7

# ஆத்மாநாம் கவிதைகள்

2AE5BP

**நுழையும்முன்**

ஆத்மாநாம், கவிதை என்ற கலை வடிவத்தின் அழகியல் ஊடாக மானுடத்தின் விழுமியங்களை உரத்த குரலில் பேசியவர். கவிதை பாடுதலைச் சமூக அக்கறையாக மாற்றிக்கொண்டவர். இக்கவிதையில் அணிலையும் புளியமரத்தையும் காட்சிப்படுத்தி நம்முடன் உரையாடுகிறார்.

## கேள்வி



*காலை எழுந்ததும்*
*இரை தேடத் துள்ளும்*
*இவ்வணில்*
*இரவு எங்கே உறங்குகிறது*
*மலர்க்கிளைப் படுகையிலா*
*ஆற்றுமணற் சரிவிலா*
*சதுர வட்டக் கோண மயக்கச் சந்து பொந்துகளிலா*
*நிச்சயம் நூற்றுக்கணக்கில் இருக்கும்*
*இவ்வணில்கள்*
*ஒன்றல்ல தம் குழந்தைத்தனமான முகங்களுடன்*
*சிறு பிள்ளைக்கைகளுடன்*
*அனுபவித்து உண்ணும்*
*இவை*
*தங்களைப்பற்றி என்ன கனவு காணும்*
*உணவையும் உறக்கத்தையும் தவிர.*

## ஒரு புளியமரம்



*ஒரு புளியமரம் சமீபத்தில்*
*என் நண்பனாயிற்று*
*தற்செயலாய்*
*அப்புறம் நான் சென்றபோது*
*நிழலிலிருந்து ஒரு குரல்*
*என்னைத் தெரிகிறதா*
*நினைவிருக்கிறதா*
*அன்றொரு நாள்*
*நீ புளியம்பழங்கள்*
*பொறுக்க வந்தபோது*
*என் தமக்கையின் மடியில்*
*அயர்ந்து போனாய்*
*அப்போது குளிர்ந்த காற்றை வீசினேனே*
*உன் முகத்தில் உடலில் எங்கும்*
*வா எப்படியும் என் மடிக்கு.*

### நூல்வெளி

மதுசூதனன் என்ற இயற்பெயரைக்கொண்ட ஆத்மாநாம் தமிழ்க்கவிதை ஆளுமைகளில் குறிப்பிடத்தக்கவர். காகிதத்தில் ஒரு கோடு அவருடைய முக்கியமான கவிதைத் தொகுப்பு. 'ழ' என்னும் சிற்றிதழை நடத்தியவர். கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என்று மூன்று தளங்களிலும் இயங்கியவர். இவருடைய கவிதைகள் ஆத்மாநாம் கவிதைகள் என்னும் பெயரில் ஒரே தொகுப்பாக்கப்பெற்றுள்ளன.

### கற்பவை கற்றபின்...

உங்களுக்குப் பிடித்த கவிதை ஒன்றைப் படித்து அதன் நுட்பத்தை வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 178 23-10-2018 13:15:11

கவிதைப்பேழை

இயல் 7

## குற்றாலக் குறவஞ்சி

2AN1DC

**நுழையும்முன்**

சங்க இலக்கியங்கள் வீரர்களை, அரசர்களை, வள்ளல்களை, தனிமனிதர்களைப் பாடின. சமய நூல்கள் கடவுளரைப் பாடின சிற்றிலக்கியங்கள் கடவுளரோடு மனிதர்களையும் பாடின. அவற்றுள் இயற்றமிழின் செழுமையையும் இசைத்தமிழின் இனிமையையும் நாடகத்தமிழின் எழிலினையும் ஒருங்கேகொண்டு முத்தமிழ்க் காவியமாகத் திகழ்வது குற்றாலக் குறவஞ்சி.

குறவஞ்சி என்பது ஒரு வகை நாடக (opera) இலக்கிய வடிவமாகும். இது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. பாட்டுடைத் தலைவன் உலா வரக்கண்ட தலைவி, அத்தலைவன் மீது காதல்கொள்ள, குறவர் குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி தலைவிக்குக் குறிகூறிப் பரிசில் பெறும் செய்திகளைக் கூறுவதால் குறவஞ்சி என்னும் பெயர் பெற்றது. இது குறத்திப்பாட்டு என்றும் வழங்கப்படுகின்றது. பரிசில் பெற்றுவரும் சிங்கிக்கும் சிங்கனுக்கும் இடையிலான உரையாடல் சுவைமிக்கது.

### சிங்கனுக்கும் சிங்கிக்கும் உரையாடல் கண்ணிகள்

சிங்கன் : இத்தனை நாளாக என்னுடன் சொல்லாமல்
எங்கே நடந்தாய் நீ சிங்கி? (எங்கே)

சிங்கி : கொத்தார் குழலார்க்கு வித்தாரமாகக்
குறிசொல்லப் போனனடா சிங்கா! (குறிசொல்ல)

சிங்கன் : பார்க்கில் அதிசயம் தோணுது சொல்லப்
பயமா இருக்குதடி சிங்கி! (பயமா)

சிங்கி : ஆர்க்கும் பயமில்லை தோணின காரியம்
அஞ்சாமல் சொல்லடா சிங்கா! (அஞ்சாமல்)

சிங்கன் : காலுக்கு மேலே பெரிய விரியன்
கடித்துக் கிடப்பானேன் சிங்கி? (கடித்து)



சிங்கி : சேலத்துநாட்டில்குறிசொல்லிப்பெற்ற
சிலம்பு கிடக்குதடா சிங்கா! (சிலம்பு)

சிங்கன் : சேலத்தார் இட்ட சிலம்புக்கு மேலே
திருகு முறுகு என்னடி சிங்கி? (திருகு)

சிங்கி : கோலத்து நாட்டார் முறுக்கிட்ட தண்டை
கொடுத்த வரிசையடா சிங்கா! (கொடுத்த)



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 179 23-10-2018 13:15:11

சிங்கன் : நீண்டு குறுகியும் நாங்கூழுப் போல
நெளிந்த நெளிவு என்னடி சிங்கி?
(நெளிந்த)

சிங்கி : பாண்டிய னார்மகள் வேண்டும்
குறிக்காகப்
பாடகம் இட்டதடா சிங்கா! (பாடகம்)

சிங்கன் : மாண்ட தவளை உன் காலிலே கட்டிய
மார்க்கம் அது ஏதடி சிங்கி?
(மார்க்கம்)

சிங்கி : ஆண்டவர் குற்றாலர் சந்நிதிப்
பெண்கள்
அணிமணிக் கெச்சம் அடா சிங்கா!
(அணிமணி)

சிங்கன் : சுண்டு விரலிலே குண்டலப் பூச்சி
சுருண்டு கிடப்பானேன் சிங்கி?
(சுருண்டு)

சிங்கி : கண்டிய தேசத்தில் பண்டுநான் பெற்ற
காலாழி பீலியடா சிங்கா! (காலாழி)

## சொல்லும் பொருளும்

கொத்து – பூமாலை; குழல் – கூந்தல்; நாங்கூழ் – மண்புழு; கோலத்து நாட்டார் – கலிங்க நாட்டார்; வரிசை – சன்மானம்.

## இலக்கணக்குறிப்பு

மாண்ட தவளை – பெயரெச்சம்

## பகுபத உறுப்பிலக்கணம்

பெற்ற – பெறு (பெற்று) + அ

பெறு – பகுதி

பெற்று – ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது

அ – பெயரெச்ச விகுதி

## புணர்ச்சி விதி

பயமில்லை – பயம் + இல்லை

உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

### நூல்வெளி

தமிழ்நாட்டின் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் என்னும் ஊரின் சிறப்பைப் புகழ்ந்து, அங்குள்ள குற்றாலநாதரைப் போற்றிப் பாடப்பட்டது குற்றாலக் குறவஞ்சி. இந்நூல், திரிகூட ராசப்பக் கவிராயரின் 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்பட்டது. மதுரை முத்துவிசயரங்க சொக்கலிங்கனார் விருப்பத்திற்கு இணங்கப் பாடி அரங்கேற்றப்பட்டது. திரிகூட ராசப்பக் கவிராயர் திருநெல்வேலியில் தோன்றியவர். குற்றாலநாதர் கோவிலில் பணிபுரியும் காலத்தில் சைவசமயக் கல்வியிலும் இலக்கிய இலக்கணங்களிலும் தேர்ச்சி பெற்றார். திருக்குற்றாலநாதர் கோவில் வித்துவான் என்று சிறப்புப் பட்டப்பெயர் பெற்றவர். குற்றாலத்தின்மீது தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ், யமக அந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியிருக்கின்றார்.

### கற்பவை கற்றபின்...

1. குறவஞ்சியில் கூறப்பட்டுள்ள அணிகலன்களின் பெயர்களைப் படங்களுடன் திரட்டி அணிகலன்கள் அணியப்படுவதற்கான அறிவியல் காரணங்களையும் இணைத்துப் படத்தொகுப்பேடு உருவாக்குக.
2. குறவஞ்சியில் இடம்பெறும் உரையாடல் நயத்தைப் புலப்படுத்துக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 180 23-10-2018 13:15:11

கவிதைப்பேழை

இயல் 7

## திருச்சாழல்

**நுழையும்முன்**

மொழி விளையாட்டின் மூலம் இறைவனின் பெருமை பேசும் செய்யுள் வகை திருச்சாழல் ஆகும். ஒரு பெண் இறைவனைப் பழிப்பது போலவும் இன்னொருத்தி இறைவனது செயலை நியாயப்படுத்துவது போலவும் பாடப்படுவது இது. இவ்வகையில் மாணிக்கவாசகர் இறைவனின் பெருமையைத் தெரிவிக்கும் இருபது பாடல்களைப் பாடியுள்ளார்.

*கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை*
*தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ*
*தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினுங்*
*காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ.* 1

*கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த*
*ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ*
*ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட*
*மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.* 2

*தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை*
*ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ*
*ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்*
*வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ.* 3

*– மாணிக்கவாசகர்*

### சொல்லும் பொருளும்

காயில் – வெகுண்டால்; அந்தம் – முடிவு; அயன் – பிரமன்; மால் – விஷ்ணு; ஆலாலம் – நஞ்சு.

### பாடலின் பொருள்

பெண் 1: சுடுகாட்டைக் கோயிலாகவும் புலித்தோலை ஆடையாகவும் கொண்ட உங்கள் தலைவனுக்குத் தாயும் தந்தையும் இல்லை. இத்தன்மையனோ உங்கள் கடவுள்?

பெண் 2 : எங்கள் கடவுளுக்குத் தாய் தந்தை இல்லாவிடினும் அவன் சினந்தால் உலகம் அனைத்தும் கற்பொடியாகிவிடும்.

பெண் 1: அக்காலத்தில் பாற்கடலைக் கடைந்தபோது உண்டாகிய நஞ்சை, சிவன் உண்டான். அதற்குக் காரணம் யாதோ?

பெண் 2: அந்த நஞ்சை இறைவன் உண்டிருக்காவிட்டால் பிரமன், விஷ்ணு உள்ளிட்ட தேவர்கள் அன்றே அழிந்து ஒழிந்திருப்பார்கள்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 181 23-10-2018 13:15:12

பெண் 1: தான் முடிவு இல்லாதவனாக இருந்தும் அவனை அடைந்த என்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்தானே, இது என்ன புதுமை?

பெண் 2: உன்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்த திருவடிகள் தேவர்களுக்கும் மேன்மையான பொருளாகும்.

### இலக்கணக்குறிப்பு

சுடுகாடு, கொல்புலி, குரைகடல் – வினைத்தொகைகள்;
நல்லாடை – பண்புத்தொகை.

### உறுப்பிலக்கணம்

**உண்டான் – உண் + ட் + ஆன்**

உண் – பகுதி, ட் – இறந்தகால இடைநிலை

ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

### புணர்ச்சி விதி

**கற்பொடி – கல் + பொடி**

லள வேற்றுமையில் வலி வரின் றடவும்

**உலகனைத்தும் – உலகு + அனைத்தும்**

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும், உலக் + அனைத்தும்

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே உலகனைத்தும்

**திருவடி – திரு + அடி**

ஏனை உயிர்வழி வவ்வும், திரு + வ் + அடி

உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே திருவடி.

#### தெரியுமா?

சாழல் என்பது பெண்கள் விளையாடும் ஒரு வகையான விளையாட்டு. ஒருத்தி வினா கேட்க, மற்றொருத்தி விடை கூறுவதாக அமைந்திருக்கும். இறைவன் செயல்களையும் அவற்றால் விளங்கும் உண்மைகளையும் விளக்குவது திருச்சாழல் வடிவமாகும். திருமங்கையாழ்வாரும் தமது பெரிய திருமொழியில் இதே வடிவத்தைப் பயன்படுத்தியுள்ளார். மக்கள் வழக்கில் ஒருவர் விடுகதை சொல்லியும் அதற்கு மற்றொருவர் விடை கூறியும் விளையாடுவது இன்றைக்கும் வழக்கில் உள்ளது.

#### நூல்வெளி

திருவாசகம் என்பது சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும். இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர். இது சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக உள்ளது. திருவாசகத்தில் 51 திருப்பதிகங்கள் உள்ளன. இவற்றுள் மொத்தம் 658 பாடல்கள் அடங்கியுள்ளன. இந்நூலில் 38 சிவத்தலங்கள் பாடப் பெற்றுள்ளன. பக்திச் சுவையும் மனத்தை உருக்கும் தன்மையும் கொண்டவை திருவாசகப் பாடல்கள். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது முதுமொழி. திருச்சாழல் தில்லைக் கோவிலில் பாடப்பெற்றது. ஜி.யு.போப் திருவாசகம் முழுமையையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். மாணிக்கவாசகர் சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவர். திருவாதவூரைச் சேர்ந்தவர். இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார். மாணிக்கவாசகர் இயற்றிய நூல்கள் திருவாசகம், திருக்கோவையார் ஆகியனவாகும்.

#### கற்பவை கற்றபின்...

இரண்டு அடி வாங்கினால்தான்
திருந்துவாய் என்றால்
வள்ளுவரிடம் வாங்கு.

ஏய்! யாரங்கே ஆற்றில்
பாலைக் கொட்டிவிட்டு ஓலமிடுவது?
அருவி.

பழிப்பது போலப் புகழும் மொழி நுட்பம் இக்கவிதைகளின் பொருளை மெருகேற்றுகிறதா? விவாதிக்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 182 23-10-2018 13:15:12

இயல் 7

# இசைத்தமிழர் இருவர்

2B6SGH

**நுழையும்முன்**

இசை! கலைகளின் மகுடம்! உணர்வுகளின் வினையூக்கி. இசை, குருதியைச் சூடேற்றும்; உயிரை உருக்கும்; ஆழ்கடல் அமைதியாய் மனத்தை உறங்க வைக்கும். இரசனையின் முகவரிக்கு இசைமொழியில் கடிதமெழுதும் காற்றின் கவிஞர்களே இசைக்கலைஞர்கள். தமிழகத்தின் காட்டிலும் மேட்டிலும் வயல் சேற்றிலும் தவழ்ந்த இசையைச் சீராட்டி, மெருகூட்டி உலகுக்குத் தந்து மகிழ்ந்தவர் இருவர். இவ்விருவரும் உலக இசைப்பேரேட்டின் தமிழகத்து முத்திரைகள்; அவர்கள், சிம்பொனித் தமிழர் இளையராஜா, ஆஸ்கர் தமிழர் ஏ.ஆர் இரகுமான் ஆகியோர் ஆவர்.

## சிம்பொனித் தமிழர்

ஆசியக் கண்டத்தில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு, சிம்பொனி இசைக்கோவையை உருவாக்கும் திறன் கைவராது என்பது மேற்கத்திய இசை வல்லுநர்களின் கருத்தோட்டமாகும். இந்தக் கற்பனைவாதத்தை உடைத்து ராயல் ஃபில்ஹார்மோனிக் இசைக்குழுவுக்கு, சிம்பொனி இசைக்கோலத்தை அமைத்துக்காட்டியவர் இசைமேதை (மாஸ்ட்ரோ) இளையராஜா. அவர், தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள பண்ணைப்புரத்தைச் சேர்ந்தவர். அவருடைய இயற்பெயர் இராசையா. தாய் பாடும் தாலாட்டில் தொடங்கித் தமிழ்நாட்டின் அனைத்து இசை வடிவங்களையும் அசைபோட்டு வளர்ந்த தமிழினத்தின் பெருமைக்குரிய இசை மேதை அவர்.



அன்னக்கிளி படத்தில் இசை அமைப்பாளராக அறிமுகமான இளையராஜாவின் இசையோட்டம் தமிழர் வாழ்ந்த திசைகளில் எல்லாம் தென்றலாய் நுழைந்து புதிய வாசல்களைத் திறந்தது. அவரிடமிருந்து புதுப்புது மெட்டுகள் சிறகு விரித்தன. கண்களை மூடிக்கொண்டு இளையராஜாவின் பாடல்களைக் கேட்டால், பாடலின் ஒவ்வொரு சரணத்திற்கு இடையிலும் அவர் சுழற்றும் இசைச் சிலம்பம் நம்மைப் புதிய திசைகளில் பறக்க வைக்கும். அவர், பழந்தமிழ் இசையையும் உழைக்கும் மக்களின் துள்ளல் இசையையும் மனத்தை மயக்கும் வகையில் கலந்து தந்தார். இவர், திரையிசையில் கருநாடக இசை என்னும் பழந்தமிழிசையின் உன்னதத்தை உணர வைத்தவர்; பல இராகங்களுக்குத் திரையிசையில் கொடுத்த அறிமுக மெட்டுகள் மெல்லிசையில் புதிய உயரங்களைத் தொட்டன.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 183 23-10-2018 13:15:12

1970களின் தொடக்கத்தில் பிறமொழிப் பாடல்களைச் சுமந்து திரிந்த தமிழ்ச்செவிகள் விடுதலை பெற்று, தமிழ்ப்பாடல்களை நோக்கித் திரும்பியதற்கு இளையராஜாவே காரணமெனலாம். எழுபது, எண்பதுகளில் மெல்லத் தோன்றிப் புது வேகம்கொண்ட சமூக மாற்றங்களின் குறியீடாக இளையராஜாவின் இசை திகழ்ந்தது. பின்னணி இசையிலும் பாடல் இசையிலும் விடுபட்டுப்போன வாய்மொழித் தன்மை, யதார்த்தம் ஆகியன பொதிந்த அவருடைய இசை, சாமானியரையும் ஈர்த்தது; அவர்களது வாழ்வின் தருணங்களில் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றதோடு அமைப்புக்கு அப்பாற்பட்ட இசை இயக்கமாகவும் மாறியது. அவர், தமிழ்ச் செய்யுளின் யாப்போசைக் கட்டமைப்புக்குள் இருக்கின்ற இசை ஒழுங்கைப் புரிந்துகொண்டு திரைப்பாடல்களைச் செவியுணர் கனிகளாகவும் பண்பாட்டு வெளிப்பாடாகவும் மாற்றிய பெருமைக்குரியவர்.

அவருடைய இசை ஐவகை நிலப்பரப்புகளையும் காட்சிப்படுத்தும் மெட்டுகளைக் கொண்டது. இன்றளவும் நெடுந்தொலைவுப் பயணங்களின் வழித்துணையாக அவரது இசை இருப்பதற்கு இதுவுமொரு காரணம். வற்றாத நதிகள் பாயும் மலைகள் நிறைந்த ஜம்மு, காஷ்மீரின் பஹார் இன மக்களின் நாட்டுப்புற இசையில் புல்லாங்குழலில் வழிந்தோடும் பஹாடி முதல் மதுரை மக்களின் கிராமிய இசையிலிருந்து முகிழ்த்துச் செவ்வியல் இசையில் கோலோச்சும் ஆனந்தபைரவி (அன்னக்கிளி உன்னைத் தேடுதே) வரை அவரது இசையில் பண்கள் இழையோடுகின்றன. எம்மொழியில் இசையமைத்தாலும், அவர் அம்மண் மணத்துடன் தம்மை இணைத்து இசையமைப்பதே, மக்கள் அவருடைய இசையில் ஒன்றுவதற்குக் காரணமாகும்.

| பெற்ற விருதுகள் சில: |
|---|
| இந்திய அரசு – பத்ம விபூஷண் விருது |
| சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது |
| சிறந்த பின்னணி இசைக்கான தேசிய விருது |
| தமிழ்நாடு – கலைமாமணி விருது |
| மத்தியப்பிரதேசம் – லதா மங்கேஷ்கர் விருது |
| கேரளம் – நிஷாகந்தி சங்கீத விருது |

இந்திய இசைமேதைகள் அனைவராலும் மதிக்கப்படுபவர் இளையராஜா. அவரின், 'எப்படிப் பெயரிடுவேன்?' (HOW TO NAME IT) என்னும் இசைத்தொகுப்பும் புல்லாங்குழல் இசைக்கலைஞர் ஹரிபிரசாத் சௌராஸியாவுடன் இணைந்து வெளியிட்ட 'காற்றைத் தவிர ஏதுமில்லை' (NOTHING BUT WIND) என்னும் இசைத்தொகுப்பும் இசையுலகின் புதிய முயற்சிகள் எனக் கொண்டாடப்பட்டன. மகிழ்ச்சி, ஏக்கம், நம்பிக்கை, உற்சாகம், வலி போன்ற மனித உணர்வுகளுக்கும் இசை வடிவம் கொடுக்க முடியும் என்பதை "இந்தியா 24 மணிநேரம் (INDIA 24 HOURS)" என்னும் ஆவணக் குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார்.

மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப் பாடல்களுக்கு ஆரட்டோரியோ (Oratorio) என்னும் இசை வடிவில் இசையமைத்துள்ளார். 'இராஜாவின் ரமணமாலை', 'இளையராஜாவின் கீதாஞ்சலி' என்னும் தமிழ் இசைத்தொகுப்புகளையும் கன்னட மொழியில் 'மூகாம்பிகை' என்ற பக்தி இசைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார். அத்துடன் ஆதிசங்கரர் எழுதிய மீனாட்சி ஸ்தோத்திரம் என்ற பக்திப்பாடலுக்கும் இசையமைத்துள்ளார். பஞ்சமுகி என்ற கர்நாடகச் செவ்வியல் இராகம் அவர் உருவாக்கியதாகும்.

### இளையராஜாவின் இசை நுணுக்கம்

தமிழகத்தின் நாட்டுப்புற இசை வடிவத்தைத் திரையிசையில் தவழவிட்டவராகவே இசைஞானி இளையராஜா அறியப்படுகிறார். ஆனால், மேற்கத்திய இசையை முறைப்படி பயின்ற காரணத்தால் நாட்டுப்புற இசையின்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 184 23-10-2018 13:15:12

செவ்வியல் தன்மைகளோடு மேற்கத்திய இசையைக் கலந்து உலவவிட்டார். கவிஞர், மனத்தில் உருவகித்துக் காகிதத்தில் எழுதுவதுபோல், மனத்தின் இசையைக் குறியீடுகளாகக் காகிதத்தில் எழுதிவிடுவார்! இசைஞானி தமது தேடலின்மூலம் மேற்கத்திய இசையுடன் கர்நாடக, இந்துஸ்தானி இராகங்களையும் திரையிசையில் பயன்படுத்தியிருக்கிறார்.

நாட்டுப்புறப் பாடலுக்குக் கர்நாடக இசை வடிவமும் கல்யாணி இராகத்தின் ஆரோகண சுரங்களைக்கொண்டே (ஏறுவரிசைச் சுரங்கள்) 'கலைவாணியே உனைத்தானே' என்னும் பாடலுக்கு மெட்டமைத்திருக்கிறார். மூன்றே மூன்று சுரங்களைக்கொண்டு ஒரு தெலுங்குப் பாடலுக்கு இசையமைத்தும் இருக்கிறார்; நான்கே இசைக்கருவிகளைக்கொண்டு ஒரு பாடலுக்கு இசையமைத்திருக்கிறார். முழுத் திரைப்படத்துக்கும் அரை நாளில் பின்னணி இசையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார் (நூறாவது நாள்). பிற நாட்டின் இசைவடிவத்தை நம் மண்ணுக்கேற்ற வகையில் மாற்றம் செய்வதோடு திரைப்படப் பின்னணி இசைக்கோவையைக்கூட உணர்வின் மொழியாக மாற்றித் தருவதே அவருடைய தனிச்சிறப்பாகும்.

தமிழ் மட்டுமன்றி இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி என நம் நாட்டின் பிற மொழிப்படங்களுக்கும் இசையமைத்திருக்கின்றார். இளையராஜா இசைக்கலைஞர் மட்டுமல்லர்; சிறந்த ஒளிப்படக் கலைஞர்; கவிஞர்; பாடகர்; 'பால்நிலாப் பாதை', 'வெட்டவெளிதனில் கொட்டிக் கிடக்குது' உள்ளிட்ட பல நூல்களை எழுதியிருக்கும் எழுத்தாளரும் ஆவார்.

> பரிபாடலில் நோதிறம், பாலையாழ், காந்தாரம் முதலிய பண்கள் காணப்படுகின்றன. சைவத்திருமுறைகளில் காரைக்கால் அம்மையார் நட்டபாடையிலும் இந்தளத்திலும் பாடியுள்ளார்.

> தேவாரத்தில் 23 பண்களில் பாடல்கள் உள்ளன. தேவாரத்தில் இல்லாது திவ்ய பிரபந்தத்தில் மட்டும் காணப்படும் பண்கள்: நைவளம், அந்தாளி, தோடி, கல்வாணம், பியந்தை, குறண்டி, முதிர்ந்த இந்தளம் ஆகியவை. சாளரபாணி என்ற பண் ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் காணப்படுகிறது.

மகாத்மா காந்தி எழுதிய ஒரே பாடலான "நம்ரதா கே சாகர்" என்னும் பாடலுக்கு இசையமைத்து, இந்துஸ்தானி இசைப் பாடகர் அஜொய் சக்கரபர்த்தியைப் பாடவைத்து இசைக்கோவையை வெளியிட்டிருக்கிறார். ஆசியாவிலேயே முதன்முதலில் சிம்பொனி (Symphony) என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர் இவரே. சிம்பொனி இசைப் பணியை எழுதக் குறைந்தது ஆறு மாதமாவது ஆகும்; வெறும் பதின்மூன்று நாள்களில் இச்சாதனையை நிகழ்த்தியிருக்கிறார். பண்டைய தமிழரசர்களின் ஆட்சி வட இந்தியா வரையிலும் பரவியிருந்தது. ஆனால், இளையராஜாவின் இசை ராஜாங்கமோ உலகம் முழுவதும் பரவிக் கிடக்கிறது.

## ஆஸ்கர் தமிழர்

அமெரிக்காவின் கோடாக் அரங்கில் ஆஸ்கர் விருதுகள் அறிவிக்கும் தருணம். இன்னும் சில நிமிடங்களில் இசைக்கான விருதுக்குரியவர் அறிவிக்கப்பட இருக்கிறார். அவ்விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட ஐந்து இசையமைப்பாளர்களும் தம்முள் விருதுக்குரியவர் யார்? என அறியும் ஆவலில் அமர்ந்திருக்கின்றனர். அவர்களில் நால்வர் அவ்விருதுக்குப் பலமுறை பரிந்துரைக்கப்பட்டவர்கள்; ஒருவர் மட்டுமே புதியவர். அவருக்கே 2009ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப்படப் பின்னணி இசைக்கான ஆஸ்கர் விருது என்று அறிவிக்கப்பட்டது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 185 23-10-2018 13:15:12

அரங்கத்தின் கரவொலி அடங்குவதற்கு முன்பே சிறந்த திரையிசைப் பாடலுக்கான விருதுக்கும் இவரின் பெயரே அறிவிக்கப்படுகிறது. இரண்டு ஆஸ்கர் விருதுகள் ஒருவருக்கே! இரு கரங்களிலும் விருதுகளை ஏந்தியவாறு உரையைத் தொடங்கியவர், தம் தாய்மொழியான தமிழில் உரையை நிறைவு செய்கிறார். ஆம்! அவர்தான், உலக அரங்கில் சாதனை நாயகனாய்த் திகழும் இசைப்புயல் ஏ.ஆர். இரகுமான்.

தம் இசைக்குக் கிடைத்த இரு விருதுகளையும் கையில் ஏந்திய நிலையில், கடந்து வந்த பாதை அவர் கண்முன்னே நிழலாடியது. இவருடைய தந்தை ஆர்.கே.சேகர் மலையாளத் திரைப்பட உலகில் புகழுடன் விளங்கிய இசைக்கலைஞர். இளம்வயதிலேயே ஏ.ஆர்.இரகுமான் தம் தந்தையின் இசைப்பயணத்தில் இணைந்து கொண்டார். தந்தையைச் சூழ்ந்திருந்த இசைக்கருவிகள் அவருள் இசை வேட்கையைத் தூண்டின. இசைக்கலைஞர்கள் வியக்கும்வகையில் நான்கு வயதிலேயே ஹார்மோனியம் இசைப்பதில் திறமை பெற்றிருந்தார். இளம் வயதிலேயே தந்தையை இழந்து குடும்பப் பொறுப்புகளை ஏற்கும் சூழல் ஏற்பட்டதனால் பள்ளிப்படிப்புக்கு இடையூறு ஏற்பட்டது.

இசைக்குழுக்களில் இரவெல்லாம் பணியாற்றிவிட்டு நேராகப் பள்ளிக்குச் செல்வார். பள்ளியின் நுழைவுவாயிலில் இவரின் தாயார் காத்திருந்து இவருக்குச் சீருடை அணிவித்தும் உணவளித்தும் வகுப்பிற்கு அனுப்பி வைப்பார். இத்தகைய வாழ்க்கைப் போராட்டத்தால் பள்ளிப்படிப்பு பதினோராம் வகுப்புடனே முடிந்துவிட்டது.

ஏ.ஆர். இரகுமான், 1992ஆம் ஆண்டு ரோஜா என்னும் திரைப்படத்திற்கு இசையமைப்பாளராகத் தமது திரையிசைப் பயணத்தைத் தொடங்கினார். இவரின்

பிங்கல நிகண்டு என்னும் நூலில் 103 பண்கள் காணப்படுகின்றன. பண்கள், பாடும் காலங்களுக்கு ஏற்றவாறு பகல் பண், இரவுப் பண், பொதுப் பண் என்று வகுக்கப்பட்டுள்ளன.



இசை, தமிழ்த்திரைப்பட இசையுலகில் புதிய எழுச்சியை ஏற்படுத்தியது. தம் முதல் படத்திற்கே தேசிய விருது பெற்ற முதல் இந்திய இசையமைப்பாளர் என்ற சிறப்பினைப் பெற்றார். தம் இசைப்பங்களிப்பால் இளைஞர் உலகின் இசை ஆளுமையாக வளர்ந்தார். அடுத்தடுத்த படங்களில் அவர் வெளிப்படுத்திய மெல்லிசை, கேட்டவர் நெஞ்சங்களில் எல்லாம் சிம்மாசனமிட்டு அமர்ந்தது. தமிழ் யாப்பிலக்கணத்தின் நால்வகைப் பாக்களில் கலிப்பாவின் ஓசை, துள்ளல் ஓசையாகும். இந்தத் துள்ளலோசைக்கு மயங்காதவர்களே உலகில் இல்லை எனலாம். தோற்கருவியால் துடித்தெழும் இந்தத் துள்ளல் ஓசை, கொண்டாட்ட மனநிலையின் வெளிப்பாடு. தமிழ் மக்களின் நெடிய வாழ்வியல் மரபில், துள்ளல் ஓசைச் சாயல் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும். இதனை நுட்பமாக உணர்ந்த ஏ.ஆர். இரகுமான் தம் இசைக் கட்டத்துக்குள் நின்று இளைஞர்களை ஆடவும் பாடவும் வைத்தார்.

உலகை வெற்றிகொள்ளப் புறப்பட்ட தமிழர்களுடன் வலம்வந்த இசைத்தோழமை ஏ.ஆர். இரகுமான். தொண்ணூறுகளில் தொழில்நுட்பக்கல்வி பயின்று உலகெங்கும் பரவிய தமிழ் இளைஞர்களை இணைத்தது அவர்தம் இசை. அவர் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த இசை, பண்பாட்டுக் குறியீடுகளைத் தம் இசையில் தவழவிட்டார்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 186 23-10-2018 13:15:12

**பெற்ற விருதுகள் சில:**

| | |
|---|---|
| இந்திய அரசு | – பத்ம பூஷண் விருது |
| தமிழ்நாடு | – கலைமாமணி விருது |
| கேரளம் | – தங்கப் பதக்கம் |
| உத்திரப்பிரதேசம் | – "ஆவாத் சம்மான்" விருது |
| மத்தியப்பிரதேசம் | – "லதா மங்கேஷ்கர்" விருது |
| மொரீஷியஸ் | – தேசிய இசை விருது |
| மலேசியா | – தேசிய இசை விருது |
| ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகம் | – சர்வதேச இசை விருது |

இணைய வழியில் உலவும் இளைஞர்களின் கனவை இசையாக மொழிபெயர்த்துக் காலப் பதாகையில் ஒலிவண்ணம் தீட்டினார்.

நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை இவற்றுடன் மேற்கத்திய, உலகளாவிய இசை முறைகளையும் கலந்து, புதிய கணினித் தொழில்நுட்ப உதவியுடன் உலகத்தரத்தில் இசையமைத்ததுடன் பல இளம் பாடகர்களையும் அறிமுகம் செய்தார்.

இரகுமானிடம் எல்லோரும் இரசித்துக் கேட்பது அவரது 'தாளம் உருவாக்கும் முறை'. ஒரு பாடலுக்கான மெட்டை உருவாக்குமுன் அதற்கான தாளத்தைத்தான் முதலில் உருவாக்குவார். பாடலுக்கான சூழலை மனத்தில் உள்வாங்கிக்கொண்டு, அதற்கேற்ற தாளக்கட்டை உருவாக்கி அதனுள் அமிழ்ந்திருக்கும் பாடலுக்கான மெட்டை வெளிக்கொணர்வார். ஒரு சிறந்த மெட்டு எப்படி ஈர்க்கிறதோ, அதுபோலப் பாடலின் பல்லவிக்கும் சரணத்துக்கும் இடையில் வரும் இசையும் மக்களை ஈர்க்கும்படியாக இசையமைப்பதில் வல்லவர். மெட்டுக்கு இணையான இசைக்கோவையை வழங்கியதில் தனித்துவமானவர் இளையராஜா எனில், அதை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றவர் இரகுமான் ஆவார்.

இவர் இசையமைத்த "வந்தே மாதரம்", "ஜன கண மன" என்னும் இசைத்தொகுதிகள், நவீன இசை வடிவில் நாட்டுப்பற்று உணர்வை மிளிரச் செய்தன. மலையாளம், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட பல தென்னிந்திய மொழிப்படங்களுக்கும் இசையமைத்ததோடு இந்தித் திரைப்பட உலகத்திலும் தம் இசை முத்திரையைப் பதித்தார். மேலைநாட்டுத் திரைப்படங்களுக்கும், நாடகங்களுக்கும் இசையமைத்து உலக இசையமைப்பாளர்கள் வரிசையிலும் தம்மை நிலைநாட்டிக்கொண்டார். வெவ்வேறு கலாச்சார மக்களையும் தம் இசையால் ஒருங்கிணைத்ததுடன் திரையிசையில் சூஃபி இசையை அறிமுகப்படுத்திய சிறப்பும் இவருக்குண்டு.

"ஸ்லம்டாக் மில்லியனர்" என்ற திரைப்படத்தின் இசைக்காக, 'கோல்டன் குளோப்' விருது பெற்றதன்மூலம் உலகளாவிய புகழ் பெற்றார். அவ்விருது பெற்ற முதல் இந்தியரும் இவரே. இவரின் ஆஸ்கர் சாதனை, சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கு வாழ்க்கைப் பாடமாகும்; அதே படத்தின் இசைக்காக கிராமி விருதையும் பெற்றார்.

தமிழர் வாழ்வின் எல்லா நிலைகளிலும் இசைக்கென்று ஓர் இன்றிமையாத இடமுண்டு. அதில், இளையராஜா, ஏ.ஆர். இரகுமான் ஆகியோரின் வருகை புகழ் மகுடமாக ஒளிர்கின்றது.

**கற்பவை கற்றபின்...**

தமிழ்த்தாய் வாழ்த்து, நாட்டுப்பண், தமிழில் பிறந்தநாள் பாடல் – போன்றவற்றை நண்பர்களுடன் இணைந்து இசையுடன் பாடிப் பயிற்சி பெறுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 187 23-10-2018 13:15:12

## கலைச்சொல்லாக்கம்

2BFNIA

(பள்ளியின் இணைய இதழுக்காக அகராதியியலர் செழியன் அவர்களுடன் மாணவர்கள் முத்து, தமிழ்க்கனல் நேர்காணல்)

முத்து : வணக்கம் ஐயா !

செழியன் : வணக்கம்.

முத்து : தங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

செழியன் : மகிழ்ச்சி.

தமிழ்க்கனல்: இப்பொழுதுள்ள பேச்சு வழக்கில் ஆங்கிலச்சொற்கள் மிகுதியும் கலந்து மக்களால் பேசப்பட்டு வருகின்றன. ஆனால், அதற்குரிய தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தும் வழக்கம் குறைந்து வருகிறது. இதற்கான காரணத்தைச் சொல்லுங்கள் ஐயா.

செழியன் : அப்படி முழுமையாய்ச் சொல்லிவிடமுடியாது. சான்றாக cellphone என்னும் ஆங்கிலச் சொல்லிற்குக் கைபேசி, செல்லிடப்பேசி, அலைபேசி போன்ற சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. இவ்வாறான சொற்களை உருவாக்கிக் கொள்ளும் முறைமைக்குக் கலைச்சொல்லாக்கம் என்று பெயர். அறிவியலுக்கு ஏற்புடைய பல கலைச்சொற்கள் வழக்கில் பயன்படுத்தப்படுகின்றன. சில கலைச்சொற்கள் பொருத்தமில்லாமல் உள்ளன. காலத்திற்கேற்ப வளரும் சில துறைகளில் கலைச்சொற்களின் தேவை மிகுதியாக இருக்கிறது. எனவே, நாம் கலைச்சொற்களை உருவாக்கும் பணியில் நம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

முத்து : கலைச்சொற்கள் என்றால் என்ன?

செழியன் : ஒரு மொழியில் காலத்திற்கேற்ப, துறைசார்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்காக, உருவாக்கிப் பயன்படுத்தப்படும் சொற்களைக் கலைச்சொற்கள் என்கிறோம். ஒரு மொழி தன் வேர்ச்சொற்களைக் கொண்டு புதிய புதிய கலைச்சொற்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும். இவ்வாறு உருவாக்கிக் கொள்ளும்போது மொழி தன்னைப் புதுப்பித்துக்கொண்டு புதிய செழிப்பினைப் பெற்று மேலும் வளர்ச்சி பெறும். எடுத்துக்காட்டாக website, blog போன்றவை தகவல் தொழில்நுட்பத்தின் புதிய கண்டுபிடிப்புகள். இவற்றிற்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களாக உள்ள இணையம், வலைப்பூ போன்றவை தகவல்தொழில் நுட்பக் கலைச்சொற்கள் ஆகும். கலைச் சொற்கள் பெரும்பாலும் காரணப்பெயர்களாகவே இருக்கும்.

தமிழ்க்கனல் : அகராதியில், கலைச்சொற்கள் குறித்து அறிந்துகொள்ள வாய்ப்பு உள்ளதா?

செழியன் : பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவதே அகராதியின் நோக்கம். ஆனால், கலைச்சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவையானவிடத்துப் புதிதாகச் சொற்களை உருவாக்கியும் தருவதாகும்.

முத்து: கலைச்சொற்கள் பயன்படும் துறைகள் பற்றிக் கூறுங்கள் ஐயா.

செழியன்: நம் வாழ்வில் அன்றாடம் பயன்படுத்தும் கருவிகள்,வேளாண்மை,



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 188 23-10-2018 13:15:12

மருத்துவம், பொறியியல், தகவல் தொடர்பியல் முதலான துறைசார்ந்த கலைச்சொற்கள் இன்றைய அறிவியல் சூழலுக்கேற்பப் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ்க்கனல்: அவ்வாறான கலைச்சொற்கள் சிலவற்றைச் சொல்லுங்கள்…

செழியன்: மருத்துவமனை (CLINIC), குருதிப்பிரிவு (BLOOD GROUP), மருந்தாளுநர் (PHARMACIST), ஊடுகதிர் (X-RAY), குடற்காய்ச்சல் (TYPHOID), களிம்பு (OINTMENT) முதலியவை மருத்துவக் கலைச்சொற்கள்; எழுதுசுவடி (NOTEBOOK), விடைச்சுவடி (ANSWER BOOK) பொதுக் குறிப்புச் சுவடி (ROUGH NOTEBOOK), விளக்கச்சுவடி (PROSPECTUS) போன்றவை கல்வி சார்ந்த கலைச்சொற்கள். இவ்வாறு துறை சார்ந்த கலைச்சொற்கள் இலட்சக் கணக்கில் தமிழில் உள்ளன. ஒவ்வொரு துறையிலும் உள்ள புதிய கலைச்சொற்களைத் தொகுத்து அகரவரிசைப்படுத்திக் கலைச்சொல் அகராதிகள் வெளியிடப்படுகின்றன.

முத்து: கலைச்சொல்லாக்கப் பணியின்போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் எவையேனும் உள்ளனவா?

செழியன்: தமிழில் கலைச்சொல்லாக்கப் பணி தொடங்குவதற்குமுன் நாம் பின்வரும் விதிமுறைகள் சிலவற்றைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

ஆக்கப்பெறும் சொல் தமிழ்ச்சொல்லாக இருத்தல் வேண்டும்.

பொருள் பொருத்தமுடையதாக, அதே நேரத்தில் செயலைக் குறிப்பதாக அமைதல் வேண்டும்.

வடிவில் சிறியதாக, எளிமையாக இருத்தல் வேண்டும்.

ஓசை நயமுடையதாக இருத்தல் வேண்டும்.

தமிழிலக்கண மரபுக்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும். நல்லவை அல்லாதவற்றைக் குறிக்கக்கூடாது.

தமிழ்க்கனல்: கலைச்சொல் உருவாக்கத்தில் மாணவர்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்கவேண்டும்?

செழியன்: நாள்தோறும் புதிய கண்டுபிடிப்புகள் உருவாகிக் கொண்டிருக்கும் சூழலில், அதற்கான கலைச்சொல் ஆக்கங்களும் நிகழ்ந்துகொண்டே உள்ளன. பெரும்பாலும் அவை ஏட்டளவில் இருக்கின்றன. அக்கலைச் சொற்களை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும். எடுத்துக்காட்டாக, இ-மெயில், ஸ்மார்ட்ஃபோன், விண்டோஸ் 10, 8G ஆகிய ஆங்கிலச் சொற்களுக்கு இணையாக மின்னஞ்சல், திறன்பேசி, சாளரம் பலகணி 10, 8ஆம் தலைமுறை போன்ற கலைச்சொற்கள் தமிழில் உள்ளன. இப்பணிக்கு இதழ்களும் ஊடகங்களும் துணைநிற்க வேண்டும்.

முத்து: புதிய கண்டுபிடிப்புகளுக்கான கலைச்சொற்களை எங்கிருந்து பெறலாம்?

செழியன்: இதழ்கள், மின்இதழ்கள், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையத்தளம் போன்றவற்றிலிருந்து பெறமுடியும். தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் இருபதிற்கும் மேற்பட்ட துறைகளுக்குக் கலைச்சொற்களை வெளியிட்டுள்ளது. பள்ளியில் செயல்படும் கையெழுத்து இதழில் கலைச்சொற்களுக்கெனத் தனியிடம் ஒதுக்கி, மாணவர்களிடையே கலைச்சொற்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

தமிழ்க்கனல்: கலைச்சொற்கள் சிலவற்றை அறிமுகப்படுத்துங்கள் ஐயா….

செழியன்: அன்றாடம் பயன்படுத்தும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க்கலைச்சொற்கள்,

| | |
|---|---|
| Smartphone | திறன்பேசி |
| Touch screen | தொடுதிரை |
| Bug | பிழை |
| Gazette | அரசிதழ் |
| Despatch | அனுப்புகை |
| Subsidy | நல்கை |
| Ceiling | உச்சவரம்பு |
| Circular | சுற்றறிக்கை |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 189 23-10-2018 13:15:12

| | |
|---|---|
| SubJunior | மிக இளையோர் |
| Super Senior | மீமூத்தோர் |
| Carrom | நாலாங்குழி ஆட்டம் |
| Sales Tax | விற்பனைவரி |
| Customer | வாடிக்கையாளர் |
| Consumer | நுகர்வோர் |
| Account | பற்று வரவுக் கணக்கு |
| Referee | நடுவர் |

மேலும், இவை போன்ற பலதுறைச் சொற்களையும் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும்.

முத்து : தமிழில் கலைச்சொற்களின் இன்றியமையாமையைக் கூறுங்கள் ...

செழியன்: உலகின் தொன்மையான மொழிகளுள் இன்றும் நிலைத்து நிற்கின்ற மொழி, தமிழ்மொழி. காலத்திற்கேற்பத் தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் மொழியே வாழும். மருத்துவம், பொறியியல், தொழில்நுட்ப அறிவியல் ஆகியவற்றைத் தமிழ்வழியில் பயில, கலைச்சொல்லாக்கம் இன்றியமையாததாக உள்ளது. தாய்மொழி வழியிலான சிந்தனை மட்டுமே புதிது புதிதான கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுக்கும். உலகின் எந்த மூலையில் எவ்வகையான கண்டுபிடிப்பு நிகழ்ந்தாலும் உடனுக்குடன் ஜப்பானியர்கள் தங்கள் மொழியில் புதிய சொல்லை உருவாக்கிவிடுவர். தாய்மொழி வழியில் ஜப்பானியர்கள் அறிவியல் தொழில்நுட்பப் பாடங்களைக் கற்பதால் அங்கே நாள்தோறும் புதிய கண்டுபிடிப்புகள் நிகழ்கின்றன. கலைச்சொல்லாக்கம் இல்லையென்றால் அவற்றை நாம் ஒலிபெயர்ப்புச் சொல்லாக மட்டுமே பயன்படுத்த முடியும். எனவே, கலைச்சொற்களை நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவது இன்றியமையாதது.

தமிழ்க்கனல்: நீங்கள் கூறிய தகவல்களை அடிப்படையாகக்கொண்டு கலைச்சொல் அகராதியை உருவாக்கும் பணியை இன்றிலிருந்தே தொடங்குகிறோம். நன்றி ஐயா.

முத்து: கலைச்சொற்கள் தொடர்பான பல பயனுள்ள செய்திகளைப் பகிர்ந்துகொண்டமைக்கு நன்றி ஐயா..

அறிவியல் கலைச்சொற்களைத் தமிழாக்குவதில் உள்ள முறைகள் குறித்து அறிவியல் அறிஞர் வா.செ. குழந்தைசாமி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

| | |
|---|---|
| பழந்தமிழிலக்கியச் சொல்லைப் பயன் படுத்துதல் | வலவன் (PILOT) |
| பேச்சுமொழிச் சொல்லைப் பயன்படுத்துதல் | அம்மை |
| பிறமொழிச் சொல்லினைக் கடன்பெறல் | தசம முறை (Decimal) |
| புதுச்சொல் படைத்தல் | மூலக்கூறு (Molecule) |
| உலக வழக்கை ஏற்றுக் கொள்ளல் | எக்ஸ் கதிர் (X–ray) |
| பிறமொழித்துறைச் சொற்களை மொழி பெயர்த்தல் | ஒளிச்சேர்க்கை (Photosynthesis) |
| ஒலிபெயர்த்துப் பயன்படுத்தும் சொற்கள் | மீட்டர், ஓம் (Meter, Ohm) |
| உலக அளவிலான குறியீடுகள், சூத்திரங்கள் | $\Sigma$ $\sqrt{A} = \pi r^2$ $H_2O$, Ca |

தமிழில் கலைச்சொற்களை உருவாக்கிடும்போது பழந்தமிழிலக்கியச் சொற்களையும் பேச்சுவழக்குச் சொற்களையும் புதிய சொற்களையும் இயன்றவரை பயன்படுத்தல் வேண்டும். அன்றாட உரையாடலில் நாம் தமிழ்ச்சொற்களையே பயன்படுத்தும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கலைச்சொல்லாக்கப் பணியில் ஈடுபடுவோர், பிறமொழிச்சொற்களை அப்படியே கையாள்வதையோ ஒலிபெயர்ப்புச் சொற்களாக மாற்றுவதையோ கடன்வாங்குவதையோ தவிர்த்தல் வேண்டும். நாம் கலைச்சொல்லாக்கப் பணியில் ஈடுபடும்போது தமிழில் எண்ணற்ற புதிய சொற்களை உருவாக்குவதோடு படைப்புகள் சார்ந்த அறிவையும் பெறலாம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 190 23-10-2018 13:15:12

கற்பவை கற்றபின்...

மாணவர் ஒவ்வொருவரும் 25 கலைச்சொற்களைப் பொருளுடன் திரட்டி அகராதியாக்குக.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. *கலைச்சொல்லாக்கம் – பொருள் தருக ?*
2. *கலைச்சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்குரிய விதிமுறைகள் யாவை ?*
3. *பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.*
   Personality, Emotion, Plastic, Escalator, Apartment, Straw, Mass Drill, Horticulture, Average
4. *SHIP என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயரைக் கூறுக ?*
5. *உலக அளவில் கணிதச் சூத்திரங்களையும், வேதியியல் குறியீடுகளையும் தமிழில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று வா.செ. குழந்தைசாமி கூறுகிறார்?*

தெரிந்து தெளிவோம்

ஒரு சொல்லை மொழிபெயர்க்கும்போதோ அல்லது புதிய சொல்லை உருவாக்கும்போதோ அச்சொல் அதே போன்ற வேறு பல சொற்களை உருவாக்க உதவ வேண்டும். எடுத்துக்காட்டாக, library என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நூலகம், நூல்நிலையம் ஆகிய சொற்கள் கையாளப்படுகின்றன. இச்சொற்களில் நூலகம் என்னும் சொல்லே மேலும் பல சொற்களை உருவாக்கும் ஆக்கத்திறன் கொண்டது.

library – நூலகம், librarian – நூலகர், library science – நூலக இயல்.

இன்றைய நிலையில் பலரும் கலைச்சொற்களை உருவாக்கிய வண்ணம் உள்ளனர். கற்றறிந்தோர், கற்றறியாதோர், கைவினைஞர்கள், பயிற்றுநர், மாணவர்கள், மகளிர், குழந்தைகள் எனப் பலரும் கலைச்சொற்களைத் தாமாகவே உருவாக்குகின்றனர். அறிவியல் கலைச்சொற்களை உருவாக்கும்போது பல்வேறு சொற்களை ஆள்கின்றனர். எடுத்துக்காட்டாக, Antibiotics – எதிர் உயிர்ப்பொருள், நுண்ணுயிர்க் கொல்லிகள், உயிர் எதிர் நச்சுகள், கேடுயிர்க் கொல்லிகள், நச்சுயிர்க் கொல்லிகள் எனப் பல்வேறு கலைச்சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இக்கலைச்சொற்கள் தமிழில் சொல்லாக்க வளர்ச்சியினை வெளிப்படுத்துவனவாக உள்ளன. ஆனால், கலைச்சொற்களைக் கற்பதிலும் அவற்றைப் புரிந்துகொள்வதிலும் துறைசார்ந்த நிலையில் குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது. இவற்றைத் தவிர்க்க அச்சொற்களைத் தரப்படுத்திப் பயன்படுத்த வேண்டும். இதற்கென குழு ஒன்றை உருவாக்கலாம்.

'தென் ஆப்பிரிக்காவின் பெண்கள் விடுதலை' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதத் தொடங்கிய பாரதி, Member என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லொன்றை உருவாக்க முனைந்தார்.

மெம்பர் என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் எனக்கு அகப்படவில்லை. இது ஆச்சரியத்திலும் ஆச்சர்யம். அவயவி சரியான வார்த்தையில்லை. அங்கத்தான் கட்டிவராது. சபிகன் சரியான பதந்தான். ஆனால் பொதுஜனங்களுக்குத் தெரியாது. யாரேனும் பண்டிதர்கள் நல்ல பதங்கள் கண்டுபிடித்துக் கொடுத்தால் புண்ணியமுண்டு. அரைமணி நேரம் யோசித்துப் பார்த்தேன்; உறுப்பாளி? ஏதெல்லாமோ நினைத்தேன். ஒன்றும் மனதிற்குப் பொருந்தவில்லை. என்ன செய்வேன்! கடைசியாக மெம்பர் என்று எழுதி விட்டேன். இன்னும் ஆர, அமர யோசித்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொருமுறை சொல்லுகிறேன்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 191 23-10-2018 13:15:13

## நம்மை அளப்போம்

J81DIY

**பலவுள் தெரிக.**

1. கூற்று 1

தஞ்சைப் பெரியகோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்.கே.கோவிந்தசாமி கண்டறிந்தார்

கூற்று 2

அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை

அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு　　ஆ) கூற்று இரண்டும் தவறு

இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி　　ஈ) கூற்று இரண்டும் சரி

2. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது.

அ) சிற்றிதழ் , குற்றாலக் குறவஞ்சி　　ஆ) கவிதைநூல், திருச்சாழல்

இ) நாளிதழ், நன்னகர் வெண்பா　　ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

3. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க

| | | |
|---|---|---|
| அ) விரியன் | - | 1) தண்டை |
| ஆ) திருகுமுருகு | - | 2) காலாழி |
| இ) நாங்கூழ்ப்புழு | - | 3) சிலம்பு |
| ஈ) குண்டலப்பூச்சி | - | 4) பாடகம் |

i) 3 4 2 1　　ii) 3 1 4 2　　iii) 4 3 2 1　　iv) 4 1 3 2

4. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

அ) சாழல்　　ஆ) சிற்றில்　　இ) சிறுதேர்　　ஈ) சிறுபறை

5. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்

அ) மூதூர்　　ஆ) வெற்றிடம்　　இ) நல்லாடை　　ஈ) பைந்தளிர்

**குறுவினா**

1. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?
2. ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?
3. அயர்ந்து, எழுந்த – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
4. தொடர் அமைத்து எழுதுக – அன்றொருநாள், நிழலிலிருந்து

**சிறுவினா**

1. ஃபிரெஸ்கோ ஓவியங்கள்; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை ?
2. கலைச்சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது ?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 192　　23-10-2018 13:15:13

3. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை ?

4. உணவும் உறக்கமும் அணில் கனவாம்; உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.

5. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?

**நெடுவினா**

1. 'கல்லும் கதை சொல்லும்' – என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

2. சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்**

நாடகத்தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்த சங்கரதாசு சுவாமிகள், நாடகங்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் முதல்வராகவும் விளங்கினார். பெரும்புலவர்கள், சுவாமிகளின் பாடல் திறத்தையும் உரையாடல் தரத்தையும் உணர்ந்து நெஞ்சாரப் பாராட்டியுள்ளனர். இளமையில் புலவரேறு பழநி தண்டபாணி சுவாமிகளைத் தேடிச் சென்று, தமிழறிவைப் பெற்ற இவர் தம்முடைய 16 ஆவது வயதிலேயே கவியாற்றல் பெற்று, வெண்பா, கலித்துறை இசைப்பாடல்களை இயற்றத் தொடங்கிவிட்டார். இரணியன், இராவணன், எமதருமன் ஆகிய வேடங்களில் நடித்துப் புகழடைந்தபோது அவருடைய வயது 24. வண்ணம், சந்தம் பாடுவதில் வல்லவராயிருந்த சுவாமிகளின் 'சந்தக்குழிப்புகளின்' சொற்சிலம்பங்களைக் கண்டு அக்காலத்தில் மக்கள் வியப்புற்றனர்.



சங்கரதாசு சுவாமிகள்
(1867 – 1922)

சங்கரதாஸ் சுவாமிகள் 'சமரச சன்மார்க்க சபை' என்னும் நாடகக் குழுவை உருவாக்கினார். இந்தக் குழுவில் பயிற்சி பெற்ற எஸ். ஜி.கிட்டப்பா நாடகக் கலைத்துறையில் பெரும்புகழ் ஈட்டினார். மேடை நாடகம் தரம் குன்றிய நிலையில், மதுரை வந்த சுவாமிகள், 1918இல், 'தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை' என்னும் நாடக அமைப்பை உருவாக்கி ஆசிரியர் பொறுப்பேற்றார். இங்கு உருவானவர்களே டி.கே.எஸ். சகோதரர்கள். நாடகத்தின்மூலம் மக்களுக்கு அறவொழுக்கத்தையும் தமிழின் பெருமையையும் பண்பாட்டையும் தம் சுவைமிகுந்த பாடல், உரையாடல் வழியே உணர்த்திய சங்கரதாசு சுவாமிகளை நாடகத் துறைக் கலைஞர்கள், 'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்று உளமகிழ்ந்து போற்றுகின்றனர்.

1. தமிழ்ச்சொல்லாக்குக – சன்மார்க்கம், வித்துவ பால சபை

2. நாடகத் தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் <u>திகழ்ந்தவர்</u> சங்கரதாசு சுவாமிகள் – அடிக்கோடிட்ட வினையாலணையும் பெயரை வினைமுற்றாக்கித் தொடரை எழுதுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 193 23-10-2018 13:15:13

3. ஈட்டினார் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

4. தன்னன்ன தானேன தன்னானே – இந்தச் சந்தத்தில் பொருள் பொதிந்த இரண்டு அடிகள் கொண்ட பாடல் எழுதுக.

(எ.கா.) இந்திய நாட்டினில் வாழ்வதையே

இன்பமாய்க் கருதிடல் வேண்டுமப்பா . . .

5. தமிழ் நாடகத் தலைமையாசிரியர் – சிறப்புப்பெயருக்கான காரணத்தை அளிக்க.

**தமிழாக்கம் தருக.**

*The oldest documented forms of art are visual arts, which include creation of images or objects in fields including today painting, sculpture, printmaking, photography, and other visual media. Music, theatre, film, dance, and other performing arts, as well as literature and other media such as interactive media, are included in a broader definition of art or the arts. Until the 17th century, art referred to any skill or mastery and was not differentiated from crafts or sciences. Art has had a great number of different functions throughout its history, making its purpose difficult to abstract or quantify to any single concept. This does not imply that the purpose of Art is "vague", but that it has had many unique, different reasons for being created.*

**தொடர் மாற்றம்**

1. மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர் (கலவைத் தொடராக மாற்றுக)

2. தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும் (வினாத் தொடராக்குக)

3. என்னே! மதுரை மீனாட்சிஅம்மன் கோவில் சிற்பக் கலை (செய்தித் தொடராக்குக)

4. நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வேன் (பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக)

**மெய்ப்புத்திருத்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்க்காணும் விவரங்களுடன் தன்விவரக்குறிப்பு ஒன்று எழுதுக.**

(பெயர், வயது, பாலினம், பிறந்த நாள், பெற்றோர், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, அறிந்த மொழிகள், எடை, உயரம், குருதிவகை, கல்வித்தகுதி)

**இலக்கியநயம் பாராட்டுக.**

தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,

கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,

தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்

வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ.

– கம்பர்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 194 23-10-2018 13:15:13

## மொழியோடு விளையாடு

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



**தேர்க்கவி (இரத பந்தம்)**

**தேர்க்கவி – எழதிப்பழகுக**

*சித்திரகவி வகைகளுள் ஒன்று தேர்க்கவி. தேர் வடிவத்தினுள் சொற்களை அமைத்துப் பாடுவது.*







*கல் செல் நீ நிமிர்ந்துநட*

*கற்பந்து நீயே தகர் தடை*

*தீ மிதி நிமிர்ந்து நில்.*

**விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

1. *தனிமொழி – அறிவு ; ________ – வண்ண மயில் ; பொதுமொழி – ________*

2. *கார்காலம் – ________; குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை; ________ – மார்கழி, தை*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 195 23-10-2018 13:15:13

3. எழுத்து, சொல், ________________ , யாப்பு, ________________ .

4. எழுத்து , ________________ , சீர், தளை, ________________ , தொடை

5. சேரன் - வில், சோழன் - ________________, ________________ - மீன்

**செய்து கற்போம்**

நீவிர் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள வழிபாட்டுத்தலங்கள், சுற்றுலாத்தலங்கள் போன்றவற்றிற்குச் சென்று அங்கு உமக்குக் கிடைக்கும் கலையனுபவங்களைக் கட்டுரையாக்குக.

**நிற்க அதற்குத் தக**

நம் நாட்டின் பெருமைகளில் ஒன்று தொன்மைச் சின்னங்கள். அவை நம் வரலாற்றைப் பறைசாற்றுபவை. கோவில்களிலும் தொன்மையான இடங்களிலும் கல்வெட்டுகளிலும் சிலர் கிறுக்குவதை, சிதைப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? நம்முடைய பெருமையை நாமே சிதைக்கலாமா? அவற்றை அழியாமல் பாதுகாக்க நாம் என்ன செய்யப் போகிறோம்? பட்டியலிடுக.



மதுரையிலுள்ள சமணர் படுகை.

**கலைச்சொல் அறிவோம்**

நுண் கலைகள் – Fine Arts

ஆவணப்படம் – Documentary

கல்வெட்டு – Inscription / Epigraph

தானியக்கிடங்கு – Grain Warehouse

பேரழிவு – Disaster

தொன்மம் – Myth

**அறிவை விரிவு செய்**

சிவானந்த நடனம் – ஆனந்த குமாரசுவாமி

தஞ்சைப்பெருவுடையார் கோயில் – இராசராசேச்சுரம் – கோயில் நுட்பம் – குடவாயில் பாலசுப்பிரமணியன்

ஆத்மாநாம் கவிதைகள்

**இணையத்தில் காண்க**

http://www.thebigtemple.com/architecture1.html – தஞ்சை கோவிலின் இணையத்தளம்

Photos on art-and-archaeology web site – தொல்லியல் துறையின் இணையத்தளம்

http://www.tamilvu.org/ta/courses-degree-c012-c0123-html-c01233l1-15035 – குறவஞ்சி இலக்கியம்.

http://www.tamilvu.org/slet/l4100/l4100pd2.jsp?bookid=116&pno=338 – சாழல் வடிவம் – விளக்கம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_171-196.indd 196 23-10-2018 13:15:13

இயல் 8

# வையத் தலைமை கொள்





## கற்றல் நோக்கங்கள்

- கருத்துகளைத் தொகுத்துக் கட்டுரைக்கும் திறன் பெறல்
- கவிதையில் புரட்சிக்கருத்துகள் எழுச்சியுடன் வெளிப்படுத்தப்படும் நயம் அறிந்து சுவைத்தல்
- சங்க இலக்கியத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நாட்டுச் சிறப்பினை இன்றைய நிலையுடன் ஒப்பிட்டுக் கற்றல்
- ஆக்கப்பெயர்களின் இன்றியமையாமை, நடைமுறைத் தேவை ஆகியவற்றை அறிந்து பயன்படுத்துதல்



## பாடப் பகுதி

காற்றில் கலந்த பேரோசை – சுந்தர ராமசாமி

புரட்சிக்கவி – பாரதிதாசன்

பதிற்றுப்பத்து – குமட்டூர்க் கண்ணனார்

சிந்தனைப் பட்டிமன்றம்

ஆக்கப்பெயர்கள்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 197 23-10-2018 13:29:15

இயல் 8

# காற்றில் கலந்த பேரோசை

– சுந்தர ராமசாமி

**நுழையும்முன்**

ஒருமுறை திருவாங்கூரில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட துன்பத்தைத் துடைக்கப் பள்ளி மாணவர்களும் குழுக்கள் அமைத்துச் செயல்பட்டனர். ஒரு குழுவினர் நாஞ்சில் நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள தோவாளை என்னும் இடத்திற்குச் சென்று பணியை மேற்கொண்டனர். அங்கிருந்த கிராம மக்களிடம் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்துப் பேசி நிதி திரட்டினர். அக்குழுவிற்குத் தலைவராக இருந்த ஜீவா அப்போது பள்ளி இறுதிப்படிப்புப் படித்துக்கொண்டிருந்தார். அரசியல் சிந்தனையிலும் பொதுவுடைமைச் சிந்தனையிலும் கூர்வாளாய் மெருகேற்றிக்கொண்ட ஜீவா, சமூக நலனுக்காகத் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட முதல் நிகழ்வு அது.

நண்பர் ஒருவரிடம் 'ஜீவா மறைந்துவிட்டார்' என்றேன். 1963 ஜனவரி மாதம் பதினெட்டாம் தேதி. நண்பகல் வேளை. செய்தி, தபால் நிலையத்துக்கு வந்து ஒரு மணி நேரம்கூட ஆகியிருக்கவில்லை. 'ஆ!' என்று கூவி ஸ்தம்பித்து நின்ற நண்பர், இரண்டொரு நிமிஷங்களுக்குப்பின் 'கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்போதா?' என்று கேட்டார். 'ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?' எனக் கேட்க எண்ணியவன் 'தெரியாது' என்ற சொல்லோடு நிறுத்திக்கொண்டேன்.

அரைமணி நேரத்திற்குப்பின் மற்றொரு நண்பர் காதில் இச்செய்தியைப் போட்டபோது, அவரிடமிருந்தும் அதே கேள்வி பிறந்தது ஆச்சரியத்தை அளித்தது. இருவரது வாயிலிருந்தும் ஒரே கேள்வி புறப்பட்டதைத் தற்செயலான காரியம் என எண்ணி மறந்துவிடுவதும் சுலபம்தான். ஆனால், நான் அவ்வாறு எண்ணவில்லை. அதற்குக் காரணமும் உண்டு.

## மேடையில் வாழ்ந்த மனிதர்

நண்பர்களைப் பொறுத்தவரையில் ஜனப்பிரளயத்தின் முன்னால் நின்று சங்கநாதம் எழுப்பிக் கொண்டிருக்கும்போதே, அண்டம் முட்ட எழுந்து நாற்றிசையிலும் அலையலையாய்ப் பரவும் அப்பேரோசையில் அவர் கலந்துவிடுவதே ஜீவாவின் முத்திரைகொண்ட மரணமாக இருக்கும் போலும். அப்போதுதான் நாடகத்தின் இறுதிக் காட்சி, முந்திய காட்சிகளுடன் பொருந்தி அமையும் போலும். மேடையில் வாழ்ந்த மனிதன், வாழ்ந்த இடத்தில்தானே மறைந்திருக்கவும் வேண்டும்? இவ்வாறு எண்ணுகிறது பேதை மனசு.

ஜீவா என்ற தொண்டன் தமது இறுதிமூச்சு நிற்பதுவரையிலும் கர்ஜித்துக்கொண்டுதான் இருந்திருப்பான் என்பதில் இவர்களுக்கு எத்தனை நம்பிக்கை! எனவேதான் 'மூச்சு நின்றுவிட்டது' என்று நான் சொன்னபோது 'பேச்சு நின்றபோதா?' எனத் திருப்பிக் கேட்கிறார்கள். எத்தனை அர்த்தபுஷ்டியான கேள்வி! ஜீவா தமது அரிய சேவையால் சர்வசாதாரண உள்ளங்களில்கூட எழுப்பியிருக்கும் சித்திரம்தான் எத்தனை ஜீவகளையுடன் காட்சி தருகிறது!

## நெஞ்சோடு வளர்ந்த கனவு

ஜீவா தமக்கென ஒரு தத்துவத்தைச் சிருஷ்டித்துக்கொண்டவர் அல்லர். அவர்,



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 198 23-10-2018 13:29:15

தான் நம்பிய தத்துவத்தை, அச்சில் உயிரிழந்து கிடக்கும் அதன் சித்தாந்தக் கருத்துகளைத் தமது அரிய திறமையால், கலை நோக்கால், கற்பனையால், உயிர்பெறச் செய்து, மனிதன்முன் படைத்தவர். மின்சக்திக்கு ஒளியுருவம் கொடுத்தவர் அவர்.

அவருடைய வாழ்வை, அதன் மையமான போக்கை எண்ணிப் பார்க்கையில், ஒரு கனவு, சிறு பிராயத்திலிருந்தே நெஞ்சோடு வளர்ந்த ஒரு கனவு, அவருக்கு இருந்திருக்கத்தான் வேண்டும் என்று தோன்றுகிறது. மனித வெள்ளத்தை அவர்களில் ஒருவனாய் முன்னின்று தலைமை தாங்கி இட்டுச் சென்று, அதிஉன்னதமான ஓர் எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதே அது.

### கொள்கையும் நம்பிக்கையும்

'மனிதச் சிந்தனையே, கற்பனைக்கும் எட்டாத பேராற்றலே, நீ சிந்தித்தவற்றில் சிறந்தவற்றை என்னிடம் ஒரே ஒருமுறை கூறு. அதனை நான் எட்டுத் திசையிலும் பரப்பி மனித ஜாதியை நீ சொன்ன இடத்திற்கு அழைத்து வருகிறேன். சந்தேகப்படாதே. செய்துகாட்டுகிறேன். என்னைப் பயன்படுத்திக்கொள். முடிந்தமட்டும் என்னைப் பயன்படுத்திக்கொள். கைமாறு வேண்டாம். என்னை நீ பயன்படுத்திக்கொள்வதே நீ எனக்குத் தரும் கைமாறு'. இதுவே அவருடைய பிரார்த்தனை. இந்த அடிப்படையான மனோபாவத்திலிருந்து பிறந்தது அவருடைய கொள்கை; அவருடைய நம்பிக்கை.

### பேச்சு நடை

பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம் என்றுதான் சொல்ல வேண்டும். அதோடு அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகு நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும். பேச்சுக்கலையை விளக்கும் பாடப்புத்தகங்கள் எத்தனையோ விதிகள் கூறும். ஜீவா அவற்றைக் காலடியில்போட்டு மிதித்தவர். அவருடைய பாணி இரவல்பாணி அல்ல; கற்று அறிந்ததும் அல்ல.



நம் நாட்டு மக்களின் தரத்தையும் அனுபவ அறிவையும் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் நன்றாகத் தெரிந்துகொண்ட ஒரு மனிதன், விஷயத்தைக் கலைநோக்கோடு அணுகிக் கற்பனையும் கலந்து நாளடைவில் வெற்றிகரமாக அமைத்துக் கொண்ட பேச்சுப்பாணி அது.

அதோடு, உழுது விதைத்தால் நல்ல அறுவடை காணவேண்டும் என்பதில் ஜீவாவுக்கு நிர்ப்பந்தமுண்டு. இந்தத் தேசத்தில் பேச்சு, அதற்குரிய பயனைத் தர வேண்டுமென்றால், அது எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்.

### இரண்டு கைப்பிடி விசயம்

விசயத்தை வண்டி வண்டியாகக் குவித்துச் சின்ன மூளைகளைக் குழப்பி வாதனைக்கு உள்ளாக்குவது பல பிரசங்கிகளுக்குப் பொழுதுபோக்கு. ஜீவா இதற்கு எதிரி. ஒரு சில கருத்துகளை விரிவாகச் சொல்லிப் புரியவைத்துவிட்டால் போதும் என்பதே அவருடைய எண்ணம்.

வாண வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல் இரண்டு கைப்பிடி விசயம்தான் எடுத்துக்கொள்வார். மேடைமீது ஏறி அதற்கு நெருப்பு வைத்ததும் அதிலிருந்து வர்ணஜாலங்கள் தோன்றும்; பச்சையும் சிவப்பும் மஞ்சளும் உதிரும்; குடை குடையாய் இறங்கி வரும்; மாலை மாலையாய் இறங்கி வரும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 199 23-10-2018 13:29:15

### பசுமையான எண்ணங்கள்

பேச்சுக்கலை அவருடைய காலடியில் விழுந்து கிடந்தது. இப்போது மேடையில் ஒரு நாற்காலி காலியாகிவிட்டது. அது என்றும் காலியாகவே கிடக்கும்.

'நான் ஒரு பள்ளி மாணவன், படித்துக்கொண்டிருக்கிறேன், படித்துக் கொண்டே இருப்பேன்' என்ற எண்ணம் எப்போதும் அவர் மனசில் பசுமையாக இருந்தது போலிருக்கிறது. அவர் கரைத்துக் குடித்துவிட்ட ஒரு விஷயத்தைப் பற்றி ஒரு கற்றுக்குட்டி அவரிடம் பேசினாலும் அதையும் காது கொடுத்துக் கேட்பார். தனக்குத் தெரியாத விஷயங்கள் பிறருக்குத் தெரிந்திருக்கும் என்ற எளிய உண்மை எப்போதும் அவர் நினைவில் நிற்கும்.

### ஆற்றில் விழுந்த கிளை

ஆற்றில் ஒரு கிளையைப் போடுகிறோம். அது ஆற்றோடு செல்கிறது. நீரோட்டத்தில் சிக்கிக் கனவேகமாக ஓடுகிறது. சுழியில் அகப்பட்டுச் சுழல்கிறது. சில சமயம் கரையோடு ஒதுங்குகிறது. மீண்டும் ஓடுகிறது. ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த சொரிமுத்து ஆற்றில் கிளையைப் போட்டாற்போல் வாழ்ந்திருக்க வேண்டியவர்தான். ஆனால் அவரோ இயற்கையின் விதிகளை மறுத்து எதிர்நீச்சல் போடத் துணிந்தார். அவரை அறிஞர் என்கிறோம்; கற்றுக்கொடுக்க யாருமில்லை. பழந்தமிழ் இலக்கியத்தை யாரும் அவர் காதில் ஓதவில்லை. சொரிமுத்துவுக்கும் தலைவர் ஜீவாவுக்குமுள்ள இடைவெளி கொஞ்சம் தூரமல்ல. அதையொரு கணம் எண்ணிப் பார்த்தால், அவருடைய சாதனை தெரியவரும்.

'என் வாழ்வு என் கைகளில்' என்று நம்பியவர் அவர். அவருடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கிறபோது அவருடைய நம்பிக்கை பலித்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். கடவுளின் 'முன்னேற்பாடுகளை' முடிந்த மட்டும் அவர் தகர்த்து எறிந்துவிட்டார். நீரில் விழுந்த கிளை மலைக்குச் சென்றுவிட்டது. எனினும், மரணம் இன்னும் கடவுளுக்குத்தான் சொந்தம். பேரோசை காற்றில் கலந்துவிட்டது.

('காற்றில் கலந்த பேரோசை' கட்டுரையின் சுருக்கப்பட்ட வடிவம்)

**நூல்வெளி**



ஜீவா என்றழைக்கப்படும் ப. ஜீவானந்தம் தொடக்கத்தில் காந்தியவாதியாகவும் பிறகு சுயமரியாதை இயக்கப் போராளியாகவும் பொதுவுடைமை இயக்கத் தலைவராகவும் செயல்பட்டார்; சிறந்த தமிழ்ப் பற்றாளர்; எளிமையின் அடையாளமாகத் திகழ்ந்தவர்.

நாகர்கோவிலைச் சேர்ந்த சுந்தர ராமசாமி, நவீனத் தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர். பசுவய்யா என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியவர். ரத்னாபாயின் ஆங்கிலம், காகங்கள் உள்ளிட்ட சிறுகதைகளை எழுதியிருப்பதுடன் ஒரு புளியமரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள், குழந்தைகள் பெண்கள் ஆண்கள் ஆகிய புதினங்களையும் எழுதியுள்ளார். செம்மீன், தோட்டியின் மகன் ஆகிய புதினங்களை மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். பாடப்பகுதியாக உள்ள இக்கட்டுரை 1963இல் தாமரை இதழின் ஜீவா பற்றிய சிறப்புமலரில் வெளியானது.

**கற்பவை கற்றபின்...**



1. நான் விரும்பும் நாட்டிற்குழைத்த தலைவர் – மேடைப்பேச்சுக்கான கவியுரை உருவாக்குக.
2. ஜீவானந்தம் பற்றிய செய்திகளைத் திரட்டி வகுப்பறையில் படித்துக் காட்டுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_197-220.indd 200 23-10-2018 13:29:15

கவிதைப்பேழை

இயல் 8

# புரட்சிக்கவி

J8A9KL



நுழையும்முன்

மக்களாட்சிக்கு முன்புவரை சட்டம், நிருவாகம், நீதி ஆகியவை அரசனிடமே குவிந்து இருந்தன. இந்நிலை சிறிது சிறிதாக மக்கள் புரட்சியால் மாற்றப்பட்டுத் தற்பொழுது மக்களாட்சிமுறை பல்வேறு நாடுகளில் மலர்ந்துள்ளது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன மக்களாட்சியின் அடிப்படைக்கூறுகள். மக்களாட்சிச் சிந்தனைகளைப் பரப்பியதில் இலக்கியத்திற்கும் பெரும்பங்கு உண்டு. அரசு என்பது மக்களுக்கானதே என்று காலந்தோறும் இலக்கிய வடிவங்களின் மூலம் கவிஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

## முன்கதைச் சுருக்கம்

அரசன் ஒருவன் தன் மகள் அமுதவல்லிக்குக் கவிதை எழுதும் கலையினைப் பயிற்றுவிக்க விரும்புகிறான். அதற்காக அமைச்சரிடம் கருத்துரை கேட்கிறான். அமைச்சர் உதாரன் பெயரை முன்மொழிந்து, 'அவன் அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' என்று கூறுகிறார். தன் மகள் எளிய கவிஞரோடு காதல் வயப்படுவாளோ என எண்ணி அரசன் தயங்குகிறான். அதற்கு அமைச்சர் ஓர் உத்தியைக் கூறுகிறார்.

அதன்படி உதாரன் பார்வையற்றவன் என்று அமுதவல்லியிடம் கூறுகின்றனர். இதுபோலவே உதாரனிடம் அமுதவல்லி தொழுநோயாளி என்று தெரிவிக்கின்றனர். இருவருக்கும் இடையில் திரையிடப்படுகிறது. உதாரன், அமுதவல்லிக்குக் கவிதை எழுதும் கலையைக் கற்றுத் தருகிறான்.

ஓர் இரவுப்பொழுதில் அழகிய நிலவினைக் கண்டு உதாரன் தன்னை மறந்து கவிதை ஒன்றைப் பாடுகிறான். பார்வையற்ற ஒருவன் நிலவின் அழகைக் கண்டு எவ்வாறு கவிபாட முடியும் என்று ஐயம் கொண்ட அமுதவல்லி திரையினை விலக்கினாள். அழகிய ஆண் மகன் இருக்கக் கண்டு அவனை விரும்பத் தொடங்குகிறாள். உதாரனும் அழகான அமுதவல்லியைக் கண்டு விருப்பம் கொள்கிறான். இருவருக்கும் இடையே அன்பு மலர்கிறது.





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 201 23-10-2018 13:29:16

இவர்களின் விருப்பம் அரசனுக்குத் தெரியவருகிறது. இதனை விரும்பாத அரசன், உதாரனைக் குற்றவாளியாக்கி மரண தண்டனை விதிக்கிறான். அமுதவல்லி அதை எதிர்க்கிறாள். அதனால், சினம்கொண்ட மன்னன் இருவருக்கும் சேர்த்தே மரண தண்டனை விதிக்கிறான்.

இதனைத் தொடர்ந்து வரும் இக்காவியத்தின் இறுதிப்பகுதி இங்குப் பாடமாக இடம்பெற்றுள்ளது.

பா வகை: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### உயிர் எமக்கு வெல்லமல்ல

*'காதலனைக் கொலைக்களத்துக் கனுப்பக் கண்டும்*
*கன்னிஎனை மன்னிக்கக் கேட்டுக்கொண்ட*
*நீதிநன்று மந்திரியே! அவன் இறந்தால்*
*நிலைத்திடும்என் உயிர்எனவும் நினைத்து விட்டாய்!*
*சாதல்எனில் இருவருமே சாதல் வேண்டும்,*
*தவிர்வதெனில் இருவருமே தவிர்தல் வேண்டும்;*
*ஓதுகஇவ் விரண்டில் ஒன்று மன்னவன்வாய்!*
*உயிர் எமக்கு வெல்லமல்ல!' என்றாள் மங்கை.*

### கடைசிப் பேச்சு

*கொலைக்களத்தில் கொலைஞர்களும் அதிகா ரங்கள்*
*கொண்டவரும் காதலரும் ஓர்பால் நின்றார்;*
*அலைகடல்போல் நாட்டார்கள் வீடு பூட்டி*
*அனைவருமே வந்திருந்தார். உதார னுக்கும்*
*சிலைக்குநிகர் மங்கைக்கும் 'கடைசி யாகச்*
*சிலபேச்சுப் பேசிடுக' என்றுசொல்லித்*
*தலைப்பாகை அதிகாரி விடைதந் திட்டான்;*
*தமிழ்க்கவிஞன் சனங்களிடை முழக்கம் செய்வான்;*

*பேரன்பு கொண்டவரே, பெரியோ ரே,என்*
*பெற்றதாய் மாரே, நல் இளஞ்சிங் கங்காள்!*
*நீரோடை நிலங்கிழிக்க, நெடும ரங்கள்*
*நிறைந்துபெருங் காடாகப், பெருவி லங்கு*
*நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின்*
*நெடுங்குன்றில் பிலஞ்சேரப், பாம்புக் கூட்டம்*
*போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்*
*புதுக்கியவர் யார்? அழகு நகர்உண் டாக்கி!*

*சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு*
*தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி*
*நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்*
*நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின்தோள்கள்?*
*கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்*
*கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?*
*பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்*
*போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?**

### ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்

*அரசனுக்கும் எனக்கும் ஒரு வழக்குண் டாக*
*அவ்வழக்கைப் பொதுமக்கள் தீர்ப்ப தேதான்*
*சரியென்றேன்; ஒப்பவில்லை! இவளும் நானும்*
*சாவதென்றே தீர்ப்பளித்தான்; சாக வந்தோம்!*
*ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்*
*உண்டென்றால், அத்தேசம் ஒழிதல் நன்றாம்!*
*இருவர் இதோ சாகின்றோம்! நாளை நீங்கள்*
*இருப்பதுமெய் என்றெண்ணி இருக்கின் றீர்கள்!*

### மாசில்லாத உயர் தமிழ்

*'தமிழ்அறிந்த தால் வேந்தன் எனை அழைத்தான்*
*தமிழ்க்கவிஎன் றெனை அவளும் காத லித்தாள்!*
*அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ், என் ஆவி*
*அழிவதற்குக் காரணமாயிருந்த தென்று*
*சமுதாயம் நினைத்திடுமோ? ஐயகோ! என்*
*தாய் மொழிக்குப் பழிவந்தால் சகிப்ப துண்டோ?*
*உமைஒன்று வேண்டுகின்றேன் மாசில் லாத*
*உயர்தமிழை உயிர்என்று போற்று மின்கள்!*

### மக்களுக்கே ஆளும் உரிமை

*அரசனுக்குப் பின்னிந்தத் தூய நாட்டை*
*ஆளுதற்குப் பிறந்தஒரு பெண்ணைக் கொல்ல*
*அரசனுக்கோ அதிகாரம் உங்க ளுக்கோ?*
*அவ்வரசன் சட்டத்தை அவம தித்தான்*
*சிரம் அறுத்தல் வேந்தனுக்குப்பொழுது போக்கும்*
*சிறியகதை! நமக்கெல்லாம் உயிரின் வாதை!*
*அரசன்மகள் தன்நாளில் குடிகட் கெல்லாம்*
*ஆளுரிமை பொதுவாக்க நினைத்தி ருந்தாள்!*

### ஆழ்க எந்தன் குருதி



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_197-220.indd 202 23-10-2018 13:29:16

*வாழியஎன் நன்னாடு பொன்னா டாக!*
*வாழியநற் பெருமக்கள் உரிமை வாய்ந்தே*
*வீழியபோய் மண்ணிடையே விண்வீழ் கொள்ளி*
*வீழ்வதுபோல் தனித்தாளும் கொடிய ஆட்சி!*
*ஏழையினேன் கடைசிமுறை வணக்கம் செய்தேன்!*
*என் பெரியீர், அன்னையீர், ஏகு கின்றேன்!*
*ஆழ்க என்றன் குருதியெலாம் அன்பு நாட்டில்*
*ஆழ்க' என்றான்! தலை குனிந்தான் கத்தி யின்கீழ்!*

### கொலையாளி உயிர் தப்பல்

*படிகத்தைப் பாலாபி ஷேகம் செய்து*
*பார்ப்பதுபோல் அமுதவல்லி கண்ணீர் வெள்ளம்*
*அடிசோர்தல் கண்டார்கள் அங்கி ருந்தோர்*
*ஆவென்று கதறினாள்! 'அன்பு செய்தோர்*
*படிமீது வாழாரோ?' என்று சொல்லிப்*
*பதைபதைத்தாள்! இதுகேட்ட தேச மக்கள்*
*கொடிதென்றார்! கொடுவாளைப் பறித்தார்; அந்தக்*
*கொலையாளர் உயிர்தப்ப ஓட லானார்!*

### செல்வமும் உரிமையும் மக்களுக்கே

*கவிஞனுக்கும் காதலிக்கும் மீட்சி தந்தார்!*
*காவலன்பால் தூதொன்று போகச் சொன்னார்;*
*'புவியாட்சி தனிஉனக்குத் தாரோம் என்று*
*போய்உரைப்பாய்' என்றார்கள்! போகா முன்பே*
*செவியினிலே ஏறிற்றுப் போனான் வேந்தன்!*
*செல்வமெலாம் உரிமைஎலாம் நாட்டா ருக்கே*
*நவைஇன்றி எய்துதற்குச் சட்டம் செய்தார்!*
*நலிவில்லை! நலம்எல்லாம் வாய்ந்த தங்கே!*

## சொல்லும் பொருளும்

ஓதுக – சொல்க; முழக்கம் – ஓங்கி உரைத்தல்; கனிகள் – உலோகங்கள்; மணி – மாணிக்கம்; படிகம் – பளபளப்பான கல்; மீட்சி – விடுதலை; நவை – குற்றம்; படி – உலகம்.

## இலக்கணக் குறிப்பு

ஓதுக, பேசிடுக, ஆழ்க, வாழிய – வியங்கோள் வினைமுற்றுகள்; அலைகடல் – வினைத்தொகை; தமிழ்க்கவிஞர் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை; பேரன்பு, நெடுங்குன்று – பண்புத்தொகைகள்.

ஒழிதல் – தொழிற்பெயர்; உழுதுழுது – அடுக்குத்தொடர்.

## பகுபத உறுப்பிலக்கணம்

நின்றார் – நில்(ன்) + ற் + ஆர்

நில் – பகுதி ('ல்' 'ன்' ஆனது விகாரம்), ற் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

செய்வான் – செய்+வ்+ஆன்

செய் – பகுதி, வ் –எதிர்கால இடைநிலை, ஆன் –ஆண்பால் வினைமுற்று விகுதி.

அழைத்தான் – அழை + த் + த் + ஆன்

அழை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

வேண்டுகின்றேன் – வேண்டு + கின்று + ஏன்

வேண்டு – பகுதி, கின்று –நிகழ்கால இடைநிலை, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

ஆழ்க – ஆழ் + க

ஆழ் – பகுதி, க – வியங்கோள் வினைமுற்று விகுதி.

பறித்தார் – பறி + த் + த் + ஆர்

பறி – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதி

நீரோடை – நீர் + ஓடை

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

சிற்றூர் – சிறுமை+ ஊர், ஈறு போதல் சிறு + ஊர்

தன்னொற்றிரட்டல் – சிற்று + ஊர்

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் – சிற்ற் + ஊர்

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – சிற்றூர்

கற்பிளந்து – கல் + பிளந்து

ல ள வேற்றுமையில் வலிவரின் றடவும் – கற்பிளந்து



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

மணிக்குளம் – மணி + குளம்

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் – மணிக்குளம்

அமுதென்று – அமுது + என்று

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் – அமுத் + என்று

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – அமுதென்று

புவியாட்சி – புவி + ஆட்சி

இ ஈ ஐ வழி யவ்வும் – புவி + ய் + ஆட்சி

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – புவியாட்சி

## தெரிந்து தெளிவோம்

ஒரு மூல மொழிப் பிரதியின் உள்ளடக்கத்தை அப்பிரதிக்கு இணையான இலக்கு மொழிப் பிரதியின் வழியாக வெளிப்படுத்துதலே மொழிபெயர்ப்பு. தழுவல், சுருக்கம், மொழியாக்கம், நேர்மொழிபெயர்ப்பு என்பவற்றை மொழிபெயர்ப்பின் வகைகளாகக் கொள்ளலாம்.

**தமிழிலிருந்து பிற மொழிக்கு**

சங்க இலக்கிய மொழிபெயர்ப்பு

ஏ.கே.ராமானுஜம் – Love Poems from a Classical Tamil Anthology

ம.லெ. தங்கப்பா – Hues And Harmonies From An Ancient Land

**பிற மொழியிலிருந்து தமிழுக்கு**

"அந்நியன்" – ஆல்பர் காம்யு, "உருமாற்றம்"– காப்கா – ஜெர்மனியிலிருந்து

'சொற்கள்'– ழாக் பிரெவர், "குட்டி இளவரசன்"– எக்சுபெரி – பிரெஞ்சிலிருந்து

"உலகக் கவிதைகள்"– தொகுப்பு: பிரம்மராஜன்

## நூல்வெளி

வடமொழியில் எழுதப்பட்ட பில்கணீயம் என்னும் காவியத்தைத் தழுவி, தமிழில் பாரதிதாசனால் 1937இல் எழுதப்பட்டது புரட்சிக்கவி. பாரதியின் மீது கொண்ட பற்றின் காரணமாகக் கனக சுப்புரத்தினம் என்னும் தம் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார். மொழி, இனம், குடியாட்சி உரிமைகள் ஆகியவை பற்றித் தம் பாடல்களில் உரக்க வெளிப்படுத்தியமையால் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்பட்டார். பிரெஞ்சு மொழியில் அமைந்த தொழிலாளர் நலச் சட்டத்தைத் தமிழ் வடிவில் தந்தவர். குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, சேர தாண்டவம், ஆகிய காப்பியங்களையும் எண்ணற்ற பாடல்களையும் இயற்றியவர். 'குயில்' என்னும் இலக்கிய இதழை நடத்தியுள்ளார். இவருடைய 'பிசிராந்தையார்' நாடகத்துக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்ற இவரின் தமிழ் வாழ்த்துப் பாடலைப் புதுவை அரசு தனது தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழக அரசு இவருடைய பெயரால் திருச்சியில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவியுள்ளது.

## கற்பவை கற்றபின்...

1. மக்களாட்சியின் சிறப்பைப் பற்றிக் கட்டுரை எழுதுக.
2. பாரதிதாசனாரின் 'புரட்சிக் கவி' குறுங்காவியத்தை முழுமையாகப் படித்துச் சுவைத்து உங்கள் கருத்தைப் பதிவு செய்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 204 23-10-2018 13:29:16

கவிதைப்பேழை

இயல் 8

# பதிற்றுப்பத்து

J8FHYC

## நுழையும்முன்

நாட்டில் வாழும் உயிர்கள் இன்புற்று வாழ வேண்டும். அவ்வாழ்வு சிறக்க நாட்டின் அரசன் மக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும். வள்ளுவர், "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு" என்று குறிப்பிடுகிறார். பசியும் நோயும் பகையும் இல்லாதிருப்பதே சிறந்த நாடு என்று அறிவுறுத்துகிறார்.

### பாடல் பின்னணி

உதியன் சேரலாதனுக்கும் வேண்மாளுக்கும் மகனாகப் பிறந்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இவன் வடக்கே இமயமலைவரை படையெடுத்துச் சென்று, வெற்றி பெற்று, இமயத்தில் வில்லினைப் பொறித்தவன். தமிழின் சிறப்பை உலகறியச் செய்தவன். கடம்பர்களை வென்று, தன் வீரர்களுக்குக் கவசமாக விளங்கியவன். சேரலாதனின் நாடு காத்தற் சிறப்பையும் கொடைச் சிறப்பையும் குமட்டூர்க் கண்ணனார் புகழ்வதாகப் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தில் உள்ள இப்பாடல் அமைந்துள்ளது.

### நிரைய வெள்ளம்

*பதிபிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி*
*நிரையம் ஒரீஇய வேட்கைப் புரையோர்*
*மேயினர் உறையும் பலர்புகழ் பண்பின்*
*நீபுறம் தருதலின் நோய்இகந்து ஒரீஇய*
*யாணர்நன் னாடும் கண்டுமதி மருண்டனென்*

*மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க்கு எஞ்சாது*
*ஈத்துக்கை தண்டாக் கைகடும் துப்பின்*
*புரைவயின் புரைவயின் பெரிய நல்கி*
*ஏமம் ஆகிய சீர்கெழு விழவின்*
*நெடியோன் அன்ன நல்லிசை*
*ஒடியா மைந்தநின் பண்புபல நயந்தே.*

*(15: 30–40)*

*– குமட்டூர்க் கண்ணனார்.*





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 205 23-10-2018 13:29:16

*உறுபசி ஓவாப்பிணி செறுபகை இன்மையால்*
*புலம்பெயர்ந்து செல்லாது வாழும் மக்கள்!*
*சான்றோர் புகழும் ஆட்சிச் சிறப்பில்*
*துயரம் தொலைந்த புதுவள நன்னாடு!*
*மண்ணுலக உயிர்கள் மாண்புடன் வாழ*
*ஈகையால் நீளும்கை! எதிரிகளை அழிக்கும்கை!*
*இடையறாது இடையறாது*
*பெரும்பொருள்கொடுத்துப்*
*பாதுகாப்பு அளிக்கும் பெருவிழாத் தலைவன் என*
*நற்புகழ் குறையாத வலிமைமிகு உந்தன்*
*பண்புபல நினைந்தும் கண்டும்*
*பெருவியப்பு அடைந்தேன்; மதிமிரண்டு போனேன்!*

### திணை : பாடாண்திணை

பாடாண் திணையானது ஒரு மன்னனின் புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறுவதாகும். பாடப்படும் ஆண்மகனின் உயர்பண்புகளைக் கூறுவது இத்திணையின் நோக்கமாகும்.

### துறை: செந்துறைப் பாடாண்பாட்டு

செந்துறையாவது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல். இது செந்துறைப் பாடாண் பாட்டு எனப்படும்.

### வண்ணம் : ஒழுகு வண்ணம்

வண்ணம் என்பது ஒலிநய (சந்தம்) வேறுபாடு ஆகும்.

> வண்ணந் தாமே நாலைந் தென்ப.
>
> தொல். பொ. 524

ஒழுகு வண்ணம் என்பது ஒழுகிய ஓசையாற் செல்வதாகும்.

> ஒழுகு வண்ண மோசையி னொழுகும்.
>
> தொல். பொ. 538

### தூக்கு: செந்தூக்கு

தூக்கு என்பது செய்யுள் அடிகளை வரையறை செய்வதாகும். செந்தூக்கு என்பது வஞ்சிப்பாவின் இறுதியடி போன்றோ, ஆசிரியவடியின் இறுதி போன்றோ அமையும்.

> வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே.
>
> தொல் . பொ. 383

பா வகை : நேரிசை ஆசிரியப்பா

### சொல்லும் பொருளும்

பதி – நாடு; பிழைப்பு – வாழ்தல்; நிரையம் – நரகம்; ஒரீஇய – நோய் நீங்கிய; புரையோர் – சான்றோர்; யாணர் – புது வருவாய்; மருண்டெனன் – வியப்படைந்தேன்; மன்னுயிர் –நிலைபெற்றுள்ள உயிர்த்தொகுதி; தண்டா – ஓயாத; கடுந்துப்பு – மிகுவலிமை; ஏமம் – பாதுகாப்பு; ஒடியா – குறையா; நயந்து – விரும்பிய.

**முதல் 29 அடிகளின் கருத்துச் சுருக்கம்:** (சேரலாதனே! பகை நாட்டில் ஓராண்டுவரை தங்கிப் போர் செய்வாய். பகைவர்க்கு நரகத் துன்பத்தைத் தரும் உன் வீரர்கள் உன்னுடனே வெள்ளமென வருவர். பகைநாட்டில் நீ மூட்டிய தீயால் அந்நாட்டின் பழைய அழகு அழிந்தது. காய்ந்த வயல்களில் வீரர்கள் தங்கினர். இத்துன்பத்தை மறந்து உன்னை எதிர்த்து அழிந்த பகைவர் நாடுகளைக் கண்டு வந்தேன். பல வளங்களை உடைய உன் நாட்டில் தொடர்ச்சியான விழாக்களைக் கொண்டாடும் பழமையான ஊரில் உன் வெற்றி முரசு கொட்டுகிறது. நெடுஞ்சேரலாதனே! கலைஞர்கள் உன்னை வாழ்த்தி இசைக்கின்றனர்.)

### பாடலின் பொருள்

"சேரலாதனே, உன் குடிமக்கள் எப்பொழுதும் நல்ல செயல்களையே செய்து வருபவர்கள் பசி, பிணி அறியாத அவர்கள் நாட்டை விட்டுப் புலம்பெயராமல் உன் நாட்டிலேயே சுற்றத்தாரோடு வாழ விரும்புவர். அவ்வாறான குடிமக்களால் நீ



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 206 23-10-2018 13:29:17

போற்றப்படுகிறாய். இப்பெரிய நிலவுலகத்தில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் இடையறாது கொடுக்கும் பண்புடையவனே, நீ சான்றோர்களுக்கு அரிய பொருள்கள் நல்குவாய். எப்பொழுதும் விழாக்கள் நிகழும் நாட்டிற்கு நீ உரிமை உடையவன். நெடியோன் போன்ற புகழினை உடைய உன் நாட்டின் வளத்தையும் பகை நாட்டின் அழிவையும் கண்டு வியப்படைகிறேன்."

சேரநாடு செல்வவளம் மிக்கது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் நாட்டையும் மக்களையும் கண்ணெனக் காத்தான். ஆகவேதான், அவன் நாட்டு மக்கள் வேற்று நாட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை. புது வருவாய்ப் பெருக்கமும் ஈத்துவக்கும் இன்பமும் உடையவன் சேரலாதன்.

## இலக்கணக் குறிப்பு

துய்த்தல் – தொழிற்பெயர்; ஒரீஇய – சொல்லிசை அளபெடை; புகழ்பண்பு – வினைத்தொகை; நன்னாடு – பண்புத்தொகை; மருண்டனென் – தன்மை ஒருமை வினைமுற்று; ஒடியா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

## பகுபத உறுப்பிலக்கணம்

மருண்டனென் – மருள்(ண்) + ட் + அன் + என்

மருள் – பகுதி, 'ள்' 'ண்' ஆனது விகாரம்

ட் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை

என் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

துய்த்தல் – துய் + த் + தல்

துய் – பகுதி, த் – சந்தி, தல் – தொழிற்பெயர் விகுதி

## புணர்ச்சி விதி

மண்ணுடை – மண் + உடை

தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் – மண்ண் + உடை

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – மண்ணுடை

புறந்தருதல் – புறம் + தருதல்

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் – புறந்தருதல்.

### நூல்வெளி



எட்டுத்தொகையில் அமைந்த புறத்திணை நூல்களுள் ஒன்று பதிற்றுப்பத்து. சேர மன்னர்கள் பத்துப்பேரின் சிறப்புகளை எடுத்தியம்பும் இது, பாடாண் திணையில் அமைந்துள்ளது. முதல் பத்துப் பாடல்களும் இறுதிப் பத்துப் பாடல்களும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு பாடலின் பின்னும் துறை, வண்ணம், தூக்கு, பாடலின் பெயர் என்பவை இடம்பெற்றிருக்கின்றன; பாடலில் வரும் சிறந்த சொற்றொடர் அப்பாடலுக்குத் தலைப்பாகத் தரப்பட்டிருக்கிறது. பாடப்பகுதிப் பாடலுக்குச் சேரலாதனின் படைவீரர் பகைவர்முன் நிரையபாலரைப் போலப் (நரகத்து வீரர்கள்) படைவெள்ளமாக நின்றதால் 'நிரைய வெள்ளம்' என்று தலைப்பு இடப்பட்டுள்ளது. பாடப்பகுதியான இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இவனைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார், உம்பற்காட்டில் 500 ஊர்களையும் தென்னாட்டு வருவாயுள் பாதியையும் பரிசாகப் பெற்றார்.

### கற்பவை கற்றபின்...



பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து (738)

என்ற குறள்வழி நாட்டிற்கு அழகு சேர்ப்பன குறித்துக் கலந்துரையாடுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 207 23-10-2018 13:29:17

விரிவானம்

இயல் 8

# சிந்தனைப் பட்டிமன்றம்

J8J5H9




தமிழர் சிந்தனைக்கான வெளிப்பாட்டு வடிவங்களில் சிறப்பானதொரு வடிவம் பட்டிமன்றமாகும். முரண்பாடான பல கருத்துகளை விளக்கவும் நிலைநாட்டவும் பட்டிமன்றம் உதவுகின்றது. பண்பட்ட முறையில் கருத்துகளை முன்வைத்துப் பேசுகையில் சிந்தனையாற்றலையும் பேச்சுத்திறனையும் மொழியாளுமையையும் வளர்த்தெடுக்கிறது.

அரசு மேல்நிலைப் பள்ளி – அரங்கம்

முன்னிலை: தமிழாசிரியர் தங்கமணி

நடுவர்: மாணவர் இளங்கோ

**இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது**

| வீடா? | நாடா? |
|---|---|
| மாணவர்கள் எழில், எலிசபெத் | மாணவர்கள் அமுதா, அப்துல்லா |

### நடுவரின் முன்னுரை

பெருமதிப்பிற்குரிய தமிழாசிரியர் அவர்களே! என் இனிய நண்பர்களே! வணக்கம்.

இளமை என்றாலே அறிவு, துணிவு ஆகிய இரண்டின் கலவை எனலாம் அறிவூக்கத்திற்கும் படைப்பூக்கத்திற்கும் அடித்தளமிடப்படும் பருவம் இது.

இந்தச் சிந்தனைப் பட்டிமன்றத்திற்கு இளைஞர்களை முதன்மைப்படுத்திய தலைப்பு ஏன் வழங்கப்பட்டது என்று பலரும் எண்ணலாம்.

இந்திய மக்கள் தொகையில் இன்று சரிபாதி இளைஞர்கள் அல்லவா! நம்முடைய பங்களிப்பு இன்றி வீடோ, நாடோ எந்தவித வளர்ச்சியையும் அடைந்துவிடமுடியாது. எனவேதான், தலைப்பு இளைஞர்களை மையப்புள்ளியாக வைத்துச் சுழல்கிறது.

(கரவொலி....)

ஆண் மாணவர்கள் மட்டும் ஏன் கைதட்டுகிறார்கள்? எனக்குப் புரிந்துவிட்டது. இன்றைய தமிழ்ச் சமுதாயம் 'இளைஞர்' என்ற சொல்லிற்கு 'இளவயது ஆண்கள்' என்றே பொருள்கொண்டு பழகிவிட்டது. இளைஞர் என்ற சொல் இருபாலரையும் குறிக்கின்ற பொதுச்சொல் என்றே புரிந்துகொள்வோம். கவிஞர் தாராபாரதி எழுச்சியுடன்,

"வீட்டுக்கு உயிர் வேலி!
வீதிக்கு விளக்குத்தூண்!
நாட்டுக்குக் கோட்டை மதில்!
நடமாடும் கொடிமரம் நீ"



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 208 23-10-2018 13:29:17

என்று இளைஞர்களைப் பார்த்துப் பாடினார். அறிவியல் யுகத்தைத் தாங்கும் தூண்களாகத் திகழும் இளைய சமுதாயத்திற்கு வீடும் நாடும் துணைபுரிகிறதா?

இந்தக் கேள்விக்கு விடை தேட முனைகிறது இந்தச் சிந்தனைப் பட்டிமன்றம். இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது வீடே! என்று நண்பர் எழிலைப் பேச அழைத்து என் தொடக்கவுரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**எழில்:** பட்டிமன்றங்கள் பலவும் இன்று நீர்த்துப்போய்விட்ட காலகட்டத்தில் சிறப்பான ஒரு தலைப்பைத் தந்து சிந்தனைக் களமாக மாற்றியிருக்கின்ற தமிழாசிரியர் தங்கமணி அம்மா அவர்களே! நல்ல தீர்ப்பைத் தரவிருக்கின்ற நடுவர் அவர்களே! நண்பர்களே! வணக்கம்.

இளைஞர்களின் முன்னேற்றப் பாதையில் முதல் படிக்கல்லாகவும் அவர்கள் கொடுமுடியைத் தொடுவதற்கு அடித்தளமாகவும் விளங்குவது இல்லம்தானே. அன்பையும் அறிவையும் உணர்த்தும் உரைகல்லாக வீடல்லவா விளங்குகிறது. பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் தாயின் முகம்தானே முதல் பாடப்புத்தகம்.

குழந்தைகளுக்கு உலகத்தைத் தாய்தான் முதன்முதலில் அறிமுகப்படுத்துகிறார். 'தங்கமக பூம்பாதம், தண்ணிபட்டா கொப்பளிக்கும்' என்று அன்பு காட்டிப் பிள்ளையை வளர்த்து, வாழ்வின் ஒவ்வொரு நிலையையும் உணரவைக்கின்றார்.

சொல்லப்போனால் 'கற்றல்' என்பதே வீட்டிலிருந்துதான் தொடங்குகிறது. தந்தையோ அதைத் தொடர்கிறார். அடித்தளம் பலமாக இருந்தால்தானே கட்டடம் வலிமையாக அமையும். எனவே, அடித்தளம் வீட்டுச்சூழல். அதன்மீதுதான் நமது வெற்றி கட்டி எழுப்பப்படுகிறது. நடுவர் எடுத்தாண்ட கவிஞாயிறு தாராபாரதியின் கவிதையை நானும் துணைக்கு அழைக்கிறேன்.

**எத்தனை உயரம் இமயமலை – அதில்**
**இன்னொரு சிகரம் உனது தலை!**
**எத்தனை ஞானியர் பிறந்த தரை – நீ**
**இவர்களை விஞ்சிட என்ன தடை?**

என்று முழங்கிய கவிஞரின் வழியில் நான் முன்னேற வீடுதான் என்னைத் தாங்குகிறது. ஆகவே, நடுவர் அவர்களே இளையோர் முன்னேற்றத்தின் முகமும் அகமுமாக அமைவது வீடே! என்று தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன். நன்றி வணக்கம்.

**நடுவர்:** நான் எதிர்பார்க்கவே இல்லை. நல்ல தொடக்கத்தை நிகழ்த்திவிட்டார் எழில். மிகச் சிறப்பாகப் பேசி அமர்ந்திருக்கும் எழிலின் கருத்தை மறுத்துப் பேச வருகிறார் நண்பர் அப்துல்லா. வாருங்கள், உங்களுக்காகக் கரவொலி காத்திருக்கின்றது.

**அப்துல்லா:** மழை பெய்கிறபோது எல்லோரும் வெளியில் இருந்து வீட்டுக்குள் ஓடுவோம். ஆனால், எட்டயபுரத்து இளம்புயல் மகாகவி பாரதி வீட்டுக்குள்ளிருந்து வெளியே ஓடிவருவார். மழையில் நனைந்துகொண்டே,

**"எத்தனை கோடி இன்பம் வைத்தாய்**
**எங்கள் இறைவா"**

என்று பாடுவார். பாட்டுக்குள் புயல்வைத்த பாரதிக்கும் இந்த அவைக்கும் என் பணிவான வணக்கம்.

வீடு அஃதொரு சிறிய கூடு. அதற்குள்தான் எத்தனை முரண்பாடு. குடும்பத்திற்குள் இருந்த குதூகலமான உரையாடல் தற்போது தொலைந்து போய்விட்டது. ஆனால், கல்வியே வீட்டில் இருந்துதான் தொடங்குகிறது என்று எதிரணி சொல்கிறது.

நடுவர் அவர்களே! வீடு என்னும் சிறிய வட்டத்தைத் தாண்டி நாட்டை நாடிய பின்தான் நல்வாழ்வு துளிர்க்கத் தொடங்குகிறது. பாரதியையே எடுத்துக்கொள்வோம், பாரதி வீதிக்கு வந்தார். உலகத்தைப் படிக்கத் தொடங்கினார். அதுவே, பாரதிக்குப் புதிய திசைகளை அறிமுகப்படுத்தியது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 209 23-10-2018 13:29:17

"தமிழா! பயப்படாதே.

வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்"

என்று நமக்குக் கட்டளையிட்டார்.

'தேடுகல்வி இலாததோர் ஊரைத் தீயினுக்கு இரையாக மடுத்தல்'

என்று கல்விக்கூடங்களின் இன்றியமை யாமையைச் சினத்துடன் எடுத்துக்காட்டினார்.

வீடு என்பது உறவுகளுக்குள்ளேயே நம்மைச் சுற்றவைக்கிறது. ஆனால், நாட்டின் கல்விச்சாலையோ புத்தகங்களின் ஊடே உலகத்தைத் திறந்து காட்டுகின்றது. வேறுபாடுகளைக் கடந்து புதிய நண்பர்களையும் உறவினர்களையும் அடையாளம் காட்டுகிறது. மேலும், இந்த யுகம் அறிவியல் தொழில்நுட்பக் கல்வி யுகம் என்று அறிஞர்கள் சொல்வதை, நாடுதான் நமக்கு அறிமுகப்படுத்துகிறது. எனவே, எல்லோரையும் இணைக்கின்ற பொதுவெளி, நாடுதான் என்பதை எதிரணியினர் உணர வேண்டும். நடுவர் அவர்களே! நல்ல தீர்ப்பைத் தருமாறு வேண்டி விடைபெறுகின்றேன். நன்றி வணக்கம்.

**நடுவர்:** அன்பு நண்பர் அப்துல்லாவின் உரைவீச்சு நம் எல்லோரின் உள்ளங்களையும் கொள்ளைகொண்டது. எரிமலையாகக் கொதித்துவிட்டார். சரி, தோழி எலிசபெத்தின் நிலையைப் பார்த்தால்தான் இரக்கமாக இருக்கின்றது. வருக வருக. உங்கள் கருத்தோட்டங்களை அள்ளித் தருக.

**எலிசபெத்:** வீட்டினுள் உலகத்தை எனக்கு அறிமுகப்படுத்திய என் பெற்றோரைப் போற்றுகின்றேன். கற்றோர் நிறைந்த அவையை வணங்குகின்றேன். வீடு என்றால் எடுத்தெறிந்து பேசுகிற அளவிற்கு எதிரணிக்கு எளிதாகப் போய்விட்டதா? வீடு என்பது நீங்கள் நினைப்பதுபோலச் சிறு கூடு அன்று. அது நமது பண்பாட்டையும் மரபையும் காத்து நிற்கும் கருவூலம். எந்தவொரு தேடலும் இல்லத்திலிருந்துதான் தொடங்குகிறது. அன்பின் தலைவாசலாக, அறிவின் நாற்றங்காலாக வீடுதான் விளங்குகிறது. எப்படித் தெரியுமா?

பெற்றோர் பாடிய தாலாட்டும், தாத்தா பாட்டி சொன்ன கதைகளும் நமக்கான கைவிளக்குகள் அல்லவா! என்னை உப்பு மூட்டைதூக்கிச் சுமந்த, என் உடன் பிறந்தவர்களின் முதுகிலிருந்துதான் நேசத்திற்கான உள்ளுணர்வு பிறந்து வளர்ந்தது.

உணவு எப்படி உற்பத்தியாகிறது என்று காட்டுவதற்காக என்னை விளை நிலத்திற்கு அழைத்துச் சென்ற பெற்றோர்களே என் முதல் பேராசிரியர்கள். பனையோலையில் காற்றாடி செய்யப் பழக்கியதும் நுங்கைத் தின்று அந்தக் காய்களில் வண்டி கட்டி விளையாடக் கற்றுக்கொடுத்ததும் எனக்குப் படைப்பாற்றலைச் சொல்லிக்கொடுத்ததும் என் வீடுதான். குழந்தைப் பருவத்தைச் சரியாகக் கடந்து வருவதற்குக் கற்றுக்கொண்டால் இளமைப் பருவம் இனிதே வளமடையும். எனவே, இல்லம் என்கிற வீடுதான் இளைஞர்களின் முன்னேற்றத்திற்குக் கலங்கரை விளக்கமாக நின்று வழிகாட்டுகிறது. நடுவர் அவர்களே! நீங்களும் உங்கள் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்துத் தீர்ப்புச் சொல்லுங்கள். நன்றி வணக்கம்.

**நடுவர்:** கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டார் எலிசபெத். நன்று தோழி, உங்கள் நாவன்மைக்கு என் நல்வாழ்த்துகள். இப்போது அமுதாவின் நேரம், வாருங்கள் அமுதா! புதிய விடியலுக்கான வெளிச்சமாக உங்கள் பேச்சு அமையட்டும்.

**அமுதா:**

நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ!
சொல்லடி சிவசக்தி – எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ – இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 210 23-10-2018 13:29:17



என்று எனக்கு நாட்டு நலத்தைப் புதிய வழித்தடத்தில் கற்றுக்கொடுத்த முண்டாசுக் கவிஞனை முதலில் வணங்கி அவைக்கு என் பணிவான வணக்கத்தைச் சொல்லி மகிழ்கிறேன்.

வீட்டைப் பற்றிய எண்ணங்களை விசாலப் பார்வையில் பார்க்காமல் எலிசபெத் ஏன் இப்படிக் குறுகிப் போனார் என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. வீடு அப்படி என்ன பெரிதாய்க் கற்றுக் கொடுத்துவிட்டது? ஆண்களுக்கு வேண்டுமானால் அது அறிவின் உறைவிடமாக இருக்கலாம். ஆனால், பெண்களுக்கு அது தங்கக் கம்பிகளால் செய்யப்பட்ட கூண்டுதான். வீடு எப்படிப்பட்ட சொலவடைகளைச் சொல்லிக் கொடுத்தது? எத்தகைய கதைகளைப் போதித்தது? 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?', 'பெண்புத்தி பின்புத்தி' என்றுதானே சொன்னது. நான் பள்ளிக்கூடத்திற்கு வந்தபின்தான்

**பெண்மை வெல்க என்று கூத்திடுவோம்**

என்று பாரதி முழங்கியதையும்

**பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில்**
**மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே**

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முழங்கியதையும் அறிய முடிந்தது.

இன்று விஞ்ஞானிகளாக, கல்வியாளர்களாக, கவிஞர்களாக இளம் பெண்கள் கம்பீரமாக நடைபோடுவதற்கு நாடல்லவா கற்றுக் கொடுத்தது. ஊராட்சி மன்றங்களையும் சட்ட மன்றங்களையும் பார்த்த பின்தானே பெண்களுக்கான உரிமைகளைப் பெண்களே உணரத் தொடங்கினார்கள். எனவே, நடுவர் அவர்களே நாடுதான் நம்பிக்கையோடு இளைஞர்களை வழிநடத்துகிறது. எதிர்காலத்தை வளமாக்கத் துணைபுரிகிறது. எனவே, இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது நாடே! என்ற தீர்ப்பினை வழங்குமாறு கேட்டு நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.

**நடுவர்:** அன்புத்தோழி அமுதாவின் கருத்து மழையில் எல்லோருமே கரைந்து நெகிழ்ந்து போனோம். இரண்டு அணிகளும் மிகச் சிறப்பாகத் தங்கள் தரப்பு வாதங்களை முன் வைத்திருக்கின்றன.

இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது வீடா? நாடா? இந்தத் தலைப்பு ஆழமான கேள்வியை



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 211 23-10-2018 13:29:17

முன்வைக்கிறது. 'நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்' என்றார் பாவேந்தர் பாரதிதாசன். 'வீட்டிற்கோர் புத்தக சாலை வேண்டும்' என்று அறிஞர் அண்ணா கூறினார். எத்தனை பேர் அதைச் செய்தோம்? பிறகெப்படி வீடு பல்கலைக்கழகமாக மாறும்? வீடு என்பது இளைஞர்களின் குழந்தைப் பருவத்தை எப்படிக் கட்டமைக்கிறது! பெற்றோரையும் உறவினரையும் அறிமுகப்படுத்துகிறது! அமுதா சொன்னதைப்போல மரபார்ந்த பார்வையுடன் பெண்களுக்கான உரிமை உணர்வை வீடு மதிக்கிறதா?

பாச உணர்ச்சியை வளர்த்தெடுக்கிறது. ஆனால், பரந்து விரிந்த பகுத்தறிவை வீடு தருகிறதா? ஆனால், வீட்டைத் தாண்டி நாட்டுக்குள் வந்தால்தான் சங்ககாலப் புலவர் கணியன் பூங்குன்றனின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மேன்மையான பார்வையைப் பெறுகின்றோம். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோ,

விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
மானுட சமுத்திரம் நானென்று கூவு
புவியை நடத்து; பொதுவில் நடத்து!

என்று உலகத்தையே வீடாகக் காட்டுகிறார். வீடு என்பது நாட்டின் ஓர் அலகு மட்டுமே. நம் அனைத்து அறிவுத் தேவைகளையும் அது தந்துவிடுமா என்று நாம் சிந்திக்கவேண்டும். நாடு என்பது பன்முக ஆளுமை உடையது. நாடு, எத்தனை வகையான கல்விக் கூடங்களைத் தருகிறது? கல்வியில் எத்தனை வகையான படிப்புகள் இருக்கின்றன? நமக்கான மேற்படிப்பை எப்படித் தேர்வு செய்வது? எந்த வகையான வேலை வாய்ப்புக்குச் செல்வது? என்று இந்தத் தேடுதல்களுக்கான வாசல்களை இளைஞர்களுக்காகத் திறந்து வைத்திருக்கிறது.

ஆண் பெண் சமத்துவச் சிந்தனை, பேதங்களைக் கடந்த தோழமை, கல்வி சார்ந்த உயர்ந்த கருத்துகள் ஆகிய எல்லாவற்றையும் வழங்கி முழுமையான முன்னேற்றத்திற்குப் பெரிதும் வழிகாட்டுவது நாடே! நாடே! என்று எனது தீர்ப்பினைக் கூறி,

செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே – எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே!

என்று பாடிய மகாகவி பாரதியின் அடிகளைச் சிந்தனையில் ஏந்திப் பட்டிமன்றத்தை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!



**தெரியுமா?**

பட்டிமன்றம் ஒரு சுவையான விவாதக்களம். அது தமிழில் பழங்காலம் தொட்டே அறிமுகமான அறிவார்ந்த பேச்சுக்கலை வடிவம். வாழ்வியல் சிந்தனைகளை மக்கள் முன்பு வலிமையாக வைக்கும் வாதுரை அரங்கம். "பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்" என்று மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடுகின்றது.



**கற்பவை கற்றபின்...**

மனித வாழ்வை உயர்த்துவதற்குப் பெரிதும் தேவை பணமே! கல்வியே! என்பது பற்றி ஒரு சொற்போர் நிகழ்த்துக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 212 23-10-2018 13:29:17

இனிக்கும் இலக்கணம்

இயல் 8

# ஆக்கப்பெயர்கள்

J8PDZZ

உலகிலுள்ள அனைத்துப்பொருள்களும் பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்றன. முன்னோர்கள் சில பொருள்களுக்குக் காரணம் கருதியும் சில பொருள்களுக்குக் காரணமின்றியும் பெயர் வைத்தனர். இலை, மண், கல், நாற்காலி, காற்றாடி எனப் பெயர்களை நினைவில் கொண்டுவரும்போது இவற்றுள் காரணத்தோடு வரும் பெயர்களை உணர்ந்துகொள்ள முடிகிறது. காலப்போக்கில் பொருளின் மாற்றத்தால் அவை பயன்படுத்தப்படும் நிலைமைக்கேற்றவாறு காரணப்பெயர்கள் சிலநேரங்களில் இடுகுறிப்பெயர்களாகி விடுகின்றன.

மரத்தால் செய்யப்பட்டுப் பின்புறம் சாய்ந்துகொள்ளவும் கைகளை வைத்துக்கொள்ள வசதியாகவும் நான்கு கால்களைக் கொண்ட இருக்கைக்கு நாற்காலி எனக் காரணம் கருதிப் பெயர் வைத்தனர்.

ஆனால், இன்று நான்கு கால்கள் இல்லாத இருக்கை சிலவற்றையும் நாற்காலி என்றே அழைக்கிறோம். ஒருகாலத்தில் காரணம் கருதி வழங்கப்பட்ட ஒரு பொருளுக்கான பெயர் இன்று இடுகுறியாக வழங்கப்படுகிறது.

காலச் சூழலுக்கேற்றவாறு நம் பயன்பாட்டிற்கெனப் பல்வேறு பெயர்களைப் புதியதாக ஆக்கிக்கொள்கிறோம். அவை இடுகுறியாகவும் இருக்கலாம்; காரணமாகவும் இருக்கலாம். இவ்வாறு, புதியதாக ஆக்கப்படும் சொல் ஆக்கப்பெயர் என அழைக்கப்படுகின்றது. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பது பழமொழி. இதில் ஆத்திரம் கொண்ட ஒருவனைக் குறிப்பிட காரன் என்னும் விகுதி சேர்த்து ஆத்திரக்காரன் என்னும் சொல்லை உருவாக்குகிறோம்.

பெயர் அல்லது வினைச்சொற்களுடன் விகுதிகளைச் சேர்த்து ஆக்கப்படும் பெயர்ச்சொற்கள் ஆக்கப் பெயர்கள் (Derivative noun) எனப்படும். இவ்வாறு பெயர்ச்சொற்களை ஆக்கப் பயன்படும் விகுதிகளை ஆக்கப்பெயர் விகுதிகள் என்பர்.

**தமிழில் ஆக்கப்பெயர் விகுதிகள்**

காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி, தாரர், மானம்

ஆக்கப் பெயர்களில் விகுதிகளே தனிச்சிறப்பு உடையன. தமிழ்ச்சொற்களோடு இவ்வகையான விகுதிகள் சேரும்போது எண்ணற்ற புதுச்சொற்கள் உருவாகித் தமிழின் சொற்களஞ்சியம் விரிவடைகின்றது. தமிழ்மொழியில் ஆக்கப்பெயர்கள் பேச்சு வழக்கிலேயே மிகுதியாக உள்ளன.

மலர்ந்த மலரைக்
கண்டு வாடினாள்
பூக்காரி

இத்துளிப்பாவில் பூ விற்கும் பெண், பூக்காரி என்று அழைக்கப்படுகிறார். மேலும், நெசவு செய்பவரை நெசவாளி/நெசவாளர் என்றும் உழைப்பவரை உழைப்பாளி/உழைப்பாளர் என்றும் அழைக்கப்படுகிற ஆக்கப்பெயர்கள் இன்றும் வழக்கில் உள்ளன.



**தெரியுமா?**

வண்டிக்காரன், சினிமாக்காரன், மாட்டுக்காரன், வீட்டுக்காரன், ஆட்டோக்காரன் போன்ற சொற்கள் எல்லாம் காரன் விகுதி சேர்க்கப்பட்ட ஆக்கப்பெயர்கள் என்பதை அறிவீர்களா?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 213 23-10-2018 13:29:17

அறிவியல், திறமைசாலி, கோழைத்தனம், சமத்துவம், பெண்ணியம், பேச்சாளன், ஏற்றுமதி முதலான சொற்கள் ஆக்கப்பெயர்ச்சொற்களே என்பதை உணரவேண்டும். இச்சொற்களில் இயல், சாலி, தனம், துவம், இயம், ஆளன், மதி ஆகிய விகுதிகள் சேர்ந்து ஆக்கப் பெயராக்கப்பட்டுள்ளன.

**கண்டறிக:** குரங்காட்டி, வண்டியோட்டி, பழந்தின்னி, வாயாடி, குடித்தனம், நீதிமான் இச்சொற்களைப் பிரித்து ஆக்கப்பெயர் விகுதிகளைக் கண்டறிக.

ஆக்கப்பெயர்ச்சொற்களை ஈற்றில் நிற்கும் விகுதிகளைக் கொண்டு மூவகையாகப் பிரிக்கலாம். அவை

1. பெயருடன் சேரும் விகுதிகள்
2. வினையுடனும் எச்சத்துடனும் சேரும் விகுதிகள்
3. பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்

### 1. பெயருடன் சேரும் விகுதிகள் (காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி, தாரர்)

| பெயர் + விகுதி | = ஆக்கப்பெயர் |
|---|---|
| வண்டி + காரன் | = வண்டிக்காரன் |
| சமையல் + காரர் | = சமையல்காரர் |
| வேலை + காரி | = வேலைக்காரி |
| பணி + ஆள் | = பணியாள் |
| ஆணை + ஆளர் | = ஆணையாளர் |
| குற்றம் + ஆளி | = குற்றவாளி |
| விண்ணப்பம் + தாரர் | = விண்ணப்பதாரர் |

காரன், காரி, காரர் ஆகிய ஆக்கப்பெயர் விகுதிகள் உடைமை, உரிமை, உறவு அல்லது தொடர்பு, தொழில் அல்லது ஆளுதல் என்னும் நான்கு பொருள்களில் வரும்.

| | | |
|---|---|---|
| வீடு + காரன் – | வீட்டுக்காரன் – | உடைமை |
| தமிழ்நாடு + காரி– | தமிழ்நாட்டுக்காரி– | உரிமை |
| உறவு + காரர்– | உறவுக்காரர்– | உறவு |
| தோட்டம் + காரர்– | தோட்டக்காரர்– | தொழில் |

தொழிற்பெயர் விகுதிகளுடன் 'ஆளர்' என்னும் ஆக்கப்பெயர் விகுதி சேர்ந்து சொற்கள் உருவாகின்றன.

| தொழிற்பெயர் விகுதி | தொழிற்பெயர் | ஆக்கப்பெயர் |
|---|---|---|
| சி | ஆட்சி | ஆட்சியாளர் |
| அல் | செயல் | செயலாளர் |
| தி | செய்தி | செய்தியாளர் |
| மதி | இறக்குமதி | இறக்குமதியாளர் |
| வை | பார்வை | பார்வையாளர் |
| வு | தேர்வு | தேர்வாளர் |
| பு | அழைப்பு | அழைப்பாளர் |

'ஆளர்' 'ஆளி' முதலான விகுதிகள் இருபாற்பொதுப்பெயர்களை உருவாக்கத் துணை நிற்கின்றன.

| ஆளர் | | | | |
|---|---|---|---|---|
| உதவி | + | ஆளர் | = | உதவியாளர் |
| காப்பு | + | ஆளர் | = | காப்பாளர் |
| மேல் | + | ஆளர் | = | மேலாளர் |
| கண்காணிப்பு | + | ஆளர் | = | கண்காணிப்பாளர் |
| தயாரிப்பு | + | ஆளர் | = | தயாரிப்பாளர் |

| ஆளி | | | | |
|---|---|---|---|---|
| நெசவு | + | ஆளி | = | நெசவாளி |
| முதல் | + | ஆளி | = | முதலாளி |
| தொழில் | + | ஆளி | = | தொழிலாளி |
| பயன் | + | ஆளி | = | பயனாளி |
| கூட்டு | + | ஆளி | = | கூட்டாளி |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 214 23-10-2018 13:29:17

### 2. வினையுடனும் எச்சத்துடனும் சேரும் விகுதிகள்

வினையடியுடன் 'மானம்' என்னும் விகுதி சேர்ந்து புதிய சொற்கள் உருவாகின்றன.

| வினை | | விகுதி | | ஆக்கப்பெயர் |
|---|---|---|---|---|
| அடை | + | மானம் | = | அடைமானம் |
| கட்டு | + | மானம் | = | கட்டுமானம் |
| தேய் | + | மானம் | = | தேய்மானம் |

### 3. பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்

பெயருடனும் சேர்ந்து வரும் விகுதிகள்.

| பெயர் | விகுதி | ஆக்கப்பெயர் |
|---|---|---|
| அச்சு | அகம் | அச்சகம் |

வினையுடனும் சேர்ந்து வரும் விகுதிகள்

| வினை | விகுதி | ஆக்கப்பெயர் |
|---|---|---|
| பயில் | அகம் | பயிலகம் |

இவ்வாறு, தமிழில் எண்ணற்ற ஆக்கப் பெயர்ச்சொற்கள் விரவிக் கிடக்கின்றன. இவ்வகையான சொற்கள் நம் மொழிக்குப் புதிய புதிய சொற்களை உருவாக்குவதோடு நில்லாமல், மொழி காலந்தோறும் வளர்வதற்கும் துணைநிற்கின்றன.

**அறிக :**

இன்று வழக்கிலுள்ள ஆக்கப்பெயர்களைப் பட்டியலிடுக. அவை எவ்வெவ்விகுதி கொண்டு ஆக்கப்பட்டுள்ளன என்பதை ஆய்க.



**கற்பவை கற்றபின்...**

1. நீங்கள் வாழும் சூழலில் பயன்படுத்தப்படும் ஆக்கப்பெயர்களைப் பட்டியலிடுக.
2. படிப்பவர், படிப்பாளி இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை ஆராய்க.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

#### பயிற்சி 1

கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆக்கப் பெயர்களை எடுத்தெழுதுக :

எங்கள் பள்ளியில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவிற்குக் காவல்துறை ஆணையாளர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர், "மாணவர்களாகிய நீங்கள் படிப்பகங்களைப் பயன்படுத்தி விண்ணியல், மண்ணியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்கவேண்டும். நல்ல நண்பர்களைக் கூட்டாளி ஆக்கிக்கொண்டு உதவியாள் இல்லாமலே ஒரு நிறுவனத்தின் மேலாளராகவோ முதலாளியாகவோ ஆகலாம்" என்று கூறி மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

#### பயிற்சி 2

அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக :

1. வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி) – ________
2. அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் (அகம்) – ________
3. வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) – ________
4. வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன் ? (தாரி) – ________
5. அளந்து அளந்து கொட்டிடுவான்; அகம் மகிழத் தந்திடுவான் (ஆள்) – ________



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 215 23-10-2018 13:29:17

# நம்மை அளப்போம்

J8T1NH

## பலவுள் தெரிக

1. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

   அ) மக்கள் அலை   ஆ) உயிர் அலை   இ) மக்கள் வெள்ளம்   ஈ) மக்கள் அவை

2. கூற்று: எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.

   காரணம்: சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.

   அ) கூற்று சரி; காரணம் தவறு   ஆ) இரண்டும் சரி

   இ) இரண்டிற்கும் தொடர்பில்லை   ஈ) கூற்று தவறு; காரணம் சரி

3. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் – யார் யாரிடம் கூறியது?

   அ) அமைச்சர் கவிஞரிடம்   ஆ) மன்னர் அமைச்சரிடம்

   இ) அமைச்சர் மன்னரிடம்   ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

4. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் – இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்

   அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில்   ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்

   இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில்   ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

5. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.

   அ) காவலாளி   ஆ) மேலாளர்   இ) உதவியாள்   ஈ) ஆசிரியர்

## குறு வினா

1. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
2. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை ?
3. அலைகடல், புதுக்கியவர் – இலக்கணக் குறிப்புத் தருக.
4. செந்துறைப் பாடாண்பாட்டு – துறை விளக்கம் எழுதுக.

## சிறு வினா

1. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
2. உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் – இடம் சுட்டிப் பொருள்விளக்கம் தருக.
3. பெருங்காடு, உழுதுழுது – பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.
4. சேரநாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.
5. ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன – ஏன் ?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_197-220.indd 216   23-10-2018 13:29:18

### நெடு வினா

1. சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

2. பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

3. சிந்தனைப்பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்



மயிலை சீனி. வேங்கடசாமி

(1900 – 1980)

தமிழ் மொழியில் மறந்ததும் மறைந்ததுமான சிறந்த செய்திகள், அளவுகடந்து உள்ளன. அவற்றை வெளிக்கொணர்ந்து, வீரிய உணர்வுடன் வெளியிட்டவர் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி ஆவார். அவர் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் புதிய புதிய செய்திகளைப் புலப்படுத்திய விந்தைப் படைப்புகள். இராமேசுவரத் தீவு, உறையூர் அழிந்த வரலாறு, மறைந்துபோன மருங்காப்பட்டினம் போன்ற தனித்தன்மைகொண்ட அவர்தம் கட்டுரைகள் வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சின. கொங்கு நாட்டு வரலாறு, துளுவ நாட்டு வரலாறு, சேரன் செங்குட்டுவன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் முதலிய நூல்கள் அவர் நமக்கு வழங்கியுள்ள வரலாற்றுச் செல்வங்கள். அவருடைய 'களப்பிரர் காலத் தமிழகம்' என்னும் ஆய்வு நூல், இருண்ட காலம் என்று ஆய்வாளர்களால் வருணிக்கப்பட்ட களப்பிரர் காலத்திற்கு ஒளியூட்டி, வரலாற்றுத் தடத்தைச் செப்பனிட்டது.

நகராட்சிப் பள்ளி ஆசிரியராக நெடுங்காலம் பணியாற்றிய அவர் தன்னுணர்வால், உறுதியான உழைப்பால், தமிழ்ப்பற்றால் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார். ஆங்கிலம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். சிறந்த வரலாற்றாசிரியர், நடுநிலை பிறழாத ஆய்வாளர், மொழியியல் அறிஞர், இலக்கியத் திறனாய்வாளர் என்றெல்லாம் போற்றப்பட்ட பன்முகச் சிறப்புக் கொண்டவர். அவருக்கு மதுரைப் பல்கலைக்கழகம் 1980ஆம் ஆண்டு, 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் பட்டமளித்துப் பாராட்டியது. கிறித்துவமும் தமிழும், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், மறைந்து போன தமிழ்நூல்கள் போன்ற பல நூல்களால் தமிழ் ஆய்வு வரலாற்றில் மயிலை சீனி. வேங்கடசாமி அழியாச் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

1. மறந்ததும் மறைந்ததும் – இதுபோன்ற இரண்டு தொடர்களை உருவாக்குக.

   (எ.கா.) படித்ததும் படைத்ததும்

2. <u>அழிந்த</u> வரலாறு, <u>புதிய</u> வெளிச்சம் – அடிக்கோடிட்ட சொற்களின் எச்ச வகைகளை எழுதுக.

3. அழியாச் சிறப்பிடம் – இலக்கணக்குறிப்புத் தருக.

4. முதலிய, முதலான – பொருளறிந்து சொற்றொடர் அமைக்க.

5. பத்தியில் உள்ள உயர்வு சிறப்பு உம்மையைக் கண்டு எழுதுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 217 23-10-2018 13:29:18

**தமிழாக்கம் தருக.**

Balu : Hi, Good evening.

Velu : Hi Balu, Good evening.

Balu : Yesterday you were watching the Republic day function the whole day.

Velu : Yes, I was touched by one award ceremony.

Balu : Which award?

Velu : Param vir Chakra award, highest award for army personnel.

Balu : Why were you touched?

Velu: Most of the awards were received by the wives of soldiers posthumously.

Balu : Why? What do you mean by posthumous?

Velu : it means 'after death'. Many soldiers had laid down their lives protecting the border of our Motherland. They have sacrificed their lives to save our Country. So that we can be free and safe.

**மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

சான்று: எதிர்நீச்சல்

வாழ்க்கையில் எத்தனை தோல்விகள் வந்தாலும் அவற்றைக் கடந்து எதிர்நீச்சல் போட்டு வெற்றி பெறவேண்டும்.

சொந்தக்காலில் நிற்றல்

தாளம் போடுதல்

மதில்மேல்பூனை

நிறைகுடம்

கைதூக்கிவிடுதல்

கண்ணாயிருத்தல்

அவசரக்குடுக்கை

முதலைக்கண்ணீர்

கானல்நீர்.

**வரைபடம் கொண்டு விவரிக்க**

நீங்கள் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள். வழி தெரியாத ஒருவர், உங்களிடம் வந்து நகலகத்திற்கு வழி கேட்கிறார். கீழ்க்காணும் வரைபடத்தைக் கொண்டு, அப்புதியவருக்கு வழிகாட்டுங்கள்.....






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_197-220.indd 218 23-10-2018 13:29:18

### இலக்கியநயம் பாராட்டுக.

*சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்*
*சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?*
*பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்*
*பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?*
*இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்*
*எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்*
*நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட*
*நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.*

– நாமக்கல் கவிஞர்.

## மொழியோடு விளையாடு

### சொல்லெடுத்துத் தொடர் அமைக்க.

*கீழுள்ள கட்டத்தினுள் நுழைந்து சொற்களை எடுத்தும் தேவையான சொற்களைச் சேர்த்தும் தொடரமைக்க. (அடைபட்ட பகுதியில் உள்ள சொற்களைத் தவிர்க்கவும்)*

*(எ–கா.) மாணவர்கள் வகுப்பறையினுள் நுண்கலைகளையும் கற்க வேண்டும்.*




### செய்து கற்போம்

நல்ல சிந்தனைகளை விதைத்த தலைவர்கள் பற்றிய செய்திகளைத் திரட்டி ஒப்படைவு உருவாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 219 23-10-2018 13:29:18

படித்துப் பார்த்துப் படைக்க.

| | | |
|---|---|---|
| *பத்தாவது தடவையாக*<br>*விழுந்தவனுக்கு*<br>*முத்தமிட்டுச் சொன்னது பூமி*<br>*'ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ!'*<br>– ஈரோடு தமிழன்பன் | *எப்போதும் மத்தாப்பு*<br>*கொளுத்தி விளையாடுகிறது*<br>*மலையருவி*<br>– கழனியூரன் | ____________<br>____________<br>____________ |

– ஹைக்கூ என்பதற்குத் தமிழில் "துளிப்பா" என்று பொருளுண்டு தெரியுமா?

– கவிதைகளுக்குப் பொருத்தமாகத் தலைப்பிடுக.



## நிற்க அதற்குத் தக

உம்முடைய பொறுப்பை உணர்ந்து கட்டங்களை நிறைவு செய்க.

| அடையாளம் | பெருமிதம் |
|---|---|
| இந்தியன் | ஒருமைப்பாட்டுணர்வுடன் சமூகக் கூட்டமைப்பில் இணைந்து வாழ்கிறேன். |
| தமிழன் | |
| மாணவன் | |
| மகன் / மகள் | |
| சகோதரன் / சகோதரி | |
| தோழன் / தோழி | |

## கலைச்சொல் அறிவோம்

**உத்திகள்** – Strategies **சமத்துவம்** – Equality **தொழிற்சங்கம்** – Trade Union

**பட்டிமன்றம்** – Debate **பன்முக ஆளுமை** – Multiple Personality **புனைபெயர்** – Pseudonym

### அறிவை விரிவு செய்

ஜீவா – வாழ்க்கை வரலாறு – கே. பால தண்டாயுதம்.

சொல்லாக்கம் – இ. மறைமலை

### இணையத்தில் காண்க

http://www.bdu.ac.in/bharathidasan/ – பாரதிதாசன் படைப்புகள் முழுமையும்.

சுந்தர ராமசாமியின் சிறுகதைகள்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_197-220.indd 220 23-10-2018 13:29:18

இயல் 9

# மெய்ப்பொருள் காண்பது அறிவு



## கற்றல் நோக்கங்கள்

- சித்தர்களின் பங்களிப்பால் இலக்கியங்களில் ஏற்பட்டுள்ள சிந்தனைச்செறிவை உணர்ந்தும் அறிந்தும் பின்பற்றுதல்
- ஹைக்கூவிலும் கவிதையின் புதிய வடிவங்களிலும் எண்ணங்களை வெளிப்படுத்த முனைதல்
- இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறத்தையும் தத்துவக்கருத்துகளையும் கண்டுணர்தல்
- நிறுத்தக்குறிகளைத் தகுந்த இடங்களில் முறையாகப் பயன்படுத்துதல்

## பாடப் பகுதி

சித்தர் உலகம்

ஜப்பானிய ஹைக்கூ

காவியம் – பிரமிள்

தொலைந்து போனவர்கள் – அப்துல் ரகுமான்

வில்லி பாரதம் – வில்லிபுத்தூரார்

காஞ்சனை முன்னுரை – புதுமைப்பித்தன்

நிறுத்தக்குறிகள்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 221 23-10-2018 13:42:24

உரைநடை உலகம்

இயல் 9

# சித்தர் உலகம்

J8YA2H




சித்தர்கள் சமயங்களில் இருக்கும் தேவையற்ற சடங்குகளை விரும்பாதவர்களாக அறியப்படுகின்றனர். அதே வேளையில் சித்தர்கள் மனித வாழ்வியல் குறித்த மெய்யியல் கோட்பாடுகளை முன்வைத்துள்ளனர். இயல்பான மனிதநேயம் கொண்டவர்களான சித்தர்கள் குறித்து இக்கட்டுரை பேசுகிறது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர்களுக்கென்று சிறப்பிடம் உண்டு. அவர்கள், வாழும் கலையை அறிந்தவர்கள்; விழிப்பு நிலையை உணர்ந்தவர்கள்; சித்தத்தை வென்று 'சித்து' என்னும் பேரறிவினைப் பெற்றவர்கள். தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் காணப்படும் 'நிறைமொழி மாந்தர்' என்னும் சொல்லுக்கும், சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில் இடம்பெறும் 'சித்தன்' என்னும் சொல்லுக்கும் உரியவர்கள். அறிவு வேறு, ஞானம் வேறு என்று உலகிற்கு விளக்கிய சித்தர்கள், யோக மார்க்கத்தையும் ஞான மார்க்கத்தையும் தங்களின் உயர்நெறிகளாகக் கொண்டவர்கள். அதனால்தான், அவர்கள் 'பிறப்பறுத்தவர்கள்' என்று அழைக்கப்பட்டனர்.

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா. (அகத்திய ஞானம்)

## 'சித்தர்கள்' யார்?

'சித்தர்கள்' என்றால் நிறைவடைந்தவர் என்பது பொருள். தமிழில் 'சித்து' என்னும் சொல் மனம், கருத்து, ஆன்மா என்ற பொருள்களைக் கொண்டது. தமிழ்ப் பேரகராதியின்படி சித்தி என்ற சொல் மெய்யறிதல், வெற்றி, காரியம் கைகூடல் என்று பல பொருள்படும். அவர்களை, எண்வகைச் சித்திகளைக் கைவரப் பெற்றவர்கள் என்றும் வரையறுக்கலாம். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதே சித்தர் கொள்கை.

## சித்தர்கள் – காலமும் எண்ணிக்கையும்

சித்தர்களின் ஆதி சித்தராகக் கருதப்படுபவர் திருமூலர். இவரது காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு அல்லது 6ஆம் நூற்றாண்டு என்பர். சித்தர்களில் கலகக்காரர் என்று கருதப்படும் சிவவாக்கியரின் காலம் 9ஆம் நூற்றாண்டு. மற்றவர்கள் கி.பி. 14ஆம் நூற்றாண்டு முதல் வாழ்ந்தவர்கள் என்று கூறுவர். சித்தர் காலத்தைப் போலவே சித்தர்களின் எண்ணிக்கையும் ஆய்வுக்குரியதாகவே உள்ளது. சித்தர் தொகை குறித்த பட்டியல்கள் ஒவ்வொன்றும் மாறுபடுகின்றன.

பதினெண்சித்தர்கள் என்ற வழக்கில் 18 என்பது எண்ணிக்கையைக் குறிக்கவில்லை, மாறாக அவர்கள் பெற்ற 18 பேறுகளைக் குறிக்கிறது என்னும் கருத்தும் உண்டு.

எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தார் அப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்
– பாரதியார்

## கடவுட்கொள்கை

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' (திருமூலர்) என்பது திருமூலரின்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

கடவுட்கொள்கை. இதனையே பட்டினத்தாரும் "ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு" என்று பாடுகிறார். மனிதர்கள் கடவுளின் பெயரால் கருத்து வேறுபாடு கொண்டு தமக்குள் கலகம் விளைவித்துக் கொள்வதில் சித்தர்களுக்கு உடன்பாடு இல்லை. "மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்", "நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்" என்பன போன்ற பாடலடிகள் இதை மெய்ப்பிக்கின்றன.

## தன்னையறியும் ஞானம்

தமிழ்ச் சித்தர் மெய்யுணர்வு, ஆன்மாவை உள்ளுணர்வினால் அறிவது. ஞானத்தினால் மட்டுமே முக்தியை அடைய முடியும். ஞானம் அல்லாத வேறு வழிகள் முக்தியை அளிக்காது. "ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை" (பா. எண் " 1467) என்கிறது திருமந்திரம்.

சித்தர்களைப் பொறுத்த அளவில் வீடுபேறு என்பதேகூடத் 'தன்னை அறிதல்'தான். தன்னை அறிந்தநிலையில் ஆன்மா தானே தனக்குத் தலைவனாய் நிற்கும் என்பது திருமூலர் வாக்கு. தன்னை அறிதல் என்பது தன் உண்மை நிலையை அறிதல். தன்னை அறிவதற்கு 'நான்' என்னும் அகங்காரம் அழிய வேண்டும்.

...... நாடொணாத அமிர்தமுண்டு நான் அழிந்து நின்ற நாள்.

– சிவவாக்கியர்

## சமூகவுணர்வு

சித்தர் பாடல்கள் என்றதும் முதலில் நம் நினைவுக்கு வருவது அவர்களுடைய ஆழ்ந்த சமூகவுணர்வே ஆகும். அவர்கள் சமூகத்தில் நிலவிய பல்வேறு கண்மூடிப் பழக்கவழக்கங்களையும் மூட நம்பிக்கைகளையும் பொருளற்ற செயல்களையும் போலிச் சடங்குகளையும் நெஞ்சுரத்தோடும் நேர்மைத் திறத்தோடும் கடுமையாகச் சாடியவர்கள். அதனால்தான், அறிஞர் க. கைலாசபதி, சித்தர்களைக் 'கிளர்ச்சியாளர்கள்' என்று கூறுகின்றார்.

இன்றைய சமூகத்தை மிகவும் அல்லல்படுத்தும் சாதிக்கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் பாடியவர்கள். "சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ?" என்று சிவவாக்கியரும் "சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்" என்று பாம்பாட்டிச் சித்தரும் பாடியுள்ளனர்.

ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே
சாதிவகை இல்லாமல் சஞ்சரிப்பது எக்காலம்

– பத்திரகிரியார்

## சித்தர்களும் இரசவாதமும்

சித்தர்களை இரசவாதிகள் என்று கருதும் போக்கு, தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகிறது. சித்தர்கள் தங்களின் யோக சாதனையை உள்ளார்ந்த ஆன்மீக இரசவாதமென்றே கருதினார்கள்.

### அட்டமா சித்திகள்

| | |
|---|---|
| அணிமா | அணுவைப்போலச் சிறுத்து நிற்கும் ஆற்றல் |
| மகிமா | வரையறையற்று விரிந்து படரும் ஆற்றல் |
| லகிமா | காற்றில் மிதக்கும் ஆற்றல் |
| கரிமா | எங்கும் பரந்திருக்கும் ஆற்றல் |
| பிராகாமியம் | இயற்கைத் தடைகளைக் கடக்கும் ஆற்றல் |
| ஈசத்துவம் | படைக்கவும் அடக்கவும் கொண்ட ஆற்றல் |
| வசித்வம் | உலகப் படைப்புகளை எல்லாம் அடக்கி ஆளும் ஆற்றல் |
| காமாவசாயித்வம் | விரும்பியதை முடிக்கும் ஆற்றல். |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 223 23-10-2018 13:42:24

இரசவாதி எவ்வாறு தாழ்ந்த உலோகத்தைத் தங்கமாக மாற்றுகிறானோ அவ்வாறே சித்தரும் தம்முடைய உடலையும் உள்ளத்தையும் சார்ந்து நிற்கும் உயிரை எந்தச் சார்புமற்ற உயர்ந்த ஆன்ம நிலைக்கு மாற்றுகிறார். எனவே, ஒவ்வொரு சித்தரும் ஓர் ஆன்மீக இரசவாதியாகிறார்.

### காயமே இது மெய்யடா!

சித்தர்களிலே சிலர் உடம்பை அவ்வளவு மேன்மையாகக் கருதியதில்லை. ஆனால், பெரும்பான்மையான சித்தர்கள் அதனைப் பெருமைப்படுத்தியே பேசுகிறார்கள். மனித உடலுக்கு ஓர் உள்ளார்ந்த தகவு இருப்பதாகச் சித்தர்களின் பாடல்கள்வழிப் புலனாகிறது. திருமூலர் உடம்பின் இன்றியமையாமையைப் பல பாடல்களில் வலியுறுத்துகின்றார். "உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே", "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்பன போன்ற புகழ் பெற்ற பாடலடிகளைத் திருமந்திரத்தில் பரக்கக் காணலாம்.

நந்தவ னத்திலோர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி – அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி.
(கடுவெளிச் சித்தர்)

### சித்தர் மருத்துவம்

சித்தர்கள் இயற்கையின் இரகசியங்களை அறிந்தவர்கள். அண்டத்தில் உள்ளது பிண்டம்; பிண்டத்தில் உள்ளது அண்டம் என்பது சித்தர் மொழியாகும். அவர்களே, சித்த மருத்துவம் என்ற தனிப்பிரிவு தோன்றவும் காரணமானவர்கள்.

நாடிகளைப் பிடித்து நோய் அறியும் திறன்பெற்ற அவர்கள் மருந்து தயாரிக்கும் வேதியியல் கூறுகளையும் அறிந்திருந்தனர். சித்தர்கள் மரம், செடி, கொடி பற்றிய அறிவும் அவற்றின் இலை, பூ, காய், கனி என அனைத்திலும் நோய் தீர்க்கும் மருந்துகளை உருவாக்கும் அறிவும் உடையவர்களாக இருந்தனர்.

### சித்தர்களின் குழூஉக்குறி

தமிழ்ச் சித்தர்களின் பாடல்கள் எளிமையாக இருப்பினும் மறைபொருள் கூற்றுகளாக, குழூஉக்குறிகளாகவே எழுதப்பட்டுள்ளன. அவை, யோகம், தந்திரம், மருத்துவம் என்ற மூன்று கூறுகளையும் அறிந்தவர்களால் மட்டுமே பொருள் காணத்தக்கவையாக அமைந்திருக்கின்றன.

'மாங்காய்ப்பால்' எனும் சொல், குண்டலினி சக்தியை உச்சியில் ஏற்றி அமுதம் உண்ணும் நிலையைக் கூறும். இவ்வாறு குறியீட்டுச் சொற்கள் கொண்ட பாடல்கள் சித்தர் இலக்கியங்களில் குவிந்திருக்கக் காணலாம்.

*தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே! – ஒரு*
*தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே!*
*நாதர்முடி மேலிருக்கும் வெண்ணிலாவே! – அங்கே*
*நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே!*
( வள்ளலார்)

சுருங்கக்கூறின் சித்தர்கள் எதைப் பாடினாலும் அதன் அடிப்படையையே ஆய்ந்து சிந்தித்துப் பாடியுள்ளனர். ஆரவாரத்துக்கோ மேலோட்டமான பார்வைக்கோ அவர்களின் பாடல்களில் மருந்துக்கும் இடமில்லை. மருத்துவம், மந்திரம், இரசவாதம், யோகம், ஞானம் போன்ற பல்துறைகளில் சித்தர்கள் பாடிய பாடல்கள் தமிழ்மொழியின் அறிவுப் பெட்டகம் எனலாம்.



கற்பவை கற்றபின்...

வள்ளலார், தாயுமானவர், பாரதியார் என்னும் முப்பெரும் ஞானியரின் தத்துவக் கருத்துகளைத் திரட்டிக் கட்டுரையாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 224 23-10-2018 13:42:24

இயல் 9

# ஜப்பானிய ஹைக்கூ



## நுழையும்முன்

ஓவியத்துக்கு ஒப்பானது என்று ஹைக்கூ போற்றப்படுகின்றது. இறுகியிருக்கும் மலர் மொட்டின் மெல்லிய இதழ்களைக் கதிரவனும் மழையும் எவ்வாறு விரிய வைக்கின்றனவோ அவ்வாறு, வாய் திறந்து பேசாத ஓவியமென நின்று காட்சியின் பொருளை ஹைக்கூ வெளிக்கொணரும். அது ஜென் உரைகளின் இலக்கியப் பாங்கினைத் தன்னுள் கொண்டதாகும்.

1. *விழுந்த மலர்*
   *கிளைக்குத் திரும்புகிறது*
   *அடடா... வண்ணத்துப்பூச்சி.*

   *– மோரிடாகே*

- ஓர் அழகு போனாலும் மற்றொரு அழகு, அதன் இடத்தை நிரப்பும் என்பது இதன் உட்கருத்து.



2. *பட்டுப்போன மரக்கிளை,*
   *அமர்ந்து ஓய்வெடுக்கும் காகம்;*
   *இலையுதிர் கால மாலை.*

   *– பாஷோ*

- தனிமையும் அமைதியும் இக்கவிதையின் உட்கருத்து.



3. *பெட்டிக்கு வந்த பின்*
   *எல்லாக் காய்களும் சமம்தான்*
   *சதுரங்கக் காய்கள்.*

   *– இஸ்ஸா*

- சதுரங்க விளையாட்டின்போது வெவ்வேறு அதிகாரங்களைப் பெறும் காய்கள் பெட்டிக்குள் வந்தபின் சமமாகின்றன. மனிதர் நிலையும் அத்தன்மையதே.

### கற்பவை கற்றபின்...

1. இயற்கை சார்ந்த ஹைக்கூ கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படிக்க.
2. மழை என்னும் தலைப்பில் கவிதையொன்றை எழுதுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 225 23-10-2018 13:42:25

கவிதைப்பேழை

# இயல் 9

## காவியம்




இறகுகளின் தொகுதியைச் சிறகு என்பர். சிறகிலிருந்து பிரிந்த இறகு, நிலத்துக்கும் வானுக்கும் இடைப்பட்ட பகுதியில் நிகழும் காற்றின் தீராத தழுவல்களால் மண்ணில் வீழாது தன் வாழ்வை எழுதுகிறது. வாழ்வு என்பது காவியத்துக்கான பொதுவான பாடுபொருள். அதன் இடையறாத இருப்பில் வாழ்வு நிரந்தரமாகின்றது.

*சிறகிலிருந்து பிரிந்த*
*இறகு ஒன்று*
*காற்றின் தீராத பக்கங்களில்*
*ஒரு பறவையின் வாழ்வை*
*எழுதிச் செல்கிறது.**

*– பிரமிள்*



### நூல்வெளி

பிரமிள் என்ற பெயரில் எழுதிய சிவராமலிங்கம், இலங்கையில் பிறந்தவர். இவர் பானுசந்திரன், அரூப் சிவராம், தருமு சிவராம் போன்ற பல புனைபெயர்களில் எழுதியவர். புதுக்கவிதை, விமர்சனம், சிறுகதை, நாடகம், மொழியாக்கம் என விரிந்த தளத்தில் இயங்கியவர். ஓவியம், சிற்பம் ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய கவிதைகள் முழுமையாகப் பிரமிள் கவிதைகள் என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. லங்காபுரி ராஜா உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும் நக்ஷத்திரவாசி என்னும் நாடகமும் வெயிலும் நிழலும் உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.

### கற்பவை கற்றபின்...

1. பிரமிளின் கவிதைத் தொகுப்பிலிருந்து உங்களுக்குப் பிடித்த கவிதையை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
2. பறவை பற்றி எழுதப்பட்ட கவிதைகள் சிலவற்றைத் தொகுத்துக் கையேடாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 226 23-10-2018 13:42:25

கவிதைப்பேழை

இயல் 9

## தொலைந்து போனவர்கள்

J9BSS7

### நுழையும்முன்

மானுட சமுதாயத்தின் விழிகள் ஒளியிழந்து கிடப்பதைத் தம் கவிதையால் உணர்த்தும் கவிஞர், அவ்விழிகளுக்கு ஒளியூட்ட விழைகிறார். நடக்காததை நடந்ததாகக் கருதிக்கொண்டு மாயையில் வாழும் மக்கள், ஒளியில் உண்மையைத் தேடும் தத்துவம் இக்கவிதை.

*விடிந்ததென்பாய் நீ அனுதினமும் – வான்*
*வெளுப்பது உனது விடியலில்லை*
*முடிந்ததென்பாய் ஒரு காரியத்தை – இங்கு*
*முடிதல் என்பது எதற்குமில்லை.*

*கற்றேன் என்பாய் கற்றாயா? – வெறும்*
*காகிதம் தின்பது கல்வியில்லை*
*பெற்றேன் என்பாய் எதைப்பெற்றாய்? – வெறும்*
*பிள்ளைகள் பெறுவது பெறுவதல்ல.*

*குளித்தேன் என்பாய் யுகயுகமாய் – நீ*
*கொண்ட அழுக்கோ போகவில்லை*
*அளித்தேன் என்பாய் உண்மையிலே – நீ*
*அளித்த தெதுவும் உனதல்ல.*

*உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் – வெறும்*
*உடலுக் கணிவது உடையல்ல*
*விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் – ஒரு*
*வினாவாய் நீயே நிற்கின்றாய்.**

*தின்றேன் என்பாய் அணுஅணுவாய் – உனைத்*
*தின்னும் பசிகளுக் கிரையாவாய்*
*வென்றேன் என்பர் மனிதரெல்லாம் – பெறும்*
*வெற்றியிலே தான் தோற்கின்றார்.**

*'நான்' என்பாய் அது நீயில்லை – வெறும்*
*நாடக வசனம் பேசுகிறாய்*
*ஏன்? என்பாய் இது கேள்வியில்லை – அந்த*
*ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.**

*– அப்துல் ரகுமான்*

பா வகை: சிந்து





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 227 23-10-2018 13:42:26

*ஆப்கானிஸ்தானில் 1207இல் பிறந்த மௌலானா ரூமி ஆன்ம ஞானியாக மாறி சூஃபி பிரிவைத் தழுவினார். அவருடைய மஸ்னவி என்ற உலகப்புகழ் பெற்ற பாரசீக ஞான காவியம் குறிப்பிடத்தக்கது. அப்துல் ரகுமான் இது பற்றி எழுதியிருக்கிறார். புல்லாங்குழலை ஆன்மாவாகக் குறியீடு செய்து கவிதை படைத்திருக்கிறார் ரூமி.*

என்னை
மூங்கிற்காட்டிலிருந்து
வெட்டி வீழ்த்திப்
பிரித்ததற்காக
நான் எழுப்பும்
கூக்குரல் கேட்டு
ஆடவர் பெண்டிர் யாவரும்
அழுது புலம்புகின்றனர்.

*இதை, "தீய குணங்கள் என்ற கறைகள் படியாத தூய உலகம் அது. அப்போது ஆன்மா இறைத்தரிசனம் என்ற பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது. இத்தகைய நிலையிலிருந்த ஆன்மாவைப் போர், பொறாமை, பூசல், அகந்தை, கள்ளம், கபடம், பேராசை, சினம், காமம் நிறைந்த சடவுலகுக்கு அனுப்பினால் அது அழாமல் என்ன செய்யும்?"*

*என ரகுமான் விளக்குகிறார்.*

## இலக்கணக் குறிப்பு

கற்றேன் – தன்மை ஒருமை வினைமுற்று; உடை அணிந்தேன் – இரண்டாம் வேற்றுமைத்தொகை; உரைத்தாய் – முன்னிலை ஒருமை வினைமுற்று.

## பகுபத உறுப்பிலக்கணம்

**வென்றேன் – வெல்(ன்) + ற்+ஏன்**

வெல் – பகுதி (ல், ன் எனத் திரிந்தது விகாரம்)

ற் – இறந்தகால இடைநிலை

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**நிற்கின்றாய் – நில்(ற்)+ கின்று+ ஆய்**

நில் – பகுதி (ல், ற் எனத் திரிந்தது விகாரம்)

கின்று – நிகழ்கால இடைநிலை

ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**பெற்றேன் – பெறு(பெற்று) + ஏன்**

பெறு – பகுதி (பெற்று என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது)

ஏன்– தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**அணிந்தேன் – அணி+த்(ந்)+த்+ஏன்**

அணி – பகுதி

த் – சந்தி (த், 'ந்' எனத் திரிந்தது விகாரம்)

த் – இறந்தகால இடைநிலை

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

### நூல்வெளி

அப்துல் ரகுமான் புதுக்கவிதை, வசனகவிதை, மரபுக்கவிதை என்று கவிதைகளின் பல வடிவங்களிலும் எழுதியுள்ளார். வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். வானம்பாடிக் கவிஞர்களில் ஒருவர். பால்வீதி, நேயர்விருப்பம், பித்தன், ஆலாபனை முதலான பல நூல்களை எழுதியுள்ளார். பாரதிதாசன் விருது, தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் தமிழன்னை விருது, ஆலாபனை என்னும் கவிதைத் தொகுப்பிற்குச் சாகித்திய அகாதெமி விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார். இப்பாடல் 'சுட்டுவிரல்' என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

### கற்பவை கற்றபின்...

தமிழ்க் கவிதைகளுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்ற கவிஞர்களின் பட்டியலைத் திரட்டி, நூலின் பெயர், ஆண்டு ஆகியவற்றோடு அட்டவணை உருவாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 228 23-10-2018 13:42:26

# வில்லிபாரதம்

## நுழையும்முன்

தத்துவம் அறவுணர்வையும் ஏற்படுத்தும். உலகின் இயல்பை உணர்ந்தோர் பிறருக்குக் கொடுப்பதை இலட்சியமாய்க் கொண்டுள்ளனர். இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கும் பொய்மையிலிருந்து உண்மைக்கும் மரணத்திலிருந்து இறவாமைக்கும் நாம் செல்ல வழிகாட்டும் நூல்களில் மகாபாரதமும் ஒன்றாகும் என்பர். அதில் வரும் நாயகர்களில் கன்னன் (கர்ணன்) இறவாப் புகழுடையவன். தாயால் வந்த துயரத்தையும் தர்மத்தால் வென்றவன் கன்னன். அறமற்ற போரிலும் செஞ்சோற்றுக்கடன் தீர்த்து அறம் காத்தவன் கன்னன்.

### முன்கதைச் சுருக்கம்

தருமன் தலைமையில் பாண்டவர்களுக்கும் துரியோதனன் தலைமையில் கௌரவர்களுக்கும் இடையில் நடைபெறும் பாரதப் போரில் கன்னன் துரியோதனனுக்காகத் தீரத்துடன் போர் செய்தான். 17ஆவது நாள் போரில் கண்ணனின் தந்திரத்தால் அர்ச்சுனனின் வில்லடிபட்டுக் கன்னன் தேர்ச்சக்கரத்தில் சாய்கிறான். இறவாதபடி அவன் செய்த தர்மம் காத்தது. அவன் பிறருக்குச் செய்த ஈகையின் பயனைப் பறிக்கத் தீர்மானித்த கண்ணன் வேதியர் வடிவில் வருகிறார். அவர் கன்னனிடம் சென்று இரந்து கேட்டதும் கன்னன் சொன்ன பதிலும் நம் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.



### வேதியர் வடிவில் கண்ணன் இரந்து கேட்டல்

*தாண்டிய தரங்கக் கருங்கடல் உடுத்த*
*தரணியில் தளர்ந்தவர் தமக்கு*
*வேண்டிய தருதி நீஎனக் கேட்டேன்*
*மேருவி னிடைத்தவம் பூண்டேன்*
*ஈண்டிய வறுமைப் பெருந்துயர் உழந்தேன்*
*இயைந்ததுஒன்று இக்கணத்து அளிப்பாய்*
*தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்*
*சுடர்தரத் தோன்றிய தோன்றால்! (796)*

### "தரத்தகுபொருள்நீநவில்க" எனக் கன்னன் உரைத்தல்

*என்றுகொண்டு அந்த அந்தணன் உரைப்ப*
*இருசெவிக்கு அமுதுஎனக் கேட்டு*
*வென்றிகொள் விசயன் விசயவெங் கணையால்*
*மெய்தளர்ந்து இரதமேல் விழுவோன்*
*நன்றுஎன நகைத்துத் தரத்தகு பொருள்நீ*
*நவில்க எனநான் மறையவனும்*
*ஒன்றிய படிநின் புண்ணியம் அனைத்தும்*
*உதவுக என்றலும் உளம்மகிழ்ந்தான் (797)*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 229 23-10-2018 13:42:26

#### கன்னன் தனது புண்ணியத்தைத் தானமாகத் தரல்

*ஆவியோ நிலையின் கலங்கியது யாக்கை*
*அகத்ததோ புறத்ததோ அறியேன்*
*பாவியேன் வேண்டும் பொருள்எலாம் நயக்கும்*
*பக்குவம் தன்னில் வந்திலையால்*
*ஓவுஇலாது பயன்செய் புண்ணியம் அனைத்தும்*
*உதவினேன் கொள்கநீ உனக்குப்*
*பூவில்வாழ் அயனும் நிகர்அலன் என்றால்*
*புண்ணியம் இதனினும் பெரிதோ? (798)*

#### கன்னன் அளித்த புண்ணியங்களைக் கண்ணன் உள்ளங்கையால் ஏற்றல்

*என்ன முன்மொழிந்து கரம்குவித்து இறைஞ்ச*
*இறைஞ்சலர்க்கு எழிலிஏறு அனையான்*
*கன்னனை உவகைக் கருத்தினால் நோக்கிக்*
*கைப்புனலுடன் தருக என்ன*
*அன்னவன் இதயத்து அம்பின்வாய் அம்பால்*
*அளித்தலும் அங்கையால் ஏற்றான்*
*முன்னம்ஓர் அவுணன் செங்கை நீர்ஏற்று*
*மூவுலகமும் உடன் கவர்ந்தோன் (799)*

#### கன்னன் வேண்டும் வரம்

*மல்லல்அம் தொடையல் நிருபனை முனிவன்*
*மகிழ்ந்து நீவேண்டிய வரங்கள்*
*சொல்லுக உனக்குத் தருதும்என்று உரைப்ப*
*சூரன் மாமதலையும் சொல்வான்*
*அல்லல் வெவ்வினையால் இன்னம் உற்பவம்உண்*
*டாயினும் ஏழ்எழு பிறப்பும்*
*இல்லைஎன்று இரப்போர்க்கு இல்லைஎன்று உரையா*
*இதயம்நீ அளித்தருள் என்றான் (800)*

#### கண்ணன்வரம்தருதல்

*மைத்துனன் உரைத்த வாய்மைகேட்டு ஐயன்*
*மனமலர் உகந்துஉகந்து அவனைக்*
*கைத்தல மலரால் மார்புறத் தழுவிக்*
*கண்மலர் கருணைநீர் ஆட்டி*
*எத்தனை பிறவி எடுக்கினும் அவற்றுள்*
*ஈகையும் செல்வமும் எய்தி*
*முக்தியும் பெறுதி முடிவில்என்று உரைத்தான்*
*மூவரும் ஒருவனாம் மூர்த்தி (801)*

### சொல்லும் பொருளும்

தரங்கம் – கடல்; கவனம் – வேகம்; துரகதம் – குதிரை; வென்றி – வெற்றி; விசயன் – அருச்சுனன்; நான்மறை – நான்குவேதங்கள்; யாக்கை – உடல்; ஓவுஇலாது – ஒன்றும் மிச்சமின்றி; அயன் – பிரமன்; எழிலிஏறு – பேரிடி; அங்கை – உள்ளங்கை; அவுணன் – அரக்கன் (மாவலி சக்கரவர்த்தி); மல்லல் – வளமை; தொடையல் – மாலை; சூரன்மாமதலை – கதிரவன்மகன்; உற்பவம் – பிறவி;

### பாடலின் பொருள்

அருணனால் செலுத்தப்படும் குதிரைகள் பூட்டப்பட்ட தேரினைக் கொண்ட சூரியனின் தோன்றலே! கடல் சூழ்ந்த இவ்வுலகில் வறுமையால் தளர்ச்சியுற்றோர்க்கு, வேண்டியவற்றைத் தருபவன் நீ என்பதைக் கேள்வியுற்றேன். மேருமலையில் தவம் செய்த நான், மிக்க வறுமைத் துயரால் பெருந்துன்பமுற்றேன். உன்னால் இயன்றதை இந்தக்கணத்தில் எனக்கு அளிப்பாயாக.

அந்தணன் அவ்வாறு உரைத்ததும், அதனை வெற்றி பொருந்திய அருச்சுனனின் அம்புகளால் உடல் தளர்ந்து தேரின் மீது விழுந்த நிலையில் இருந்த கன்னன், இருசெவிகளுக்கு அமுதம்போலக் கேட்டு, 'நல்லது' எனக்கூறி, நகைத்தவாறு "என்னால் தரத்தகுந்த பொருளை நீர் உரைப்பீர்" என மொழிந்தான். உடனே நான்கு வேதத்தவனும் (கண்ணன்) "நின் புண்ணியம் அனைத்தும் எனக்கு அளித்து உதவுக" என்றான். இதைக் கேட்ட கன்னன் உள்ளம் மகிழ்ந்தான்.

என் உயிர்நிலை கலங்கியுள்ளது. அவ்வுயிர் உடலின் உள்ளேயோ வெளியேயோ அறியேன். பாவியாகிய நான், இரப்பார்க்கு வேண்டிய பொருள் எல்லாம் ஈந்த பொழுது



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 230 23-10-2018 13:42:26

நீ வரவில்லை. இதுவரை முடிவின்றிப் பயன் செய்யும் புண்ணியம் அனைத்தும் தருகிறேன். நீ பெற்றுக்கொள்வாயாக. உமக்கு நான்முகனும் ஒப்பாகான் என்றால், என் புண்ணியம் அதைவிடப் பெரியதோ?

கன்னன், வேதியனாய் வந்த கண்ணனின் முன்னே கைகளைக் கூப்பி வணங்கினான். தன்னை வணங்காதார்க்குப் பேரிடியைப் போன்ற கண்ணன் மகிழ்வுடன் கன்னனை நோக்கி 'நீருடன்' தானம் செய்க என்றான். கன்னன் தன் மார்பில் தைத்த அம்பின் வழியே வரும் குருதியோடு சேர்த்துப் புண்ணியம் அனைத்தையும் தாரைவார்த்துக் கொடுத்தான். முன்பொருநாள் மாவலிச்சக்கரவர்த்தியிடம் வாமனனாய் வந்து மூன்றடிமண் தானம் பெற்று, மூன்றடியால் மூவுலகத்தையும் கவர்ந்த கண்ணன், தன் உள்ளங்கையில் குருதியை ஏற்றான்.

தன் புண்ணியம் அனைத்தையும் தானமாக வழங்கிய, அழகியமாலை சூடிய கன்னனை மகிழ்வுடன் நோக்கிய கண்ணன் 'நீ வேண்டும் வரங்களைச் சொல்லுக. உனக்குத் தருகிறேன்' என்றான். கதிரவன் மகனான கன்னன் "பிறவித் துன்பங்களுக்குக் காரணமான தீவினையால் இன்னும் பிறவியெடுத்தாலும் எழுபிறப்பிலும் இரப்போர்க்கு இல்லையென்று உரையாத உள்ளம் அளிப்பாய்" என்று கேட்டான்.

கன்னன் வேண்டிய வரத்தைக் கேட்டதும் முக்கடவுளும் ஒரு மூர்த்தியான கண்ணன் உள்ளம் மகிழ்ந்து, கன்னனைத் தம்கைமலர்களால் தழுவி, செந்தாமரை மலரொப்பக் கண்களிலிருந்தும் தோன்றும் கருணை நீர் வெள்ளத்தில் ஆழ்த்தி, "கன்னா! நீ எத்தனை பிறவி எடுத்தாலும் அந்தப் பிறவிகளுள் கொடை செய்வதையும் அதற்கான செல்வத்தையும் எய்தி முடிவில் வீடுபேறு அடைவாய்" என்று உரைத்தான்.

## இலக்கணக்குறிப்பு

கருங்கடல், பெருந்துயர், வெங்கணை, செங்கை, வெவ்வினை – பண்புத்தொகைகள்; தடந்தேர், மாமதலை – உரிச்சொல்தொடர்; கண்மலர் – உருவகம்; ஈகையும்செல்வமும் – எண்ணும்மை; முத்தியும்பெறுதி – உயர்வுசிறப்பும்மை; நவில்க, உதவுக, கொள்க, தருக, சொல்லுக – வியங்கோள் வினைமுற்றுகள்; வென்றி – மெலித்தல் விகாரம்; பொருள் எலாம், நிகர் அலன் – இடைக்குறை விகாரங்கள்; வாழ்அயன், செய்புண்ணியம் – வினைத்தொகைகள்.

## பகுபத உறுப்பிலக்கணம்

**தாண்டிய – தாண்டு + இ(ன்) + ய் + அ**

தாண்டு – பகுதி

(இ)ன் – இறந்தகால இடைநிலை

ய் – உடம்படுமெய்சந்தி

அ – பெயரெச்ச விகுதி

## தெரிந்து தெளிவோம்

– உலகிலுள்ள பழமையான மொழிகளில் இதிகாசங்களும் காப்பியங்களும் தோன்றியுள்ளன.

– கிரேக்கமொழியில் எழுதப்பட்ட இதிகாசங்கள் ஹோமரின் இலியட், ஒடிசி.

– இந்தியாவில் வடமொழியில் (சமஸ்கிருதம்) எழுதப்பட்ட இதிகாசங்கள் இராமாயணம், மகாபாரதம். தமிழில் கம்பராமாயணம், வில்லிபாரதம்.

– தமிழில் எழுதப்பட்ட முதல் இரு காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை. இரு காப்பியங்களுமே பெண்ணுக்கு முதன்மை தருகின்றன.

– பிற மொழி இதிகாசங்கள் போரினை முதன்மைப்படுத்திப் பேசும். ஆனால் தமிழ்க் காப்பியங்கள் போருக்கு முதன்மை கொடுக்கவில்லை.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 231 23-10-2018 13:42:26

**தருதி = தா(தரு) + த் + இ**

தா – பகுதி, தா – தரு எனத் திரிந்தது விகாரம்

த் – எழுத்துப்பேறு

இ – ஏவல் ஒருமை வினைமுற்று விகுதி

**பூண்டேன் – பூண் + ட் + ஏன்**

பூண் – பகுதி, ட் – இறந்தகால இடைநிலை

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**அளிப்பாய் – அளி + ப் + ப் + ஆய்**

அளி – பகுதி, ப் – சந்தி,

ப் – எதிர்கால இடைநிலை

ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**தழுவி – தழுவு + இ**

தழுவு – பகுதி, இ – வினையெச்ச விகுதி

**கொண்டு – கொள் (ண்) + ட் + உ**

கொள் – பகுதி

ள்– ண் ஆனது விகாரம்

ட் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி

**அறியேன் – அறி + ய் + (ஆ) + ஏன்**

அறி – பகுதி

ய் – உடம்படுமெய் சந்தி

ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**தருக – தா (தரு) + க**

தா – பகுதி

தரு எனக் குறுகியது விகாரம்

க – வியங்கோள் வினைமுற்று விகுதி

## புணர்ச்சிவிதி

**கருங்கடல் – கருமை + கடல்**

ஈறுபோதல் – கரு + கடல்

இனமிகல் – கருங்கடல்.

**தடந்தேர் = தடம் + தேர்**

மவ்வீறுஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் தடந்தேர்.

**நூல்வெளி**

தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றவராகத் திகழ்ந்த வில்லிபுத்தூரார், வடமொழியில் வியாசர் எழுதிய மகாபாரதத்தைத் தழுவித் தமிழில் இயற்றினார். வக்கபாகை என்னுமிடத்தை ஆண்டுவந்த மன்னனான வரபதி ஆட்கொண்டான் என்பவரால் ஆதரிக்கப்பட்டார். வில்லிபாரதம், ஆதி பருவம் முதல் சௌப்திக பருவம் வரை பத்துப் பருவங்களைக் கொண்டது. 4351 விருத்தப் பாடல்களால் ஆனது. மிகச் சிறந்து விளங்கிய இந்நூல் ஆசிரியர் பெயரோடு இணைத்தே வில்லிபாரதம் என வழங்கப்படலாயிற்று. நம்முடைய பாடப்பகுதி கன்ன பருவத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

**கற்பவை கற்றபின்...**

அறமும் தத்துவமும் எக்காலத்திற்கும் பொருந்தும் – வகுப்பறையில் விவாதிக்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 232 23-10-2018 13:42:27

இயல் 9

# காஞ்சனை முன்னுரை

– புதுமைப்பித்தன்

J9KNTU

**நுழையும்முன்**

நூலின் முன்னுரை உடலுக்கு முகம் போன்றது. நூலாசிரியர் நூற்கருத்தை உணர்த்துவதற்கும் வாசகர்களுடனான உரையாடலாகவும் இதனைப் பயன்படுத்துவர். தமிழ்ச் சிறுகதைகளை உலகத்தரத்திற்கு உயர்த்தியவர் புதுமைப்பித்தன். அவர்தம் முன்னுரை அவருடைய பண்புநலன்களை வெளிப்படுத்துவதாகவும் அவரை விமர்சிப்பவர்களுக்கான பதிலுரையாகவும் அவரது படைப்புகளின் தத்துவார்த்த விளக்கமாகவும் அமைந்திருக்கிறது.

காஞ்சனை முதலிய பதினான்கு கதைகளுக்குள் துணிந்து பிரவேசிக்க விரும்பும் வாசகர்களுக்கு, தலையெழுத்து அப்படியாகிவிட்ட விமரிசகர்களுக்கு, நம்முடைய கோஷ்டி இது என்று நினைத்துக்கொண்டு கும்மாளி போட்டுவரும் நண்பர்களுக்கு முதல் முதலிலேயே எச்சரிக்கை செய்துவிடுகிறேன். இவை யாவும் கலை உத்தாரணத்திற்கென்று கங்கணம் கட்டிக்கொண்டு செய்த சேவை அல்ல. இவை யாவும் கதைகள். உலகை உய்விக்கும் நோக்கமோ, கலைக்கு எருவிட்டுச் செழிக்கச் செய்யும் நோக்கமோ, எனக்கோ என் கதைகளுக்கோ சற்றும் கிடையாது. நான் கேட்டது, கண்டது, கனவு கண்டது, காண விரும்பியது, காண விரும்பாதது ஆகிய சம்பவக் கோவைகள்தாம் இவை.

இம்மாதிரி நான் முன்னெச்சரிக்கை செய்ய வேண்டிய நிலைமை யாதோ எனின், இரண்டொரு வருஷங்களுக்குமுன் நான் புதுமைப்பித்தன் கதைகள் என ஒரு கோவையை வெளியிட்டேன். என்மீது அபிமானமுடையவரும் கலையின் ஜீவன் சேமமாக இருக்க வேண்டும் என்ற ஆசையில் அதற்குத் தம் கையாலேயே ஏழுடுக்கு மாடம் கட்டி அதைச் சிறை வைக்க விரும்பியவருமான கலாரசிகர் ஒருவர், எனக்கும் அவருக்கும் பொதுவான நண்பர் ஒருவர்மூலம் நான் எப்பொழுது கதைகள் எழுதுவதை நிறுத்திக்கொள்ளப் போகிறேன் என்று ஆவலோடு கேட்டுவிட்டார். அதற்குப் பதில் சொல்லுவது மாதிரி இப்போது இந்தக் கதைத் தொகுதியை வெளியிட்டிருக்கிறேன். பொதுவாக நான் கதை எழுதுவதன் நோக்கம் கலை வளர்ச்சிக்குத் தொண்டு செய்யும் நினைப்பில் பிறந்ததல்ல. அதனால்தான் என்னுடைய கதைகளில் இந்தக் கலை வியவகாரத்தை எதிர்பார்க்க வேண்டாம் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.



இந்தக் கோவையிலே, என் கதைகளிலே மேலோட்டாகப் படிக்கிறவர்கள்கூட இரண்டு ரகமான வார்ப்புத்தன்மை இருப்பதைப் பார்க்கலாம். சில, 1943ஆம் வருஷத்துச் சரக்கு. மீதியுள்ளவை 1936க்கும் அதற்கு முன்பும் பிறந்தவை. 1943ஆம் வருஷத்துச் சரக்குகளை 1943ஆம் வருஷத்துச் ஆசாமிகள் பாராட்டுகின்றனர். அதைப்போலவே, 1936ஆம் வருஷத்துச் சரக்கையும் அந்தக் காலத்து 'இவர்கள்' பாராட்டினார்கள். பார்க்கப் போனால் பிஞ்சிலே பழுத்த மாதிரிதான் எனக்குப் படுகிறது. இந்தத் திரட்டு ஒரு வகையில் நல்லமாதிரி என்பது என் நினைப்பு. என்னைப்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 233 23-10-2018 13:42:27

பாராட்டுகிறவர்களும் என்னைக் கண்டு மிரண்டு ஓடுகிறவர்களும் மனசு பக்குவப்படும் முறையைக் கண்டுகொள்ள இது சௌகர்யமான சந்தர்ப்பத்தை அளிக்கிறது. அப்படித்தான் நான் இதைப் பாவிக்கிறேன்.

1943ஆம் வருஷத்துச் சரக்குகளைப் பற்றியே சில சர்ச்சைகள், அவை பிறந்த காலத்திலிருந்து இருந்துவருகின்றன. காரணம் பலருக்கு என் போக்கு என்ன என்பது புரியாதிருப்பதுதான்.

என் கதைகள் எதுவானாலும் அதில் அழகு காணுகிற நண்பர் ஒருவர் இந்தக் காஞ்சனைக் கதையைப் படித்துவிட்டு, என்னிடம் வந்து, "உங்களுக்குப் பேய்பிசாசுகளில் நம்பிக்கை உண்டா? ஏன் கதையை அப்படி எழுதினீர்கள்? என்று கேட்டார். நான், "பேயும் பிசாசும் இல்லை என்றுதான் நம்புகிறேன். ஆனால் பயமாக இருக்கிறதே" என்றேன். "நீங்கள் சும்மா விளையாட வேண்டாம். அந்தக் கதைக்கு அர்த்தமென்ன? என்று கேட்டார். "சத்தியமாக எனக்குத் தெரியாது" என்றேன். அவருக்கு இது திருப்தி இல்லையென்ற பிற்பாடு அவரிடமிருந்து தப்பித்துக்கொண்டு, இலக்கியப் பக்குவம் மிகுந்த என் நண்பர் ஒருவரிடம் போனேன். அவர் அட்டகாசமாய் வரவேற்றார். ஜேம்ஸ் ஜாய்ஸ் மாதிரி கதை எழுதியிருப்பதாகவும் 'கயிற்றரவு' என்று சொல்லுவார்களே ஒரு மயக்க நிலை, அதை அழகாக வார்த்திருப்பதாகவும் சொன்னார். இங்கிலீஷ் இலக்கியத்திலே கடைசிக் கொழுந்து என்று கருதப்படுகிறவர் ஜேம்ஸ் ஜாய்ஸ். அப்படிச் சொன்னால் யாருக்குத்தான் தலை சுற்றி ஆடாது? அங்கிருந்து வீட்டுக்கு வந்தேன். வார்த்தைகளை வைத்துக்கொண்டு ஜனங்களைப் பயங்காட்டுவது ரொம்ப லேசு என்பதைக் கண்டுகொண்டேன்.

காஞ்சனைக்குப் பிறகு சாப விமோசனம் இதே மாதிரி அவதிக்கு உள்ளாயிற்று. முக்கால்வாசிப் பேருக்கு அந்தக் கதை பிடிக்கவில்லை. காரணம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி. விமரிசகர் 'சென்று தேய்ந்திறுதல்' என்றார். ஆனால் இன்னும் ஒருவர் வால்மீகி கதையில் அகலிகை கல்லாகவில்லையென்றும் ஜனங்களுக்கு உண்மையைவிட உண்மையின் மீதுள்ள பாசிதான் கண்களுக்குப் பளபளப்பாக இருக்கிறது என்றார். பாசி என்பதுதான் என்ன? மனப்பக்குவத்தின் ஒரு நிலைதானே அதுவும்? அப்படிப் பார்க்கப்போனால் ஜனக ராகங்களிலிருந்து ஜன்ய ராகங்கள் பிறப்பது எல்லாமே பாசிதானே? தொன்னைக்கு நெய்தான் ஆதாரம் என்று கருதுகிறவர்கள்தாம், ஒரு குறிப்பிட்ட கோல வகையில்தான் எதுவும் அமைந்திருக்க முடியும் என்று நினைக்கிறார்கள். வேறு ஒருவிதமான கோலம் போட்டுக் காண்பிக்க முடியாது, கூடாது என்று கருதுகிறவர்கள் – இவர்கள் தத்துவவாதிகள் உலக சிருஷ்டி இவர்களுடைய தத்துவத்துக்குள் மட்டும் ஒடுங்கிவிடவில்லை.

நான் கதை எழுதுகிறவன். கதையிலே கல் உயிர் பெற்று மனிதத் தன்மை அடைந்துவிடும். மூட்டைப் பூச்சிகள் அபிவாதயே சொல்லும். அதற்கு நான் என்ன செய்யட்டும்? கதையுலகத்தின் நியதி அது. நீங்கள் கண்கூடாகக் காணும் உலகத்தில், மனிதன் 'கல்லுப் பிள்ளையார் மாதிரி' உட்கார்ந்திருப்பதைப் பார்க்கவில்லையா? மனிதன் கல் மாதிரி இருக்கும்போது கல்தான் சற்று மனிதன் மாதிரி இருந்து பார்க்கட்டுமே! தவிரவும் பழைய கதைகளை எடுத்துக்கொண்டு அதை இஷ்டமான கோணங்களிலெல்லாம் நின்றுகொண்டு பார்க்க எங்களுக்கு உரிமையுண்டு.

சாப விமோசனத்தைப் பற்றிய வரையில் எனக்கு ஒரே ஒரு குறைதான் உண்டு. அதில் வசிஷ்டனையும் கூனியையும் கூட்டிக்கொண்டு வர மறந்துபோனதுதான் அது. மற்றபடி யார் எப்படிக் கருதினாலும் ராமாயணக் கதையின் அமைதி முற்றும் பொருந்தித்தான் இருக்கிறது.

கட்டிலை விட்டிறங்காக் கதையில் நடை பலருக்கு ஆயாசமாகப்பட்டது. அதற்கு நான் என்ன செய்யட்டும்? அந்தக் காலத்தில் நடை அப்படித்தான் இருந்தது.

கடைசிக் கதை, கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும். திருப்பணியில் ஈடுபாடுடைய பக்தர்கள் பலருக்கு அவர்கள் ஆர்வத்துடன் செதுக்கி அடுக்கும் கல்லுக் குவியலுக்கு இடையில் அகப்பட்டு நசுங்கிப் போகாமல்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 234 23-10-2018 13:42:27

அவர்களுடைய இஷ்ட தெய்வத்தை நான் மெதுவாகப் பட்டணத்திற்குக் கூட்டிக்கொண்டு விட்டதில் பரம கோபம். நான் அகப்பட்டால் கழுவேற்றிப் புண்ணியம் சம்பாதித்துக்கொள்ள விரும்புவார்கள். என்னுடைய கந்தசாமிப்பிள்ளையுடன் ஊர் சுற்றுவதற்குத்தான் கடவுள் சம்மதிக்கிறார். இதற்கு நானா பழி?

பொதுவாக என்னுடைய கதைகள் உலகத்துக்கு உபதேசம் பண்ணி உய்விக்க ஏற்பாடு செய்யும் ஸ்தாபனம் அல்ல. பிற்கால நல்வாழ்வுக்குச் சௌகரியம் பண்ணிவைக்கும் இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாடும் அல்ல. எனக்குப் பிடிக்கிறவர்களையும் பிடிக்காதவர்களையும் கிண்டல் செய்துகொண்டிருக்கிறேன். சிலர் என்னோடு சேர்ந்துகொண்டு சிரிக்கிறார்கள்; இன்னும் சிலர் கோபிக்கிறார்கள். இவர்கள் கோபிக்கக் கோபிக்கத்தான் அவர்களை இன்னும் கோபிக்கவைத்து முகம் சிவப்பதைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. ஆனால் இப்படிக் கோபிப்பவர்கள் கூட்டம் குறையக் குறையத்தான் எனக்குக் கவலை அதிகமாகி வருகிறது.

இவர் இன்ன மாதிரிதான் எழுதுவது வழக்கம், அதைப் பாராட்டுவது குறிப்பிட்ட மனப்பக்குவம் தமக்கு இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் கௌரவம் என்றாகி, என்னைச் சட்டம் போட்டுச் சுவரில் மாட்டிப் பூப்போட்டு மூடிவிடுவதுதான் என் காலை இடறி விடுவதற்குச் சிறந்த வழி. அந்த விளையாட்டெல்லாம் என்னிடம் பலிக்காது. மனப் போக்கிலும் பக்குவத்திலும் வெவ்வேறு உலகில் சஞ்சரிப்பதாக நினைத்துக்கொண்டு நான் வெகு காலம் ஒதுங்க முயன்ற கலைமகள் பத்திரிகை என் போக்குக்கெல்லாம் இடம்போட்டுக் கொடுத்து வந்ததுதான் நான் பரம திருப்தியுடன் உங்களுக்குப் பரிச்சயம் செய்துவைக்கும் காஞ்சனை. நீங்கள் இவைகளைக் கொள்ளாவிட்டாலும் நான் கவலைப்படவில்லை. வாழையடி வாழையாகப் பிறக்கும் வாசகர்களில் எவனோ ஒருவனுக்கு நான் எழுதிக்கொண்டிருப்பதாகவே மதிக்கிறேன்.

விமரிசகர்களுக்கு ஒரு வார்த்தை. வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரிதான் நான் பிறப்பித்துவிட்டவைகளும். அவை உங்கள் அளவுகோல்களுக்குள் அடைபடாதிருந்தால் நானும் பொறுப்பாளியில்லை; நான் பிறப்பித்து விளையாட விட்டுள்ள ஜீவராசிகளும் பொறுப்பாளிகளல்ல; உங்கள் அளவுகோல்களைத்தான் என் கதைகளின், அருகில் வைத்து அளந்து பார்த்துக்கொள்ளுகிறீர்கள் என்று உங்களுக்குச் சொல்லிவிட விரும்புகிறேன்.

### நூல்வெளி

புதுமைப்பித்தனின் இயற்பெயர் சொ. விருத்தாசலம். சிறுகதை, கட்டுரை, கவிதை, நாடகம், புத்தக விமர்சனம் என விரிந்த தளத்தில் இயங்கியவர். தமிழ்ச் சிறுகதைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய காரணத்தால் சிறுகதை மன்னர் என்று போற்றப்படுபவர். அவருடைய மொத்தக் கதைகளும் புதுமைப்பித்தன் சிறுகதைகள் என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. காஞ்சனை என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு அவர் எழுதிய முன்னுரையே பாடப் பகுதியாகும்.

### கற்பவை கற்றபின்...

1. பாடப்பகுதியில் உள்ள வடமொழிச் சொற்களைத் தொகுத்து அதற்கேற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக.
2. புதுமைப்பித்தனின் சிறுகதை ஒன்றை நாடகமாக மாற்றுக



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 235 23-10-2018 13:42:27

இனிக்கும் இலக்கணம்

இயல் 9

# நிறுத்தக்குறிகள்

J9QX7K

மொழியைக் கற்கும் ஒருவர் படித்தல், எழுதுதல், கேட்டல், பேசுதல் என்னும் பல்வேறு திறன்களை உள்ளடக்கியவராக விளங்கவேண்டும். குறிப்பாகப் படித்தல் என்னும் திறனானது வரிவடிவத்தைக் காணுதல், முறையாக ஒலித்தல், பொருள் உணர்தல் ஆகிய மூன்று செயல்களை உள்ளடக்கியதாகும். இவற்றுள் எந்தச் செயலில் குறைவு ஏற்பட்டாலும் படித்தல் என்பது முழுமையடையாது.

ஒரு தொடரையோ பத்தியையோ கட்டுரையையோ படிக்கும்போது, பொருள் உணர்வுக்கு ஏற்ப, நிறுத்திப் படிக்க வேண்டிய இடத்தில் நிறுத்தியும் சேர்த்துப் படிக்க வேண்டிய இடத்தில் சேர்த்தும் வியப்பு, அச்சம், வினா முதலிய உணர்வுகள் வெளிப்படும் இடங்களில் அவற்றை வெளிப்படுத்தியும் படிக்க வேண்டியது படிப்பவர்தம் கடமையாகும்.

பேருந்து, தொடர்வண்டி, வானூர்தி போன்றவை நிற்கும் இடத்திற்கு 'நிறுத்தம்' என்பது பெயர். அவற்றைப் போலவே, மக்கள் உணர்வின் இயக்கமாக விளங்கும் மொழியின் இயக்கத்திற்கும் நிறுத்தம் உண்டு. வண்டிகள் சாலை விதிகளுக்கு ஏற்ப இயங்கவும் நிறுத்தவும் விலகவும் ஒதுங்காமல் பின்வரவும் எனக் குறிகள் (விளக்குகள், ஒலிகள்) உள்ளமை போலச் சொற்றொடர் நிறுத்தங்களுக்கும், குறிகள் என்னும் அடையாளங்கள் உண்டு. அவற்றிற்கு 'நிறுத்தக்குறிகள்' என்பது பெயர். எடுத்துக்காட்டாக,

"மறைமலையடிகள் மரணத்தின்பின் மனிதர்நிலை என்னும்நூலை இயற்றினார்"

மறைமலையடிகளார் எழுதிய நூல்களை அறிந்திராத ஒருவர், நிறுத்தக்குறிகள் இடம்பெறாத இத்தொடரைப் படிக்கும்போது மரணத்துக்குப்பின் அவர் எப்படி நூல் எழுத முடியும்? என்று வினவுவார். ஆனால், மறைமலையடிகள் என்னும் பெயருக்குப்பின் காற்புள்ளியும், மரணத்தின்பின் மனிதர்நிலை என்பவற்றின் முன்னும் பின்னும் மேற்கோள்குறியும் இட்டு,

மறைமலையடிகள், 'மரணத்தின்பின் மனிதர்நிலை' என்னும் நூலை இயற்றினார்.

என்று எழுதும்போது பொருள் தெளிவாகிவிடும் அல்லவா! எனவே, நிறுத்தக்குறிகள் ஒரு தொடரில் உள்ள பொருள்வேறுபாட்டை உணர்த்துவதற்கு அடிப்படையாக விளங்குகின்றன என்க.

நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்திப் படிக்க முயலும்போது தெளிவாகப் பொருள் உணர்ந்து, படிப்பவர்களும் கேட்பவர்களும் பயன்பெறுவர். நிறுத்தக்குறிகளை இடாமல் எழுதுவதோ இடம் மாற்றி இக்குறிகளை இடுவதோ தொடரின் பொருளையே மாற்றிவிடும். சிலவேளைகளில் முற்றிலும் பிழையான பொருளைத் தந்துவிடும். எனவே, நிறுத்தக்குறிகள் மொழியைத் தெளிவாகப் பேசவும் படிக்கவும் எழுதவும் துணைநிற்கின்றன.

இனி, நிறுத்தக்குறிகள் சிலவற்றையும் அவற்றை எவ்வெவ்விடத்தில் பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுகளுடன் காண்போம்.

## காற்புள்ளி ( , )

பொருள்களைத் தனித்தனியாகக் குறிப்பிடும் இடங்கள், எச்சச் சொற்றொடர்கள், எடுத்துக்காட்டுகள், இணைப்புச்சொற்கள், திருமுகவிளி,



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 236 23-10-2018 13:42:27

இணைமொழிகள் முதலிய இடங்களில் காற்புள்ளி வருதல் வேண்டும்.

• அறம், பொருள், இன்பம், வீடு என வாழ்க்கைப்பேறு நான்கு.

• நாம் எழுதும்போது, பிழையற எழுத வேண்டும்.

• இனியன் நன்கு படித்தான்; அதனால், தேர்ச்சி பெற்றான்.

• ஐயா; அம்மையீர்,

• சிறியவன் பெரியவன், செல்வன் ஏழை.

### அரைப்புள்ளி ( ; )

தொடர்நிலைத் தொடர்களிலும் ஒரு சொல்லுக்கு வேறுபட்ட பொருள் கூறும் இடங்களிலும் அரைப்புள்ளி வருதல் வேண்டும்.

• வேலன் கடைக்குச் சென்றான்; பொருள்களை வாங்கினான்; வீடு திரும்பினான்.

• சீர் – மாறுபாடு இல்லாதது; அளவு; இயல்பான தன்மை; ஒழுங்கு; சமம்; நேர்த்தி; அழகு; சீதனம்; செய்யுளின் உறுப்பு

### முக்காற்புள்ளி ( : )

சிறுதலைப்பு, நூற்பகுதி எண், பெருங்கூட்டுத் தொடர் முதலிய இடங்களில் முக்காற்புள்ளி வருதல் வேண்டும்.

• சார்பெழுத்து :

• பத்துப்பாட்டு 2:246

• எட்டுத்தொகை என்பன வருமாறு:

### முற்றுப்புள்ளி ( . )

தொடரின் இறுதி, முகவரி இறுதி, சொற்குறுக்கம், நாள் முதலிய இடங்களில் முற்றுப்புள்ளி வருதல் வேண்டும்.

• உருவுகண்டு எள்ளாமை வேண்டும்.

• தலைமையாசிரியர், அரசு மேனிலைப் பள்ளி, காஞ்சிபுரம் .

• தொல்.சொல்.58.

• 18/02/2018.

### வினாக்குறி ( ? )

ஒரு வினாத்தொடர், முற்றுத்தொடராகவும் நேர்கூற்றுத் தொடராகவும், இருப்பின், இறுதியில் வினாக்குறி வருதல் வேண்டும்.

• அது என்ன? ( முற்று)

• நீ வருகிறாயா? என்று கேட்டான். (நேர்கூற்றுத் தொடர்)

### வியப்புக்குறி ( ! )

வியப்புக்குறி, வியப்பிடைச் சொல்லுக்குப் பின்பும் நேர்கூற்று வியப்புத்தொடர் இறுதியிலும் அடுக்குச் சொற்களின் பின்னும் வியப்புக்குறி வருதல் வேண்டும்.

### தெரிந்து தெளிவோம்

பழங்காலத்தில் பனை ஓலைகளிலோ கல்வெட்டுகளிலோ ஒரு பாடல் அல்லது உரைநடைப் பகுதியை எழுதி முடித்ததும் அதனை எழுதி முடித்தமைக்கு அடையாளமாக அதன் இறுதியில் சுழியம் இடுதல் (O) அல்லது இணைகோடுகள் இடுதல்(//) அல்லது கோடு இடுதல் ( / ) என்னும் வழக்கம் இருந்துள்ளது. எனினும், பல்வேறு வகையான நிறுத்தக்குறிகளை நமக்கு அறிமுகப்படுத்தி எவ்வெவ்விடங்களில் அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென விளக்கியவர்கள் ஐரோப்பியர்களே ஆவர். தமிழ்மொழியின் இலக்கணநெறிகளுக்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்திச் சொற்றொடர்களைப் பிரித்துப் பொருளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 237 23-10-2018 13:42:27

• எவ்வளவு உயரமானது!

• என்னே தமிழின் பெருமை! என்றார் கவிஞர்

• வா! வா! வா! போ! போ! போ!

### விளிக்குறி ( ! )

அண்மையில் இருப்பாரை அழைப்பதற்கும், தொலைவில் இருப்பாரை அழைப்பதற்கும் விளிக்குறி பயன்படுத்த வேண்டும். வியப்புக்குறியும் விளிக்குறியும் ஒரே அடையாளக்குறி உடையன.

• அவையீர் !

• அவைத்தலைவீர் !

### மேற்கோள்குறி ( ' ', " " )

ஒற்றை மேற்கோள்குறி, இரட்டை மேற்கோள்குறி என இருவகைப்படும்.

#### ஒற்றை மேற்கோள்குறி வரும் இடங்கள்

ஓர் எழுத்தேனும் சொல்லேனும் சொற்றொடரேனும் தன்னையே குறிக்கும் இடம், கட்டுரைப்பெயர், நூற்பெயர் குறிக்கும் இடம், பிறர் கூற்றுப்பகுதிகள் முதலான இடங்களில் ஒற்றைக்குறி வருதல் வேண்டும்.

• 'ஏ' என்று ஏளனம் செய்தான்.

• பேரறிஞர் அண்ணா 'செவ்வாழை' என்னும் சிறுகதை எழுதினார்.

• 'கம்பனும் மில்டனும்' என்னும் நூல் சிறந்த ஒப்பீட்டு நூல் ஆகும்.

• 'செவிச்செல்வம் சிறந்த செல்வம்' என்பர்.

#### இரட்டை மேற்கோள்குறி வருமிடங்கள்

நேர்கூற்றுகளிலும், மேற்கோள்களிலும் இரட்டைக்குறி வருதல் வேண்டும்.

• "நான் படிக்கிறேன்" என்றான்.

• "ஒழுக்கமுடைமை குடிமை" என்றார்.

நிறுத்தக்குறிகள் எல்லாம் வெறும் அடையாளங்கள் அல்ல. அவையெல்லாம் பொருள்பொதிந்த அடிப்படையில் தோன்றியவை என்பதை மாணவர்கள் நன்குணர்ந்து அவற்றைப் பின்பற்றிப் பேசவும் எழுதவும் வேண்டும்.



**கற்பவை கற்றபின்...**

நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தாமல் இருப்பது பொருள் மாறுபாட்டிற்குக் காரணமாகிறது– உரிய எடுத்துக்காட்டுகளைத் திரட்டி வகுப்பில் பகிர்க.

### இலக்கணத் தேர்ச்சி கொள்

1. நிறுத்தக்குறிகளின் பயன்களைக் கூறுக.
2. முற்றுப்புள்ளி வரும் இடங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. விளிக்குறி, வியப்புக்குறி வரும் இடங்களை வேறுபடுத்துக.
4. சிலப்பதிகாரத்தைப் படித்தேன் வியந்தேன் மகிழ்ந்தேன் – இத்தொடருக்குரிய நிறுத்தக்குறிகளைத் தகுந்த இடங்களில் இட்டு எழுதுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 238 23-10-2018 13:42:27

## நம்மை அளப்போம்

J9UJVH

### பலவுள் தெரிக

1. சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம் - என்பது யாருடைய கூற்று?

   அ) பாம்பாட்டிச் சித்தர் ஆ)சிவவாக்கியர் இ) திருமூலர் ஈ)பட்டினத்தார்

2. சரியான நிறுத்தக்குறியுடைய சொற்றொடரைக் கண்டுபிடிக்க.

   அ) மலரவன் தன் பாட்டியிடம் நான் படிக்கிறேன் என்றான்.

   ஆ) மலரவன், தன் பாட்டியிடம், "நான் படிக்கிறேன்" என்றான்.

   இ) மலரவன் தன் பாட்டியிடம், "நான் படிக்கிறேன்" என்றான்.

   ஈ) மலரவன் தன் பாட்டியிடம், நான் படிக்கிறேன்! என்றான்.

3. கற்றேன் என்பாய் கற்றாயா? – வெறும்
   காகிதம் தின்பது கல்வியில்லை – இவ்வடிகளில் பயின்று வருவது

   அ) அடிஎதுகை, அடிமோனை ஆ) சீர்மோனை, அடிஎதுகை

   இ) அடிமோனை, அடி இயைபு ஈ) சீர்மோனை, அடிமோனை

4. வில்லிபாரதத்தில் "சூரியனின் தோன்றல்" என்று குறிப்பிடப்படுபவர் யார்?

   அ) கண்ணன் ஆ) கன்னன் இ) அருச்சுனன் ஈ) பிரமன்

5. கொள் – என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்க.

   அ) கொள்க ஆ) கொள்ளுதல் இ) கொள்ளும் ஈ) கொள்வோன்

### குறுவினா

1. சித்தர்கள் தமிழ் இலக்கியங்களில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளனர்?
2. தருக – பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.
3. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
4. "கற்றேன் என்பாய் கற்றாயா?" என்று அப்துல்ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?
5. முக்காற்புள்ளி இடம்பெறவேண்டிய இடத்தினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

### சிறுவினா

1. "சித்தர்கள் சமூக உணர்வு கொண்டவர்கள்" – இக்கூற்றை உங்கள் பாடப்பகுதி வழியாக மெய்ப்பிக்க.

2. அப்துல் ரகுமானின் கவிதையிலிருந்து வினா-விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளைத் தருக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 239 23-10-2018 13:42:27

3. ஹைக்கூ கவிதைகள், தத்துவப்பொருளை வெளிக்கொணரும் நுட்பத்தினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

4. "நின் புண்ணியம் அனைத்தும் உதவுக " - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

5. நிறுத்தக்குறிகளின் வகைகளையும், அவை எங்கெங்கு இடம் பெறுதல் வேண்டும் என்பதையும் தொகுத்து எழுதுக.

## நெடுவினா

1. எவற்றையெல்லாம் மாயை என்று கவிக்கோ கருதுகிறார்? மாயையிலிருந்து விடுபட அவர் கூறும் வழிமுறையை ஆராய்க.

2. கண்ணன் கன்னனிடம் வேண்டி நின்ற நிகழ்வை வில்லிபாரதம் வழி விரிவாக எழுதுக.

3. நூலாசிரியன் முன்னுரை என்பது அவரது படைப்புகளின் கொள்கைப் பிரகடனம் என்பதைப் புதுமைப்பித்தனது காஞ்சனையின் முன்னுரை கொண்டு நிறுவுக.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்



இராமலிங்க அடிகள்
(1823 – 1874)

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்னும் வலுவான ஒற்றை வரி நம்முள் அழுத்தமாகப் பதிகிறது. இது, திகட்டாத தெள்ளுதமிழ்த் திருவருட்பா தந்த வள்ளலாரின் கூற்று. அவர் அமைதி, அன்பு வழியிலான சமூகத்தை உருவாக்க விரும்பினார்; கடவுள் என்பது ஒன்றே என்றார்; சாதி, மத, இன, பால் வேறுபாடுகள் கடந்த அருட்பெருஞ்சோதி ஒன்றே இறைவன் என்பதை வலியுறுத்தினார். ஏழு வயதிலேயே கவிபாடும் வல்லமை பெற்றுத் தெய்வமணிமாலை, கந்தர் சரவணப்பத்து ஆகிய நூல்களை உருவாக்கியவர் வள்ளலார். மநு முறை கண்ட வாசகம் என்னும் உரைநடை நூலை நமக்கு நல்கியவர்; ஒழிவில் ஒடுக்கம், தொண்டை மண்டல சதகம், சின்மய தீபிகை ஆகிய நூல்களைப் பதிப்பித்தவர் வள்ளலார். அவர் அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு பாராட்டச் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தைத் தோற்றுவித்தார்; சத்திய தரும சாலையைத் தொடங்கினார். தெய்வங்கள் பல எனச் சொல்லும் உருவ வழிபாட்டை மறுத்தார். பசியின்றி அனைத்து உயிர்களும் இன்பமுடன் வாழ வலியுறுத்திய வள்ளலாரின் சில கொள்கைகள் பின்வருமாறு:

கடவுள் ஒருவரே. அவரைச் சோதி வடிவில் உண்மை அன்பால் வழிபட வேண்டும். சிறுதெய்வ வழிபாடு கூடாது. அத்தெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி கூடாது. புலால் உண்ணலாகாது. சாதி சமயம் முதலிய வேறுபாடுகள் கூடா. எவ்வுயிரையும் தம் உயிர்போல எண்ணி ஒழுகும் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உணர்வைக் கடைப்பிடிக்க வேண்டும். எதிலும் பொது நோக்கம் வேண்டும். புராணங்களும் சாத்திரங்களும் முடிவான உண்மையைத் தெரிவிக்க மாட்டா. மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 240 23-10-2018 13:42:28

### வினாக்களுக்கு விடையளிக்க.

1. அருட்பெருஞ்சோதி – பிரித்து எழுதுக
2. கூடா, கூடாது – பொருள் வேறுபாடு தருக.
3. சத்தியம், தருமம் – இணையான தமிழ்ச்சொல் தருக.
4. விரும்பினார் – இவ்வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றுக.
5. உங்களைக் கவர்ந்த வள்ளலாரின் கருத்து ஒன்றைக் குறிப்பிடுக.

### தமிழாக்கம் தருக.

1. *Successful people have two things on their lips, Silence and smile. Smile to solve problem and silence to avoid problem*
2. *Never try to test good people, because good people are like Mercury, When you hit them they will not break, but they just slip away from your life silently.*
3. *Men must be decided on what they will not do, and then they are able to act with vigour in what they ought to do.*
4. *The happiness of your life depends upon the quality of your thoughts.*
5. *We all have two lives. The second one starts when we realize we have one.*

### தேவையான இடங்களில் நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக.

மொழியே மக்களின் மனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி[1] என்பர். மொழி வளம் பெறுவதும் வறுமையுறுவதும் அம்மொழி பேசும் மக்களின் மனவளத்தை ஒட்டியன.[2] உலகில் எண்ணிறந்த மொழிகள் தோன்றின வளர்ந்தன காலப்போக்கில் பல அழிந்தொழிந்தன சிலவே இன்றளவும் நிலைத்து வாழும் பேற்றினைப் பெற்றிருக்கின்றன அம்மொழிகளுள்ளும் தமிழ் சீனம் போன்ற ஒருசில மொழிகளே பேச்சு வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் பயின்று வருகின்றன வடமொழி கிரேக்கம் இலத்தீன் எபிரேயம் முதலிய வரலாற்றுப் பழமைவாய்ந்த மொழிகள் பேச்சு வழக்கு இழந்து மொழியளவில் நின்றுவிட்டன எனவேதான் பேராசிரியர் சுந்தரனார்

உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்

சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே

என்றார்.

– சி பாலசுப்பிரமணியம் எம் ஏ

1 இலக்கியம் படித்தலின் அறிமுகம் – ஹட்சன் ப 10

2 மொழிக் கல்வி – விட்னி ப 139

### உரை உருவாக்குக.

அறம் எனப்படுவது யாதெனில் . . . என்னும் தலைப்பில் வானொலிக்கான இருபக்க உரைச்சித்திரத்தை உருவாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 241 23-10-2018 13:42:28

**இலக்கியநயம் பாராட்டுக.**

*ஒன்றிலிருந் தொன்றென்னும் உலகநிலை அறிந்தேன்*
*உணவுகளின் பிண்டந்தான் உடலென்ப தறிந்தேன்*
*குன்றுகளும் நிலைமாறிக் குன்றுமென அறிந்தேன்*
*கொள்கைகளே கட்சிகளின் முகமென்ப தறிந்தேன்*
*வென்றவரும் சிலசமயம் தோற்பவரென்ற றிந்தேன்*
*வெறும்பேச்சில் யாதொன்றும் விளையாதென் றறிந்தேன்*
*பொன்னெல்லாம் மண்வயிற்றின் கருவென்ப தறிந்தேன்*
*புகழெல்லாம் அறிவினலங் காரமென்ப தறிந்தேன்.*

– சுரதா



## மொழியோடு விளையாடு

**பழமொழிகளை ஒழுங்கு செய்தபின் வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.**

அ) ஊரக் எறும்பு தேயும் கல்லும்.

ஆ) கைம்மண் கல்லாதது கற்றது உலகளவு அளவு

இ) பயம் இளங்கன்று அறியாது

ஈ) மனமே போதும் பொன் மருந்து என்ற செய்யும்

உ) வையகத்தில் வல்லவன் உண்டு வல்லவனுக்கு

**கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்திப் புதிய புதிய தொடர்களை உருவாக்குக.**

| | | | | |
|---|---|---|---|---|
| சித்தர்கள் | எழுத | கல்லூரி | சென்றேன் | யாழினி |
| கவிதை | எழுதினேன் | வழக்கம் | எழுதுவது | சென்னை |
| நான் | வேண்டும் | கண்டறிந்தனர் | சென்றாள் | சித்தமருத்துவம் |

**அந்தாதித் தொடையின் அடிப்படையில் அடிகளை ஒழுங்குபடுத்துக.**

*ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்*
*உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்மதி*
*முக்குடை நீழற் பொற்புடை ஆசனம்*
*மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை*

**செய்து கற்போம்**

பல்வேறு இலக்கிய வடிவங்களைத் தொகுத்துக் கைளெழுத்து இதழ் ஒன்றை உருவாக்குக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 242 23-10-2018 13:42:28

## நிற்க அதற்குத் தக

### உம்முடைய பொறுப்பை உணர்ந்து கட்டங்களை நிறைவு செய்க

| | |
|---|---|
| உங்களின் நண்பர்கள் தவறு செய்கையில் நீங்கள் அவர்களைத் திருத்துவதற்கு என்ன செய்வீர்கள்? | |
| வகுப்பறையில் பாடம் நடந்து கொண்டிருக்கும் வேளையில், நண்பனுக்கு உடல்நலமில்லாமல் போகிறது. நீங்கள் என்ன செய்வீர்கள்? | |
| சாலையில் ஒரு பறவை அடிபட்டுக்கிடக்கிறது. அதைக் காணும் நீங்கள் என்ன செய்வீர்கள்? | |

### கலைச்சொல் அறிவோம்

**ஆன்மா** – Soul

**அறிவு** – Wisdom

**சித்த மருத்துவம்** – Siddha Medicine

**மாயை** – Illusion

**துன்பம்** – Tragedy

**மாண்பு** – Honour

**நிறுத்தக்குறிகள்** – Punctuation marks

### அறிவை விரிவு செய்

1. என் வாழ்க்கை என் கையில் – ஞாநி
2. மனிதவாழ்வை மாற்றியமைத்த கண்டுபிடிப்பாளர்கள் –ஆர்.கே.வி. கோபாலகிருஷ்ணன், மொழிபெயர்ப்பு – அய்யாசாமி
3. புதுமைப்பித்தன் கட்டுரைகள்

### இணையத்தில் காண்க

http://www.thamizham.net/ithazh/sisae/sis/sis060.htm



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 243 23-10-2018 13:42:28

# இணையச் செயல்பாடு

## சித்தர்கள்

**சித்தர்கள் கதை அறிவோம்!**




### படிகள்:

- *கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி sithar's E-book in Tamil என்னும் செயலியைப் பதிவிறக்கி நிறுவிக் கொள்க.*
- *திரையில் சித்தர்களின் பட்டியல் தோன்றும். அவற்றில் வேண்டியதைத் தேர்வு செய்து வரலாற்றை அறிக.*

**செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :**










**செயல்பாட்டிற்கான உரலி**

https://play.google.com/store/apps/developer?id=shasunder

B123_11_TAM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_221-244.indd 244 23-10-2018 13:42:29

இயல் 10

# யாரையும் மதித்து வாழ்



## கற்றல் நோக்கங்கள்

- கடிதம், எண்ணங்களை வலுவாக வெளிப்படுத்தும் ஓர் ஊடகம் என்பதைக் கற்று, கடிதம் எழுதுதல்
- பாலினச் சமத்துவத்தைப் புரிந்துகொண்டு சமூக வாழ்வியலில் நடைமுறைப்படுத்துதல்
- இலக்கியம்வழி இயற்கை மனிதனுக்கு உதவுவதையும் உணர்த்துவதையும் அறிந்து மதிப்பளித்தல்
- பிழையின்றி எழுதுவதற்கும் பிழைகளைத் திருத்தி எழுதுவதற்கும் பயிற்சி பெறுதல்

## பாடப் பகுதி

தாகூரின் கடிதங்கள்

ஒவ்வொரு புல்லையும் – இன்குலாப்

மனோன்மணீயம் – பெ. சுந்தரனார்

செவ்வி – நர்த்தகி நடராஜ்

மெய்ப்புத்திருத்தம்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 245 23-10-2018 15:51:45

உரைநடை உலகம்

# இயல் 10

## தாகூரின் கடிதங்கள்

J9ZT98




செய்தியை உரியவருக்குத் தெரிவிப்பதற்காக எழுதி அனுப்பப்படுவது கடிதமாகும். அதுவே, உரிய வடிவுடன் பொருட்செறிவாலும் கற்பனை நயத்தாலும் மொழிவளத்தாலும் கடித இலக்கியமாக உருப்பெறுகின்றது. உரைநடையில் மட்டுமன்றிக் காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும்கூடக் கடித இலக்கியம் காணப்படுவது அதன் காலத்தொன்மையை விளக்கும். கவித்துவ இயல்பு கொண்ட தாகூரின் கடிதங்கள் கற்பனை, நகைச்சுவை, ஆழ்ந்த சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

### சிதறிய கடிதங்கள்

*சிலாயிதக்,*

*9 ஆகஸ்ட் 1894*

*ஆறு ஒரேயடியாகக் கரை தளும்ப நிரம்பி இருக்கிறது. எதிர்க் கரையே தென்படவில்லை. ஓரோரிடத்தில் சுழல்களாகப் பொங்குகிறது. மீண்டும் ஓரோரிடத்தில் துள்ளி எழும் வெள்ளத்தைத் தன் இருகரங்களாலும் அடக்கி, அமுக்கிச் சமமாகப் பரவச் செய்தவாறு ஓடுகிறது. இறந்துபோன ஒரு சின்னஞ்சிறு பறவை, ஆற்றுவெள்ளத்தில் மிதந்து வருவதை இன்று கண்டேன். அதனுடைய சாவின் வரலாறு மிகவும் நன்றாகப் புரிந்துவிட்டது.*

*எங்கேயோ ஓர் ஊரின் எல்லையில் ஒரு தோப்பின் மாமரக் கிளையில் அதன் கூடு இருந்தது. இருட்டும் வேளையில் அது அதன் கூட்டுக்குத் திரும்பித் தன் துணையுடன் மிருதுவான சிறகின் வெம்மையில் தானும் தன் சிறகுகளை விரித்துக்கொண்டு உடல் சோர்ந்து உறங்கியது. திடீரென்று இரவில் 'பத்மா' (கிழக்கு வங்காளத்தின் பெரிய நதி) சற்று ஒருபுறமாகப் புரண்டாள். அவ்வளவுதான்! மரத்தின் கீழிருந்த மண் சரிந்து விழுந்தது. கூட்டை விட்டுச் சிதறிவிழுந்த பறவை ஒருகணம் கண் விழித்தது. அதன் பிறகு கண் விழிக்க வேண்டிய அவசியமே அதற்கு இராமல் போய்விட்டது.*

*நாட்டுப்புறங்களில் இருக்கும்போது, எல்லாவற்றையும் விழுங்கவல்ல இந்த மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகிறது. பட்டணத்திலோ, மனித சமுதாயம்தான் மிகவும் முக்கியமானதாகத் தலைதூக்கி நிற்கிறது. அங்கே மனிதனுடைய கொடூரமான தன்மை வெளிப்படுகிறது. தன் சுகதுக்கத்திற்கு முன் மற்ற உயிர்களின் சுகதுக்கங்களைப் பற்றி மனிதன் எண்ணுவதுகூட இல்லை.*

*ஐரோப்பாவிலும் மனிதனுக்குத்தான் முக்கியமான இடம். அவனுடைய வழியோ மிகச் சிக்கலானது. அவர்கள் மற்ற பிராணிகளைச் சாதாரணமான உயிர்களென்றே நினைத்து விடுகிறார்கள். பாரத நாட்டினர், மனிதன் விலங்காக மாறுவதையோ, விலங்கு மனிதனாக மாறுவதையோ பற்றி எதுவும் தவறுதலாக எண்ணுவது இல்லை. அதனால்தான் நமது சாத்திரங்கள் எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுவதை, நடக்கமுடியாத ஓர் அதிசயம் என்று விட்டுவிடவில்லை.*

*நாட்டுப்புறங்களில் இயற்கையோடு ஒன்றி உடனுக்குடன் இணைந்து பழகும்போது என் உள்ளத்தினுள் பாரத நாட்டின் இயல்பு தலைதூக்குகிறது. ஒரு பறவையின் சின்னஞ்சிறு இதயத்தினுள்ளும் வாழ்க்கையின் களிப்பு எத்துணை அதிகமாக இருக்கும் என்பது பற்றிச் சிந்திக்காமல் இருக்க என்னால் முடிவதில்லை.*

(சிதறிய பக்கங்கள். *113 ஆம் கடிதம்*)




athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 246 23-10-2018 15:51:45

## வழியிலும் வழிமுடிவிலும்



*16, செப்டம்பர் 1929*

*மரத்தின் கிளையில் பூ மலர்கிறது. அதற்குப் புகலிடம் அதுதான். ஆனால், மனிதன் அதற்குப் பெயரிட்டுத் தன் உள்ளத்தினுள் இடம் அளிக்கின்றான். நமது நாட்டில் மரங்களில் மலரும் பூக்கள் பல உள்ளன. மனிதன் அவை அனைத்தையும் மனத்தினுள் ஏற்றுக்கொள்ளவில்லை.*

*மலரிடம் இவ்வளவு அலட்சிய மனப்பான்மை வேறு எந்த நாட்டிலும் காணப்படுவதில்லை. அதற்குப் பெயர் இருக்கலாம். ஆனால், அது தெரியாததாக இருக்கும். சில மலர்கள் தங்கள் இன்மணத்தின் வலிமையால் புகழ்பெற்றுவிட்டன. அதாவது அலட்சியமாக அவற்றைப் பாராமல் சென்றாலுங்கூட அவை தாமாக முன் வந்து மணத்தினால் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கின்றன. நமது இலக்கியங்களில் அவை தவறாமல் அழைப்பைப் பெறுகின்றன. அவற்றுள் பல மலர்களின் பெயர்களை மட்டுமே நாம் அறிவோம். அவைகளைக் கண்டதுமில்லை. அவற்றைத் தெரிந்துகொள்ளும் முயற்சியையும் நாம் எடுத்துக்கொள்ளவில்லை.*

*பெயரகராதியில் ஜுதீ, ஜாதீ என்றெல்லாம் படிக்கின்றோம். யாப்பு சரிவர அமைந்துவிட்டால் நாம் களிப்பெய்துகின்றோம். ஆனால் 'ஜாதி' என்பது எது, 'ஜுதி' என்பது எது என்றெல்லாம் ஆராய நமக்கு ஆவல் பிறப்பதில்லை. பலவாறு முயற்சி செய்தபின் 'ஜாதீ' என்பது முல்லை வகையில் ஒரு பூ (சமேலி) என்பதைத் தெரிந்துகொண்டேன். ஆனால், 'ஸேவுந்தி' என்பது எந்த மலரின் பெயர் என்பது இன்றுவரையிலும் பலரைக் கேட்டும் பதில் கிடைக்கவில்லை.*

*சாந்திநிகேதனத்தில் ஒரு மரம் இருக்கிறது. அதனை 'பியால' என்று அழைக்கிறார்கள். ஆனால், ஸம்ஸ்கிருத காவியங்களில் புகழ்பெற்ற அந்த மரத்தைப்பற்றி எத்தனை பேருக்குத் தெரியுமோ! இன்னொரு விஷயத்தைப் பாருங்கள். ஆறுகள் விஷயத்தில் நமது உள்ளத்தில் இந்த அலட்சியம் இல்லை. மிகவும் சிறிய ஆறுகூட நமது மனத்தில் பிடித்தமாக இடம் பெற்றுள்ளது. புறாக்கண்ணி (கபோதாக்ஷி), மயில் விழியாள் (மயூராக்ஷி), விருப்புடையவள் (இச்சாமதி) என்றெல்லாம்! அவை அன்றாடம் நமக்கு உபயோகப்படுகின்றன. பூஜைக்குத் தேவையான மலர்களைத் தவிர வேறு எந்தப் பூக்களுடனும் நமக்கு அறிமுக அவசியம் எதுவும் இல்லை.*

*நாகரிக வழக்கத்தில் காலத்துக்கேற்றபடி சீக்கிரமே வாடிடும் மலர்களுடன் தொடர்பு உண்டு. தோட்டக்காரனுடைய கைகளில் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு இருக்கும். மலர்ச் செப்பினுள் வழக்கம்போல் போவதும் வருவதும்தான் அவற்றின் வேலை. இதைத்தான் தாமஸிகம் அதாவது 'மெடீரியலிஸம்' என்கின்றோம். ஸ்தூலப் பொருளுக்கு அப்பால் செல்ல இயலாமல் நம் மனம் திகைப்படைந்து நின்றுவிடுகிறது. இது போன்ற பெயரில்லா மலர்களின் நாட்டில் கவிஞரின் நிலை எவ்வளவு மோசமானது என்பதை யோசித்துப் பார். மலர்களின் ராஜ்யத்தில் அவனுடைய பேனாவின் நடமாட்டம் எத்துணைக் குறுகியது!*

*பறவைகள் விஷயத்திலும் இதேமாதிரிதான். காகம், குயில், மைனா, 'பௌ-கதா-கவோ' (இந்தச் சொற்களைப்போல் குரல் பயிற்றும் ஒரு புறா இனம்.) இவைகளை எப்படி விட்டுவிட முடியும்? ஆனால், எத்தனையோ நேர்த்தியான புட்கள் உள்ளன. அவைகளின் பெயர் அநேகமாகச் சாதாரண ஜனங்களுக்குத் தெரிந்திருக்கா. இயற்கையிடம் இந்த அலட்சிய மனப்பான்மைதான் நம்முடைய தோல்விகளுக்கெல்லாம் மூல காரணம். இந்தச் சுபாவம் காரணமாகத்தான் நாட்டு மக்களிடமும் நமது அலட்சிய மனப்பான்மை தீவிரமாகத் தலைதூக்குகிறது.*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 247 23-10-2018 15:51:45

பரீட்சையில் தேறவேண்டின் சரித்திரப் பாடத்தைப் புறக்கணிக்க முடியாது. நமது தேசப்பற்று அந்தப் புத்தக மூட்டையால் உருவானது. தேசத்து மக்களிடம் கொண்டுள்ள பற்றுதலின் காரணமாக உண்டானதல்ல. நமது உலகம் எத்துணை குறுகலானது என்பதை யோசித்துப் பார். அதிலிருந்து எத்தனை பொருள்கள் இடம் பெறவில்லை என்பதையும் நினைத்துப் பார்.

(வழியிலும் வழிமுடிவிலும் – 42 ஆம் கடிதம்)



தாகூரின் கையொப்பம்

## நூல்வெளி

'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்றும் 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தம் 16ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார். 1913ஆம் ஆண்டு கீதாஞ்சலி என்ற கவிதை நூலுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றார். 1919ஆம் ஆண்டு நடைபெற்ற ஜாலியன்வாலா பாக் படுகொலையால் மனம் வருந்திய தாகூர், ஆங்கிலேய அரசைக் கண்டித்து அவர்கள் வழங்கிய 'சர்' பட்டத்தைத் திருப்பி அளித்தார். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இசைப் பாடல்கள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகள், ஏறக்குறைய இருபது பெரு நாடகங்கள், குறு நாடகங்கள், எட்டு நாவல்கள், எட்டுக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுப்புகள் என இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களிலும் நூல்களை எழுதியுள்ளார். அவற்றுடன் அவருடைய ஓவியப் படைப்புகள், பயணக் கட்டுரைகள், ஆங்கில மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றையும் இணைத்துக்கொண்டால் அவருடைய ஆளுமையின் பேருருவை அறிய முடியும். குழந்தைகள் இயற்கையின் மடியில் எளிமையாக வளர்க்கப்பட வேண்டும். தங்கள் வேலையைத் தாங்களே கவனித்துக்கொண்டு, மற்றவர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டு 1921இல் விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவினார். 'குருதேவ்' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் தாகூரின் 'ஜனகணமன' என்னும் பாடல் இந்தியாவின் நாட்டுப் பண்ணாகவும் 'அமர் சோனார் பங்களா' என்னும் பாடல் வங்காள தேசத்தின் நாட்டுப் பண்ணாகவும் இன்றும் பாடப்பட்டு வருகின்றன.

சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள தாகூரின் கடிதங்கள் என்னும் நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் த.நா. குமாரசுவாமி. அவர் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, வங்கம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். வங்க அரசு, தமிழ்–வங்க மொழிகளுக்கு அவர் ஆற்றிய தொண்டைப் பாராட்டி 'நேதாஜி இலக்கிய விருது' அளித்துச் சிறப்பித்துள்ளது.

## கற்பவை கற்றபின்...

1. நேரு, இந்திராவிற்கு எழுதிய கடிதம் ஒன்றை வகுப்பறையில் படித்து அது குறித்துக் கலந்துரையாடுக.
2. உங்களது சுவையான பயண அனுபவம் ஒன்றைக் கடிதமாக எழுதுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 248 23-10-2018 15:51:45

# ஒவ்வொரு புல்லையும்

JA9PAY




காக்கை குருவி எங்கள் ஜாதி என்னும் மகாகவி கூற்றின் நீட்சியே, 'கூவும் குயிலும் கரையும் காகமும் விரியும் எனது கிளைகளில் அடையும்' என்னும் இன்குலாபின் குரலாகவும் ஒலிக்கிறது. தம் எழுத்துகள் எளிய மக்களுக்கானவை என்னும் உறுதியுடன் எண்ணம், சொல், செயல் என்ற மூவகையிலும் நின்று வாழ்ந்தவர். அவர் பெயர் சொல்லி அழைக்க ஆசைப்பட்ட ஒவ்வொரு புல்லும் இந்த உண்மையை நமக்குச் சொல்லிக்கொண்டே இருக்கும்.

ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்
பறவைகளோடு எல்லை கடப்பேன்
பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும்
எனக்குத் தெரிந்த சொல்லால் விளிப்பேன்
நீளும் கைகளில் தோழமை தொடரும்
நீளாத கையிலும் நெஞ்சம் படரும்
எனக்கு வேண்டும் உலகம் ஓர் கடலாய்
உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்
கூவும் குயிலும் கரையும் காகமும்
விரியும் எனது கிளைகளில் அடையும்
போதியின் நிழலும் சிலுவையும் பிறையும்
பொங்கும் சமத்துவப்புனலில் கரையும்
எந்த மூலையில் விசும்பல் என்றாலும்
என் செவிகளிலே எதிரொலி கேட்கும்
கூண்டில் மோதும் சிறகுகளோடு
எனது சிறகிலும் குருதியின் கோடு
சமயம் கடந்து மானுடம் கூடும்
சுவர் இல்லாத சமவெளி தோறும்
குறிகள் இல்லாத முகங்களில் விழிப்பேன்
மனிதம் என்றொரு பாடலை இசைப்பேன்.

*- இன்குலாப்*

## நூல்வெளி



சாகுல் அமீது என்னும் இயற்பெயருடைய இன்குலாப் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு என இலக்கியத்தில் விரிவான தளங்களில் இயங்கியவர். அவருடைய கவிதைகள், 'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்' என்ற பெயரில் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. மரணத்துக்குப் பிறகு அவருடைய உடல், அவர் விரும்பியபடி செங்கை அரசு மருத்துவக் கல்லூரிக்கு அளிக்கப்பட்டது.

## கற்பவை கற்றபின்...



1. மனிதநேயம் பேசும் கவிதைகள் எவையேனும் ஐந்தைத் திரட்டி வகுப்பில் பகிர்க.
2. இயற்கையும் மனிதனும் என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 249 23-10-2018 15:51:46

கவிதைப்பேழை

இயல் 10

# மனோன்மணீயம்

JAIKCI

நுழையும்முன்

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய மனோன்மணீயம் மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் வீர உணர்வையும் ஊட்டுவதாகத் திகழ்கிறது. இது, தமிழன்னை பெற்ற நல் அணிகலனாகும். நாடகத்துறைக்குத் தமிழில் நூல்கள் இல்லையே என்ற குறையினைத் தீர்க்க வந்த மனோன்மணீயம் என்னும் இந்நாடக நூல், காப்பிய இலக்கணம் முழுதும் நிரம்பிய நூலாக விளங்குகிறது. இயற்கையில் ஈடுபாடுகொண்டு, அதனில் தோய்ந்து இணையில்லாத ஊக்கமும் அமைதியும் பெற்றவர்கள் தமிழர்கள் என்பதைக் கூறுவதாக உள்ளது இந்நூல்.

*சுந்தர முனிவர் தனது அறையிலிருந்து ஆசிரமம் வரை யாரும் அறியாவண்ணம் சுரங்கம் அமைக்கும் பணியை நடராசனுக்கு அளித்திருந்தார். நடராசனும் அப்பணியை ஓரளவு முடித்துவிட்டான். 'இன்னும் சிறுபகுதி வேலை ஆசிரமத்தில் செய்ய வேண்டியுள்ளது. அதுவும் இன்றிரவு முடிந்துவிடும்' என்று எண்ணிக்கொண்டு காலை வேளையில் ஊரின் புறமாக நடராசன் தனித்திருந்தான். அப்போது தனக்குத்தானே பேசிக்கொள்கிறான்.*



**மூன்றாம் அங்கம், இரண்டாம் களம்**

இடம் : ஊர்ப்புறத்து ஒரு சார்

காலம் : எற்பாடு

நடராசன் (தனிமொழி)

### இலக்கு வேண்டும்

*காலையில் கடிநகர் கடந்து நமது*
*வேலை முடிக்குதும், வேண்டின் விரைவாய்*
*இன்று இரா முடிக்கினும் முடியும்; ....*
*எவ்வினை யோர்க்கும் இம்மையில் தம்மை*
*இயக்குதற்கு இன்பம் பயக்கும்ஓர் இலக்கு*
*வேண்டும்; உயிர்க்கு அது தூண்டுகோல் போலாம்.*
*ஈண்டு எப்பொருள்தான் இலக்கற்று இருப்பது?*

**சொல்லும் பொருளும்**

*கடிநகர் – காவல் உடைய நகரம்*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 250 23-10-2018 15:51:46

### புல்லின் பரிவு

*இதோ ஓ! இக்கரை முளைத்தஇச் சிறுபுல்*
*சதா தன் குறிப்பொடு சாருதல் காண்டி;*
*அதன்சிறு பூக்குலை அடியொன்று உயர்த்தி*
*இதமுறத் தேன்துளி தாங்கி ஈக்களை*
*நலமுற அழைத்து நல்லூண் அருத்திப்*
*பதமுறத் தனதுபூம் பராகம் பரப்பித்து*
*ஆசுஇலாச் சிறுகாய் ஆக்கி, இதோ! தன்*
*தூசிடைச் சிக்கும் தோட்டியும் கொடுத்தே*
*"இவ்வயின் யாமெலாம் செவ்விதில் துன்னில்*
*தழைப்பதற்கு இடமிலை; சிறார்நீர் பிழைப்பதற்கு*
*ஏகுமன், புள் ஆ எருது அயத்து ஒருசார்*
*சிக்கிநீர் சென்மின்!" எனத்தன் சிறுவரைப்*
*புக்கவிட் டிருக்கும்இப் புல்லின் பரிவும்*
*பொறுமையும் புலனுங் காண்போர், ஒன்றையும்*
*சிறுமையாச் சிந்தனை செயாதுஆங்காங்கு*
*தோற்றுபே ரழகும் ஆற்றல்சால் அன்பும்*
*போற்றுதம் குறிப்பிற்கு ஏற்றதோர் முயற்சியும்*
*பார்த்துப் பார்த்துத் தம்கண் பனிப்ப,*
*ஆர்த்தெழும் அன்பினால் அனைத்தையுங் கலந்துதம்*
*என்பெலாம் கரைக்கும்நல் இன்பம் திளைப்பர்*

### சொல்லும் பொருளும்

காண்டி – காண்க; பூம்பராகம் – பூவில் உள்ள மகரந்தம்; ஆசு இலா – குற்றம் இலாத; தோட்டி – துறட்டி; அயம் – ஆடு, குதிரை; புக்க விட்டு – போகவிட்டு.

### வாய்க்காலின் விசித்திரம்

*தமக்குஊண் நல்கும் வயற்குஉப யோகம்*
*எனப்பலர் கருதும் இச்சிறு வாய்க்கால்*
*செய்தொழில் எத்தனை விசித்திரம்! ஐயோ!*
*அலைகடல் மலையா மலையலை கடலாப்*
*புரட்டிட அன்றோ நடப்பதிச் சிறுகால்!*
*பார், இதோ! பரற்களை நெறுநெறென் றரைத்துச்*
*சீரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்*
*தன்வலிக்கு அடங்கிய மண்கல் புல்புழு*
*இன்னதென்று இல்லை; யாவையும் ஈர்த்துத்*
*தன்னுள் படுத்தி முந்நீர் மடுவுள்*
*காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்*
*சாலத் தகும்இவை எனஓர்ந்து உருட்டிக்*
*கொண்டு சென்று இட்டுமற்று "ஐயா,*
*அண்ட யோனியின் ஆணையின் மழையாய்ச்*
*சென்றபின் பெருமலைச் சிகரம் முதலாக்*
*குன்றுவீழ் அருவியாய்த் தூங்கியும் குகைமுகம்*
*இழிந்தும் பூமியின் குடர்பல நுழைந்தும்*
*கதித்தெழு சுனையாய்க் குதித்தெழுந்து ஓடியும்,*
*ஊறிடும் சிறிய ஊற்றாய்ப் பரந்தும்*
*ஆறாய் நடந்தும், மடுவாய்க் கிடந்தும்*
*மதகிடைச் சாடியும், வாய்க்கால் ஓடியும்*
*பற்பல பாடுயான் பட்டங்கு ஈட்டியது*
*அற்பமே ஆயினும் ஆதர வாய்க்கொள்;*
*இன்னமும் ஈதோ ஏகுவன் எனவிடை*
*பின்னரும் பெற்றுப் பெயர்த்தும் எழிலியாய்*
*வந்துஇவண் அடைந்து, மற்றும் இராப்பகல் மறந்து*
*நிரந்தரம் உழைக்கும்இந் நிலைமையர் யாவர்?*
*(நீரைக் கையால் தடுத்து)*
*நிரந்தரம்! ஐயோ! நொந்தனை! நில்! நில்!*
*இரைந்ததென்? அழுவையோ? ஆயின் ஏகுதி*
*நீரே! நீரே! என்னை உன் நிலைமை?*
*யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்?*
*நீக்கமில் அன்பும் ஊக்கமும் உறுதியும்*
*உன்னைப்போல் உளவேல் பிணைப்பேறு என்னை?*

### சொல்லும் பொருளும்

சீரியதூளி – நுண்ணிய மணல்; சிறுகால் – வாய்க்கால்; பரல் – கல்; முந்நீர் மடு – கடலாகிய நீர்நிலை; அண்டயோனி – ஞாயிறு; சாடு – பாய்; ஈட்டியது – சேகரித்தது; எழிலி – மேகம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 251 23-10-2018 15:51:46

## நாங்கூழ்ப்புழுவின் பொதுநலம்

## (நாங்கூழ்ப் புழுவை நோக்கி)

*ஓகோ! நாங்கூழ்ப் புழுவே! உன்பாடு*
*ஓவாப் பாடே. உணர்வேன்! உணர்வேன்!*
*உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில்மிகும்*
*உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ.*
*எம்மண் ணாயினும் நன்மண் ணாக்குவை*
*விடுத்தனை இதற்கா, எடுத்தஉன் யாக்கை.*
*உழுதுழுது உண்டுமண் மெழுகினும் நேரிய*
*விழுமிய சேறாய் வேதித்து உருட்டி*
*வெளிக்கொணர்ந் தும்புகழ் வேண்டார் போல*
*ஒளிக்குவை உன்குழி வாயுமோர் உருண்டையால்!*
*இப்புற் பயிர்நீ இங்ஙனம் உழாயேல்*
*எப்படி உண்டாம்? எண்ணாது உனக்கும்*
*குறும்புசெய் எறும்பும் கோடி கோடியாய்ப்*
*புழுக்களும் பூச்சியும் பிழைக்குமா றென்னை?*
*ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள?*
*(நாங்கூழ்ப்புழு குழிக்குள் மறைதலை நோக்கி)*
*விழுப்புகழ் வேண்டலை. அறிவோம், ஏனிது?*
*துதிக்கலம். உன்தொழில் நடத்துதி. ஆ! ஆ!*
*எங்கும் இங்ஙனே இணையிலா இன்பும்*
*பங்கமில் அன்பும் தங்குதல் திருந்தக்*
*காணார் பேணும் வாணாள் என்னே?*

*அடிகள் 13–25*

*– மனோன்மணீயம் சுந்தரனார்*

## சொல்லும் பொருளும்

*நாங்கூழ்ப்புழு – மண்புழு; பாடு-உழைப்பு; ஓவா-ஓயாத; வேதித்து – மாற்றி.*

## இலக்கணக் குறிப்பு

கடி நகர், சாலத் தகும் – உரிச்சொற்றொடர்கள்; உருட்டி – வினையெச்சம்; பின்னிய,முளைத்த – பெயரெச்சங்கள்; இளமுகம், நல்லூண்,சிறுபுல், பேரழகு, முந்நீர், நன்மண் – பண்புத்தொகைகள்; பூக்குலை – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; ஆசிலா, ஓவா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்; ஏகுமின் – ஏவல் பன்மை வினைமுற்று; பார்த்துப் பார்த்து, நில் நில், உழுதுழுது – அடுக்குத் தொடர்கள்; வாய்க்கால் – இலக்கணப் போலி (முன் பின் தொக்கியது); செய்தொழில், அலைகடல், வீழருவி – வினைத்தொகைகள்; மலையலை, குகைமுகம் – உவமைத்தொகைகள்; நெறுநெறு – இரட்டைக்கிளவி; புல்புழு, இராப்பகல் – உம்மைத்தொகைகள்; காலத்தச்சன் – உருவகம்; ஏகுதி – ஏவல் ஒருமை வினைமுற்று; புழுக்களும் பூச்சியும் – எண்ணும்மை; தங்குதல் – தொழிற்பெயர்.

## பகுபத உறுப்பிலக்கணம்

**முளைத்த – முளை + த் + த் + அ**

முளை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

**ஏகுமின் – ஏகு + மின்**

ஏகு – பகுதி, மின் – ஏவல் வினைமுற்று விகுதி.

### தமிழ் நாடக இலக்கண நூல்கள் சில

1. அகத்தியம்
2. குணநூல்
3. கூத்தநூல்
4. சந்தம்
5. சயந்தம்
6. செயன்முறை
7. செயிற்றியம்
8. முறுவல்
9. மதிவாணனார் நாடக இலக்கண நூல்
10. நாடகவியல்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 252 23-10-2018 15:51:46

**விடுத்தனை – விடு + த் + த் + அன் + ஐ**

விடு – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, ஐ – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

**சென்ற – செல் (ன்) + ற் + அ**

செல் – பகுதி, ('ல்' 'ன்' ஆனது விகாரம்), ற் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

### புணர்ச்சி விதி

**காலத்தச்சன் – காலம் + தச்சன்**

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் – கால + தச்சன்

வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் – காலத்தச்சன்

**உழுதுழுது – உழுது + உழுது**

உயிர் வரின் உக்குறள் மெய் விட்டோடும் உழுத் + உழுது

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – உழுதுழுது.

**பேரழகு – பெருமை + அழகு**

ஈறு போதல் – பெரு + அழகு

ஆதி நீடல் – பேரு + அழகு

இனையவும் – பேர் + அழகு (உகரம் கெட்டது)

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – பேரழகு

#### நூல்வெளி

மனோன்மணீயம் தமிழின் முதல் பா வடிவ நாடக நூல். லிட்டன் பிரபு எழுதிய 'இரகசிய வழி' (The Secret Way) என்ற நூலைத் தழுவி 1891இல் பேராசிரியர் சுந்தரனார் இதைத் தமிழில் எழுதியுள்ளார். இஃது எளிய நடையில் ஆசிரியப்பாவால் அமைந்தது. இந்நூல் ஐந்து அங்கங்களையும் இருபது களங்களையும் கொண்டது. நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துடன் தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம் பெற்றுள்ளது. மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை 'சிவகாமியின் சரிதம்'.

பேராசிரியர் சுந்தரனார் திருவிதாங்கூரில் உள்ள ஆலப்புழையில் 1855இல் பிறந்தார். திருவனந்தபுரம் அரசுக் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றி உள்ளார். சென்னை மாகாண அரசு இவருக்கு ராவ்பகதூர் என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது. இவருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தமிழக அரசு, இவர் பெயரால் திருநெல்வேலியில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவியுள்ளது.

#### கற்பவை கற்றபின்...

1. "இப் புல்லின் பரிவும் பொறுமையும் புலனுங் காண்போர், ஒன்றையும் சிறுமையாச் சிந்தனை செயாது" என்னும் பாடல் அடிகளுடன்,

   "ஆயிரம் மிதிபடல்களிலும்
   நிமிர்ந்து நிற்கும்
   புற்களே உன்
   வழிகாட்டி" – என்ற புதுக்கவிதை வரிகளை ஒப்பிட்டு உங்கள் கருத்துகளை உரைக்க.

2. நாங்கூழ்ப்புழு நடராசனிடம் பேசியிருந்தால்... –ஒருபக்க அளவில் உரையாடலை எழுதுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

விரிவானம்

இயல் 10

# செவ்வி

– நர்த்தகி நடராஜ்

JASGE6

**நுழையும்முன்**

முத்தமிழ் வளர்த்த மதுரையில் பிறந்து தம் நாட்டியத் திறமையினால் உலகம் முழுவதும் எண்ணற்ற ரசிகர்களைப் பெற்றவர். தன்னம்பிக்கை, உழைப்பு, விடாமுயற்சிகொண்டு நாட்டியக்கலையில் தமக்கெனத் தனியிடத்தைப் பெற்றவர். சிறுபான்மையிலும் சிறுபான்மையினராக வாழும் திருநங்கைகளுக்கு மட்டுமே இருக்கும் தடைக்கற்களையும் கூடப் படிக்கட்டுகளாக மாற்றலாம் என்று உலகுக்குக் காட்டியவர்; அவர், நர்த்தகி நடராஜ்.

அமெரிக்காவில் ஒரு நடன நிகழ்ச்சிக்காகத் தமிழகத்தைச் சேர்ந்த பரதநாட்டியக் கலைஞர் ஒருவரை விழா ஏற்பாட்டாளர்கள் அழைத்திருந்தனர். வந்திறங்கியவரைப் பார்த்து அதிர்ந்த அவர்கள், இரண்டு வாரங்கள் நடைபெறுவதாக இருந்த நிகழ்ச்சியை ஒரே நாள் நிகழ்ச்சியாக மாற்றினர். காரணம் அறிந்த அந்தக் கலைஞர், மனக்கலக்கத்துடன் முதல் நாள் நிகழ்வில் கலந்து கொண்டார். மேடைக்குச் சென்றார்; நடனத்தைத் தொடங்கினார். அவருடைய கால் சலங்கை சப்தம் மேடையை நிறைக்க, அரங்கம் அமைதியானது.

கண்களில் நவரசம், கால்களில் துடிப்பு, உயிரோட்டமான உடல்மொழி என இதுவரையிலும் கண்டிராதவொரு புதுமையான உலகுக்குப் பார்வையாளர்களை, அவருடைய நடனம் விரல்பிடித்து அழைத்துச் சென்றது. அரங்கத்திலிருந்து எழுந்த கரவொலியில் அவருடைய கவலைகள் கரைந்தன. ஒரு நாளோடு முடிவதாக இருந்த அவருடைய நடன நிகழ்ச்சி, இரண்டு மாதங்கள் நீண்டது. அந்த நடனக் கலைஞர் நர்த்தகி நடராஜ்.

அவரைத்தான் நாம் நம்முடைய பள்ளி ஆண்டுமலருக்காக இன்றைக்கு நேர்காணல் செய்யப் போகிறோம். அவரைச் சந்திப்போமா?

**வணக்கம் நர்த்தகி. உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. உங்கள் இளமைப்பருவத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.**

நான் மதுரையில் உள்ள அனுப்பானடியைச் சேர்ந்தவள். என் தோழியின் பெயர் சக்தி. நானும் அவளும் ஒன்றாகவே நடனம் பயின்றோம். ஐந்து வயதில் தொடங்கிய எங்கள் நட்பு இன்றுவரையிலும் தொடர்கிறது.

என் முன்னேற்றத்தைத் தன் முன்னேற்றமாகக் கருதும் சக்தி இல்லையேல் நான் இந்த அளவுக்கு வளர்ந்திருக்க முடியாது.

**நீங்கள் யாரிடம் நடனம் கற்றீர்கள்?**

இளமையில் வைஜெயந்தி மாலாவின் நடனத்தால் ஈர்க்கப்பட்டு அவருடைய குருவான தஞ்சை கிட்டப்பாவிடம் பரதம் கற்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் சென்று அவரிடம் என் ஆசையைத் தெரிவித்தேன். தொடக்கத்தில் அவர் இசைவு தரவில்லை. ஓராண்டு விடாமுயற்சியுடன் போராடி இறுதியில் வெற்றி பெற்றேன்.

கிட்டப்பா என்னைத் தம் மகளாகவே ஏற்று, தம் இல்லத்திலேயே தங்க வைத்துப் பரதம் கற்றுக் கொடுத்தார். அவரே 'நர்த்தகி' என்று எனக்குப் பெயர் சூட்டினார்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 254 23-10-2018 15:51:46

**நீங்கள் பெண்மையை உணர்ந்ததால் பரதம் கற்றீர்களா? பரதம் கற்றதால் பெண்மையை உணர்ந்தீர்களா?**

இது ரெட்டைச்சடை மாதிரி. ஒன்றோடு ஒன்று பிணைந்தது. பெண்மையை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாகப் பரதம் இருந்தது. பரதத்தில் ஊறித் திளைத்தபோது பெண்மை புதிதாகப் பிறந்தது. பரதத்தில் பெண்மையை வெளிப்படுத்தும் நொடி இருக்கிறதே, அது வார்த்தைகளில் சொல்ல முடியாத உணர்வு. நதியலையில் விழுந்த இலைபோல, காற்றில் பறக்கும் இறகுபோல, மனம் அதன்போக்கில் செல்லும். எல்லாக் கட்டுகளையும் உடைத்தெறிந்த நிம்மதி அந்த வினாடியில் கிடைக்கும். ஒரு வகை ஆழ்ந்த மயக்கம். கனவுலகின் சஞ்சாரம். அந்த விநாடியில் உலகத்தையே மறந்து பறந்துகொண்டிருப்பேன்.

**நீங்கள் தொடக்கத்தில் ஆடத் தொடங்கியதில் இருந்து இப்போது ஏதேனும் மாற்றத்தை உணர்கிறீர்களா?**

என்னுடைய குழந்தைப் பருவத்திலேயே எனக்குள் மறைந்திருந்த பெண்மையைக் கண்டுகொண்டேன். எந்த மனத்தடையுமின்றி என்னை உணர்த்துவதற்கு நடனம் உதவி செய்தது. தொடக்கத்தில் திரைப்படங்களில் வரும் நடனம் என்னை ஈர்த்தது. அதைப் பார்த்து நான் நடனம் ஆடத் தொடங்கினேன். நிகழ்ச்சிக்காக ஆடத் தொடங்கியபோது ஒவ்வொரு நிகழ்வும் மூன்று மணி நேரம் எடுத்துக் கொள்ளும். இன்றுபோல் அல்லாமல் நாட்டியத்தைவிட அதன் உட்கூறுகளை அறிமுகம் செய்வதற்கு அதிக நேரமும் காலமும் ஆகும். சில சமயங்களில் நாட்டியத்திற்கான கருத்தை ராக தாளத்துடன் அறிமுகம் செய்வேன்.



**உங்களைப் போன்ற திருநங்கையர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய நீங்கள், பரதம் ஆடிக்கொண்டிருக்கிறீர்களே?**

தொன்மை வாய்ந்த தமிழர் மரபில் பிறந்த நான் திருநங்கையர்க்கான இடம் என்ன என்பதை அறிய நினைத்தேன். அதுவே இலக்கியத்தின் பக்கம் என்னைத் தள்ளியது. சங்க இலக்கியத்தில் இருந்து சிற்றிலக்கிய காலம் வரை ஆழ்ந்து படித்தேன். இன்று மட்டுமல்ல எல்லாக் காலகட்டத்திலும் திருநங்கையர் இருந்திருக்கின்றனர். தொல்காப்பியத்திலும் அதற்கான சான்று இருக்கிறது. சிலப்பதிகாரத்தில் 11 வகையான ஆடற்கலைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. அதிலும் 'வேளிர் ஆடல்' முக்கியமானது. தமிழச்சி என்பதில் தாளாத பெருமை கொண்ட நான் பரதத்தின் பக்கம் திரும்பினேன். நம் கலையை நாம் ஆடவில்லையானால் வேறு யார் ஆடுவது? சங்க இலக்கியம் தொடங்கித் தற்போதைய நவீன கவிதை வரையிலும் நடனத்தில் முயல்கிறேன். இதுவும் ஒரு வகை விழிப்புணர்வு ஆயுதம்தான்.

**வெகுசன மக்களின் நேரடித் தொடர்பில் இல்லாத கலைவடிவத்தை நிகழ்த்துகிறோம் என்ற எண்ணம் உங்களுக்கு எப்போதாவது வந்ததுண்டா?**

பரத நாட்டியத்தை, வெகுசன மக்களின் கலை இல்லை என்பதை நான் முற்றிலும் மறுக்கிறேன். பரதம் என்ற சொல்லுக்கு வெறும் எழுபது வயதுதான் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். பரத நாட்டியம் நிகழ்த்துபவர்களை ஒதுக்கிவிட்டு அவர்களை ஒரு சாரார் எனக் குறுக்கி வைத்தது நம்முடைய தவறு. கலையை எல்லோரும் நுகரவேண்டும். அட்லாண்டாவிலும்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 255 23-10-2018 15:51:46

ஆண்டிபட்டியிலும் ஒரே மாதிரிதான் பரதம் நிகழ்த்துகிறேன். மக்களும் அதைச் சரியாக உள்வாங்கிக் கொள்கின்றனர்.

**உங்கள் அபிநயத்தில் வெளிப்படும் நுட்பமான முத்திரைகளை மக்கள் சரியான முறையில் உள்வாங்கிக் கொள்கின்றனரா?**

சமீபத்தில் ஜப்பானிலுள்ள ஒசாகா நகரத்திற்குச் சென்றிருந்தபோது திருவாசக, தேவாரப் பண்ணிசைப் பாடல்களைப் பரதமாக நிகழ்த்தினேன். அங்குத் தமிழர்களும் இல்லை; இந்தியர்களும் இல்லை; முழுக்க ஜப்பானியர்கள். அவர்களுக்குப் பரதம், தேவாரம், திருவாசகம் எதுவும் தெரியாது. ஆனால், அந்த அபிநயத்தில் அவர்கள் கண்கலங்கியதும் அங்கு நிலவிய மௌனமும் எழுந்த கரகோஷமும் என்னால் மறக்க முடியாதது. எந்த அளவுக்குப் பரதத்தை அவர்கள் முழுமையாக உள்வாங்கினர் என்பதை நான் புரிந்துகொண்டேன்.

**உலகமயமாக்கலுக்குப்பின் தமிழகத்தில் பண்பாட்டு மாற்றம் நடந்திருப்பதை மறுக்க முடியாது. காப்பியம், புராணக் கதைகளை மையமாக வைத்து நீங்கள் பரதம் நிகழ்த்துகிறீர்கள். இதன்மூலம், இழந்த பண்பாட்டை மீட்க முடியும் என நினைக்கிறீர்களா?**

நமக்கென்று பெரிய பண்பாட்டு மரபு இருக்கிறது. வாழ்வாங்கு வாழ்ந்தவர் நாம். நம் வேர்களை நாம் புறக்கணிக்கக் கூடாது. ஐரோப்பியப் பண்பாட்டில் ஊறித் திளைத்திருக்கும் நார்வேயில் நிகழ்ச்சி நடத்தும்போது, திருக்குறளை மையமாக வைத்தே மாணவிகளுக்குப் பயிற்சி கொடுத்தேன். அந்த வினாடியில் இருந்து திருக்குறளை ஆர்வமாகப் படித்தனர். அது பற்றி அனைத்துத் தகவல்களையும் விரல்நுனிக்குக் கொண்டு வந்தனர். 'அடுத்த ஜென்மத்தில் நான் தமிழனாகப் பிறந்து திருக்குறள் படிக்க வேண்டும்' என்ற காந்தியின் ஆசையை, வரலாற்றில் இருந்து தோண்டி எடுத்திருந்தனர். கலையின் வழியாகப் பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்தே தீரும்.



**நர்த்தகி நடராஜ் பெற்ற விருதுகள்**

தமிழக அரசின் கலைமாமணி விருது, இந்திய அரசின் சங்கீத நாடக அகாதெமி விருது, இந்திய அரசுத் தொலைக்காட்சியின் ஏ கிரேடு கலைஞர், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் சிறந்த கலைஞர், பெரியார் பல்கலைக்கழகத்தின் மதிப்புறு முனைவர் பட்டம்.

**நீங்கள் மிகச்சிறந்த நாட்டியக்காரர் என்பதை அறிவோம். அது தவிர்த்து, உங்களுடைய ஆர்வம், விருப்பம் எத்துறைகளில் உள்ளன?**

நான் தமிழ்வழிக் கல்வி பயின்றவள். என்னுடைய ஆசிரியர்கள் எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்தார்கள். உண்மையில் நான் ஒரு வழக்கறிஞர் ஆவதையே முழுமுதல் லட்சியமாகக் கொண்டிருந்தேன். இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு பல்வேறு தமிழ் இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன். நடனமும் வாசிப்புமே என்னை இன்னும் ஒரு குழந்தையாக வைத்திருக்கின்றன. தமிழ் இலக்கியத்தில் சங்கப் பாடல்கள், திவ்வியப் பிரபந்தம், திருப்புகழ் மற்றும் தேவாரம் ஆகியவற்றை நடனம் மூலம் பரப்புவதோடு இவ்விலக்கியங்களைப் பற்றித் தொடர்ந்து ஆய்வு செய்தும் வருகிறேன்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 256 23-10-2018 15:51:46

**சோதனைகளை, துயரங்களை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?**

*மற்ற மானுடரைவிட எல்லாச் சோதனைகளையும் இரண்டு மடங்கு அனுபவித்திருக்கிறேன். வலிதான் நான் கொடுத்த விலை. அகிலனின் 'தாமரை நெஞ்சம்' கதைநாயகி துக்கம் பொங்கி வரும்போதெல்லாம் ஒரு சொம்புத் தண்ணீர் குடிப்பாள். நான் ஒரு நாட்டியம் ஆடி விடுவேன். அது என் துயரைத் தீர்க்கும்.*

**உங்களை நெகிழ வைக்கும் தருணம் என்று எதைக் கூறுவீர்கள்?**

*நான் நடத்தும் வெள்ளியம்பலம் அறக்கட்டளை நடனக் கலைக்கூடம் வாயிலாக நூற்றுக்கணக்கான மாணவிகளை உருவாக்கியுள்ளேன். அம்மாவால் புறக்கணிக்கப்பட்ட என்னை இன்றைக்கு என் மாணவிகள் எல்லோரும் 'அம்மா' என்று அழைக்கும்போது எனக்குள் தாய்மை பெருக்கெடுக்கிறது. அதுவே என்னை நெகிழவும் மகிழவும் வைக்கும் தருணமாக உணர்கிறேன்.*

***இன்று நர்த்தகி, தன்னுடைய நடனத் திறமையால் அமெரிக்கா, லண்டன், கனடா உள்ளிட்ட உலக நாடுகள் முழுவதும் பயணித்துத் தம் பரதத்தால் பல்லாயிரம் மேடைகளை அழகாக்கி வருகிறார். இவர்தாம் 'திருநங்கை' என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர். திருநங்கைகளுள் முதன்முதலில் கடவுச்சீட்டு, தேசிய விருது, மதிப்புறு முனைவர் பட்டம் பெற்றவர் என்ற பல்வேறு முதல் சாதனைகளுக்குச் சொந்தக்காரரான நர்த்தகி நடராஜ் மேலும் பல உயரங்களை எட்ட நம் பள்ளியின் சார்பாக வாழ்த்துவோம்.***

சேலத்தைச் சேர்ந்த பிரித்திகா யாஷினி மிகுந்த சிரமங்களுக்கிடையில் 2011ஆம் ஆண்டு கணினிப் பாடப்பிரிவு இளநிலைப் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அவர் தற்போது சென்னையில் காவல்துறையின் சட்டம் – ஒழுங்குப் பிரிவில் பணியாற்றி வருகிறார். இந்தியாவின் முதல் திருநங்கை காவல் உதவி ஆய்வாளர் என்ற பெருமை இவரைச் சாரும்.

மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர் திருநங்கையான ஜோயிதா மோண்டல் மாகி. இவர் திருநங்கைகளின் முன்னேற்றத்துக்காகப் பணியாற்றி வருகிறார். வடக்கு தினாஜ்பூர் மாவட்டம் இஸ்லாம்பூரில் லோக் அதாலத் நீதிபதியாக அண்மையில் ஜோயிதா மோண்டல் நியமிக்கப்பட்டார். லோக் அதாலத் நீதிபதிப் பதவிக்குத் திருநங்கை ஒருவர் நியமிக்கப்படுவது நாட்டில் இதுவே முதல்முறையாகும்.

தமிழ்நாட்டில், மூன்றாம் பாலினப் பிரிவில் பள்ளிப்படிப்பை முடிக்கும் முதலாமவர் தாரிகா பானு. இவர், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அம்பத்தூரில், காமராஜர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் பாடப்பிரிவில் பயின்றார். 2017ஆம் ஆண்டு நடந்த மேல்நிலைப் பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற இவர், தற்போது அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் பயின்று வருகிறார்.



கற்பவை கற்றபின்...

பாலினச் சமத்துவம் என்பதன் விளக்கம் அறிக. இது குறித்த நும் கருத்துகளை வகுப்பறையில் கலந்துரையாடுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 257 23-10-2018 15:51:46

இயல் 10

# மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள்

JB2CFT

மாணவர்கள் பள்ளியில் பயில்கின்றபோதே கூடுதல் திறன்களை வளர்த்துக் கொள்ளவேண்டும். இத்திறன்கள் எதிர்காலத்தில் மாணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டும் வகையில் அமையும். தமிழ்மொழியைக் கற்பதோடு நில்லாமல் தமிழ்சார்ந்த பிறபணிகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். இந்நிலையில் அச்சுப்படி திருத்தக் குறியீடுகளை அறிந்து பிழைத்திருத்தம் செய்யும் இப்பயிற்சியானது மாணவர்களின் வேலைவாய்ப்பிற்கு உதவும்.

நூல்களையோ, இதழ்களையோ வெளியிடும்போது பிழையின்றி அச்சிடவேண்டும். எழுத்துப்பிழைகள், தொடர்ப்பிழைகள், மயங்கொலிப் பிழைகள், ஒருமை பன்மைப் பிழைகள் ஆகியவை நிறைந்த செய்திகள், படிப்போர்க்குத் தவறான கருத்தை அளித்து, குழப்பத்தில் ஆழ்த்திவிடும். எனவே, நூல்கள் அல்லது இதழ்களை அச்சிடுவதற்கு முன்னர் அச்சுப்படி திருத்துபவர் அப்பணியின்போது பிழைகளைத் திருத்துவதற்குப் பின்பற்றும் முறைகளையும் திருத்தக் குறியீடுகளையும் அறிந்திருத்தல் வேண்டும்.

### அச்சுப்படி திருத்துபவரின் பணிகள்

- மூலப்படியில் (Original Copy) உள்ளபடியே செய்திகள் அச்சாகியுள்ளனவா? என்று ஒவ்வொரு வரியையும் படித்துக் கவனித்தல் வேண்டும்.
- செய்தியின் உள்ளடக்கம், புள்ளிவிவரங்கள், எண்கள், அட்டவணைகள் முதலியன விடுபட்டுள்ளனவா என்பதை மூலப்படியோடு ஒப்பிட்டுக் கவனித்தல் இன்றியமையாதது. ஏனெனில், புள்ளி விவரங்கள் மாறினால் செய்தியின் பொருளில் முரண்பாடு ஏற்படும்.
- அச்சுப்படி திருத்துவோர் செய்தியின் உருவையோ உள்ளடக்கத்தையோ மாற்றுதல் கூடாது.
- பிழை ஏற்பட்ட சொல்லின்மீது எழுதுதல் கூடாது. ஒரு வரியின் இடப்பக்கப் பாதியில் பிழை இருந்தால் இடப்பக்க ஓரமும் வலப்பக்கப் பாதியில் பிழை இருந்தால் வலப்பக்க ஓரமும் திருத்தம் தருதல் அச்சிடுவோர்க்குப் பயனுடையதாக அமையும்.
- பிழைகளை ஓரம்வரை கோடிழுத்துக் காட்டும்போது, மேலும் கீழும் உள்ள வரிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.
- ஒரு வரியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிழைகள் இருந்தால் பிழைகளைக் குறிக்கும் கோடுகளைத் தெளிவாகக் காட்டல் வேண்டும்.
- ஒரு சொல்லில் பிழைகள் பல இருந்தால் அச்சொல்லையே நீக்கிவிட்டுச் சரியான சொல்லைத் தெளிவாகப் பக்க ஓரத்தில் தருதல் வேண்டும்.
- எண்ணின் (Number) இடையில் பிழையிருந்தால் அந்தத் தொகையை முழுவதுமாகப் பிழையின்றி எழுதிக்காட்டுதல் நல்லது.
- அச்சுப்படியில் இருக்கும் வண்ணத்திற்கு மாறான வண்ணமுடைய மையால் திருத்துதல் வேண்டும். இது பிழைகளைத் தெளிவாகக் கண்டறிய உதவும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_245-276.indd 258 23-10-2018 15:51:46

## குறியீடுகள் இடுதல்

அச்சுப்படியில் இருக்கும் பிழைகளைத் திருத்த உலக அளவில் பொதுவான திருத்தக் குறியீடுகள் என்று சில உண்டு. அத்தகைய திருத்தக் குறியீடுகளை அச்சுப்படி திருத்துவோர் முதலில் படித்தறிதல் வேண்டும். பிழையிருக்கும் இடத்தில் ஒரு சிறு கோட்டினால் குறித்து, அந்த வரிக்கு நேராகப் பக்கத்தின் ஓரப்பகுதியில் (Margin) குறியீடுகளைப் பொருத்தமாக இட்டுப் பிழையின் திருத்தத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். ஒரே வரியில் பல தவறுகள் வந்தால் அவற்றை வரிசைப்படி பக்க ஓரத்தில் சிறு சாய்வான கோடிட்டுத் திருத்தத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

#### எடுத்துக்காட்டு

பாரதியார் கேளிச்சித்திரத்தை விகடச்சித்திறம் என்று குறிப்பார். /லி /ர /றி

### திருத்தக் குறியீடுகளின் பிரிவுகள்

பிழைகள் உள்ள அச்சுப்படியைத் திருத்துவதற்குக் கையாளப்படும் திருத்தக் குறியீடுகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கின்றனர். அவை:

1. பொதுவானவை (General)
2. நிறுத்தக்குறியீடுகள் தொடர்பானவை (Punctuations)
3. இடைவெளி தரவேண்டியவை (Spacing)
4. இணைக்க வேண்டியவை (Alignment)
5. எழுத்து வடிவம் (Type/Font) என்பவையாகும்.

### 1. பொதுவானவை

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
| Dt | அச்சடித்திருக்கும் சொல்லையோ எழுத்தையோ நீக்குக. |
| ^ | சொல்லையோ எழுத்தையோ இந்தக் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்துக் கொள்க. |
| [ | புதிய பத்தி (New Paragraph) தொடங்குக. |

#### எடுத்துக்காட்டு

• பாரதி தம்மைப் போலவே பிறரை/ /யும் நேசிக்கும் பண்ப்பாளர் . /dt

### 2. நிறுத்தக் குறியீடுகள்

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
| , / | கால் புள்ளியைச் சேர்க்கவும். |
| ;/ | அரைப் புள்ளியைச் சேர்க்கவும் |
| ./ | முற்றுப்புள்ளி இடவும். |
| ?/ | வினாக்குறி அடையாளம் இடவும். |
| !/ | வியப்புக் குறியைச் சேர்த்துக் கொள்ளவும். |
| :/ | முக்காற்புள்ளி சேர்க்கவும். |

#### எடுத்துக்காட்டு

சங்ககாலத்தில் கற்பித்தல் பணியை மன்றம் /சான்றோர் அவை / , / , / அறங்கூர் அவையம் / சமணப்பள்ளி , / போன்ற அமைப்புகள் செய்துள்ளன.

### 3. இடைவெளி தரவேண்டியவை

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
|  | சொற்களை அல்லது எழுத்துகளைச் சேர்க்கவும். இடைவெளி விட வேண்டாம். |
| # | பத்திகளுக்கிடையில் வரிகளுக்கிடையில் சொற்களுக்கிடையில் இடைவெளி தருக. |

#### எடுத்துக்காட்டு

தமிழ்/இதழ்களில் தமிழ்/ஆண்டு திங்கள், நாள் ஆகியவற்றை #/ #/ முதன்  முதலாகக் குறித்தவர் பாரதியார். /

### 4. இணைக்க வேண்டியவை

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
|  | இடப்பக்கம் தள்ளவும் |
|  | வலப் பக்கம் தள்ளவும் |
|  | பத்திகளை இணைக்கவும் |
|  | ஒற்றை மேற்கோள் குறியீடு இடுக |
|  | இரட்டை மேற்கோள் குறியீடு இடுக |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 259 23-10-2018 15:51:46

எடுத்துக்காட்டு

கல்வியின் சிறப்பை / கல்வி அழகே அழகு / என நாலடியார் கூறுகிறது. '/ '/

## 5. எழுத்து வடிவம்

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
| --- | --- |
| Unbold | வழக்கமான எழுத்தில் மாற்றுக |
| Bold | தடித்த எழுத்தில் மாற்றுக |
| Trs | சொற்கள், எழுத்துகளை இடம் மாற்றுக |
| l.c. | எழுத்துருவைச் சிறியதாக ஆக்குக |

எடுத்துக்காட்டு – 1

(சிலப்பதிகாரம்) (மணிமேகலை)/ B/ B/ ஆகிய இரண்டும் தமிழ்மொழியில் தோன்றிய இரட்டைக்காப்பியங்கள்.

எடுத்துக்காட்டு – 2

உள்ளத்துள்ளது கவிதை - /இன்ப உருவெடுப்பது கவிதை trs/

| திருத்தக்குறியீடுகளின் தமிழ்ப்பெயர்கள் | | |
| --- | --- | --- |
| Apostrophe | ( ' ) | – எழுத்துக்குறை |
| Semicolon | ( ; ) | – அரைப்புள்ளி |
| Colon | ( : ) | – முக்காற்புள்ளி |
| Colondash | ( :– ) | – வரலாற்றுக்குறி |
| Ditto mark | ( „ ) | – மேற்படிக்குறி |
| Dash | ( – ) | – இடைக்கோடு |
| Bar | ( / ) | – வெட்டுக்கோடு |
| Brackets | ( ( ) ) | – பிறைக்கோடு |
| Double Brackets | ( { } ) | – இரட்டைப்பிறைக்கோடு |
| Large Brackets | ( [ ] ) | – பகரஅடைப்பு |

கற்பவை கற்றபின்...



மெய்ப்புத் திருத்தங்களை அறிவது எத்துறை வேலைவாய்ப்புக்கு உதவும்? – வகுப்பில் கலந்துரையாடுக.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக?
2. ஏற்ற இடங்களில் அச்சுத் திருத்தக்குறியீடுகளைப் பயன்படுத்தும் முறையைக் கீழ்க்காணும் பத்தியின் மூலம் அறிக.



அறிஞர் வாழ்வில் நகைச்சுவை

கவிஞர் கண்ணதாசன் கல்லூரி ஒன்றில் கவியரங்கத்தில் கலந்துகொண்டு

கவிதை யை வாசிக்க ஆரம்பித்தார். அரங்கத்தில் உற்சாக ஆரவாரம் எழுந்தது அவர் கவிதை வாசிக்கும்போது ஒவ்வொரு வரிக்கும் பலத்த கைதட்டல் எழுந்தது. வாசித்து முடிக்கது கரவொலி

அடங்க வெகு நேரம் பிடித்தது கைதட்டல்கள் முடிந்ததும், கண்ணதாசன் சொன்னார் "இன்று நான் வாசித்த கவிதை நான் எழுதியது அல்ல. உங்கள் கல்லூரி மாணவர் ஒருவர் நேற்று ஒரு கவிதைய எழுத்துக்கொண்டு வந்து என்னிடம் காண்பித்தார் அது மிக நன்றாக இருந்தது. எனவே நான் எழுதிய கவிதையை அவரை வாசிக்கச் சொல்லிவிட்டு அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தேன். என் கவிதையை அவர் வாசிக்கும்போது எந்தவித ஆரவாரமும் இல்லை. அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தபோது பலத்த வரவேற்பு. ஆக, சொல்பவன் யார் என்பதைத்தான் உலகம் பார்க்கிறதே ஒழிய சொல்லும் பொருளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்பதுதான் உண்மை என்று புரிகிறது".



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 260 23-10-2018 15:51:47

## நம்மை அளப்போம்

JBB8HG

**பலவுள் தெரிக.**

1. பூஜை, விஷயம், உபயோகம் – என்பவை முறையே........... என்று தமிழில் வழங்கப்படும்.

   அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி

   இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) வழிபாடு, பயன்பாடு, செய்தி

2. கூவும் குயிலும் கரையும் காகமும் – தொடரில் இடம்பெற்ற மரபு

   அ) பெயர்மரபு ஆ) வினைமரபு இ) ஒலிமரபு ஈ) இவை மூன்றும்

3. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? – இது எவர் மொழி?

   அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

4. தமிழின் முதல் பாவடிவ நாடகநூல்

   அ) இரகசியவழி ஆ) மனோன்மணீயம்

   இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

5. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.

   (அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.

   (ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.

   (இ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.

   (ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.

**குறுவினா**

1. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள – இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?
2. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?
3. "நீளும் கைகளில் தோழமை தொடரும்

   நீளாத கைகளில் நெஞ்சம் படரும்" – தொடை நயங்களை எடுத்தெழுதுக.
4. பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும் கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார் – நிறுத்தக்குறியிடுக.

**சிறுவினா**

1. இன்குலாப், "உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக்கூறுவதன் நயத்தை விளக்குக.
2. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?
3. தாமஸிகம் என்றால் என்ன?
4. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்துவரிகளில் எழுதுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 261 23-10-2018 15:51:47

### நெடுவினா

1. நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.
2. சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.
3. நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

"பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள்; நமது நாட்டை நோக்குங்கள்; நமது நாடு நாடாயிருக்கிறதா? தாய்முகம் நோக்குங்கள்; அவள் முகத்தில் அழகு காணோம். அவள் இதயம் துடிக்கிறது. சாதி வேற்றுமை, தீண்டாமை, பெண்ணடிமை உட்பகை முதலிய நோய்கள் அவளை அரிக்கின்றன; எரிக்கின்றன; இந்நோய்களால் குருதியோட்டங்குன்றிச் சவலையுற்றுக் கிடக்கிறாள். இள ஞாயிற்றொளி நோக்கி நிற்கிறாள். இள ஞாயிறுகளே! உங்கள் தொண்டெனும் ஒளியே அவள் நோய்க்குரிய மருந்து. அவ்வொளி வீசி எழுங்கள்; எழுங்கள்" என்று இளமைவிருந்து நூலில் தமிழினைச் செழுமையுறச்செய்ய இளைஞர்களை அழைத்தவர் திரு.வி.க.



திரு. வி. கலியாணசுந்தரனார்
(1883 – 1953)

திரு.வி.க தம் தந்தையிடம் தொடக்கத்தில் கல்வி பயின்றார். வெஸ்லி பள்ளியில் படித்தபோது, நா. கதிரைவேலர் என்பவரிடம் தமிழ் படித்தார். பிறகு மயிலை தணிகாசலம் என்பவரிடம் தமிழோடு சைவ நூல்களையும் பயின்றார். தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படும் திரு.வி.க. பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், என் கடன் பணி செய்து கிடப்பதே, சைவத்திறவு, இந்தியாவும் விடுதலையும், பொதுமை வேட்டல், திருக்குறள் விரிவுரை முதலிய பல நூல்களை எழுதினார். சிறந்த மேடைப்பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கிய இவர் தேசபக்தன், நவசக்தி இதழ்களுக்கு ஆசிரியராகவும் விளங்கினார்; தமிழ் அறிஞர்களுள் அரசியல் இயக்கங்களில் அதிகமான ஈடுபாடு கொண்டவராக இருந்தார். தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். சென்னை இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தார். இலக்கியப்பயிற்சியும் இசைப்பயிற்சியும் பெற்றவர்.

### கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி:

1. பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள் – ஒரே தொடராக மாற்றுக.
2. எவையேனும் இரண்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றுச் சொற்களைப் பத்தியிலிருந்து எடுத்து எழுதுக.
3. தமிழ்த்தென்றல் என்று திரு.வி.க அழைக்கப்படுகிறார் – இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 262 23-10-2018 15:51:47

4. ஞாயிற்றொளி – புணர்ச்சி விதி கூறுக.

5. எண்ணும்மைத் தொடர்கள் இரண்டனை எடுத்து எழுதுக.

**தமிழாக்கம் தருக.**

*An eye for an eye only ends up making the whole world blind.*

*You must be the change you wish to see in the world.*

*The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.*

*Nobody can hurt me without my permission.*

*You must not lose faith in humanity. Humanity is an ocean; if a few drops of the ocean are dirty, the ocean does not become dirty.*

*– Mahathma Gandhi*

**கதையைப் படித்துப் பொருளுணர்ந்து நிகழ்வை உரையாடலாக மாற்றுக. கதையில் காணலாகும் எவையேனும் ஐந்து பிறமொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.**

அலுவலகத்துக்குள் நுழைகையில் போன் அடித்தது. எடுத்துப் பேசினாள். மறுமுனையில் "உடனே ஆபிஸ்க்கு லீவ் போட்டுட்டு என் ஆபிஸ்க்கு வா கவி. இன்ஷூரன்ஸ் பேப்பர்ல கையெழுத்து போடணும். உன் போட்டோவையும் சஞ்சுவின் போட்டோவையும் எடுத்துட்டு வா" என்று சொல்லி முடித்ததும் போனைத் துண்டித்தான் செந்தில். ஏற்கெனவே தன் ஆபிஸில் நடக்க இருக்கும் ஆடிட்–ஐ நினைத்துக் கொண்டிருந்த அவளுக்குச் செந்திலின் போன் பதற்றத்தையும் குழப்பத்தையும் தந்தது. குழப்பத்துடன் போனை வைக்கையில் மறுபடியும் போன் ஒலித்தது. இம்முறை சஞ்சுவின் பள்ளி நம்பர். ஒரு நொடி பதற்றமாகிவிட்டது. எதற்கு அழைக்கிறார்களோ என்று பயந்தபடி போனை எடுத்தேன். போனில் சஞ்சுவின் குரல். "அம்மா நான்தான்" என்றான். "என்னடா, உடம்புக்கு எதாவதா?" என்றேன் டென்ஷனை மறைத்தபடி. "அதெல்லாம் ஒன்னுமில்லைம்மா. மிஸ் கிட்ட ஸ்பெஷல் பர்மிஷன் கேட்டு உனக்கு போன் பண்றேன். காலையிலேயே சொல்ல நினைச்சேன். மறந்திட்டேன். ஸாரிம்மா என்றான். எதுக்குடா சஞ்சு ஸாரி என்றேன். இன்னிக்கு உனக்கு பர்த்டேம்மா. மறந்துட்டியா" என்றான். அட ஆமாம். ஜூலை பத்து. இப்படியா மறப்பேன். செந்தில்கூட நினைவில் வைத்து வாழ்த்தவில்லை. சஞ்சு கொஞ்சும் குரலில் "ம்மா நைட்கூட ஞாபகம் இருந்துச்சு காலைல டக்குனு மறந்துட்டேன். சாரிம்மா ஹாப்பி பர்த்டே டூ யூ" என்றான். ஒரு நொடி எதுவும் பேச முடியாமல் திக்கிவிட்டேன். அவனே தொடர்ந்து "அம்மா உனக்காக ஒரு சூரியகாந்திப்பூ வரைஞ்சி வச்சிருக்கேன். ஈவ்னிங் சீக்கிரமா வா தரேன் ஓகேவா?" என்றான். "தாங்க்ஸ்டா செல்லம், தாங்க்யூ ஸோ மச்" என்றேன். அந்த நாளின் சுமைகள் எல்லாம் கரைந்து மனசு நெகிழ்ந்து உருகியது. ரயில், அலுவலகம், செந்தில் என எல்லாம் மறைந்து போய், நானும் சஞ்சுவும் கைகள் கோர்த்து நடப்பதுபோல இருந்தது.

**உரை எழுதுவோம்.**

உங்கள் பள்ளியில் திரு. அப்துல்கலாம் அவர்களின் நினைவுதினம் கொண்டாடப்படுகிறது. பள்ளிக்கு அருகில் உள்ள கல்லூரியின் மாணவர்கள் திரட்டிய நிதியைக் கொண்டு பள்ளியின் உயர்வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் திருக்குறள் கையடக்கப் புத்தகம் ஒன்றும், நில வரைபடப் புத்தகம் ஒன்றும் பரிசளிக்கிறார்கள். அவர்களுக்குப் பள்ளியின் சார்பாக நன்றி கூற ஒருபக்க அளவில் நன்றியுரை ஒன்றை எழுதுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 263 23-10-2018 15:51:47

**இலக்கிய நயம் பாராட்டுக**

## சங்கத் தமிழ் அனைத்தும் தா

இரண்டாயிரமாண்டு நீளமுள்ள கவிதையை ஈன்ற
மூதாயியைத் தேடியலைந்த களைப்பில் பறவை
ஒருகாலத்தில் தன் தாகம் தணித்த
மண்பானையைத்தேடி அல்லலுற்றது.

பாடப்புத்தகத்தில் படம்பார்த்துச் சொன்ன
கதைக்குள்ளிருந்து நீரூற்று எதுவும் பீறிடவில்லை
ஐவகை  நிலங்களையும் அலகில் கொத்தி
அடைகாக்க இன்னொரு இடமற்றுப் போக...

நீலவண்ணக் கடற்பரப்பில்
அந்தப் பறவை ஒரு முட்டை இட்டது.
அதன் குஞ்சு பொரிப்பில்
ஆயுதமும் புல்லாங்குழல் மறுகையுமாய்
அணங்கொருத்தி உதித்தெழுந்தாள்.

வயல்வெளியெங்கும் சலசலத்துத் திரிந்த
மருதயாழின் ஓசை வழிந்தோட
கால்கள் சுழன்றாடிய விறலிக் கூத்தின்முன்
பிரபஞ்சமே தன்னைப் புனைந்து கொண்டது.

பாணனின் கோப்பை
இப்போது காலியாயிருந்தது
தன் உடலிலிருந்து கிள்ளிப் பறித்த பூவை
குழந்தைக்குத் தந்து வலியில் மூழ்கிய
பச்சைத்தாவரத்தின் கண்களில்
ஒருதுளி ரத்தம் தேங்கியிருந்தது.

---

சங்கக் கவிதையின் எழுத்தொன்றைத்திறந்து
காக்கைப்பாடினி வெளியேவந்தாள்.

ஆறாம்நிலத்தில் துளிர்த்த அறிவியல்தமிழி நீயென
அருகே வந்தவள் முத்தம் தருகையில்
பறவைகள் தொலைந்துபோன பூமியில்
குளிரூட்டப்பட்ட அறைக்குள் உட்கார்ந்து
கணிப்பொறித்திரையில்
என் சின்னமகள்
ஒரு காக்கையை வரைந்து கொண்டிருந்தாள்

– ஹெச்.ஜி. ரசூல்.

**மொழியோடு விளையாடு**

**எண்ணங்களை எழுத்தாக்குக.**





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 264 23-10-2018 15:51:47

## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 | | 3 | 4 |
| 5 | ■ | | | | | | 6 | | |
| | ■ | | ■ | | ■ | | | | |
| | | | | | ■ | | | | |
| | | | 7 | | | | | | |
| | | | | 8 | | | 9 | | ■ |
| | | 10 | 11 | | | 12 | ■ | 13 | ■ |
| 14 | | 15 | | 16 | | | | | |
| | | ■ | ■ | 17 | | | | | 18 |
| | 19 | | | | | | | | 20 |

**இடமிருந்து வலம்**

1. மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளைக் கூறும் துறை (9)

7. தேன் – மற்றொரு சொல் (4)

15. புல்லின் இதழ்கள் – நூலாசிரியர் (4)

16. கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடம் (4)

17. சி.சு. செல்லப்பா நடத்திய இதழ் (4)

19. ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பக்தி இலக்கியம் (6)

**வலமிருந்து இடம்**

6. யானை – வேறொரு சொல் (5)

9. வந்தவாசிக்கு அருகில் சமணப்பள்ளி இருந்த ஊர் (3)

12. உமறுப்புலவரை ஆதரித்தவர் (5)

20. கவிஞர் மீரா நடத்திய பதிப்பகம் (4)

**மேலிருந்து கீழ்**

2. புதுமைப்பித்தனின் புகழ்பெற்ற சிறுகதை (4)

3. பாரதி நடத்த விரும்பிய கருத்துப்பட இதழ் (6)

4. இளையராஜா உருவாக்கிய இராகம் (5)

5. நற்றிணை 153ஆவது பாடலை இயற்றியவர் (6)

6. அணுவைப்போலச் சிறுத்து நிற்கும் ஆற்றல் (3)

12. இந்தச் சொல்லின் திரிபே சீறா (3)

13. மகாபாரதத்தில் கொடை வீரன் (4)

14. பாரதிதாசன் நடத்திய இதழ் (3)

**கீழிருந்து மேல்**

7. தவறு – வேறொரு சொல் (2)

8. தருமு சிவராம் என்னும் புனைபெயரிலும் எழுதியவர் (4)

9. மூங்கில் – மற்றொரு சொல் (2)

10. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் (6)

11. ஐங்குறுநூறு பாடும் மலர்களில் ஒன்று (2)

18. மலை என்றும் சொல்லலாம் (2)

19. பத்தாம் திருமுறை (7)



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 265 23-10-2018 15:51:47

## நிற்க அதற்குத் தக

*மனிதஇனம் கூடிவாழும் இயல்புடையது. நாம் அன்றாடம் பலருடன் பழகக்கூடிய இன்றைய சூழலில் ஏற்படக்கூடிய சிறிய சிக்கல்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?*

| சிக்கல் | தீர்வு |
|---|---|
| பக்கத்து வீட்டுக்காரர், மிகச் சத்தமாகப் பாடல் கேட்டுக் கொண்டிருக்கின்றார் | |
| நீங்கள் மட்டைப்பந்து போட்டியைப் பார்க்க வேண்டும் என்று விரும்பும் நேரத்தில் உங்கள் தங்கை தொலைக்காட்சித் தொடர் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். | |
| உங்கள் அருகில் அமர்ந்திருக்கும் உங்கள் வகுப்புத் தோழர், உங்கள் மேசை மீது உணவினை இறைத்தபடி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். | |
| நீங்கள் அடுத்தநாள் தேர்வுக்காகப் படித்துக்கொண்டிருக்கும்போது, உங்கள் வகுப்புத் தோழர், பாடத்தில் ஏற்பட்ட ஐயத்திற்காக உங்களுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுக்கிறார். | |

### கலைச்சொல் அறிவோம்

நாங்கூழ்ப் புழு – Earthworm

விழிப்புணர்வு – Awareness

உலகமயமாக்கல் – Globalisation

கடவுச்சீட்டு – Passport

முனைவர் பட்டம் – Doctor of Philosophy (Ph.D.)

பொருள்முதல் வாதம் – Materialism

### அறிவை விரிவு செய்

1. மனைவியின் கடிதம் – இரவீந்திரநாத் தாகூரின் சிறுகதைகள் – மொ.பெ – த. நா. குமாரசுவாமி
2. ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன் – கவிஞர் இன்குலாப்
3. நான் வித்யா – லிவிங் ஸ்மைல் வித்யா

### இணையத்தில் காண்க

*http://www.sothebys.com/en/news-video/videos/2015/03/rabindranath-tagore-indian-art.html – தாகூர் பற்றிய ஆவணப்படம்*

*http://ingulab.blogspot.in/ – கவிஞர் இன்குலாபின் வலைத்தளம்*

*http://www.narthakinataraj.com/ – நர்த்தகி நடராஜின் இணையத்தளம்*



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 266 23-10-2018 15:51:47

# திருக்குறள்

JBK4J4

## அடக்கம் உடைமை

1) அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

2) காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங்கு இல்லை உயிர்க்கு.

3) செறிவுஅறிந்து சீர்மை பயக்கும் அறிவுஅறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்.

4) நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

5) எல்லார்க்கும் நன்றுஆம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

6) ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

7) யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

8) ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றுஆகா தாகி விடும்.

9) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

10) கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

## ஒப்புரவு அறிதல்

1) கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றும் கொல்லோ உலகு.

2) தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.

3) புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

4) ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

5) ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

6) பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்.

7) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

8) இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடன்அறி காட்சி யவர்.

9) நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு.

10) ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_245-276.indd 267 23-10-2018 15:51:47

## புகழ்

1) ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

2) உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.

3) ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல்.

4) நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

5) நத்தம்போல் கேடும் உளதுஆகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது.

6) தோன்றின் புகழொடு தோன்றுக ; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

7) புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன் ?

8) வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.

9) வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

10) வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்.

## தவம்

1) உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.

2) தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது.

3) துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்?

4) ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்

5) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

6) தவஞ்செய்வார் தம்கருமம் செய்வார்மற்று அல்லார்
அவஞ்செய்வார் ஆசையுள் பட்டு.

7) சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

8) தன்உயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.

9) கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

10) இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_245-276.indd 268 23-10-2018 15:51:47

## நிலையாமை

1) நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

2) கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

3) அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

4) நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின்.

5) நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

6) நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

7) ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

8) குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு.

9) உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

10) புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு?

## துறவு

1) யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

2) வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டுஇயற் பால பல.

3) அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

4) இயல்பாகும் நோன்பிற்குஒன்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து.

5) மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்புஅறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை ?

6) யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

7) பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

8) தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

9) பற்றற்ற கண்ணே பிறப்புஅறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்.

10) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_245-276.indd 269 23-10-2018 15:51:47

## அவா அறுத்தல்

1) அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

2) வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றுஅது
வேண்டாமை வேண்ட வரும்.

3) வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல்.

4) தூஉய்மை என்பது அவாவின்மை மற்றுஅது
வாஅய்மை வேண்ட வரும்.

5) அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்
அற்றாக அற்றது இலர்.

6) அஞ்சுவது ஓரும் அறனே ஒருவனை
வஞ்சிப்பது ஓரும் அவா.

7) அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

8) அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம்அஃ து உண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

9) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

10) ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

## வலி அறிதல்

1) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

2) ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்.

3) உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

4) அமைந்தாங்கு ஒழுகான் அளவுஅறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

5) பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

6) நுனிக்கொம்பர் ஏறினார் அஃதுஇறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்.

7) ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

8) ஆகுஆறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை
போகுஆறு அகலாக் கடை.

9) அளவுஅறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

10) உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை
வளவரை வல்லைக் கெடும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 270 23-10-2018 15:51:48

## காலம் அறிதல்

1) பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

2) பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.

3) அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

4) ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

5) காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்.

6) ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து.

7) பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

8) செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை.

9) எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்.

10) கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்துஒக்க சீர்த்த இடத்து.

## பொச்சாவாமை

1) இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு.

2) பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

3) பொச்சாப்பார்க்கு இல்லைபுகழ்மைஅதுஉலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு.

4) அச்ச முடையார்க்கு அரண்இல்லை ஆங்கில்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.

5) முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை
பின்ஊறு இரங்கி விடும்.

6) இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுஒப்பது இல்.

7) அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின்.

8) புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.

9) இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

10) உள்ளிய எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 271 23-10-2018 15:51:48

## குறிப்பு அறிதல்

1) கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி.

2) ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.

3) குறிப்பின் குறிப்புஉணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

4) குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை
உறுப்புஓர் அனையரால் வேறு.

5) குறிப்பின் குறிப்புஉணரா ஆயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்.

6) அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

7) முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும்.

8) முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின்.

9) பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்.

10) நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்
கண்அல்லது இல்லை பிற.

## படைமாட்சி

1) உறுப்புஅமைந்து ஊறுஅஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை.

2) உலைவிடத்து ஊறுஅஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக்கு அல்லால் அரிது.

3) ஒலித்தக்கால் என்ஆம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.

4) அழிவுஇன்று அறைபோகாது ஆகி வழிவந்த
வன்க ணதுவே படை.

5) கூற்றுஉடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை.

6) மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.

7) தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து.

8) அடல்தகையும் ஆற்றலும் இல்எனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும்.

9) சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை.

10) நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 272 23-10-2018 15:51:48

## பகைத்திறம் தெரிதல்

1) பகைஎன்னும் பண்பு இலதனை ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்று அன்று.

2) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க சொல்லேர் உழவர் பகை.

3) ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப் பல்லார் பகைகொள் பவன்.

4) பகைநட்பாக் கொண்டுஒழுகும் பண்புடை யாளன் தகைமைக்கண் தங்கிற்று உலகு.

5) தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன் இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று.

6) தேறினும் தேறா விடினும் அழிவின்கண் தேறான் பகாஅன் விடல்.

7) நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க மென்மை பகைவர் அகத்து.

8) வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும் பகைவர்கண் பட்ட செருக்கு.

9) இளைதுஆக முள்மரம் கொல்க களையுநர் கைகொல்லும் காழ்த்த இடத்து.

10) உயிர்ப்ப உளர்அல்லர் மன்ற செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலா தார்.

## மருந்து

1) மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று.

2) மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்.

3) அற்றால் அளவுஅறிந்து உண்க அஃதுடம்பு பெற்றான் நெடிதுஉய்க்கும் ஆறு.

4) அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறுஅல்ல துய்க்க துவரப் பசித்து.

5) மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின் ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

6) இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும் கழிபே ரிரையான்கண் நோய்.

7) தீயளவு அன்றித் தெரியான் பெரிதுஉண்ணின் நோயளவு இன்றிப் படும்.

8) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்.

9) உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும் கற்றான் கருதிச் செயல்.

10) உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்என்று அப்பால்நாற் கூற்றே மருந்து.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 273 23-10-2018 15:51:48

## இரவு அச்சம்

1) கரவாது உவந்துஈயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்.

2) இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான்.

3) இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்டது இல்.

4) இடம்எல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம்இல்லாக்
காலும் இரவுஒல்லாச் சால்பு.

5) தெள்நீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்குஇனிய தில்.

6) ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்.

7) இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று.

8) இரவுஎன்னும் ஏமாப்புஇல் தோணி கரவுஎன்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

9) இரவுஉள்ள உள்ளம் உருகும் கரவுஉள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

10) கரப்பவர்க்கு யாங்குஒளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

XI Std Tamil Chap_245-276.indd 274 23-10-2018 15:51:48

* வான்புகழ் வள்ளுவரின் அறக்கருத்துகள் மாணவரிடம் சென்று சேர வேண்டும்; அதன்வழி நன்னெறிப் பண்புகள் மாணவரிடையே வளர வேண்டும் என்ற நோக்கில் புதிய பாடத்திட்டத்தில் திருக்குறளின் 150 பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
* திருக்குறளை நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் பொருளுடன் கூறலாம்.
* வகுப்பு வாரியாகத் திருக்குறள் ஒப்பித்தல் போட்டி வைக்கலாம்.
* குறட்பாக்கள் தொடர்பான கதைகள், நாடகங்களை இலக்கியமன்ற கூட்டங்களில் நடத்தச் செய்யலாம்.
* குறட்பாக்கள் தொடர்பான வினாக்களைத் தொகுத்து "வினாடி வினா" நடத்தலாம்.
* உலகப் பொதுமுறையாம் திருக்குறளில் இடம் பெற்றிருக்கும் நன்னெறிக் கருத்துகளின் அடிப்படையில் நீதிக்கதைகள், இசைப்பாடல்கள், சித்திரக் கதைகள், அசைவூட்டப் படங்கள் வாயிலாகத் திருக்குறள் வளங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கலாம்.
* குறிப்பு: மாணவர்கள் எளிதில் படித்துப் பொருள் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் குறட்பாக்களின் சொற்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன; அலகிடுவதற்கு அல்ல.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 275 23-10-2018 15:51:48

# மேல்நிலை முதலாம் ஆண்டு – பொதுத் தமிழ்

## ஆக்கம்

### ஆலோசனைக் குழு

முனைவர் **இ. சுந்தரமூர்த்தி,**
மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

முனைவர் **சி. சுப்பிரமணியன்,**
மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

முனைவர் **கி. நாச்சிமுத்து,**
மேனாள் பேராசிரியர், மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

முனைவர் **வீ. அரசு,**
மேனாள் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

### மேலாய்வாளர் குழு

முனைவர் சிற்பி **பாலசுப்பிரமணியம்,** மேனாள் தமிழியல்
துறைத்தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

முனைவர் **மு. சுதந்திரமுத்து**
இணைப்பேராசிரியர், (ப.நி.), மாநிலக் கல்லூரி, சென்னை.

திரு **பிரபஞ்சன்,** எழுத்தாளர், புதுவை.

முனைவர் **பா. மதிவாணன்,** தமிழ்த்துறை தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

திரு. **ம. இராமகிருட்டினன்,** முதன்மைக்கல்வி அலுவலர், திருச்சி.

### பாட வல்லுநர் குழு

முனைவர் **க. துரையரசன்,** தமிழ்த்துறைத் தலைவர்,
அரசு கலைக்கல்லூரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

முனைவர் **யாழ் சு. சந்திரா,** இணைப்பேராசிரியர்,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மதுரை

முனைவர் **த. விஷ்ணுகுமரன்,** உதவிப் பேராசிரியர்,
திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம்

முனைவர் **கி. பார்த்திபராஜா,** உதவிப் பேராசிரியர்,
தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்

முனைவர் **தி. குமார்,** உதவிப் பேராசிரியர்,
அரசு கலைக் கல்லூரி, சி. முட்லூர், சிதம்பரம்

முனைவர் **க. பலராமன்**, உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, அரசினர் ஆடவர் கலைக்கல்லூரி, நந்தனம், சென்னை.

முனைவர் **தி. இராஜரெத்தினம்,** ஆய்வாளர்,
பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி, புதுச்சேரி

### பாடநூல் உருவாக்கக் குழு

திரு. **சி. இராஜன்,** முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கோவை.

திரு. **ஆ. டேவிட்,** முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராமநாதபுரம்.

முனைவர் **தி. பரமேசுவரி,** முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, பண்ருட்டி, காஞ்சிபுரம்.

திரு. **கோ. சுந்தர்,** முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, திருநின்றவூர், திருவள்ளூர்.

திரு. **சு. சுந்தரராஜன்,** முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, தாமல், காஞ்சிபுரம் மாவட்டம்.

திரு. **அ. செந்தில்குமரன்,** முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, செந்நீர்க்குப்பம், திருவள்ளூர்.

செல்வி **த. சாவித்ரி,** முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, முத்தூர், திருப்பூர்.

திரு. **பி. இராஜேஷ் கண்ணன்,** முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, தும்பல், சேலம்.

திரு. **ரெ. மகேந்திரன்,** முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, ஈசநத்தம், கரூர்.

திரு. **யூ. ஆசைமணி,** முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, அலவாக்கோட்டை, சிவகங்கை.

திருமதி **சூ. லூர்துமேரி,** முதுகலை ஆசிரியர்,
பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, மடிப்பாக்கம், சென்னை.

திரு. **சி. பார்த்திபன்,** முதுகலை ஆசிரியர்,
அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சோளிங்கர், வேலூர்.

திரு. **கோ. கலைச்செல்வன்,** முதுகலை ஆசிரியர்,
எம்.ஆர்.ஜி. அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, வி.சத்திரம், ஈரோடு.

திரு. **வெ. இராமகிருஷ்ணன்,** முதுகலை ஆசிரியர்,
அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, அரியலூர்.

முனைவர் **என். மைதிலி** தலைமை ஆசிரியர் (ஓய்வு)
எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, அண்ணாநகர், சென்னை.

முனைவர் **இரா. ரமேஷ்,** முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, கண்ணாட்டு விளை, கன்னியாகுமரி..

திரு **நா ஹரிகுமார்,** பட்டதாரிஆசிரியர்,
இராஜா முத்தையா மேல்நிலைப் பள்ளி, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை

## கலை மற்றும் வடிவமைப்புக் குழு

### வரைபடம்

**க.த. காந்திராஜன்,** ஆய்வு வளமையர்
தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை.

**பொ. வள்ளிநாயகம்,** ஓவிய ஆசிரியர்,
ஸ்ரீ மந்திரமூர்த்தி மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி.

**மு. விசுவேசுவர ஆசிவேல் குமரன்,** ஓவிய ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, முண்டியம்பாக்கம், விழுப்புரம் மாவட்டம்.

**கா. புகழேந்தி,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கரம்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.

**அ. ஜேம்ஸ்பாண்ட்,** ஓவிய ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, அரசர்குளம், அறந்தாங்கி, புதுக்கோட்டை.

**க. பாலசண்முகம்**, கோவை

**ஜேசுநாதன்**, ஓவியர், சென்னை

**க. சந்திவீரன்**, அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை

**வெ. கார்த்திகேயன்**, அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை

மாணவர்கள், அரசு கவின் கலைக்கல்லூரி,
சென்னை மற்றும் கும்பகோணம்

### நன்றி

ஓவியர்கள்
**மணியன் செல்வன்**
**ட்ராட்ஸ்கி மருது**
**கிருஷ்ணாகுறும்பர்** வெள்ளரிக்கோம்பை

### வரைகலை & வடிவமைப்பு

பழையவலம் **பா. இராமநாதன்**, சென்னை.
**சிவக்குமார்,** சென்னை

### In-House - QC

கோபு ராசுவேல், ப அருண் காமராஜ்
ஜெரால்டு வில்சன், மனோகர் இராதாகிருஷ்ணன்

### அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம், சென்னை.
முன்அட்டை புகைப்படம் – சக்தி குமார், புதுக்கோட்டை

### ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனிசாமி

### வல்லுநர் & ஒருங்கிணைப்பாளர்

முனைவர் **நா. அருள்முருகன்**, துணை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

முனைவர். **ப. சரவணன்,** முதுகலை ஆசிரியர்,
சென்னை மேனிலைப்பள்ளி, அயனாவரம், சென்னை.

### ஒருங்கிணைப்பு

திருமதி. **க.சு. சங்கீதா,** உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

### பணிவாய்ப்பு வழிகாட்டல்

முனைவர் **தே. சங்கர சரவணன்,** துணை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

### கணினித் தொழில்நுட்பம்

திரு **இரவிக்குமார்,** விரிவுரையாளர்,
மா.க.ஆ.ப.நி, சென்னை.

செல்வி **த. ரேவதி**, பட்டதாரி ஆசிரியர்,
ந.உ.நி.ப. இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை.

### ஒருங்கிணைப்பு உதவி & தட்டச்சர்

திருமதி **டி.தே. ஷர்மிளா**, பட்டதாரி ஆசிரியர்
அரசு மேனிலைப்பள்ளி, மோசூர், வேலூர்.

திருமதி. **ப. குமுதா,**
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது

ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
XI Std Tamil Chap_245-276.indd 276 23-10-2018 15:51:48